
தென்னிந்தியத் திருச்சபை

## கன்னியாகுமரிப் பேராயம்



# அருளுரைக் கையேடு 2013

தென்னிந்தியத் திருச்சபை

கன்னியாகுமரிப் பேராயம்

# அருளுரைக் கையேடு

## 2013

வெளியீடு : தொடர்புத்துறை

# பிரதமப் பேராயரின் ஆசியுரை

இறை அன்பர்களே நீதிவழி கனியும் அமைதிக்கு நம்மை நடத்திச் செல்லும் உன்னதர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

2013-ஆம் ஆண்டில் புத்தாக்கம் பெற்றவர்களாகவும், இறையரசின் மதிப்பீடுகளான நீதி, உண்மை, அமைதி போன்றவைகளை நிலை நாட்டும் உள் உணர்வுகளோடு பணி தொடரவும் திரித்துவக் கடவுளால் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளீர்கள். குருத்துவப்பணியில் குருசும், குருதியும் மீட்பின் அடையாளங்கள் என்பதை மிகுந்த உறுதியோடு, தெளிவோடு அறிவிப்பது ஒவ்வொரு இறைப்பணியாளரின் கடமையாகும். ஆகவே இறையொளியில் விவிலியத்தை ஆழமாகக் கற்று, அதிலுள்ள உண்மைகளைப் புரிந்து கொள்ள விளக்க நூல்களைப் பயன்படுத்தி, தரப்பட்டுள்ள அருளுரைக் கையேட்டில் தலையங்கங்களில் பொருள் நிறைந்த இறையுண்மைகளை இறை மக்களுக்கு அறிவியுங்கள். ஆண்டவரின் திருவுளத்திற்கு அர்ப்பணித்து இறை வேண்டுதலோடு இப்பணியைத் தொடருங்கள்.

2013-ஆம் ஆண்டு அருளுரைக் கையேட்டினை வடிவமைக்க ஒப்படைப்புடன் செயல்பட்ட தொடர்புத்துறை இயக்குநர் அருள்திரு. நே. விபின் ஜாண் அவர்களையும், தொகுப்பாசிரியராகச் சிறப்புடன் நற்பணி புரிந்த அருள்திரு. இரா. சாம்பிரினிஸ் அவர்களையும், அவர்களோடு இணைந்து செயல்பட்டோர், அருளுரைகளை வழங்கிய ஆயர்கள், இறைப்பணியாளர்கள், மேலும் அச்சுப்பணியில் பங்களிப்பு தந்தோர் அனைவரையும் பாராட்டுகிறேன்.

இறையாசி உங்களோடிருப்பதாக,

இறைப்பணியில்
**பேரருள் பெருந்திரு. ஞா. தேவகடாட்சம்**
முதன்மை பேராயர் & பேராயர், கன்னியாகுமரிப் பேராயம்



# இயக்குநரிடமிருந்து...

அருளும், உண்மையும் நிறைந்து விளங்கும் இறை மைந்தர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் நல் வாழ்த்துக்கள்.

இறைப்பணியில் அருளுரையாற்றுதல் என்பது திருச்சபையின் ஆன்மிகத்தைக் கட்டியெழுப்புவதிலும், மக்களின் உணர்வுகளை இறையவரில் ஒன்றிப்பதிலும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. இந்நிலையில் இறை வாக்கினை அகத்தெளிவோடும், உண்மையோடும், ஆற்றலோடும், மகிழ்வோடும் அறிவிப்பது முக்கியமானதாகும். ஆகவே எல்லா இறைப்பணியாளர்களும் இறை வேண்டுதலோடு, இறை நோக்கம் இப்பணியில் நிறைவேற சுயவிருப்பு, வெறுப்புகளை புறந்தள்ளி நம்மை ஒப்படைப்போம். இறையவரில் புது சமூக அமைப்பைக் கட்டியெழுப்புவோம்.

இப்பணியில் நல் ஆலோசனைகளை வழங்கிய தென்னிந்தியத் திருச்சபையின் முதன்மைப்பேராயரும் நம் பேராயருமான பேரருள் பெருந்திரு. ஞா. தேவகடாட்சம் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் 2013-ஆம் ஆண்டு அருளுரை கையேட்டின் தொகுப்பாசிரியராகச் செயல்பட்ட அருள்திரு. இரா. சாம்பிரின்ஸ் அவர்களையும், உடனின்று உதவிய குழுவினரையும், குறிப்பாக, திருவாளர்கள் பெ. சாம் ஜெபசிங், ஜெ. பிரபின் செல்வமணி, இரா. டேவிட் ஜெபசிங், ஞான டாஸ்லின், எட்வர்ட் சேம், விக்டர் ஆகியோரையும் அருளுரைகளை ஆயத்தம் செய்து வழங்கிய ஆயர்கள், இறைப்பணியாளர்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். மேலும் அச்சுப்பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்தியோர் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறையாசி அனைவரோடும் இருப்பதாக.

ஜெபத்துடன்
**அருள்திரு. நே. விபின் ஜாண்**
இயக்குநர், தொடர்புத்துறை.

# தொகுப்பாசிரியரிடமிருந்து...

விண்ணின் விடியலாய் நம்மைத் தேடி வந்த திருமைந்தர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

இறைப்பணியின் இயக்கத்தினில் இனிதுடன் புதிய ஆண்டில் பயணிக்கிற நாம் நல் எதிர்நோக்குடனும், நம்பிக்கை நிறைந்த ஒப்படைப்புடனும், நற்சான்றுடனும் இறைவாக்கை அறிவிக்க மூவொரு கடவுளில் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளோம். இந்நாள்கள் நற்செய்தியின் உண்மை நிலை மறைக்கப்பட்டு வளமை இறையியல் வளர்ந்து வருவதையும், இறைமக்களும் அத்தகைய வளமைக் காட்சியில் வாழ்கின்றதையும் அறிவோம். இத்தகைய சிந்தனையுடன் வாழும் இறைமக்கள் கிறிஸ்தேசுவின் காயத்தழும்பால் தொடப்படவும், உயிர்த்தெழுதலின் உயராற்றலை உணரவும், தூய ஆவியால் அகத்தெளிவினைப் பெறவும், இறை வேண்டுதலோடும், தகுந்த ஆயத்தங்களோடும், அருள் செய்தியினை அறிவிப்போம். நல்ல அருளுரையாளர்களாக இறைவாக்கை நறுமணமாக்கி, திருத்தொழுகைக்கு வளம் தருவோம். அதற்காக நம்மை இறைவனின் ஊடகமாக ஒப்படைப்போம்.

2013-ஆம் ஆண்டு அருளுரைக் கையேட்டைத் தொகுக்கும் பணியில் ஆக்கம் தந்து ஊக்கப்படுத்திய தென்னிந்தியத் திருச்சபையின் முதன்மைப் பேராயரும், நம் பேராயருமான பேரருள் பெருந்திரு. ஞா. தேவகடாட்சம் அவர்களுக்கு உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பணியில் நல் ஆலோசனைகளைத் தந்து துரிதப்படுத்திய தொடர்புத்துறை இயக்குநர் அருள்திரு. நே. விபின் ஜாண் அவர்களுக்கும், என்னோடு உடனின்று பொறுப்புடன் அருளுரைகளுக்கு வடிவம் தந்து, பிழைதிருத்தம் செய்து, நெறியூட்டிய இறைப்பணியர் பெ. சாம் ஜெபசிங் அவர்களுக்கும், தொகுப்புப் பணியில் உதவியாயிருந்த அருள்திருவாளர்கள் ற. ஹென்சிலின் நேசராஜ், பிரேம்சிங் ஜெயக்குமார் ஆகியோருக்கும், முறைப்படுத்தும் பணியில் பங்களிப்பு தந்த அருள்திரு. வின்சென்ட் ராபர்ட் அவர்களுக்கும் அருளுரைகளை வழங்கிய ஆயர்கள், இறைப்பணியாளர்கள், அனைவருக்கும் நிறைந்த உளத்துடன் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறையாசி என்றும் நம்மோடிருப்பதாக,

இறை வேண்டுதலுடன்
**அருள்திரு. இரா. சாம்பிரின்ஸ்**
தொகுப்பாசிரியர்



**01-01-2013** உடன்படிக்கையின் நாள் & புத்தாண்டு நாள்

தொநூ. 12 : 1-9 | கொலோ. 2 : 6-15
திபா. 100 | மத். 11 : 25-30

## புதிய உறவு
## A New Relationship

. . . நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன்; (தொநூ. 12 : 1, 2)

**இறைவேண்டல்**

*ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை புதிய உடன்படிக்கையின் இடையீட்டாளராக உலகுக்குத் தந்த எங்கள் கடவுளே உம்மைப் போற்றுகிறோம். நாங்கள் உம்மோடு இணைந்து உமது உண்மையுள்ள உடன்படிக்கையில் நிலைத்து நிற்க உமது பேரருளைத் தரவேண்டும் என உம்மோடும், தூய ஆவியாரோடும் எப்பொழுதும் ஒரே கடவுளாக வாழ்ந்து ஆளுகை செய்யும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக உம்மை வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.*

புத்தாண்டில் நாம் கடந்துவந்த ஆண்டைக் குறித்து மதிப்பீடு செய்து புதிய ஆண்டில் நல்ல தீர்மானங்கள் எடுத்து புதிய ஆண்டின் ஆசீர்வாதத்திற்காக ஆயத்தப்படும் காலம் ஆகும். உறவுகள் அனுதின வாழ்க்கையில் பெரும்பங்கு வகிக்கின்றன. இறைவனுடன் கொள்ளும் உறவு; உடன் மனிதர்களுடன் கொள்ளும் உறவு; இறைவன் படைத்த உலகுடன் உள்ள உறவு ஆகியவைகளைக் குறித்து நாம் சிந்திக்கவேண்டும். இறைவனுடன் கொள்ளும் நல்லுறவு ஏனைய உறவுகளைச் சரிப்படுத்துகின்றது. திருமறையில் குலமுதுவரில் முதல்வராகவும் விசுவாசிகளின் தந்தை எனவும் சித்தரிக்கப்பட்டுள்ள ஆபிரகாம் இறைவனுடன் பற்றுக் கொண்ட உறவை வழிகாட்டுதலாகக் கொள்ளலாம். அவருடைய உறவின் பரிமாணங்கள் தொடக்க நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

ஆபிரகாமின் அழைப்பில் ஒரே இறைவன், ஒரு மக்களினம், ஒரு கலாச்சாரம் ஆகியன தெளிவுபடுத்தப்படுகின்றன. தற்கால உலகை "விஞ்ஞான உலகம்" என அழைக்கின்றோம். எனினும் மக்களுடைய வாழ்க்கைமுறை மற்றும் சிந்தனைத் திறன் வித்தியாசமாக

இருக்கின்றன. நல்லுறவின்மை, கோபப்படுதல், வன்முறையில் ஈடுபடுதல், யுத்தம் செய்து கொன்று குவித்தல் ஆகியன நிகழ்கின்றன. புதிய ஆண்டை இறைவன் தமது ஆசீர்வாதங்களோடு ஆயத்தப்படுத்தி, ஆபிரகாமை அழைத்ததைப் போல நிறைவான வாழ்விற்காய் நம்மையும் அழைக்கின்றார். திருமறையில் ஆபிரகாம் எங்ஙனம் இறைவனுடன் புதிய உறவை ஏற்படுத்தி அதன் பயன்களைத் தனது வாழ்வில் அனுபவித்தார் என்பதைச் சிந்திப்போம்.

## 1. இறைவன் ஆபிரகாமுக்காய்த் தீர்மானித்தார்

இறைவன் ஆபிரகாமுக்காய் (radical) அறிவார்ந்த தீர்மானம் எடுக்க, ஆபிரகாம் இறைவனின் தீர்மானத்திற்குத் தன்னை ஒப்படைத்தார். நீ உன் தேசத்தையும் இனத்தையும் விட்டு நான் காண்பிக்கும் தேசத்திற்குப் போ என்னும் இறைவனுடைய தீர்மானத்தின்படி தனது குடும்பத்தையும் தனது சொந்த இடத்தையும் தான் பிறந்த கலாச்சாரத்தையும் தன் நாட்டையும் விட்டு இறைவன் திட்டமிட்ட இடத்திற்குச் சென்றார். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இறைவன் உண்ணக்கூடியன குறித்தும் உண்ணகூடாதவை குறித்தும் தீர்மானம் எடுக்கும் சுதந்திரம் கொடுத்தார். முதல் பெற்றோர், உண்ணக்கூடாது குறித்த சோதனையில் நிலைக்க இயலாமல் விழுந்தனர். எனவே ஆபிரகாமுக்கு உரிய தீர்மானம் எடுத்தார். அந்தத் தீர்மானம் ஆபிரகாமுக்கு நன்றாய் அமைந்தது. பொதுவான சமூக அமைப்பும், சமூகக் கட்டுப்பாடும் இல்லாத காலத்தில் ஆபிரகாமின் வழியாக உலகை ஆசீர்வதிக்க இறைவன் விரும்பினார். எதிர்காலத்தை குறித்த எந்தப் புரிதலும் இல்லாமல் இறைவனின் தீர்மானத்தை ஆபிரகாம் ஏற்றுக் கொண்டார்.

மானிடர்கள் அறிவில் குறைவுள்ளவர்கள் குறிப்பிட்ட வயதுவரை பெற்றோர் தம் பிள்ளைகளுக்காய்த் தீர்மானம் எடுக்கின்றனர். ஆனால் இறைவன் நம்முடைய முழு வாழ்வுக்காகத் தீர்மானிக்கிறார். இறைவனுடைய தீர்மானங்கள் அவருடைய கட்டளைகளின்படியும், பிரமாணங்களின்படியும் அப்போஸ்தலருடைய போதனைகளின்படியும் அமைவதாகும். உலகம் முழுவதும் உடைந்த சமூகம், பிளவுபட்ட உறவுகள், பிரிக்கப்பட்ட மானிடத்தை நாம் காண்கின்றோம். நாம் செய்கின்ற தீர்மானங்களின் முடிவுகள் நமக்கு நன்றாய்த் தெரியும். திருமறை வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அரசர்களுள் ஆண்டவருடைய பார்வையில் செம்மையானதைச் செய்தவர்கள் நல்லாட்சி செய்து மக்களுக்கு அமைதியையும் ஆசீர்வாதத்தையும்





வழங்கியதைக் காண்கின்றோம். மாறாக இறைவனின் பார்வையில் தீமையானதைச் செய்தவர்களுடைய வீழ்ச்சியையும் கவனிக்கின்றோம். பெரும் செலவு செய்து வீட்டைக்கட்டின ஒருவர் தன்னுடைய வீட்டில் கீறல் ஏற்பட்டதைக் கவனித்து கட்டடக் கலை நிபுணரிடம் கீறலுக்குக் காரணம் என்ன எனக் கேட்க கட்டட நிபுணர் தரமற்ற கட்டுமானம், போதுமான விகிதத்தில் கட்டுமான பொருட்கள் தேவையான அளவு கொடுக்கப்படாமை கீறலுக்குக் காரணம் என விளக்கினார். சுருங்கக் கூறின் கட்டுமானத்தைச் சரியாகக் கவனிக்காததால் இந்நிலை ஏற்பட்டது. நமது வாழ்வைக் கண்காணிக்க ஒருவர் தேவை. நமது வாழ்வின் கட்டுமானத்தையும் கண்காணிப்பையும் திரித்துவக் கடவுளின் கரங்களில் ஒப்படைப்போம்.

## 2. ஆபிரகாம் ஆண்டவரின் தீர்மானத்திற்குப் பதிலளித்தார்

ஆபிரகாம் தனது 75-ஆம் வயதில் இறைவனின் தீர்மானத்திற்குத் தன்னைக் கையளித்தார். ஆண்டவருடைய வார்த்தையின்படி அவர் லோத்துவுடன் ஆரானை விட்டுப் புறப்பட்டார் (தொநூ. 12 : 4). மானிட சுபாவத்தின்படி உறவையும் சொந்தக் கலாச்சாரத்தையும் பிறந்த சூழலையும் விட்டுப் பிரிந்து செல்வது கடினமானது. ஆனால் ஆபிரகாமிற்கு உலகப் பார்வையை விட இறைவனின் தீர்மானம் முக்கியமானதாகப்பட்டது. ஆபிரகாமினுடைய தீர்மானம் புதிய வானம், புதிய பூமி, ஒரே மேய்ப்பன், ஒரே மந்தை, ஒரே இறைவன் ஒரே மக்களினம், இறைவனின் ஒரே உலகம் ஆகியன அமைய அடித்தளமாகின்றது. இறைவனின் சீரிய சிந்தையை அறியாதவர்கள் இனம், சமயம், நிறம், மொழி, கலாச்சாரம் போன்றவற்றின் அடிப்படையில் பாகுபாடுகளை ஏற்படுத்துகின்றனர்.

தலைமுறை தோறும் இறைவனின் சித்தம் அறியாத மக்கள் பெரும் தவறுகளைச் செய்து இறைவனின் கோபத்தைப் பெருகச் செய்கின்றனர். இறைவன் தம் திருத்தூதுவர்களை அனுப்பி மனந் திரும்பவும் மாசற்ற வாழ்வு வாழவும் அழைக்கின்றார். இறைவன் யோனாவை நினிவேக்கு அனுப்பி செய்தி சொல்லச் சொன்னார். அச்செய்தியை கேட்ட நாட்டின் மன்னன் முதல் அடித்தட்டு குடிமகன் வரை இரட்டுடுத்தி சாம்பலில் இருந்து மனம் திரும்பினர். அதன் விளைவாக இறைவன் அப்பட்டணத்தை அழிக்கும் திட்டத்தை மாற்றினார். இறைவன் இயேசு கிறிஸ்துவில் நம்மோடிருக்கின்றார். அவர் வாசற்படியில் நின்று தட்டுகின்றார். அவர் தட்டுதலைக் கேட்டு கதவைத் திறந்தால் அவர் நம்முடன் வந்து நம்முடன் உணவருந்துவார்

(வெளி. 3 : 20). இறைவன் நம்முடைய இல்லங்களிலும் ஐக்கியங்களிலும் சமூகத்திலும் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் பங்கேற்க விரும்புகிறார். அவர் நம் வாழ்வை வடிவமைத்து மேற்பார்வை செய்து பூரணப்படுத்த விரும்புகிறார். ஆபிரகாம் ஆண்டவரின் தீர்மானத்திற்குக் கீழ்ப்படிந்ததால் விசுவாசிகளின் தந்தையானார் நம்மையும் அவ்வண்ணமே இறைவனின் தீர்மானத்திற்குக் கையளிப்போம்.

**3. மனுக்குலம் தீர்மானத்தால் வாழ்வுபெற்றது**

ஆபிரகாமுக்கான இறைவனுடைய தீர்மானம் மானிடத்திற்குப் பெரும் ஆசீர்வாதத்தைத் தந்துள்ளது. தொநூ. 12 : 7-இல் ஆபிரகாமிற்கு ஆண்டவர் காட்சி கொடுத்து உன் சந்ததிக்கு இந்த நாட்டை உரிமையாக்குவேன் என்று கூறினார். அவ்வாக்குத் தத்தத்தில் ஒருங்கிணைந்த எல்லோரையும் உள்ளடக்கிய சமூகம் சுட்டப்பட்டுள்ளது. வேறுபாடுகளால் பிரிந்துகிடக்கும் தற்காலச் சமூகம் இறைவனுடைய தீர்மானத்தை ஏற்றுக்கொண்டால் பயன் ஏற்படும். இஸ்ரயேலருடைய விடுதலைப் பயணத்தில் அவர்கள் எகிப்திலிருந்து கானானுக்குப் புறப்பட்டுச் சென்றபோது பல இனமக்கள் உடன் சென்றனர் (விப. 12 : 38). எனவே கானானில் குடியமர்த்தப்பட்ட மக்களில் புறஇன மக்களும் அடங்குவர். வாக்குத்தத்தம் அனைவருக்கும் வழங்கப்பட்டது போல இறைமகன் இயேசு கிறிஸ்துவும் எல்லோருக்கும் எல்லாமும் வழங்குகின்றார்.

2013-ஆம் ஆண்டு அனைத்துத் தரப்பு மக்களும் புதிய நம்பிக்கையுடன் வாழ்வைத் தொடங்குகின்றனர். முன்னேற்றமான, அர்த்தமுள்ள, சாதகமான, ஆசீர்வாதமான, வாழ்வுசார் திட்டங்கள் நிறைவேற எதிர்பார்க்கின்றேன். எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேற வேண்டுமெனில் இறைவனோடு சரியான உறவை ஏற்படுத்திக் கொள்வதே ஒரே வழி. ஏனெனில் இறை உறவு பெரிய ஆசிகளை உலகிற்குத் தந்தது. ஆபிரகாமைப் போல இறைவனுடன் புதிய உடன்படிக்கை செய்து சக மனிதர்களுடனும் இறைவனுடைய உலகத்திலும் செம்மையாய் வாழ்வோம்.

**பேரருள் பெருந்திரு. G. தேவகடாட்சம்**



**06-01-2013** கிறிஸ்துப் பிறப்புக்குப் பின் வரும் இரண்டாம் ஞாயிறு

ஐக்கியத் திருவிருந்து

எசா 56:1–8 திப 17:16–34
திபா 27:1–6 யோவா 12:20–26

## உண்மையை அறிவித்தல்
## Proclamation of Truth

நீர் எங்களுக்குச் சொல்வது கேட்கப் புதுமையாய் உள்ளதே! அவற்றின் பொருள் என்னவென்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம். (திப 17:20).

**இறைவேண்டல்**

*எங்கள் ஆண்டவராகிய கடவுளே, நீர் ஒருவரே உண்மையின் முழுமையாக உள்ளதால் நாங்கள் உண்மையை கூறி அறிவிப்பதில் உம்மோடு பங்கு கொண்டு வாழ எங்களை தகுதிப்படுத்தும். நாங்கள் உம்மை உண்மையின் நிறைவாகக் கண்டு அறிந்துகொள்ளவும், உம்மையே பின் தொடர்ந்து உமக்குப் பணி செய்யவும் இவ்வுலகில் உம்மை பிறருக்கு வெளிப்படுத்தவும் எங்களுக்கு அருள் கூர்ந்தருள வேண்டுமென்றுஎன்றென்றும் உம்மோடும் தூய ஆவியாரோடும் அரசாட்சி செய்கிற கிறிஸ்து இயேசுவின் வழியாய் உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.*

1825 ஆம் ஆண்டு ரஷ்ய மன்னர் முதலாம் அலெக்சாண்டர் காலமானார் என்ற செய்தி புனித பீட்டர்ஸ்பெர்க் நகரை அடைந்ததும் அவரின் சகோதரர் நிக்கோலஸ் அரசராகக் கூடாது என்று படைவீரர்களில் ஒரு பகுதியினர் கிளர்ச்சி செய்தனர். இந்நிலையில் அலெக்சாண்டர் மரிக்கவில்லை முடிதுறந்து துறவியாகிவிட்டார் என்ற செய்தி வதந்தியாகப் பரவியது. பின்னர் அலெக்சாண்டர் ரொமனவ் டோம்ஸ்க்கில் இருப்பதாகக் கூறினர். இதனிடையே 1864 இல் குஷ்மிக் என்ற துறவி இறக்கும் தருவாயில் "எனது உண்மைப் பெயர் கடவுளுக்கு மட்டுமே தெரியும்" என்று கூறி உயிர்விட்டார். ஒருவேளை குஷ்மிக் என்ற துறவிதான் முதலாம் அலெக்சாண்டரோ என மக்கள் பேசிக்கொண்டனர். இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. 1926-இல் முதலாம் அலெக்சாண்டர் பற்றிய வதந்திக்கு முற்றுப்புள்ளி வைக்க நிக்கோலஸ் அலெக்சாண்டரின் கல்லறையைத் திறந்து பார்த்தார். அது காலியாக இருந்தது.

ஒருவர் உரைக்கும் உண்மை என்றும் நிலைக்கும்; பொய்யுரையின் வாழ்வோ இமைப்பொழுதே (நீமொ 12:19) என்கிறது விவிலியம். பொய்மையும் போலித்தனமும் நிறைந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்நிலையில் உண்மையின் வடிவமாகவும்,

வாழ்வாகவும் இருக்கிற கடவுளுக்குச் சான்று பகரவும் கடவுள் நமக்கு வெளிப்படுத்தியிருக்கும் உண்மையை உலகுக்கு அறிவிக்கவும் அழைக்கப்படுகிறோம். புதிய ஏற்பாட்டில் உண்மையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களில் -அலேத்தையா (aletheia) என்ற கிரேக்கச் சொல் சிறப்பிடம் பெறுகிறது. இதன் பொருள் -கடவுள் மனிதருக்கு வெளிப்படுத்திய உண்மை என்பதாகும். ஏதென்சில் பவுல் அடிகளாரும் கடவுள் தமக்கு வெளிப்படுத்திய உண்மையாகிய கிறிஸ்துவையும் அவரது உயிர்த்தெழுதலையும் நற்செய்தியாக அறிவித்துவந்தார். அப்போது கிரேக்க அறிஞர்கள் சிலர் பவுலிடம் வந்து நீர் சொல்வதைக் கேட்கப் புதுமையாய் உள்ளது. அவற்றின் பொருளை எங்களுக்குச் சொல்லும் என்று உண்மையாகிய நற்செய்தியை அறிய விரும்புகிறோம் என்றனர். (திப 17:20).

பன்மைச் சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் கடவுள் நமக்கு வெளிப்படுத்தியிருக்கும் -இயேசுகிறிஸ்துவாலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை என்னும் மாபெரும் உண்மையை உலகுக்கு உரக்க அறிவிக்க அழைக்கப்படுகிறோம். நாம் அறிவிக்க வேண்டிய உண்மையின் அடிப்படைகள் என்ன? என்பதைத் தியானிப்போம்.

**1. ஆண்டவரின் மீட்பு அனைவருக்கும் உரியது என்பதை அறிவித்தல்** (எசா 56:7).

எசாயா இறைவாக்கு நூலின் மூன்றாம் பகுதி 56-ஆம் அதிகாரத்திலிருந்து தொடங்குகிறது. இவ்வதிகாரத்தின் முதல் எட்டு வசனங்களும் கடவுள் அருளும் மீட்பும், நிலைவாழ்வும் பாரபட்சமின்றி அனைத்து மக்களுக்கும் வழங்கப்படும் என்னும் வாக்குறுதி குறித்து அறிவிக்கின்றன. அண்ணகர்களும், பிற இன மக்களும் கடவுளின் முன்னிலையில் இஸ்ரயேலரோடு இணைத்துக் கூறப்படுகின்றனர். இஸ்ரயேலர், கடவுளால் அருளப்படும் மீட்பு தங்களுக்கு மட்டுமே உரியது எனக்கருதினர். பிற இனத்தவர்களைக் கடவுளின் வாக்குறுதிகளுக்கு அந்நியராக எண்ணினர். மேலும் அண்ணகர்கள் வாரிசுகளை உருவாக்கி வம்சங்களை வளரச்செய்யும் வலுவில்லாதவர்கள். ஆகவே அவர்கள் கடவுளோடு தொடர்புகொள்ளத் தகுதியுள்ளோர் அல்லர் என்று அண்ணகர்களை ஆலயத்திற்குள் அனுமதிக்க மறுத்தனர். இந்நிலையில் இத்தகையோரைக் கடவுள் மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய “இறை மன்றாட்டின் வீடு” என்றழைக்கப்படும் என் இல்லத்திற்கு அழைத்து வருவேன். அவர்களுக்கு மகிழ்வருளுவேன். அவர்களின் பலிகளை ஏற்றுக்கொள்வேன் என்கிறார் (எசா 56:7)

ஆண்டவர் இயேசுகிறிஸ்துவும் தம் திருப்பணிக்காலத்தில் நூற்றுவர் தலைவரின் பையனைக்குணமாக்கிய நிகழ்வில் புறவினத்தானாகிய நூற்றுவர் தலைவரின் பற்றுறுதியைப்





பாராட்டினதோடு மட்டுமின்றி கிழக்கிலும் மேற்கிலுமிருந்து பலர் வந்து, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருடன் விண்ணரசின் பந்தியில் பங்குபெறுவர் என இறையரசு அனைவருக்கும் உரியது என்றுரைத்தார். (மத். 8:10,11).

நாம் வாழுகின்ற சூழலிலும் கிறிஸ்துவால் வரும் மீட்பு அனைத்து மக்களுக்கும் உரியது எனும் உண்மையை நாம் அறிவிக்க வேண்டும்.

**2. ஆண்டவரை அறியாமல் வழிபடுவோர்க்கு அறிவித்தல்** (திப 17:23)

பவுல் அடிகளார் தம் இரண்டாம் தூதுரைப் பயணத்தில் தெசலோனிக்காவில் ஏற்பட்ட கலகத்தினிமித்தம் பெரோயா செல்ல நேர்ந்தது. அங்கு வந்து தெசலோனிக்க யூதர்கள் கலகம் விளைவித்தனர். இதனால் பவுலார் ஏதென்சு வந்து சேர்ந்தார். ஏதென்சு பல தெய்வ வழிபாட்டையும், கட்டடங்களையும் கொண்ட கிரேக்கப் பண்பாடு, மெய்யியல், கல்வியியல் ஆகியவற்றின் மையமாக விளங்கியது. ஏதென்சில் பவுல் நற்செய்தியை அறிவிக்கத் தொடங்கினார். அனைத்து உண்மைகளும் புலன்களின் வழிதான் வருகின்றன என்றும் மனித ஆன்மா அழியும் என்றும் மனித வாழ்வில் கடவுளுக்கு இடமில்லை என்றும் போதித்த எப்பிக்கூரஸ் என்ற தத்துவவியலாரைப் பின்பற்றிய எப்பிக்கூரரும், இயற்கையைப் படைத்துக் காப்பாற்றும் ஆற்றலே கடவுள் என்றும் உலகின் அனைத்து நிகழ்வுகளின் அழகில் இறைவன் தம்மையே வெளிப்படுத்துகிறார் என்றும் போதித்த செனோ என்பாரைப் பின்பற்றிய ஸ்தோயிக்கரும் பவுலாருடன் கலந்துரையாடினார். பின்பு அவரை அரயோப்பாகு (மார்ஸ் மேடை) என்னும் மன்றத்திற்கு அழைத்துச் சென்று நற்செய்தியின் புதுமையை அறிவிக்கக் கேட்டனர். அரயோப்பாகு (மார்ஸ் மேடை) என்பது ஏதென்சு நகரில் இருந்த ஒரு குன்று. உயர்மன்றம் இந்நகரில் கூடியதால் இம்மன்றம் அரயோப்பாகு (மார்ஸ்மேடை) என்றழைக்கப்பட்டது. இங்குதான் சட்டமன்றமும் நீதி மன்றமும் செயல்பட்டன. கால ஓட்டத்தில் இவை வேறு இடங்களுக்கு மாற்றப்படவே இது கல்வி மற்றும் கலைக்கூடமாக மாறியது. அறிவைப் போதிக்கும் அறிவார்ந்த இடமாகிய அரயோப்பாகு (மார்ஸ்மேடை) மன்றத்தில் அனைத்து அறிவுக்கும் ஆதாரமாக விளங்குகின்ற கடவுளின் நற்செய்தியை அறியாமல் வழிபடும் ஏதென்சு நகர மக்களுக்குப் பவுல் அறிவிக்கின்றார். ஏதென்சு நகரில் பல தெய்வங்களுக்குப் பீடமும், சிலையும் இருந்தன. இதில் எது உண்மைக் கடவுள் என ஏதென்சு நகரினர் அறியாதிருந்தனர். எனவேதான் அறியாக்கடவுள் தங்களைத் தண்டித்துவிடக் கூடாதே என்றெண்ணி “அறியாத தெய்வத்துக்கு” எனப் பீடங்கள் வைத்தனர். அனால் அவற்றை மையமாக வைத்து பவுலார் உண்மைக் கடவுளைப் பற்றி அவர்களுக்கு அறிவிக்கிறார்.

நாம் வாழும் உலகில் உண்மைக் கடவுளை அறியாத மக்கள் இன்னும் உள்ளனர். அவர்களுக்கு ஆண்டவரை அறிவிக்க நாம் கடனாளிகளாயிருக்கிறோம். உண்மைக் கடவுளை அறிவித்தல் என்பது வார்த்தையாலன்று, வாழ்க்கையால் அறிவிக்க வேண்டும். (தானி 3:17,18,29,6:26)

**3. ஆண்டவரை அறிய ஆர்வமாயிருப்போர்க்கு அறிவித்தல்.**

(யோவா. 12:21)

பாஸ்கா விழா வழிபாட்டுக்காக வருகை தந்திருந்தோரில் கிரேக்கர் சிலர் இயேசுவைக் காணவேண்டும் என்று தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தினர். யோவான் நற்செய்தி ஆசிரியர் புறவினத்தாரின் பிரதிநிதிகளாக இவர்களை அறிமுகம் செய்கிறார். இக்கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. நான் அவற்றையும் நடத்திச் செல்ல வேண்டும் (யோவா.10:16) என்ற இயேசு பெருமானின் வார்த்தை இங்கு நினைவுகூரத்தக்கது. இயேசு இவ்வுலகில் வந்ததன் நோக்கம் படிப்படியாக நிறைவேறுவதன் அடையாளமாக இந்நிகழ்வு அமைந்துள்ளது. கிறிஸ்துவின் பணியும், அவர் வழங்கும் விடுதலையும் அனைவருக்கும் உரியது என்பதை இந்நிகழ்விலிருந்து புரிந்து கொள்ளலாம். ஏன்? இந்தக் கிரேக்கர்கள் பிலிப்புவிடம் இயேசுவைக் காணவேண்டுமென்று கேட்கிறார்களென்றால், பிலிப்புவின் ஊரான பெத்சாயிதா புறவினத்தார் வாழும் கலிலேயாவில் இருக்கின்றது. மேலும் அவர் புறவினத்தாரோடு நல்லுறவு வைத்திருந்தார். யோசிபஸ் என்ற வரலாற்றாசிரியர், வழிபாடுசெய்வதற்கு எருசலேம் தேவாலயத்தின் வெளிப்பிரகாரத்தில் மட்டுமே புறவினத்தார் அனுமதிக்கப்பட்டனர் என்று குறிப்பிடுகிறார். ஆகவேதான் குருத்துப் பவனி முடிந்ததும் அதுவரை தடைசெய்யப்பட்டிருந்த மக்களை ஆலயத்தில் ஏற்று இயேசுகிறிஸ்து அவர்களை அங்கீகரித்ததை அறிந்திருந்த கிரேக்கர்கள் அவரைக் காணவேண்டும் என்ற தங்கள் வாஞ்சையை வெளிப்படுத்தினர்.

இன்று நாம் ஆலயத்தில் ஆண்டவரைத் தொழுதுகொண்டிருக்கிறோம். ஆனால் ஆலயத்தின் வெளியே இயேசுவைக் காணவேண்டும் என்கிற ஆர்வத்தோடும், ஏக்கத்தோடும் கேட்டுக் கொண்டே இருக்கிற மக்களின் குரல்கள் நம் செவிகளில் விழாதவாறு பாட்டுகளின் இரைச்சலையும் வீணைகளின் ஓசையையும் பெருக்கி வருகிறோம் (ஆமோ 5:23). இயேசுவைக் காணவேண்டும் என்கிற மக்களின் வாஞ்சை நம்மை, நம் வாழ்வை அவர்கள் காண்பதின் வழியாக நிறைவேறட்டும். அதற்கென்று நம்மை ஒப்படைப்போம்.

அருள்திரு. முத்துசுவாமி கிறிஸ்துதாஸ்.



| 06-01-2013 | கிறிஸ்துப் பிறப்புக்குப் பின் வரும் இரண்டாம் ஞாயிறு |
|---|---|

எண். 20 : 1-11
தி.பா. 72 : 1-17

திருத்தோற்றத் திருநாள்

தி.ப. 19 : 1-7
மத். 2 : 1-12

## எல்லா நாட்டினரையும் தம்பால் ஈர்க்கும் கிறிஸ்து

## Christ Draws All Nations to Himself

அவர் மூலம் மனிதர் ஆசிபெற விழைவாராக! எல்லா நாட்டினரும் அவரை நற்பேறு பெற்றவரென வாழ்த்துவாராக! (திபா. 72 : 17)

கடவுள் தம் அன்பாலும், இரக்கச் செயல்களாலும் ஆறுதல் மொழிகளாலும், வாக்குறுதிகளாலும், வாக்குத்தத்தங்களாலும் மன்னிப்பின் வார்த்தைகளாலும் உலகைத் தம்பால் ஈர்க்கிறார். இந்த ஈர்ப்புத் தன்மை அல்லது அழைப்பு அவரோடுள்ள ஆவிக்குரிய பந்தத்திற்காகவும், மனிதனை இறைப் பராமரிப்பில் நடத்தவுமே தரப்பட்டுள்ளது. ஆர்ப்பரிக்கும் அலைகடலில் வழிதேடி அலையும் கப்பலைக் கலங்கரை விளக்கானது கரை நோக்கி வர அழைக்கிறது. ஒளியைக் காணும் கப்பல் பாதுகாப்புடன் கரை சேர்கிறது. கப்பல் கலங்கரை விளக்கத்தோடு கொள்ளும் ஐக்கியத்தால் கப்பல் பாதுகாப்புடன் காணப்படும்.

கிறிஸ்துவோடு கூட ஐக்கியம் கொள்வதை நாம் நமது வாழ்வின் முன்னுரிமையாகக் கொள்வோமானால் நாம் ஆண்டவரில் பாதுகாப்புடன் வாழ இயலும். புனித யோவான் அப்போஸ்தலர் எழுதும்போது நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி நாங்கள், கண்டும், கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம். எங்களுடைய ஐக்கியம் தந்தையோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது என எழுதுகிறார்.

இப்புதிய ஆண்டின் தொடக்கத்திலிருந்து, ஆண்டவரிடம் ஐக்கியப்பட்டு அவரோடுள்ள ஆவிக்குரிய பந்தத்தில் வாழ அழைக்கப்படும் நாம் எந்நிலையில் முன்னேறுவது என்பதைக் குறித்துச் சிந்திப்போம்.

**1. நம்பிக்கையின் சவாலை எதிர்கொள்வோம்**

எண். 20 : 6 பின் மோசேயும், ஆரோனும் சபைக்கு முன்னின்று

சந்திப்புக் கூடாரத்தின் நுழைவாயிலுக்குச் சென்று முகங்குப்புற விழுந்தனர். ஆண்டவரின் மாட்சி அவர்களுக்குத் தோன்றியது.

வாழ்க்கை என்பது சவால்கள் நிறைந்த ஒன்று. துன்பங்களால் சூழப்பட்ட வாழ்வில் அடிச்சறுக்காது வாழ்வது என்பது சவால்களிலும் சவாலான ஒன்று. சவால்கள் பயம், கோபம், வெறுப்பு எரிச்சல் போன்ற உணர்வுகளை ஏற்படுத்துகின்றது. வனாந்தரத்தில் தண்ணீரைப் பெற்றுக்கொள்வது என்பது கடினமான காரியம். ஆண்டவர் இஸ்ரயேலரைப் பாலை நில வாழ்வில், கற்பாறையின் தண்ணீராலும், மன்னாவாலும் உணவூட்டி நடத்தினார். எண். 20 : 1-11 வரையிலான பகுதியில் தண்ணீர் பெற்றுக்கொள்ள தங்களை வழிநடத்தும் தலைவர்களுக்கு எதிராகக் கலகம் செய்யும் மக்கள் நடுவில் கடவுளின் கருணையை எதிர்ப்பார்த்து என்ன செய்வது என்று கலங்கிய மனநிலையில் சவால் நிறைந்த சூழலிலும் கடவுளிடம் திரும்புகின்ற மோசே, ஆரோன் போன்ற தலைவர்களுக்கு அவர்கள் நம்பிக்கையைப் பாராட்டி மீண்டும் ஒருமுறை கற்பாறையினின்று தண்ணீரைப் பெற்றுக்கொள்ளச் செய்யும் அற்புதச் செயலை நாம் இத்திருமறைப் பகுதியில் காணமுடிகிறது.

நாம் நம் வாழ்வில் பெற்றிருக்கின்ற ஆற்றல்கள் என்பது நம்மை முன்னிறுத்த அல்ல. நம் ஆண்டவரைப் பின் தொடர்ந்து செல்வதற்கான ஆற்றல்கள் அவைகள். நாம் இறைவனின் ஆற்றலை வெளிப்படுத்தும் ஊடகங்கள். சவால் நிறைந்த சூழல்கள் நம் நம்பிக்கையின் ஆற்றலை வெளிப்படுத்துகிறது மட்டுமல்ல சவால் நிறைந்த சூழல்கள் நம்மை நம்பிக்கைக்கு நேராகவும் வழிநடத்துகிறது. ஐந்து அப்பம் இரண்டு மீன்கள் நிகழ்வில் மக்களே இல்லாத மலைப்பாங்கான இடத்தில் திரள் மக்களுக்கு உணவளிப்பது அசாதாரண காரியம். ஆனால் பங்கு கொண்டோரின் விசுவாச உணர்வு ஒரு பிரமிக்கத்தக்க நிறைவுக்கு வழிநடத்தியது (யோ. 6 : 1-3). புற இனத்தார் யூதரிடம் கருணை பெறுவது இயலாத காரியம். இந்தச் சவாலிலும் நம்பிக்கையின் ஆற்றலால் கருணை பெற்றவர் உண்டு (மாற்கு 7 : 24-30). முதிர் வயதில் பிள்ளை பெறுவது கடினமான ஒன்று ஆனால் அந்தச் சவாலிலும் இறைவார்த்தையில் கொள்ளும் நம்பிக்கை அற்புதத்திற்கு நேராக நடத்தும் (தொநூ. 21 : 1-3). இழப்பில் ஆறுதல் பெறுவது சற்று சிரமமானது. ரூத்-நகோமி ஆகியோர் மோவாபிலிருந்து - யூதேயாவுக்கு நம்பிக்கையுடன் புறப்பட்டனர் புது வாழ்வு பெற்றனர் (ரூத் 2 : 1-23).



எல்லா நாட்டினரையும் தம்பால் ஈர்க்கும் கிறிஸ்து

**2. நிராகரிக்கப்படும் நிலையில் ஆதரவைப் பெறுவோம்**

தம்மை நோக்கி மன்றாடும் ஏழைகளையும் திக்கற்ற எளியோரையும் அவர் விடுவிப்பார் (திபா. 72 : 12).

சமூக வாழ்வில், ஆற்றல் உடையோரை மதிக்கும் காலமிது. ஆற்றலற்றறோர், சமூகத்தில் யாவரோடும் இணைந்து வாழும் தகுதியுடையோர் அல்லர் எனச் சாதிக்கும் சமூகம் நம்முடையது. ஆற்றலுள்ள செல்வந்தர்கள் மேசையில் வைத்து உணவருந்தும் போது ஆற்றலற்ற லாசருக்கள் அம்மேசையில் வைத்து சாப்பிடுவதினின்று புறக்கணிக்கப் படுகின்றனர். ஆனால் லாசருகளுக்கோ எண்ணியிராத இடத்தினின்று ஆதரவும் அரவணைப்பும் உண்டாகிறது. 72-ஆம் திருப்பாடலில் தாவீது பாடும் போது மலைகள் மக்களுக்குச் சமாதானத்தைக் கொடுக்கட்டும், குன்றுகள் நீதியை விளைவிக்கட்டும் என்று பாடுகிறார் (72 : 3). புறக்கணிக்கப் படுகிறவர்களுக்கு கடவுளே பாதுகாப்பாளராக இருப்பார் (திபா. 72 : 12-14).

இயேசு வருங்காலத்தில் வரவிருக்கும் அரசர் எனத் தாவீது இத்திருப்பாடலில் நம்பிக்கையினால் பாடியிருக்கிறார். இயேசுவின் பிறப்பில், உண்டாகும் மகிழ்ச்சி சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட ஆட்டிடையர்களுக்கே முதலாவது சொல்லப்படுகிறது. இயேசுவின் திருப்பணியிலும் பெருஞ்சுமை சுமந்து சோர்த்திருக்கும் அனைத்துத் தரப்பு மக்களையும், தம்மிடமாய் வந்து இளைப்பாறுதலைப் பெற்றுச் செல்ல அழைத்தார் (மத். 11 : 28).

ஒனேசிம் தன் தவறுகளினால், தன் எஜமானனால் புறக்கணிக்கப்பட்டவர் அந்த எஜமானிடத்தில் ஆதரவு பெறும்படி பவுல் ஒநேசிமுவைப் பிலேமோனிடத்தில் வழிநடத்தினார் (பிலேமான் வ. 17). இளைய மைந்தன் தன்னைத் தானே தன் வீட்டிலிருந்து விடுவித்துக் கொண்டவன். அவன் அதே இடத்திற்காக, ஆதரவுக்காக அலைந்து தேடிய போது மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட்டான் (லூக். 15 : 11-24). புறக்கணிக்கப்படுகின்ற தனி மனிதன் மாத்திரமல்ல புறக்கணிக்கப்படுகிற இனத்தயையும் அவர் சேர்த்துக் கொள்கிறார் (எஸ்தர் 8 : 1-17).

**3. நிலை தடுமாறும் சூழலில் நல்வழிக்குத் திரும்புவோம்**

ஏரோதிடம் திரும்பிப் போக வேண்டாம் என்று கனவில் அவர்கள் எச்சரிக்கப்பட்டதால் வேறு வழியாகத் தங்கள் நாடு திரும்பினார்கள். (மத். 2 : 12)

மனித வாழ்வு தேடல் நிறைந்த வாழ்வு. மனிதன் தன்னைக் கண்டு தன்னிடம் கடந்து வரத்தக்கதாய் இயேசு இருளிலும் ஒளியாயிருந்து மனிதரைத் தம்பால் ஈர்க்கிறார். மத். 2 : 1-11-ல் இயேசுவைப் பார்க்கச் சென்ற ஞானிகள் வானத்து வீண்மீனைக் கண்டு தவறாகப் புரிந்து இயேசுவை வணங்க ஏரோதுவின் அரண்மனைக்குச் சென்றனர். ஏரோதுவின் தவறான எண்ணங்கள் ஞானிகளுக்கு புரிய வைக்கப்பட்டது (மத். 2 : 12).

இயேசுவை வணங்கியபின் ஞானிகள் ஏரோது ஒரு தவறான பாதை எனவும் இயேசு ஒரு சரியான பாதை எனவும் சரியாய்ப் புரிந்து சரியான பாதையினூடே தங்கள் நாட்டுக்குத் திரும்பிச் சென்றனர். இயேசுவின் பெற்றோர் இயேசுவைக்கொண்டு சரியான, பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சென்றனர் (மத். 2 : 13-15). ஓர்பாள்-ரூத் ஆகிய நகோமியின் மருமக்களில் ரூத் சரியான பாதையைத் தெரிந்து கொண்டாள் பாராட்டப்பட்டாள். ஆனால் சரியான பாதையை உணர்த்தியும் அதில் நடக்க நாம் மனமற்றவர்களாக மாறுவோமானால் நம் அர்த்தமுள்ள விருப்பங்களுக்கும் நாம் செல்லவேண்டிய தூரம் வெகுதூரமாயிருக்கும் (மாற். 10 : 17-31).

உலகப் பிரகாரமான ஈர்ப்பு ஒரு மனிதனுக்கு ஆறுதலுக்குப் பதில் அலறுதலாயிருக்கும் (லூக். 15 : 11-17). ஆனால் கடவுளிடத்தில் நாம் ஈர்க்கப்படுவோமானால் இம்மையிலும் மறுமையிலும் நாம் பேரின்ப வாழ்வைப் பெறுவோம் (மாற். 10 : 28-30).

அன்பர்களே வாழ்க்கைப் பாதை நம்மை எங்கேயோ ஈர்த்துக்கொண்டு செல்லுகிறதை நாம் அறியாமலிருக்கலாம். ஆனால் நாம் ஆண்டவரிடமாய் சார்ந்து அவரோடு ஐக்கியப்பட்டு வாழ்வோமானால் புத்தாண்டின் வாழ்வுப் பயணத்தை நாம் இன்பப் பயணமாய் அனுபவிக்க இயலும்.

**அருள்திரு. P. சேம் இம்மானுவேல் தோமஸ்**



**13-01-2013** திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் ஞாயிறு

நீதி. 23 : 22-35 கலா. 5 : 16-26
தி.பா. 37 : 1-11 மத். 21 : 28-46

# வாழ்வில் கிறிஸ்தவ ஒப்படைப்பு
## Christian Commitment in Life

"மகனே, நான் சொல்வதைக் கவனி; என் வழிகளில் உன் கவனத்தைச் செலுத்து" (நீதி. 23 : 26)

*அனைத்து ஆற்றலும் பொருந்திய கடவுளே, தெய்வீக சட்டங்களைத் தந்து உம்மை அறிந்துகொள்ளவும், உமது பிள்ளைகளாக வாழவும் அருள் செய்பவரே நாங்கள் தீமையைத் தெளிவாய் அறிந்து தீமையின் ஆற்றலுக்கு எதிர்த்து நிற்கவும் அதன் வழியாய் இவ்வுலகில் நாங்கள் தூய்மையில் வளரவும், இம்மை வாழ்விலும், மறுமை வாழ்விலும் அமைதி பெற்று வாழவும் அருள் கூர்ந்தருள வேண்டுமென உம்மோடும் தூய ஆவியாரோடும் ஒரே கடவுளாய் வாழ்ந்து அரசாட்சி செய்யும் இயேசு கிறிஸ்து வழியாய் மன்றாடுகிறோம். ஆமென்.*

பல்சமய மக்கள் வாழும் சூழலில் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட சூழலில் வாழும் நாம் கிறிஸ்துவில் காணப்பட்ட பண்புகளையும் செயல்பாடுகளையும் வெளிப்படுத்துகின்றவர்களாக இருக்க வேண்டும் என்பது பிற சமய நண்பர்களுடைய எதிர்பார்ப்பாக காணப்படுகிறது. ஆனால் கிறிஸ்தவர்களாகிய நம்முடைய வாழ்வில் கிறிஸ்துவைப் பிறர் கண்டு கொள்கின்றார்களா? என்பது இன்றும் கேள்விக்குறியாகவே உள்ளது. இதற்கு முக்கியக் காரணம் முழுமையான அர்ப்பணிப்பு இல்லாத வாழ்வே. முழுமையான கிறிஸ்தவ அர்ப்பணிப்பு வாழ்வு வாழ வேண்டுமானால் நம் வாழ்வில் காணப்பட்ட வேண்டிய தன்மைகளைக் குறித்து கொடுக்கப்பட திருமறைப் பகுதிகளின் வழியாகச் சிந்திப்போம்.

### 1. இறைவிருப்பத்திற்கு இணங்கி வாழ்தல்

இரு புதல்வர்கள் உவமையில் (மத். 21 : 28-32), திராட்சைத் தோட்டத்தில் பணியாற்றுவதற்காக நில உடமையாளர் தம் பிள்ளைகளிடம் கேட்டுக் கொள்கிறார். இரு மகன்களின் பதிலும்,

செயல்பாடும் முரண்பட்டவையாக இருக்கின்றன. மூத்த மகன் சற்று தயங்கி "நான் போக விரும்பவில்லை (மத். 21 : 29) எனப் பதிலளித்தாலும் பிறகு தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டு பணியாற்ற செல்கிறார். தந்தையின் திருவுளம் இது என்பதை உணர்ந்து ஒத்துக் கொள்கிறார். ஆனால் இளைய மகனோ "நான் போகிறேன்" (மத். 21 : 30) எனக் கூறியும் போகவில்லை. இவ்விருவரில் தந்தையின் திருவுளப்படி செயல்பட்ட மூத்த மகன் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். தந்தையின் விருப்பம் எதுவோ அதை நிறைவேற்றினார்.

இஸ்ரயேல் மக்களிடம் யோசுவா கேட்ட கேள்வி இன்று நம்மை முழுமையாய் அர்ப்பணிக்கத் தூண்டுகிறது. "யாருக்கு ஊழியம் செய்வீர்கள் என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள் (யோசுவா 24:15) என்ற நிலையில் யோசுவா எடுத்துக்கொண்ட முடிவு, நானும் என்வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம் (24 : 15) என்பதாகும்.

ஒவ்வொரு மனிதனும் இரண்டு நிலைகளில் அலசடிபடுகிறான். உலகத்தோடு ஒத்து, உலகப் போக்கில் வாழ்வதா? அல்லது கடவுளின் வழியில் வாழ்வதா? உலகம் காட்டும் வழியில் செல்வதா? அல்லது கடவுள் காட்டும் வழியில் செல்வதா? இந்தச் சூழ்நிலையில் கிறிஸ்துவுக்காக முழுமையான ஒப்படைப்பில் நம்முடைய தெரிந்தெடுத்தல் என்பது எதைச் சார்ந்ததாக அமைய வேண்டும் என்பதைச் சிந்திப்பது முக்கியமானது. எபேசியர் 4 : 15-இல் "...தலையாகிய கிறிஸ்துவைப் போன்று எல்லாவற்றிலும் நாம் வளர வேண்டும்" எனப் படிக்கின்றோம். எனவே கிறிஸ்துவில் நாம் எல்லாவற்றிலும் வளரும்போது நம்மை முழுமையாகக் கிறிஸ்துவுக்கு ஒப்படைக்க முடியும். லூக்கா 16 : 13-இல் "எந்த வீட்டு வேலையாளும் இரண்டுத் தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது" என்ற இயேசுவின் கூற்று மேற்குறிப்பிட்டனவற்றை அதிகமாகச் சிந்திக்க வைக்கிறது. இறைவிருப்பத்திற்கு இணங்கி செயல்பட்டால் நாம் அர்ப்பணிப்புள்ள வாழ்வு வாழ முடியும்.

## 2. இச்சைகளைத் தவிர்த்து வாழ்தல் (கலா. 5 : 16)

கலாத்தியர் திருமுகம் யூதமயமாக்கும் கிறிஸ்தவர்களின் போதனையை முறியடிக்க பவுலாரால் எழுதப்பட்டது. கலாத்திய சபையில் யூதமயமாக்கும் கிறிஸ்தவர்கள் சிலர் புகுந்து திருச்சட்டத்தினால் மட்டுமே மீட்பு பெற முடியும், மோசேயின் சட்டம். விருத்தசேதனம்





போன்ற சடங்குகளைக் கடைப்பிடித்தல் வேண்டும் எனப் போதித்தது. இதை முறியடிக்கும் வகையில் கிறிஸ்தவ வாழ்வு என்பது சட்டங்களைக் கடைபிடிப்பது அல்ல. ஆனால் கிறிஸ்துவின் மீது கொண்ட நம்பிக்கையால் விளையும் அன்பின் அடிப்படையில் உள்ளது என்பதை தெளிவுப்படுத்துகிறார். இப்படிப்பட்ட நம்பிக்கையில் வாழ்வதற்காக ஊனியல்பின் இச்சைகளுக்கு இடங்கொடாமல் வாழ வேண்டும் என வலியுறுத்துகிறார் (கலா. 5 : 16). இப்படிப்பட்ட வாழ்வு வாழும்போது நாம் கிறிஸ்துவை அறிந்தும் கிறிஸ்துவால் அறியப்பட்டும் இருக்கிறோம் என்பதுதான் உண்மை. ஆனால் இப்படிப்பட்ட வாழ்வு வாழ்வதற்கு கிறிஸ்துவின் மீது முழுமையாக நம்பிக்கை கொண்டு நம்மை அர்ப்பணிக்கும் போதுதான் இந்த வாழ்வு முழுமையாகிறது.

முழுமையான அர்ப்பணிப்புள்ள வாழ்வு வாழ்வதற்கு நம் வாழ்வு தூய்மையானதாக இருக்க வேண்டும் என்பது மேற்குறிப்பிட்ட செய்தியாகும். இறைவனைச் சார்ந்து இறையுறவில் நிலைத்து நிற்கும் போது நாம் வாழும் கிறிஸ்தவ வாழ்வில் அர்ப்பணிப்போடு வாழ முடியும். இவ்வுலகத்தின் இச்சைகள் இறைவனிடமிருந்து நம்மைப் பிரித்து உலகின் விருப்பங்களுக்கிணங்கி வாழத் தூண்டுகிறது. அது நம்மைத் தீயோனுக்கு நேராக வழிநடத்துகிறது. எனவே இறைவனின் மக்களாக வாழ்ந்து ஊனியல்பின் தன்மைகளைத் தவிர்த்து ஒப்படைப்புள்ள வாழ்வு வாழுவோம்.

## 3. இறையவர் முன் உணர்ந்து வாழ்தல்

மானிட வாழ்வு கடவுளின் திருவுளத்திற்கு அப்பாற்பட்டது அல்ல. ஒருவர் தன்னைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் கடவுளின் இருப்பு நிலையோடுதான் புரிந்து கொள்ள முடியும். கடவுளோடு உள்ள கூட்டுறவு நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே அதைப் புரிந்து கொள்ள முடியும். கிறிஸ்துவில் ஒரு புதிய சமுதாயத்தைப் கட்டி எழுப்புவது இக்கூட்டுறவின் அடிப்படை என்று திருமறை கூறுகிறது (எபே. 3 : 7-13). திருப்பாடலாசிரியர் மானிட வாழ்வில் இறைநம்பிக்கையுடையவர் களாகவும், நம்பத்தக்கவர்களாகவும், ஆண்டவரிடம் முழுமையாய் நம்மை அர்ப்பணிக்கிறவர்களாகவும் வாழ அழைப்பு விடுக்கின்றார் (தி,பா, 37 : 1-5).

எனவே இந்த மானிட வாழ்விலே நாம் யார்? என்பதை இறைவனின் திருவுளத்திற்கு உட்பட்டு சிந்திப்பதும். அதன் அடிப்படையில் வாழ்வதும் சிறப்பானது. இப்படிப்பட்ட சிந்தனை நம்மைப்

பொருளுள்ள வாழ்விற்குத் தூண்டுகிறது. பொருளற்ற வாழ்வு வாழ்கிறவர்கள் இறைநீதிக்கு அப்பாற்பட்டு வாழுகிறவர்கள் எனத் திருத்தூதுவரான பவுல் கூறுகிறார் (உரோ. 1 : 18-32).

பேதுரு தம் முதலாம் திருமுகத்தில் நாம் கடவுளின் இரக்கம் பெற்ற, கடவுளின் உரிமைச் சொத்தான மக்களாகவும் தூய மக்களினத்தவர்களாகவும் இருக்கிறோம் எனக் கூறுகிறார் (1 பேதுரு 2 : 9-10). நாம் யார் என்பதை இங்கு தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. தூய மக்களினத்தாராகவும், இறைவனது உரிமைச் சொத்தாகவும் இருக்கும் நாம் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினராகவும் இருக்கிறோம் என்பதை உணர்ந்து இறைவனின் திருப்பாதத்தில் நம்மை முழுமையாய் ஒப்படைத்து வாழுவோம். நாம் அழைக்கப்பட்ட அழைப்பிற்கு தகுதியுடையவர்களாக வாழ்ந்து, இறைவிருப்பத்திற்கு இணங்கி, இவ்வுலக வாழ்வின் இச்சைகளைத் தவிர்த்து இறையவருக்குமுன உணர்ந்து வாழ்வது நம்மை முழுமையான கிறிஸ்தவ ஒப்படைப்பிற்கு வழிநடத்தும்.

"இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களே,

பேச்சிலல்ல, செயலில் நல்ல -இயேசுவை

வாழ்வோராய் காட்டுங்களே" என்ற அறிவர் இசுரேல் செல்வநாயகம் அவர்களின் பாடல் வரிகள் கிறிஸ்தவ ஒப்படைப்பிற்கு அறைகூவல் விடுப்பதாய் அமைந்துள்ளது.

**அருள்திரு. ரமேஷ் D. தாஸ்**



**13-01-2013** திருத்தோற்றத்திருநாளுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு

எசா. 49 : 1-6 பேது. 3 : 13-22

திபா 2 மத். 3 : 13-17

# இயேசுவின் திருமுழுக்கு

## Baptism of Jesus

". . . என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்." (மத். 3 : 17)

ஆறு நோக்கி பக்தர் ஒருவர் புனிதப் பயணமாக வந்தார். அவர் தலையில் பாரச் சுமை. சூரியன் உதயமாகும் போது கரம் கூப்பி வணங்கியவர், பின் ஆற்றில் சுமையுடன் இறங்கினார். மூன்று முறை சுமையுடன் மூழ்கி எழுந்த அவர், என் பாவம் தீர்ந்தது எனக் குதூகலித்தார். அவரைத் தொடர்ந்து பெரும் கூட்டமும் இப்படியே ஆடிப்பாடியது. பாரச் சுமையுடன் மூழ்கினால் பாவம் நீங்குமா? பாயும் ஆற்றுத் தண்ணீரினால் பாவத்தைக் கழுவ முடியுமா? ஆற்றுக்கு அப்படி என்ன சிறப்பு? ஆற்றல்?

இங்கேயும் யோர்தான் நதி. அதன் அருகில் திருமுழுக்குப் பெற திரள் கூட்டம். பாவிகளும், படைவீரர்களும், பரிசேயர்களும் கூடி நிற்கின்றனர். ஆனால் மன மாற்றம் என்பதே இதன் அடிப்படை அனுபவம். முறையோ, ஆழமோ, நதியோ, தண்ணீரோ, இடமோ அல்ல. வாழ்வு மாற்றமே இங்கு அதிக முக்கியத்துவம் பெறுகிறது. அதுவே திருமுழுக்கு தரும் மாபெரும் அழைப்பு ஆகும்.

யோர்தான் நதி ஓரம் மன மாற்றத்துக்காக கூடி நிற்கும் மக்களின் வரிசையில் இறைமகன் இயேசுவும் ஒன்றிணைகிறார். யோவான் அவருக்கு திருமுழுக்குக் கொடுக்கிறார். இயேசுவின் திருமுழுக்கு வெளியிடும் இரண்டு பரிமாணங்களை இங்கு சிந்திப்போம்.

1. **இணைய அழைப்பு :** (Call to Unite)

". . . கடவுளுக்கு ஏற்புடையவை அனைத்தையும் நாம் நிறைவேற்றுவது தான் முறை". (மத். 3 : 15)

தூய்மைக்கு அடையாளமான மானிட மகன் இயேசு,

பாவமற்றவர் எனத் தீர்க்கர்களால் முன்னறிவிக்கப்பட்டவர். எதற்கு அவருக்குத் திருமுழுக்கு? ஏன் அவர் திருமுழுக்குப் பெறுகிறார்? இயேசு திருமுழுக்குப் பெற்று பாவிகளோடு தன்னை ஒன்றிணைத்துக் கொள்கிறார். (Identified with the sinners) கடவுளுக்கு ஏற்புடையவைகளை நிறைவேற்ற தன்னைக் கையளிக்கிறார் (மத். 3 : 15). நீதி செய்ய, போராட திருமுழுக்கின் வழியாகத் தன்னை ஆயத்தப்படுத்துகிறார். மனந்திரும்புங்கள் என்றால் நீதி வாழ்வுக்கு திரும்புங்கள் என்பதே பொருள். இயேசு தம் திருமுழுக்கின் மூலம் இதற்காகத் தன்னை அர்ப்பணிக்கிறார். தன்னை இணைத்துக் கொள்கிறார்.

திருமுழுக்குப் பெற்ற பின்பு இயேசு வனாந்தரத்திலே சோதிக்கப்படுகிறார். அதிகாரம், அற்புதம், ஆராதனை (மத். 4) இவைகளில் எழும் சோதனைகளை மேற்கொள்ள திருமுழுக்கு இயேசுவுக்கு ஆற்றல் வழங்குகிறது. அனைத்து விதங்களிலும் புறக்கணிக்கப்பட்ட நப்தலி, செபுலோன், கலிலேயா போன்ற பிற இனத்தவர்கள் வாழும் பகுதியில் ஆதிக்க, அடக்குமுறையால் காரிருளில் வாழும் மக்களுடன் தன்னை இணைத்துப் பணி செய்ய, போதிக்க, ஆற்றல் வழங்க திருமுழுக்கு இயேசு நாதரை வேகப்படுத்தியது (லூக். 4 : 12-17).

பிலாத்து என்னும் கொடியவன் கலிலேயர்களை இரகசியமாய் கொன்று அவர்கள் இரத்தத்தைப் பஸ்கா பலிகளில் கலந்தான். அடிமைகளைக் கட்டடப் பணியில் கொடுமைப்படுத்துவதே பழங்கால நடைமுறை. பாதுகாப்பின்றிக் கட்டடப் பணிகளிலே வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்ட அடிமைகளாகிய கட்டிட பணியாளர்கள் (யூத அடிமைகள்) சீலோவிலே கோபுரம் இடிந்து விழுந்து மாண்டனர். இயேசு அப்படிப்பட்ட பாதிக்கப்பட்ட மனிதர்களோடு தன்னை இணைத்துக் கொண்டு, அவர்களோடு தன்னை அடையாளப்படுத்துகிறார். அவர்களுக்காகப் பணி செய்கிறார்.

அச்சத்தில் உறைந்து வாழும் மக்கள், ஏழ்மை, வறுமை, ஒடுக்குதல், வரிச்சுமையால் பாதிக்கப்பட்டவர்கள், நீதி மறுக்கப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகள், முதியவர்கள், பெண்கள், குழந்தைகள், புறக்கணிக்கப்பட்டவர்கள், பாவிகள் என முத்திரையிடப்பட்டவர்கள் ஆகியோரோடு ஒன்றிணைய இயேசுவுக்கு திருமுழுக்கு நுழைவாயிலாய் அமைந்தது.





**2. இழக்க (விட்டுவிட) அழைப்பு :**

என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன் (மத். 3 : 17).

சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு உரையாற்ற இளம் குரு ஒருவர் அழைக்கப்பட்டார். மனம் மாறி புதிய மனிதர்களாக வாழுதல் என்ற தலைப்பில் அவர் தன் உரையை தயாரித்திருந்தார். இருப்பினும் தன் உரையை எப்படி ஆரம்பிப்பது என்று அவருக்கு குழப்பமாக இருந்தது. இந்த குழப்பத்தோடு உயரமாக இருந்த மேடையை நோக்கி நடக்க ஆரம்பித்தார். அவரது சிந்தனை முழுவதும் உரையில் இருந்ததால் படியில் தடுமாறி மேடையில் முகங்குப்புற விழுந்தார். அங்கிருந்த கைதிகளில் பலர் கரம் தட்டி சிரித்தனர். அவமானப்பட்ட குரு மனதில் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு மீண்டும் எழுந்து தன் உரையை இப்படித் துவங்கினார். நான் சொல்ல வந்த செய்தி இதுதான். தடுமாறி கீழே விழுந்தவன் அங்கேயே விழுந்து கிடக்கக் கூடாது. வாழ்வை ஆராய்ந்து விழுதலுக்கான காரணத்தை உணர்ந்து களைய (இழக்க) முன்வர வேண்டும். புதிய மனிதனாய் வாழ வேண்டும் என்று முழங்கினார்.

திருமுழுக்கு மனந்திரும்புங்கள் என்ற அறைகூவலோடு கொடுக்கப்படுகிறது. அது பழைய வாழ்வை விட்டுவிடவும், புதிய வாழ்வைத் தழுவிக் கொள்ளவும் நம்மை அழைக்கின்றது. மனந்திரும்புதலுக்கு 4 படிகள் என்கிறார் ஓர் அறிஞர். அவை :

i) பழைய வாழ்வை (பாவ) வெறுப்பது

ii) ஆன்ம அளவில் வருந்துதல்

iii) இனி இத்தவறில் தொடரமாட்டேன் என உறுதிப்படுவது

iv) புதிய வாழ்வைத் தழுவி கொள்ளுதல்

மனமாற்றம் என்ற பதத்தின் கிரேக்க பதம் மெற்ற நோயா. இதன் பொருள், அடித்தள பண்புகளில் மாற்றம் அல்லது தீமை இழந்து உருவாகும் புதுமை என அருள்தந்தை ஆண்ட்ரூ கிரின்ஸி என்பவர் கூறுகிறார். இவர் என் அன்பார்ந்த மகன். இவர் மேல் நான் பிரியமாயிருக்கிறேன். இவர் மூலம் நான் பூரிப்படைகிறேன் என்ற அங்கீகாரத்தைப் பெறும்படி வாழ்வது தான் திருமுழுக்கு ஏற்படுத்தும் அடிப்படை மாற்றம் (ஏசா. 49 : 4) திருமுழுக்கின் செம்பொருளும் அதுதான்.

ஊதாரி மைந்தன் உவமையில், தன்னுடைய பழைய வாழ்வை இழந்து புதிய தீர்மானத்தோடு வந்த இளைய மகனுக்குப் புதிய வாழ்வைத் தழுவுவதற்கான அழைப்பை அந்த தந்தை அவன் முன் வைக்கிறார். முதல் தரமான ஆடை, கைக்கு மோதிரம், காலுக்கு மிதியடி (லுக். 15 : 22) ஆகியவை அவர் அவனை புதிய மனிதனாக ஏற்றுக் கொள்வதை சுட்டிக்காட்டுகிறது. திருமுழுக்கின் வழியாய் கடவுளின் அழைப்பையும், உரிமைப் பேற்றையும் நாம் பெறுகிறோம். புதிய வாழ்வைத் தழுவிக் கொள்ளவும், பழைய வாழ்வை முழுவதும் இழக்கவும் அழைப்பு பெறுகிறோம். நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று திருமுழுக்குப் பெற வந்த படைவீரர்கள் வரிதண்டுவோர் கேட்டபோது, நீங்கள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் மனதை இழக்க வேண்டும் அநீதியாக பணம் சேர்ப்பதை இழக்க வேண்டும் என ஆலோசனை கூறி திருமுழுக்குக் கொடுப்பதை (லூக். 3 : 11-14) காணலாம்.

பண ஆசை, சாதி வேறுபாடு, ஊழல், சுரண்டல், பாலுணர்வு சார்ந்த ஒழுக்கக்கேடு, போதை, சுயநலச் சூறையாடல், அற்பமாக எண்ணுதல், உதாசீனம் செய்தல், தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தல்... போன்ற பாவங்களை விட்டுத் திருந்தி வாழ திருமுழுக்கு நம்மை அழைக்கிறது. இயேசுவின் திருமுழுக்கு அவருக்குத் தவறுகளை அடையாளம் கண்டு கொள்ளவும், தீமைகளை இழந்து நன்மையாய் வாழவும், தீமைக்கு எதிராய்ப் போராடவும் அர்ப்பணமாய், அழைப்பாய் அமைந்தது. நம் திருமுழுக்கும் நம்மைக் கிறிஸ்துவுக்குள் புதுப்படைப்பாக்கட்டும். அப்படைப்பில் நிலைவாழ்வை நல்கட்டும் (1 பேதுரு 3 : 18 -22).

**அருள்திரு. M. பிரேம்சிங் ஜெயக்குமார்**



| 20-01-2013 | திருத்தோற்றத்திருநாளுக்குப் பின்வரும் 2-ஆம் ஞாயிறு & ஒன்றிப்பு ஞாயிறு |
|---|---|

லேவி 25 : 35-42 1 கொரி. 4 : 1-15

திபா. 43 மத். 8 : 5-13

# ஒருமைப்பாட்டிற்கும் அமைதிக்கும் ஒப்படைத்தல்
# Commitment for Unity and Peace

"உன் சகோதரர்கள் உன்னோடு வாழட்டும்" (லேவி. 25 : 36)

**இறைவேண்டல்**

*எங்கள் ஆண்டவராகிய கடவுளே, துன்பமும் குழப்பமும் நிறைந்த உலகில் நாங்கள் பெலவீனராயிருந்த போதிலும் உம் திருமைந்தன் இயேசுவின் சீடர்களாய் நம்பிக்கையின் சான்றுடையோராய் எங்களைத் தெரிந்தபடியால் உம்மைப் போற்றுகிறோம். இந்த மறைபொருளை மண்கலன்களாகிய எங்களில் பெற்றிருக்கிற நாங்கள் நெருக்கங்களும் தீமைகளும் ஏற்படும்போது வளைந்து விடுவோமோ என அஞ்சுகிறோம். சில நேரங்களில் "எல்லாரும் ஒன்றாயிருப்பார்களாக" எனும் இயேசு நாதரின் திருவாக்கின் ஆற்றலையே சந்திக்கிறோம். கிறிஸ்துவின் திருமுக ஒளியின் மகிமையின் அறிவைத் திரும்பவும் எங்களில் தந்து, கிறிஸ்து எங்களில் லாழ்கிறார், செயலாற்றுகிறார் என்பதை எங்கள் செயல்கள், அர்ப்பணம், நிறைவான வாழ்வு மூலம் உலகுக்கு அறிவிக்க அருள்தர வேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியாரோடும் ஒரே கடவுளாக வாழ்ந்து ஆட்சி செய்கிற ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டிக்கொள்கிறோம், ஆமென்.*

59-ஆவது அனைத்திந்தியக் கூட்டுறவு வாரவிழாவையொட்டி குமரி மாவட்டத்தில் உள்ள பள்ளி மாணவ-மாணவிகளிடையே கூட்டுறவைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு, பள்ளிக் கூடங்களில், "கூடிவாழ்ந்தால் கோடி நன்மை", "நாட்டின் வளர்ச்சியில் கூட்டுறவின் பங்கு" "கூட்டுறவே நாட்டுயர்வு" "நாளைய கூட்டுறவில் நான்" மற்றும் "கூட்டுறவு மறுமலர்ச்சியில் என் பங்கு" போன்ற தலைப்புகளில் பேச்சுப்போட்டிகள் ஒழுங்கு செய்ய குமரி மாவட்ட கூட்டுறவு ஒன்றியம், தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது (தினத்தந்தி 01-11-2012, ப. 28).

இப்படிச் சமுதாயத்தில் கூட்டுறவு மலர அரசு பல முயற்சிகள் மேற்கொண்டு வரும் இந்நாட்களில் நமது குமரிப் பேராயமும் கடந்த 2012-ஆம் ஆண்டில் "கடவுளின் உலகில் ஒன்றாக அழைக்கப்பட்டுள்ளோம்" எனும் கருப்பொருளை இறைமக்களுக்கு அறிவித்து ஒன்றாக வாழ அறைகூவலும் கொடுத்துள்ளது. ஆனால் நாளுக்கு நாள் சமுதாயத்தில், திருச்சபையில் ஒற்றுமையின்மை ஓங்கி வளர்ந்து கொண்டே வருகிறது. இறையன்பால் இணைக்கப்பட்டிருக்கும் இறைமக்கள் அனைவரும் சகோதரர்கள்/சகோதரிகள். எனினும் திருச்சபை பலவிதமான பாரம்பரியங்களினாலும் கோட்பாடுகளினாலும் பல்வேறு சபைப் பிரிவுகளாக உடைபட்டு சமுதாயத்திலும், விரிந்துள்ள பலதரப்பட்ட மக்களுக்கும் சேவை செய்வதிலும் சான்று பகருவதிலும் ஒற்றுமையின்றி காணப்படுகிறது. இத்தகைய திருச்சபைகளுக்கு இன்றைய திருவிவிலியப் பாடமாகிய லேவி 25-ஆம் அதிகாரம் ஆழமான உண்மைகளைக் கற்றுத் தருகிறது. அதாவது இஸ்ரயேலர் கானான் தேசத்தில் குடியேறி பல ஆண்டுகள் சென்றபின்பு இன்று உலகம் இருப்பது போல், சமத்துவமற்ற ஒற்றுமையற்ற, அமைதியற்ற, நீதியற்ற சமுதாயமாக இருப்பதைக் கடவுள் கண்டார். மேலும் பலர் இக்கட்டில் சிக்கி, பிறரைச் சார்ந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். தங்கள் உற்றார் உறவினர்களான சக யூதருக்கே அவர்கள் அடிமைப்பட்டுபோன நிலை உருவானது. தங்கள் குடும்பத்தை காக்க தங்கள் பாரம்பரிய நிலங்களை இழக்க நேரிட்டது. இந்த அவலநிலையைக் கண்ட கடவுள், யூபிலி ஆண்டிலாவது மக்களின் மாண்பு, மதிப்பு காக்கப்பட வேண்டும் என நினைத்து சக யூதரிடம் வட்டி வாங்காதே, இறைப் பயத்துடன் நடந்துகொள் என்ற சில கட்டளைகளை லேவி. 25 : 35-42 வரை பட்டியலிடுகிறார். இவற்றில் லேவி. 25 :36-ஆம் வசனத்தில் உன் சகோதரர்கள் உன்னோடு வாழட்டும் என ஆணித்தரமாகக் கூறுகிறார். இறைமக்கள் இப்பேருண்மையைக் கருத்தில் கொண்டு, கோட்பாடுகளால் இறையன்பர்கள் எனும் உறவுகளில் உராய்வை ஏற்படுத்தும் பகை உணர்வுகளைக் களைந்து ஒன்றித்து அமைதியுடனும், சகோதர உணர்வுடனும் வாழ வேண்டும். அங்ஙனம் திருச்சபை தன்னை ஒற்றுமைக்கும் அமைதிக்கும் அர்ப்பணித்தால் உருவாகும் உன்னத அனுபவங்கள் எவை? எனத் திருவிவிலியத்தின் வெளிச்சத்தில் தியானிப்போம்.

## 1. உறவு புதுப்பிக்கப்படும்

ஒற்றுமையும் அமைதியும் ஒன்றோடொன்று கைகோத்து, மனித வாழ்வில் கடவுளின் ஆளுகையை நிலைநிறுத்தும், என்பதினால் ஒற்றுமையில்லாமல் அமைதியை அனுபவிக்க முடியாது. அமைதி இன்றி





தொடர்ந்து ஒற்றுமையோடு வாழவும் முடியாது என்று இருதுருவங்களில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு தாய் பிள்ளைகளாகிய ஏசாவும், யாக்கோபும் உணர்வடைந்து தங்கள் உறவு நிலைகளை புதுப்பித்துக் கொள்ள முன் வந்தனர். தந்தையிடமிருந்து யாக்கோபு கபடமாய் ஆசியைப் பெற்றுக் கொண்டபடியால் "என் தம்பியாகிய யாக்கோபைக் கொன்று போடுவேன்" (தொ.நூ. 27 : 41) எனச் சபதம் கொண்ட ஏசா, யாக்கோபு தன்னிடம் வருவதை அறிந்து யாக்கோபுக்கு எதிர்கொண்டு ஓடி அவரை அரவணைத்து இறுகக் கட்டித்தழுவி முத்தமிட்டார். (தொ.நூ. 33 : 4) தந்தையின் ஆசிபெற்ற யாக்கோபுக்கும், ஆசிபெறாத ஏசாவுக்கும் இடையே இடைவெளியை அதிகரிக்கச் செய்த எண்ணங்கள் ஏற்றத் தாழ்வுகள் வேரோடு அழிந்து போனதால் சகோதர உறவைப் புதுப்பிக்க முடிந்தது. அதன் வெளிப்பாடு தான் அரவணைத்தலும், கட்டித் தழுவி முத்தமிடுதலும் ஆகும். வளங்களைப் பெற்றவர்களுக்கும், (have's and have not's) பெறாதவர்களுக்கும் உள்ள இடைவெளி நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே செல்லும் இவ்வுலகில் எதிர்ப்புணர்வுகளை ஏற்படுத்திய கோட்பாடு சார்ந்த பகையைக் களைந்து தூய பவுல் கொரிந்து திருச்சபைக்கு கூறுவது போல "ஒத்த கருத்துடையவர்களாய்... ஒரே மனமும், ஒரே நோக்கமும் கொண்டு" (1 கொரி. 1 : 10) ஒற்றுமைக்கும் அமைதிக்கும் அர்ப்பணித்தால் நமது உறவு நிலை உறுதிப்படுவதைக் காணமுடியும்

## 2. பரந்த உள்ளம் உதயமாகும்

கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனின் வாழ்வியலில் ஒற்றுமையும் அமைதியும் இரண்டற கலந்தால் பரந்த உள்ளம் உதயமாகும் என்பதற்கு ஏசா, யாக்கோபு வாழ்வு நமக்கு ஒரு பாடமாக இருக்கிறது. அதாவது உறவைப் புதுப்பித்துக் கொண்ட யாக்கோபு மீண்டும் சகோதரர்களாகிய நாங்கள் ஒன்றித்து வாழ பொருளாதார ஏற்றத்தாழ்வு ஒரு தடைக்கல்லாக இருக்கக்கூடாது என நினைத்து தனது அன்பளிப்பை ஏசாவுக்கு வழங்க முன் வந்தார். உடனே ஏசா யாக்கோபைப் பார்த்து "எனக்கு எதிர்கொண்டு வந்த பரிவாரம் எதற்காக?" (தொ.நூ. 33 : 8) மேலும் "என் சகோதரனே, ஏற்கெனவே என்னிடம் மிகுதியாக உள்ளது. உன்னுடையதை நீயே வைத்துக் கொள் (தொ.நூ. 33 :9)" என்றார். அங்ஙனமே யாக்கோபும் ஏசாவிடம் .... கடவுளின் கருணையினால் எனக்கு வேண்டியமட்டும் உள்ளது. (தொ.நூ. 33 :11) என்றார். தகப்பனார் அருளிய ஆசியை ஏமாற்றி பெற்றுக்கொண்டு மறைந்து வாழ்ந்த தம்பிக்குள்ளும் ஆசியை பெற முடியாமல் மன வேதனையோடு அலைந்து திரிந்த அண்ணனுக்குள்ளும் ஒற்றுமையும் அமைதியும் மலர்ந்தபோது பரந்த உள்ளம் உதயமாயிற்று.

இன்று இறை மக்களிடையே உண்மையான ஒற்றுமையும் அமைதியும் இல்லாததால் அவர்களின் இருதயங்களெல்லாம் சுருங்கிப்போயிற்று. ஆனால் பரந்த உள்ளம் உடையவர்கள் போல பாசாங்கு காட்டுகிறார்கள். பல்வேறு சவால்களின் மத்தியில் இருக்கும் திருச்சபைகள் ஒற்றுமையையும் அமைதியையும் கையகப்படுத்தினால் மட்டுமே பரந்த உள்ளம் உருவாகும் என்பதை அறியவேண்டியது அவசியம்.

### 3. பரமனின் பிரசன்னத்தை உணரமுடியும்

ஒற்றுமையும் அமைதியும் மலருமிடத்தில் மனித நேயத்தைக் காண முடிகிறது. அதைவிட மேலாக இறைப் பிரசன்னத்தை உணரும் உன்னத அனுபவம் உருவாகும். தன்னை ஏமாற்றிய தம்பியைக் கொலை செய்ய வேண்டும் என்ற மூர்க்கத்தனமான முகத்தோடு அலைந்து திரிந்து கொண்டிருந்த அண்ணன் ஏசாவின் முகத்தைப் பார்த்த தம்பி, "உமது முகத்தை காண்பது கடவுளின் முகத்தைப் காண்பது போல் இருக்கிறது (தொ.நூ. 33 : 10)" என்று அகமகிழ்ந்தார். இப்படிப் பகை மாறி பாசம் நிறைந்த ஒன்றிப்பு உருவாகும் போது பரமனின் பிரசன்னத்தை உணரமுடிகிறது. இறைமகன் இயேசுவும் சீடர்களுக்கு உறுதியாக அறிவுறுத்தும்போது "இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் (மத். 18 : 20)" என்றார். தற்காலத்தில் இயேசு கிறிஸ்து வலியுறுத்தும் மன இசைவும், ஒற்றுமையும், அமைதியும் ஆலயங்களில் இல்லை. ஆகவே நெகே. 8 : 1-இல் மக்கள் அனைவரும் ஒரே ஆளென ஒன்று கூடினது போல இறை மக்களாக நாமும் ஒன்றித்து வாழ்ந்தால் இறைப்பிரசன்னத்தை உணரமுடியும் என்பது உறுதி.

இந்த ஞாயிறை திருச்சபை ஒன்றிப்பு ஞாயிறாகவும் (Ecumenical Sunday) இந்திய தேசிய கிறிஸ்தவ மன்ற ஞாயிறாகவும் (NCCI Sunday) கொண்டாடும் இறை மக்களாகிய நாம் அனைவரும் திருச்சபைகளில் ஒற்றுமையும், அமைதியும் நிலவ நம்மை அர்ப்பணம் செய்ய வேண்டும். "உன் சகோதரர்கள் உன்னோடு வாழட்டும்" (லேவி. 25 : 36) என்று கடவுள் நமக்கு அருளும் ஆலோசனையின்படி நாம் செய்தால் மட்டுமே நமது உறவுகள் புதுப்பிக்கப்படும். நம்மிடையே பரந்த உள்ளம் உதயமாகும். அத்துடன் இறை இல்லத்தில் இறைப் பிரசன்னத்தை உணரமுடியும்.

**அருள்திரு. G.S. ஆஸ்வின் ஜெய்சிங்**



**27-01-2013** திருத்தோற்றத் திருநாளுக்குப்பின்வரும் மூன்றாம் ஞாயிறு & தொழுநோயாளர் ஞாயிறு

| | |
|---|---|
| தொ.நூ. 1 : 1-5, 26-31 | தி.பெ. 21 : 1-7 |
| தி.பா. 29 | மத். 6 : 19-34 |

# படைப்பு : ஒழுங்கின்மையிலிருந்து ஒழுங்குக்கு நேராக
# Creation : From Chaos to Order

கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார் அவை மிகவும் நன்றாய் இருந்தன (தொ. நூல். 1 : 31).

**இறைவேண்டல்**

*விண்ணுலகையும் மண்ணுலகையும் உருவாக்கிய அனைத்து ஆற்றலும் பொருந்திய கடவுளே உம்மைப் போற்றுகிறோம். உம் வார்த்தையால் ஒழுங்கின்மையிலிருந்து ஒழுங்கமைவைத் தந்து வாழ்வின் முழுமையை மலரச் செய்த அன்புக்காய் துதிக்கிறோம். நாங்கள் உமது ஆற்றலையும், ஞானத்தையும், அன்பையும் தியானித்து உம்மை மாட்சிப் படுத்தவும் உமது அற்புதமான படைப்புக்கு பொறுப்புடையோராய் வாழவும்அருள்தர வேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியாரோடும் முடிவில்லாது உலகை ஆளும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.*

இறைவன் இயற்கையை ஒழுங்கற்ற நிலையிலிருந்து ஒழுங்கிற்குக் கொண்டு வந்தார். நிலையற்ற நிலையிலிருந்து நிலையான வாழ்வுக்கு கொண்டு வந்தார். வெறுமையான நிலையிலிருந்து நிறைவான வாழ்வுக்கு கொண்டு வந்தார். ஆனால் இறை உருவிலும், சாயலிலும் படைக்கப்பட்ட மனுக்குலமோ ஒழுங்கைச் சிதைக்கின்றது, நிலையற்ற நிலைக்குக் கொண்டு செல்கின்றது, வெறுமையாக்குகின்றது. இறைவனின் விருப்பம் புதிய வானம், புதிய பூமியை உருவாக்க விரும்புகின்றது. இறைவன் மனிதன், விலங்குகள், செடி, கொடிகள், நிலம் இணைந்த இறையரசினை நிறுவ மனுக்குலம் தவறுகின்றது. இதன் விளைவே மனுக்குலம் செயற்கையான வாழ்விலும், வெறுமையிலும் உழலுகின்றது.

ஒரு மனிதன் இறைவனைக் காண வேண்டுமென்று பல இடங்களைத் தேடி அலைந்தான். ஒரு நாளிலே ஞானி ஒருவரிடம் நான் இறைவனைக் காண வேண்டுமென்று தெரிவித்தானாம். ஞானியும் அம்மனிதனிடம் நான் உனக்கு இறைவனைக் காண்பித்துத்

தருகிறேனென்று அழகிய வனம், மலை, குன்று, நீரோடைகள் நிறைந்த பகுதியைச் சுட்டிக்காட்டி இப்பகுதியைச் சுற்றிப்பார் என்றார். அப்பகுதியைப் பார்த்த மாத்திரத்தில் இறை மாட்சியைக் கண்டேன், இறைவனின் முகத்தை இயற்கையில் கண்டேன் என்று அம்மனிதன் அகமகிழ்ந்தான். மீண்டும் பல வருடங்கள் ஓடிய பின்பு, இறைவனை காண வேண்டுமென்று விரும்பினான். மீண்டும் அதே பகுதிக்குச் சென்றான். இப்போது மலைகளும், குன்றுகளும் தகர்க்கப்பட்டிருந்தன, நீரோடைகள் கால்வாயாக உருமாற்றப்பட்டிருந்தன, அடுக்கு மாடிகள் உருவாகியிருந்தன. இம்மனிதன் சுற்றும் முற்றும் தேடினான் இறைவனின் முகத்தைக் காண இயலவில்லை. இன்றைய உலகமும் இயற்கையைச் செயற்கையாக மாற்றிவிட்டது, வெறுமையாக்கிவிட்டது விளைவு புவிவெப்பமடைதல், வறட்சி, இயற்கைப் பேரிடர் என்று சவால்களை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

### 1) இயற்கையா? செயற்கையா?

இறைவனின் படைப்பில் இரவும், பகலும் இயற்கை, வெயிலும் மழையும் இயற்கை, வானும் நிலவும் இயற்கை, சூரியனும் வெப்பமும் இயற்கை, தென்றலும் புயலும் இயற்கை, இடியும் மின்னலும் இயற்கை, நீர், நிலம், காற்று, நெருப்பு ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களும் அவற்றின் விளைவுகளும் இயற்கை, "தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்த பொழுது . . . . அவை மிகவும் நன்றாய் இருந்தன" (தொ.நூல் 1 : 31).

இறைவனின் படைப்பாற்றலில் இயற்கை அகமகிழ்ந்தது. பருவ காலங்களும், தட்பவெட்பநிலையும் சீராக இருந்தன. இயற்கை விதிகளுக்கு உட்பட்டு அவைகள் அழிவதும், உயிர்பெறுவதும் மறுசுழற்சி முறையில் நடந்தது. இறைவனும், இயற்கையும், இறைவன் படைத்த மனுக்குலமும் ஒன்றித்து இசைந்து இணைந்திருந்தன. அனைத்து உயிரினங்களும், நிலத்தின் அமைப்புகளும், செடி, கொடிகள், கனிதரும் மரங்கள், மீன்கள், விலங்குகள் எல்லாம் மனுக்குலத்தோடு ஒன்றித்து, மனுக்குலமும் இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்த நிலையை வெளிப்படுத்துகின்றது. இத்தகைய வியத்தகு இயற்கையிடமிருந்து கற்றுக் கொள்ளவும் (to learn) கவனிக்கவும் (to listen) இறைவன் அழைக்கின்றார்.இறைவனின் கைவேலையும், இறை வார்த்தையின் ஆற்றலையும் புரிந்துகொள்ள அழைக்கின்றார். யோபு அழகாக விளம்புகின்றார் "விலங்கிடம் வினவுக; உமக்கு அது கற்றுக் கொடுக்கும்; வானத்துப் பறவை உமக்கு அறிவுறுத்தும் அல்லது மண்ணில் ஊர்வனவற்றிடம் பேசுக, அவை உமக்குக் கற்பிக்கும். ஆழியின் மீன்கள் உமக்கு அறிவிக்கும்" (யோபு 12 : 7-8). இறைமகன்





இயேசுவும் வானத்துப் பறவைகள் (மத். 6 : 26), காட்டு மலர்கள் (மத். 6 : 28) காகங்கள் (லூக். 12 : 24). ஆகியவற்றிடமிருந்து கவலையை மறக்கவும், கவலையில்லாமல் வாழவும் கற்றுத் தருகின்றார்.

திருப்பாடல் 19-இல் இயற்கையின் அழகை விவரித்துக் கூறுகின்றார். வானங்கள் இறைவனின் மாட்சியை வெளிப்படுத்துகின்றன; வான்வெளி அவர் தம் கைவேலைப்பாட்டை விவரிக்கின்றது... பகல் செய்தியையும் இரவு அறிவையும் வழங்குகின்றது (தி.பா. 19 : 1-4).

இறைவனின் படைப்பாற்றலில் இயற்கை அகமகிழ்ந்தது. மனிதனின் அறிவாற்றலில் இயற்கை செயற்கையாகிச் சிதைந்து நிற்கின்றது. இந்த வீழ்ச்சியின் விளைவு சுவாசமுள்ள யாவும் இறைவனை புகழ முடியாமல் தவிக்கின்றன. விடுதலைக்காய் ஏக்கத்துடன் பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றன (உரோ. 8 : 20-22). இயற்கை செயற்கையானதால் "இதுதான் வயல்", "இதுதான் பனைமரம்" என்று Power Point Presentation வாயிலாகச் சுட்டிகாட்ட வேண்டிய காலம் வரும்.

### 2) வெறுமையா? நிறைவா?

வெறுமையாக, உருவற்று, உருக்குலைந்து நின்ற மண்ணுலகை நிறைவானதாக மாற்றுகின்றார் இறைவன். என்னே இறைவனின் ஆற்றல்! உருக்குலைந்தவற்றை குப்பையில் போடுகின்றது மனித சமூகம். உருவற்று உருக்குலைந்தவற்றிலிருந்து உருமாற்றம் செய்வது இறைவனின் திட்டம். தொடக்க நூலில் இறை ஆற்றலை அழகாக எடுத்துரைக்கின்றது விவிலியம். "மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது, ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது" (தொ.நூல். 1 : 2). வெறுமையிலிருந்து நிறைவிற்கு வழிநடத்திய இறைவன் பகிர்வையும், சமத்துவ வாழ்வையும் ஏற்படுத்துகின்றார். கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்; கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார் (தொ.நூல். 1 : 27). பலுகிப் பெருகுங்கள், ஒருவரையொருவர் சார்ந்து வாழுங்கள், சம்பூரணமாய், நிறைவாய் வாழுங்களென்று இறைவன் வாழ்த்துகின்றார். "மண்ணுலகெங்கும் உள்ள விதை தரும் செடிகள், பழமரங்கள், அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன்; இவை உங்களுக்கு உணவாகட்டும். எல்லாக் காட்டுவிலங்குகள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்வன ஆகிய அனைத்து உயிர்களுக்கும் பசுமையான செடிகள் அனைத்தையும் நான் உணவாகத் தந்துள்ளேன்" என்றார் (தொ.நூல் 1: 29, 30). இறைவனின் திட்டம் நிறைவு, ஒழுங்கு, பகிர்வு, கூடி வாழுதல் என்பனவாகும்.

மனிதர்களின் திட்டம் ஆதிக்கம் செலுத்தல், அழித்தல், தனக்கு, எனக்கு, என் குலத்திற்கு, என் நாட்டிற்கென்று வாழுதல். விளைவு வெறுமை. காவிரி நீரைப் பகிர்வதிலும், இயற்கை வளங்களைப் பகிர்வதிலும் இதே நிலை நீடிப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். “Earth is enough for all human beings but not for their greed” என்றார் மகாத்மா காந்தி. இப்புவி மனுக்குலத்திற்கு போதுமானதே. ஆனால் மனுக்குலத்தின் பேராசைக்குப் போதுமானதல்ல. இறைவன் நிறைவையும், பகிர்வையும் தந்தார். நாமோ இயற்கை வளங்களை அழித்து, பகிர்வைச் சிதைத்து வெறுமை நிலைக்கு தள்ளுகின்றோம்.

**3) இயற்கையைப் பேணுவோம் நிறைவாய் வாழுவோம்**

இறைவன் மனுக்குலத்திடம் கேட்கும் கேள்வி, இயற்கை வேண்டுமா? செயற்கை வேண்டுமா? வெறுமை வேண்டுமா? நிறைவு வேண்டுமா? செயற்கை உறவு நிலைகளில் வாழும் மனுக்குலத்திற்கு இயற்கையாக வாழ்வது கடினம் தான். தனக்கு, எனக்கு, என் குடும்பத்திற்கென்று வெறுமையோடு வாழும் மனுக்குலம் நிறைவாக வாழ்வது கடினம் தான். இறைவனின் உளவிருப்பம் இயற்கை இயற்கையாக வாழட்டும், நிறைவுடன், பகிர்வுடன் மனுக்குலம் வாழட்டும். இறை விருப்பத்தைப் புதிய வானம், புதிய பூமியின் (வெளி. 21 : 1). திருக்காட்சியில் காணலாம். மனுக்குலம் இயற்கையைப் பழுதடையச் செய்ய, இறைவன் பழுது நீக்கும் பணியைச் செய்து வருகின்றார். இத்திருப்பணியில் மனுக்குலம் இப்புவியைப் பண்படுத்தி, பாதுகாக்க (தொ. நூல் 2 : 15) இறைவன் அழைக்கின்றார். இறைவனின் புதுப்பிக்கும் பணியில் நாமும் இணைவோம். புதிய வானம் புதிய பூமியை உருவாக்குவோம்.

**அருள்திரு. C. கில்டன் தயானந்த்**



| 27-01-2013 | தொழுநோயாளர் ஞாயிறு |
| --- | --- |

| | |
| --- | --- |
| லேவி. 13 : 9-27 | 2 கொரி. 12 : 1-10 |
| தி.பா. 23 | மாற். 1 : 41-45 |

# குணமாக்கும் இயேசு
# Jesus the Healer

“ . . . நான் விரும்புகிறேன் உமது நோய் நீங்குக !” மாற். 1 : 41

இயேசு குணமாக்குதல் வழியாக தொழுநோயாளி ஒருவரை அதாவது முழுமையற்ற மனிதத்தை முழுமையாக்கி புதிய படைப்பாக மாற்றுவதை இன்றைய நற்செய்திப் பகுதியில் காணலாம்.

இயேசு வாழ்ந்த காலத்தில் யூதச் சமூகத்தினரால் தொழுநோய் என்பது இறைவனின் சாபம் என்னறு கருதினர். தொழுநோய் என்று அறிவிக்கப்பட்ட ஒருவன் தீட்டுப்பட்டவன் என்றும், பாவத்தின் விளைவாகப் பெற்றுக்கொண்ட தண்டனை என்றும் கருதப்பட்டு, குடும்ப உறவில் இருந்தும், சமூக உறவில் இருந்தும் பிரிக்கப்பட்டு ஊருக்கு வெளியே விடப்படுவான்.

ஊருக்குள்ளே வர நேரிட்டாலோ ஊரார் ஒருவர் தங்களைக் கடக்க நேரிட்டாலோ தொழுநோயாளி கிழிந்த உடை அணிந்து பரட்டைத் தலையுடன் மேல் உதட்டை மறைத்துக்கொண்டு தீட்டு தீட்டு என்று குரல் எழுப்பவேண்டும். தன் இருப்பைக் குறித்து எச்சரிக்க வேண்டும். எவ்வளவு கொடுமையானது (லேவி. 13).

இப்படி ஊருக்கு புறம்பே ஒருவேளை உணவுக்கு வழியின்றி வாழும் மாந்தரின் மனதின்வலியும், ஓலமும் அவர்களுக்கும் இறைவனுக்கும் மட்டுமே தெரியும்.

(i) தன் சொந்தக் குடும்ப உறவில் இருந்து தனிமைப்படுத்தப்பட்ட நிலை

(ii) சக மனிதர்களோடு சேர்ந்து வாழ வேண்டிய நிலையில் புறக்கணிக்கப்படுதல்

(iii) சமூகத்தில் இருந்து புறக்கணிக்கபட்ட நிலை

இப்படிப்பட்ட தம் அவல நிலையை உணர்ந்து எனது நோயை நீக்க உம்மால் முடியும் என்ற ஆழமிகு உறுதியுடன் உன்னதர் இயேசுவிடம் வருகிறார்.

**1. நம்பிக்கையுடன் வந்தார்** (மாற். 1 : 40)

வாழ்வின் மகிழ்ச்சிக்கும் நிறைவுக்கும் நம்பிக்கையே

முக்கியமானது. நம் கடவுள் வாழ்வோரின் கடவுள். அதாவது வாழ்வைக் கொடுக்கும் கடவுள் (மாற். 12 : 27). நான் ஆடுகள் வாழ்வைபெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப்பெறும் பொருட்டு வந்துள்ளேன். (யோவ. 10 : 10). வாழ்வுதரும் ஆண்டவரிடம் "நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்" என்ற ஆழமான நம்பிக்கையை வெளிப்படுத்தினான்.

ஆழமான நம்பிக்கை நல்வாழ்வின் ஆரம்பம் என்பார் புனித அகஸ்டின்.

இயேசுவால் என்னை நலமடைய செய்யமுடியும் என்று முழுமன சுதந்தரத்துடன் அவரை அணுகித் தாழ்ச்சியுடன் முழந்தாள் படியிட்டு சரணாகதி அடைகிறான். இறைவனைத் தவிர தன்னுடைய வாழ்க்கையில் மேலானது எதுவுமில்லை. "மனிதர் மீது நம்பிக்கை வைப்பதைவிட்டு ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம்" (திபா. 118 : 8).

இயேசுவில் ஏற்பட்ட நம்பிக்கை தாம் அனுபவித்த இன்னல்களையும், இடர்பாடுகளையும் மனதைரியத்துடன் எதிர்கொண்டு இயேசுவிடம் தஞ்சம் புக வைத்தது. ஒரு வாகனத்தின் உந்து சக்தி எவ்வாறு ஒரு வாகனத்தை முன் நோக்கிச் செல்ல வைக்கிறதோ, அதே போன்று இயேசுவின் பாதத்தில் செல்லத் தூண்டிற்று. அந்த நம்பிக்கையின் ஆழத்தில் வெறும் உடல் நோயைக் குணப்படுத்த மட்டுமல்ல, மாறாக உள அமைதிக்காக மனக்காயங்கள் ஆற்றப்பட, பிரிக்கப்பட்ட உறவை மீண்டும் அடைய இழந்து போன மனித மாண்பையும், மதிப்பையும் மீண்டும் பெற, மறுக்கப்பட்ட மனித உரிமைகளை மீண்டும் அடைய ஏதுவாயிற்று.

உண்மையான நம்பிக்கையுடன் இதயத்தின் அடி ஆழத்தில் இருந்து கடவுளைக் கூப்பிடுகிறவர்களுக்கு அவர் செவி சாய்ப்பார். அவர்கள் கேட்டது ஆசைப்பட்டது கட்டாயம் கிடைக்கும் என்றார் மார்ட்டின் லூதர்கிங்.

**2. நல் உறவில் ஒன்றிக்கப்பட்டார்** (மாற். 1 : 41)

உறவுகளில்லாத வாழ்க்கை துடுப்பு இல்லாத படகைப் போன்றது. புறக்கணிக்கப்பட்ட பாவிகளையும் பிணியாளர்களையும் இயேசு தொட்டு தோழமையை உண்டாக்கினார். தொடுதல் வழியாக தமது நட்பை, உறவை வெளிப்படுத்தி, நான் உன்னை மனிதனாகப் படைத்தேன். மனிதனாக ஏற்றுக் கொள்கிறேன். நான் அனைவருக்கும் சொந்தம் என்பதை நிரூபிக்கின்ற வண்ணமாக இயேசு அவர் மீது பரிவுகொண்டு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு அவரிடம் நான் விரும்புகிறேன் உமது நோய் நீங்குக (மாற். 1 : 41) என்றார்.

மனித மாண்பையும் உறவையும், உரிமையையும் இழந்து உருக்குலைந்தவனாக நின்றவன் மீது பரிவு கொண்டு தொடுகிறார்.

ஒரு சமயத்தின் ஆணிவேராகவும் அச்சாணியாகவும் இருப்பது பரிவே. எந்த மனிதரிடம் பரிவு இருக்கிறதோ அவனையே மகாத்மா





என்பார் பெரியார். பரிவு என்பது மற்றவர்களின் துன்பத்தைக் கண்டு வருத்தப்படுவதும், அவர்களுக்காக மனம் இரங்குவதுமல்ல. உடன் துன்புறுகின்ற அனுபவம், உடலால் உள்ளத்தால் உணர்வுப் பூர்வமாக இணைந்திருக்கும் நிலை. யாக். 5 : 11 ஆண்டவர் மிகுந்த பரிவுள்ளமும் இரக்கமும் கொண்டவர் என்கிறது. பார்வையற்றவர் மீது பரிவுகொண்டு (மத். 20 : 34), ஆயரில்லா ஆடுகளைப் போல் இருந்தவர்களைப் பார்த்து பரிவுகொண்டவர் (மாற்கு 6 : 34), மகனை இழந்த நாயீனூர் விதவையின் மீது பரிவு கொண்டு உயிர் பெறச் செய்தவர் (லூக். 7 : 13-15) எகிப்தில் இஸ்ரவேலின் துயரங்களை நான் அறிவேன் என்றவர் (விப. 3 : 7). பரிவின் மொத்த வடிவமாக உள்ளார்.

தொழுநோயாளியைத் தொட்டால் சட்டப்பூர்வமாகத் தீட்டு எனக்கூறும் போது இயேசு பரிவுகொண்டு மனித நேயத்துடன், மனித மாண்பை வெளிப்படுத்துகின்ற வண்ணமாகத் தொட்டு.............நான் விரும்புகிறேன். உமது நோய் நீங்குக என்றார். அப்படித் தொட்டு தம் உறவை வெளிப்படுத்தினார்.

**3. நலமுடன் சான்றுரைத்தார்** (மாற். 1 : 45)

நலம் வேண்டிவந்தவருக்கு நலம் அளித்து முழுமையற்ற மனிதத்தை முழுமையாக்கி புதிய படைப்பாக மாற்றுகிறார். அன்பு செய்யப்படாத அந்த மனிதனுக்கு இறையன்பைக் காட்டி ஊருக்குள் இணைந்து வாழுகிறதற்காக அனுப்புகிறார். நீர் போய் உம்மைக் குருவிடம் காட்டி நோய் நீக்கியதற்காக மோசே கட்டளையிட்டுள்ள காணிக்கையைச் செலுத்தும் (மாற். 1 : 44) என்று அனுப்பினார். ஊருக்குப் புறம்பே தள்ளப்பட்டவர் ஊருக்குள் வருகிறார். தீண்டத்தகாதவர் என்று வெளியேற்றப்பட்டவர் சமுதாயத்திற்குள் உள்வாங்கப்படுகிறார். மனித உரிமையையும், மாண்பையும் இழந்து கிழிந்த கந்தலாடையோடு அல்லல்பட்டவர் எருசலேம் ஆலயத்திற்குள் நுழைகிறார். எல்லோரும் இறைவனின் பிள்ளைகள் என்பதை நிலைநிறுத்துகிறார். இயேசு எத்தகைய வேறுபாடுமின்றி அனைவரையும் சமமாக அன்பு செய்கிறார்.

அன்னை தெரசா அவர்கள் ஒருநாள் கொல்கொத்தா வீதி வழியாகக் காரிலே வந்து கொண்டிருந்தார்கள். வரும் வழியில் வாகனத்தை மெதுவாக ஓட்டும்படி ஓட்டுநரிடம் சொன்னார். ஏன்? என்று வாகன ஓட்டுநர் கேட்டார். அன்னை, அழுகும் புண்களில் சீழ்வடிந்த நிலையில் உள்ள மனிதனைக் கண்டு இயேசு கிறிஸ்து தெரு வீதியிலே இருக்கிறார். அவரை என்னுடன் அழைத்துச் செல்வேன் என்றார். ஆம்! அன்பர்களே, உருக்குலைந்து, உடைபட்டுக் கிடந்த தொழுநோயாளிகளை அரவணைத்து இறைமகன் இயேசுவாக அவர்களைப் பாவித்து அன்பு செய்து அன்பின் சமூகம் மலரப் பாடுபட்டார்.

இறைமக்களாகிய நாமும் சமூகத்தில் ஒதுக்கப்பட்ட மக்களிடம் இறை நம்பிக்கையை ஊட்டி, உறவு பாராட்டி அன்பின் சமூகம் மலரச் செய்வோமாக.

**அருள்திரு. N. ஜாண் பென்டிங்**

**03-02-2013** திருத்தோற்றத்திரு நாளுக்குப்பின்வரும் நான்காம் ஞாயிறு

தொநூ. 3 : 1-7 உரோ. 5 : 12-21

தி.பா. 32 யோவா. 3 : 1-16

# வீழ்ச்சி

# The Fall

... உங்கள் கண்கள் திறக்கப்படும், நீங்கள் கடவுளைப் போல் நன்மை தீமையை அறிவீர்கள் என்பது கடவுளுக்கு தெரியும். (தொ.நூ. 3 : 5).

**இறைவேண்டல்**

*அன்புள்ள கடவுளே, உம்மை விட்டு அகன்று நிற்கும் உலகில், இருளினின்று ஒளியினிடத்திற்கும், தீமையின் ஆற்றலிலிருந்து வாழும் கடவுளிடத்திற்கும் மனுக்குலத்தைத் திருப்ப உம் திருமைந்தனை உலகுக்கு அனுப்பியதற்காக உம்மைத் துதிக்கிறோம். நாங்கள் எல்லா சோதனைகளையும் மேற்கொள்ளவும், உம் உள்ள விருப்பம் ஒன்றுக்கே கீழ்ப்படிந்து நடக்கவும் உதவி புரிய வேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியாரோடும் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக மன்றாடுகிறோம். ஆமென்.*

தொடக்கநூல் 3 : 8-ஆவது வசனத்தில் பகலில் குளிர்ச்சியான நேரத்தில் ஆதாம் கடவுளோடு ஏதேன் தோட்டத்தில் உலாவி வருகிறார். கடவுளோடு இணைந்த வாழ்வு, அதுவே அவர் தரும் நிலைத்த வாழ்வு. ஆனால் இங்கே தொநூ. 3 : 5-இல் கடவுளைப் போலாக வேண்டும் என்கிற மனித முயற்சி தோல்வியைத் தருகிறது. வீழ்ச்சியைக் கொண்டு வருகிறது.

கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட மனிதன் இறைச்சாயலின் அம்சமான தனித்துச் சிந்திக்கும் ஆற்றலைப் பெற்றபடியினால் கடவுளைப் போலாக வேண்டும் என்கிற சோதனையில் விழுந்து விடுகிறான். சோதனை மனித உள்ளத்தில் ஏற்படும் அனுபவம். கடவுள் இல்லா வாழ்க்கை இங்கு தோல்வியையும் தொடர்ந்து வீழ்ச்சியையும் கொண்டு வருகிறது.

மனித வீழ்ச்சியின் 3 காரணிகளைத் தியானித்து நம் வாழ்வைச் சீர்படுத்துவோம்.





**1. கவர்ச்சியை நாடும் வாழ்வு**

விலக்கப்பட்ட மரம் பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சியாயிருந்தது. தொடக்கநூல் 3 : 6 கூறுகிறது, அந்த மரத்தின் கனி உண்பதற்கு ருசியாயிருந்தது, பார்வைக்கு இன்பமாயிருந்தது, புத்தியை தெளிவிக்கிறதாயிருந்தது. இந்தக் கவர்ச்சியில் நாட்டம் கொண்ட ஏவாள் தன் கையை நீட்டி அதைப் பறித்து உண்டாள். இங்கு பாவம் கைக்கு எட்டிய தூரத்தில் ஏவாளுக்கு இருந்தது.

தாவீதுக்குப் பாவம் கண்ணுக்கெட்டிய தூரத்தில் இருந்தது. மாம்ஷீகக் கவர்ச்சியில் தாவீது பத்சேபாளிடத்தில் வீழ்ந்தான்.

ஆகாப்பின் பாவம் அவன் வீட்டைச் சுற்றியே இருந்தது. நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தின் மேலிருந்த கவர்ச்சியால் நாபோத்தை கொன்றதால் வீழ்ந்தான்.

நீதிமொழிகள் 4 : 25 சொல்லுகிறது உங்கள் கண்கள் நேராய் பார்க்கட்டும். நீதிமொழிகள் 17 : 24 சொல்லுகிறது உணர்வுள்ளவர் ஞானத்திலே கண்ணாயிருப்பார். மதிகேடரின் கவனமோ நாற்புறமும் சுற்றி அலையும் என்கிறது. கவர்ச்சி நேர்மையல்லாத பார்வையைக் கொடுக்கிறது என்பதை உணரலாம். கவர்ச்சியின் வாழ்வு திருப்தியைக் கொடுப்பதில்லை. இதையே நீதிமொழிகள் 27 : 20 சொல்லுகிறது. “பாதாளமும் படுகுழியும் நிறைவு பெறுவதேயில்லை. ஒருவர் கண்களின் விருப்பமும் நிறைவு பெறுவதில்லை”.

உலகமயமாதல் வலுப்பெற்றுவரும் இக்காலத்தில் கவர்ச்சியும் ஆடம்பரமும் நுகர்வுக் கலாச்சாரத்தின் இருகண்களாகச் செயல்பட்டு வருகின்றன. பெண்களை இந்நுகர்வு கலாச்சாரம் கவர்ச்சிப் பொருளாகவும் அழகு பொருளாகவும் வைத்து அவர்களுடைய ஆளுமையை உலகம் உணராதபடிக்கு வீழ்ச்சியுறச் செய்கிறது. கைக்கெட்டிய நிலையில் இருந்த மரத்தின் கவர்ச்சியால் ஏவாள் வீழ்ச்சியுற்றாள் என்றால் இன்று யதார்த்தத்தை மறைக்கும் கவர்ச்சி வாழ்க்கை வீழ்ச்சியைத் தரும் என்பதில் ஐயமே இல்லை.

**2. கட்டுப்படாத வாழ்வு**

மீறுதல் வீழ்ச்சியைத்தரும். கடவுளின் சட்டத்திட்டங்களுக்குக் கட்டுப்படாமல் மீறி செல்லுகிறான் மனிதன். தன்னைப் படைத்த கடவுளை நம்புவதை விட உலகத்தின் மீது ஆசையைத் தூண்டும் தீயோனின் வார்த்தையே ஏவாளுக்கு மேலாகத் தெரிகிறது. தன்னைப் படைத்த இறைவனுக்கு கட்டுப்படாத அவளது உள்ளம் இறைக் கட்டளையை மீறுவதற்குத் தூண்டுதல் தருகிறது.

கடவுளுடைய கட்டளையை மீறுகிறபோது நான்தான், எனக்கு மட்டும்தான் என்ற அகங்காரம் மேலோங்குகிறது. விளைவு வீழ்ச்சி. கட்டளையை மீறுகிற வாழ்வின் பலனே குறுக்குவழிகளை நாடி பணம் சம்பாதித்தல், அதிகாரத்தைப் பிடித்தல், பணம், மதுப் பொருட்களைக் கொடுத்து ஓட்டுக்களைப் பிடித்தல் போன்ற தீமைகளை வலுப்படுத்துகிறது.

எரொபவாம் அரசன் சாலமோன் மற்றும் ரெகேபெயாம் அரசர்களின் மீறுதல்கள் நிமித்தம் கடவுளால் தெரிவு செய்யப்பட்ட வடநாடான இஸ்ரயேலின் அரசன். ஆனால் தெரிவு செய்யப்பட்ட பின்னணியத்தை மறந்து பொன்னினால் கன்றுகுட்டிகளை உண்டாக்கி ஒன்றைத் தாணிலும் ஒன்றைப் பெத்தேலிலும் வைத்து தூபங்காட்டினான் (1 அர. 12 : 25-13:10). அது அவனது வீழ்ச்சிக்கு ஆரம்பமாயிற்று.

சவுல் மன்னன் கடவுளின் வார்த்தையை மீறிச் செய்த பாவத்தினால் தான் அவனது வம்ச ஆட்சியே நின்று போனதாக 1 சாமுவேல் 15-ஆம் அதிகாரத்தில் காணலாம்.

கடவுள் நமக்குக் காட்டுகின்ற பாதை நீதியும், சமாதானமும் நிறைந்த பாதை. ஆனால் அவைகள் மீறப்படும்போது வழிச்சி உறுதி.

இப்பூமியை பராமரிப்பதில் கடவுள் கொடுத்த வாழ்வுக்குரிய கட்டளை பண்படுத்தி பாதுகாருங்கள் என்பதாகும் (தொநூ. 2 : 15). இன்று மனிதனின் அளவுக்கதிகமான நுகர்ச்சி இயற்கையை பாதுகாப்பதற்குப் பதில் அதிகமாகச் சுரண்டுதலுக்கு வழிவகுக்கிறது.

சுயநலத்திற்காக, சுயபலத்திற்காகப் பன்னாட்டுக் கம்பெனிகளும், அதிகார வர்க்கங்களும் இணைந்து கட்டுப்பாடில்லாமல், கடவுள் பயமில்லாமல் செய்யும் செயல்கள் இன்று புவிவெப்பம், இயற்கை மாசுபடுதல், வேலையில்லாத திண்டாட்டம், விவசாய நலிவு போன்ற தீமைகளை உலகளாவிய நிலையில் தந்து கொண்டிருக்கிறது.

நாமும் இறையச்சமில்லாமல் கட்டுப்பாடின்றி செய்யும் மது, லஞ்சம், ஊழல், வஞ்சகம், பகை போன்றவை குடும்பங்களை வீழ்ச்சிக்கு நேராய்ப் கொண்டு செல்லுகிறது.

**3. கடவுள் இல்லா வாழ்வு**

கடவுள் இருக்கவேண்டிய இடத்தில் தன்னை மிகைப்படுத்தி வாழும் வாழ்க்கை கடவுள் இல்லா வாழ்க்கை. இங்கே தீயோனின் கவர்ச்சியான வார்த்தை நீங்கள் கடவுளைப் போலாவீர்கள். இந்த Yôoj û R HYôÞ dÏ ª LÜm ©¥j §ÚdLúYi Óm. G] úYRôu ¾úVô² u ã r f£dÏ E hThÓ År f£ Ht TÓ¡ \ Õ.





மனிதன் கடவுளாக முடியாது மாறாக கடவுளின் கிருபையே நம்மை அவர் சந்நிதியில் நிற்கச் செய்கிறது. எவருடைய வாழ்க்கையில் கடவுள் புறக்கணிக்கப்பட்டு சுயம் மேலோங்குகிறதோ அங்கு வீழ்ச்சி ஆரம்பமாகிறது. இதையே கடவுள் இல்லை என்று மதிகேடன் தன் இதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்து அருவருப்பான காரியங்களைச் செய்து வருகிறார்கள் என்கிறார் (திபா. 14).

நெபுகத்னேசர் - இறை அச்சம் கொஞ்சமேனும் இல்லாமல் நான் கட்டிய மகா பாபிலோன் என்றான். அந்நேரமே அவனுக்கு வீழ்ச்சி ஆரம்பமாயிற்று. மரியாள் தன் பாடலில் இதயச் சிந்தையில் அகந்தையுள்ளவர்களைக் கடவுள் சிதறடித்தார் என்று பாடுகிறார். அகந்தை, மமதை மனிதனை வீழ்ச்சியுற செய்கிறதென்றால் மிகையாகாது.

ஆகாப் அரசனின் அகந்தையோடு கூடிய செயல் குற்றத்தைச் சுட்டிக்காட்டிய எலியா தீர்க்கரைப் பகைஞராகக் காணச் செய்தது. அதனால் தான் எலியா தீர்க்கரைப் பார்த்து என் பகைஞனே என்னைக் கண்டுபிடித்தாயா என்று கேட்கிறார். அவனது இறையச்சமில்லாச் செயல் வீழ்ச்சியைக் கொண்டு வந்தது.

அன்புக்குரியோரே! திருமறை தெளிவாகக் கூறுகிறது. கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி. 2 : 7). நிச்சயமாக இறையச்சம் மட்டுமல்ல அது வாழ்க்கையின் துவக்கம். வாழ்க்கை வாழ்வதற்கே. அவ்வாழ்க்கையில் கடவுள் இல்லலையெனில் அதில் திருப்தி நிச்சயமாய் இருக்காது. அது வீழ்ச்சியாகிவிடும். அதற்காகவே

கடவுளோடு வாழுவோம் இறையச்சத்தோடு

கட்டுப்பாடுகளோடு வாழுவோம்.

கவர்ச்சியல்ல கருத்தோடு வாழுவோம்.

**அருள்திரு. ஜெபசுஜி**

| 03-02-2013 | திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு |
|---|---|

கிறிஸ்தவப் பக்திமுயற்சி சங்க ஞாயிறு

1 அர. 19 : 1-15 திருத்தூதர் 10 : 1-8
தி.பா. 32 யோவான் 9 : 24-34

# இளையோர் : கடவுளுக்கு உகந்தவராக வாழ்வோர்
## Youth : A Life that Pleases God

"அவர் இறைப்பற்றுள்ளவர்; தம் வீட்டார் அனைவருடனும் கடவுளுக்கு அஞ்சி நடந்தவர் (திப. 10 : 2)

**இறைவேண்டல்**

*நல்ல தகவுகளை வாழ்வுக்கு தருகின்ற அன்பு தந்தையே! இளமை நீர் அருளும் ஈவு என்பதை நாங்கள் உணர்ந்து உம்மை சார்ந்து வாழவும், உம்மிலே வேர் கொண்டு கனி கொடுக்கவும் அருள்தாரும். கிறிஸ்துவில் நாங்கள் பெற்றுக்கொண்ட நல்ல தகவுகளை எங்கள் இளையோரும் வாழ்ந்து காட்டவும், உமக்கு சான்று பகரவும் அருள்தர வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாய் வேண்டுகிறோம் நல்ல தந்தையே. ஆமென்.*

கடவுள் படைத்து, நாம் வாழும்படியாகக் கொடுத்திருக்கிற இந்த உலகத்தில், சீடத்துவத் தன்மைகள் கொண்ட, மாதிரியான கிறிஸ்தவ வாழ்வு வாழ்வது, நம்முடைய (குறிப்பாக இளைஞர்களின்) அன்றாட வாழ்க்கையின் மிகவும் முக்கியமான கடமையாகும். ஒரு சமயம் ஓர் அடர்ந்த காட்டிற்குள் ஒரு சிறுமி விறகு பொறுக்கச் சென்றாள். விறகுகளைச் சேகரித்து விட்டுத் திரும்பும்போது வழி தவறிவிட்டாள். பசி ஒரு பக்கம், பயம் இன்னொரு பக்கம், அவளை திகிலூட்டியது. யாராவது தனக்குச் சரியான வழியைக் காட்டுவார்களா என்று காட்டுக்குள் நடந்துகொண்டிருந்தாள். அப்போது எதிர்கொண்ட ஒரு மனிதர், எப்படியும் தான் வீடு செல்ல தனக்கு வழி காட்டி விடுவார் என்று நம்பிக்கையோடு அவரை அணுகினாள். "ஐயா நான் இரண்டு நாட்களாக இந்த அடர்ந்த காட்டில் பாதை தெரியாமல் அலைகிறேன். நீங்கள் எனக்கு வழியைக் காட்டுங்கள்" என்று கேட்டாள். அதற்கு அந்த மனிதர், "நான் வழி தெரியாமல் பத்து நாட்கள் சுற்றிக் கொண்டிருக்கிறேன்" என்று சொன்னாராம். அருமையானவர்களே, இதுதான் இந்த உலகத்தின் நிலையாக இருக்கிறது.

இன்றைய உலகத்தில், இளைஞர்கள், சமுதாயத்தின்





முறைகேடுகளைச் சுட்டிக்காட்டிப் போராடினால், அவர்களை வேலைவெட்டி இல்லாதவர்கள், போராளிகள், ஊதாரிகள் என்று உலகம் குற்றம்சாட்டுகிறது. இயேசுநாதர் எருசலேம் தேவாலயத்தின் குறைகளைச் சுட்டிக்காட்டியபோது அவரைக் கொலை செய்யத் திட்டமிட்டார்கள். இப்படிப்பட்ட இளைஞர்களைச் சரியாகப் புரிந்து கொண்டு, அவர்களை ஏற்றுக் கொள்ளத் தயங்கும் இந்த உலகத்தில், இளைஞர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதைக் கொர்நேலியுவின் வாழ்க்கையில் காணப்பட்ட நான்கு பண்புகளின் வழியாக சிந்திப்போம்.

**1. இறைப்பற்று**

கொர்நேலியுவிடம் காணப்பட்ட முதல் பண்பு இறைப்பற்று அதாவது, அவர் இறைப்பற்றுள்ள மனிதனாக இருந்தார். இந்த இறைப்பற்று தான் இன்றைய இளைஞர்களிடமிருந்தும் எல்லாரும் எதிர்பார்க்கின்றனர். இந்த வாழ்வு என்பது கடவுளால் நமக்கு தரப்பட்டது. அதனால் நம்முடைய நோக்கங்களை முன்னிறுத்தி வாழாமல், அவருடைய நோக்கங்களுக்காக வாழ்வதுதான் உண்மையான இறைப்பற்று நிறைந்த வாழ்க்கையாகும். எனக்குக் கடவுள் என்ன செய்வார் என்பது நம்முடைய எதிர்ப்பார்ப்பாக இருக்கக் கூடாது. அவருக்காக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதற்குத்தான் நாம் முக்கியத்துவம் தர வேண்டும். நம்முடைய வாழ்வைக் கொண்டு கடவுளை மகிமைப்படுத்தி வாழுவதை நாம் நோக்கமாகக் கொண்டால், நமக்கு எது தேவையோ அதை அவர் செய்வார்.

1 அர. 19-ஆம் அதிகாரத்தில் எலியா தீர்க்கதரிசி யேசபேலுக்குப் பயந்து ஓடுகின்றார். படைகளின் கடவுளாகிய ஆண்டவரிடம் பேரார்வம் உடையவனாயிருந்தேன். என்று எலியா பதில் சொல்கின்றார். இக்கால இளைஞர்கள் எச்சூழலிலும் சோர்ந்து விடாமல் கடவுளுக்காகப் பக்தி வைராக்கியத்துடன் செயல்பட வேண்டும். ஏனென்றால் இக்கால இளையோரைச் சுற்றிலும் ஏராளமான தீமைகள் ஓநாய்களைப் போல வருகின்றன. பாவ ஆற்றின் விளிம்பில் இக்கால வாலிபர்கள் உள்ளனர். அதனால் அவர்களுக்கு இறைப் பாதுகாப்பும், இறையருளும் இறை ஆளுகையும் மிக அதிகமாகத் தேவைப்படுகின்றன. தாங்கள் பெற்றுள்ள கல்வியும், பெறுகின்ற உயர்ந்த சம்பளமும் போதுமென்று எண்ணக் கூடாது. எதைப் பெற்றாலும் ஆண்டவரை வாழ்க்கையில் பெறாவிட்டால் பயனில்லை.

**2. இறையச்சம்**

அறிவு, புத்தி, திறமை போன்றவைகளைவிட, கடவுளுக்குப் பயப்படுகிற பயம் என்பது மிகச் சிறந்த செல்வமாகும். அதனை

உடையவர்கள் நிச்சயம் உயர்ந்த நிலைக்கு வருவார்கள். கொர்நேலியுவிடம் இந்தப் பண்பு காணப்பட்டது. கர்த்தருக்குப் பயந்து அவருடைய வழிகளில் நடக்கிறவனைத் திருமறை "பாக்கியவான்" என்று அழைக்கிறது. யோசேப்பு அடிமையாக எகிப்து தேசத்து போத்திபாருக்கு விற்கப்பட்டார். அவரிடம் சிறந்த செல்வமோ, கல்வியோ, அந்தஸ்தோ இருக்கவில்லை. ஆனால் அவரிடம் கடவுளுக்குப் பயந்து வாழவேண்டும் என்ற ஆசை மட்டும் இருந்தது. தான் யாருடைய கண்களுக்கும் எதை மறைத்தாலும் ஆண்டவருடைய பார்வைக்கு ஒன்றையும் மறைக்க முடியாது என்பதை அறிந்திருந்தார். அதனால் ஆண்டவருக்குப் பயந்து செயல்படுகின்ற ஒரு உணர்வை உறுதியாகப் பற்றிக் கொண்டார். அடிமையாக எகிப்திற்குச் சென்ற அவர் உயர்த்தப்பட்டார். போத்திபாரின் வீட்டில் கடவுளுக்குப் பயந்து செயல்பட்டதின் விளைவாகவே அவர் எகிப்து தேச ராஜாவிற்கு அடுத்தபடியான இடத்திற்கு வந்தார். யாரும் பார்க்கவில்லையா, விரைவாகத் தவறைச் செய்து மறைத்துவிடுவோம் என்ற மனநிலை பல வாலிபர்களிடம் உள்ளது. ஆனால் கடவுளுக்குப் பயப்படுகின்ற மனிதன், தான் எப்பொழுதும் கடவுளுடைய பார்வையில் இருப்பதாக உணர்வதால் அவன் தவறுகளைத் தவிர்க்கின்றான். கடவுள் அவனை உயர்த்துகின்றார்.

### 3. இயல்பான பகிர்வு

இன்னொருவரின் வேதனையின் குரல் உனக்குக் கேட்காவிட்டால், உன் ஜெபம் கடவுளுக்குக் கேட்காது. கல்லூரியல் படிக்கும் ஒரு வாலிபன், கல்லூரிக்குச் செல்லும் வழியில், பரிதாபமான நிலையில் நின்று பிச்சை கேட்ட ஒரு சிறுவனைக் கண்டு மனதிற்குள் மிகவும் வருத்தம் கொண்டான். தான் மட்டும் சம்பாதிக்கும் நிலையில் இருந்தால் இப்படிப்பட்ட சிறுவர்களுக்கு உதவி செய்யலாமே என்று நினைத்தான். ஆனால் சற்று நேரத்தில் அவனுக்குள் சில கேள்விகள் YkR] . ¿ úYû X ùNhÕ NmTô§j Rô ice cream சாப்பிடுகிறாய்? மொபைல் ரீசார்ஜ் பண்ணுகிறாய்? விதவிதமாக உடுத்துகின்றாய்? சம்பாதிக்காமலேயே இதையெல்லாம் செய்ய முடிந்த நீ ஒரு ஏழைக்கு உதவிடச் சம்பாதிக்கும் வரை காத்திருக்க வேண்டுமா? வாலிபன் தன் தவறை உணர்ந்தான். அப்போதிருந்தே உதவிகளைச் செய்ய ஆரம்பித்தான். எத்தனையோ தேவைகளுக்குத் தாராளமாக செலவு செய்கின்ற பலர், இன்னொருவருக்கு உதவி செய்ய யோசிக்கின்றனர். பிறக்கு உதவுவது என்பது ஒரு மனிதர் இன்னொருவருக்கு செய்ய வேண்டிய அவசியமான கடமை. பிறருக்கு உதவிடும் மனநிலை நம்மிடம் இல்லையென்றால், கடவுள் நமக்கு உதவி செய்வார் என்று விசுவாசிப்பது அதிக பலன் தராது.





### 4. இறைவேண்டல்

ஜெபம் என்பது நம்முடைய இருதயத்தில் உள்ளதையெல்லாம் ஆண்டவரோடு பகிர்ந்து கொள்கின்ற ஒரு அனுபவமாகும். நம்முடைய முழங்கால்கள் ஓய்வெடுக்கும் போதெல்லாம் பிசாசானவன் நம்மை வாழ்க்கையில் over come செய்வான் என்பதை வாலிபர்கள் புரிந்து வைத்திருக்க வேண்டும். சிலர் தாகம் தீவிரமடைந்த பின்புதான் தண்ணீரைத் தேடுவார்கள். ஆனால் தாகம் வரும் முன்னரே, நல்ல உடல் நலத்திற்குத் தண்ணீர் அவசியம் என்று உணர்ந்து குடித்தால், தாகமும், சோர்வும், களைப்பும் ஏற்படாது. பிரச்சனைகள் வந்த பிறகு ஜெபிக்க ஓடுவது அல்ல. சாதாரணமான சூழ்நிலைகளிலும் கூட ஆறுதல், நம்பிக்கை ஆகியவைகள் நமக்கு அவசியம் என்றுணர்ந்து ஜெபத்திலும், திருமறை வாசிப்பதிலும் ஈடுபட வேண்டும். நோய் வந்தபின் மருத்துவம் பார்ப்பதை விட வருமுன் காப்பதே நலமானது.

தி.ப. 10 : 4-இல் கொர்நேலியு ஆண்டவரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட நற்சாட்சியை வாசிக்கின்றோம். அதைப் போன்று தற்கால இளைஞர்களும் கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழ வேண்டுமென்றால், அவரால் நற்சாட்சி பெற வேண்டுமானால், இறையச்சம், இயல்பான பகிர்வு, இறைவேண்டல் ஆகியவைகளைப் பின்பற்றினால் இளைஞர்கள் நிச்சயமாகவே குடும்பத்திற்கும், திருச்சபைக்கும், சமுதாயத்திற்கும் ஆசீர்வாதமான பாத்திரங்களாக இருப்பார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

**அருள்திரு. R. ரஞ்சித் சுதிர்**

| 10-02-2013 | உயிர்ப்புக்கு முன்வரும் ஏழாம் ஞாயிறு |
|---|---|

மருத்துவ அருட்பணி ஞாயிறு

2 அர. 5 : 1-14 1 திமொ. 1 : 12-17
திபா. 6 மாற். 7 : 31-37

# இறைமக்களின் குணப்படுத்தும் திருப்பணி

# Healing Ministry of the People of God

"பிறகு வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சுவிட்டு, அவரை நோக்கி "எப்பத்தா" அதாவது "திறக்கப்படு" என்றார். (மாற். 7 : 34)

**இறைவேண்டல்**

*அனைத்து ஆற்றலும் நிறைந்த கடவுளே, குணமாக்கும் திருப்பணியில் எங்களை திடப்படுத்தி நடத்துகிற உமது அன்புக்காக உமக்கு நன்றி சொல்கிறோம். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே முழுமையான நலம் தரும் மருத்துவர் என அறிந்து மாட்சிப்படுத்துகின்றோம். எங்கள் பல்வேறு திருப்பணிகள் வாயிலாக உடல், மனம், ஆன்மாவிலே நலம் பெற இரக்கம் தரவும், மக்கள் முழு நலம் பெற்ற சமூகமாய் உம் அருளுக்கு சான்றாய் வாழவும் அருள்தர வேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியாரோடும் என்றென்றும் ஆட்சி செய்கிற முழு நலம் தரும் இயேசு கிறிஸ்து வழியாய் வேண்டுகிறோம் பிதாவே, ஆமென்.*

மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல; மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார் (மாற். 10 : 45). அவர் ஆற்றிய பணிகளில் ஒன்று குணமாக்கும் திருப்பணி. ஆத்துமாவிலும், சரீரத்திலும் மக்கள் நலமடைய பணிவிடை செய்தார். நோய்கள் பல வழிகளில் வருகின்றன. அதற்கு ஏற்ப ஆண்டவர் வியாதிக்கு மருந்தாகவும் வியாதியஸ்தருக்கு மருத்துவராகவும் செயல்பட்டார். மத். 4 : 24, 25; 9 : 35 ஆகிய பகுதிகளில் இறைமைந்தர் இயேசு மக்கள் மேல் பரிவு கொண்டு அவர்களைப் பாதிப்புக்குட்படுத்தியிருந்த சகல நோய்களினின்றும் குணமாக்கினார். மத். 15 : 30-இல் சகல ஊனர்களையும் சுகப்படுத்தினார் எனப் பார்க்கலாம். ஓய்வு நாள் எனப் பாராமலும் சுகம் அருளினார். மத். 10 : 8-இல் இப்பணியைச் செய்ய தன் சீடர்களுக்குக் கட்டளையிட்டார். இதை ஏற்ற ஆரம்ப கால அருள் தொண்டர்கள் (மிஷனெரிகள்) சுகமாக்கும் திருப்பணியைச் செய்தனர். இன்று இறைமக்களாகிய நாம் இப்பணியைச் செய்ய அழைக்கப்படுகிறோம்.





**1. அறிந்தாள் - அறிவித்தாள்** (2 அர. 5 : 3)

அவள் தன் தலைவியை நோக்கி, என் தலைவர் சமாரியாவில் இருக்கும் இறைவாக்கினர் முன்னிலையில் சென்றாரெனில் அவர் இவரது தொழுநோயைக் குணமாக்குவார் என்றாள். இவள் கடத்திவரப்பட்ட இரஸ்ரயேலைச் சார்ந்த ஒரு சிறுமி, சிரியா மன்னனின் படைத்தலைவரான நாமானுடைய மனைவிக்கு பணிவிடை செய்து வந்தவள். நாமான் உடலில் இருக்கும் நோய் தொழுநோய் என அறிந்தாள். இவருடைய வியாதியை நீக்க வல்லவர் சமாரியாவில் இருக்கும் இறைவாக்கினர் எலிசா என அறிந்தாள். இவற்றை நாமானின் மனைவியிடம் அறிவித்தாள். பணிவிடை செய்யும் அடிமைப் பெண்ணாக இருந்தாலும் அந்த வீட்டாரை அதிகமாக நேசித்தாள். ஆகவே தன் தலைவராகிய நாமான் விடுதலை பெற வேண்டுமென்று விருப்பம் கொண்டாள். இன்று பலவிதமான வியாதிகள் பரவி இருக்கும் நிலையில் இதற்குரிய மாற்று வழிகள் அல்லது குணமாக்கும் முறைகள் குறித்து நாம் அறிந்தால் அதை அறிவிக்க வேண்டும். மக்களிடம் அன்றாட வாழ்வின் சில தீயப் பழக்கவழக்கங்கள் நோய்களுக்குக் காரணம் என்பதை எடுத்துரைக்கலாம். இவற்றிற்கு எல்லாம் விடுதலை தருபவர் இயேசு கிறிஸ்துவே. அவருடைய தழும்புகள் நம்மைக் குணப்படுத்தும் ஆற்றலுடையது என எடுத்துரைக்க வேண்டும். உரோ. 10 : 14-இல் தாங்கள் கேள்வியுறாத ஒருவர் மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள்? அறிவிக்கப்படாத ஒன்று பற்றி அவர்கள் எவ்வாறு கேள்வியுறுவார்கள்? எனப் பார்க்கிறோம். அறிவதும் அறிவிப்பதும் குணப்படுத்தும் வழிக்கு மிகப் பயனுள்ளதாகும். அப்பணியில் ஒப்படைப்புடன் செயல்படுவதே சிறப்பானதாகும்.

**2. அறிந்தார் - ஆற்றல்படுத்தினார்** (மாற். 7 : 37)

இவர் எத்துணை நன்றாக யாவற்றையும் செய்து வருகிறார். காதுகேளாதோர் கேட்கவும், பேச்சற்றோர் பேசவும் செய்கிறாரே என்று பேசிக் கொண்டார்கள். மாற். 7 : 31-37-இல் காதுகேளாதவர் நலம் பெறும் நிகழ்வு சொல்லப்படுகிறது. காது கேளாதவரும் திக்கிப் பேசுபவருமான ஒருவரை சிலர் இயேசுவிடம் கொண்டு வந்தனர். இயேசு அவரைத் தனியே அழைத்துச் சென்று தம் விரல்களை அவர் காதுகளில் இட்டு, உமிழ் நீரால் அவர் நாவைத் தொட்டார். வானத்தை அண்ணார்ந்து பார்த்து பெருமூச்சுவிட்டார், "எப்பத்தா" (திறக்கப்படு) என்றார். உடனே காதுகள் திறக்கப்பட்டன. கட்டவிழ்ந்து அவர் தெளிவாகப் பேசினார். எல்லா நோய்களும் பாவத்தால் வருவது இல்லை, சில நோய்கள் தீயவனாலும், சில நோய்கள் இறை மாட்சிமைக்காகவும் சில நோய்கள் இயல்பாகவும் வருவது உண்டு. அதை நன்கு அறிந்து இயேசு இரட்சகர் அதற்கு ஏற்ப ஆற்றல் அருளினார். இயேசுவால் மத். 15 : 30, 31-இல் பார்வையற்றோர், மாற்றுத்திறனுடையோர், பேச்சற்றோர் நலமடைவதைக் கண்டு மக்கள் வியந்தனர். மத். 8 : 3-இல் இயேசு தமது கையை நீட்டி, "நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக" என்று சொன்னார். உடனே அவரது தொழுநோய் நீங்கியது. ஆண்டவரால் தீர்க்க முடியாத வியாதிகளே இல்லை. இன்று கற்று அறிந்த மருத்துவர்கள் இப்பணியை ஆற்றி வருகிறார்கள். 21-11-1861-இல் Dr. ஜாண்லோவ் நெய்யூரில்

மருத்துவப் போதகராக வந்து பணியாற்றினார். இவர் காலத்தில் ஆயிரக்கணக்கானோர் மருத்துவத்தால் பயனடைந்துள்ளனர். மேலும் மருத்துவ வகுப்பும் நடைபெற்று வந்துள்ளது. நோயை அறிந்தவர் நோய்க்கு எற்ப மருந்துகளையும் அறிந்து ஆற்றல்படுத்தியுள்ளனர். இது ஆண்டவரின் அன்புப் பணி. மருத்துவ முறைகளைக் கடைப்பிடிப்பதும் குணப்படுத்தும் திருப்பணிக்கு உகந்ததாக உள்ளது.

**3. அறிந்தனர் - ஆற்றலாயினர்** (1 திமொ. 1 : 12)

"எனக்கு வலுவூட்டும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நன்றி செலுத்துகிறேன்" என்றார் பவுல் அடியார். ஏனெனில் அவரிடம் பெலவீனம் இருந்தது. 2 கொரி. 12 : 8, 9-இல் அதை என்னிடமிருந்து நீக்கி விடுமாறு மூன்று முறை ஆண்டவரிடம் வருந்தி வேண்டினேன். ஆனால் அவர் என்னிடம் "என் அருள் உனக்குப் போதும்; வலுமின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும் என்றார். ஆதலால் நான் என் வலுவின்மையைப் பற்றித் தான் மனமுவந்து பெருமை பாராட்டுவேன் என்றார். நம்மை வலுப்படுத்துகிறவர் கிறிஸ்துவே. 2 கொரி. 5 : 7-இல் நாம் காண்பவற்றின் அடிப்படையில் அல்ல, நம்பிக்கையின் அடிப்படையிலே வாழ்கிறோம். அருள்நாதர் இயேசு நம்மை ஆற்றல்படுத்துவார் என விசுவாசிக்க வேண்டும். மத். 15 : 28-இல் இயேசு மறுமொழியாக அம்மா உமது நம்பிக்கை பெரிது, நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும் என்று அவரிடம் கூறினார். அந்நேரம் அவர் மகளின் பிணி நீங்கியது. இன்று நாம் விசுவாசத்தோடு ஜெபிக்கும்போது பிணிகள் நீங்கிப் போகும். யாக். 5 : 14-16இல் நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டும் போது நோயுற்றவர் குணமாவார். 1838-இல் Rev. மீட் போதகரால் அழைத்து வரப்பட்ட Dr. ஆர்ச் பால்ட் ராம்சே நெய்யூரில் தனது மருத்துவ பணியைத் துவங்கினார். சிகிட்சை துவங்கும் முன் தினமும் பாடல் பாடி, திருமறை படித்து, ஜெபம் செய்து பணியைத் தொடங்குவார். இயேசுவே பரம வைத்தியர் என அறிந்து விசுவாசிக்கும் நாம் நமக்காக ஜெபித்து நலம் பெறலாம். பிறரும் நலம் பெற இறைவேண்டலால் தாங்கலாம். திப. 5 : 15, 16-இல் பேதுருவின் நிழல்பட குணமாயினர். தி.பா. 28 : 8, 9-இல் பவுல் அவன் மேல் கை வைத்து குணமாக்கினார். ஆண்டவரின் தழும்புகள் நம்மை குணப்படுத்துகிறது. இதை நாம் விசுவாசித்து நலம் பெறலாம்.

திப. 10 : 38-இல் இயேசு அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்தார் என்று கூறப்பட்டுள்ளது. இந்தக் குணமாக்கும் திருப்பணியை இன்றைய இறைமக்கள் நிறைவேற்ற அழைக்கப்படுகிறோம். நோயினால் வருந்துவோர் அனேகர், நோயினால் கைவிடப்பட்டோர் அனேகர், நோயினால் வறுமையில் வாடுவோர் அனேகர். எனவே இவர்கள் மீது மனதுருகி, ஆற்றல் படுத்துவோம், அறிந்ததை அனுதினமும் அறிவித்து ஆற்றல் பெறுவோம். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை உணர்ந்து, நோயற்ற புதிய சமூகம் உருவாக ஆண்டவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி பணி தொடர்வோம்.

**அருள்திரு. N. ஸ்மைல்**



## 10-02-2013

| | |
|---|---|
| விப. 15 : 22-27 | எபே. 4 : 17-24 |
| திபா. 77 | யோவா. 2 : 1-11 |

# மீட்பு : மாற்றுருவாக்கம்
# Salvation : Transformation

"கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள். அவ்வியல்பு உண்மையான நீதியிலும் தூய்மையிலும் வெளிப்படும்" (எபே. 4 : 24).

**இறைவேண்டல்**

*தம் திருமகன் இயேசு கிறிஸ்து வழியாக மீட்பை அருளிச்செய்த இரக்கம் நிறைந்த கடவுளே, உம்மைத் துதிக்கிறோம். நாங்கள் எங்கள் நிலையாத் தன்மையால் பெலவீனர்களாயினும் உமது உருமாற்றம் தரும் ஆற்றலைப்பெற்று உமது மீட்பின் மகிழ்வையும், நிலைவாழ்வையும் அனுபவித்து மகிழ அருள் செய்ய வேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியாரோடும் என்றென்றும் வாழ்ந்து அரசாட்சி செய்கிற ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

கடவுளின் மீட்புச் செயல்தான் கிறிஸ்தவத்தின் மையம் ஆகும். திருமறையை ஒரு மீட்பின் நூல் எனலாம். ஆகவேதான் கிறிஸ்தவப் பணிகள் அனைத்தையும் மீட்புப் பணிகள் என்று கூறுகிறோம். பிலிப்பிப் பட்டணத்தில் குறி சொல்லும் பெண் பவுலையும் சீலாவையும் கண்டு இவர்கள் உன்னதக் கடவுளின் பணியாளர்கள், மீட்பின் வழியை உங்களுக்குத் தெரிவிக்கிறவர்கள் என்று உரக்கக் கூறினாள் (திப. 16 : 17). மீட்பைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும்? என்பதைத் திருமறையின் வழியாகச் சிந்திப்போம்.

**1. இறைவனிடம் திரும்புதல்** (எபே. 4 : 24)

முழுக்கு முனிவர் யோவானின் அருளுரையில் "மனம் மாறுங்கள்" என்பது கருப்பொருளாய் இருந்தது (மத். 3 : 2). இயேசு கிறிஸ்துவும் மனம் மாறுங்கள் என்ற அறைகூவலைக் கொடுத்தார் (மாற். 1 : 15). பேதுரு பெந்தக்கொஸ்தே நாளில் ஆற்றிய அருளுரையின் நிறைவில் மனம் திரும்புதலுக்கான அழைப்பு விடுத்தார் (தி.ப. 2:38). முழுக்கு முனிவர் யோவானின் அருளுரையைக் கேட்ட ஒரு கூட்டத்தினர் மனமாற்றத்தின் அடையாளமாக நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

என்று கேட்டனர் (லூக். 3 : 10). அதற்கு அவர் மறுமொழியாக, இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும்; உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும் என்றார் (3 : 11). வரி தண்டுவோரும், போதகரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டனர். அதற்கு அவர் மறுமொழியாக, உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள் என்றார் (3 : 13). படைவீரரும், நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்க, அவர் நீங்கள் எவரையும் அச்சுறுத்தி பணம் பறிக்காதீர்கள்; யார் மீதும் பொய்க் குற்றம் சுமத்தாதீர்கள். உங்கள் ஊதியமே போதும் என்றிருங்கள் என்று கூறினார் (3 : 14). இன்று பத்திரிக்கைகளில் வருகின்ற செய்திகளைப் படிக்கிறபோது கையூட்டு வாங்குகிறவர்கள் சிறைச்சாலைக்குச் செல்லுவதும், அரசு மருத்துவமனைகளில் ஏழை நோயாளிகள் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும்போது கையூட்டு தந்தால் தான் சிகிச்சை செய்வேன் என்று அடம் பிடிக்கின்ற மருத்துவர்களும் இருந்த கொண்டு தான் இருக்கிறார்கள். ஆகவே மனம் திரும்புதல் மீட்பின் முதல்படியாகும்.

## 2. இறைவனிடம் நம்பிக்கை வைத்தல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை கொள்ளும். அப்பொழுது நீரும் உம் வீட்டாரும் மீட்படைவீர்கள் என்று சிறைக்கூடக் காவலருக்குப் பவுலும் சீலாவும் கூறினர் (தி.ப. 16 : 31). மனம் மாறி நற்செய்தியாகிய இறைவனிடம் நம்பிக்கை கொள்ளுங்கள் (மாற். 1 : 15). இறைவனிடம் நம்பிக்கை கொள்வது என்பது என்ன, என்பதை எபிரேய ஆக்கியோன் தெளிவாக எடுத்துக் கூறுகின்றார். நம்பிக்கையினாலே இவர்கள் அரசுகளை வென்றார்கள்; நேர்மையாகச் செயல்பட்டார்கள்; கடவுள் வாக்களித்தவற்றைப் பெற்றார்கள்; தீயின் கொடுமையை தணித்தார்கள்; வாள்முனைக்குத் தப்பினார்கள்; வலுவற்றவராயிருந்தும் வலிமை பெற்றார்கள்; போரில் வீரம் காட்டியவர்கள் (எபி. 11 ; 33-34). சிலர் விடுதலை பெற மறுத்து வதையுண்டு மடிந்தனர். வேறு சிலர் ஏளனங்களுக்கும் கசையடிகளுக்கும் ஆளாயினர். விலங்கிடப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்; சிலர் கல்லெறிப்பட்டனர்; இரண்டாக அறுக்கப்பட்டனர்; வாளுக்கு இரையாகி மடிந்தனர்; செம்மறியின் தோலையும்; வெள்ளாட்டுத் தோலையும் போர்த்துக் கொண்டு அலைந்து திரிந்தனர்; வறுமையுற்று வாடினர்; துன்புறுத்தப்பட்டனர்; கொடுமைக்குள்ளாயினர்; இவர்கள் அனைவரும் தம் நம்பிக்கையினாலே நற்சான்று பெற்றார்கள் (எபி. 11 : 35-38)





## 3. இறைவனிடம் ஒப்படைத்தல்

மனமாற்றமும் நம்பிக்கையும் நம்மைச் சிறந்த ஒப்படைப்புக்கு வழிநடத்துகின்றன. நீங்களோ உங்கள் உறுப்புகளைத் தீவினையின் கருவிகளாகப் பாவத்திற்கு ஒப்புவிக்காதீர். மாறாக, இறந்தும் வாழ்வோராய் உங்களை இறைவனிடம் ஒப்படையுங்கள். இறைவனுக்கு ஏற்புடையதைச் செய்வதற்குரிய கருவிகளாய் உங்கள் உறுப்புகளை அவரிடமே ஒப்படையுங்கள் (உரோ. 6 : 13).

ஒப்படைப்பு என்பது ஒருமுறை மட்டும் நடப்பதன்று. நாம் வழிபாட்டிற்குக் கூடும் போதெல்லாம் நம்மை உயிருள்ள பலிகளாகத் திரும்பத் திரும்ப ஒப்படைக்கும் அனுபவமே (உரோ. 12 : 1). மேலும் ஒப்படைத்தல் என்பது நம்மை முழுமையாகக் கையளிப்பது ஆகும் (2 தீமோ. 1 : 12). பாதுகாப்புக்காக மட்டுமன்று, பணி செய்வதற்கும் நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். இதில்தான் கிறிஸ்தவ ஒப்படைப்பின் சிறப்பு அடங்கியுள்ளது.

நிறைவாக, மீட்பு மற்றும் மாற்றுருவாக்கத்தை எல்லா நிலையிலும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். “நான் இரட்சிக்கப்பட்டுவிட்டேன்” என்று சொல்வதில் ஒரு மேட்டிமை இருக்கிறது. இங்கு “நான்” என்பதே முந்தி நிற்கிறது. இதற்குப் பதிலாக “இறைவன் என்னை மீட்டிருக்கின்றார், இயேசு கிறிஸ்துவை நான் ஏற்றுக்கொண்டுள்ளேன்” “மீட்பில் வளர்ந்து வருகின்றேன்” என்று சொல்லலாம். ஏனெனில் நமது மீட்பு எதிர்காலத்திலேயே நிறைவு பெறுகிறது. என் பெயரின் பொருட்டு உங்களை எல்லாரும் வெறுப்பர். இறுதி வரை மன உறுதியுடன் இருப்பவரே மீட்கப்படுவர் (மத். 10 : 32). மீட்கப்படுகின்றவர்களைத் திருச்சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார் (தி.ப. 2 : 47). இயேசு கிறிஸ்துவின் மீட்புப் பணி நாசரேத்தூர் அறிக்கையில் முழுமையடைகின்றது. ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடையவும், பார்வையற்றோர் பார்வை பெறவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார் (லூக். 4 : 18, 19). இயேசுவின் இந்த மீட்புப் பணிப் பட்டியலில் உடல் சார்ந்த, உள்ளம் சார்ந்த, அறிவு சார்ந்த, சமூகம் சார்ந்த, அரசியல் சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த அனைத்து விடுதலைகளும் அடங்கியிருக்கின்றன. பிரபல இறையியலாளர்களில் ஒருவரான எம்.எம். தாமஸ் இவ்வாறு கூறுகிறார், “மனிதத்துவமே மீட்பு”. ஆகவே மனிதத்துவத்தோடுஅடையாளப்படுத்தி கிறிஸ்து இயேசுவில் மீட்புப் பணியைத் தொடர்ந்திடுவோமாக.

**அருள்திரு. T. ஸ்டாலின் வினு ஜோண்ஸ்**

**17-02-2013** | உயிர்ப்புக்கு முன்வரும் ஆறாம் ஞாயிறு
தவக்கால முதலாம் ஞாயிறு

1 அர. 21 : 1-16 | 1 யோவா. 2 : 15-17

திபா. 49 : 1-7, 16-20 | மாற். 1 : 40-45

# உலகமும் ஆன்மிகமும்

## Materialism and Sprituality

"உலகின் மீதும் அதிலுள்ளவை மீதும் அன்பு செலுத்தாதீர்கள் . . ."
(1 யோவா. 2 : 15)

**இறைவேண்டல்**

*அன்பு நிறைந்த கடவுளே, நீர் படைத்த அனைத்தின் மீதும் கொள்ளும் அன்பினை உம் திருமைந்தன் இயேசு கிறிஸ்து வழியாக காண்பித்துள்ளீர்; உமக்கு நன்றி படைக்கின்றோம். உலகு சார்ந்த யாவற்றையும் உருமாற்றுகின்றவரே. நாங்கள் உலகு சாா்ந்தவற்றுக்கு இணங்காமல் ஆன்மீக அனுபவங்களுக்கு நேராக உருமாற்றம் பெற அருள்செய்ய வேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியாரோடும் ஒரே கடவுளாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.*

"உலகம்" என்னும் சொல்லோடு பூமி, பூலோகம், பிரபஞ்சம் என்னும் சொற்களையும் இணைத்துப் பார்க்க வேண்டும். எபிரேய சொற்களான எரெய்ட்ஸ் (ERETS) தேபேல் (TEBEL) அடாமா (ADAMAH) என்னும் சொற்கள், உலகு என்னும் சொல்லுடன் தொடர்புடையவைகள். கிரேக்கச் சொற்களான கே (GE) கொஸ்மொஸ் (KOSMOS) ஆய்கூமெனெ (OIKUCMENE) ஐயோன் (AION) ஆகியவைகளும் உலகுடன் தொடர்புடய சொற்களாகும்.

ஆன்மிகம் என்னும் சொல்லை ஆங்கிலத்தில் Spirituality என்கின்றோம். இச்சொல்லின் பொருளை வரையறுப்பது கடினம். ஆன்மிகம் என்னும் சொல்லுடன் ஆன்மா அடங்கியுள்ளது. ஆன்மா உடலுள் கட்டுண்டு கிடந்தாலும், உடலை விட்டுப் பிரித்தறியக்கூடியது என்று கிரேக்க இந்திய மெய்யியல் சிந்தனைகளும் சமயங்களும் கூறுகின்றன. உடலின் உள்ளாற்றல், உள்ளான மனிதம், உள்ளான உயிரி என்று ஆன்மிகத்தைப் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களும் புரிந்துள்ளனர். உலகமும், ஆன்மிகமும் உறவில் நிற்பதும், பிரித்தறியக்கூடியதுமாகும். உலகத்திற்கும், இறைவனுக்கும் உறவிருப்பது போல் (தொ.நூல். 1 : 1), இறைவனுக்கும், ஆன்மாவிற்கும் உறவிருக்கிறது (தொநூ. 2 : 7). உலகில் வாழும் மானுடம் எப்படி





வாழ்ந்தால் இறையுறவில் நிலைத்து வாழலாம் என்பதைக் கண்டு காண்போம்.

**1. உலகை அபகரிக்காத ஆன்மிகம்** (1 அர. 21)

உலகம் கடவுளின் கரத்தின் கிரியை, இது கடவுளுடையது (தி.பா. 24 : 1) (தி.பா. 19 : 1) எனவே உலகம் படைப்பாளருக்கு மேலாக மதிப்பிடலாகாது. படைப்பின் மகுடமாகப் படைக்கப்பட்ட மனிதன் படைப்பைப் பண்படுத்தவும், பாதுகாக்கவும் பணிக்கப்பட்டான். உலகைப் படைத்த இறைவன் நல்லதாகவே படைத்துள்ளார் (தொ.தூ. 1 : 25). இறைவன் படைத்த உலகு, இறைவனின் உருவில் படைக்கப்பட்ட இறைச்சாயலை வெளிப்படுத்துகின்ற மானுடத்திற்குரியது. இதில் பலுகிப் பெருகி, இதை நிரப்பி, இதை ஆண்டு கொண்டு ஆசீர்வாதமாய் வாழ இறைவன் ஆசீர்வதித்தார் (தொ.நூ. 1 : 28). இந்த உலகினை வாழையடி வாழையாய் மானுடம் அனுபவித்து வருகிறது. தலைமுறைத் தலைமுறையாய் இதைப் பண்படுத்துவதும், பாதுகாத்துப் பலனை உண்பதும் வழக்கமாயுள்ளது (1 அர. 21:3).

நாபோத் தன் முன்னோரின் சொத்தாகிய திராட்சைத் தோட்டத்தை உரிமைச் சொத்தாக வைத்திருந்தார், எபிரேயச் சமூகத்தில் மதிப்பையும், உடமைகளையும் சொந்தமாக்குவதற்கு முன்னோரின் சொத்து உதவும். இஸ்ரயேலின் மன்னனான ஆகாப், நாபோத்தின் நிலத்தைத் தனதாக்கி கீரை பயிரிட விரும்பினார். நாபோத் தன்னுடைய நிலத்தை ஆகாப்பிற்கு கொடுக்கவில்லை. எனவே ஆகாப்பின் மனைவி யேசபேலின் திட்டப்படி நாபோத் கல்லெறிந்து கொல்லப்பட்டார். (1 அர. 21 : 13). ஆகாப் நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை எடுத்துக்கொண்டான். (1 அரச. 21:16). மண்ணாசை, உலகாசையின் விளைவு என்றும் அது விருந்தினை இழப்பது என்று இயேசுவும் குறிப்பிட்டுள்ளார் (லூக். 14 : 18). எப்படியாயினும் உலகைத் தனதாக்க வேண்டும் என்னும் செயல்பாடு இறையுறவுச் சிதைத்தலையும், ஆன்மிக நலிவினையும், அழிவினையும் கொண்டு வரும்.

**2. உலகைத் திறனாய்வுக்குள்ளாக்கும் ஆன்மிகம்** (1 யோவா. 2 : 15-17)

இறைவனின் உலகில், மானுடம் இறை விருப்பினின்று, தடம்புரண்டு போனதால், பொல்லாங்கனுக்குள் உலகம் கிடக்கிறது. இந்த உலகில் கடவுளின் அடியார் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய நிறைவாலும், தூயாவியாரின் நிறைவாலும், இறையரசின் குடிமக்கள் என்னும் மகிழ்வுடனும் வாழ்கின்றனர். ஆனால் தீமையும், போராட்டமும் இன்னும் ஒழியாதபடியால் அவை முற்றும் அகலுகின்ற புதிய உலகை, இறையரசின் நிறைவை எதிர்பார்க்கின்றனர். முழுநிறைவு ஏற்படும் வரை ஒருபுறம் உலகை ஏற்று அதன் அருட்கொடைகளை அனுபவிக்கின்றனர், மறுபுறம் நாங்கள் இந்த உலகத்தார் அல்லர் என்பதை உணருகின்றனர். பண்பாடுகளை திறனாய்வுக்குள்ளாக்கி, சிறப்பானவற்றை ஏற்று மற்றவற்றை விட்டுவிடுகின்றனர். நல்லதை தெரிந்து கொள்ளும் உரிமை இறைவனால் நமக்கு தரப்பட்டுள்ளது (யோசு. 24 : 15). யாவே சமயமும்,

பாகால் சமயமும் ஒன்றையொன்று மோதிக் கொண்டிருந்த சமயத்தில் எலியா மக்கள் கூட்டத்தைப் பார்த்து எத்தனை நாள் இரு மனத்தோராய்த் தத்தளித்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள்? ஆண்டவர் கடவுள் என்றால்அவரைப் பின்பற்றுங்கள்! பாகால் தான் என்றால் அவன் பின்னே செல்லுங்கள் (1 அர. 18 : 21) என்று தெரிந்துகொள்ளும் உரிமையை மக்களிடமே விட்டுவிட்டார். நாம் உலகக் கவர்ச்சிக்கு இடங்கொடாமல் (1 யோவா. 2 : 15-17) (எபி. 2:2) உலகுக்கு நண்பராக விரும்பும் எவரும் கடவுளைப் பகைப்பவர். (யாக். 4 : 4) என்பதை உணர்ந்து தீய உலகின் வேட்கைக்கு ஒத்துப்போகாமல் கடவுளின் சிந்தைக்கேற்ற புதியதோர் உலகு செய்ய நல்லனவற்றைத் தெரியும் ஆன்மிகர்களாவோம்.

**3. உலகில் வாழ்ந்து உன்னதத்தை உரிமையாக்கும் ஆன்மிகம்** (மாற். 1:40-45)

உலகில் மனிதராக வந்த இயேசுகிறிஸ்து, இறைவனையும், இறைவனுக்குகந்த மானுடத்தையும் காட்டியுள்ளார். அவரது வாழ்வில், சாவில், உயிர்ப்பில் திரும்பவும் வருவார் என்ற எதிர்பார்ப்பில் மானுடம் இறைத் தன்மையையும், இறைவனின் இயக்கத்தையும் அறிந்து கொள்ளுகின்றது. மாறும் உலகில் இயேசு கிறிஸ்துவின் மூலம் பெறும் உள்ளாற்றலையும், உறவாற்றலையும் பெற விரும்புகின்றனர். இதற்குப் பற்றுறுதியாளர்களின் கூட்டுறவும், திருவருட்சாதனங்களும், வழிபாடுகளும் உதவி செய்கின்றன. இயேசு மானுட உலகை மீட்பதற்கென்றே வந்தார் (யோவா. 3 : 17) அழியும் உலகில் (ஏசா. 51 : 6), அழியாமை உள்ளவரையும், அவர் இடத்தையும் தேடுவதற்கும் சொந்தமாக்கவும் உதவுவது ஆன்மிகம். இயேசு கிறிஸ்து தொழுநோயாளியின் வாழ்வில் விடியலை ஏற்படுத்தி, நலமுடன் வாழ தூண்டியதன் வழியாக ஆன்மிகத்தின் எதிர்நோக்கினைத் தெளிவுப்படுத்துகிறார் (மாற். 1:40-45).

தன்னைக்குறித்து கவலைப்படாமல் பிறருக்காக வாழ்வது ஆன்மிகம். தன் காரியத்தைப் பாராமல் பிறர்பால் காட்டும் ஆர்வம் ஆன்மிகம். தியாக உணர்வுடன் செயல்படுவது ஆன்மிகம். மக்களுடனும், படைப்புகளுடனும் உறவுடன் வாழுவது ஆன்மிகம்

பல்சமயச் சூழலில் அனைவரும் கடவுளின் படைப்புகள் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். இயேசு உலகில் மக்களுடன் வாழ்ந்தார், தந்தையுடன் உறவில் வாழ்ந்தார். இயேசுகிறிஸ்து உலகில் வாழ்ந்த ஆன்மிகர் உலகு, சார்ந்தவற்றையே சொந்தமாக்க விரும்பாமல் கடவுளைச் சார்ந்து வாழ்ந்துள்ளார் (லூக். 4 : 5-8).

நாம் உலகில் வாழ்கின்றோம், இதில் இறைவிருப்புக்கு ஏற்ப வாழ்வோம். இந்த உலகே நிரந்தரமெனக் கருதாமல் நிலை வாழ்வு தரும் நித்தியராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி ஆன்மிகர்களாவோம். அவரோடு அழியாமல் வாழும் பேறுபெறுவோம்.

**அருள்திரு. V. டேவிட் றாபி ஜேக்கப்**



**24-02-2013** உயிர்ப்புக்கு முன்வரும் ஐந்தாம் ஞாயிறு

1 சாமு. 18 : 1-4; 17-29 பில. 8 : 16

திபா. 55 : 4-22 மத்தேயு 5 : 43-48

## ஒருவரோடொருவர் நம்பிக்கை மற்றும் மரியாதையின் அடிப்படையில் மனித உறவுகள்

## Human Relationships based on Mutual Trust and Respect

உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் (மத். 5 : 44)

*எங்கள் ஆண்டவராகிய கடவுளே, ஒருவரையொருவர் மன்னித்து வாழவும், அன்பு செய்து வாழவும் கற்றுத் தந்தவரே, உமது படைப்புகள் அனைத்தும். எங்கள் சக மனித சமூகமும் உமது சாயலின் படைக்கப்பட்டவை என உணர்கின்றோம். ஆகவே எங்கள் உறவுகளை சீர்ப்படுத்தி யாவரோடும் நல்லுறவுடன் உமது பிள்ளைகளாக வாழ அருள் செய்ய வேண்டும், என உம்மோடும் தூய ஆவியாரோடும் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்யும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய் வேண்டுகிறோம், ஆமென்.*

உறவுநாட்டமுள்ள இறைவன் மானுடத்தை படைப்புகளுடன் உறவோடு வாழப்படைத்துள்ளார். குறிப்பாக இறைவன் மானுட உறவை விரும்புவதால், இறைமகன் மண்ணில் மனிதனாய் வந்தார் (யோவா. 1 : 14). மனிதனாய், மனிதருடன் வாழ்ந்தார். நம்பிக்கை, மரியாதை இவற்றின் அடிப்படையில் உண்டாகும் உறவின்றி போலி உறவுகள் வரலாற்றில் தொடர்ந்து வருகின்றன. திருவிவிலியமும் இப்படிப்பட்ட போலி உறவுகளை அடையாளம் காட்டுகிறது. சவுல் தாவீதை மருமகனாக்க விரும்பினார். மகளைத் தாவீதிற்குக் கொடுத்தும், மகள் மீகாள் தாவீதிற்கு கண்ணியாயிருக்க வேண்டுமென்றும் பெலிஸ்தியரின் கை தாவீதின் மீது விழ வேண்டுமென்றும் எண்ணினார். (1 சாமு. 18 : 2). யாகேல், சிசெராவை அழைத்து, சமுக்காளத்தால் மூடி தண்ணீர் கேட்டவனுக்குப் பாலைக் குடிக்கக் கொடுத்து உறவுகாட்டுவது போல் நடித்து, நெற்றியிலே கூடார ஆணியை உருவ அடித்து கொலை செய்தாள் (நீ.த. 4 : 21). உண்மை உறவுகள் நம்பிக்கை மரியாதையின் அடிப்படையில் அமைதலையும் திருமறை சுட்டிக்காட்டுகின்றது. அவற்றுள் சிலவற்றை ஈண்டு காண்போம்.

## 1. நம்பிக்கையுடனும் மரியாதையுடனும் உறவுகாட்டும் சூனேமியாள்

எலிசா, இறைவாக்கினர் சூனேமுக்குப் போயிருக்கையில் பணக்காரப் பெண் ஒருவர் அவருக்கு உணவு கொடுத்து உபசரித்தார் சூனேமியாள், எலிசாவைக் குறித்து தன் கணவரிடம் பேசுகையில் நம்மிடம் அடிக்கடிவரும் ஆண்டவரின் அடியவர் புனிதர் என்று நான் கருதுகிறேன் என்றார். (2 அர. 4:9) மரியாதைக்குரியவராய் எலிசாவைக் கருதியதால், வீட்டு மேல் தளத்தில் சிறு அறை ஒன்றை அவருக்காகக் கட்டி, அதில் படுக்கை, மேசை, நாற்காலி, விளக்கு முதலானவற்றை தயார்படுத்தி, அவர் வரும் போது தங்கிச் செல்வதற்கு, வசதி செய்து கொடுத்தார். இறைவாக்கினர் எலிசாவை மரியாதைக்குரியவராக மதித்ததினால் கடனால் பாதிக்கப்பட்ட தீர்க்கரின் மனைவி தன்நிலையினை எலிசாவிற்குச் சொன்னார் ( 2 அர. 4:1). சூனேமியாள் குழந்தை இறந்த செய்தியை எலிசாவிற்குத் தெரிவித்தார் 2 அர. 4 : 27). கோடாரி ஆற்றில் விழுந்த போது, ஐயோ, என் ஆண்டவனே அது இரவலாக வாங்கப்பட்டது என்று தன் வேதனையை எலிசாவிடம் வெளிப்படுத்தினான் (2 அர. 6 : 5). எலியாவின் பின்னடியாரான எலிசா, எலியாவின் ஆவியின் வரத்தை இரட்டிப்பாகப்பெற்றவர் (2 அர. 2 : 9). இவர் மக்களுடன் வாழ்ந்து, மக்களின் மரியாதையையும், உறவையும் பெறும் மனிதராக வாழ்ந்துள்ளார். மரியாதையுடன் கூடிய உறவு, மண்ணில் பாடுகளிலும், பாதிப்புகளிலும் நிறைவைத்தரும்.

## 2. நம்பிக்கையுடனும் மரியாதையுடனும் உறவுகாட்டும் எலிசபெத்

ஆலயத்துடனும், திருப்பணிகளுடனும் நெருக்கமான உறவுடையவர் சகரியா, இவரது மனைவி எலிசபெத் (லூக். 1:5). இவர்கள் இருவரும் கடவுளின் கற்பனைகளின்படியும், ஒழுங்கின்படியும் வாழ்ந்த நேர்மையாளர்கள் (லூக். 1 : 6). இவர்களது வீடு யூதேயா மலைநாட்டிலிருதது (லூக். 1 : 39) கடவுளின் திருவுளப்படி, கணவனுடன் கூடி, குடும்பமாய் வாழுமுன்பே, தூயாவியாரால் கருக்கொண்ட மரியாள், குழந்தையைச் சுமந்து கொண்டு எலிசபெத்தின் இல்லத்திற்குச் சென்றார். மரியாளைக் கண்ட எலிசபெத் உரத்த குரலில் பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர், உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே என்று வாழ்த்தினார் (லூக். 1 : 42). மரியாள் ஏறக்குறைய மூன்றுமாதம் எலிசபெத்தின் வீட்டில் தங்கியிருந்தார், இயேசு குழந்தையைச் சுமக்கும் மரியாளைத் தள்ளிவிட திருமண ஒப்பந்தம் செய்திருந்த யோசேப்பு திட்டமிட்டார் (மத். 1 : 19). ஆனால்





எலிசபெத், இயேசு குழந்தை கருவுற்றிருந்தபோது மரியாள் களிப்புடன் வாழுவதற்கு வழி செய்துள்ளார். மற்றவர்கள் வெறுக்கும் சூழலில், அரவணைப்பார் இன்றி, அங்கலாய்க்கும் நிலையில் மரியாதையுடன் ஏறறுக்கொண்டு அன்புகாட்டினது மட்டுமல்லாமல், மானுட மீட்புக்கு மகிழ்ச்சிக்குரிய துளிர் தோன்றும் அதனால் மண்ணகம் விடுதலை பெறும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையும் எலிசபெத்தின் உறவுகாட்டும் நிலை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது.

## 2. நம்பிக்கையுடனும், மரியாதையுடனும் உறவுகாட்ட அழைக்கும் பவுல்

பிலமோன் கொலோசே நகரிலிருந்த முக்கிய கிறிஸ்தவரும் செல்வந்தருமாவார். இவரிடம் ஒனேசிம் என்பவர் அடிமையான பணி செய்து வந்தார். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் அவர் அவருடைய தலைவரான பிலமோனிடமிருந்து தப்பி ஓடிவிட்டார். தப்பியோடிய அடிமையைக் கொலை செய்யலாமென உரோமைச் சட்டமிருந்தது. இந்த நிலையில் ஒனேசிம் தூய பவுலடிகளாரைச் சந்தித்துக் கிறிஸ்தவரானார். அப்போது தூயபவுலார், பிலமோன், ஒனேசிமுவை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும், அடிமையாக அல்ல, அடிமையை விட மேலானவனாக ஏற்றுக்கொள்ளும் (பில. 16) என்றும் வேண்டிக்கொண்டார். அடிமை, தலைவனை மீறிய அடிமை, மரியாதைக்குரிய உடன்பிறப்பைப் போல் நடத்த வேண்டுமென்ற ஆலோசனையும், எதிர்பார்ப்பும், மரியாதையுள்ள உறவுச் சமூகத்தை உருவாக்கவேண்டும் என்னும் பவுலடிகளின் அக ஆசையை வெளிப்படுத்துகின்றது.

இறைமாட்சிமை இழந்த மானுடச் சமூகத்தை இறைமகன் மரியாதைக்குரிய சமூகமாய் கண்டு அன்புகாட்டினார். தகுதியுடைவருக்கு அன்பு காட்டுவதல்ல, தகுதியற்றவர்களிடமும் அன்பு காட்டவேண்டுமென்று போதித்தார் (மத். 5 : 44). பல்சமயச் சூழலில் வாழும் நாம் அனைத்து மக்களும் மரியாதைக்குரியவர்கள், நம்பிக்கைக்குரியவர்கள் என்பதை நினைத்து, உறவுகாட்டுவோம். மரியாதையுடன் கூடிய உறவு, மண்ணில் இறையாட்சியைக் காட்டும்.

**அருள்திரு. S. பாலஸ் செல்வமணி**

| 03-03-2013 | உயிர்ப்புக்கு முன்வரும் 4-ஆம் ஞாயிறு |
|---|---|

எசா. 45 : 1-7 தவக்கால மூன்றாம் ஞாயிறு தி.ப. 13 : 44-52

திபா 47 மத். 15 : 21-28

# நம்பிக்கையும், கலாச்சாரமும்: நன்மைக்காக மாற்றம் பெறுதல்
# The Faith and Culture : Change for Good

. . . ஓய்வு நாளில் ஆண்டவரின் வார்த்தையைக் கேட்க ஏறக்குறைய நகரத்தார் அனைவரும் கூடி வந்தனர். திப. 13 : 44

**இறைவேண்டல்**

*ஆற்றல் நிறைந்த கடவுளே, மானுடத்தின் அனைத்துப் பண்பாட்டு தகவுகளிலும் உயர்ந்து நிற்கிறவரே! வாழ்வின் நல்ல தகவுகளுக்காக நன்றி சொல்கிறோம். வாழ்வினை பாதிப்புக்குள்ளாக்கும் அனைத்து எதிர் மறைத் தகவுகளையும் களைந்து உம் விருப்புக்கிசைந்து எங்கள் பண்புகளை உருமாற்றம் செய்து அவைகளால் உமது அன்பை பிறர் அறியச் செய்யும் ஊடகங்களாக எங்களை பயன்படுத்தியருள வேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியாரோடும் என்றென்றும் வாழ்ந்து ஆட்சிபுரியும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

வரலாற்றில் ஆரியர்கள் தான் இந்தியக் கலாச்சாரத்தை வடிவமைத்தவர்களாகவும் அவர்கள் தான் இந்தியாவின் குடிமக்கள் என்றும் மற்ற மக்கள் நாட்டிற்கு எதிரானவர்கள் என வர்ணிக்கப்படுவது மாற்றம் பெற வேண்டும். உண்மையான கலாச்சார மாற்றத்தின் பலன் இறை வார்த்தை மகிமைப்படுவது ஆகும். இறை வார்த்தை செயல்படத் துவங்கும்போது தீமையான கலாச்சார சூழ்நிலையில் கட்டுண்டவர்களும் தவறான நம்பிக்கையுடையவர்களும் தீமையிலிருந்து வெளிவருவார்கள். வேற்றுமையில் ஒற்றுமையைக் கடைப்பிடிப்பதே இந்திய மக்களாட்சி நாட்டின் கலாச்சாரம். இதுதான் பல நூறு ஆண்டுகளாக நம் நாட்டு மக்கள் பின்பற்றி வரும் கலாச்சாரம். கலாச்சாரத்தின் கருப்பை சமயமே என்பார்கள். இந்தக் கலாச்சாரமும், சமய நம்பிக்கையும் நன்மைக்காக மாற்றம் பெறவேண்டும். நமது நம்பிக்கையும், கலாச்சாரமும் ஆண்டவரின் வார்த்தையின்படி இறைப்பணி செய்ய நம்மைத் தூண்ட வேண்டும்.





**1. சமூக நன்மைக்காக தனது சமய நம்பிக்கையையும் LXôf NôWj û RÙm ®hÓ YkR û NW** ( எசா. 45 : 1)

ஒன்றை அடைய வேண்டுமானால் இன்னொன்றை இழக்க வேண்டும் என்பார்கள். அதுபோல சைரஸ் என்கின்ற பெர்சிய அரசன் உண்மையான கடவுளில் வேரூன்றிக் கட்டப்படுவதற்கும் நல்லதொரு சமூகத்தை உருவாக்குவதற்கும் தனது சமய நம்பிக்கையையும் கலாச்சாரத்தையும் விட்டு வருகிறார். எசா. 45-ஆம் அதிகாரத்தில் பாபிலோனில் சிறைப்பட்டுப்போன யூத மக்களின் மீட்புக்காய் கடவுள் சைரஸ் அரசனைத் தெரிந்துகொண்ட நிகழ்வை ஏசாயா இங்கு சித்தரிக்கிறார். சைரஸ் என்றால் சூரியன்(Sun) என்று பொருள். இவர் கி.மு. 559-538 வரை ஆட்சி செய்தார். பெர்சியா அரசை ஏற்படுத்தினார். இவர் மேதிய சக்கரவர்த்தியையும் சின்ன ஆசியாவிலுள்ள அரசர்களையும் வெற்றி கொண்டு தன் அரசைப் பலப்படுத்தினார். பாபிலோன் அசீரியா தேசங்களும் இவருக்குக் கீழ்ப்படிந்திருந்தன. தானியேல் சிலகாலம் இவருடைய அரமனையிலிருந்தார் (தானி. 1 : 21, 6 : 28, 10 : 1)

சைரசுக்கு யூத சமய நம்பிக்கை இல்லை. பிற சமய நம்பிக்கையில் ஊறிப்போனவர். வேறுபட்ட கலாச்சாரமும், வேறுபட்ட நம்பிக்கையும் இருந்தபோதிலும் இஸ்ரயேலின் கடவுளாகிய “யாவே” குறித்து அறிந்தபோது அவரது வாழ்வில் ஏற்பட்ட நம்பிக்கையின் மாற்றம் யூத வரலாற்றில் விடுதலையைக் கொண்டு வந்தது. சைரஸ் ஒரு யூதரல்லாத போதிலும் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டவர். ஏசா. 44 : 28-இல் சைரசைப் பற்றி கடவுளின் வாக்கு சொல்லப்பட்டுள்ளது. சைரசின் ஆட்சியில்தான் எஸ்றாவின் தலைமைத்துவத்தின்கீழ் பாபிலோனில் சிறைப்பட்ட யூதர்களுக்கு விடுதலையுடன் இடித்து நொறுக்கப்பட்ட எருசலேம் ஆலயம் கட்டப்படுதல் போன்ற நன்மைகள் நடந்தேறின. இதற்கு சைரஸ் கட்டளை கொடுத்து முழு ஒத்துழைப்பையும், உதவிகளையும் செய்தார். (எஸ். 1 : 1, 2, 7, 3 : 7, 4 : 3, 5 : 13-14, 2 குறி. 36 : 22-23) அன்பர்களே, வேற்று நம்பிக்கையிலும் கலாச்சாரத்திலும் சைரஸ் வளர்ந்தாலும் கடவுள் அவரைத் திருப்பொழிவு செய்து அவரது திட்டத்தை நிறைவேற்றினார்.

**2. தன் மகள் நலத்திற்காகச் சமய நம்பிக்கையையும் கலாச்சாரத்ததையும் விட்டுவந்த கானானியப்பெண்** (மத். 15 : 28)

நம்பிக்கையைப் பற்றி பல வழிகளில் விளக்கம் பெறலாம். ஆனால் இன்றைய நற்செய்தி பகுதி தரும் நம்பிக்கை ஆச்சரியமாக உள்ளது. இவர் ஒரு புற இனத்தவர். ஆனால் நம்பிக்கையோடு

இயேசுவிடம் நெருங்குகிறார். தன் மகளைக் குணமாக்க வேண்டுகிறாம். இயேசு அவரின் நம்பிக்கையைப் பார்த்து, "அம்மா! உமது நம்பிக்கை பெரிது, நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்" என்று அவரிடம் கூறினார் (மத். 15 : 28) அந்நேரமே அவர் மகளின் பிணி நீங்கியது.

ஆண்டவர் இயேசு மொழி, இனம், செல்வம், செல்வாக்கு, அறிவு, கலாச்சாரம் என்று எந்தவித வேறுபாடுகளும் பார்க்காமல் அனைவரையும் சமமாகப் பார்த்து குணமளித்து தன் இறைத்தன்மையை வெளிப்படுத்தினார். இறைநம்பிக்கை என்பது கடவுள் அனுப்பிய இறைமகன் இயேசுவின் மேல் கொள்ளும் நம்பிக்கையே ஆகும். இயேசுவை நம்பும்போது நம்மால் செய்யமுடியாத செயலை அவர் செய்வார். உலகில் உள்ள எல்லா வாய்ப்புகளும் வசதிகளும் சூழ்நிலைகளும் நமக்கு எதிராக நின்றாலும் வாழ்வின் நெருக்கடியான சூழ்நிலையிலும் கடவுள் மேல் உள்ள நமது நம்பிக்கையை தவறவிடக்கூடாது. C. சாமுவேல் ஐயர் தனது பாடலில்

"லோகமனைத்தும் என்னை உதைத்தாலும் - பொல்லா
லோமிகள் - துஷ்டர் மொய்த்தாலும், பசி
தாக நோய் வதைத்தாலும் மெய்யாய் - நான்
விடமாட்டேன் ஏசுவை".

என்கிறார். ஆம், இத்தகைய நம்பிக்கை எப்போதும் செயல்படக்கூடியது. எனவே நம்பிக்கையும், கலாச்சாரமும் மனிதனை ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் கொண்டு செல்ல வேண்டும்.

### 3. கிறிஸ்துஇயேசுவுக்காக யூத சமய நம்பிக்கையையும் கலாச்சாரத்தையும் விட்டு வந்த பவுலார் (தி.ப. 13 : 47)

இறைமகன் இயேசுவின் மீட்புத் திட்டம் யூதர்களுக்கு மட்டுமல்ல உலகில் உள்ள எல்லா மக்களுக்கும் போய் சேர வேண்டும். அப்படிப்பட்ட எண்ணத்தில் தன்னை அர்ப்பணித்தவர் பவுல். சிலிசியா நாட்டுக்குத் தலைநகரான தர்சு நகரில் பிறந்தார். பெற்றோர் ரோமக் குடியுரிமை பெற்றவர் மேலான எண்ணம் உடையவர். பவுல் சிறந்த அறிவு கொண்டவர். அதே நேரத்தில் இயேசு தன்னை ஆட்கொண்டபோது தன்னுடைய யூத நம்பிக்கையையும் கலாச்சாரத்தையும் விட்டு வெளியே வந்தார். பிலி. 3 : 5-7 வரை படிக்கும்போது பவுல்தன் நிலையைச் சொல்லுகிறார், "நான் பிறந்த எட்டாம் நாள் விருத்தசேதனம் பெற்றவன்; இஸ்ரயேல் இனத்தவன், பென்யமீன் குலத்தவன்; எபிரேயப் பெற்றோருக்குப் பிறந்த எபிரேயன் திருச்சட்டத்தைக் கடைப்பிடிப்பதில் பரிசேயன் . . . குற்றமற்றவனாய் இருந்தேன். ஆனால் எனக்கு ஆதாயமான இவை அனைத்தும் கிறிஸ்துவின் பொருட்டு இழப்பு எனக்





கருதினேன்". இப்படித் தன்னைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்ததையும், அதனால் வந்த பாடுகளையும் (2 கொரி. 11 : 23-27) தெளிவாகச் சொல்கிறார்.

அன்புக்குரியவர்களே! கிறிஸ்துவின் அன்பு கலாச்சாரங் களையும் தாண்டி மாற்றத்தை உருவாக்கியது. தி.ப. 13 : 47-இல் "உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னை வேற்றினத்தார்க்கு ஒளியாக ஏற்படுத்துவேன்". இவ்வாக்கு பவுலடிகளாரில் நிறைவேறியது. இறையரசில் உரிமைக் குடிமக்களாக நாம் தகுதிபெற வேண்டுமானால் இயேசு கிறிஸ்துவின் செயல்திட்டங்களுக்கு நாம் நம்மை முழுவதுமாக அர்ப்பணிக்க வேண்டும். இயேசுவின் மீட்புப் பணி என்பது எல்லா நம்பிக்கையையும் கலாச்சாரத்தையும் தாண்டிச் செல்லவேண்டும். அப்படிச் செல்லும்போது இறையாட்சியை நம்மில் பிரதிபலிக்க முடியும்.

கடவுள் எல்லாருக்கும் உரியவர் அவரை நமது சிந்தனைகளினாலோ, சமயங்களினாலோ, நம்பிக்கை மற்றும் கலாச்சாரங்களினாலோ கட்டுப்படுத்த முடியாது. தி.ப. 16 : 31-இல் "ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளும், அப்பொழுது நீரும் உம் வீட்டாரும் மீட்படைவீர்கள்" என்று சிறைக் கூட காவலருக்கு பவுல் கூறினார். மீட்புப் பணிகளை நினைத்து இயேசுவிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். அவரின் திருப்பெயரில் நம்பிக்கை பெறும்போது நல்ல மாற்றம் ஏற்படும் (தி.ப. 3 : 16). மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் என்று இயேசு கூறி இறையரசை விரிவாக்கம் செய்தார் (மாற். 1 : 15). பல நேரங்களில் நம்முடைய நம்பிக்கை மற்றும் கலாச்சாரம் நல்ல மாற்றங்களை உருவாக்கத் தடையாக இருக்கலாம். அப்படியானால் அவற்றை விட்டு வெளியே வரவேண்டும். யூதர்களுக்கு தாங்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்கின்ற பெருமை இருந்தது. அவர்கள் மட்டும் தான திருப்பொழிவு பெறமுடியும் என நம்பினர். ஆனால் இங்கு கடவுளின் மாட்சிக்காக கலாச்சாரங்களைத் தாண்டி சைரஸ் மன்னர் திருப்பொழிவு செய்யப்படுகிறார். பிற சமயச் சூழலில் கானானியப் பெண்ணின் நம்பிக்கையிருந்தாலும், அவள் இயேசுவிடம் முழுமையான நம்பிக்கை கொண்டபோது, இயேசு அவளின் நம்பிக்கையை மெச்சிக்கொண்டார். இயேசு கிறிஸ்து பவுலைத் தெரிந்து கொண்டு பிற மக்களுக்கு ஒளியாக பலதரப்பட்ட நம்பிக்கை மற்றும் கலாச்சார சூழலில் நற்செய்தி அறிவிக்க சென்றார். எனவே நம்பிக்கையும் கலாச்சாரமும் நன்மைக்காக மாற்றம் பெறுதல் அவசியம் ஆகும்.

**அருள்திரு. K. பிரின்ஸ்குமார்**

| 10-03-2013 | உயிர்ப்புக்கு முன்வரும் மூன்றாம் ஞாயிறு |
|---|---|

மீக். 6 : 6-8 எபே. 4 : 25-32

திபா. 51 மத். 12 : 15-21

# சமூக அமைப்புகளில் மாற்றுருவாக்கம்

## Transformation of Structures in Society

எல்லா மக்களினங்களும் இவர் பெயரில் நம்பிக்கை கொள்வர்.
(மத். 15 : 21)

**இறைவேண்டல்**

*அன்புள்ள கடவுளே! எங்கள் சமுதாய அமைப்புகளில் தளர்வுகள் இருப்பதை உணர்கிறோம். ஆனால் அவை எங்களுக்கு தேவையாய் இருக்கிறதை அறிகிறோம். நல் எண்ணமும், நீதியும் மானிட சமூகத்தின் எல்லாநிலைகளிலும் காணப்பட உம் விருப்புக்கிசைந்ததாய் எங்கள் நிலைகளை [அமைப்புக்களை] மாற்றி அமைக்க உதவி செய்ய வேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியாரோடும் இணைந்து ஆளுகை செய்யும் கிறிஸ்து வழியாக மன்றாடுகிறோம், ஆமென்.*

குடும்பங்களின் கூட்டமைப்பே சமூகமாகப் பரிணாமம் பெறுகின்றது. சமூகம் வளர்ச்சி பெற மனித எண்ணங்களிலும், உணர்வுகளிலும், புதுமாற்றமும், மறுஉருவாக்கமும் அவசியமானதாகும். இஸ்ரயேலர்கள் இறைவனால் மனிதச் சமூகத்திலிருந்து வேறுபிரிக்கப்பட்டு இறைசமூகமாக வாழ சிறப்பு அழைப்பு பெற்றனர். உலக சமூகத்துக்கு எடுத்துக்காட்டாக வாழ பொறுப்பும் கொடுக்கப்பட்டது. தலைவர்கள், நீதித் தலைவர்கள், அரசர்கள், குருக்கள், இறைவாக்கினர்கள் அவரவர் காலத்தில் சமூகத்துக்கு நல் ஆலோசனைகள் கொடுத்தும் பயனற்றுப் போயிற்று. ஆகவே தான் மானிடம் மாற்றுருவாக்கம் பெற்று, மீட்கப்பட கடவுள் தம் மகனையே இவ்வுலகிற்கு அனுப்பினார். இறைமகன் இயேசுவும் மனந்திரும்புதலையும், மீட்கப்படுதலையும் மையப்படுத்தி இறைப்பணியாற்றினார். இன்றைய சூழலில் மானிட சமூக அமைப்புகளில் மாற்றுருவாக்கம் பெற வேண்டியதின் முக்கியத்துவம் குறித்துச் சிந்திப்போம்.

**1. இறைவனின் இதய விருப்பம் அறிதல்** (மீக். 6 : 6-8)

"........... வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கிறார்?" 6 : 8





மனித சமூகம் மாற்றுருவாக்கம் பெற அடிப்படை இறைவனின் இதய விருப்பம் எது எனத் தெளிவாக அறிந்து கீழ்ப்படிவதாகும். மீக்கா தீர்க்கர் ஓ மானிடா! என ஆரம்பித்து, குற்றவாளியைக் கூண்டில் நிறுத்தி குற்ற விசாரணை செய்வது போல் இஸ்ரயேல் சமூகத்தை நீதி விசாரணை செய்வதாகக் குறிப்பிடுகிறார். அடிமை நாட்டிலிருந்து உரிமை நாடு வரைக்கும் அழைத்து வந்த ஆண்டவரின் அளப்பரிய ஆற்றலை எண்ணிப்பாருங்கள். அப்போது ஆண்டவரின் மீட்பின் செயல்களை அறிந்து கொள்வீர்கள் என்கிறார்.

இறைவனின் வல்ல செயலுக்குக் கழுவாயாக ஆன்மிக செயல்களை அர்த்தமில்லாமல் நிறைவேற்றி அதில் நிறைவு காண்பது தவறு என்பதைச் சுட்டிக்காட்டி தாழ்ச்சியோடு நடந்துகொள், இவைகளையே இறைவன் விரும்புகிறார் என அறிவித்தார். அன்றைய சமூகத்தில் இல்லாதிருந்த இறைப்பண்புகளாகிய உண்மை (நேர்மை) இரக்கச் சிந்தை, போன்ற உயர்ந்த பண்புகள் இறைமக்களின் சமூகத்தில் மாற்றுருவாக்கத்தை ஏற்படுத்தும் எனும் நல் எதிர்நோக்குடன் இறைவனின் இதய விருப்பம் அறிந்து இறைமக்கள் செயலாற்ற அழைப்பு விடுக்கிறார் மீக்கா இறைவாக்கினர்.

**2. இறைமக்கள் பொறுப்பை உணர்தல்** (எபே. 4 : 25-32)

"........ஏனெனில் நாம் யாவரும் ஒருடலில் உறுப்புக்களாயிருக்கிறோம்" (4 : 25).

இறைவனின் சிறப்பு அழைப்பு பெற்ற இறைமக்களின் சமூகமே சபையாகும். பவுலடியார் எபேசு நகர விசுவாச வீட்டாருக்குப் புதிய சமூகக் கூட்டு வாழ்வுக்கான புதிய விதிமுறைகளை வகுத்துக் கூறுகிறார். கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபைக்குத் தலையாகக் கிறிஸ்துவையும், விசுவாசக் குடும்பத்தார் ஒருடலின் உறுப்புகள் எனவும் உருவகப்படுத்தி உண்மையைப் போதித்தார்.

ஒருடலின் உறுப்புகளாகச் செயல்பட அழைப்பு பெற்றுள்ள விசுவாசிகளின் பொறுப்பை வலியுறுத்துகிறார். பொய்யை விலக்கி உண்மை பேச வேண்டும்.

பொழுது சாயுமுன் கோபம் தணிய வேண்டும்

தீமைக்கு இடம் கொடுக்கக்கூடாது.

திருடக்கூடாது, மாறாக கடினமாய்ப் பாடுபட்டு உழைத்து, பிறருக்கு பகிர்ந்து கொடுக்கவேண்டும்.

கெட்டவார்த்தை பேசாது, கேட்போர் பயனடையும்படி நல்ல வார்த்தைகளை மட்டுமே பேசவேண்டும். நன்மை செய்து, பிறரை மன்னித்து பிற இனத்தவர் நடுவில் மாதிரியாய் வாழவேண்டுமென

வலியுறுத்தினார்.

சமூகம் மாற்றுருவாக்கம் பெற ஒவ்வொரு தனிமனிதரும் அவரவருடைய பொறுப்பை உணர்ந்து செயல்படுவதும், வாழ்வியலின் மாற்றத்திற்கானவைகளைச் சிந்தித்து ஆன்மிக நெறியுடன் நடந்து கொள்வதும் ஏற்புடையதாகும். இனி நானல்ல என்னில் கிறிஸ்து வாழ்கிறார் (கலா. 2 : 20) என்ற பவுலாரின் ஒப்படைப்புள்ள வாழ்வே நம்மையும் ஆய்ந்தறிய தூண்டுகிறது. இத்தகைய தூண்டுதல்களில் நமது நம்பிக்கைக்கு ஊக்கமளித்து சான்றுள்ள வாழ்வு வாழ்ந்து சமூக மாற்றுருவாக்கம் பெற ஆக்கமுடன் செயல்படுவோம்.

**3. இறைமகனின் ஆற்றலை அனுபவித்தல்** (மத். 12 : 15-21)

".......... நெரிந்த நாணலை முறியார், புகையும் திரியை அணையார்" (12 : 20).

ஆண்டவரின் பணியாளர் உலகில் நீதியை நிலைநாட்டும் வரை சோர்வடைவதில்லை, மனம் தளர்வதில்லை. தம் குரலை தெருவில் எழுப்புவதுமில்லை. மாறாக, நீதிசெய்யும் தாகமுடையோரைத் தாங்கி நடத்துவார் என எசாயா முன்குறித்த (எசாயா 42 : 1-4). இறைச் செய்தியை இயேசு கிறிஸ்துவில் மத்தேயு குறிப்பிட்டுள்ளார். நியாயத்துக்கு வெற்றி கிடைக்கும் வரைக்கும் அவரது போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

நெரிந்த நாணலை போன்று பரிதாப நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் எளிய மக்களையும், எரியும் ஆற்றலின்றி புகையும் திரியைப் போல தீமையுடன் தொடர்ந்து போராடுவோரையும் ஒளிரச் செய்யவும் ஆண்டவரின் பணியாளர் ஆற்றலுடையவர். இந்த உண்மையை இறைமக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டால் சமூக மாற்றுருவாக்கம் இறைமக்களால் இவ்வுலகில் சாத்தியமாகும்.

மேலும் இறைவனின் உதவியின்றி, வெறும் மனித முயற்சியால் மாற்றுருவாக்கம் சமூக அமைப்புகளில் ஏற்படாது. மாறாக, தனிமனிதச் சிந்தனைகளில் இறை விருப்பம் அறிந்து கூட்டுவாழ்விற்கான வழிமுறைகளை மதித்து இறைவனது ஆற்றலை சார்ந்து செயல்படவேண்டும். வாழும் சமூக அமைப்புகளில் மாற்றுருவாக்கம் செய்து மகிழ்ச்சியுடனும், சான்றுடனும் வாழ்வது மக்களின் சிறப்புப் பொறுப்பாகும். இயேசுகிறிஸ்து தன்னையே தியாகம் செய்து உலகிற்கு மீட்பை அருளினார். இறை மக்களும் உண்மை, இரக்கம், அன்பு தியாகம், மன்னிப்பு போன்ற அரும்பண்புகளை வெளிப்படுத்தி சமூக மாற்றுருவாக்கத்துக்கு நமது பங்களிப்பைக் கொடுக்க உறுதிகொள்வோம்.

**அருள்திரு. D. ஜாண் ஜெபதாஸ்**



**17-03-2013** உயிர்ப்புக்கு முன்வரும் 2-ஆம் ஞாயிறு
Passion Sunday

விப. 1 : 8-14 — 1 பேது. 3 : 8-22
திபா. 69 : 1-12 — மாற். 10 : 35-45

# சிலுவையும் திருச்சபையும்
## The Cross and the Church

ஏனெனில், தீமை செய்து துன்புறுவதை விட, கடவுளுக்குத் திருவுளமானால், நன்மை செய்து துன்புறுவதே மேல். (1 பேது. 3:17).

**இறைவேண்டல்**

*உலகத்தின் இரட்சகரே! குற்றத்திற்காக மனம் வருந்துவோருக்கு மன்னிப்பு வழங்கி, ஆற்றல்படுத்துகிறவரே! உம்மை நம்புகிற மக்கள் உம் அருளையும், ஆறுதலையும் சார்ந்து சிலுவை சுமந்து வர உம் தூய பிரசன்னத்தால் நிறைத்து ஆற்றல்படுத்த வேண்டுமென்று சிலுவை சுமந்து வெற்றி தந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக மன்றாடுகிறோம். ஆமென்.*

கிறிஸ்தவத்தின் ஆதாரமே சிலுவை. சிலுவை இல்லையேல் திருச்சபையும் இல்லை. மீட்பும் இல்லை. சிலுவை என்கிற வார்த்தை துன்பத்தை ஏற்றலையும், கிறிஸ்துவுக்காக இரத்தம் சிந்துதலையும் உணர்த்துகிறது. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றின் நிறைவு தான் திருச்சபையின் தொடக்கமாக அமைகிறது. இயேசு கிறிஸ்துவின் சிலுவைத் தியாகத்தால் தான் திருச்சபை உருவாகியது. இந்தத் திருச்சபை உலகில் மலரப்போகும் ஒரு புதிய மானுடத்தின் முன் சுவையாக அமைகிறது. "எக்ளேசியா" என்ற கிரேக்கச் சொல் "திருக்கூட்டம்" எனப் பொருள்படும். இந்தத் தூயக் கூட்டம் இறை மகன் இயேசுவின் இரத்தத்தால் உருவாக்கப்பட்ட தூய கூட்டமாகும். தொடக்கக்காலத் திருச்சபைகள், பாடுகள் மேலும் புனிதர்களின் கல்லறைகள் மேலும் தான் கட்டப்பட்டன. சிலுவையைத் தொட்டுத்தூக்கிய தூயவர்களால் தான் திருச்சபை உருவாகியது என்பதைக் காலப்போக்கில் மறந்து விடாமல் இருக்க இவைகளை நம் குழந்தைகளுக்கும் வருங்காலத் தலைமுறையினருக்கும் கருத்தாய்ப் போதிக்க வேண்டும். எல்லா அமைப்புகளும் காலப்போக்கில் அதன் சிறப்பை இழப்பது போல கிறிஸ்தவத் திருச்சபைகளும் தற்காலத்தில்

சுயநலவாதிகளாலும் திருமறையைத் தவறாகப் போதிப்பவர்களாலும் மற்றும் அதிகாரம் ஆணவத்தாலும் பல நேரங்களில் அதன் தனித்தன்மையை இழக்கிறது. ஏபேசி. 4 : 12-இன் படி திருச்சபை "கிறிஸ்துவின் திரு உடல்". எனவே திருச்சபையின் தனித்தன்மையைக் கட்டிக்காப்பது இன்றைய கிறிஸ்தவர்களின் கடமையாகும்.

### 1. மானுட உறவுக்குப் பாலமாகும் சிலுவையும் திருச்சபையும்

"...நீங்கள் எல்லாரும் ஒருமனப்பட்டிருங்கள், பிறரிடம் இரக்கமும் சகோதர அன்பும் பரிவுள்ளமும் மனத்தாழ்மையும் கொண்டிருங்கள்" (1 பேது. 3 : 8).

சிலுவை என்பது இரு மரத்துண்டுகளினால் ஆன இணைப்பு அன்று; அது விண்ணுலகையும் மண்ணுலகையும் இணைப்பதற்கான ஓர் உறவுப் பாலமாகும். இந்த உறவு, திருச்சபை வழியாக உயிரோட்டம் பெறக்கூடியதாக அமைய வேண்டும். சிலுவை ஒரு தண்டனையின் கொடிய கருவியாக பாரசீகம். எகிப்து, ரோம் மற்றும் கிரேக்க நாடுகளில் பயன்படுத்தப்பட்டது. கொடிய குற்றம் செய்த கயவர்களையும், அரசியல் துரோகிகளையும், அடிமைகளையும், அரசுக்கு எதிராகப் புரட்சி செய்தவர்களையும் சிலுவையில் தூக்கிக் கொலை செய்தனர். சிலுவையை அனைவரும் வெறுத்து ஒதுக்கிய நேரத்தில் இயேசு சுமந்ததால் சிலுவைக்கே சிறப்பு கிடைத்தது. அன்று முதல் மானிட உறவுக்கும் இறை உறவுக்கும் இடையே பாலமாக சிலுவை மாற்றப்பட்டது. நாமெல்லாரும் இரக்கமுடையவர்களாகவும் சகோதர சகோதரி அன்புடையவர்களாகவும், பரிவுள்ளம் மற்றும் மனத்தாழ்மையைத் தரித்துக் கொள்ளும்போது மானுட உறவு உறுதிப்படும்.

இன்றைக்கு மானிட உறவுக்குப் பாலமாகத் திகழ வேண்டிய சிலுவை அழகுப் பொருளாகவும், காட்சிப் பொருளாகவும், கோபுரத்திலும், கல்லறைத் தோட்டத்திலும், தங்கச் சங்கிலியிலும் தொங்க விடப்படுகிறது. திருச்சபையும் நான்கு சுவருக்குள் சண்டையையும் சச்சரவையும் ஏற்படுத்தி மனித மாண்பை சிதைத்து விடுகிறது. திருச்சபை வேற்றுமைகளை மாற்றக்கூடியதாக மாற வேண்டும். வெறுப்புகளை மறக்கக்கூடியதாக இருக்க வேண்டும். மறப்போம் மன்னிப்போம் என்கிற சிந்தனை வளரும்போது திருச்சபை உறவுக்குப் பாலமாக மாறும். எபே. 2 : 19-இல் தூய பவுலார் சொல்லும்போது, "எனவே இனி நீங்கள் அன்னியர் அல்ல; வேற்று நாட்டினரும் அல்ல, இறை மக்கள் சமுதாயத்தின் உடன் குடி மக்கள்; 8





கடவுளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்" என்கிறார். இன்று திருச்சபைக்குள் சாதியம், பெண்ணடிமை, உயர்ந்தவர் தாழ்ந்தவர், ஏழை-பணக்காரர், கற்றவர் கல்லாதவர் என்கிற பெரிய இடைவெளி தவிர்க்கப்பட வேண்டும். எபேசியர் திருமுகம் 2 : 18-இல் அவர் வழியாகவே, இரு இனத்தாராகிய நாம் ஒரே தூய ஆவி வழி நம் தந்தையை அணுகும் பேறு பெற்றிருக்கிறோம். இன்னும் எபே. 2 : 16-இல் தாமே துன்புற்றுப் பகைமையை அழித்தார். சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கிக் கடவுளோடு ஒப்புரவாக்க இப்படிச் செய்தார். எனவே, சிலுவை நம்மையும் கடவுளையும், நம்மையும் பிற மனிதர்களையும் இணைக்கும் பாலமாகவும் செயல்படுகிறது. இந்த உலகில் பிரிவினையுடன் வாழ்ந்து கலகங்களை உருவாக்கிய மக்கள் அனைவரும் ஒன்றாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் தான் கிறிஸ்து சாபமான சிலுவையைத் தொட்டுத் தூக்கினார். காரணம் நமக்கும் இறைவனுக்கும் உறவுப் பாலம் அமைப்பதற்காக. இந்த உறவு நாம் எதிர்நோக்கும் புதிய வானம் புதிய பூமியை அடையும் வரை நம்முடனிருக்க தொடர்ந்து நாம் உழைக்க வேண்டும்.

### 2. பாடுகளை அறிவிக்கும் சிலுவையும் திருச்சபையும்

கடினமான சாந்து செங்கல் வேலையாலும், மேலும் கொடுமைப்படுத்தி வாங்கிய ஒவ்வொரு வேலையாலும், அவர்கள் வாழ்க்கையே கசந்து போகும்படி செய்தனர் (வி.ப. 1 : 14).

இஸ்ரயேல் மக்கள் சொந்த நாட்டை விட்டு எகிப்தில் அடிமைகளாக்கப்பட்டார்கள். அந்நிய நாட்டு அடிமைச் சூழலில் எகிப்திலே ஆட்சி செய்த ஒரு புதிய மன்னனின் அடக்குமுறையும் ஆதிக்கமும் அதிகமாக மக்களைத் துன்புறுத்தியது. ஏனென்றால் இஸ்ரயேல் மக்கள் எண்ணிக்கையில் பெருகி விட்டால் நம்மை (எகிப்தியரை) எதிர்ப்பார்களோ என்கின்ற தவறான எண்ணத்தில் அவர்களை ஒடுக்க, கடினமான வேலைகளைக் கொடுத்து அவர்கள் வாழ்க்கையைக் கசந்து போகச் செய்தனர். இப்படிப்பட்ட கடினப்பாடுகளின் மத்தியில் அவர்கள் கூக்குரலைக் கேட்டு கடவுள் அவர்களை விடுவித்தார். நம்முடைய வாழ்க்கைச் சூழலிலும் பாடுகளைத் தாங்கிக் கொள்ள வேண்டியது கட்டாயம். கிறிஸ்துவைப் பின்பற்றுவது என்பது பாடுகள் நிறைந்தது என்பதைத் திருச்சபை தவறாமல் போதிக்க வேண்டும். இயேசு சொல்லும் போது, மத். 10 : 38-இல் "தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்". இன்னும் மாற்.

: 34-இல் ..."என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்".

மாற். 10 : 35-45 வரையிலான உரையாடலைப் படிக்கும்போது யாக்கோபுக்கும் யோவானுக்கும் இடையே அரியணையில் வலப்பக்கம் இடப்பக்கம் தங்களுக்குத்தான் வேண்டும் என்கின்ற நிலையில் இயேசு அவர்களுக்குச் சொன்னது, மாற். 10 : 38-இல் "நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் துன்பக் கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா? இன்றைக்குத் திருச்சபை இந்தத் துன்பியலை மறந்து செழுமைச் சிந்தனையான பாகால் வணக்கத்திற்கு நேராகச் செல்கிறது. தனியார் தன்னார்வ சபைகளும், கூடாரங்களும், கன்வென்சன் கூட்டங்களும் இன்றைக்குத் திருமறையைத் தவறாகப் போதித்து மக்களுக்கு ஆசீர்வாதத்தை மட்டுமே கூறி பணத்தையும், பொன்னையும், பொருளையும் துணிச்சலுடன் வஞ்சிக்கின்றனர். தொடக்கக் கால கிறிஸ்தவர்கள் இயேசுவின் பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தார்கள். ஏனெனில் "...இப்பொழுது நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவர்களாகி..." (உரோ. 5 : 9) என்ற வசனத்திலிருந்து கிறிஸ்துவின் பாடுகள் வழியாக மீட்பினைப் பெற்றோம் என்பது உறுதியாகிறது. நாம் இந்த உலகில் தீமைகள் செய்து பாடுகள் அனுபவிப்பதையே சிலுவையாக எண்ணாமல், நன்மை செய்து பாடுகள் அனுபவிப்பதையே சிலுவையாக எண்ண வேண்டும். (1 பேதுரு 3 : 14). மத். 5 : 10-இல் "நீதியின் பொருட்டுத் துன்பப்படுவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கரியது" என்று இயேசு சொல்கிறார். விண்ணரசின் நீதிக்காக நாம் ஏற்கும் பாடுகள் கடவுளின் பார்வையில் மேன்மையாக எண்ணப்படும். இந்த உலகில் இரண்டு பாதைகள்; ஒன்று அகன்ற பாதை, இன்னொன்று குறுகிய பாதை. அகன்ற பாதை விசாலமானது. அதிலே செல்வது எளிது. அதே நேரத்தில் குறுகிய பாதை நெருக்கமானதாக இருக்கும். அது போலவே இறைவனை அடையக்கூடிய பாதையும் குறுகியதும், நெருக்கமானதும், பாடுகள் நிறைந்ததும் ஆகும். எனவே பாடுகளின் பாதையிலும் இயேசுவைப் பின்பற்றினால் முடிவிலாப் பேரின்பத்தைத் தரும் இன்பப் பாதையை அடையலாம்.

### 3. பல்சமய சூழலில் சிலுவையும் திருச்சபையும்

ஏனெனில் ஆண்டவரின் கண்கள் நேர்மையானவர்களை நோக்குகின்றன. அவர் செவிகள் அவர்களது மன்றாட்டைக் கேட்கின்றன. ஆண்டவரின் முகமோ தீமை செய்வோருக்கு எதிராக





இருக்கிறது (1 பேது. 3 : 12).

எல்லாச் சமயங்களிலும் சின்னங்கள் இருந்தாலும் கிறிஸ்தவ சமயத்தின் சின்னமான சிலுவை சிறப்பானது. ஏனெனில் சிலுவை ஒரு கொலைக் கருவியாக இருந்தது. ஆனால் இயேசுவின் வழி தியாகத்தின் சின்னமாக மாறியது. அன்பு, மன்னிப்பு இவற்றை பறை சாற்றுகின்ற சின்னமாக மாறியது. மொழி, இனம், பல் சமய, கலாச்சார சூழ்நிலையில் வாழுகின்ற நாம் சிலுவையையும் திருச்சபையையும் எப்படிப் பார்க்கிறோம். அனைவருக்கும் அடைக்கலம் தருகின்ற இடமாகப் பார்க்கின்றோமா? இல்லை நமக்கு மட்டும் தான் உரியது என்று பார்க்கின்றோமா? பிற சமயத்தவர்கள் நம்மைப் பார்த்து சிரிக்கக் கூடிய முறையில் நம்முடைய வாழ்க்கை முறை அமையாமல் பிறர் சிந்திக்கக் கூடிய முறையில் வாழ வேண்டும். திருச்சபைக்குள் நிற்காமல் தியாகம் செய்யக்கூடிய அளவில் சமூகத்தில் அனைத்து சமய மக்களுடனும் இணைந்து வாழ வேண்டும்.

பல்சமயச் சூழலில் இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் Dr. இராதாகிருஷ்ணன் சொல்லும் போது, "இந்தியக் கிறிஸ்தவர்கள் சாதாரண மக்கள். ஆனால் அவர்கள் அசாதாரணமான செயல்களைச் செய்வதாகக் கூறுகிறார்கள். இவர்கள் பேசுவது ஒன்று செய்வது இன்னொன்று என்பது போல இருக்கின்றது" என்றார். பல நேரங்களில் இது உண்மையாகவே இருக்கிறது. ஒரு முறை காந்தியடிகள் சொல்லும் போது, "பல் சமயச் சூழலில் நல்ல கிறிஸ்தவர்களாக வாழுங்கள்" என்றார். இயேசு கிறிஸ்துவை பல் சமயச் சூழலில் எல்லா மக்களும் ஏற்று அன்பு செலுத்துகின்றனர். விடுதலை வாழ்வுக்கு குரல் கொடுத்தவராக, பாவ மன்னிப்பிற்காகச் சிலுவை சுமந்து தன் உயிரைத் தியாகம் செய்து உயிருடன் எழுப்பப்பட்டார் என்பதையும் ஏற்றுக் கொள்கின்றனர். அதே நேரத்தில் சாதிக்கட்டுப்பாடுகள், சமய மற்றும் கலாச்சார கட்டுப்பாடுகள், கோட்பாடுகள் பல நேரங்களில் திருச்சபையில் சிலுவையைப் பின்பற்ற தடையாகவே இருக்கின்றன. இவைகளைக் களைய திருச்சபை முன்வர வேண்டும்.

தூய பவுலடிகளார் கலாத்தியர் 6 : 14-இல் சொல்லும் போது, "நானோ நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையை அன்றி, வேறு எதைப் பற்றியும் ஒரு போதும் பெருமைப்பாராட்ட மாட்டேன். அதன் வழியாகவே, என்னைப் பொறுத்த வரையில், உலகம் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. உலகைப் பொறுத்த வரையில் நானும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்". திருச்சபை மனிதம், மானிட

விடுதலையை முன்னிறுத்தி செயல்பட வேண்டும்.

பிற சமயத்தவர்களான நூற்றுவர் தலைவன், கானானியப் பெண், சமாரியப் பெண், நன்றி செலுத்த வந்த சுகம் பெற்ற தொழுநோயாளி இன்னும் அனேகருடைய வாழ்வில் கனிவுடனும் பரிவுடனும் இயேசு விடுதலை கொடுத்தார். மக்களின் போராட்ட வாழ்விலும், ஏழை எளிய மக்களின் விடுதலை வாழ்வுக்கும் பிற சமயத்தவர்களின் நடுவில் கிறிஸ்தவ திருச்சபைகள் சாட்சியை இழக்காமல் முன் மாதிரியான வாழ்க்கை வாழ வேண்டும்.

**நிறைவாக**

திருச்சபை சுமையாக அல்ல, பிறரது சுமைகளைச் சுமக்கக்கூடிய சுமைதாங்கியாக மாற வேண்டும். ஆனால் இன்று சிலுவைகளைச் செய்து அயலானைத் தேடுகிறோம் சுமப்பதற்கு; ஏனென்றால் சுமத்துவது எளிது, சுமப்பது கடினம். கிறிஸ்தவத் திருச்சபை வரலாற்றில் படிக்கும் போது தூய இக்னேஷியஸ் என்னும் திருச்சபைத் தந்தையை கி.பி. 107 டிசம்பர் 20-இல் விளையாட்டரங்கில் சீறுகின்ற சிங்கங்களுக்கு நடுவே வீசிக் கொல்லுவதற்குக் கொண்டு சென்றனர். தன்னைச் சந்திக்கும் சிலுவையாம் கோர மரண வேளையைச் சந்திக்கும் முன் கூரிய பற்களைக் கொண்ட வாயைத் திறந்த சிங்கங்களைக் கண்டு அஞ்சாமல் அவர் சொன்னது, "நான் என் ஆண்டவரின் கோதுமை, நான் அவருக்குத் தூய்மையான அப்பமாக்கப்படும்படி இந்தச் சிங்கங்களின் வாயின் பற்களால் நொறுக்கப்பட்டு அரைக்கப்படட்டும் என்றார்". ஒருமுறை இந்திய அப்போஸ்தலன் என்று அழைக்கப்படும் சாது சுந்தர் சிங் சொல்லும் போது, மோட்சத்தில் பாடுகள் இல்லை என்றால் அது எனக்கு வேண்டாம். என்னை நரகத்தில் தள்ளி விடும். அங்கு நான் சிலுவை சுமந்து இயேசுவின் நற்செய்தியை அறிவிப்பேன் என்றார். இயேசு கிறிஸ்து தம்முடலை மற்றவர்களுக்காகத் தியாகம் செய்தது போலக் கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையும் சிலுவைத் தியாகம் செய்ய முன் வர வேண்டும்.

**அருள்திரு. K. பிரின்ஸ் குமார்**



**24-03-2013** குருத்தோலைத் திருநாள் (உயிர்ப்புக்கு முன்வரும் ஞாயிறு)

செக். 9 : 9-12 தி.ப. 4 : 23-31

தி.பா. 24 மத். 21 : 1-11

# இறைமக்களை ஆளுகை செய்ய வருகிறவர்
# The Coming Ruler of God's People

இதோ! உன் அரசர் உன்னிடம் வருகிறார் (செக். 9 : 9)

**இறைவேண்டல்**

*அன்பின் கடவுளே! உம் ஒரே மகனை எருசலை நகருள் சாந்தமும் ஆளுமையும் நிறைந்தவராய் அனுப்பினீரே! நாங்கள் அவரை அனைத்துலக அரசராக ஏற்றுக்கொள்ளவும், எங்கள் சிலுவை சுமந்து அவரைப் பின்பற்றவும், பின்பு உம்மோடு நிலைவாழ்வில் மகிழ்ந்திருக்கவும் எங்களுக்கு உதவியருள வேண்டுமென்று வெற்றி வேந்தராம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.*

எருசலேமுக்கு நேராக இயேசுநாதரைக் கழுதையின் மேல் ஏற்றி இறைமக்கள் ஆரவாரத்தோடு பேரணியாகச் செல்லும் நிகழ்வை இன்று நாம் நினைவுகூருகின்றோம். இயேசுநாதர் இப்பேரணியில் அமைதி அரசராக வலம் வருகின்றார். இறைமகன் இயேசு அவரது பிறப்பு முதலே ஓர் அரசர் என உலகத்திற்கு அறிமுகப்படுத்தப்படுகின்றார். கிழக்கிலிருந்து வந்த ஞானியர், யூதர்களின் அரசராக பிறந்திருக்கிறவர் எங்கே? (மத். 2 : 2) என்றனர். நாத்தனியேல் இயேசுவிடம் நீரே இஸ்ரயேல் மக்களின் அரசர் (யோவா. 1 : 49) என்றார். ஒலிவமலைச்சரிவில் திரண்டிருந்த சீடர்கள் இயேசுவைக்கண்டபோது ஆண்டவர் பெயரால் அரசராக வருகிறவர் போற்றப்பெறுக (லூக். 19 : 38); யோவா. 12 : 13) என்றனர். பிலாத்து இயேசுவிடம் நீ யூதருடைய அரசரா என்று கேட்டார். அதறகு இயேசு நீர் சொல்லுகிறபடிதான் (மத். 27 : 11) என்று கூறுவதிலிருந்து அவர் அரசராக அறிமுகப்படுத்தப்பட்டார் என்பதை அறிய முடிகிறது. இறையரசை நிறுவி அரசராக என்றும் நிலைகொள்ளவிருக்கும் இயேசு கிறிஸ்துவை குறித்து தீர்க்கர் முன்னுரைக்கின்றார்.

அவரது அரசு இவ்வுலகு சார்ந்ததன்று (யோவா 18 : 36). கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் அவ்வரசின் குடிமக்கள். இயேசு அரசர்க்கெல்லாம் அரசர் (தி.வெ. 17 : 14, 19 : 5). இயேசு இறுதி உணவின்போது தம் 12 சீடர்களுக்கும் வாக்குறுதியை அளித்தார். என் தந்தை எனக்கு அரசுரிமை வழங்கியதுபோல நானும் உங்களுக்கு அதை வழங்கப் போகிறேன். எனவே அரசில் என்னுடைய பந்தியில் உண்பீர்கள், குடிப்பீர்கள், இஸ்ரவேலின் 12 கோத்திரங்களுக்கும் நடுவாக அரியணையில் வீற்றிருப்பீர்கள் (லூக். 22 : 29, 30) என்றார்.

கழுதை மீது அரசஉலாவந்த கிறிஸ்துவுக்கு மக்கள் சிறப்பான வரவேற்பளித்தனர். ஆர்ப்பரிப்பின் மக்கள் படையுடன் கர்த்தர் எருசலேமுக்கு எழுந்தருளினார். அங்கு எழுப்பப்பட்ட ஒலி தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா என்பதாகும். ஓசன்னா என்றால் இப்பொழுதே இரட்சியும், இரட்சிக்க வேண்டுகிறேன் என்று பொருள். அங்கு உயர்த்திப்பிடிக்கப்பட்ட கொடி குருத்தோலை. குருத்தோலை அரசமகிமையின் சின்னம். இயேசு அனைத்து உலகையும் மீட்க வந்தவர் (யோவா. 3 : 16, 17) ஆகையால் உலகமே அவருக்கு பின் செல்வது இயல்பே.

இறைமக்களை ஆளுகை செய்ய வருகிறவராகிய இயேசு எப்படிப்பட்டவர் என்பதைத் தீர்க்கன் செக்கரியா விளக்கமாய்ச் சொல்கிறார்.

**1) எளிமையின் அரசர்** (செக். 9 : 9)

இன்றைய உலகில் ஆளுகிறவர்கள் தங்களை மிகைப்படுத்திக் கொள்வதிலும், விளம்பரப்படுத்திக் கொள்வதிலும், மேன்மைப்படுத்தி கொள்வதிலும் அதிக ஆர்வமும் ஆவலும் கொள்கின்றனர். தங்கள் பெயர் பிரபலமடைய வேண்டும் என்பதில் அக்கறை கொள்கின்றனர். எல்லாம் தன்னால்தான் நடைபெறுகிறது என்பதைக் காட்டிக்கொள்வதில் முந்திக் கொள்கின்றனர். இப்படிப்பட்ட ஆட்சியாளர்கள் உண்மையிலேயே மக்கள் மீது அக்கறை கொள்வதில்லை. ஆடம்பரமாய் வாழ்வதிலும், பயணிப்பதிலும், தங்களைச் சுற்றிலும் பாதுகாப்பு வளையங்களை அமைத்துக் கொள்வதிலும், ஆணவத்துடன் செயல்படுகின்றனர். ஆளுகிறவர்கள் அதிகாரம் செலுத்துவதும்; ஆணவத்துடன் செயல்படுவதும் கடவுளுக்கு எதிரானதாகும்.

அதிகாரங்களெல்லாம், அல்லல்படுவோரை அரவணைக்கவே என்பதை ஆண்டவர் இயேசு அதிகாரத்திற்கு இலக்கணம் வகுத்துக் காட்டியுள்ளார். இன்று ஆளுகின்றவர்களின் அதிகாரவெறியினால், எத்தனையோ மக்கள் இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். ஆகவே





ஆளுகிறவர்களிடம் இருக்கவேண்டியது எளிமையும், தாழ்மையுமே என்பதை வரப்போகும் அரசரிடம் இருந்து கற்க தீர்க்கன் அழைக்கிறார்.

இயேசு நம்மை மீட்கவே தம்மைத் தாழ்த்தினார். தாழ்மையான உள்ளத்தை உடையவனிடம் இறைவன் வாழ்கிறார் (எசா. 57 : 15) தெய்வபயமும் வளமும், புகழும் வாழ்வின் தாழ்மையின் விளைவுகளாகும். (நீதி. 22 : 4)

விவிலியத்தில் எளிமை என்பது வீண் ஆடம்பரத்திற்கு எதிரான தன்னடக்கத்தையே குறிக்கிறது. (உரோ. 12 : 13, 16) மேட்டிமைக்கு எதிரான தாழ்மையே இன்றும் ஒருபடி உயர்ந்தது (நீதி. 15 : 33) தாழ்மையுள்ளவன் தன்னிடமுள்ள எல்லாமே இறைவனிடமிருந்து பெற்றவை என்ற உண்மையை உணருகின்றான்.

செக்கரியா உரைத்தது போல மேசியா ஒரு தாழ்மையான அரசராக இருப்பார். கழுதையின் மேல் ஏறி சீயோனுக்குள் நுழைவார் (செ. 9 : 9) தீர்க்கர் உரைத்தபடியே எளிய மன்னராக வெளிப்பட்டார்.

தாழ்மையுடையோரே இறையரசில் நுழைய முடியும் (மத். 5 : 3) இத்தகைய அனுபவம்பெற தாழ்மையும் சாந்தகுணமும் நிறைந்த கிறிஸ்துவின் பாதப்படியில் அமர்தல் வேண்டும் (மத். 11 : 29). இயேசு தற்புகழைத் தேடாமல் (யோவா. 8 : 50) தம் சீடர்களின் பாதங்களைக் கழுவுமளவிற்கு தம்மையே தாழ்த்துகிறார். தம் எளிய வாழ்வின் மூலம் எளிமைக்கு வழிகாட்டியானார்.

**2) அமைதியின் அரசர்** (செக். 9 : 10; மத். 21 : 4)

மனிதன் அமைதியைத் தேடி நாளெல்லாம் அலைகிறான். ஆனால் அமைதியை அடைய அவன் பின்பற்றும் வழிமுறைகள் ஆண்டவருடைய வழிகள் அல்ல என்பதை அறியாது போகிறான். ஆனால் அமைதிக்காக ஏங்கி தவிக்கின்றான்.

அமைதியின் அரசராக வந்த கிறிஸ்து மனிதனுக்கு அமைதிவேண்டும்; மனித உள்ளத்திற்கு சமாதானம் வேண்டும் என்பதில் கவனம் கொள்ளும் அரசர் இவர் என செக்கரியா தீர்க்கர் விளக்குகிறார். அமைதியரசர் ஆட்சியில் மக்கள் அமைதி காண்பர். உள்ளத்தில் அமைதி பெறுவர். இறைவனே அமைதியின் அரசராகிறார் (உரோ. 15 : 33; 2 கொரி. 13 : 11; பிலி. 4 : 9 எபி. 13 : 20) கொலோ. 3 : 15-இல் கிறிஸ்துவின் சமாதானம் உங்களில் ஆட்சிபுரிவதாக எனப் பவுல் எழுதுகிறார்.

கழுதையின்மேல் ஏறி ஆண்டவர் பேரணியாகச் சென்றது ஆண்டவரின் தாழ்மையையும் அவரின் அமைதிப் பணியையும் ஒருங்கே

நினைப்பூட்டுகின்றன (செக். 9 : 9, 10) ஜாதிகளுக்கு சமாதானம் கூறுவார் என்ற இறைவாக்குக்கு ஏற்ப இயேசு நீதியும் தாழ்மையுமுள்ள இரட்சகராக அமைதி அரசராக கழுதையின்மேல் ஏறி அரசப்பவனி வந்தார் (மத். 21 : 4, 5) என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குத் தருகிறேன் என்றார் அமைதியின் அரசர் (யோவா. 14 : 27)

மக்கள் ஒரு மாபெரும் அரசியல் வெற்றியை எதிர்பார்த்தனர் ஆண்டவரோ சமாதானத் தூதுவராக, தாழ்மையின் சின்னமாக, அமைதியின் உருவாக அடிக்கப்படவிருக்கும் ஆட்டுக்குட்டி யானவராகவே எருசலேமுக்குள் அடியெடுத்துவைத்தார்.

வரப்போகும் அரசர் சாந்தகுணமுள்ளவர், அமைதியை நிலைநாட்டுபவர் அவருடைய வாகனம் சமாதானக் காலத்தில் அரசர்கள் பயன்படுத்தும் கழுதை வாகனம். போர் வாகனங்களையும், போர்க் கருவிகளையும் அழித்துவிட்டு அனைத்துலகின் அமைதி அரசராக ஆட்சிபுரிவார். இந்த அரசருக்குப் படையில்லை, இந்த அரசர் அணிந்து கொள்ளப்போகும் கிரீடம் முட்கிரீடம். இது பாடுகளின் வழியாக அமைதிப்பணியில் வெற்றியடைந்த பொறுமையான தலைமைத்துவமாகும்.

இந்த அமைதி அனைத்து மக்களுக்கும் அவரால் அருளப்படும் அமைதி இது விண் தூதர்கள் வாக்களித்த பூமியின் நற்பேறான நிலை (லூக். 2 : 14) கிறிஸ்து அரசரின் சிந்தையே வாழ்வும் அமைதியுமாகும் (உரோ. 8 : 6; 15 : 13).

**அருள்திரு. A. இயேசுதாஸ்**



| 31-03-2013 | உயிர்ப்பு ஞாயிறு |
|---|---|
| விப. 14 : 5-30 | கொலோ. 3 : 1-11 |
| தி.பா. 118 : 13-29 | மத். 28 : 1-10 |

## கிறிஸ்துவின் உயிர்ப்பு : மீட்பின் கொண்டாட்டம்

## Christ’s Resurrection : Celebration of Salvation

நீங்கள் விரைந்து சென்று, “இறந்த அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்” எனச் சீடருக்குக் கூறுங்கள் (மத். 28 : 7).

**இறைவேண்டல்**

*உயிர்த்தெழுந்த ஆண்டவரே! இம்மகிழ்வைக் கொண்டாடும் திருச்சபையில் பிரச்சன்னமாயிருப்பவரே! உயிர்த்தெழுதலின் இந்த மகிழ்வும், வெற்றியும் உந்தனின் விடுதலைக்கு நடத்தும் அன்பின் மகத்துவத்தையும், மாட்சியையும் வெளிப்படுத்தட்டும். நாங்களும் பொருளுணர்ந்து கொண்டாடி மகிழ உம் பேரருளைத் தர வேண்டுமென்று அன்புக்கும் தொழுகைக்கும், மாட்சிக்கும் உரிய ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழியாக வேண்டுகிறோம், ஆமென்.*

ஜப்பான் நாட்டிலே கிறிஸ்தவர்கள் கொன்று குவிக்கப்பட்ட காலம் அது. அருமையான சிறு குடும்பத்திலே தாய், தந்தை, சின்ன மகன். எதிரிகள் தங்களையும் கொல்ல வருகிறார்கள் என்பதை உணர்ந்து, தங்கள் ஒரே மகனையாவது காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கில் தாய் தந்தை இருவரும் மகனிடம், “நாங்கள் திரும்பி வரமுடியாத இடத்திற்குச் செல்கிறோம்; நீ பத்திரமாக இரு” என்று சொன்னபோது மகன் சொன்னான், “நீங்கள் மோட்சத்திற்குத்தானே செல்கிறீர்கள். நானும் உங்களுடன் மோட்சத்திற்கு வருகிறேன். இயேசுவுக்காக நானும் சாகத் தயார்” என்றான். விசுவாசத்துடன் மரணத்திற்குப் பயப்படாத அந்தக் குடும்பம் உயிர்ப்பின் மகிமையை அடைகிறது.

“கிறிஸ்துவின் உயிர்ப்பு : மீட்பின் கொண்டாட்டம்”. கொண்டாட்டம் எங்கே நடைபெறுகிறது என்றால் விழாக்களில்தான் நடைபெறுகிறது. விழாக்களைத்தான் கொண்டாடுகிறோம். அப்படியானால் கிறிஸ்துவின் உயிர்ப்பு மாபெரும் விழா. அதை நாம் கொண்டாடுகிறோம். இந்த உயிர்ப்பு விழாவை எப்படிக் கொண்டாடுகிறோம்? என்பதைவிட, ஏன் இந்த மீட்பின் கொண்டாட்டம்? என்று தியானிப்பது பொருத்தமாக இருக்கும்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு ஏன் மீட்பின் கொண்டாட்டம்? தீவிரவாதி ஒருவன், நான் கிறிஸ்தவர்களைக் கொல்பவன் "இந்தக் கோவிலில் கிறிஸ்தவ விசுவாசத்திற்காக உயிரைவிடத் தயாராக இருப்பவர்கள் எழுந்து வாருங்கள்" என்றான். சிலர் எழுந்து வந்தனர். அவர்களை கோயிலுக்கு வெளியே கூட்டி வந்தான். துப்பாக்கிச் சத்தம் கேட்டது. கோயிலுக்குள் இருந்த பலர் சத்தம் கேட்டு வெளியே ஓடிவந்தனர். அங்கே ஒருவர் கூட சாகவில்லை. அப்போது தீவிரவாதி போதகரிடம், "தங்கள் விசுவாசத்திற்காக உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்த இவர்களை மட்டும் கோவிலுக்குள் கூட்டிச்சென்று தொழுகையை நிறைவேற்றுங்கள். கடமைக்காகக் கோவிலுக்கு வரும் மற்றவர்கள் தங்கள் விசுவாசத்தில் நம்பிக்கை நம்பிக்கை வரும்வரை கோயிலுக்கு வெளியே நிற்கட்டும்" என்றான்.

வாழ்ந்துகாட்டாமல் பேசுவதைவிட, பேசாமல் வாழ்ந்து காட்டுவதே மேல். இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பு நாம் விசுவாசத்தில் வாழ்ந்துகாட்ட அழைக்கும் விசுவாசப்பெருவிழா. ஆகவே அது நம் மீட்பின் கொண்டாட்டம்.

**1) விசுவாசக் கொண்டாட்டம்** (கொலோ. 3 : 4)

இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு நம் விசுவாசத்தின் உயிர் மூச்சு.

"கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர், அவர் தோன்றும் பொழுது நீங்களும் அவரோடு மாட்சி பொருந்தியவராயத் தோன்றுவீர்கள்"

இந்தப் பற்றுறுதியைத் தருவதுதான் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு. ஆகவே இது விசுவாசப்பெருவிழா. பவுலார் உரோமைச் சபைக்கு எழுதும் போது "இயேசுவே ஆண்டவர் என வாயார அறிக்கையிட்டு, இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என நீங்கள் உள்ளூர விசுவாசித்தால் மீட்பு பெறுவீர்கள்" (உரோ. 10 : 9). என்று உயிர்த்த கிறிஸ்துவில் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்ய, விசுவாச அழைப்பு கொடுக்கின்றார். மேலும், "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருந்த விசுவாசமும் பொருளற்றதாகிவிடும்" (1 கொரி. 15 : 15) என்று முழங்குகிறார்.

இயேசுகிறிஸ்து மரித்த மூன்றாம் நாள் உலகை, பாவத்தை, சாவை வென்று வெற்றி வீரராக மாட்சியுடன் உயிர்த்தெழுந்தார். அதனால்தான் கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழாவை நாம் விசுவாசப் பெருவிழாவாகக் கொண்டாடி, கிறிஸ்துவைப் போல நாமும் **3)**





உயிர்ப்போம் என விசுவாசத்தை வளர்த்துக்கொண்டு, அறிக்கையிட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். "உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார். உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்" (யோவா. 11 : 25).

**2) விடுதலையின் கொண்டாட்டம்**

இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு விடுதலைப் பெருவிழா. ஆகவே அது நம் மீட்பின் கொண்டாட்டம்.

பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட இஸ்ராயேலர், மேற்கொண்ட விடுதலைப் பயணம், மீட்பின் கொண்டாட்டம். இந்தக் கொண்டாட்டத்தில் மோசேயும், இஸ்ரயேல் மக்களும் இணைந்து

"ஆண்டவரே என் ஆற்றல்;

அவரே என் விடுதலை;

என் கடவுள்.

அவரை நான் புகழ்ந்தேத்துவேன் (வி.ப. 15 : 2). என்று விடுதலைப்பாடல் பாடி விடுதலைப் பெருவிழாவைக் கொண்டாடுகின்றனர்.

உயிர்த்த கிறிஸ்து உடனடியாகக் கலிலேயா செல்லுகின்றார், "அவர் உங்களுக்கு முன்பாகக் கலிலேயாவுக்குப் போய்க் கொண்டிருக்கிறார் அவரை அங்கே காண்பீர்கள்" (மாற். 16 : 6-7). என்று தூதர்கள் பெண்களிடம் கூறினர். கலிலேயா என்பது யூதர்களின் பார்வையில் கலகக்காரர்களின் கோட்டை, புரட்சியாளர்களின் பூமி அதாவது பிரச்சனைக்குரியவர்கள் வாழ்ந்த இடம். நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வரமுடியுமோ (யோவான் 1 : 46) என நாத்தானுவேல் கேட்டார். இந்த நாசரேத் கலிலேயா பகுதியில்தான் உள்ளது. பிரச்சனைகளோடு அடிமைத்தனத்தில் வாழ்ந்து கொண்டிருந்த கலிலேயர்களோடு உயிர்த்த கிறிஸ்து இருப்பதால் அது அவர்களுக்கு விடுதலைப் பெருவிழா. அது அவர்களின் மீட்பின் கொண்டாட்டம்.

இன்றும் பல பிரச்சனைகளில் வாழுகிறவர்கள் நடுவில், அடிமைப்பட்டுக் கிடப்பவர்கள் மத்தியில், அடக்குமுறைக்கு ஆட்பட்டிருப்போர்களோடு உயிர்த்த கிறிஸ்து இருக்கிறார். இத்தகையோருக்குக் கிறிஸ்துவின் உயிர்ப்பு விடுதலைப்பெருவிழா. அது மீட்பின் கொண்டாட்டம்.

**வெளிச்சத்தின் கொண்டாட்டம்** (தி.பா. 118 : 27-28)

"ஆண்டவரே இறைவன் அவர் நம்மீது ஒளிந்துள்ளார்; இறைவனை கையிலேந்தி விழாவினைத் தொடங்குங்கள்; பீடத்தின் கொம்புகள் வரை பவனியாகச் செல்லுங்கள்; என் இறைவன் நீரே! உமக்கு நான் நன்றி செலுத்துகின்றேன்; என் கடவுளே! உம்மைப்புகழ்ந்தேத்துகின்றேன்.

இயேசு கிறிஸ்து சாவிலிருந்து வாழ்வுக்குக் கடந்த நிகழ்வு. அது வெளிச்சத்தின் பெருவிழா. ஆகவேதான் திருப்பாடல் ஆசிரியர், அவர் நம்மீது ஒளிந்துள்ளார் என்று பாடுகிறார். கிறிஸ்துவின் உயிர்ப்பு நம்மை இருளிலிருந்து ஒளிக்கும், பாவத்திலிருந்து புனிதத்திற்கும் அழைத்துச்செல்கிறது. முத்திரையிடப்பட்ட கல்லறை மிகுந்த எதிர்பார்ப்புடன் மூன்று நாள்களும் இருக்கிறது. எதிரிகள் ஆண்டவரின் உயிர்ப்பை எதிர்பார்க்கின்றனர் ஆனால் நண்பர்கள் என்றழைக்கப்பட்டவர்கள் உயிர்ப்பை எதிர்பார்க்காமல் பூட்டிய வீட்டிலே முடங்கிக் கிடக்கின்றனர். விசுவாசிகள், சந்தேகப்பேர்வழி ஆகின்றனர்; சந்தேகமடைந்தவர்கள் விசுவாசிகளாகின்றனர். ஆண்டவர் இயேசு தம் பாடுகளைப் பற்றிப் பேசிய போதெல்லாம் இவர்கள் மரணத்தைப்பற்றித்தான் நினைத்தார்களே தவிர, இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பை ஒருபோதும் நினைக்கவில்லை.

இயேசுகிறிஸ்து மரண இருளிலிருந்து நம்பிக்கையின்மையிலிருந்து உயிர்ப்பு என்னும் ஒளிக்கு மாட்சிநிறைந்த வாழ்வுக்கு நம்மை தொடர்ந்து அழைக்கும் பெருவிழாதான் கிறிஸ்தேசுவின் உயிர்ப்பு பெருவிழா.

எம்மாவுர் சீடர்களுடன் நடந்த உயிர்த்த இயேசு அவர்களுடன் உரையாடுகிறார். மெசியாவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு பற்றி விளக்குகிறார். சீடர்கள் அவர் இயேசுதான் எனப்புரிந்து கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் "வழியே அவர் நம்மோடு பேசி மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?" என்று பேசிக்கொண்டனர். இறைவார்த்தையில் உயிர்த்த இயேசு வாழ்கிறார்; பிரசன்னமாயிருக்கிறார் நம்மை ஒளிரச் செய்கிறார். அதுவே நம்முடைய மீட்பின் கொண்டாட்டம்.

மரம் சரியா ஏறத்தெரியாதவன் குருட்டுத் தைரியத்தோடு உயர்ந்த தென்னை மரத்துல ஏறி தேங்காய் பறித்துவிட்டு கீழே இறங்கலாம்னு கீழே பார்த்தான் அவன் தலை சுத்தியது நான் செத்தேன் என அழத் தொடங்கினான். அப்போ கீழே இருந்தவர்கள் பயப்படாதே நீ கீழே





பார்க்காமல் மேலேயே பார்த்துக்கொண்டு மரத்திலிருந்து இறங்கு என சொல்ல அவனும் மரத்தின் மேலேயே பார்த்துப் பத்திரமாய் இறங்கினான்.

பவுலார், "நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். இவ்வுலகத்தை சார்ந்தவற்றை அல்ல ... ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவோடு இறந்துவிட்டீர்கள் உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது. கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர். அவர் தோன்றும் பொழுது நீங்களும் அவரோடு மாட்சி பொருந்தியவராய்த் தோன்றுவீர்கள்" (கொலோ. 3 : 1-4)

மேலுலகுசார்ந்த சிந்தனையில் உயிர்த்த கிறிஸ்துவின் ஒளிபெற்று மீட்பினைக் கொண்டாடுவோம்.

**மகன்** : அம்மா இங்க பாருங்க பெரியதோர் இந்த தேள் கொட்டித்தானே அப்பா இறந்தார். இப்ப அது என்னை கொட்ட வருது.

**அம்மா** : பயப்படாதே! உன் அப்பாவை இந்தத் தேள் கொட்டியபோது, அதன் கொடுக்கு போயிடுச்சு. உன் அப்பா அதன் கொடுக்கைப் பிடிங்கிவிட்டார்கள். இந்தத் தேளால் எந்தத் தீங்கும் இல்லை.

கிறிஸ்து நமக்காக இறந்து உயிர்த்ததனால் சாவின் கொடுக்கை முறித்துவிட்டார்.

"சாவு முற்றிலும் ஒழிந்தது. வெற்றி கிடைத்தது. சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?" (1 கொரி. 15 : 54-55)

ஆம் இயேசு கிறிஸ்துவின் சிலுவைச் சாவால் சாவு இறந்தது. அவரின் உயிர்ப்பால் நித்திய வாழ்வு பிறந்தது. ஆகவே இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு

விசுவாசக் கொண்டாட்டம்

விடுதலையின் கொண்டாட்டம்

வெளிச்சத்தின் கொண்டாட்டம்

ஆகவே அது நமக்கு மீட்பின் கொண்டாட்டம். கடவுள் இந்தத் திருவார்த்தைகளினால் நம்மை நித்தியவாழ்வின் நிறைவுக்கு நேராக நடத்துவாராக.

**அருள்திரு. S.M. டேனியல் தேவதாசன்**

**07-04-2013** உயிர்ப்புக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு

செப். 3 : 14-20 உலக சுகாதார நாள் I கொரி. 15 : 1-11

தி.பா. 27 யோவா. 20 : 19-29

# கிறிஸ்துவே ஆண்டவர் என்பதை ஒப்புக்கொள்ளல்

# Acknowledgement of Christ as Lord

. . ."நீரே என ஆண்டவர்! நீரே என் கடவுள்!" யோவான். 20 : 28

**இறைவேண்டல்**

*உயிர்த்தெழுந்த ஆண்டவராகவும், சிலுவையில் மரணத்தை வென்றவராகவும் தம்மை வெளிப்படுத்திய எங்கள் ஆண்டவரே! நாங்களும் உம்மை ஆண்டவராகவும், எங்கள் கடவுளாகவும் அறிக்கையிடும் பற்றுறுதியை தந்து இவ்வுலகில் உமக்கு சான்றுகளாக வாழ்ந்து நிறைவாழ்வின் மேன்மையை சுதந்தரிக்க அருள்தர வேண்டுமென்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக பணிந்து வேண்டுகிறோம். ஆமென்.*

சாவை வென்று சாவாமையுள்ளவராய் என்றென்றும் மனுக்குலத்தின் மீட்பராக வெற்றியடைந்த இயேசு கிறிஸ்து திருக்காட்சி அளித்தார். பன்னிருவரில் யூதாஸ் தவறிவிட்டார். குழுமி இருந்த சீடர்கள் கூட்டத்தைவிட்டு தோமா வெளியே சென்றார். இயேசுவின் திருக்காட்சிக்குப்பின் தோமாவிடம் இயேசுவைக் கண்டோம் என்றார்கள். ஐயமுற்ற தோமா பற்றுறுதியில் பலப்பட, காயங்களைக் கண்டால் நம்புவதாக. உடன் சீடர்களிடம் சொன்னார். எல்லாவற்றையும் அறிகிறவர் தோமாவின் உணர்வையும் அறிந்தார். எட்டு நாட்களில் பூட்டப்பட்ட அறையில் உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்று வாழ்த்தி தோமாவிடம் "இதோ என் கைகள் இங்கே உன் விரலை இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்" என்றார். அழைப்பை நிறைவுபடுத்த முழுமையடைந்த தோமா நீரே என் ஆண்டவர் நீரே என் கடவுள் என்றார். திருந்தியவராய், திரு நிறைவு பெற்றவராய், திருத்தூதுவராய்த் திருப்பணிக்குத் தயாரானார்.

**1. திருக்காட்சியினால் திருந்தியவர்**

இறைப்பணியாற்ற அழைக்கப்பட்டு தெரிந்து கொள்ளப்பட்ட தோமா பற்றுறுதியில் உறுதியற்றவராக இயேசுவுடன் வாழ்ந்தார். நம்பிக்கையற்ற மனதுடைய நிலையே தோமாவுக்கு இருந்தது. இயேசு யூதேயாவில் மரித்த லாசருவை உயிர்ப்பிக்கச் சென்றபோது, சீடர்களுக்கு இது நம்பிக்கை தரும் என்பதற்காக அவர்களையும் உடன் அழைத்துச் சென்றார். தோமா பயந்து விரக்தியோடு (யோவா. 11 : 6) யூதேயாவில் இயேசுவுக்கு இருந்த எதிர்ப்பை நினைத்து அவரோடு கூட நாமும் மரிக்கும்படி போவோம் வாருங்கள் என்றார் யோவான் 14 : 5இல் குழப்பமடைந்தவராய் "ஆண்டவரே நீர் போகிற இடத்தை அறியோமே வழியை எப்படி அறிவோம்" என்றார். இயேசுவே வாழ்வும், வழியும், வாய்மையுமாய் இருக்கிறார் என்பதைப் புரியாதவராக இயேசுவோடு வாழ்ந்தார். நடந்தார். தோமாவின் வாழ்வில் உயிர்த்த இயேசுக்கிறிஸ்துவின் திருக்காட்சி பயனுள்ள, தைரியமுள்ள, அர்ப்பணமுள்ள இறைப்பணி செய்யத் தூண்டியது.

**2. திருக்காட்சியினால் திருநிறைவு**

செப். 3 : 17-இல் அவர் உன் பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார் என்பதனைத் திருக்காட்சியின் வழியாய்ச் சொந்தமாக்கிக்கொண்டார். பற்றுறுதி வாழ்வில் அலசடிப்பட்டு தொய்ந்து போன நேரங்கள் உண்டு. காயங்களைத் தேடினார். அதைச் சொந்தமாக்கிக் கொண்டார். உன்னத வல்லமை பெற்றார். 3½ ஆண்டுகள் திருப்பணியில் தாக்கம் அடையாதவரை திருக்காட்சியின் மகிமை கிறிஸ்துவுக்காக மரிக்கத் தூண்டியது. (மத். 8 : 26). பற்றுறுதியில் பலவீனமான சீடர்களிடம்அற்ப விசுவாசிகளே ஏன் பயப்பட்டீர்கள்? என்று கேட்ட இயேசு There is difference between accptance and decison. ஏற்றுக் கொள்வதற்கும் தீர்மானிப்பதற்கும் வேறுபாடு உண்டு. அழைப்பை ஏற்றுக்கொண்டவர் தீர்மானம் எடுத்து புதிய வாழ்வை அர்த்தமுடையதாக மாற்றினார்.

**3. திருக்காட்சியினால் திருத்தூதுவரானார்**

குந்தாபோரஸ் அனுப்பிய வியாபாரியுடன் கி.பி. 52-இல் கேரளாவில் கட்டுமானப் பணிக்காய் காலிக்கட்டில் கால்பதித்து கடினங்கள் பல கண்டு நற்செய்தியின் வழியாக ஏழைகள் வாழ்வில் வளம் ஏற்படுத்தி குந்தா போரசுக்கு நற்செய்தியை அறிவித்தார். யோவான் 14 : 2-இல் பிதாவின் வீட்டில் அனேக வாசஸ்தலங்கள் உண்டு என்பதனை முற்றிலும் நம்பி வாழ்வின் செயலில் வெளிப்படுத்தினார். திருக்காட்சியினால் என் ஆண்டவரே! என் கடவுளே! என அறிக்கையிட்டார். இயேசுவின் பிரதான கட்டளை நிறைவேற்றி கி.பி. 72-இல் சென்னையில் இரத்தம் சிந்தி இயேசுவுக்காக மரித்தார்.

கிறிஸ்துவே ஆண்டவர் என்பது வாழ்வில் அனுபவமானால் கிறிஸ்துவுக்காக வாழ்வது இலகுவானதாக மாறிவிடும். கிறிஸ்தவத்தின் அடிப்படை நம்பிக்கை. நம்பிக்கையின் காட்சியினால் பணியாற்ற நாம் அழைக்கப்படுகிறோம். தோமாவில் காணப்பட்ட நம்பிக்கைச் சிதைவுகள் நம்மில் மலராதபடி கிறிஸ்துவில், உடன் வாழும் மனுக்குலத்தைக் காணவேண்டும். இயேசுவின் பெயர் மகிமையடைய நாம் பெற்ற கிறிஸ்தவ அனுபவங்கள் அவருக்காய் வாழ நமக்குத் தூண்டுகோலாக அமையட்டும்.

**அருள்திரு. T. ஜாண் பீற்றர்**

**14-04-2013** உயிர்ப்புக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு

வி.ப. 13 : 17-22 எபி. 11 : 1-12

திபா. 91 லூக். 24 : 13-35

# கிறிஸ்துவுடன் பயணம் செய்தல்

## Journeying with Christ

. . . இயேசு நெருங்கி வந்து அவர்களோடு நடந்து சென்றார். (லூக். 24 : 15)

**இறைவேண்டல்**

*எங்கள் வாழ்வுப் பயணத்தில் எங்கள் உடன் நடக்கும் எங்கள் ஆண்டவரே! எம்மாவூர் சீடர்களோடு சென்று அவர்கள் கண்களைத் திறந்ததுபோல் உம் பிரசன்னத்தை உணரும்படி எங்கள் கண்களைத் திறந்தருள வேண்டுகிறோம். நிலையில்லா வாழ்வின் சூழல்கள் நடுவில் எங்களை ஆற்றல்படுத்தி, உமது பிரசன்னத்தால் ஊக்கப்படுத்தியருள வேண்டுமென்று எங்களோடு பயணிக்கும் இறைமைந்தர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம், ஆமென்.*

இயேசு நாதர் உயிர்த்தெழுந்த நாள் மாலை வேளையில் இயேசுவின் சீடர்கள் இருவர் எருசலேமிலிருந்து ஏறத்தாழ பதினொரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள எம்மாவு என்னும் கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்த போது உயிர்த்த இயேசு கிறிஸ்துவும் அவர்களுடன் இணைந்து பயணம் மேற்கொண்டார். அவர்களின் பயண அனுபவங்கள் குறித்து இவண் சிந்திப்போம்.

**1. குழப்பம் நிறைந்த பயணம்** (Journey with perplexity)

எருசலேமுக்குப் பயணித்த இயேசுவின் சீடர்கள் இருவரிடமும் கடுமையான விரக்தி தென்படுகிறது. ஆண்டவரிடம் எதனையோ எதிர்பார்த்து ஏமாந்து போயிருக்கிறார்கள். இஸ்ரயேலரை மீட்க உரோமையரிடம் போரிடுவார் என்று எதிர்பார்த்திருந்த நிலையில் தலைமைக் குருக்களும், ஆட்சியாளர்களும் மரண தண்டனை அளித்து இயேசுவைக் கொன்றதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. மூன்றரை ஆண்டுகள் அவரோடு பழகி, உண்டு, உறவாடிய அனைத்தும் வீணாகிப் போயினவே என்று விரக்தியோடு தங்கள் வீடுகளுக்குத் பற்றி





திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

இவர்கள் இருவருமே இவர்களைச் சேர்ந்த பெண்களின் உயிர்த்த ஆண்டவர் உயிர்த்த அனுபவத்தையும், அவர்களோடு இருந்தவர்களின் உயிர்த்த அனுபவத்ததையும் அறிந்திருக்கிறார்கள். ஆனாலும் உயிர்த்த ஆண்டவரை நம்புவதில் தயக்கமும், தடுமாற்றமும் கொண்டிருக்கின்றனர். சந்தேகம் அவர்களை ஆட்கொண்டிருக்கிறது (லூக். 24 : 21-24). அவர்கள் எதிர்பார்த்த முறையில் கடவுளின் மீட்புச் செயல் நிகழாதது அவர்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியது. கடவுளின் செயல்பாட்டிற்கு நம்மை ஒப்படைக்கத் தயங்குவதும், நாம் விரும்புகிறபடி கடவுளின் செயல்பாட்டை எதிர்பார்ப்பதும் விசுவாசத்தின் அரைகுறை நிலை ஆகும். சுருக்கமாகக் கூறின் சிலுவைப் பாடுகள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் வழியாகக் கடவுள் அவர்களுக்கு வழங்கிய மீட்பை அவர்கள் சரிவரப் புரிந்துகொள்ளாமையே அவர்களின் குழப்பத்திற்கு அடிப்படைக் காரணம் ஆகும். எனவே தான் இயேசு அவர்களை 'அறிவிலிகளே - Foolish ones' (வ. 25) என அழைக்கிறார். இறைவாக்கினர் உரைத்த வார்த்தைகளை நம்ப இயலாமையே உங்கள் குழப்பத்திற்கான காரணம் என இயேசு அவர்களை அதட்டுகிறார். குழப்பம் அகல கடவுளிலும் அவர் வார்த்தைகளிலும் சிந்தனைத் தெளிவு தேவை என இயேசு அறிவுறுத்துகிறார். எந்தச் சூழ்நிலை ஏற்படினும் தீமையின் மேலும், பாவத்தின் மேலும் அதிகாரம் படைத்த ஆண்டவருடனே நாம் பயணிக்கிறோம் என்னும் அனுபவமே நம் குழப்பங்களை அகற்றும் ஆற்றல் கொண்டது.

**2. தெளிவை ஏற்படுத்திய பயணம்** (Journey with clarity)

தெளிவற்றவர்களாய் எம்மாவூருக்குப் பயணித்துக் கொண்டிருந்த சீடர்களுடன் இயேசு நெருங்கி வந்து அவர்களுடன் நல்லுறவு கொள்கின்றார். வழிநெடுகிலும் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டிருப்பது என்ன என்று வினவுகிறார். இங்குதான் இயேசுவின் பேரன்பைக் கண்டுகொள்ளவேண்டும். அவர்களின் குழப்பத்தைத் தீர்க்க அவர்களோடு ஒருவராக ஆண்டவர் நடந்து வருகிறார் (வ. 15, 17). "அறிவிலிகளே" என்று ஆண்டவர் கூறிய போது அவர்கள் திகிலடைந்திருப்பார்கள். ஆனாலும் திறந்த மனதுடன் அவருக்குச் செவி சாய்க்கிறார்கள். ஆர்வம் குன்றாமல் அவர் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதைக் கேட்கிறார்கள். தம்மைக் குறித்து எழுதப்பட்ட யாவற்றையும் அவர் விளக்கியபொழுது அவர்களின் கண்கள் மட்டுமல்ல உள்ளங்களும் திறக்கப்படுகிறது. இயேசு அவர்களின் உள்ளங்களைப்

எரியச் செய்துவிட்ட பின்னர் அவர்களின் உணர்வுகளை மதித்து அவர்கள் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்கிறார். அவர் வலிந்து தம்மை ஒருபோதும் திணிக்கவில்லை. அதற்கு அப்பால் போகிறவர் போலக் காட்டிக் கொண்டார். இப்போதுதான் சீடர்கள் இருவரும் எங்களோடு தங்கும் என்று தங்களுடைய ஏற்பை தெரிவிக்கின்றனர். இறை வார்த்தை முடிந்தவுடன் எல்லோருக்கும் உரிய சமபந்தி விருந்தில் இயேசுவை அவர்கள் அடையாளம் கண்டு கொண்டனர். அச்சம் அகன்று அவரில் விசுவாசம் கொள்கின்றனர்.

**3. நம்பிக்கை ஏற்படுத்திய பயணம்** (Journey with Confidence)

பற்றி எரிந்த உள்ளம் பற்றுக் கொண்டது. விழிகள் திறந்ததால் வழிகளும் மாறுகின்றன. சிறிதளவு நேரத்தையும் அவர்கள் வீணடிக்கவில்லை. எந்த எருசலேமை விட்டுப் புறப்பட்டுச் சென்றார்களோ அதே எருசலேமுக்குத் திரும்பி வருகிறார்கள்.

எம்மாவூர் என்பது தப்பிப் பிழைப்பதற்கான பாதை. ஆனால் எருசலேம் என்பது இரத்தம் சிந்துவதற்கான களம். இயேசுவின் உயிர்ப்புக்குச் சான்று தேவைப்பட்டால் அவருக்காக இரத்தம் சிந்த இந்த எருசலேம் அழைப்பு விடுக்கிறது. உயிருக்குப் பயந்து வீட்டிற்கு ஓடுகின்றவர்கள் உயிரைப் பணயம் வைத்து உயிர்த்த ஆண்டவரை அறிவிக்க ஓடோடி வருகிறார்கள். ஆம்! ஆண்டவரை நாம் அனுபவிக்காதது வரை அவர் நம் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டவராகவே தோன்றுவார். அவரை அனுபவித்த பிறகு அனைத்திலும், அனைவரிலும் அவரைக் கண்டுகொள்ள முடியும். முகவாட்டம் மறைந்து போகும். நற்கருணையும், இறைவார்த்தையும் இயேசுவைக் கண்டறிய உதவும் அருட்சாதனங்கள். ஐக்கியமானால் அச்சம் மறைந்து போகும்.

பயணிகள் இருவர் காட்டின் வழியே பயணம் புறப்பட்டனர். ஒருவர் விளக்கு வைத்திருந்தார். மற்றவரிடம் விளக்கு இல்லை. அந்த விளக்கின் வெளிச்சத்தில் இருவரும் நடந்து சென்றனர். இருவரும் பிரிய வேண்டிய இடம் வந்தது. விளக்கு வைத்திருந்தவர் விளக்கோடு தன் வழியே பிரிந்து சென்றார். விளக்கில்லாதவரைச் சுற்றி பேரிருள் சூழ்ந்தது. அவர் தொடர்ந்து நடக்க முடியாமல் திகைத்து நின்று விட்டார். ஆண்டவரே நம் வழிகாட்டி. ஞானப் பாதையில் குறிப்பிட்ட தூரம் வரைதான் குரு வழிகாட்டி நடக்கமுடியும். அதற்கு மேல் சீடர்கள் தனியாகத்தான் போக வேண்டியிருக்கும்.

**அருள்திரு. எஸ். ஜாண் சகாயம்**



**21-04-2013** உயிர்ப்புக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு

எசா 60 : 19 20 — 1 யோவா 1 : 1 - 7

திபா. 43 — யோவா 8 : 12 - 20

## இருளிலிருந்திருந்து ஒளிக்கு நேராய் நடத்தல்
## Leading from Darkness to Light

என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார் (யோவா 8:12)

**இறைவேண்டல்**

*இருளிலிருந்து ஒளிக்கற்றையை படைத்த கடவுளே, உண்மை ஒளியாக, இயேசுவை விண்ணிலிருந்து தந்தவரே, இருளின் ஆதிக்கத்தினின்று திருச்சபையை ஒளிக்கு நடத்தி அதை ஒளிரச் செய்வது போல நாங்களும் இருளின் ஆற்றல்களிலிருந்து விடுவிக்கப்பட்டு சுடரொளியால் மிளிர்ந்திட ஆற்றல் படுத்திய ஒளியாய் உலகில் வந்த இயேசு கிறிஸ்துவில் வேண்டுகிறோம். ஆமென்.*

கிரேக்க சூழலில் வாழும் கிறிஸ்தவர்களுக்கு ஒளி - இருள், நன்மை - தீமை, மாமிசம் - ஆவி போன்ற இருமைக் கோட்பாட்டிற்குள் இருக்கின்ற மெய்யியல் சிந்தனைகள் மிகக் குழப்பமாக இருந்தது. அத்தகையோரை கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்த யோவான் நற்செய்தியாளர் இயேசு கிறிஸ்துவை உலகின் உண்மையான ஒளியாக விளக்குகிறார். நற்செய்தி நூலின் துவக்கத்திலே அந்த உயிர் மனிதனுக்கு ஒளியாக இருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது. அதைப் பற்றிக் கொள்ளவில்லை (யோ. 1 : 1-5) கிரேக்கர்களின் இருமைக் கோட்பாட்டிற்கு அப்பால் சென்று ஒளியை இருள் மேற்கொள்ள முடியாது. அந்த ஒளி இயேசு கிறிஸ்து எனத் தெளிவாக யோவான் தனது இறையியல் சிந்தனையை அமைக்கிறார். யோவானின் ஒளியின் இறையியல் கருத்துக்களைச் சிந்தனை செய்வது அவசியம்.

தாய்ச் சொல் கேளாத மகன் தீய நண்பர்களோடு வெகு தொலைவில் சென்றுவிட்டான். தன்னைப் பிரிந்த மகனின் வருகைக்காக தாய் இரவு நேரங்களில் விளக்கு ஒன்றில் ஒளி ஏற்றி நீண்ட காலம் காத்திருந்தார். மகன் ஒரு நாள் இரவு தன் இல்லம் நோக்கி வந்தான். நீண்ட காலம் கழிந்து வருவதால் அவனுக்குப் பாதையில் தடுமாற்றம் ஏற்பட்டது. தன் வீட்டிற்குச் செல்லும் பாதை தவறிவிட்டது. ஆனால் குடிசை வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருப்பதைக் கண்டு அந்த

ஒளிக்கு நேராகச் சென்றான். அந்த வீடு அவனுடைய வீடு, வீட்டிலிருக்கும் விளக்கின் அருகில் படுத்த வண்ணம் அவன் தாய் இறந்து கிடந்தா. தாய் உயிர் உடன் இல்லாவிட்டாலும், தாயின் நோக்கம் நிறைவேறியது. மகன் தன் வீட்டைக் கண்டுபிடிக்க அந்த ஒளிவிளக்கு உதவியது. தன் வீட்டில் வைக்கப்பட்டிருந்த விளக்கு அவனுக்கு வழிகாட்டடியது மட்டுமல்ல, அவனது வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. தாயின் அன்பிற்கு இணையாக எதையும் வைக்க முடியாது எனச் சாட்சி பகரும் வாழ்க்கைக்குச் சொந்தமானார். தாயின் அன்பை பிறருக்குச் சாட்சி பகிர்ந்தார். நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் இறையன்பிற்கு நேராக மனித குலத்தை வழிநடத்த ஒளியாக எரிந்து பிரகாசித்தார். அந்த ஒளியைக் குறித்து பின் வரும் ஆன்மிக உண்மைகளின் அடிப்படையில் தியானம் செய்யலாம்.

## 1. ஒளியைப் பெற்று வாழுதல் (யோவா. 1:9)

கிரேக்கச் சூழலில் வாழ்ந்த மக்களுக்கு ஒளி ஒரு கருத்துப் பொருளாகயிருந்தது. ஆனால் கிரேக்கச் சூழலில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு ஒளி கருப்பொருளாக அமைய இயேசு கிறிஸ்துவை ஒளியாகக் காட்டுகிறார் யோவான். இயேசுவாகிய ஒளி திடீரென தோன்றியதல்ல மாறாக துவக்கத்திலே இறைவனோடு படைப்பிலிருந்தது. வார்த்தையாக இயேசு கிறிஸ்து மனிதருக்கு ஒளியாக வந்தார். இயேசுவாகிய ஒளி மக்களிடையே குடிகொண்டு இருக்கும் ஒளியாகும். உலகிலிருக்கும் இயேசுவாகிய ஒளி எந்த மனிதனையும் உலகில் ஒளி கொடுக்க செய்ய முடியும். வாழ்வில் ஒளி இழந்த மக்களுக்கு இயேசு ஒளியாக விளங்கினார். ஆகவே அவர் நானே உலகிற்கு ஒளி என்று குறிப்பிட்டார். (யோ. 8 : 12) இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்பவர்கள் ஒளியின் பிள்ளைகளாக வாழ்வார்கள் எனப் பவுலார் கூறுகிறார். ஏசாயா தீர்க்கர் எழும்பிப் பிரகாசி, உன் ஒளி வந்தது. கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது எனக் குறிப்பிடுகிறார் (ஏசா. 60 : 1). ஆக இயேசுவாகிய ஒளியை பெறாமல் நாம் ஒளிகொடுக்கமுடியாது. அதாவது சூரியன் ஒளியை பெறாமல் சந்திரன் ஒளிகொடுக்கமுடியாது. நாமும் இயேசுவின் ஒளியைப் பெற்று வாழுவோம்.

## 2. ஒளிகொடுத்து வாழுதல் (மத். 5 : 14)

இயேசு கிறிஸ்து உலகிற்கு ஒளியாக வந்தார். இயேசு கிறிஸ்துவிடமிருந்து ஒளியைப்பெற்று ஒளியின் பிள்ளைகளாக நாம் வாழவேண்டும் ஒளியின் பிள்ளைகளாக வாழுகிறவர்கள் பிறருக்கு ஒளி கொடுத்து வாழவேண்டும். நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து மலைப்பிரசங்கத்தின் போது ஒளியாக, உப்பாக பிறருக்கு வாழவேண்டும் எனக் குறிப்பிட்டார். ஒளி கொடுத்து வாழுகிறவர்கள் மலையின் மேல் இருக்கிற பட்டணத்திற்கு இணையானவர்கள்.





ஒருவரும் விளக்கைக் கொழுத்தி விளக்குத் தண்டின் மேல் வைக்காமல் பாத்திரத்தால் மூடி வைக்கமாட்டார்கள். விளக்குத் தண்டின் மேல் வைத்தால் வீட்டிலிருக்கும் எல்லோருக்கும் ஒளிகொடுக்கும். அதுபோல ஒளியைப் பெற்று வாழும் நாம் பிறருக்கு ஒளிகொடுத்து வாழவேண்டும். மெழுகுவர்த்தி தன்னைக் கரைத்து பிறருக்கு ஒளிகொடுப்பது போல நாமும் பிறருக்கு ஒளி கொடுக்க நம்மை நாமே தியாகம் செய்ய வேண்டும் நமது ஆண்டவர் இயேசு பிறர் வாழுவதற்காக தம்மைத் தாமே தியாக பலியாக ஒப்புக் கொடுத்தார். பிறர் வாழ வேண்டுமெனில் நான் சாக வேண்டும் என்ற பாடல் வரிகள் நாம் பிறருக்கு ஒளி கொடுத்து வாழ அழைக்கின்றன.

## 3. ஒளிக்குச் சாட்சியாக வாழுதல் (யோ. 1 : 7)

இயேசு கிறிஸ்து ஒளியாக உலகிற்கு வந்தார். அவரின் ஒளியைப் பெற்று வாழுபவர்கள் பிறருக்கும் ஒளி கொடுத்து வாழ வேண்டும். நம்மை ஒளியூட்டி வாழ்வாக்கும் இறைவனுக்கு நாம் சாட்சிகளாக மாறவேண்டும். முழுக்கு முனிவர் யோவான் ஒளியாகிய இயேசுவிற்குச் சாட்சிபகரும்படியாக இந்த உலகிற்கு வந்தார் (யோ. 1 : 7) யோவானின் வாழ்க்கை இயேசு யோவானைக் குறித்து சாட்சி பகரும் அளவிற்குச் சிறப்பானதாக அமைந்தது. ஒருமுறை இயேசு பெண்களில் பிறந்தவர்களில் யோவானைவிட பெரியவன் ஒருவருமில்லை எனப் குறிப்பிட்டார். (யோ. 11: 11; யோவா. 5 : 35). ஆகவே ஒளிக்குச் சாட்சி பகருகிறவர்களாக ஒளியாகிய இயேசு அவர்களைக் குறித்து சாட்சி பகருவார் என்ற உண்மை இங்கு வெளிப்படுகிறது.

இருளில் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வுலக மக்களாக ஒளிக்கு நேராக வழி நடத்த திருச்சபை ஒளியாக, உப்பாக விளங்க வேண்டும். திருச்சபை ஒளியாக விளங்க வேண்டுமாயின் யோவான் குறிப்பிடும் ஒளியின் இறையியல் சிந்தனையைக் கடைபிடிக்கவேண்டும். இறை ஒளி கொடுத்து, ஒளியின் பிள்ளைகளாய் பகலில் நடக்கிறவர்கள் போல நடந்து உலகிற்குச் சாட்சிகளாவோம். இயேசுவாகிய ஒளி நம் இதயங்களில் வரும்போது இருள் அகன்றுவிடும். இயேசுவாகிய ஒளி நம் இதயங்களில் வரும்போது சமூகத் தீமைகள் அகன்றுவிடும். இயேசு உலகிற்கு ஒளியாக இருப்பதால் உலகின் இருள் அகன்று நாம் ஒளிக்கு நேராகச் செல்லமுடியும். ஆமென்.

**அருள்திரு. எ. கென்றிதாஸ்**

**28-04-2013** உயிர்ப்புக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு

| | |
|---|---|
| தொநூ. 2 : 4-9 | திவெ. 22 : 1-7 |
| திபா. 36 : 5-12 | யோவா 6 : 35-40 |

# இயேசுவே வாழ்வின் ஆண்டவர்
## Jesus, the Lord of Life

"வாழ்வு தரும் உணவு நானே" (யோவா. 6 : 35)

**இறைவேண்டல்**

*உலகின் வாழ்வை உருவாக்கியவரும், வாழ்வின் ஆதாரமுமான கடவுளே! தம் திருமகன் இயேசுவை படைப்பின் உண்மை வாழ்வாக உலகத்தில் அனுப்பியவரே! நாங்கள் அவரை எங்கள் வாழ்வின் ஆண்டவராக ஏற்று முழுப் படைப்பும் அவரை ஏற்று உண்மை வாழ்வில் பங்கேற்பு தர, வாழும் ஆண்டவருக்கு நாங்கள் சான்றாய் வாழ அருள்தர வேண்டுமென்று வாழ்வின் ஊற்றாம் கிறிஸ்து இயேசுவின் வழியாக வேண்டுகிறோம். ஆமென்*

மனிதனின் வாழ்வில் அடிப்படைத் தேவையானது உணவு. நாம் வாழும் உலகில் பட்டினியால் ஒருவேளை உணவுக்காய் அலைந்து திரிகிற மக்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மனிதனின் அடிப்படைத் தேவையான உணவு சந்திக்கப்படவில்லையென்றால் வாழ்வு சார்ந்த பல அடிப்படைப் பணிகளும் பாதிக்கப்படுகின்றன. நம் நாட்டில் உணவுக் கிடங்குகள் சரியாகக் கவனிக்கப்படாததால் தானியங்கள் கெட்டுப்போய் வீணாகிறது. ஆடம்பர விழாக்களில் தேவைக்கு அதிகமான உணவுகள் அழிக்கப்படுகின்றன. நம்முடைய வீடுகளிலும் அதிக உணவுகளை விரயம் செய்கிறோம். பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுங்கள் (எசா. 58:7) என்பதை இன்றும் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் நம் கடவுள் பாலைநிலத்தில் விடுதலைப் பயணத்தில் தம் மக்களான இஸ்ரயேலருக்கு அப்பத்தைக் (மன்னா) கொடுத்து அவர்களுக்கு உணவூட்டினார் (யாத். 16 : 15). அவர்களைப் பாலை பயணத்தில் உணவுக்கான தாழ்ச்சி ஏற்பட்டு விடாமல் வழிநடத்தினார். நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்து பசியாய் இருந்த மக்களைப் பார்த்து பரிவுகொண்டார். (மாற். 8 : 1-3). உணவு, உடல் சோர்வை மாற்றுவது மட்டுமல்ல உறவையும் வலுப்படுத்தும்.

1. **உறவை வலுப்படுத்தும் உணவு** (யோவா. 6 : 35)

மனிதனைப் படைத்த இறைவன் அவன் அடிப்படைத் இன்று





தேவையான உணவைப் பெற்றுக்கொள்வதற்காக ஏதேனில் ஒரு தோட்டத்தை அமைத்தார். அதைப் பயன்பாட்டிற்குரியதாக முறைப்படுத்த தாம் உருவாக்கின மனிதனையும் அங்கு வைத்தார். உண்பதற்குச் சுவையான எல்லாவகையான கனிதரும் மரங்களையும் வைத்தார் (தொநூ. 2 : 8-9). ஆனால் கடவுளின் விருப்பத்திற்கு எதிரான நிலை, கீழ்ப்படியாமை, கணவன், மனைவி (ஆதாம், ஏவாள்) சேர்ந்து முடிவெடுக்காமை இவற்றால் தோட்டத்தை விட்டு வெளியேற்றப்படவும், உணவுக்காக உழைத்தாலும் முழு பலனையும் அடையாமையும், ஏற்பட்டது. மட்டுமல்ல கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவும் துண்டிக்கப்படுகிறது. உறவு முறிவால் இறைவனின் ஆசீர்வாதம், பராமரிப்பு வாழ்வின் நன்மை இவைகளை இழந்துவிடுகிறான். ஆனால் மனிதன் இழந்த உறவை மீண்டும் பெற கடவுள் தன் குமாரன் இயேசு கிறிஸ்துவை விண்ணிலிருந்து வாழ்வுதரும் உணவாக அனுப்பினார். (யோ. 6 : 33). இஸ்ரயேல் மக்கள் பாலைப் பயணத்தில் உணவுக்காக முறுமுறுக்கவும், முறையிடவும் செய்கிறார்கள். மோசே மக்களின் உணவு பற்றாக்குறையைக் கடவுளிடம் முறையிடுகிறார். ஆகவே கடவுள் அவர்களுக்கு வானத்திலிருந்து அப்பத்தைப் பொழியப் போகிறேன் (வி.ப. 16 : 4) என்கிறார். வானத்திலிருந்து தரப்பட்ட மன்னாவைச் சேகரித்து மோசே மக்களை நோக்கி ஆண்டவர் உங்களுக்கு உணவாகத் தந்த அப்பம் இதுவே (வி.ப. 16 : 15) என்றார். கடவுள் இயேசு கிறிஸ்துவை வானத்தின் உணவாகப் புதிய இஸ்ரயேலராகிய நமக்குத் தந்து உறவை வலுப்படுத்துகிறார். உறவு உணவின் மூலம் வலுப்பட வேண்டும். நம்முடைய குடும்ப நிகழ்வுகளில் உணவு உறவுக்கு முக்கியமாகிறது. நாம் அனுதினமும் உண்ணும் உணவு இறைவன் நமக்கு வாழ்வதற்குக் கொடுத்த உணவு மட்டுமல்ல. இறைவனோடு உறவை வலுப்படுத்தவும் தரப்பட்டது என்பதை உணர்தல் வேண்டும்.

2. **உன்னத உறவில் ஊன்றச் செய்யும் உணவு** (யோவா. 6 : 38)

கடவுளுக்கும், மனிதனுக்கும் உள்ள உறவு மிக முக்கியமானது. உறவுக்கு அடிப்படை அன்பு. கடவுளின் அன்பு (யோ. 3 : 16) மனிதனில் வெளிப்படுகிறது. இயேசுநாதர் தம் முதல் அரும் அடையாளத்தைக் கலிலேயாவிலுள்ள கானாவில் நடைபெற்ற திருமணத்தில் நிறைவேற்றினார். தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றி நம்பிக்கையின் உறவு நிலையை ஏற்படுத்தினார் (யோ. 2 : 1-11). தம் திருப்பணியில் உணவு சார்ந்த அற்புதங்கள் 5 அப்பம் 2 மீன், சீடர்களுடன் உணவைப் பகிர்தல், உயிர்த்தெழுந்தபின் கடற்கரையில் சீடர்களைச் சந்தித்தல் (மாற். 16 : 4) இவைகள் இயேசுவோடு உள்ள உறவைப் புதுப்பித்தலும் அன்பு கொள்வதுமாக அமைகிறது. உணவு உயிர் வாழ்வதற்கு முக்கியமானது. மட்டுமல்ல உயிரை வழங்கும் உன்னதரோடுள்ள உறவையும் வலுப்படுத்துகிறது. இயேசுநாதர் பாலை நிலத்தில் பசி உண்டானபோது சோதனைக்காரனால் சோதிக்கப்படும்போது கற்களை அப்பங்களாக மாற்றி சாப்பிடும் என்றபோது மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல மாறாக கடவுளின் வாய்ச் சொல் ஒவ்வொன்றிலும் வாழ்வார் (மத். 4 : 4) எனப் பதில் தருகிறார்.

மனிதர்கள் உயிர் வாழ தன் வருங்காலத் தலைமுறை செல்வத்துடன் வாழ தவறான வழிமுறைகளைக் கையாளுகின்றனர். அதுவே வாழ்வு தடம் புரள காரணமாகவும் அமைகிறது. ஆகவே இறைமக்கள் இறைவார்த்தையின்படி இறை உறவை வளர்க்க முன்வர வேண்டும். இறைவாக்கு தேனிலும், தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் சுவையானது. கடவுளின் வாக்கை உன்னத உறவில் நம்மை ஊன்றும் உணவாக ஏற்றுக்கொள்ள வேண்டும். என்னை அனுப்பியவரின் விருப்பம் நிறைவேற்றவே வந்தேன் என்று குறிப்பிடும் இயேசு நாதரில் (யோவா. 6 : 38) நாமும் இணைந்து இறைவிருப்பத்தை நிறைவேற்ற நம்மில் மாற்றம் பெறுவது தேவையானதாகும்.

**3. உறுதியான நம்பிக்கையை வெளிப்படுத்தும் உணவு** (யோவா. 6 : 40)

கிறிஸ்தவ வாழ்வின் நம்பிக்கை நிலை வாழ்வு பெறவேண்டும் என்பதே. இயேசு கிறிஸ்து தமது இறுதி பாஸ்கா விருந்தில் இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் என் உடல் இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்றார் (லூக். 22 : 19). நாம் திருவிருந்தில் பங்குபெறும் போதும் அப்பத்தைக் கையில் பெற்றுக்கொள்ளும் போதும் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அவரது வருகை, நிலை வாழ்வு இவைகளை நம்புகிறேன் என்ற உறுதியை வெளிப்படுத்துகிறோம். திருமைந்தர் இயேசுகிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெற வேண்டும் என்பதே என் தந்தையின் திருவுளம் (யோ. 6 : 40) என இயேசுநாதரும் தெளிவாகக் கூறினார். இந்த எதிர்நோக்கை நாம் அவரது உடல் உணவு சார்ந்ததாகப் புரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய நிலை வாழ்வின் நம்பிக்கையை நம் வாழ்வில் உணவின் வழியாக வெளிப்படுத்த வேண்டும். பசித்தோருக்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பது நான் விரும்பும் நோன்பு (எசா. 58 : 7) என்றும் நான் பசியாயிருந்தேன் நீங்கள் உணவு கொடுத்தீர்கள் (மத். 25 : 35) என்றும் ஆண்டவரின் அங்கீகாரம் நம் ஆன்மிக வாழ்வில் வெளிப்பட வேண்டும். யாக்கோபு தன் சகோதரரான ஏசாவுக்கு அப்பமும், கொஞ்சம் பயிற்றங்கூழும் கொடுத்து தலைமகன் உரிமையைப் (தொ.நூ. 25 : 30-34) பறித்துக் கொள்கிறார். இதன் விளைவு உறவினில் சிதைவு ஏற்படுகிறது.

உணவு உறவைச் சிதைக்காமல் பார்க்க வேண்டும். ஒரே தாயின் பிள்ளைகள் உணவுக்காக உறவை இழந்து எதிரிகளாய் மாறியதைப் போல (தொ.நூ. 27 : 41, 42) நாம் நடந்து கொள்ளக்கூடாது. நம்முடைய வாழ்வின் நம்பிக்கை என்றைக்கும் நாம் ஏற்கும் உணவில் வெளிப்பட வேண்டும். அதற்கு உயிர் மூச்சாக இருக்கும் இறையவரில் நமது ஒப்படைப்பை உறுதிப்படுத்துவோம். ஏனெனில் உணவுக்குரிய செயல்பாட்டிலும், உழைப்பிலும் நம்மை ஆற்றல்படுத்தி, ஆரோக்கியப்படுத்தி, ஆசி வழங்குபவர் அவரே. அவரில் சார்ந்து நிலை வாழ்வின் உணவுக்கான பயணத்தைத் தொடருவோம்.

அருள்திரு. R. சாம் கிறிஸ்டோபர்



| 05-05-2013 | உயிர்ப்புக்குப் பின்வரும் 5-ஆம் ஞாயிறு |
|---|---|

எசேக். 34 : 11-16 எபி. 13 : 7-21
திபா. 23 யோவா. 10 : 1-11

# கடவுளின் மக்களை மேய்த்தல்
# Shepherding the People of God

"நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்" யோவா. 10 : 11

**இறைவேண்டல்**

*நல்ல ஆயராய் படைப்பு அனைத்தையும் வழிநடத்தும் கடவுளே! உம்மை பராமரிக்கிறீர் ஆண்டவராக படைப்பனைத்திற்கும் வெளிப்படுத்தியிருக்கிறீர் போற்றுகிறோம். திருச்சபை உமது அன்பைத் ஆயர் பணி மூலம் வெளிப்படுத்தவும், இப்பணியில் பங்கேற்கும் அனைவரையும் உம் தூய ஆவியாரோடும் வாழ்ந்து ஆட்சி புரியும் நல் ஆயராம் இயேசு கிறிஸ்துவின் வழியாய் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.*

அமெரிக்காவின் 16-ஆம் குடியரசுத் தலைவராகப் பணி செய்து படுகொலை செய்யப்பட்டவர் ஆபிரகாம் லிங்கன். ஒருமுறை நாடாளுமன்ற உறுப்பினர் டானியல் வூர்கிஸ் ஆபிரகாம் லிங்கனிடம் ஐயா நீங்கள் தொடங்கிய சிவப்பு இந்தியர் முன்னேற்றச் சங்கத்திற்கு உண்மையான தலைவர் இருக்கிறாரா? என்று கேட்டார். அதற்குப் மறுமொழியாக ஆபிரகாம் லிங்கன் கூறும்போது 18 நூற்றாண்டுகளுக்கு முன் ஒருவர் இருந்தார். அவரைச் சிலுவையில் அறைந்து விட்டனர் என்றார். ஆண்டவர் இயேசுகிறிஸ்து நல்ல மேய்ப்பராக, தலைவராக இவ்வுலகில் வந்தார்.

பழங்கால மத்திய கிழக்கு நாடுகளில் மேய்ப்புத் தொழில் சிறப்புக்குரியதாய் இருந்தது. ஆடு மேய்க்கும் தொழில் செய்து வந்த இஸ்ராயேல் மக்கள் அத்தொழில் சார்ந்து கடவுளை மேய்ப்பராகப் புரிந்து கொண்டனர். இஸ்ராயேல் மக்கள் மந்தை எனவும் (சங். 79 : 13, 2 சாமு. 24 : 17, எரே. 13 : 17) கடவுள் மேய்ப்பர் எனவும் (எசா. 40 : 11, எரே. 31 : 10, சங். 23 : 1) குறிப்பிடப்பட்டுள்ளனர். இயேசுகிறிஸ்துவுக்கு முன் வந்த தலைவர்கள் கூலிக்கு மேய்ப்பராக இருந்தனரேயன்றி

ஆடுகளுக்காகக் கவலைப்படவில்லை. எனவே, எசேக். 34 : 11-16 வரையுள்ள வசனங்களில் கடவுள் தம்மை மேய்ப்பராக வெளிப்படுத்தி மக்களை நீதியுடன் மேய்க்கப் போவதாக வாக்குக் கொடுக்கிறார். கடவுளின் மகனாகிய இயேசுகிறிஸ்து இவ்வாக்கினை நிறைவு செய்கிறவராய் ஆடுகளுக்கு “நல்ல” ஆயனாகத் தன்னை வெளிப்படுத்துகிறவராக உலகினில் வந்தார் (யோவா. 10 : 11). இங்கு Sp X Gu ß ùTôÚs RÚm ¡ úWdLf ùNôp ‘a ôùXôv ’ καλος என்பதாகும். இச்சொல்லை நல்ல என்றும் உண்மையான என்றும் மொழி பெயர்க்கலாம். இயேசுகிறிஸ்துவை “நல்ல ஆயர்” என்று புரிந்து கொள்வதை விட உண்மையான ஆயர் என்று பொருள் கொள்வது சிறப்புமிக்கது. இவ்வுலகில் கடவுளின் மக்களும் உண்மையான ஆயராகச் செயல்பட வேண்டுமென்பதே ஆண்டவரின் திருவுளம். உண்மையான ஆயனுக்கு வாழ்வில் இருக்க வேண்டிய சிறப்புப் பண்புகள் எவை?

1. **அறிந்திருத்தல்** : (யோவான் 10 : 3)

ஆயர் ஆடுகளைக் குறித்து நன்கு அறிந்திருத்தல் வேண்டும். பெயர் சொல்லி அழைக்கும் நிலைக்கு உண்மையான ஆயர் இருக்கிறார் மக்களின் குடும்பச் சூழல்; பொருளாதாரப் பின்னணியம், சமூக, அரசியல் நிலைகளைக் குறித்தும் ஆயர் அறிந்திருக்கிறார். இங்கு குறிப்பிடப்படும் ஆயர் ஆடுகளை மட்டுமல்ல ஆடுகளை அழைத்துச் செல்ல வேண்டிய பாதைகளைக் குறித்தும் அறிந்திருக்கிறார். பாலைநிலத்தில் பாதை சரியாகத் தெரியவில்லையானால் ஆபத்துகள் நேரிடும். எனவே, மக்கள் நடக்க வேண்டிய பாதை, சேர்வதற்கான இடம் ஆயருக்கு சரியாகத் தெரிய வேண்டும். இவ்வுலகில் உண்மையான ஆயராக வந்த இயேசுகிறிஸ்து நமக்காகத் துன்புற்று ஒரு முன்மாதிரியை வைத்துச் சென்றுள்ளார். நாமும் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோம் (1 பேது. 2 : 21). நல்ல பாதைகளை அறிந்து இயேசுவுக்குப் பின் செல்லுவோம்.

2. **அன்பு செலுத்தல்** : (யோவான் 10 : 11)

உண்மையான ஆயர் ஆடுகளுக்காக உயிரைக் கொடுக்கிறார். தம் நண்பருக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை (யோவா. 15 : 13). என இயேசுகிறிஸ்து குறிப்பிட்டார். உண்மையான ஆயர் ஆடுகளின் மீது அதிக அன்பு செலுத்துகிறவராயிருப்பார். இவ்வன்பினால் ஆடுகளுக்கு ஆயரின்





மீதுள்ள அச்சம் முற்றிலும் மாற்றப்படும் (1 யோவா. 4 : 18). அதிகாரம், ஆற்றல் இவைகளின்றி அனைவரும் நண்பர்களைப் போல இருப்பர். அன்பு செலுத்தும் ஆயருக்கு ஆடுகளும் பின் செல்லும், அவரது குரலும் ஆடுகளுக்குத் தெரியும் (யோவா. 10 : 4). உண்மையான ஆயர் அன்பின் நிமித்தமாக ஆட்டுக்கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளையும் கூட்டிச் சேர்க்கிறார். தூய அகுஸ்தின் குறிப்பிடும்போது திருச்சபைக்கு வெளியே அநேக ஆடுகளும் உள்ளே அநேக ஓநாய்களும் இருக்கின்றன என்கிறார். இச்சூழலில் அன்பு சார்ந்த திருப்பணி அதிக ஆற்றல் பெறுகிறது. இயேசுகிறிஸ்துவும் அன்பின் நிமித்தமாக நமக்காக உயிரைக் கொடுத்தார் (1 யோவா. 3 : 16). கடவுளின் மக்களாகிய நாமும் ஒருவரிலொருவர் அன்பு கூருவோம்.

3. **ஆற்றுப்படுத்தல்** : (சங். 23 : 4)

மலையில் தோன்றும் ஆறு தான் பாய்ந்து வரும் இடங்களிலுள்ள மரம் செடிகளுக்குத் தண்ணீர் கொடுத்துச் செல்வதைப் போன்று உண்மையான ஆயர் கடவுளின் மக்களை ஆற்றுப்படுத்துகிறவராக இருக்கிறார். ஆண்டவர் உண்மையான ஆயராக இருப்பதனால் பாதுகாப்பு தருகிறார் (சங். 23 : 2, 4). ஆடுகளை வழி நடத்தும்போது ஓநாய் மற்றும் கொடிய விலங்குகளால் ஆபத்துகள் வரலாம் (1 சாமு. 17 : 34-36). இவைகளினின்று பாதுகாக்கிறார். சோர்வுற்று இருக்கும் வேளையில் புத்துயிரும் ஆற்றலும் கடவுள் தருகிறார் (சங். 24 : 3, எசேக். 34 : 16). அவரது கோல் அன்பு நிறைந்த உறவுக்கு அடையாளமாகவும், அவரது நெடுங்கழி ஆபத்துகளினின்று பாதுகாப்பதற்கு அடையாளமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன. உண்மையான ஆயரான இயேசுகிறிஸ்து தேவையிலிருந்த மக்களைத் தேடிச் சென்று உதவிகள் செய்து ஆற்றப்படுத்தினார்.

இரண்டாம் உலகப் போரில் 60 இலட்சம் யூதர்கள் கொலை செய்யப்பட்டனர். யூத ரபிமார் சங்கீதங்களைச் சொல்லிப் புலம்பினர். யூத ரபி ஒருவர் இறைவேண்டலில் இருந்தபோது இன்னொருவர் நீ எந்த உணர்வுடன் கடவுளோடு பேசுகிறாய் என்று கிண்டலாகக் கேட்டார். அதற்கு அந்த ரபி நான் ஆண்டவருக்கு ஆறுதல் கூறி அவரைத் தேற்றப் பார்க்கிறேன் என்று கூறினார். இறைமக்களாகிய நாமும் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிற மக்களை அடையாளம் கண்டு, அவர்கள் நிலைமைகளை அறிந்து, அவர்கள் மீது அன்பு செலுத்தி, ஆலோசனை கூறி வாழ்வில் முன்னேற ஆற்றுப்படுத்துவோம். இறைவன் அதற்குரிய ஆற்றலைத் தந்தருளுவாராக. ஆமென்.

**அருள்திரு. S. கிரீஷ் குமார்**

**12-05-2013** | உயிர்ப்புக்குப் பின் வரும் ஆறாம் ஞாயிறு

எசா. 6 : 1-8 அனைத்துலக அன்னையர் நாள் கொலோ. 3 : 12-17

தி.பா. 50 லூக். 1 : 46 : 55

# ஆண்டவரைப் பாடுங்கள்

# Sing to the Lord

ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகிறது

(லூக். 1 : 47)

**இறைவேண்டல்**

*ஆற்றல் நிறைந்த கடவுளே! எங்களையும், மானிடம் முழுவதையும் பாவத்திலிருந்து உம் ஒரே திருமகன் வழியாக மீட்டு பண்ணிசைத்துப் பாடச் செய்யும் உம் அன்புக்காய் நன்றி. அருள்நிறைந்த கடவுளே! நாங்களும் நன்றியுணர்வுடன் உம்மைப் பாடி, எப்பொழுதும் நீர் எங்களுக்கு செய்த யாவுக்காகவும் உம்மைப் புகழ்ந்து மாட்சிப்படுத்த அருள் செய்ய வேண்டுமென்று மீட்பராம் இயேசு கிறிஸ்து வழியாய் மன்றாடுகிறோம். ஆமென்.*

மரியாளின் பாடல் (The magnificant) என்று அழைக்கப்படுகிற திருச்சபையின் மிகச்சிறப்பான பாடலைத் தியானத்திற்கான திருமறைப் பகுதியாகப் பெற்றிருக்கின்றோம். இந்தப் பாடலின் மொழிபெயர்ப்பில் முதல் வார்த்தையாகக் காணப்படுகிற magnificant என்ற வார்த்தையே இப்பாடலின் தலைப்பாக அமைந்துவிட்டது. இந்தப்பாடல் பழைய ஏற்பாட்டில் இருந்து எடுக்கப்பட்ட பல வாக்கியங்களையும் கருத்துக்களையும் வைத்து பாடப்பட்டுள்ளது. கடவுளுடைய வார்த்தைகளை மரியாள் தன்னுடைய இருதயத்தில் பதித்து வைத்திருந்திருந்தார். உள்ளம் மகிழ்ச்சியால் நிறைவுற்றபோது தன்னுடைய உள்ளத்தில் பதித்து வைத்திருந்த கடவுளுடைய வார்த்தைகளைப் பாடலாக வெளிப்படுத்தினார்.

நம்முடைய உள்ளங்களில் எப்படிப்பட்ட வார்த்தைகளைப் பதித்து வைத்திருக்கிறோம்? நம்முடைய உள்ளம் மகிழ்ச்சியால் நிறைவடையும் போது எப்படிப்பட்ட பாடல்கள் நம்மில் இருந்து வெளிப்படுகின்றன? நம்முடைய வாழ்க்கையில் ஆண்டவர் செய்த நன்மைகளுக்காக நாம் நன்றிப் பாடல்களைப் பாடவேண்டும். “தூய ஆவியால் ஆட்கொள்ளப்படுங்கள். உங்கள் உரையாடல்களில் திருப்பாடல்கள்





புகழ்ப்பாக்கள் ஆவிக்குரிய பாடல்கள் ஆகியவை இடம் பெறட்டும். உளமாரப்பாடி ஆண்டவரைப் போற்றுங்கள்” (எபே. 5 : 18,19). “திருப்பாடல்களையும் புகழ்ப்பாக்களையும் ஆவிக்குரிய பாடல்களையும் நன்றியோடு பாடி கடவுளைப் போற்றுங்கள்” (கொலோ. 3 : 16).

இந்த மரியாளின் பாடல் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கிறது. முதல் பகுதி லூக்கா 1 : 46-50, வசனங்களில், தன்னுடைய சொந்த வாழ்க்கையில் ஆண்டவர் செய்த நன்மைகளை எண்ணி துதித்துப் பாடுகிறார். இரண்டாவது பகுதி லூக். 1 : 51-55 வசனங்கள் இஸ்ரயேலரின் வாழ்க்கை வரலாற்றில் கடவுளின் உன்னதமான செயல்பாட்டை விவரிக்கிறதாக உள்ளது.

இது ஒரு மகிழ்ச்சியின் பாடல். நீதிநிறைந்த பெரிய மாற்றங்களைச் செய்யப்போகிறவர், உலகிற்கு வாழ்வு கொடுக்கப் போகிறவர், தன்னிடம் இருந்து பிறக்கப் போகிறாரே என்றமகிழ்ச்சி இந்த பாடலில் அடங்கியுள்ளது. “கடவுள் செய்தார்” என்று எட்டு முறை மரியாள் குறிப்பிடுகின்றார். தொடக்ககாலத் திருச்சபை இப்பாடலிலுள்ள கருத்துக்களைக் கடவுளின் மீட்பின் திட்டத்தின் வெளிப்பாடாகப் புரிந்து கொண்டது. ஆனால் அன்று சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருந்த பலரால் விரும்பப்படாத, ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு மீட்பின் திட்டமாக எண்ணப்பட்டது. இன்றும் கிறிஸ்துவின் நற்செய்தி அது உள்ளபடியே அப்படியே அறிவிக்கப்பட்டால் பலர் அச்சத்தில் நடுங்கும்படியான வல்லமையை, வலிமையை அது பெற்றிருக்கும். ஆனால் நாம் இன்று இப்படிப்பட்ட போதனைகளை சொல்லவில்லை. நாம் போதிக்கிறதெல்லாம் யாருடைய மனதையும் புண்படுத்தி விடக்கூடாது என்று சொல்லி உண்மைகளை மறைத்து, மகிழ்ச்சியை, மனநிறைவைத் தருகின்ற ஆசீர்வாதங்களை அள்ளி வீசுகிற போதனைகள் மட்டுமே. கிறிஸ்துவின் நற்செய்தியில் உள்ள உண்மைகளை உள்ளபடியே சொல்லுகிற மரியாளிடத்தில் காணப்பட்ட ஆற்றல், துணிவு, உறுதி, உண்மை நமக்கு தேவையாயிருக்கிறது.

**1) உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடிக்கிறார்**

பெருமை என்ற குணம் தீமையானது. “கிறிஸ்துவானவர் ...... தம்மையே வெறுமையாக்கி அடிமை வடிவம் ஏற்று தம்மையே தாழ்த்திக் கொண்டார்” (பிலி. 2 : 7, 8) என்று அறிந்திருக்கிறோம். இப்படி கிறிஸ்து வாழ்ந்துகாட்டியிருக்கிற வாழ்வு முறைகளுக்குப்பின் ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்வானானால், எல்லாம் நலமாக அமையும்.

**2) வலியோரை அரியணையினின்று தூக்கி எறிகிறார்**

தாழ்மையில் இருப்போரை உயர்த்துகிறார். இது ஒரு சமூகப் புரட்சி தாழ்நிலையில் இருப்போரிடத்து பரிவு கொண்டு அவர்களை உயர்த்திவிடுவது மட்டுமல்ல, அதேவேளையில் வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துவிட்டு அவர்களுடைய வலிமையை எடுத்துப்போடுவார் என்றும் சொல்லுகிறது கிறிஸ்து தாழ்நிலையில் உள்ளோரை அன்பு செய்கிறார்.

**3) பசித்தோரை நலன்களால் நிரப்புகிறார்**

இது ஒரு பொருளாதாரப் புரட்சி. கிறிஸ்துவை அறியாதவர்கள் மட்டும்தான் செல்வத்தை பொருளை சேர்த்துகொண்டே இருக்கமுடியும். கிறிஸ்துவை அறிந்தவர்கள் செல்வத்தை, பொருட்களைச் சேர்க்க அனுமதியில்லை. இயேசுவைப் பின்பற்ற விரும்பின செல்வரான இளைஞர் உரையாடலில் விபச்சாரம் செய்யாமல் இருப்பது, களவு செய்யாமல் இருப்பது, பொய்ச்சான்று சொல்லாமல் இருப்பது, தாய் தந்தையை மதித்து நடப்பது தன்னை அன்பு செய்வது போன்ற கட்டளைகள் எல்லாவற்றையும் சிறு வயது முதற்கொண்டு கடைப்பிடித்திருந்தபோதிலும், தன்னிடமுள்ள செல்வத்தை ஏழைகளோடும் இல்லாதவர்களோடும் பகிர்ந்து கொள்ளவில்லை என்றால் நிலைவாழ்வு பெற முடியாது என்ற இயேசுவின் போதனையிலிருந்து செல்வத்தைச் சேர்க்கும் மனப்பான்மை எவ்வளவு தவறானது என்பதை உணரமுடிகிறது. “ஒட்டகமே ஊசியின் காதில் நுழைந்து விட்டாலும் கூடச் செல்வந்தர் இறையாட்சியில் நுழைய முடியாது” என்று தீர்க்கமான, தெளிவான கருத்து இயேசுவின் வாயிலிருந்து வெளிப்பட்டதை சிந்தித்து உணர வேண்டியவர்களாயிருக்கிறோம்.

எனவே ஆண்டவருடைய இந்தப் போதனைகளை உணர்ந்தவர்களாய் நம்மிடத்தில் உள்ளதை இல்லாதவர்களோடு பகிர்ந்து கொள்கிற தன்மையை, மனப்பான்மையை நம்மில் வளரச் செய்ய வேண்டும்.

**அருள்திரு. E. சேம் ஜெபசிங்**



**19-05-2013** | பெந்தக்கோஸ்தே ஞாயிறு & DMPB ஞாயிறு

| | |
|---|---|
| யோவே. 2 : 28-32 | தி.ப. 2 : 1-13 |
| தி.பா. 139 : 1-12 | யோவா. 16 : 5-16 |

# தூய ஆவியார், கடவுளின் அருட்கொடை

## Holy Spirit, The Gift of God

“நான் மாந்தர் யாவர்மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன்; உங்கள் புதல்வரும் புதல்வியரும் இறைவாக்கு உரைப்பர்; உங்கள் இளைஞர்கள் காட்சிகளையும்காண்பார்கள்.” யோவே. 2 : 28

**இறைவேண்டல்**

*எங்கள் தூய கடவுளே! எங்களை தூய்மைப்படுத்தவும், தெளிவுபடுத்தவும், ஆற்றல்படுத்தவும், வளமைப்படுத்தவும் உம் தூய ஆவியாரைத் தந்தருள வேண்டுகிறோம். எங்களில் செயல்படும் தூய ஆவியார் எங்கள் ஆலோசகராகவும், ஆற்றுப்படுத்துகிறவராகவும். தாங்குகிறவராகவும் இருந்து, எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்ட நீதிக்கு நாங்கள் சான்று பகர எங்களை ஆற்றல்படுத்த வேண்டுமென்று உம்மோடு ஒரே ஆவியராய் இணைந்து ஆளுகை செய்யும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாய் மன்றாடுகிறோம், ஆமென்.*

**பெந்தக்கோஸ்தே**

திருச்சபையாக நாம் கொண்டாடும் திருநாட்களில் மிகவும் முக்கியத்துவம் பெற்ற திருநாள் பெந்தேகோஸ்தே என்பதாகும். பெந்தக்கோஸ்தே திருநாள் - தூய ஆவியார் பொழியப்பட்ட நாள். பல மொழி, பல நாட்டு மக்களைக் கிறிஸ்துவின் திரு உடலாக - ஒரே உடலாக இணைத்த திருநாள். கிறிஸ்தவத்திருச்சபையின் பிறந்தநாள். கிறிஸ்துவின் ஊனுடல் பிறந்தநாள் கிறிஸ்மஸ் எனில், கிறிஸ்துவின் ஆன்மிக உடலாகிய திருச்சபை பிறந்தநாள் பெந்தக்கோஸ்தே. எனவே, நாம் இதனைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும்.

**பெந்தக்கோஸ்தே - சொற்பொருள்**

“பெந்தக்கோஸ்தே” என்னும் சொல்லுக்கு “ஐம்பதாவது நாள்” என்பது பொருள். இது அறுவடைக்காக நன்றி செலுத்தும் யூதத் திருவிழா. பஸ்கா திருவிழாவுக்குப்பின் ஐம்பதாவது நாள் இது கொண்டாடப்படும்போது இயேசு உயிர்த்தெழுந்து ஐம்பது நாட்கள் **2.**

கடந்து சீடர்கள் அனைவரும் ஒரே இடத்தில் கூடியிருந்தார்கள்; அப்பொழுது திடீரென்று கடுங்காற்று வீசுவதுபோன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகிப் பெரும் அசைவை உண்டாக்கியது (தி.ப. 2 : 1-3). அங்கு கூடியிருந்த அனைவரும் தூய ஆவியாரால் நிரப்பப்பட்டனர். இயேசுவே மீட்பர் என அறிந்துகொண்டனர். கிறிஸ்துவின் நற்செய்தியை உலகமெங்கும் பரப்பத் துணிவு கொண்டனர். தூய ஆவியாரை இறைவனின் அருட்கொடையாக மூன்று நிலைகளில் சிந்திப்போம்.

### 1. உடனிருக்கும் ஆவியார்

உலக வரலாற்றைப் பாதித்த மாபெரும் அருட்கொடைகளில் ஒன்று, ஒரு சிறு கூட்டத்தார் பெற்ற அருட்கொடையாம் தூய ஆவியாராகும். பாடுகளின் வழியாகப் பாவத்தையும், இறப்பையும் வெற்றி கொண்ட ஆண்டவர் உடனிருக்கிறார் என்பதன் அடையாளம் தூய ஆவியார் ஆவார்.

இயேசு தமக்கும் சீடர்க்கும் உள்ள உறவைத் திராட்சைச் செடி மற்றும் கொடியை உவமையாகக் குறிப்பிட்டுக் கூறினார். தமது அன்பிலே நிலைத்திருக்கவும், ஒருவரிலொருவர் அன்பு கூறவும் கட்டளையிட்டார் (யோவான் 15 : 1-14). உலகம் சீடர்களை நேசிக்காமல் இன்னல் தந்தாலும் இறை உறவில் நிலைத்து நிற்கக் கற்பித்தார் (யோ. 15 : 18-25). சீடர்களுக்குத் துணையாகத் தேற்றரவாளனை அனுப்பித் தருவதாக உறுதி மொழிந்தார் (யோ. 15 : 26; 16 : 7).

இயேசுவின் சிலுவை மரணத்தால் சோர்வுற்றிருந்த சீடர்கள் பெந்தக்கோஸ்தே நாளில் அருளப்பட்ட தூய ஆவியாரின் பிரசன்னத்தால் ஆற்றல் பெற்றனர். “நீங்கள் சிலுவையில் அறைந்து கொலை செய்த இந்த இயேசுவைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார்” இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள் எனத் தைரியமாய் சாட்சி பகர்ந்தனர்.

கோவிலின் வாசலிலே உட்கார்ந்து, கோவிலுக்குள் செல்பவர்களிடம் பிச்சைகேட்டுக் கொண்டிருந்த கால் ஊனமுற்றிருந்த மனிதரிடம் பேதுரு “பொன்னும் வெள்ளியும் என்னிடமில்லை. என்னிடம் உள்ளதை உமக்குக் கொடுக்கிறேன்; இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்” எனக்கூறி அவரது வலக்கையைப் பற்றிப் பிடித்துத் தூக்கிவிட்டார். உடனே அவரது காலடிகளும் கணுக்கால்களும் வலுவடைந்தன. (திப. 3 : 1-10). இறைப் பிரசன்னம் வெளிப்பட்டது அன்றோ. தூய ஆவியார் இன்னும் தம் உடனிருப்பை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்.





### உறவில் கூட்டி இணைக்கும் ஆவியார்

தூய ஆவியானவரைக் கடவுளிடமிருந்தும், இறை மைந்தரிடமிருந்தும் பிரித்துக்கூற இயலாது. இறைத்தந்தையின் உறவிலே ஒன்றுபட்டு கிறிஸ்துவில் தம்மை வெளிப்படுத்துகிறார்.

பாபேல் கோபுர நிகழ்வில் மக்கள் உலகம் முழுவதும் சிதறுண்டுபோய்ப் பரந்து விரிந்து வாழும்படிக்கு மொழியில் குழப்பம் ஏற்பட்டது (தொ. நூ. 11 : 7) ஆனால் பெந்தக்கோஸ்தே நாளில் மக்கள் கூட்டுறவுடன் வாழ தூய ஆவியார் அருளப்பட்டார் (தி.ப. 2 : 4). பல மொழிபேசும் மக்களாகக் கூடி வந்திருந்தாலும் ஒருவர் பேசுவதை மற்றவர் புரிந்து கொண்டனர். இதனால் புது உறவும் புது சமூகமும் உருவானது.

இன்று உலகம் பல்வேறு தீயசக்திகளால் பிறப்பு, இடம், மொழி, சமயம், நிறம், இனம், கலாச்சாரம் எனப் பிரிந்து நிற்கிறது. உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. இதற்கு வெளிச்சம் கொடுப்பவர் ஆவியாரே. அவரே தீய சிந்தனைகளை அகற்றி மக்களை ஒன்றுபடுத்துபவர். திருச்சபையும் இறைமக்களும் தூய ஆவியாரின் ஆளுகைக்கு இடமளிக்கும்போது கூட்டுறவு மலர்கிறது. புதிய சமூகம் உருவாகிறது.

இயேசுவின் இறைவேண்டலும் தம் மக்களின் கூட்டுறவுக்காக ஏறெடுக்கப்பட்டது அன்றோ (யோ. 17 : 22). பெந்தக்கோஸ்தே நாளில் அதுவும் நிறைவேறிற்று. கூடியிருந்த அனைவர் மேலும் தூய ஆவியார் அருளப்பட்டார் (யோவேல் 2 : 28; தி.ப. 2 : 17, 18). கூட்டுறவால் ஏற்படும் மகிழ்ச்சி உயர்வானது அல்லவா?

### அருட்பணிக்கு ஆற்றல்தரும் ஆவியார்

கடவுள் “அனுப்புகிறார்” என்பதே அருட்பணிக்கு மையம். அவர் குறிப்பிட்ட நோக்கத்தோடு, குறிப்பிட்ட மக்களை, குறிப்பிட்ட காலங்களில் அனுப்புகிறார். ஆபிரகாம் போன்ற மூதாதையரைக் கடவுள் அனுப்பினார் (தொ.நூ. 12 : 1); எசாயா போன்ற இறைவாக்கினரை அனுப்பினார் (எசா. 6 : 8-10). எல்லாருக்கும் மகுடமாகத் தம் திருமைந்தரை மானிடமகனாக அனுப்பினார் (யோ. 3 : 16).

இயேசு கிறிஸ்து இறைவனின் அருட்பணியில் மகுடமாக இருந்தாலும், அவருடன் அருட்பணி நின்றுவிடவில்லை. தந்தையானவர் தம்மை அனுப்பினது போன்று தாமும் தம் சீடர்களை உலகத்திற்கு அனுப்புவதாகக் கூறினார் (மத். 10; யோவான் 17 : 18, 20 : 21). சீடர்களை ஆற்றல்படுத்தும்படிக்குத் தம்மை அனுப்பிய தந்தையிடம் போய் துணையாளரை அனுப்ப வேண்டுவதாகக் கூறினார் (யோவா. 16 : 5-7).

அப்படியே பெந்தக்கோஸ்தே நாளில் கூடியிருந்த சீடர்கள் தூய ஆவியரால் நிரப்பப்பட்டனர். அருட்பணியின் ஆற்றல் பெற்றனர்.

"நீங்கள் சிலுவையில் அறைந்து கொலை செய்த இயேசுவைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார்; இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள்" என முழக்கமிட்டனர் (தி.ப. 2 : 32).

நற்செய்தி தடைகளைக் கடந்து எங்கும் சொல்லப்பட சீடர்கள் ஆற்றல் பெற்றனர். தலைமைச் சங்கத்தார் பேசக்கூடாது எனத் தடைவிதித்தபோதும் சும்மா இருக்க இயலவில்லை. "உங்களுக்குச் செவி சாய்ப்பதா? கடவுளுக்குச் செவி சாய்ப்பதா? இதில் கடவுள் பார்வையில் எது முறையானது என நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்; என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது" என்றனர் (தி.ப. 4 : 19, 20). நற்செய்தி தடைகளைக் கடந்து வேகமாய் அறிவிக்கப்பட்டது. இதன் பின்னணியில் எத்தனை எத்தனை கோதுமை மணிகள் நிலத்தில் விழுந்தன. நற்செய்தி நம்மைச் சந்தித்தது. புது வாழ்வு பெற்றுள்ளோம்.

இன்னும் கேள்விப்படாத மக்களுக்கு நற்செய்தி சொல்வதில் நம் பங்கு என்ன என்பதைச் சிந்திப்போம். தூய ஆவியாரின் ஆளுகைக்கு முழுமையாய் நம்மை ஒப்படைப்போம்.

**அருள்திரு. V. ஜாண்சன் கில்பர்ட்**



**26-05-2013** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு

தொ.நூ. 18 : 1-15 | திரித்துவ ஞாயிறு | 1 யோவா. 5 : 1-12
தி.பா. 48 | மத். 3 : 13-17

# மூவொரு கடவுளின் அனுபவம்

## Trinitarian Experience of God

"இத்தகைய கடவுளே என்றென்றும் நம் கடவுள்; அவரே நம்மை இறுதிவரை வழிநடத்துவார்." தி.பா. 48 : 14

**இறைவேண்டல்**

*அன்பின் கடவுளே! உம் வளமை, அறிவு, நுட்பம் எத்தனை பெரியது! உமது நடுத்தீர்ப்புகளும் உமது வழிகளும் ஆராய்ந்து அறிய முடியாதவைகள்.. உம்மை நீர் அறிவாளிகளுக்கு வெளிப்படுத்தாமல் உம் பிள்ளைகளாம் எங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளீர். மும்மை கடவுளாக வெளிப்பட்ட உம்மை சார்ந்து உம்மிலே நம்பிக்கை கொண்டு மகிழ்வுடன் உம் மாட்சியை வெளிப்படுத்த அருள்தாரும். மும்மையின் ஒருமைப்பாட்டுறவை சமூகத்தில் அனுபவிக்க உம் திருகாட்சியைத் தந்தருளும். படைத்து பாவத்திலிருந்து மீட்டு பாதுகாக்கும் உமக்கே அனைத்து மாட்சியும் உண்டாக மூவரில் ஒருவராம் உம் திருமைந்தர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம்ஷ, ஆமென்.*

தூய அகஸ்டின் ஒருமுறை மூவொரு கடவுளைக் குறித்து சிந்தித்துக் கொண்டே ஒரு கடற்கரை மணலில் நடந்து கொண்டிருந்தார். அப்போது கடற்கரை மணலில் ஒரு சிறுவன் மணலில் குழி தோண்டி அதில் கடலில் உள்ள நீரை ஒரு பாத்திரத்தில் எடுத்து ஊற்றிக் கொண்டிருந்தான். அப்போது சிறுவனிடம் என்ன செய்கிறாய் என்று கேட்டபோது, நான் இந்தக் கடலில் உள்ள தண்ணீரை எல்லாம் இந்தக் குழிக்குள் விட்டு கடலை வற்றச் செய்கிறேன் என்று குழந்தைத்தனமாகச் சொன்னான். சிறுவனின் அறியாமையை உணர்ந்த தூய அகஸ்டினுக்குச் சிரிப்பு வந்தது. இதைக் கவனித்த சிறுவன் உடனே அவரைப் பார்த்து இதைப்போலவே உங்கள் மனதில் உள்ள மூவொரு கடவுளின் (திரித்துவத்தின்) ஆழத்தையும் அறிந்து கொள்வது கடினம் என்று சொல்லி மறைந்து சென்றானாம். எனவேதோன் லின்ட்செல் உட்பிரிட்ஜ்

சொல்லும்போது, "திரித்துவத்தை (மூவொரு கடவுளை) முழுமையாக அறிந்துகொள்ள முயற்சிப்பவன் தனது மனதை இழந்து விடுகிறான்; திரித்துவத்தை (மூவொரு கடவுளை) மறுதலிக்கிறவன் தனது ஆன்மாவை இழந்து விடுகிறான்."

பல நேரங்களில் மத். 3 : 17; 28 : 19; 2 கொரி. 13 : 14; தொ.நூ. 1 : 1, யோவா. 1 : 1, 17-ஆம் அதிகாரம் ஆகிய வசனங்களைப் படிக்கும்போது கடவுள் மூவரா? அல்லது ஒருவரா? என்ற கேள்வி எழுவது உண்டு. ஏனென்றால் விவிலியத்தில் தொடக்க நூல் முதல் திருவெளிப்பாடு நூல்வரை கடவுள் தம்மை மூன்று ஆள்தன்மைகளில் வெளிப்படுத்தியிருப்பதைக் காணலாம்.(தொ.நூ. 18 : 2).

**1. படைப்பின் வரலாற்றில் (தந்தை) மூவொரு கடவுளின் செயல்பாடு**

"தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும், மண்ணுலகையும் படைத்தபொழுது." (தொ.நூ. 1 : 1)

பழைய ஏற்பாட்டில் திரித்துவத்தைப் பற்றி பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. தொடக்க நூல் 1 : 1-இல் கடவுள் என்ற வார்த்தை கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு எபிரேய மொழியில் "எலோகிம்" என்கின்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. "எலோகிம்" என்கின்ற பதம் பன்மையில் உள்ளது. அதாவது இரண்டிற்கு மேற்பட்ட நபரைக் குறிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவேதான் அதனை தொடர்ந்த பகுதிகளில் கடவுள் மானிடரைப் படைக்கும்போது, "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம் . . ." இது பன்மையில் உள்ளது. இன்னும் தொ.நூ. 3 :24-இல் "மனிதன் இப்பொழுது நம்முன் ஒருவர் போல் . . ." இவ்வாறு படைப்பு ஒவ்வொன்றிலும் மூவொரு கடவுள் தன்னுடைய திட்டத்தையும் தன்மையையும் வெளிப்படுத்துகிறார். தொ.நூ. 1-ஆம் அதிகாரத்தில் படிக்கும்போதும் யோவா. 1-ஆம் அதிகாரத்தில் படிக்கும்போதும் கடவுள் தம்முடைய வார்த்தையால் உலகில் எல்லாவற்றையும் படைத்தார். இந்த வார்த்தை தான் மனுவுருவேற்று இயேசுவாக வந்தார். தூய ஆவியாராகச் செயல்படுகிறார். மக்களுடன் இருக்கிறார். வி.ப.3-ஆம் அதிகாரத்தில் பழைய ஏற்பாட்டின் படைப்பின் கடவுள் தன்னை "இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே" (யாவே) என்று வெளிப்படுத்தினார். இவர் பேரன்பு, பரிவு, இரக்கம் கொண்டவர் மானிடர் மீது அன்பைப் பொழிகின்றவராக மாறி நம் மீட்புக்காகத் தம் மைந்தரையே நமக்குக் கொடுத்தார் (யோவா. 3 : 16). கடவுள் ஒருவர் என்பதை விவிலியம் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறது (இ.ச. 6 : 4-5, வி.ப. 20 : 3, மாற். 12 : 29-30). எனவேதான் திருச்சபை, "படைப்பனைத்தும் தந்தையாகிய கடவுளிடமிருந்து மகனாகிய இயேசு கிறிஸ்துவின் வழியாகத் தூய ஆவியாருக்குள் படைக்கப்பட்டுள்ளது" என அறிக்கையிடுகிறது.





**2. மீட்பின் வரலாற்றில் (மகன்) மூவொரு கடவுளின் செயல்பாடு**

"இறைமகனைக் கொண்டிருப்போர் வாழ்வைக் கொண்டுள்ளனர்; அவரைக் கொண்டிராதோர் வாழ்வைக் கொண்டிரார்." 1 யோவா. 5 : 12

மானிட மீட்பின் வரலாற்றில் மூவொரு கடவுளின் செயல்பாடு முக்கியமானதும் முழுமையானதுமாகும். கடவுளால் ஏற்றுக்கொள்ளப் பட்ட நாம் இயேசு கிறிஸ்து வழியாக மீட்பைப் பெறுகிறோம். ஏனெனில் நம்முடைய மீட்புக்காகக் கடவுள் தம் மகனை உலகிற்குத் தந்தார். (யோவா. 3 : 16). மானிடமகனாக இயேசு தம் வாழ்வு, துன்பம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் வழியாகக் கடவுளுக்கும் நமக்கும் ஒரு நல்லுறவை உருவாக்கினார் (உரோ. 5 : 1). இவ்வாறு மீட்பின் திட்டத்தில் மூவொரு கடவுளின் செயல்பாடு தெளிவாக உள்ளது. யோவா. 16 : 13-15 வரை படிக்கும்போது தந்தை, மைந்தர் தூயஆவியாரைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. மத். 28 : 20-இல் இயேசு சொல்லும்போது இதோ உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன் என்கிறார். இது நம்முடைய முழு முதல் மீட்பராக நமக்காக மன்னிப்பு வேண்டி தந்தையிடம் பரிந்து பேசி நம்மை அவரிடம் அழைத்துச் செல்பவராக இருக்கின்றார். மார்டின் லூத்தர் சொல்லும்போது, "இயேசு தந்தையின் இதயத்தைக் காட்டும் கண்ணாடி" தூய பவுலடிகளார் கொலோசையருக்குச் சொல்லும் போது, "அவர் கட்புலனாகாத கடவுளது சாயல்; படைப்பனைத்திலும் தலைப்பேறு". ஆக இயேசுவை மீட்புக்காக அனுப்பியது கடவுளின் திட்டம். அவர் இஸ்ரயேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக் கானானை கொடுத்தது போல, நம்மையும் மீக்க தம் மகனை அனுப்பியது நம்மீது கொண்ட ஆழமான அன்பின் வெளிப்பாடு ஆகும்.

**3. திருச்சபையின் வரலாற்றில் (ஆவியார்) மூவொரு கடவுளின் செயல்பாடு** (தி.ப. 2 : 1-3)

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் தூய ஆவியாரைப் பெற்றுக்கொண்ட சீடர்கள் திருச்சபை உருவாகக் காரணமாயினர். திருமைந்தரின் திருப்பணியைத் தொடர தூய ஆவியார் நமக்குத் துணை செய்கிறார். தூய ஆவியார் நம் உள்ளத்தில் உறைந்திருந்து நம்மைப் புனிதப்படுத்தி மூவொரு கடவுள் தங்கும் கோலிலாக மாற்றுகின்றார். எனவேதான் 1 கொரி. 3 : 16-இல் "நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் . . ." என்றும் சொல்லப்பட்டுள்ளது. மனுமக்கள் அருள் உறவிலும், அன்புறவிலும் நிலைத்து வாழ தேவையான ஆற்றலைத் தருபவர் தூய ஆவியார். தி.ப. 2-ஆம் அதிகாரத்தைப் படிக்கும்போது பெந்தகொஸ்தே எனப்பட்ட நாளுக்குப் பிறகு சீடர்கள் தூய ஆவியாரைப் பெற்றபின் அவர்கள் செயல்படத் துவங்கினார். இயேசுவுக்குச் சாட்சிகளாகினர். ஆகவே அவர்களின் பணிகளிலும் திருச்சபைகள் வளர்ந்து பெருகத் துவங்கியன. முதல் மூன்று

நூற்றாண்டு காலம் திருச்சபைக்குள் மூவொரு கடவுளைப் பற்றி கேள்விகள் எழவில்லை. திருச்சபையில் திரிபுக் கொள்கை பெருகியபோது மூவொரு கடவுள் குறித்து கேள்விகள் உருவானது. அத்தோடு பல கொள்கைகள் உருவாக்கி இயேசுவின் சிலுவைப் பாடுகளை உண்மைக்குப் புறம்பாக்கினர். அரியு மற்றும் அதனாசியர் போன்றோரின் தோற்றக் கொள்கையால் தந்தை-மகன் உறவு பற்றிய கேள்வி எழுந்தது. இதனால் திருச்சபை உடையும் நிலை ஏற்பட்டது. திருச்சபை உடைந்தால் தனது ஆட்சிக்கு ஆபத்து என நினைத்து கி.பி. 325-இல் பேரரசர் கான்ஸ்டன்டைன் நிசேயா என்னுமிடத்தில் ஒரு மன்றத்தைக் கூட்டி கேள்விகளுக்கு ஒரு தீர்வினைக் கண்டார். இந்த நிசேயா விசுவாச அறிக்கையே திருச்சபையின் விசுவாசத்தையும் மூவொரு கடவுள் மீதான நம்பிக்கையையும் கட்டிக் காத்தது. மூவொரு கடவுள் இன்றைக்கும் திருச்சபை வாழ்வில் செயல்பட்டுக் கொண்டே இருக்கிறார். ஆகவே திருச்சபை தவறான போதனைகளைப் புறந்தள்ளி, இறைமக்களின் பற்றுமையைக் காத்து அவர்களில் மூவொரு கடவுளின் நம்பிக்கையை நிலை நிறுத்த வேண்டும் அதுவே திருச்சபையின் ஆன்மீகத்துக்கு அடித்தளமாய் அமையும்.

நிறைவாக, உறவிலும் ஒற்றுமையிலும் அன்பிலும் உதயமாவது திரித்துவம் ஆகும். நம்முடைய சிந்தனையின்படி கடவுள் நம்மைப் படைத்தவரென்றும் இயேசு கிறிஸ்து நம் மீட்பரென்றும், தூய ஆவியார் திருச்சபை வழியாக நம்மில் செயல்படுகிறார் என்றும் புரிந்து கொள்ளவேண்டும். மூவொரு கடவுளின் மகிமையையும், மாட்சிமையையும் உணர்ந்து அவரை முழு உள்ளத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒருமுறை பிலிப்பு இயேசுவிடம் தந்தையை எங்களுக்குக் காட்டும் என்று கேட்டபோது, “என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும்.” (யோவா. 14 : 8-15) என்றார். இன்னும் யோவா. 14 : 16-18 வரை படிக்கும்போது தூய ஆவியாரைக் குறித்துச் கூறுகிறார்.

தொடக்கத்தில் படைப்பாளராகவும், பின்னர் பாவத்தில் விழுந்த மானிடத்தை மீட்கும் மீட்பராகவும், தொடர்ந்து திருச்சபையை ஆற்றல்படுத்தும் ஆவியாராகவும் நின்று நிலவும் மூவொரு கடவுளின் இயக்கம் நமக்குள் புதிய ஆக்கத்தையும், ஊக்கத்தையும் தரட்டும். மூவொரு கடவுளில் முழு உலகத்தையும் சொந்தமாக்கிடுவோம். அதற்கு நம்மைக் கடவுளின் ஊடகங்களாக ஒப்படைப்போம்.

**அருள்திரு. K. பிரின்ஸ் குமார்**



**02-06-2013** | பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு

நீதி. 3 : 1-18 — மாணவர் ஞாயிறு — யாக். 1 : 5-8, 16-18
திபா. 111 — மத். 18 : 1-6

# இறை அறிவே உண்மையான ஞானம்

# Knowledge of God is True Wisdom

“ஆண்டவர் பற்றிய அச்சமே ஞானத்தின் தொடக்கம் (திபா. 111 : 10)

**இறைவேண்டல்**

*ஞானத்தின் உறைவிடமாம் கடவுளே! உம் திருவுளச் சித்தத்தால் வாழ்கிறோம். உமது ஞானத்தால் உண்மை வெளிப்படுகிறது. எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் உமது ஞானத்தால் நிறைத்தருளும். புதியவற்றைக் கண்டுபிடிக்கவும் பிறருக்கு விளக்கிக் கூறவும் நிலையான பற்றுறுதியும், ஆற்றலும் தன்னம்பிக்கையும் தாரும். கோபம், குழப்பமான நிலை அகற்றி முழு சமூகத்தின் நலனுக்காக ஆக்கமும், ஆலோசனையும் தந்து நடத்த வேண்டுமென்று உம்மோடு வாழ்ந்து ஞானத்தைப் பகிர்ந்தளிக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

அவர் ஓர் அரசர் - பேரரசர். ஆனால் இளைஞன் இல்லை சிறுவன். அவர் வயது என்ன தெரியுமா? “பன்னிரண்டு” என்கிறது ஒரு ஏடு (LXX). “பதினான்கு” என்கிறது ஒரு ஏடு (Josephus). “இஸ்ரயேல்” என்னும் ஜனசமுத்திரம் அவர் கையில்!. மருண்டு நிற்கின்றார் மன்னர் சாலமோன்! அவ்வேளையில் இறைவன் பேசுகின்றார். “என்ன வரம் வேண்டும் உனக்கு? கேள்! தருகின்றேன்”. என வினவ, “ஆண்டவரே! நான் செய்வது அறியாத சிறுபிள்ளை. ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும்! மன்னன் பணிந்து மன்றாட மெய்சிலிர்த்து விட்டார் இறைவன்! ஏன்? அவர் செல்வத்தைக் கேட்கவில்லை! நீடிய ஆயுளைக் கேட்கவில்லை! எதிரிகளின் உயிரைக் கேட்கவில்லை! ஏன் ஆசீர்வாதங்களையோ, அற்புதங்களையோ கேட்கவில்லை. மாறாக “ஞானம்” ஒன்றையே கேட்கின்றார்! “ஞானி” என்றே அவரைப் பாராட்டுகின்றது இந்த உலகம்! ஏன்? அவரைப் போல் ஞானம் படைத்தவர் இருந்ததும் இல்லை! இனி இருக்கப் போவதும் இல்லை! இதுதான் நிஜம்! சரி, “ஞானம்” என்பது தான் என்ன? அவரையே கேட்போமே!

**1. அச்சம் என்பது மடமையடா!**

எங்கேயோ எப்போதோ கேட்ட பாடல்! ஆனால், இன்றைய மனிதனுக்குத் துளியும் சம்பந்தம் இல்லாத பாடல்! ஏன்? அவன் அசைந்தால் அச்சம்! நடந்தால் அச்சம்! நினைத்தால்அச்சம்! நிமிர்ந்தால் அச்சம்! என்பதின் மறுபதிப்பு தானே இன்றைய மனிதன் அவன் யாருக்கு அஞ்சவில்லை? எதற்கு அஞ்சவில்லை? நாள்-நட்சத்திரம்-நேரம்-காலம்-பேய்-பிசாசு- பில்லிசூனியம்-இருட்டு . . . பட்டியல் நீண்டுகொண்டே போகும், ஒருநாளும் முடியாது! ஆனால் ஒரே ஒருவருக்கு மட்டும் அஞ்சவே மாட்டான் அந்த அஞ்சாநெஞ்சன்! அந்த ஒரே ஒருவர் யார் வேறு யார்? இறைவன்!!

(இறை) அச்சம் என்பது மடமையடா!

(இறைவனுக்கு) அஞ்சாமை மானிடர் உடைமையடா!

இதுவே அவன் சங்கநாதம்! ஆயிரம் ஆயிரம் சான்றுகள் சொல்வேன். இளம்பிஞ்சுகள்-பச்சிளம் குழந்தைகள்-ஈவு இரக்கம் இன்றிக் கற்பைச் சூறையாடுகின்றான் - அந்தக் கொடுமையைப் படம் பிடிக்கின்றான் - விளம்பரம் செய்கின்றான்! இல்லை என்றால் அப்பாவிக் குழந்தைகளைக் கொன்று புதைத்து விடுகின்றான்! இவை எல்லாம் நடப்பது எங்கே அமெரிக்காவிலா? ஆப்பிரிக்கவிலா? இல்லை, நம் தங்கத் திருநாட்டில் தான்! "கொடுமை" என்னும் சமுத்திரத்தில் ஓரிரு துளிகளே! இவை. எழுதப்போனால் காலம் எல்லாம் எழுதிக்கொண்டே இருக்கலாம்! "அச்சம்" அல்லது "இறைஅச்சம்" என்பது நெஞ்சிலே துளி அளவேயாயினும் இருந்தால் இப்படி எல்லாம் கொடுமை செய்வானா மனிதன்? ஆம், "இறை அச்சம்" என்பது அவனைப் பொறுத்தமட்டில் மடமையே! ஆனால், சாலமோன் ஞானியருக்கோ அதுவே ஞானம்! (நீதி. 1 : 7, 9 : 10; தி.பா. 111 : 10). ஆம், இறை அச்சமே ஞானம்!

**2. சட்டமா? பட்டமா?**

"இறை அச்சம்" என்பது என்ன? இறைவனுக்கு முன் அஞ்சி அஞ்சி நடுங்குவதுதான் இறை அச்சமா? பேய்கள் கூட அங்ஙனம் நடுங்குகின்றனவே (யாக். 2 : 19 பார்க்க).

நடுரோட்டிலே ஓர் இரு சக்கர ஊர்தி! மின்னல்வேகத்தில் பறக்கின்றது. ஊர்தியில் பறப்பது யார்? வேறு யார்? மூன்று பெண்கள் - மூன்று மாணவிகள் - சீருடை அணிந்த பள்ளி மாணவிகள்! மூன்று பேர் தலையிலும் "தலைக்கவசம்" இல்லை! ஆனால் மூன்று பேர் செவிகளிலும் அலங்காரக் கைப்பேசிகள்! நம் தங்கத் திருநாட்டிலே - நடு ரோட்டிலே - நித்தம் நித்தம் நாம் காணும் கோலங்கள் - இல்லை,





அலங்கோலங்கள்! எத்தனை மீறல்கள்! அத்தனையுமே மீறல்கள்! மீறுவது யார்? "ஓட்டுநர்" உரிமமோ "ஓட்டு" உரிமையோ இல்லாத பள்ளி மாணவியர். சட்டம் எங்கே நூல் அறுந்தப் பட்டமாய்க் காற்றிலே பறக்கின்றதே! நாட்டில் மட்டும்தானா? திருச்சபை என்ன விதிவிலக்கா? இறைவன் தந்த ஒரே சட்டம் - திருச்சட்டம் -

"பொன்னிலும், பசும் பொன்னிலும்" விலையேறப் பெற்றத் திருவசனங்கள் இன்று காற்றோடு காற்றாய்ப் பறக்கவில்லையா?

இறைவனுக்கு முன் அஞ்சி அஞ்சி நடுங்குவது அல்ல இறை அச்சம்! அவர் தம் கட்டளைகளை மதித்து, அவற்றின்படி நடப்பது அதுவே இறை அச்சம்! அதுவே ஞானம்! (தி.பா. 111 : 10) படிக்க) எழுதுவது எளிது; பேசுவது அதைவிட எளிது; ஆனால், அதன்படி நடப்பது அரிதிலும் அரிது! பாருங்கள் ஞானியாரின் பரிதாபக் கதையை (1 அரசர் 11 : 1-9 படிக்க) ஊருக்குத் தான் உபதேசமா? உனக்கு இல்லையா? இன்று "காற்றலைகள்" எல்லாம் வெறும் பேச்சலைகள்! போதிப்பவர்க்குப் பஞ்சமே இல்லை! ஆனால் சாதிப்பவர்கள்? சல்லடை போட்டுத்தான் தேடவேண்டும்! இங்கே பாருங்கள் ஒருவரை அந்த ஒரே ஒருவரை! இவர்போல் எவர்? எவரும் இல்லை! போதித்தார்! போதித்ததைச் சாதித்தார்!! இவர் அன்றோ நம் தலைவர்! (யோவான் 8 : 46) இறைவனின் திருச்சட்டத்தையே காற்றில் பறக்கவிடும் இல்லை, பட்டம் விடும் திருச்சபையே, உன்னால் உன் நெஞ்சை நிமிர்த்தி இப்படிச் சவால் விட முடியுமா?

"ஞானம்" என்பது அஞ்சி நடுங்குவது அன்று - அடங்குவது! இறைவனின் கட்டளைகளுக்கு அடங்குவது! அதாவது, - அவரது கட்டளைகளை வாழ்ந்து காட்டுவது!!

**3. நீதியா சமாதியா?**

நீதி உறங்குகின்றது! எங்கே தெரியுமா? பஞ்சு மெத்தையிலா? இல்லை! சமாதியில்!! கல்லறையில்!! எங்கும் எதிலும் எப்போதும் சாகடிக்கப்படுவது நீதி! நீதி! நீதி!! ஆயிரம் ஆயிரம் சான்றுகள் அள்ளித்தருவேன்? ஒரு பானை சோற்றுக்கு ஒரே ஒரு சோறு போதாதா? ஆம், ஒரே ஒரு "போபால்" போதாதா? போபால்!, நினைவிருக்கிறதா? ஒன்றிரண்டு அல்ல - 25,000 உயிர்களைக் கதறக் கதற இரத்தப் பலிவாங்கிய "அரக்கன்" போபால்! உலகையே உலுக்கிய போபால்! கலங்கடித்த விஷவாயு போபால்! இது நிகழ்ந்தது எப்போது தெரியுமா? 1984! 28 ஆண்டுகள் ஓடிவிட்டன! இன்றும் மக்கள் ஆயிரக்கணக்கில் செத்து மடிந்து கொண்டிருக்கிறார்கள்! எஞ்சியோர் சித்தம் சிதைந்து பித்தம் கலங்கி உருக்குலைந்து உயிரற்றப் பிணங்களாய் ஊசலாடிக்

கொண்டிருக்கின்றனர்! ஆனால், அந்தோ பரிதாபம்! இன்று வரை சல்லிக்காசு கூட வழங்கவில்லையே அந்த அபலைகளுக்கு. இதன்பேர் நீதியா? இல்லை, சமாதியா? தடுக்கி விழுந்தால் நீதிமன்றங்கள் இந்த நாட்டில் மட்டுமா? உலகம் எங்கும். ஆனால், இந்த அபலைகளின் அலறலைக் காது கொடுத்துக் கேட்க ஒரு நீதிமன்றம்! இல்லையே. இவை எல்லாம் நீதிமன்றங்களா? இல்லை, அநீதி மன்றங்களா? "துன்மார்க்கர்" எல்லாம் மகாராசாக்களாய் ராஜ உலா வருகின்றனர் ஆனால், நீதிமான்களோ சாகடிக்கப்படுகின்றனர்! இல்லை என்றால், பைத்தியம் ஆக்கப்பட்டு, நாயாய்ப் பேயாய் அலைக்கழிக்கப்படுகின்றனர்.

இன்றைய திருச்சபையில் விஞ்சியிருப்பது எது? இறைநீதியா? இல்லை பரிசேயர் நீதியா? பட்டி மன்றம் ஒன்றை நடத்தினால் . . . நடுவர் தீர்ப்பு ஒரே தீர்ப்பே விஞ்சியிருப்பது - எஞ்சியிருப்பது - மிஞ்சியிருப்பது எல்லாம் ஒரே நீதி - பரிசேயர் நீதி!! "கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல்" என்றார்கள் அன்றைய பரிசேயர். ஆனால், இன்றைய பரிசேயரோ, ஒருவன் ஒரு கண்ணைப் பிடுங்கினால் அவன் இரு கண்களையும் பிடுங்கி எறிந்து விடு; ஒரு பல்லை உடைத்தால் அவனது முப்பத்திரெண்டு பற்களையும் உடைத்து எறிந்துவிடு; ஒரு கன்னத்தில் அறைந்தால் ஆளைச் சொர்க்கத்திற்கே அனுப்பிவிடு அதாவது, சமாதி ஆக்கிவிடு! அரியணை முதல் அடிமட்டம் வரை ஆட்சி செய்கின்ற ஒரே நீதி இதே நீதி ஆம் அநீதி!! சிறுவன் சாலமோனின் இறைமன்றாட்டு நமக்கெல்லாம் பெரும் சவால் அன்றோ?

"ஆண்டவரே . . . நான் செய்வதறியாத சிறுபிள்ளை . . . உம் மக்களுக்கு நீதி வழங்க . . . ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும் . . . இம்மாபெரும் மக்கள் இனத்திற்கு நீதி வழங்க யாரால் இயலும்?" (1 அரசர் 3: 7-9) நீதி! நீதி! நீதி!! அதுவே அவர் இதயத்தின் துடிப்பு ஏக்கம்! உயிர் மூச்சு! இவர் அன்றோ அரசர், ஞானி ஆம்! "இறைஞானம்" என்றால் இறைநீதி! இறைநீதி என்றால் இறைஞானம்! தனக்காக - தன் பதவிக்காக, தன் சுயநலத்திற்காகப் பிறரது இரத்தத்தைச் சிந்துவது அல்ல (1 அரசர் 2 : 13-25; 28-34; 41-46 படிக்க) பிறர் வாழ்வதற்காகத் தன்னுடைய பச்சை இரத்தத்தையே ஊற்றிவிட்டாரே இறைவன் - அந்த நீதி - தேவநீதி - தியாக நீதி - தூய நீதி சமாதிக்குள்ளே சங்கமமே ஆகிவிட்ட திருச்சபையே நீ உயிர்த்தெழுவது எந்நாளோ?

### 4. வெளுத்தது எல்லாம் பாலா?

வெளுத்தது எல்லாம் பாலா? தித்திப்பது எல்லாம் தேனா? மின்னுவது எல்லாம் பொன்னா? "நீதிமான் பனையைப் போல் செழிப்பான்" என்கின்றது திருமறை. ஆனால் இங்கே செழிப்பது





நீதிமானா? துன்மார்க்கன் அல்லவா செழிக்கிறான்! நீதிமான் யார்? துன்மார்க்கன் யார்? எது நீதி? எது அநீதி? எது நியாயம்? எது அநியாயம்? எது பால்? எது விஷம்? ஒன்றுமே புரியவில்லையே!

சோமாலியா! வறுமையின் உச்சத்தையே தொட்டுவிட்ட நாடு! வறுமை என்னும் அரக்கனின் கோரப்பிடியில் சிக்கி மூச்சுத்திணறிக் கொண்டிருக்கும் நாடு! பசி பொறுக்க முடியாத தாய் ஒருத்தி பத்து மாதம் தவம் இருந்து பெற்றெடுத்த தன் செல்வத்தை அந்த மழலையைக் காட்டிலே போட்டுவிட்டு ஓடுகிறாள்! அங்கே, பிணம் தின்னிக் கழுகு ஒன்று அந்த இளம் பிஞ்சைத் தன் கோரப் பற்களால் கடித்துக் கடித்து சுவைக்கின்றது! கதறிக் கதறித் துடித்துத் துடித்துக் கழுகுக்கு இறையாகின்றது மழலைச் செல்வம்! அந்தத் துயரக் காட்சியை - கொடூரக் காட்சியை வீடியோவில் படம் பிடிக்கின்றான் தொலைக்காட்சிக் காரன்! உலகம் எங்கும் ஒளிபரப்புகின்றான்! அந்தக் கொடுமையைப் பார்த்துப் பார்த்து ரசிக்கின்றது இந்த உலகம்! இதை நீதி என்போமா? நியாயம் என்போமா? சேவை என்போமா? இல்லை, "வியாபாரம்" என்போமா? ஒரு மழலையின் தவிப்பை - கதறலை வியாபாரம் ஆக்குகின்றான் மனிதன்! ஆனால், அந்த வியாபாரத்திற்கு இந்த உலகம் சூட்டும் பட்டம் என்ன தெரியுமா? "சேவை" எது சேவை? எது வியாபாரம்? எது உண்மை? எது பொய்மை? எது நன்மை? தீமை? எதுவுமே புரியவில்லையே! இளைஞன் சாலமோனுக்கும் இதே குழப்பம் இதே மயக்கம். எனவேதான் துணிந்து கேட்கிறார் இறைவனிடம் "உம் மக்களுக்கு நீதி வழங்கவும் நன்மை தீமை பகுத்தறியவும் பகுத்தறியும் அறிவு ஞானம் தந்தருளும், ஆண்டவரே என்று.

"நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் . . ." இந்த மண்ணில் சிந்தப்பட்ட நீதிமான்கள் இரத்தம் எத்தனை எத்தனை! (மத். 23 : 34-45 படிக்க) பரபாஸா? கிறிஸ்துவா? அன்றும் இன்றும் என்றும் திருச்சபையின் பதில் - ஒரே பதில்; அவனைச் சிலுவையில் அறையும் "அவனைச் சிலுவையில் அறையும் பரபாசுகள்"!! எல்லாம் அரியணைகளில் கொலுமண்டபங்களில் கொலு வீற்றிருக்கிறார்கள் ஆனால், கிறிஸ்துவோ "பாளையத்திற்குப் புறம்பே" தொங்குகின்றார் சிலுவையில்!!

ஆண்டவரே! நான் சின்னஞ்சிறு பிள்ளை! உமக்கு அஞ்சி, உம் கட்டளைகளுக்குக் கீழ்படிந்து, நன்மை தீமை பகுத்தறிந்து, எந்நிலையிலும், எந்தச் சூழலிலும் நீதி ஒன்றே செய்திட, ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும்! ஆமென்!

**அருள்திரு. அ. ஜோ. சந்திரகுமார்**

| 09-06-2013 | பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு & சுற்றுப்புறச் சூழல் ஞாயிறு |
|---|---|

தொ.நூ. 8 : 15-22 உரோ. 8 : 18-25

தி.பா. 33 : 1-12 மத். 6 : 25-34

# கடவுளின் படைப்பைப் பாதுகாத்தல்
# Protection of God's Creation

இந்நாள் வரை படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது என்பதை நாம் அறிவோம். உரோ. 8 : 22

**இறைவேண்டல்**

*முழு உலகையும் படைத்த எம் கடவுளே! நீர் தந்துள்ள சுற்றுப்புற சூழலுக்காக உம்மைத் துதிக்கிறோம். மனிதர்களின் சுரண்டலாலும் மாசு படுத்துதலினாலும் அழிவுக்குள்ளாக்கியிருக்கும் படைப்பினைப் பாதுகாக்கவும், புத்தாக்கம் செய்யவும், படைப்பை முழுமையாக்கி அதன் வழியாய் உமது கிருபையை அனுபவிக்கவும் ஆற்றலும், தொலை நோக்குப் பார்வையும் தந்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம், ஆமென்.*

கடவுள் இவ்வுலகில் காணப்படுகிறவைகளையும், காணப்படாதவைகளையும் நேர்த்தியாய்ப் படைத்தார். படைத்தவைகளை ஒழுங்குபடுத்தினார். ஒழுங்குபடுத்தப்பட்ட படைப்புகள் அனைத்தும் அழகுள்ளதாய் இருந்தன. ஆனால் கடவுள் படைத்த படைப்புகள் இன்று உருக்குலைந்து மாட்சிமையிழந்து காணப்படுகின்றன. மனித சுயநலத்தினால் இயற்கை சூறையாடப்பட்டு சுற்றுப்புறச்சூழல் நெருக்கடி, உயிரினச்சூழல் நெருக்கடி, காடுகள் அழிப்பு, தண்ணீர் மாசுபடுதல், நிலம் மற்றும் நிலத்தடிநீர் மாசு, கடல்நீர் மாசு, வாயு மண்டல மாசு, தட்பவெப்பநிலை மாற்றம் போன்றவற்றை நாம் சந்திக்கின்றோம். இச்சூழலில் கடவுளின் படைப்பைப் பாதுகாப்பது எப்படி என்பதைத் தியானிப்போம்.

**1) படைப்பில் ஒருமை** (உரோ. 8 : 19)

கடவுளுடைய மக்கள் வெளிப்படுவதும் நாம் கடவுளுடைய மகிமையைப் பெறுவதையும் பவுலடியார் இறுதியியலின் முக்கிய கூறுபாடுகளாகக் கூறுவதோடு, முழுப்படைப்புகளும் ஒருமைப்படுவதாகக் குறிப்பிடுகின்றார். படைப்பைப் பாதுகாக்கும்





மனிதன் தான் இயற்கையின் ஒரு பகுதியே என்று இயற்கையுடன் ஒருமைப்படவேண்டும். இயந்திரமய வாழ்வின் நமது முன்னைய நடத்தையாகிய படைப்பிற்கு எதிராக இயங்கும் இயல்பை மாற்றவேண்டும். மட்டுமல்ல சுயநலத்தினால் உயிரிகளை உயிரற்ற நிலைக்குக் கொணரும் நிலையும் மாற வேண்டும்.

நோவா காலத்திலுள்ள பெருவெள்ள நிகழ்ச்சியைப் பார்க்கும்போது, மனிதன் இயற்கையின் ஒரு பகுதி என்பதைக் காணலாம். நோவாவுடன் உடன்படிக்கை செய்த ஆண்டவர், கருணை உள்ளத்தோடு வெள்ளப்பெருக்கு நிகழ்ச்சியில் அனைத்து உயிரினப் படைப்புகளையும் காத்ததற்கு நோவா நன்றியுடன் கடவுளுக்குப் பலி செலுத்தினார். (தொ.நூ. 8 : 15-22).

பூமி வெப்பமடைவதால் ஏற்பட்டுவரும் காலநிலை மாற்றம் தற்போது எதிர்நோக்கியுள்ள முக்கியமான சுற்றுச்சூழல் சிக்கலாகும். தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுதல், உணவு உற்பத்தி குறைதல், நிலப்பகுதியில் நீர் தேங்குதலால் புழு பூச்சிகள் அதிகரித்தல், தொற்றுநோய் அதிகரித்தல், தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் அழிந்து, சுற்றுச்சூழல் சீர்கேடு உருவாகிறது. படைப்பில் ஒருமை கொண்டுள்ள நாம் இதனைக் கருத்தில் கொள்வது நலம். மட்டுமல்ல இத்தகைய பாதிப்பிலிருந்து இயற்கையைப் பாதுகாத்திட கடவுளிடமிருந்து பெற்றிருக்கும் பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும்.

**2) படைப்பில் முழுமை** (உரோ. 8 : 20)

மனிதனின் மீறுதலினால் இயற்கையும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. மனிதன் இயற்கையின் விடுதலைக்கும், அதன் முழுமைக்கும், மகிமைக்கும் பாடுபடுதல் அவசியம். மனுக்குலம் படைப்பைப் பழுதடையச் செய்கையில் பரமன்பழுதுநீக்கும் பளுவான பணியைப் படைப்பின் வரலாற்றில் செய்து முழுமை அடையச் செய்வதே இறைவனின் இலட்சியம் (தி.வெ. 21 : 5). இறை ஆற்றல் வெளிப்படுவதற்கு மானுடம் ஏற்புடைய நிலையில் இருந்தால், இறைவனும் செயல்படவிரும்புகிறார். மனிதன் புதுப்படைப்பானால் கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுகிறவனாயிருப்பான். எனவே ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது அவர் புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கிறார். பழையன கழிந்து புதியன புகுந்தன அன்றோ! (2 கொரி. 5 : 17).

இயேசுகிறிஸ்து இயற்கையோடு வாழ்ந்தார் என்பதை அவரது வாழ்விலும் போதனையிலும் காண்கிறோம். மத். 6 : 26-இல் வானத்துப் பறவைகளை நோக்குங்கள் : அவை விதைப்பதுமில்லை;

அறுப்பதுமில்லை; களஞ்சியத்தில் சேர்த்துவைப்பதுமில்லை. உங்கள் விண்ணகத் தந்தை அவற்றுக்கும் உணவு அளிக்கிறார். அவற்றைவிட நீங்கள் மேலானவர்கள் அல்லவா!

ஓசோன் மண்டலத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து நாட்டில் முக்கியமாகப் பேசப்பட்டு வருகிறது. அதாவது நவக்கிரகங்களில் நாம் வாழும் பூமியில் மட்டுமே, காற்றும், நீரும், நிலமும் ஒன்று சேர்ந்து முழுமை அடைந்துள்ளது. இதனால்தான் பல்வகை உயிரினங்கள் பாருலகில் பலுகிப் பெருகி வாழ முடிகிறது. புவிப் பரப்பிலிருந்து பல கி.மீ. உயரம் வரையிலும் ஓசோன் படலமானது பரவி நிற்கிறது. இது சூரியனிடமிருந்து வெளிவரும் வெப்பக் கதிர்களை வடிகட்டி அனுப்புவதோடு, புறஊதாக் கதிர்களையும் தடுத்து நிறுத்துகிறது. ஆனால் இன்று தொழிற்சாலைகள், வாகனங்கள், குளிரூட்டிகள், போன்றவற்றிலிருந்து வெளிவரும் குளோரோ புளோரோ கார்பன் போன்றவை பசுமை வீட்டு விளைவை ஏற்படுத்தும். வாயுக்கள், ஓசோன் படலத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைத்து வருகிறது. அமில மழை ஓசோன் படலத்தில் ஓட்டைகள் உருவாகிட காரணமாகிறது. படைப்பை முழுமையாய்ப் பாதுகாக்க நாம் இதனைக் கருத்தில் கொள்வோம்.

**3) படைப்பில் ஆளுமை** (உரோ. 8 : 22)

கடவுளின் சாயலில் மனிதன் படைக்கப்பட்டவன். ஆணும் பெண்ணுமாகப் படைத்தார் என்ற கருத்தின் அடிப்படையில் மனிதனின் மேலாண்மை, பொறுப்பு இவைகள் ஆளுமையை அறிந்து கொள்ள முடிகிறது (தொ.நூ. 1 : 26-28). மனிதன் இதரப் படைப்புகளுடன் சரியான உறவுடனும் பொறுப்புடனும் பணிவிடைசெய்ய வேண்டும். மனிதன் இறைவனின் சாயலைப் பெற்றுள்ளதால் அனைத்துப் படைப்புகளுடன் நல்லுறவை கொள்ளவேண்டும் என்று கடவுள் அறிவுறுத்துகிறார்.

பவுலடியார் குறிப்பிடும்போது உரோ. 8 : 22-இல் இந்நாள் வரை படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது என்பதை நாம் அறிவோம் என்று எழுதுகின்றார். முழுப்படைப்பும் வேதனை நீங்கி விடுதலை அடையும் நாளை எதிர்பார்க்கும் நிகழ்வாக, திருவெளிப்பாடு 11 : 18-இல் வேற்றினத்தார் சினந்தெழுந்தனர், உமது சினமும் வெளிப்பட்டது. இறந்தோர்க்குத் தீர்ப்பளிக்கவும் உம் பணியாளர்களாகிய இறை வாக்கினர்கள், இறை மக்கள், உமக்கு அஞ்சும் சிறியோர், பெரியோர் ஆகிய அனைவருக்கும் கைம்மாறு அளிக்கவும் உலகை அழிப்பவர்களை அழிக்கவும் காலம் வந்துவிட்டது என்று பாடினார்கள்.



கடவுளின் படைப்பைப் பாதுகாத்தல்

1972-இல் ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச மாநாடு ஒன்றை ஸ்டாக் ஹோம் நகரில் கூட்டியது. அதில் மனித சமுதாயத்தின் சுற்றுப்புறச்சூழல் தொடர்பான ஒரு அறிவிப்பை வெளியிட்டது. அதன் அடிப்படையில், வளர்ச்சியடைந்த நாடுகள் அதிக அளவு கரியமில வாயுவை வெளியேற்றி வருகிறது. இதனால் பாதிப்புக்குள்ளாகும் நாடுகளுக்கு நிதி உதவி அளித்திட வேண்டும் என்ற போது, வளர்ச்சியடைந்த நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நாம் கடவுளின் படைப்பைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளோம். இயேசுகிறிஸ்து இயற்கையோடு வாழ்ந்ததை அவரது வாழ்விலும் போதனையிலும் அறிந்து கொண்ட நாம், இயற்கையின் வழியாக கடவுளைக் காண்போம். இயற்கையைக் குறித்த விழிப்புணர்வுகொள்வோம். இயற்கை மாசுபடுதலைத் தடுக்க முயற்சி மேற்கொள்வோம். அது இறையரசுப் பணிக்கு நம்மை வலுப்படுத்தும். இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்ட உண்மையின் அடிப்படையில் உலகினை மாற்றுருவாக்கம் செய்ய இயற்கையைப் பேணிப் பாதுகாப்போம்.

**அருள்திரு. M.P. விஜயகுமார்**

| 16-06-2013 | பெந்தேகோஸ்துக்குப் பின்வரும் 4-ஆம் ஞாயிறு |
|---|---|

விப. 13 : 17-22 உலகத் தந்தையர் நாள் உரோ. 8 : 1-17
திபா. 145 யோவா. 16 : 12-15

# ஆவியாரில் வாழ்வு

## Life in the Spirit

. . . தூய ஆவியின் துணையால், உடலின் தீச்செயல்களைச் சாகடித்தால், நீங்கள் வாழ்வீர்கள். (உரோ. 8 : 13)

**இறைவேண்டல்**

*தூய ஆவியாராம் கடவுளே! உம்மிலே வாழும் கிறிஸ்வின் உடனிருத்தலைக் கொண்டாடுகிறோம். நீர் இருக்கும் இடத்தில் தூய ஆவியாராம் காற்றினை வீசச்செய்து, வளமை தந்து, பராமரித்து பாதுகாக்கிறீர். எங்கள் தன்னல எண்ணத்தை எங்களிலிருந்து விலக்கி தூய்மைப் படுத்தி உமது படைப்பைப் பாதுகாக்கும், பண்படுத்தும் ஆற்றலைத்தாரும். நாங்கள் உமது பிள்ளைகளாய் உருமாற்றம் பெற எங்களைத் திடப்படுத்தி புதுப்பித்தருள வேண்டுமென்று உம்மோடு ஒன்றித்து வாழ்ந்து ஆளுகை செய்யும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம், ஆமென்.*

முல்லா கன்னத்தில் கை தாங்கியவாறு அழுது கொண்டேயிருந்தார். அதைக் கவனித்த ஒருவர் முல்லாவிடம் சென்று, ஏன் இவ்வாறு அழுதுகொண்டே இருக்கிறீர் என்று கேட்டார். அதற்கு முல்லாவோ போன மாதம் இறந்த என் தாத்தா, இறக்கும் முன் என் பேரில் 5 இலட்சம் போட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றார். சரி சரி அது போகட்டும், இனி அழாதே என்றார். சற்றுநேரம் தாண்டி மீண்டும் அழ ஆரம்பித்தார். இப்போது ஏன் அழுகிறாய் என்று கேட்டபோது போன வாரம் என் பெரியப்பா இறந்துவிட்டார், இறந்தவர் அவரின் எல்லாச் சொத்தையும் என் பேரிலே எழுதி வைத்துவிட்டு இறந்துவிட்டார் என்று அழ ஆரம்பித்தார். டேய், இறந்தவர் நல்லதை உனக்கு செய்துவிட்டு தானே இறந்திருக்கிறார். அப்புறம் மீண்டும் மீண்டும் ஏன் அழுகிறாய்? அதுவா, “இனிமேல் சாக என் வீட்டில் யாருமே இல்லையே” என நினைத்து அழுகிறேன் என்றாராம். மனிதர்கள் எப்பொழுதுமே ஊனியல்புக்குரிய வாழ்வையே விரும்புகின்றனர். உரோ. 8 : 1-17-இன் படி மனிதன் இரண்டு வகையான வாழ்வைச் சந்திக்கின்றான். (1) ஊனியல்புக்கேற்ப வாழ்வு (2) ஆவிக்குரிய இயல்புக்கேற்ப வாழ்வு.





**1. ஊனியல்புக்கேற்ப வாழ்வு** ( உரோ. 8 : 5)

ஊனியல்புக்கேற்ப வாழ்வு என்பது, இறை உணர்வுக்கு அப்பாற்பட்டு, தன் விருப்பத் தூண்டுதலுக்கு அடிமைப்பட்டு, கடவுளுக்கு எதிரான வாழ்க்கை வாழ்வதே ஆகும். திருமறையில் தொடக்க நூலில் ஆதாம் ஏவாள் இதற்கு எடுத்துகாட்டாக உள்ளனர். இவர்கள் கடவுளை விட்டு தூரமாய்ப் போகக் காரணம் ஊனியல்புக்குரிய வாழ்வு. இதனைப்போன்று சிம்சோனும், புதிய ஏற்பாட்டு “இளையகுமாரன்” ஆகியோர் இதற்கு சிறப்பான எடுத்துக்காட்டு. இன்றைய உலகில் ஊனியல்புக்குரிய வாழ்வுக்குள் அடிமைப்படுகிற மக்கள் தவறான ஆதாயம். தவறான நடத்தை இவைகளினால் தங்கள் வாழ்வையும் குடும்பத்தையும் கெடுத்துக் கொள்கிறார்கள். எனவே ஊனியல்பு மனநிலை கொண்டிருப்போருக்கு வருவது சாவே (உரோ. 8 : 6) எனப் பவுல் கூறுகிறார்.

உரோ. 8-ஆம் அதிகாரம் ஊனியல்புக்கேற்ப வாழ்வது கடவுளுக்கு எதிரானது என்பதனை விளக்குகின்றது. ஊனியல்புக்கேற்ப வாழ வேண்டுமென்ற தூண்டுதல் மனநிலையில் பாதிப்பையும், மானிடத்தோடு கொண்டுள்ள உறவு நிலையில் இடைவெளியினையும் ஏற்படுத்தி விடுகிறது. இதனால் கடவுளோடு உள்ள உறவு நிலையிலும் வெறுமை ஏற்படுகிறது. (எசா. 59 : 2) இத்தகைய நிலையை மாற்றிட சுயக்கட்டுப்பாடுள்ள வாழ்வுக்கு ஒப்படைப்பதே சிறப்பானதாகும். ஆகவே தான் பவுலார் இனி வாழ்பவன் நானல்ல (கலா. 2 : 20) என்று கூறி கிறிஸ்துவை முன்னிலைப்படுத்துகிறார். இதுதான் கிறிஸ்தவ பற்றாளரின் வாழ்வு இத்தகைய வாழ்வே உலகினை வெற்றி கொள்ளும்.

**2. ஆவிக்குரிய இயல்புக்கேற்ப வாழ்வு** (உரோ. 8 : 9)

இவ்வுலகில் அநீதியான வாழ்வு வாழாமல், இறையவருக்கு ஏற்புடைய நிலையிலும், தூய்மையாகவும், இரக்கம் செய்பவர்களாகவும், கட்டுப்பாட்டுடன் வாழ்வதே ஆவிக்குரிய இயல்புக்கேற்ப வாழும் வாழ்வு ஆகும். ஒரு மனிதன் ஆவிக்குள்ளாய் வாழும்போது தண்டனைத் தீர்ப்பில்லை என்று பவுல் விளக்கம் தருகிறார். காரணம் ஆவிக்குள்ளான வாழ்வு இவ்வுலகத்திற்கு நன்மை பயக்கின்ற வாழ்வு. பழைய ஏற்பாட்டு திருமறைப்பகுதியில் யோசேப்பின் (வி.ப. 13 : 17-22) எலும்பை இஸ்ரவேலர்கள் விடுதலைபெற்று வரும்போது கூடவே கொண்டு வருகிறார்கள். அதற்குக் காரணம் யோசேப்பின் தரமுள்ள வாழ்க்கை. தரமற்ற இடத்தில் யோசேப்பு தரமுள்ளவராய் இருந்துள்ளார். யோசேப்பு (i) நன்மைக்குத் தீமை செய்தவர் (ii) தீமைக்கு எதிர்த்து நின்றவர் (iii) சகோதரர்களை அன்புசெய்தவர் (iv) தந்தையை அரசரை விட பெரியவராகக் கருதியவர் (v)தூய்மையானவர். யோசேப்பு ஆவிக்குரிய இயல்புக்கேற்ப வாழ்ந்தார் என்பதில் சந்தேகம் இல்லை.

பவுலடியார் இந்த ஆவிக்குரிய இயல்புக்கேற்ப வாழ்வதை நான்கு நிலைகளில் விளக்குகின்றார்.

i) ஆவிக்குள் வாழ்வு : (தண்டனைத் தீர்ப்பற்ற வாழ்வு) ( 8 : 1)

ii) நீதியான வாழ்வு (8 : 2)

iii) வாழ்வும், அமைதியும் (8 : 6)

iv) கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வு (உறவின் வாழ்வு) (8 : 9)

ஒரு மனிதன் ஆவிக்குரிய இயல்புடன் வாழும்போது, அவர் பாவத்தை விட்டுத் தூயோனாய் வாழ்வார். இன்றைய உலகில், குடும்பங்களில் இந்த வாழ்வு விரும்பப்படுகிறது. ஆனால் இவ்வாழ்வைத் தேடிப் பார்க்கும் அளவுக்குக் குடும்பங்களில் பலவித பிரச்சனைகள். யோசேப்பைப் போலத் தரமுள்ள வாழ்வை வெளிக்காட்ட வேண்டும்.

இதன் அடிப்படையில் இன்றைய மனிதர்களை 3 நிலைகளில் பிரித்துப் புரிந்து கொள்வது நலம்.

**i) புனல் மனிதர்கள்**

புனல், எண்ணெய் ஊற்ற பயன்படுத்தபடுவது. இதில் எண்ணையையோ, தண்ணீரையோ ஊற்றினால் அது ஒரு பக்கத்தில் வாங்கி, மறுபக்கம் வழியாய் விட்டுவிடும். இதைப் போன்று சில மனிதர்கள் பெரியவர்கள் எதைச் சொன்னாலும், ஒரு காதில் வாங்கி மறுகாதால் விட்டு விடுவார்கள். இவர்கள் ஊனியல்புச் சிந்தை உடையவர்கள்.

**ii) சல்லடை மனிதர்கள்**

சல்லடை என்பது பொருட்களைப் பிரித்தெடுக்கப் பயன்படுத்துவது. இதன் தன்மை என்னவென்றால் பயன்படக்கூடிய பொருளைக் கீழே விட்டுவிட்டு தேவையற்ற பொருளை (கழிவு) வைத்துக்கொள்ளும். எடுத்துக்காட்டாய் இலை வடிநீரை அரிக்கும்போது நமக்குத் தேவையான இலைவடிநீர் கீழே வந்துவிடும். தேவையற்ற டீ தூள் தான்அரிப்பிலே இருக்கும். இதைப் போன்று சில மனிதர்கள் எது தேவையோ அவைகளை விட்டு விட்டு தேவையில்லாததை தன்னகத்தே கொண்டிருப்பர். இவர்களும் ஊனியல்புக்குரிய சிந்தை உடையவர்கள்.

**iii) "முறம்" மனிதர்கள்**

முறத்தின் தன்மை என்னவென்றால் கோதுமை, அரிசி இவைகளைப் புடைக்கும்போது, நல்ல பொருள் முறத்திலே இருக்கும். ஆனால் தேவையற்ற கழிவுகள் வெளியே தள்ளப்பட்டு விடும். அதாவது நல்லவைகளை மட்டும் எடுத்துக்கொண்டு, வீணானவைகளைப் புறந்தள்ளிச் செயல்படுவது. நல்லவைகளை எடுத்துவிட்டு தேவையற்றவைகளை விட்டுவிட்டு வாழ்ந்தால் வாழ்க்கையில், நிர்வாகத்தில் எந்தப் பிரச்சனையும் இல்லை. அதைத் தான் பவுலடியார் ஆவிக்குரிய இயல்புக்கேற்ப வாழும் வாழ்வு என்று நமக்கு விளக்கம் தருகிறார்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் ஒன்றிக்கப்பட்ட நிலையில் அவருடைய ஆவியோடு பொருள் நிறைந்த வாழ்வு வாழுவோம். தூய ஆவியாரின் ஆற்றலில் உலகினை வெற்றி கொள்வோம்.

**அருள்திரு. P. இராஜா ஸ்டாலின்**



**23-06-2013** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு

எரே. 15 : 15-21 — 1 பேது. 4 : 12-19

தி.பா. 13 — யோவா. 18 : 1-11

# பாடுகளின் வழி சான்று
# (Witness through Suffering)

. . . கடவுளின் திருவுளப்படி துன்பப்படுகிறவர்கள் நன்மை செய்வதில் நிலைத்திருந்து படைத்தவரிடம் தங்களை ஒப்படைப்பார்களாக! (1பேது. 4:19)

**இறைவேண்டல்**

*எங்கள் ஆண்டவராகிய கடவுளே!கிறிஸ்துவின் பாடுகள் வழியாய் மனுக்குலத்தின் மீது நீர் கொண்டுள்ள அன்பையும், மண்ணுலகு மீதுள்ள உம் மாட்சிமையும் வெளிப்படுத்தினீர் எப்போதெல்லாம் நாங்கள் உமக்காய் துன்புறுகிறோமோ அப்போதெல்லாம் உமது திருப்பெயர் எங்கள் வழியாய் மாட்சிமைப்படுகிறது என்பதையும் அதுவே எங்கள் மகிழ்வும், உள்ளத்து வாஞ்சையும் என்பதைப் புரிந்திட அருள்தர வேண்டுமென்று என்றென்றும் உம்மோடு வாழ்ந்து ஆட்சி புரியும் ஆண்டவர் இயேசு கிறிஸ் வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

பக்தன் ஒருவர் இப்படிக் கூறினார். "பாடுகள் நம்மைக் கோழைகளாக அல்ல. வீரர்களாக வடிவமைக்க வேண்டும்".

இயேசு தம் மலைப்பொழிவில் மத். 5 : 10-இல் நீதியின் பொருட்டுப் பாடனுபவிப்போர் பேறுபெற்றோர். விண்ணரசு அவர்களுடையது" என மொழிகிறார். இன்றைய கிறிஸ்தவர்கள், பாடுகளைக் கண்டு பறந்தோடுகின்றனர். சிலுவை சுமக்கிறேன்... சொகுசாய் வாழ முடியவில்லை என சீலன் இயேசுவையும் வெறுத்து விட்டு... சபையை விட்டு... சங்கத்தை விட்டு... விண்ணுலகம் எனக் கூறி சொகுசுப் பயணம் செல்வோரைப் பின்தொடர்ந்து... நாளடைவில் நாதனிடமிருந்த நம்பிக்கையை விட்டு விலகி... நகைச்சுவை நடிகர்கள் போல் தொலைக்காட்சிகளில் நடனமாடுகின்றனர். பாடுபடுவோரைப் பார்த்து பரமன் கைவிட்டார் எனப் பழித்துரைத்திடும் அவபக்திக்காரர்களைப் பார்த்திடலாம். இவர்கள் இயேசுவின் சிலுவையை ஏற்காமல் எறிந்துவிடுகின்றனர்.

பாடுகளின் வழி சான்றுடன் வாழ்ந்து பரமன் இயேசுவின் பாதச் சுவடுகளைப் பின் தொடர்ந்திட்ட பக்தர்களின் சான்றுகள். திருமறை மற்றும் திருச்சபை வரலாற்றில் தங்க எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

**1) பாடுகளினூடே நேர்மையாளராய் வாழ வேண்டும்** (1 பேது. 4 : 18)

"நேர்மையாளரே மீட்கப்படுவது அரிதென்றால்" -எனத் திருவிவிலியத்தில் பேதுரு திருத்தூதரின் திருமுகம் சுட்டிக் காட்டிடக் கண்டிடலாம்.

சில சமயங்களில் நற்செய்தியை ஏற்றுக் கொண்டு நேர்மையாளர் எனப் பெயரை மட்டும் வைத்துக் கொள்வது அல்ல. செயலில் நேர்மையாளராய் வாழ்ந்து நேர்மையினிமித்தம் பாடுகளை ஏற்றுச் சான்றுடன் வாழ்ந்திடல் வேண்டும்.

பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, சின்ன ஆசியா, பித்தினியா எனும் நாடுகளில், சிதறுண்டு, தற்காலிகக் குடிகளால் பாடுகளை ஏற்ற கிறிஸ்தவ மக்களுக்கு பேதுரு எழுதிடும் திருமுகத்தின் சான்று யாதெனில், நமக்காகப் பாடுபட்டு, பலியாடாய், அடிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் தூய்மையாக்கப்பட்டு, தூய ஆவியைப் பெற்ற இறை மக்களாய் வாழ்தல் வேண்டும் என்கிறார் (1 பேது. 1 : 2).

தொடக்கக்காலத் திருச்சபையில், துன்பங்கள் தொடர்ந்தன. தூய பேதுருவின் திருமுகம் சார்ந்த சான்று யாதெனில்... கிறிஸ்தவ வாழ்வில் வரும் துன்பங்கள் கண்டு துவண்டிட வேண்டாம். தூய ஆவியாரின் துணை கொண்டு... துடிப்புடன் வாழ்தல் வேண்டும். பாடுகளினூடே நேர்மையாளராக வாழ்தல் வேண்டும். மாறாக... திருடராகவோ... தீயவராகவோ கொள்ளையராகவோ, கொலைஞராகவோ, பிறர் காரியங்களில் வீணாய்த் தலையிடுபவராகவோ செயலாற்றித் துன்புறுகிறேன் என்றால், பாடுகளின் வழி சான்று பகர்தலுக்கு எதிர்மாறானது (1 பேது. 4 : 15, 16).

"நேர்மையாளர் தீமையின் முன்னின்று எடுத்துக்கொள்ளப் படுகின்றனர். அவர்கள் அமைதிக்குள் சென்றடைகின்றனர். நேர்மையான வழிமுறைகளைப் பின்பற்றுவோர் தம் இறுதிப் படுக்கைகளில் இளைப்பாறுகின்றனர் (எசா. 57 : 1, 2).

மதுரை அருள்திரு. வே சந்தியாகு ஆயர் அவர்கள் பாடிய கீர்த்தனைப் பாடல் 378-இன் வரிகள் பாடுகளின் வழியான வாழ்வின்





உண்மையை வலியுறுத்துகிறது.

"உத்தமமாய் முன்செல்ல உதவி செய்யும் யேகோவா,
ஊக்கமதைக் கைவிடாமல் காத்துக்கொள்ள உதவும்

1. பலவிதமாம் சோதனைகள், உலகத்தில் எமை வருத்தும்
   சாத்தானின் அக்கினி அஸ்திரங்கள் எண்ணா நேரத்தில் தாக்கும்
2. தீர்மானங்கள் தோற்காவண்ணம் காத்துக் கொள்ள உதவும்
   நேர்மையாக வாக்கைக்காக்க வழிவகுத்தருள வேண்டும்

**2) பாடுகளினூடே நன்மை செய்து வாழ வேண்டும்**

"துன்பப்படுகிறவர்கள் நன்மை செய்வதில் நிலைத்திருந்து"
(1 பேது. 4 : 19)

பாடுகள் நிறைந்த பார்தலத்தில், பாடுகளினூடே நன்மை செய்து வாழ வேண்டும் எனப் பேதுரு சான்றுரைக்கிறார்.

இன்பர் இயேசுவின் வாழ்க்கைப் பயணத்தில், நன்மை செய்ய வேண்டுமென்றே நாட்டம் கொண்டு, நானிலமெங்கும் சுற்றி நடந்தார். நாடி வந்த முடவர், குருடர், காது கேளாதோர், தொழுநோயாளிகள் மட்டுமல்லாது, தம்மைக் கல்லெறிய வந்த யூதர்கள் கேலி செய்தும் கேள்வி கேட்டும், நின்ற வேளையில் பெற்றோரற்ற பெத்தானியா வீட்டுக்கு வந்து, அனாதைப் பெண்மணிகளின் அழுகுரலைக் கேட்டு, லாசருவுக்கு உயிர் கொடுத்து வாழ வைத்தார் (யோ. 11 : 8, 11 : 37, 11 : 43, 44).

தன்னைப் பிடிக்க வந்த மால்குவின் காதை வெட்டிய பேதுருவைக் கடிந்துகொண்டு, வெட்டப்பட்ட காதை ஒட்டிக் கொடுத்த இயேசு கிறிஸ்துவும் பாடுகளினூடே நன்மை செய்து வாழவேண்டும் எனச் சான்றளிக்கிறார் (மத். 26 : 51, 52). இன்றைய உலகில் பாடுகளினூடே நன்மை செய்து வாழ்வோர் நலிந்து விட்டனர்.

தொடக்கக்காலத் திருச்சபையில், பவுலும், சீலாவும் சிறையில் தொழுமரத்தில் மாட்டப்பட்ட வேளையில் நள்ளிரவில் பாடல் பாடி, கடவுளிடம் மன்றாடினர். கைதிகள் கேட்டுக் கொண்டிருந்தனர். நிலநடுக்கம் ஏற்பட்டது. சிறைக்கூடம் அதிர்ந்தது. கதவுகள் திறந்தன. விலங்குகள் கழன்று விழுந்தன. கைதிகள் தப்பி ஓடியிருப்பர் என நினைத்து, சிறைக் காவலர் வாளை உருவித் தற்கொலை செய்து கொள்ள முயன்றார். பவுலார் உரத்தக் குரலில் நீர் உமக்குத் தீங்கு எதுவும் செய்யாதீர். நாங்கள் அனைவரும் இங்கேயே இருக்கிறோம்

என்றார். பிலிப்பி நகரில் சிறையிலிடப்பட்ட திருத்தூதர்களை அடித்துக் காயப்படுத்தி.. சிறையில் அடைத்த நபரை தற்கொலை செய்திடாது தடுத்து நிறுத்துகிறார். அன்றியும் பாடுகளினூடே நன்மை செய்து வாழ்ந்த பரமன் இயேசுவைப் பற்றிக் கூறி அவரில் நம்பிக்கை கொண்டிடக் கூறிடுகின்றார். அன்றிரவே சிறைச்சாலைக்காரரும், அவர் தம் குடும்பத்தினரும் அவரைச் சார்ந்தோரும் திருமுழுக்கேற்றனர். பாடுபடுத்தினோர், பாடுபட்டோரின் காயங்களைக் கழுவினர். விருந்திட்டு உபசரித்தனர் (திருத்தூதுவர்பணிகள் 16 : 16-36).

பவுலார் "தீமை செய்து பாடனுபவிப்பதைவிட, நன்மை செய்து பாடனுவிப்பது நல்லது" எனக் குறிப்பிடுகிறார்.

"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். மத். 5 : 13-இல் பரமன் இயேசு தம் சீடர்க்கு அறிவுறுத்துகின்றார். உப்பு தன்னைக் கரைத்திடுவோருக்கு, நன்மை செய்யும் நோக்கில் சுவை கொடுக்கும்.

உலகோர் என்னை நெருக்கிப் பலமாய் யுத்தம் செய்திடினும்
நலமாய் சர்வ ஆயுதம் பூண்டு நானிலத்தில் நாதா வெல்லுவேன்.
கஷ்டம் நஷ்டம் வந்தாலும், துட்டர்கூடிச் சூழ்ந்திட்டாலும்
அட்டதிக்கெங்கும் ஆளும் தேவனே அடியேன் உம்மில் அமரச் செய்திடும்
-தந்தேன் என்னை

**3) பாடுகளினூடே நம்பிக்கையுடன் வாழ வேண்டும்**

"படைத்தவரிடம் ஒப்படைத்து வாழ்வார்களாக அவர் நம்பத் தக்கவர்" (1 பேது. 4 : 9).

திருவிவிலியத்தில், பேதுருவின் சான்றினைக் கண்டிடலாம்... இயேசுவின் திருத்தூதுவர்களில் பேதுரு, பாடுகளினூடே குடும்பமாய்ப் பரமனில் நம்பிக்கை வைத்து வாழ்க்கைப் பயணம் தொடர்ந்துள்ளார். இவர் தம் சகோதரர் பெயர் அந்திரேயா. மனைவி உண்டு (1 கொரி. 9:5) மாமியார் உண்டு. மாமியார் வாழ்ந்த கப்பர்நகூம் வீட்டில் இயேசுவை அழைத்துச் சென்று அவள் காய்ச்சலை ஒரே வினாடியில் இயேசுவின் மூலம் மாற்றியுள்ளார். இவையெல்லாம் பேதுரு பாடுகளினூடே பரமனில் நம்பிக்கை கொண்டு நன்மையைப் பெற்றுக் கொண்டமைக்குச் சான்றாகும்.

அவர் கிறிஸ்துவில் வைத்துள்ள நம்பிக்கை கற்பாறை போன்று உறுதியானது. எனவே கர்த்தன் இயேசுவில் கற்பாறையென அழைக்கப்பட்டுள்ளார். (1 கொரி. 9 : 5)

"ஆபிரகாம் ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டார்





அதை ஆண்டவர் அவருக்கு நீதியாய்க் கருதினார் (யாக். 2:23) எனத் திருத்தூதுவர் யாக்கோபும் நம்பத்தக்கவரில், பற்றுறுதி கொண்ட ஆபிரகாமைப் பற்றிக் குறிப்பிடல் சிறப்பிற்குரியதாகும்.

யானைக்குத் தும்பிக்கையில் பெலன் உண்டு. நமக்கெல்லாம் நம்பிக்கையில்தான் பெலன் உண்டு. எரேமியா இறைவாக்கினர் கி.மு. 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 6-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தார். இந்நெடியப் பணிக்காலத்தில் இஸ்ராயேல் மக்களுக்கு நிகழவிருந்த தண்டனை பற்றி முன்னெச்சரிக்கை விடுத்தார். பாபிலோனியா மன்னனால் எருசலேம் திருக்கோவில் அழிவுற்றதையும், யூதா அரசனும் நாட்டினரும் நாடு கடத்தப்பட்டதையும் தம் கண்களால் காண்கிறார். எனினும் அம் மக்கள் பாபிலோனிய அடிமை வாழ்வினின்று மீளவிருப்பதையும், நாடு புத்துயிர் பெறவிருப்பதையும், நம்பிக்கையுடன் முன்னறிவித்தார். மக்களுக்கு எதிரான தண்டனை தீர்ப்பு உரைத்திடுமாறு கடவுளால் பணிக்கப்பட்டார். கடவுள் காட்டிய கடினப் பாதையினூடே கடந்து சென்ற எரேமியா கடவுளில் நம்பிக்கை வைத்துக் கலக வீட்டாரிடம் கடுமையாகச் சாடுகிறார்.

சிறைப்பாடுகளினூடே பாதிக்கப்பட்டவராயினும் சிறிதேனும் நம்பிக்கையில் தளரவில்லை. நான் அவர்கள் முன் வலிமை வாய்ந்த வெண்கலச் சுவராக்குவேன். அவர்கள் உனக்கு எதிராய் போராடுவார்கள். ஆனால் உன்மேல் வெற்றி கொள்ள மாட்டார்கள். ஏனெனில் உன்னை விடுவிக்கவும், காக்கவும், நான் உன்னோடு இருக்கிறேன். தீயோரின் கையினின்று நான் உன்னைக் காப்பேன். முரடரின் பிடியினின்று உன்னை மீட்பேன் (எரே. 15 : 20, 21). என்று சொன்ன ஆண்டவரின் வாக்கினை நம்பி நடைதொடர்ந்தார். கடவுள் சொன்னவாறு, பாடுகளினூடே பயணித்த பக்தனுக்குப் பாதுகாவலாயிருந்தார்.

சிறு வயதில் புதிய ஏற்பாட்டைக் கிழித்து நெருப்பிலிட்டுக் கொழுத்திய சீக்கியர் சாது சுந்தர் சிங் அமைதியிழந்தவராய், அறை வீட்டினுள் அமர்ந்து, அன்று விடியுமுன் சாந்தி நிலை கிடைக்காவிடில் தம் வீட்டண்டை வழியாய்ச்செல்லும் இரயில் முன் பாய்ந்து உயிர் விடக் கங்கணம் கட்டிய சுந்தர் முன் பரமனின் பேரொளி வீசியது. மின்னும் ஒளியில் காட்சியளித்த இயேசுவானவர் பேசினார். நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்? பார் நான் உனக்காகவும், முழு உலகிற்காகவும் சிலுவையில் பாடுபட்டு மரித்தேன். உயிர்த்தேன். என்றதும் சுந்தரின் பழைய சீக்கிய நம்பிக்கை சீக்கிரமாய் அகன்று சீலன் இயேசுவில் புதிய நம்பிக்கை பிறந்தது.

தந்தையும், உறவினர்களும் தந்த விஷ உணவைத் தின்ற பின்னும் சாகாது மாற்கு 16 : 18-இன் படி உயிர் பிழைத்துக் காவி உடை தரித்து, பாடுகளினூடே நம்பிக்கையுடன் பரமன் பணிக்குச் சான்றானார்.

சிறையில் அடைக்கப்பட்டார். பாதாளக் கிணற்றில் எறியப்பட்டார். கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்த அவரைக் கடவுளின் கரங்கள் மீட்டமை சிறப்பாகும். திபெத்துக் காடுகளில் பாடுகளினூடே இறைப் பணியாற்றி, சென்ற இடமெங்கும் மக்களிடம் நம்பிக்கை ஊட்டினார். வாழ்ந்து காட்டினார்.

திருத்தூதுவர் பேதுரு தொடக்கக்காலத் திருச்சபைக்கு எழுதிய கடிதம், அவர்தம் கடைசி காலக் கட்டத்தில் எழுதியிருக்க வேண்டும். நீரோவின் உபத்திரவக் காலத்தில் பேதுரு இக்கடிதத்தைப் பாபிலோனில் வைத்து எழுதியுள்ளார். 1 பேதுரு 1 : 13-இல் கிறிஸ்துவானவர் வெளிப்படும் போது கிருபையின் மேல் பூரண நம்பிக்கையாயிருங்கள் எனக் குறிப்பிடுகின்றார். சிறை வைக்கப்பட்டு சித்திரவதைப்பட்டு உலகிலேயே மிகவும் கொடூரமான மேமர்டன் சிறையில் உணவோ, நீரோ, ஒளியோ இல்லாமல் 9 மாதங்கள் அவதிப்பட்டும், மனம் தளராமல் பாடுகளினூடே பரமனில் நம்பிக்கை வைத்து கி.பி. 67-இல் தலைகீழாகச் சிலுவையில் சிரச்சேதம் செய்யப்பட்டுள்ளார். இன்றைய உலகில் கிறிஸ்தவர்கள் வம்புக் கையை நீட்டுகின்றனர். கிறிஸ்துவின் காயப்பட்ட அன்புக் கையை காணாமல் அவரில் நம்பிக்கையை காட்டாமல், பதவிகள், உதவிகள் தேடி பக்தியை விட்டு விலகி, நம்பிக்கைத் துரோகம் செய்து நான் எனும் ஆணவப் போக்கில் காலம் கழித்திடக் கண்டிடலாம். ஞா. பா. 316-இல் பக்தனின் பார்வை சிறப்பானது. தாவீதும் யோபும் யோசேப்பும் அநேக நீதிமான்களும் பாடுகளினூடே நம்பிக்கையுடன் வாழ்ந்துள்ளமை காணலாம்.

"கருத்தாய் தெய்வ தயவை எப்போதும் நம்பும் பிள்ளையை சகாயர் மறவார்".

"பேய் லோகம் துன்பம் உனக்குப் பொல்லாப்பு செய்யாதே... இம்மானுவேல் உன் கன்மலை, அவர் மேல் வைத்த நம்பிக்கை அபத்தம் ஆகாதே"

"அஞ்சாதிரு என் நெஞ்சமே... உன் கர்த்தர் துன்ப நாளிலே கண் பார்ப்போம் என்கிறார்".

**அருள்திரு. D.S. செல்வராஜ்**



**30-06-2013** பெந்தக்கோஸ்துக்குப்பின்வரும் ஆறாம் ஞாயிறு

| | |
|---|---|
| மீக் 6 : 6-8 | 1 பேது. 2 : 9, 10 |
| திபா. 99 | லூக். 6 : 27-36 |

# இறையரசின் சமூகம்

# Community in God's Kingdom

இயேசு கிறிஸ்து தமது திருப்பணியை ஆரம்பித்தபோது கூறிய செய்தி இறையரசைக் குறித்ததே. அவர் ஆற்றிய திருப்பணியின் வாயிலாக கடவுளின் அரசு நம்மிடம் முழுமை பெற்றுவிட்டது. "கடவுளின் ஆற்றலினால் பேய்களை ஓட்டுகிறேனே எனில் கடவுளின் அரசு உங்களிடம் வந்துள்ளது என்கிறார்." (லூக். 11 : 20). இந்த இறையரசு மக்களிடம் முழுமைபெற வேண்டும். இதற்கு நாம் செய்யவேண்டியது என்ன? "இதோ இறையரசு உங்களுக்குள் இருக்கிறதே" (லூக். 17 : 21). இதற்கு நம்முடைய பங்களிப்பு என்ன? கிறிஸ்தவர்கள் தாங்கள் எப்பொழுதும் கடவுளால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற மகிழ்ச்சியும், அதேவேளையில் நாம் உலகத்திற்கு ஒளியாய் இருக்கவேண்டும் என்ற உத்தரவாதமும் உடையவர்கள். நாம் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும் ராஜரீக ஆசாரிய கூட்டமாகவும் இருக்கிறோம். இறையரசின் தகவுகளை உலகுக்கு வெளிப்படுத்துவதும் இறையரசுக்கு மக்களை ஆயத்தம் செய்வதும் நமது கடமையாகும். இதில் நம்முடைய பங்கு என்ன என்பதை எட்டாம் நூற்றாண்டு தீர்க்கன் தெளிவுற எடுத்துக்காட்டுகிறார்.

1) நியாயம் செய்தல் (Act Justly).

2) இரக்கத்தைச் சிநேகித்தல் (Love Mercy).

3) மனத்தாழ்மையாய் நடத்தல் Walk humbly).

### 1) **நியாயம் செய்தல்**

நீதியும் நியாயமும் இறையரசின் ஆதாரம். கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு நியாயாதிபதியாகச் செயல்பட்டார். அவர்கள் வேதனையைப் பார்த்து எகிப்திலிருந்து கடவுள் அவர்களை விடுவித்ததை நாம்

அறிவோம். இறைவன் எளியோர்கள் பக்கம் நின்று நீதி செய்கிறவராகக் காணப்படுகிறார். திருமறையின் போதனை அதிகமாக நீதியை வலியுறுத்துகிறது. பிள்ளைகள் கொர்பான் காணிக்கையின் வழி தங்கள் பெற்றோருக்குச் செய்யவேண்டிய கடமை முடிந்துவிட்டது என எண்ணினர் (மத். 15 : 5). இயேசு அதனை வன்மையாய்க் கண்டிக்கிறார். பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதியின் கருவிகளாக ஒப்புக்கொடுங்கள் என்கிறார் பவுலார். இயேசு தமது உவமையில் விதவைக்கும் அண்டை வீட்டுக்காரனுக்கும் இருந்தப் பிரச்சனையில் நியாயம் செய்யக் கேட்டபோது மனிதன் வற்புறுத்தலின் பேரில் மட்டுமே நியாயம் செய்கிறவனாக இருக்கிறான். (லூக். 18 : 1-7) ஆனால் இறைவனோ எப்பொழுதும் நியாயம் செய்ய ஆயத்தமாய் இருக்கிறார். நாமும் எப்பொழுதும் நீதியும் நியாயமும் செய்ய அழைக்கப்படுகிறோம். நீதிக்காக குரல் கொடுக்க வேண்டியது திருச்சபையின் முழுப் பொறுப்பாகும். இறையரசின் சமூகத்திற்கு இது தேவை.

### 2) இரக்கத்தைச் சிநேகித்தல்

கடவுள் அன்பாகவே இருக்கிறார். இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கம் பெறுவார்கள் (மத். 5 : 7). மத். 18 : 23-35-இல் பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன் எஜமானால் மன்னிக்கப்படுகிறான். ஆனால் அவன் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டவனுடைய தொண்டையை நெரிக்கிறான். இதனால் கோபமடைந்த எஜமான் அவன் கடனை முழுமையாகக் கொடுக்கும் மட்டும் உபாதிக்கிறவனிடத்தில் ஒப்புக்கொடுத்தான் என்று காண்கிறோம். இயேசுவும், அவனவன் தன்தன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால் என் பரமபிதாவும் உங்களுக்கு அப்படியே செய்வார் என்றார். இயேசு மீட்பர் மட்டும் அல்ல. மேய்ப்பரும் கூட. சில வாய்ப்புகள் வாழ்க்கையில் ஒரு தடவை மட்டுமே கிடைக்கும். நன்மை செய்ய ஆண்டவர் ஓய்வுநாளையும் பயன்படுத்தினார். யோவான் 5 : 17-இல் 38 வருடம் வியாதியாயிருந்தவர் மேல் இரங்கி சுகம் அருளுகிறார். இறையரசின் சமூகம் இரக்கம் நிறைந்தவர்களை உடையது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

### 3) மனத்தாழ்மையாய் நடத்தல்

தாவீது அரசரிடத்தில் இருந்த நல்ல பண்புகளில் ஒன்று கடவுளுக்கு முன்பாகவும் கடவுளுடைய பணியாட்களுக்கு முன்பாகவும்





அதிகமாகத் தன்னைத் தாழ்த்தினது ஆகும். பல தவறுகள் செய்தது உண்மை எனினும் தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டபோது அதிகமாகத் தன்னைத் தாழ்த்தினான். (1 சாமு. 12 : 7-13). நாத்தான் தீர்க்கனின் உரையாடல் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. ஆனால் சவுல் ராஜாவின் வாழ்க்கை வித்தியாசமானது. அமலேக்கியருக்கு எதிராக யுத்தம் செய்து வெற்றிபெற்ற பொழுது மனிதர் ஆடு, மாடு, கழுதை எல்லாவற்றையும் அழிக்க சாமுவேல் தீர்க்கர் மூலமாகக் கூறப்பட்டது. ஆனால் சவுல் கொழுத்த ஆடு, மாடு செல்வங்களைத் தனக்கென்று வைத்துக் கொண்டான். ஆகவே தான் 1 சாமு. 15 : 22இல் பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும் ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம் என்கிறார்.

இறையரசையும், நற்செய்தியையும், நற்செயலையும் நாம் கணக்குப்போட்டு பார்க்க இயலாது. ஆனால் நற்செய்தி நம்மை நற்செயல் செய்யத் தூண்டுகிறது. கிறிஸ்துவின் வழி நாம் பெற்ற விடுதலையை தாழ்மையுடன் செயல்படுத்தும்போது முழுமையான இறையரசை அனுபவிக்க முடியும். இருண்டு கிடக்கின்ற அறை பிரகாசிப்பது ஒளிரும் விளக்கை ஏற்றிவைப்பதால் தான். அறையின் இருளைப்போக்க வேறுவழி இல்லை. அரதப்போலவே இன்றைய சூழ்நிலையும் உள்ளது. ஆண்டவர் கூறியதுபோல உலகிற்கு ஒளியாய்த் திகழவேண்டும். சாட்சிகளாய் வாழ்தல் என்பது ஒளிர்ந்து பிரகாசிப்பதே ஆகும். இதுவே இறையரசின் சமூகமாகும்.

**அருள்திரு. அறிவர் P.J. ஜெயசீலன்**

| 07-07-2013 | பெந்தக்கோஸ்துக்குப்பின்வரும் ஆறாம் ஞாயிறு |
|---|---|

விப. 36 : 1-7 பொறுப்பாண்மை ஞாயிறு II கொரி. 9 : 6-15
திபா. 116 : 12-19 லூக். 21 : 1-4

# பொறுப்பாண்மை : கிறிஸ்தவ ஈகை

# Stewardship : Christian Giving

விதைப்பருக்கு விதையையும், உண்பதற்கு உணவையும் வழங்குபவர், விதைப்பதற்கு வேண்டிய விதைகளை வழங்கி இவை முளைத்து வளரச் செய்து அறச்செயல்களாகிய விளைச்சலை மிகுதியாகத் தருவார். II கொரி. 9 : 10.

## இறைவேண்டல்

*ஆற்றல் நிறைந்த கடவுளே! உமது ஒரே திருமைந்தரை உலகுக்கு அனுப்பி எங்களுக்காக சிலுவை வரை தம்மை அர்ப்பணிக்கச் செய்தவரே! நாங்கள் உம்மில் அன்பு கூர்ந்து எங்களையும், எங்களுக்குரியவைகளையும் உமக்குக் கையளித்து படைப்பு முழுமைக்கும் உமது அன்பின் ஊடகங்களாகத் திகழ்ந்திட நன்றியுள்ள உள்ளம் தந்திட வேண்டுமென்று இவ்வுலகில் எங்களுக்காய் தன்னையே கொடுத்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

இறைமக்கள் மனநிறைவுடன் தாராளமாகக் கொடைகளை இறைப்பணிக்காகவும், நலிந்தோரின் நல்வாழ்வுக்காகவும் வழங்க தூய பவுலார் அழைப்பு விடுக்கின்றார். அதற்காக விவசாய விளக்கமொன்றை மேற்கோள் காட்டி கொரிந்து நகர இறைமக்களைத் தூண்டுகின்றார். விளைச்சலுக்கும், விதைப்புக்குமிடையே நெருங்கிய தொடர்புண்டு என்பதைக் குறிப்பிடுகின்றார். கட்டாயத்தாலன்றி முகமலர்ச்சியுடனும், மனமகிழ்ச்சியுடனும் கொடுக்க ஆலோசனை வழங்குகின்றார். "பொறுப்பாண்மை" என்பது பொறுப்புணர்வுடன் படைப்புகளைப் பராமரிப்பதும், பயன்படுத்துவதும், பகிர்ந்தளிப்பதுமாகும். கடவுள் மகிழ்வுடன் வழங்கும் சிறந்த கொடையாளர். அவர் எப்போதும் வழங்கிக் கொண்டேயிருக்கிறார். படைப்பு முதல் இன்றளவும் அவரது கொடை தொடருகின்றது. வார்த்தைகளால் விவரிக்க இயலாத கடவுளின் ஆசிகளையும், அருட்கொடைகளையும் மனதில் எண்ணிப்பார்த்து மகிழ்வுடன் படைப்பது நமது கடமையாகும். நமது கொடை அல்லது ஈகை எந்நிலையில் அமைய வேண்டுமெனத் திருவார்த்தைகள் சார்ந்து சிந்திப்போம்.





### 1. நன்றியுணர்வின் நற்கொடை (விப. 36 : 4)

தூயக வேலைகளில் ஈடுபட்டிருந்த கலைஞர்கள் தாங்கள் செய்து கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு வந்து, மோசேயை நோக்கி மக்கள் கொண்டுவருவது ஆண்டவர் கட்டளையிட்ட வேலைக்கும் அதிகமாகவே உள்ளது என்று அறிவித்தனர்.

எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்தபோது கடவுளை நோக்கி எழுப்பிய அபயக்குரலுக்குச் செவிமடுத்து, பதில் கொடுத்து, விடுவித்து அழைத்துவந்த கடவுளின் அன்பை இஸ்ரயேல் மக்கள் எண்ணிப்பார்த்தனர். ஏற்கனவே மோசேயின் அழைப்பை ஏற்று தாராளமாய் வழங்கினர் (வி.ப. 35 : 4-29). மீண்டும், தூயக வேலைக்கான தேவை அறிவிக்கப்பட்டபோது, மிகுந்த உற்சாகமாய்க் கொடைகளைக் குவித்தனர். தங்கள் குற்றங்களைத் தயவாய் மன்னித்து, விடுதலை வழங்கி, வளமான வாழ்வுக்கு நேராக வழிநடத்திய கடவுளை வழிபடுவதற்குரிய இடத்தைச் சிறப்பாகத் தயார் செய்ய மிகுந்த உற்சாகம் காட்டினர். பயணத்திலிருக்கும்போது, பாலைநிலத்தில் ஈகை என்பது எளிதானதல்ல. ஆனால் அவர்களது உள்ளத்திலிருந்து பொங்கியெழுந்த நன்றியுணர்வு சாத்தியமாக்கியது. . . . அனைவரும் உள்ளார்வத்தால் தூண்டப்பட்டனர். இவ்வாறு இஸ்ரயேல் மக்கள் ஆண்டவருக்குத் தன்னார்வக் காணிக்கை கொண்டு வந்தனர் (விப. 35 : 29).

நம் முன்னோர்களின் வாழ்வுநிலைகளை எண்ணிப் பார்க்கும்போது அடிமைகளாக்கப்பட்ட நிலை, அறியாமை இருள் சூழ்ந்த நிலை நோய் தாக்குதல்கள் வறுமையின் கோரத்தாண்டவம் இன்னும் பல. மேனாட்டு அருட்பணியாளர்கள் ஆண்டவருக்குத் தங்களை ஈந்ததால் நம்மிடையே வந்து ஆற்றிய அருள்தொண்டு அந்நிலையினின்று நம்மை மீட்டு வாழ்வுக்கு வழிநடத்தியது. இன்றைய நம் வாழ்வுநிலைகளை எண்ணிப்பார்க்கும்போது கல்வியிலும், பணிகளிலும், வாழ்க்கை வசதிகளிலும், சமூக நிலையிலும் பெரும் வளர்ச்சி பெற்றுள்ளோம். ஆண்டவருக்காய், அறப்பணிகளுக்காய் கொடைகளை வழங்கும்போது நன்றியுணர்வுடன் செயல்படுகிறோமா? (II கொரி. 9 : 8).

நமக்கு நன்மைபுரிந்தோர் எனச் சிலரை நாம் சிறப்புப்படுத்துகின்றோம்; அது பொருத்தமானதே, எனினும், அவர்களை நன்மையின் ஊடகங்களாய்ப் பயன்படுத்தி நமது நன்மைகளுக்காக ஆண்டவர் செயல்படுகிறார் எனும் நன்றியுணர்வு நம்மிடமிருந்து வெளிப்படவேண்டும். நமது ஈகை நன்றியுணர்வின் நற்கொடைகளாய் அமையவேண்டும்.

### 2. மனநிறைவின் மகிழ்வுக் கொடை

ஒவ்வொருவரும் தம்முள் தீர்மானித்தபடியே கொடுக்கட்டும், மனவருத்தத்தோடோ கட்டாயத்தினாலோ கொடுக்கவேண்டாம். முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்.

(II கொரி. 9 : 7). அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது முதுமொழி. மனநிறைவே முகமலர்ச்சியை ஏற்படுத்தும். எனவே மனநிறைவோடும் முகமலர்ச்சியோடும், மகிழ்ச்சியோடும் ஈவதே சிறப்புக்குரியதாகும்.

"அட்டார்கேயா" (autarkcia) என்ற கிரேக்க வார்த்தை "போதுமான" அல்லது "நிறைவான" என்று பொருள் தருகிறது. இவ்வார்த்தை "சினிக்" மற்றும் "ஸ்தோயிக்" தத்துவத்தில் (Cynic and Stoic Philosophy) சுய முயற்சியால் தன்னிறைவு பெற்ற நபரைக் குறிப்பிடுவதாக அமைகிறது. தூய பவுலார் "நிறைவு" என்பது நமது முயற்சியால் நாம் பெற்றுக்கொள்வதல்ல, அது ஆண்டவரால் அருளப்படுவது என்ற பொருளில் இவ்வார்த்தையைப் (autarkcia) பயன்படுத்துகிறார் (II கொரி. 9 : 8). மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை (திபா. 24 : 1).

படைப்புகள் அனைத்தும் ஆண்டவருக்குச் சொந்தமானவை. நாமும் அவருக்குச் சொந்தமானவர்கள். எனவே, நன்மைகளை நமக்கு அருளும் கடவுளுக்குத் தாராளமாய் மனநிறைவுடன் மகிழ்வுக் கொடைகளை நாம் கொடுக்கவேண்டும். வாழ்விழந்து நிற்கும் வறியோரும், ஓரங்கட்டப்பட்ட மக்களும், உரிமைகள் மறுக்கப்பட்டோரும் நம் ஆதரவாலும், நற்கொடைகளாலும் வாழ்வுபெற வழிசெய்யவேண்டும். எனக்கு நிறைவு வழங்குபவர்கடவுள் என்ற உணர்வுடன் பிறர் நிறைவு பெறுவதற்கு ஏதுவாக நமது கொடைகளும், செயல்களும் அமையவேண்டும். வாழ்வில் நாம் பெறும் நன்மைகளால் மனநிறைவு பெற்று மகிழ்வுடன் நிறைவாகப் படைக்கவேண்டும். கல்வி, வேலைவாய்ப்பு, குடும்ப வாழ்வு, தொழில் ஆசீர்வாதங்கள், பொருளாதார வளர்ச்சி போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளும்போது மனநிறைவுவேண்டும். திருப்தியடையாத, மனநிறைவில்லாத நிலையில் மகிழ்வுடன் படைக்க இயலாது.

மதுரைக்கு அருகில் கூழூர் என்ற பெயரில் ஒரு கிராமம் அமைந்துள்ளது. அந்த கிராமத்திற்கு இப்பெயர் வரக்காரணமான ஒரு வரலாற்றுச் செய்தி உண்டு. மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்துவந்த அரசர் பிச்சைக்காரராக வேடமணிந்து தம் மக்களது வாழ்வு நிலைகளை அறியச் சென்றார். கடுமையான வெயிலால் தாகமும், பசியும் அவரை வாட்ட பல வீடுகளிலும் உணவு நாடி கதவைத் தட்டினார். அனைவரும் துரத்தியடித்தனர். தொலைவில் தெரிந்த குடிசையொன்றை நாடிச் சென்றார் அரசர். அங்கிருந்த மூதாட்டி, அப்போதுதான் தன்னிடமிருந்த பழைய கூழைக் குடிப்பதற்காகக் கிண்ணத்தில் ஊற்றிக் கொண்டிருந்தார். பிச்சைக்காரர் ஒருவர் பசியுடன் வந்துள்ளார் என்பதையுணர்ந்த மூதாட்டி உடனடியாகக் குடிசையினுள் அழைத்து அந்தக் கூழை மகிழ்ச்சியுடன் வழங்கினார். மனநிறைவுடன் அரண்மனை திரும்பிய மன்னர் சேவகர்களை அனுப்பி, அம்மூதாட்டியை அழைத்து வரச்செய்தார். நான் தான் உங்களிடம் கூழ்பெற்ற பிச்சைக்காரன் எனக் கூறி ஆச்சரியப்படுத்தினார். அழகிய வீடு ஒன்று கட்ட ஏற்பாடு செய்து, அந்த முழுக் கிராமத்தையும் மூதாட்டிக்குச் சொந்தமாக வழங்கினார்.





மன்னரை உபசரிக்கத் தவறியவர்கள் செய்தியறிந்து வருந்தினர். அரசர் கூழ்பெற்றதற்காக வழங்கப்பட்ட இடம் என்பதை நினைவுபடுத்தும் நிலையில் அந்த கிராமம் "கூழூர்" எனப்பெயர் பெற்றுள்ளது. மனநிறைவுடன் நாம் வழங்கும் மகிழ்வுக்கொடைகள் வறியோரை நிறைவுள்ளோராக்கும், நம் ஆண்டவரை மகிழ்ச்சியாக்கும்.

**3. இறைப்பணிக்கு இனியகொடை** (லூக். 21 : 4)

இவரோ தமக்குப் பற்றாக்குறை இருந்தும் தம் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டுவிட்டார் என்றார்.

இறைஇல்லத்தில் இறைவரை வழிபட வந்த வறுமையில் வாடிய கைம்பெண், தனது வாழ்வாதாரமாக இருந்த அனைத்தையும் ஈந்தார். எனவே தான் இது சிறப்புக்குரிய இனிய கொடை என இயேசு கிறிஸ்து புகழ்ந்துரைத்தார். சுயநல நாட்டம் சிறிதுமின்றி, இறைப்பணிக்கான இனிய கொடையாக, இருந்த அனைத்தையும் வழங்கிவிட்டார்.

நற்செய்தியால் நல்வாழ்வு பெற்ற நாம் இறைஇல்லத்தின் பணிகளுக்காகவும், திருப்பணிகளுக்காகவும், நற்செய்தி அறிவிக்கும் அருட்பணிக்காகவும், நலிவுற்றோர் வளம்பெறவும் மனமகிழ்ச்சியுடன் நிறைவாக வழங்கவேண்டும். (மலா. 3 : 10)

. . . இனிமேல் தூயகத்துக்காகக் காணிக்கை கொண்டுவர வேண்டாம் (விப. 36 : 6)

தூயக பணிக்கு காணிக்கைகளை உடனே கொண்டு சென்றவர்கள் படைத்தனர். யோசனை செய்து கொண்டிருந்தோரும், தாமதித்தவர்களும் காணிக்கை படைக்கும் வாய்ப்பை இழந்தனர். எனது கொடைகளைக் குறைத்துவிட்டால் அல்லது நிறுத்திவிட்டால் இறைப்பணிகளை முடக்கிவிடலாம் என்ற இறுமாப்பு முறையல்ல. கடவுள் எவரையும் தமது பணிகளுக்காகப் பயன்படுத்த இயலும். ஏனெனில் இறைவனை மாட்சிப்படுத்த கற்களையும் அவர் பயன்படுத்தலாம் (லூக். 19 : 40).

கடவுள் தம் நிறைவான கொடைகளால் நம்மை மகிழ்விக்கின்றார். மானுடத் தன்மை ஏற்று, சிலுவையில் தம்மை ஒப்படைத்து நமக்கு மீட்பையும், புதுவாழ்வையும் வழங்கியுள்ளார். இறைச்சாயலில் படைக்கப்பட்ட நாம் இறைப்பண்புகளுடன் வாழ எதிர்பார்க்கப்படுகின்றோம். கடவுள் நம்மைப் பொறுப்பாண்மையுடன் செயல்பட அழைக்கின்றார். நமது கொடைகள் நன்றியுணர்வின் நற்கொடைகளாக, மனநிறைவின் மகிழ்வுக்கொடைகளாக, இறைப்பணிக்கு இனிய கொடைகளாக அமைந்து கடவுளின் திருப்பெயரை மாட்சிபடுத்துவதாக அமையட்டும். வளம் அருளும் ஆண்டவரின் நிறைவுகளை பெற்றுவாழும் நாம் பிறர் வாழவும், இறைவனின் பெயர் மாட்சிப் பெறவும் நம்மை அவர் கரங்களில் படையல்களாக்குவோம்.

**அருள்திரு. R. ஹென்ஸ்லின் நேசராஜ்**

| 14-07-2013 | பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் 8-ஆம் ஞாயிறு |
|---|---|

எரே. 18 : 1-10 இறையியல் கல்வி ஞாயிறு 1 கொரி. 1 : 18-29
திபா. 119 : 89-104 மத். 13 : 10-17

# இறையியல் கல்வியும் திருப்பணிக்கான உருவாக்கமும் (Theological Education and Ministerial Formation)

"ஆனால் நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப்பற்றிப் பறைசாற்றுகிறேம்". 1 கொரி. 1 : 23

**இறைவேண்டல்**

*நல்ல ஆயராம் எங்கள் கடவுளே! உமது மக்களாக கற்றுக்கொள்ளவும், வாழ்வு மூலம் உமது உண்மையை பிறருக்கு அறிவிக்கவும் எங்களை அழைத்துள்ளீர். நாங்கள் உமது திருவாக்கையும், உமது திரு விருப்பையும் கற்றுக்கொள்ளும் அறிவும், புரிந்து பிறருக்கு அறிவிக்கும் ஞானமும் தந்தருளும். உண்மையுடனும் உளத்தூய்மையுடனும் உமக்கு பணியாற்ற ஒப்படைப்புள்ள மக்களை எங்கள் இறையியல் கல்லூரிகளில் கொண்டு வாரும். அவர்கள் உம் திருவாக்கை புரிந்து, அதை விவரித்துக் கூறும் வரங்களால் நிறைந்து, அனைத்து மக்களை உமது உண்மை, நீதி என்பனவற்றை மகிழ்வுடன் கற்று வாழ்வில் பிரதி பலிக்கச்செய்ய ஆற்றல் தரவேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம், ஆமென்.*

**முன்னுரை**

இறையியல் கல்வியும், திருப்பணிக்கான உருவாக்கமும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல ஒன்றையொன்று சார்ந்துள்ளன. இறையியல் கல்வி என்பது நாம் வாழும் சூழலில் கடவுளின் வார்த்தைகளையும் (Word of God) கிறிஸ்தவ நம்பிக்கையையும் (Christian Faith), கோட்பாடுகளையும் புரிந்துகொள்வதுதான் இறையியல் கல்வியாகும். இந்தக் கல்வி திருப்பணி உருவாக்கத்திற்கு (Ministirial Formation) பயன்படுகிறது. இறையியல் கல்வி இறைப்பணியை உலகில் நிறைவேற்ற மக்களை ஆற்றல்படுத்துகிறது. Fr. Valken என்பார் கூறுகையில், சமூகத்தை சரியாய்ப் புரிந்து கொள்வதற்கு இறையியல் பகுப்பாய்வு மிக அவசியம் என்கிறார். அதற்கு இறையியல் கல்வி உதவி செய்கிறது. இந்த





இறையியல் கல்வி அருட்பணியருக்கு மட்டுமல்ல இறைமக்களுக்கும் தேவை. ஏனெனில் இதுவே இறைப்பணி உருவாக்கத்திற்கு அடித்தளமாக அமைகின்றது. இவைகளைத் திருமறைப் பகுதி சார்ந்து சிந்திப்போம்.

**1. இறைவாக்கு** (Word og God)

இறைவாக்கு வலிமை கொண்டது, மனிதருக்கு நுண்ணறிவினைத் தருகிறது. மட்டுமல்ல இறைவாக்கின் தன்மை, சூழல், காரணம், இவைகளையும் இறையியல் கல்வி தெளிவுபடுத்துகிறது. பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் கடிதத்தில் சிலுவைச் செய்தி மீட்பு பெறுவோருக்கு கடவுளின் வல்லமையாகக் கருதப்பட்டது. இயேசுநாதர் தாம் வாழ்ந்த காலத்தின் பார்வையில் முற்றிலும் வேறுபட்டிருந்தார். இதன் விளைவுதான் சிலுவை. இச்சிலுவையின் நற்செய்தி இவ்வுலக அறிவைவிட சிறந்த நுண்ணறிவு என்கிறார் (1 கொரி. 1 : 18-25). இந்த ஞானம் கண்ணுக்குப் புலப்படாத மனித அறிவுக்கு அப்பாற்பட்ட ஒன்று. ஆனால் சிலுவை அன்பைப் புரிந்து கொள்வோருக்கு இந்த அறிவு கடவுளால் ஏற்படுத்தப்பட்டது (1 கொரி. 1 : 9, 10). இறையரசின் செய்திகளைப் புரிந்து கொள்ள சமூகச் சூழல் சார்ந்த உவமைகளால் இயேசுநாதர் கூறியவைகளை மக்கள் எளிதாகப் புரிந்து கொண்டனர். இச்செய்திகளால் பலர் மனமாற்றமடைந்தனர். புரட்சிகரமான போதனைகளைப் புரிந்து கொண்டனர் (மத். 13 : ) அப்போஸ்தலர்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றிய வாக்குரைத்தபோது தூயாவியார் இறங்கினார். பேதுரு போன்றோர் அருட்செய்தி வழங்கியபோது மக்கள் புதுவாழ்வு பெற்றனர் (திப. 2, 3). இன்றும் வாழும் சூழலுக்கு எற்ப இறைவாக்கு அறிவிக்கப்படுமானால் அவைகள் அனைவருக்கும் பயனுள்ளதாக அமையும்.

**2. இறைவனின் திருவுளம்** (God's Will)

கடவுள் நடத்துவார் என்ற நம்பிக்கையில் அவரது திருவுளத்திற்கு அர்ப்பணித்து அவர் காட்டும் பாதையில் நடப்பதுதான் இவ்வுலகின் உண்மையான வாழ்வாகும். இத்தகைய வாழ்விற்கு தெளிவான பாதையினைக் காட்டுவது இறையியல் கல்வியாகும். இறைவாக்கினைச் சரியாய்ப் புரிந்து கொண்டு நம்பிக்கை கொண்டால் மட்டுமே இறைவனின் திருவுளப்படி வாழ முடியும். திருப்பாடலாசிரியர் கூறுகையில் இறைவாக்கைக் கடைபிடிப்பதனால் நீதி நெறி, தவறாத அமைதியான வாழ்வைப் பெற்றதாகக் கூறுகிறார் (தி.பா. 119 : 102). இறைவாக்கை நம்பியிருப்பதால் பல்வேறு துன்பங்கள் இருப்பினும் மனநிறைவோடு வாழ்கின்றேன் என்கிறார். அதுபோல இறைமக்களின்

வாழ்வு இறைவன் கையில் விருப்பப்படி அமையவேண்டும் என அழைப்பு விடுக்கின்றார்.

கடவுள், எரேமியாவிடம் தன் திருவுளத்தைக் கூறுகையில் தன்னைக் குயவனாகவும், மக்களைக் களிமண்ணாகவும் உருவகப்படுத்தி அவரது திருவுளப்படி வாழக் கட்டளையிடுகிறார் (எரே. 18 : 1-10). இறைவாக்கை மீறிச் செல்லும்போது அமைதலற்ற வாழ்வே ஏற்படும் என்றும் கூறுகிறார் (எரே. 18 : 13-17). இறைப்பற்றாளர்கள் தாங்கள் வாழும் சூழலுக்கு ஏற்றபடி கடவுளின் திருவுளத்தைப் புரிந்து கொண்டார்கள் (தி.பா. 23, தொ.நு. 45 : 5, யோபு 1 : 21, 2 : 10, தானி. 3 : 6).

இன்று திருச்சபைகளில் இதுபோன்ற திருவுளச் செய்திகளைவிட செழுமை நற்செய்திகளே அதிக பங்கு வகிக்கின்றன. இத்தகைய தவறுகளைச் சுட்டிக்காட்டுவதும் இறையியல் கல்விதான். இறைப்பற்றாளர்கள் துன்புறும்போது மகிழ்வோடு சான்று பகர்ந்தார்கள். துன்பத்தை இறைவனின் திருவுளமாக ஏற்றுக் கொண்டார்கள். CúVÑSôRÚmÕu ×ßRû X (Suffering) முன்மாதிரியாகத் தந்துள்ளார் (லூக். 22 : 41). இறைமக்களாகிய நாம் இறைவனின் திருவுளத்தை ஏற்று வாழ்வது சிறப்பானதாகும்.

### 3. **இறைப்பணி** (Ministry)

இறைப்பணி என்பது இறைவாக்குகளைக் கற்றுக்கொடுப்பதும், இறைமக்களை இறைவனின் திருவுளப்படி வாழ ஊக்குவிப்பதும், திருச்சபையாகக் கூட்டு வாழ்வில் நெறிப்படுத்துவதும்தான் இதன் உட்கூறுகளாக அமைகின்றன. இவைகளைச் சிறப்பாய் நிறைவேற்ற இறைப்பணியின் அமைப்பு, திருப்பணியாற்றும் முறைகள். இறைப்பணியாற்றுவோரின் ஒப்படைப்பு, போன்றவைகள் இறைப்பணியின் அடித்தளங்கள் ஆகும். இவைகளைச் சரியாய் நெறிப்படுத்துவதுதான் திருப்பணியின் உருவாக்கம் (Ministerial Formation). இறைப்பணியில் உருவாக்கம் சரியாய் அமைந்தால் மட்டுமே இறைப்பணி சிறப்பாக அமையும்.

எரேமியாவை இறைப்பணிக்குக் கடவுளால் அழைக்கப்பட்டபோது தயங்கினார். ஆனால் கடவுள் அவரை விடவில்லை. அனுப்புதல், எச்சரித்தல், அச்சமின்மை, சீர்திருத்தம், அருள்வாக்கு, பொறுப்பு போன்ற இறைப்பணி அடித்தளங்களுடன் இறைவாக்கினராய் உருவாக்கினார் (எரே. 1 : 6-10). இந்த அடித்தளங்களே எரேமியாவின் பணியின் சிறப்புக்குக் காரணமாகும் (எரே. 10 : 1-25, 12; 18, 22).





மோசே, இறைமக்களை விடுதலைப் பயணத்தில் தன் மாமனாகிய எத்திரோ வழியாக மக்களை நியாயம் விசாரிக்க நல்ல முறையினை கற்றுக் கொண்டார்.

இறைவாக்கினர்களான சாமுவேல், எலியா, எலிசா போன்றோரும், பவுலடியார், இயேசுவின் சீடர்கள், திருத்தூதுவர்கள், திருச்சபைத் தலைவர்கள் போன்றோரும் உண்மையாய் உழைத்த இறைப்பற்றாளர்களாவார்கள். இவர்களது இறைப்பணி கடவுளுக்கு ஏற்புடையதாய் இருந்ததென்றால் அவர்களது இறைப்பணியின் அடித்தளம் உறுதியாயிருந்தது.

திருப்பணியில் திமொத்தேயுவை உற்சாகப்படுத்தியபோது எப்படி திருப்பணி செய்ய வேண்டும் என்பதை பவுல் தெளிவாகக் கூறியுள்ளார் (1 தீமோ. 5 : 1-24). அனைத்திற்கும் மேலாக இயேசுநாதரின் அருட்பணி முறைமைகளே நமக்கு அடித்தளம்.

இன்று நாம் திருச்சபைகளில் சந்திக்கும் பல்வேறு போராட்டங்கள், அரசியல் குழப்பங்கள் இவைகளின் மத்தியில் அருட்பணியரும், இறைமக்களும் தங்கள் அழைப்பிலும், அர்ப்பணத்திலும் உறுதியாயிருந்தால் மட்டுமே கடவுள் அழைத்த நோக்கத்தை நிறைவேற்ற முடியும். அருட்பணியாளராகச் சமூகத்தைத் திறந்த கண்களோடு பார்க்க வேண்டும் (லூக். 4 ; 16-19). இதற்கு இயேசுநாதரின் திருப்பணி நமக்கு நல்ல ஓர் அடித்தளம். இவைகளைக் கொண்டு நமது அருட்பணி அமையுமானால் அதுவே கடவுளுக்கு ஏற்புடைய இறைப்பணி உருவாக்கமாகும்.

## முடிவுரை

பல்வேறு சமயங்கள், மொழி, கலாச்சாரம், பண்பாடுகள் கொண்ட நம் நாட்டில் தற்போதுள்ள சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், வன்முறை, இயற்கை பேரிடர் போன்றவை அதிகரித்துள்ளன. இவைகளை இறையியல் தெளிவுகளோடும் நல்ல இறைப்பணி அடித்தளங்களோடும் உருவாக்கப்பட்ட உத்தம இறைமக்களாய், இறைப் பணியாளர்களாய் நின்றால் மட்டுமே மேற்கொள்ள முடியும். இவ்வுலகில் போராட்டங்களை எதிர்கொள்ளவும், உறுதியாய்ச் சான்று பகரவும் முடியும். ஆகவே இத்தகைய ஒப்படைப்புடன் இறையியல் பணிப் பயணத்தைத் தொடருவோம்.

**அருள்திரு. S. பெல்சன் சிராமணி**

**21-07-2013** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் ஒன்பதாம் ஞாயிறு

விப. 3 : 1-12 II தீமோ. 4 : 1-5

தி.பா. 80 : 1-7 யோவா. 21 : 15-19

# ஆயர் அருட்பணி

## Pastoral Ministry

" . . . என் ஆட்டுக்குட்டிகளைப் பேணிவளர்" (யோவா. 21 : 15)

### இறைவேண்டல்

*பல்வேறுபட்ட பணிகளுக்காக மக்களைத் தெரிந்து கொண்டு வழிநடத்தும் நல்ல கடவுளே! ஆயர் பணியின் வாயிலாக உமது பரிவும், இரக்கமும் மக்களை சென்றடையவும், இப்பணி உமது அரசின் வளர்ச்சியை உருவாக்கிடவும் உமது அருளைத் தரவண்டுமென்று உம்மோடும், தூய ஆவியாரோடும் என்றென்றும் இணைந்து ஆளுகை செய்யும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துன் வழியாய் வேண்டுகிறோம், ஆமென்.*

இறைவனின் மந்தையை மேய்க்கின்ற உன்னதமான ஆயர் பணிக்கு புதிய அர்த்தம் இயேசுநாதரால் தரப்படுகின்றது. இறைமக்கள் எல்லாரும் நல்வழிகாட்டும் ஆயர்களாய் மாறிட வேண்டும். இந்த உலகில் இறைவனால் படைக்கப்பட்ட அத்தனை மனிதரும் தன்னோடு வாழும் மனிதருடைய வாழ்வின் நலனிற்கு பொறுப்புள்ளவரே என்று தன்னுடைய வார்த்தை, வாழ்வு வழியாய் ஆண்டவர் கற்றுத் தருகின்றார்.

பொதுவாக ஆயர் (மேய்ப்பர்) பணியைக் கற்றுக்கொள்ளும்போது மந்தையோடு செல்லும் இயங்குநிலை கொண்டதாயும், வாழ்விற்கு வழிகாட்டும் பணியாயும் காலத்தின் மாற்றங்களினால் ஏற்படும் அழிவுகளிலிருந்து பாதுகாக்கும் பொறுப்புமிக்க பணியாகவும் இருக்கின்றது. ஆடுகளை அறிதலும், ஆடுகள் ஆபத்துகளைத் தேடிச் செல்லும்போதும், ஆபத்துக்கள் ஆடுகளைத் தேடி வரும்போதும் குரல் கொடுப்பவராயும் ஆயர் பணி செய்ய அழைக்கப்படுகின்றார். இஸ்ரயேலருடைய வாழ்வில் கடவுள் மேய்ப்பராயும், மக்கள் மந்தையாயும் இருக்கிறார்கள். இதனால் தான் திருப்பாடலாசிரியர் சொல்லும்போது ஆண்டவரே என் ஆயர், இஸ்ரயேலரின் ஆயரே என்று குறிப்பிடுகின்றார். நானே நல்ல ஆயர் என்று சொல்லும் இயேசுநாதரும் தன்னுயிர் கொடுத்து நம்மைக் காக்கும்





ஆயராக இருக்கின்றார். அவர் தம் மந்தையின் வாழ்வுப்பணியில் நமது பணி என்ன என்பதனை விவிலியத்தின் வெளிச்சத்தில் தியானிப்போம்.

**1. கரிசனையுள்ள ஆயர்** (வி.ப. 3 : 11)

கடவுள் தமது மந்தையாகிய மக்களை வழிநடத்த தம்முடைய பிரதிநிதியாக மோசேயைத் தேர்ந்தெடுத்து, பயன்படுத்தினார்.

என் மக்களினம் அடிமைத் தனத்தில் அல்லலுறுவதை இறைவன் காணுகின்றார். மனிதர்களில் ஒருவரும் மக்கள் பணியாளராய், மானிடத்தின் உயிர்காக்கும் பணிக்கென வரவில்லையே என்பது இறைவனின் ஏக்கம். இந்த இருண்ட நிலையில் தானாக, பற்றியெரியும் நெருப்பாக மாறுகின்றார். "கடவுள் இஸ்ரயேல் மக்களைக் கண்ணோக்கினார். அவர்களது நிலைமைகளையும் கடவுள் அறிந்து கொண்டார்." (வி.ப. 2 : 25) இந்த வார்த்தை கடவுளின் கரிசனையைக் காட்டுகின்றது.

இங்கு மோசேக்குக் கடவுள் உணர்த்தும் செய்தி என் மக்கள் துன்புற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்று தீய்ந்து போகாத முட்புதரிலிருந்து உண்மையை வெளிப்படுத்துகின்றார். இப்படி அழைப்பைப் பெற்ற மோசே கடவுளிடம் தனது பொறுப்பை தட்டிக்கழிக்க நினைப்பது போன்றும், தனது இயலாமையைச் சொல்வது போன்றும், தனக்குத் தகுதியில்லை என்றுரைப்பது போன்றும் சிந்திக்கக் கூடிய அளவிற்கு நான் யார்? என்ற கேள்வியைக் கேட்கிறார். மோசே எபிரேயருடைய பாரச்சுமைகளைப் பார்த்தவர் (வி.ப. 2 : 11). ஆனால் தான் அதில் பங்குபெறாதபோது (அல்லது) அனுபவிக்காதபோது தனக்குத் தரப்படுகின்ற பணியின் கடினத்தன்மையில் இந்தக் கேள்வியை எழுப்புகின்றார். ஆனால் நான் உன்னோடு இருப்பேன் என்ற கடவுளின் வாக்குறுதி, நாவன்மை இல்லாதவன் என்று தன்னையே சொல்லும் மோசேயைச் செயல்வீரராய் மாற்றுகின்றது. தன் சகோதரருடைய (மனிதருடைய) காயங்களைக் கட்டும் கரிசனையுள்ள மனிதராய் மாற்றினார். வி.ப. 32-இல் கடவுள் இந்த எபிரேயர்களுடைய தீய செல்களினால் அவர்களை அழித்தொழிக்கப் போகிறேன் உன்னையோ பேரினமாக்குவேன் எனும்போது மன்றாடும் மேய்ப்பனாய் மாறுகின்றார். ஆயர் பணியின் தத்துவத்தைத் தரணிக்குத் தருகின்றார்.

**2. கண்டித்து உணர்த்தும் ஆயர்** (2 திமொத். 4 : 1-5)

கடவுளின் தீர்ப்பும், கடவுளின் ஆளுகையும் இறைமக்களுடைய செயலின் அடிப்படையில் அமையும் என்று பவுல் குறிப்பிடுகின்றார். இங்கு பவுல் இறைமக்களின் மீதுள்ள கரிசனையின் வெளிப்பாடாய் கடிந்து கொள்ள, அறிவுரை கூற திமொத்தேயுவைத் தூண்டுகின்றார். காரணம் செவிக்கினிய செய்தியை மக்கள் விரும்பும் மனநிலை, நீதியும் அன்பும் உலர்ந்துபோன மனித வாழ்வும் மிகச் சாதாரணமானவைகளாக மாறிவிட்டதைப் பவுல் காண்கின்றார். இறையாட்சியின் பரிமாணங்களான

சமத்துவமும், பகிதலும் அவசியம். இதைக் கிறிஸ்துநாதர் சுட்டிக்காட்டினபோது, கடவுளின் தூய ஆவியரின் அருளால் நிறைக்கப்பட்டு தமது ஆயர் பணியால் இறையரசின் வழியைச் சொன்னபோது இது கடின உபதேசம் என்றனர். இங்கு கவனிக்கப்படவேண்டிய உண்மை தன்னைப் பாதுகாப்பதற்காக மற்றவர்களைக் கடிந்து கொள்ளும் மனப்போங்கில்லாமல் இந்தச் சமுதாயத்தைக் காப்பதற்காகப் பொதுநிலைப் போதனையைச் சுட்டிக்காட்டுகின்றார். இது பொதுவாக ஆடுகள் ஆபத்துக்களை நோக்கிச் செல்லும்போது கொடுக்கின்ற ஆயரின் குரலுக்கு ஒத்திருக்கின்றது. பகிர்ந்து கொடுக்கும் மனமில்லாத ஆடுகளுக்கு பகிர்ந்து கொடுக்கும் எண்ணத்தை அறிவிக்கின்றதாய் இருக்கின்றது. வன்முறை, வகுப்புவாதம் என்பன கண்மூடித்தனமான தீமைகளை உருவாக்குகின்றன. இவைகளிலிருந்து மீண்டு வரும் நிலைக்கான குரல் ஆயர் வழித்தரப்படுதல் வேண்டும் என்று பவுலார் அறிவுறுத்துகின்றார்.

**3. கடினங்களை ஏற்கும் ஆயர்** (யோவா. 21 : 15)

இயேசுநாதரி பேதுருவிடம் என்மீது அன்பாயிருக்கிறாயா? எனக் கேட்டார். இந்தக் கேள்வியில் உன் உடமைகளைவிட, உன் உயிரை விட என்மீது அன்புகாட்டுவாயா? எனும்போது எனக்கென மக்களை உடைமையாக்கும் பணியையும், எனக்கென (இறையாட்சிக்கென) உடைமையாக்கப்பட்டவர்களையும் தீமையின் பிடியிலிருந்து விடுவித்து பேணி வளர்ப்பாயா என்கிறார். இப்படிப் பேணி வளர்க்கும் உயரிய பணியினைச் செய்யும்போது சில தியாகங்களைச் செய்தாக வேண்டும். நேரத்தைச் செலவிடுதல், வாழ்வாதாரத்தைத் தேடிக் கண்டுபிடித்துக் கொடுத்தல், பகைவரின் கையிலிருந்து (தீய பழக்கங்களிலிருந்து) மீட்டெடுத்தல் போன்ற பணிகள் ஆயர் பணியில் முதன்மையானதாய் இருக்கின்றது. சிப்பிக்குள் விளையும் உயர்தர விலைமிக்க முத்துக்கள் சில வினாடிகளில் உருவாகாமல் பல வருடங்களாய் அதற்குள் ஏற்படும் உறுத்தல்களும், மாற்றங்களும் காரணமாய் அமைகின்றது என்பது கண்டறியப்பட்ட உண்மை. இறையரசின் உரிமை மிக்க மக்களை உருவாக்கும் பணி பல தியாகங்களோடு தான் சாத்தியமாகும் என்பதனைப் பேதுருவுக்கு இயேசு நாதர் கோடிட்டுக் காண்பிக்கின்றார். இறையன்பு எவருக்குள் இருக்கின்றதோ அவரால் மட்டுமே தியாகம் செய்ய முடியும் என்பது இயேசுவின் கேள்வியால் புலப்படுகின்றது.

தன் வாழ்விலும், பிறர் வாழ்விலும் கரிசனையுள்ளவர், தன்னைக் கட்டுப்படுத்துகின்றவராயும், பிறருக்கு நல்வழியைக் காட்டுபவராயும் இருக்க வேண்டும். இத்தகைய ஆயர் பணியைச் செய்ய கிறிஸ்துவைப் போன்ற தியாகம் வேண்டும். இறையாட்சியின் விரிவாக்கத்திற்காக இறைமக்கள் நாம் அனைவரும் ஆயர் பணியில் இணைவோம். இறையருள் பெறுவோம்.

**அருள்திரு. R.B. ஜெங்கின்ஸ்**



**28-07-2013** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் 10-ம் ஞாயிறு

2 சாமு. 8: 15-18 | 1 கொரி. 3 : 10-15
தி.பா. 2 | மத். 11 : 28-30

# மானிட வளங்களை மேம்படுத்துதல்
# DEVELOPING HUMAN RESOURCES

கடவுள் எனக்கு அளித்த அருளின்படியே, நான் கைதேர்ந்த கட்டடக் கலைஞர் போல அடித்தளம் இட்டேன். அதன்மேல் வேறொருவர் கட்டுகிறார். 1 கொரி. 3 : 15

**இறைவேண்டல்**

*முழு உலகையும் படைத்த எங்கள் கடவுளே! நீர் எங்களுக்குத் தந்துள்ள வரங்களை எங்கள் உடன்வாழ்வோர் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த அருள் செய்யும். முழுப் படைப்பும் பயன்பெறும் வகையில் நாங்கள் வளங்களை வளமைப்படுத்தவும், கண்காணிப்பு செய்யவும், அதன் வழியாய் உமது அரசு விரிவாக்கம் செய்யப்படவும் அருள்தாரும். பேராசை நிறைந்துள்ள உலகில் குரலொடுக்கப்பட்ட, அழுது துயருறும் மக்களின் தேவைகளை நிறைவு செய்வேராய் வாழ ஆற்றல்படுத்த வேண்டுமென்று வளமை தந்து வாழ்வருளும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம், ஆமென்.*

அமெரிக்க ஐக்கிய நாட்டின் முன்னாள் அதிபராக இருந்தவர் Ronald Reegan; இவரது நூற்றாண்டு விழா 2011-ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. அதற்காக புகழ்பெற்ற அமெரிக்கப் பத்திரிக்கையான TIMES உலக முழுவதிலுமிருந்து 25 சிறந்த தலைவர்களைத் தேர்வு செய்து, அவர்களது விபரத்தை வெளியிட்டிருந்தது. அதில் முதலிடத்தைப் பிடித்தவர் நமது நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட மகாத்மா காந்தி அவர்கள்.

பொதுவாக எங்கெல்லாம் ஜனங்கள் மிகவும் கொந்தளிக்கிறார்களோ, அங்கே நல்லன நடப்பதற்குப் பதிலாக விருதாவான, வீணான காரியங்களே நடக்கும். இதையே தி.ப. 2 : 1-இல் பார்க்கிறோம்.

இந்திய நாட்டு மக்களுக்கும், விடுதலைப் போராட்ட காலத்திலே கொந்தளிப்போடுதான் இருந்தார்கள். கொந்தளிக்கும் கடல் நீரிலும், 1.

கொதிக்கும் நீரிலும், மனிதன் தன் முகத்தைப் பார்க்க இயலாது. கொந்தளிப்பினாலே எந்த நன்மையும் உண்டாகாது என்று மக்களுக்கு உணர்த்தி, மக்களில் பலரை நல்வழிப்படுத்தி, விருதாவான காரியத்தை மக்கள் செய்துவிடாதபடி அவர்களது வளங்களை நல்வழிக்கு மேம்படுத்தினபடியால் மகாத்மாகாந்தி இந்தப் பட்டியலில் முதலிடம் பிடித்தார்.

TIMES, பத்திரிக்கை வெளியிட்டுள்ள “சிறந்த தலைவர்கள்” கொண்ட 25 பேர் பட்டியலில் இடம் பெற்றுள்ள இன்னொருவர், 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மொகலாயப் பேரரசர் அக்பர். Administration எனும் வார்த்தையை Add+Ministration எனப் பிரித்துப் பொருள் கொண்டால் நிர்வாகத்தின் உண்மைத் தன்மை விளங்கும்.

முத்தமிழ் நாட்டிலே அரசனுடைய ஆட்சிக்கு அடிப்படைத் துணையாயிருந்தோர் ஐம்பெருங்குழுவினர் என்றழைக்கப்பட்டார்கள். இந்த ஐம்பெருங்குழுவில் இருந்தவர்கள் அமைச்சர், புரோகிதர், படைத்தலைவர், தூதர், ஒற்றர் ஆகியோராவர். இவர்கள் தான் முதன்மையான நிர்வாகக்குழு என்றழைக்கப்பட்டனர். அமைச்சர்களிலே தலைமை அமைச்சராக இருந்தவர் மகா மந்திரி என்றும் உத்தர மந்திரி என்றும் அழைக்கப்பட்டார்.

புரோகிதர்களிலே தலைமையாக இருந்தவர் இராஜகுரு என்று அழைக்கப்பட்டார்.

படைத்தலைவராக ஒருவரே இருந்தார். தூதர் என்போர் இரண்டு பிரிவாக இருந்தனர். (i) அரசன் விடுத்த செய்திகளைப் வேற்றுநாட்டு அரசரிடத்துக்குக் கொண்டு செல்லும் அயல்நாட்டுத் தூதர்(ii) அரசனுடைய ஆணைகளை நாட்டு அதிகாரிகளிடத்திற்கும் ஊரதிகாரிகளிடத்திற்கும் கொண்டு செல்லும் உள்நாட்டு தூதர்.

இந்தத் தூதர்களுக்கு தனி மரியாதையுடனான உடைகள் கூட உண்டு. தனிப்பட்ட சட்டையும், தலைப்பாகையும் அணிந்திருப்பர். எனவே இவர்களுக்குச் சட்டையிட்ட பிரதானிகள் என்றும் பெயர் இருந்தது (கஞ்சுகமாக்கள் என்றும் அழைக்கப்பட்டனர்; தலைமை தூதன் கஞ்சுக முதல்வன் என்று அழைக்கப்பட்டார்).

இந்த ஐம்பெருங்குழுவிற்கு அடுத்தபடியாக Administration-இல் இருந்தவர்கள் எண்பேராயம் என்று அழைக்கப்பட்டார்கள். இதிலே இருந்தவர்கள்,





கணக்கர் (கரணத்தியலவர்)

2. அரசாணையை நிறைவேற்றும் அதிகாரிகள் (கரும விதி அதிகாரிகள்)
3. பொக்கிஷசாலை அதிகாரிகள் (கனகச் சுற்றம்)
4. அரண்மனை வாயில் காப்பாளர் (கடைக் காப்பாளர்)
5. நகர வாணிகர் (வாணிகப் பெருமக்கள்)
6. படைத்தலைவர்
7. யானைப் படையினர்
8. குதிரைப் படையினர்

ஐம்பெரும் குழுவும், எண்பேராயமும் மக்கள் கொந்தளிக்காதபடி அமைதியாக வாழ அரசனுக்கும், மக்களுக்கும் உதவினர்.

திருமறையிலும் இப்படிக் குழுவினர் இருந்ததை 2 சாமு. 8 : 15-18இல் பார்க்கிறோம். இராணுவ தலைவன், மந்திரி, ஆசாரியர், சம்பிரதி (Secretary), சிறுகுழு தலைவர்கள், பிரதானிகள் என வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தாவீதின் பணிவிடைப் பரவலாக்கத்திலே (Administration) முக்கியமானோர் - மந்திரியும், சம்பிரதியும். இவர்கள் எப்போதும் அரசனோடிருப்பார்கள். அரசன் மனதில் திடீரென்று தோன்றும் நல்ல திட்டங்களை, அரசன் சொல்லும்போது அதைச் சரியானபடி கேட்டு, தகுதியானபடி எழுதுவது மந்திரி மற்றும் சம்பிரதியின் பணி. மந்திரி கேட்காமல் விட்டதையும், சம்பிரதி கவனமாகக் கேட்டு எழுத வேண்டும்.

தமிழ் நாட்டிலும் மந்திரி, சம்பிரதி போல பணியில் இருந்தவர்கள் உண்டு. அரசன் அவ்வப்போது திருவாய் மலர்ந்தருளும் ஆணைகளை நேரில் கேட்பவனுக்கு திருவாய்க் கேள்வி என்றும், அரசனின் வாயிலிருந்து கேட்டவற்றை ஆணையாக - எழுதுபவனுக்கு திருமந்திரவோலை என்றும் பெயர்.

தாவீது காலத்திலிருந்தே நாள்தோறும் நடக்கும் நிகழ்வுகளைக் குறிப்பேட்டில் எழுதி வைக்கும் வழக்கம் இருந்தது. தமிழ்நாட்டிலும் அப்படி எழுதும் நபருக்கு பட்டோலைப் பெருமான் என்று பெயர். உலகமெங்கும் இப்படி ஒரே பணிப் பரவலாக்க முறையை (Administrative Structure) ஆண்டவர் வகுத்து வைத்திருப்பதன் காரணம் - மனிதர் கொந்தளித்து விருதாவான காரியத்தைச் செய்து விடக் கூடாது

என்பதற்குத் தான். நாம் கொந்தளிக்காமல், ஆண்டவர் நமக்குத் தந்திருக்கும் வளங்களை, வளப்படுத்தி வாழ வேண்டும். மனிதர்களாகிய நாம் கொந்தளிக்காமல், ஆண்டவர் நமக்கு தந்திருக்கும் வளங்களை எப்படி வளப்படுத்தி வாழ முடியும்? ஏற்கனவே Administration என்ற பணிப் பரவலாக்க வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ள ஆண்டவர், மனிதர் தங்கள் வளங்களை வளப்படுத்திக் கொள்ள சில வாழ்வு முறைகளையும் வகுத்து தந்துள்ளார்.

**1. பணிவிடை வழியாக மனித வள மேம்பாடு :**

1 கொரி. 3 : 10 "... ஒவ்வொருவரும் தாம் கட்டும் முறையைக் குறித்துக் கவனமாக இருக்கவேண்டும்."

நம்முடைய பணிவிடை வாயிலாக நமது வளங்கள், குணங்கள் மேம்பாடு அடைகிறது. ஆனால் பலர் பணிவிடையைச் சிறப்பாக செய்யாததால், அவர்களது வளங்கள், குணங்கள் மேம்பாடு அடையவில்லை.

Prakash Iyer என்பவர், மனித வளத்தை மேம்படுத்தும் வாழ்வு முறையை வலியுறுத்துகிற The Habit of Winning என்றொரு புத்தகத்தை எழுதியுள்ளார். அதிலே ஒரு கதையை எழுதியிருக்கிறார். கல்லூரிப் பேராசிரியரைப் பார்க்க அவருடைய முன்னாள் மாணவர்கள் வந்திருந்தார்கள். பல பழைய சுவையான அனுபவங்களைக் குறித்துப் பேசி மகிழ்ந்தவர்கள், திடீரென்று தங்களது பணிகளைப் பற்றியும் அவை தரும் அழுத்தம் பற்றியும் பேசத் தொடங்கினார்கள். அனைவரும் வருத்தத்துடனேயே தங்கள் பணி குறித்துப் பேசினார்கள். இதைக் கேட்டுக் கொண்டேயிருந்த பேராசிரியர், ஒரு கட்டத்திலே எழுந்து போய், அனைவருக்கம் ஒரு பெரிய பாத்திரத்தில் Tea கொண்டு வந்தார். அலமாரியைத் திறந்து பல வகையான குவளைகளை Tea அருந்த எடுத்து வைத்தார். அவைகளிலே தங்க முலாம் பூசப்பட்ட குவளைகள் இருந்தன; வெள்ளிக் குவளைகள் இருந்தன; அழகான பீங்கான் குவளைகள் இருந்தன; சில காகிதக் குவளைகள் இருந்தன. அனைவரும் அவரவருக்குப் பிடித்தமான குவளைகளை எடுத்து Tea ஊற்றிக் குடிப்பதைப் பார்த்த பேராசிரியர் சொன்னார், "நீங்களெல்லாரும் விலை உயர்ந்ததும், அழகானதுமான குவளைகளைப் போட்டி போட்டுக் கொண்டு எடுத்துக் கொண்டீர்கள். மிகவும் எளிமையான காகிதக்குவளைகளை யாரும் தொடவே இல்லை. எதிலும் சிறப்பையே தேடுவது மனித இயல்புதான். ஆனால் உங்கள் தேவை இங்கே





குவளைகள் அல்ல, Tea தான். நீங்கள் என்ன குவளைகள் எடுத்தாலும் அதில் நிரப்பப்பட போவது ஒரே வகை Tea தான்.

"நீங்களெல்லாரும் எனக்குத் தங்க முலாம் பூசப்பட்ட குவளை கிடைக்கவில்லை; வெள்ளிக் குவளை கிடைக்கவில்லை என்று முறையிடுவது போல உங்கள் வேலைகளைச் செய்கிறீர்கள். Status - சமூக அந்தஸ்து முக்கியமல்ல; Status அல்லது பதவி என்பது இந்தப் பலவகைப்பட்ட குவளைகள் போன்றது. முக்கியமானது - Tea போல இருக்கும் வேலை. அதைச் சிறப்பாகச் செய்தால் வாழ்க்கை இனிக்கும்; உங்கள் குணங்கள், வளங்கள் மேம்படும்" என்றார்.

பவுல் திருத்தூதர் சொல்லுகிறார், 1 கொரி. 3 : 12-இல் ஒருவன் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் என்று எதை வைத்தும் கட்டலாம். ஆனால் இன்னவிதமாய்க் கட்டுகிறான் என்று பார்க்கக்கடவன். (1 கொரி. 3:10).

எதை வைத்துக் கட்டுகிறோமென்பது முக்கியமன்று; எப்படிக் கட்டினோம் என்பதே மனித வளத்தை, மனித குணத்தை மேம்பாடு அடையச் செய்யும்.

பொன், வெள்ளி, விலையேறப் பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகியன நாம் இவ்வுலகில் வகிக்கும் பதவி போன்றது. ஆண்டவர் பார்வையில் பதவி முக்கியமன்று; பணிவிடையே முக்கியம்.

நமது வேலை சிறியதாகக் கூட இருக்கலாம். ஆனால் அதன் வாயிலாக நமது வளங்கள், குணங்கள், மேம்பாடு அடைந்துள்ளதா என்று பார்க்க வேண்டும் (1 கொரி. 3 : 10).

**2. பிறர் பணிவிடை வாயிலாக மனித வள மேம்பாடு :** (மத். 11 : 28)

மனித வளத்தை மேம்படுத்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் அதிகம் கோடிட்டுக் காட்டப்படுகின்றன.

உலகளவிலே அதிக தாக்கத்தை ஏற்படுத்திய மனித வள மேம்பாடு சார்ந்த யூத தத்துவம், யூத தத்துவ அறிஞர் மைமோனிட்ஸ் என்பவரால் சொல்லப்பட்டது. அது, ஒரு மனிதனின் பசியாற்றிட நீ அவனுக்குக் கொடுக்கும் மீன், அவனது ஒரு நாள் பசியை மட்டும் தான் தீர்க்கும். மாறாக, அவனுக்கு மீன் பிடிக்கும் முறையைக் கற்றுக் கொடுத்தால் வாழ்நாள் முழுவதும் அவனுக்குப் பசியாற்றியது போலாகும்.

ஆண்டவர் இயேசுகிறிஸ்துவும் பிறர் வாயிலாக, நமது மனித வளத்தை, குணத்தை மேம்படுத்துவதற்கான ஆலோசனையை மத். 11 : 28-இல் சொல்லுகிறார். அதாவது வருத்தப்படுவோருக்கு உதவி என்று நன்கொடை அளிப்பதோடு நின்றுவிடாமல், அவர்களது வளர்ச்சிக்கான முதலீடு என்ற வகையில் இருக்க வேண்டும். வருத்தப்படுவோருக்கு நாம் செய்கின்ற பணிவிடை, நித்தியத்திற்கான முதலீடு என்பதையே நீதி. 19 : 17 கூறுகிறது.

வருத்தப்படுவோருக்கு நாம் இதுவரை செய்த உதவி "நன்கொடை" என்ற நிலையில் இருந்திருக்கலாம். ஆனால் இனிமேல் நாம் அப்படிக் கொடுப்பதெல்லாம் "நித்தியத்திற்கான முதலீடு" (Investment for Eternity) என்று நினைத்துச் செய்ய வேண்டும். இது தான் நமது குணத்தை மேம்படுத்தும்.

மத். 11 : 28-இல் ஆண்டவர் சொல்லுகிற "இளைப்பாறுதல்" என்ற வார்த்தை மிக முக்கியமானது. இதை ஆழமாக விளங்கிக் கொள்ள ஒரு கதை சொல்லுகிறேன். வீட்டை அழகாக வைத்திருக்க விரும்பிய ஒருவர் நிறைய செடி கொடிகளை நட்டு வைத்தார். உரமிட்டார். நீர் பாய்ச்சினார். செடிகள் பெரிதாக வளரவில்லை. உடனே பக்கத்தில் ஒரு பூங்காவைப் பராமரிக்கும் வயதானவரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார். இரண்டே மாதங்களில் செடி கொடிகள் செழித்து, தழைத்து வளரத் தொடங்கின. வீட்டு உரிமையாளருக்கு வியப்பு. அதே தண்ணீர், அதே உரம், அதே இடம். இது எப்படிச் சாத்தியம்? செடிகளைப் பராமரித்த வயதானவர் சொன்னார், "ஐயா, நீங்கள் அலுவலகத்திற்குப் போகும் அவசரத்தில் தண்ணீர் பாய்ச்சுகிறீர்கள். நானோ, குழந்தைக்கு உணவு தரும் அன்னையின் மனநிலையோடு தண்ணீர் பாய்ச்சுகிறேன்" என்றார்.

ஆண்டவர், வருத்தப்படுவோருக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று தாயுள்ளத்தோடு தான் சொல்லுகிறார்.

நாமும் வருத்தப்படுவோருக்கு உதவி செய்யும் போது நன்கொடை கொடுப்பவர் என்ற மனநிலையில் இல்லாமல், சகோதர உணர்வோடு, தாயுள்ளத்தோடு, உதவி செய்ய வேண்டும். அதுவே நமது வளத்தை, குணத்தை மேம்பாடு அடையச் செய்யும்.

**அருள்திரு. J. பிரகாஷ் நாயகம்**



**04-08-2013** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் 11-ஆம் ஞாயிறு

அருட்பணி ஞாயிறு

ஆமோ. 2 : 4-8 யாக். 5 : 1-6
தி.பா. 82 மத். 25 : 31-46

## அருட்பணி : திருச்சபையின் சமூகப் பொறுப்பு
## Mission : Social Responsibility of the Church

**இறைவேண்டல்**

*அறைகூவல் தரும் கடவுளே! கிறிஸ்து வழியாக வெறுமையாக்கி பாதம் கழுவும் தன்னலமற்ற திருப்பணியினை திருச்சபைக்கு அறை கூவலாய் தந்துள்ளீர். அநீதியினால் தாக்கப்பட்டு துயர் அடையும் மக்களோடு ஒன்றிணைந்து குரலொடுக்கப்பட்ட அவர்களின் குரலாய் திருச்சபை செயல்படவும் அருள்தாரும். இம்மக்களின் வாழ்வு போராட்டத்தில் உம்மை உடனிருப்பவராய்க் காணவும், உண்மை திருப்பணிக்கும், உமது சிலுவைக்கும் வழி அதுவே என காணவும் அருள்தரவேண்டுமென்று சிலுவை வரையிலும் தன்னை அர்ப்பணித்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

திருச்சபை சமூகத்தில் ஓர் அங்கமாக இருப்பதால் சமூகத்தில் உள்ள முக்கியமான பிரச்சனைகளுக்குத் தனது பங்களிப்பைச் செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. இறை ஆளுகையின் முன் சுவையாகத் திருச்சபை செயல்பட அழைக்கப்பட்டுள்ளபடியால், இறையாண்மைக்கு உட்பட்ட செயல்களைப் பொறுப்புடன் நிறைவேற்றுவது அதன் அருட்பணி. திருமறைப் பாடங்களாகக் கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் இருந்து மூன்று விதமான பணிகளை நிறைவேற்ற திருச்சபை அழைக்கப்படுகிறது.

### 1. நீதியைப் பற்றிய பொறுப்பாண்மை : ஆமோஸ் 2 : 6
### Responsibility of Justice

. . . அவர்கள் நேர்மையாளரை வெள்ளிக் காசுக்கும் வறியவரை இருகாலணிக்கும் விற்றுப் போட்டார்களே. நீதியின் தீர்க்கராகச் செயல்பட்ட ஆமோஸின் காலத்தில் அநீதத்தின் கோரப் பிடியில் சமூகம் சிக்கித் தவித்தபோது நீதியைப் பற்றிய பொறுப்பை தீர்க்கதரிசி, கடவுளே நீதியின் பிறப்பிடமாக உள்ளார். நீதியினால் ஏற்படும் சமாதானத்தை அவர் சமூகத்தில் நிலைநாட்ட விரும்புகின்றார் என்பதை

வலியுறுத்தினார். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஆண்டவர் இயேசு. கிறிஸ்து பிரசங்கித்த மலைப் பொழிவில் மத். 5 : 10-இல் நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப் படுவோர் பேறுபெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது. மேலும் மத். 5 : 6-இல் "நீதியை நிலைநாட்டும் வேட்கை உடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர் என்றும் கூறுகிறார்.

இன்றைய சமூகப் பிரச்சனைகளில் அநீதியான செயல்கள் எதுவாயினும் மனிதன் விலகி நடக்கவும், பிறரை நீதிக்குரிய செயல்களைச் செய்ய ஊக்குவிப்பதும் திருச்சபையின் பொறுப்பாண்மையாக உள்ளது. மீகா. 6 : 8-இல் குறிப்பிட்டுள்ள நியாயம் செய்தல், இரக்கத்தை விரும்புதல், மனத்தாழ்மையை நாடுதல் இவைகள் நீதியின் விளைவாக எதிர்பார்க்கப்படும் செயல்கள். இதனால் அமைதியும், உண்மையும் உள்ள சமூகம், உருவாக இயலும். இதனால் திருப்பாடல் 85 : 10-13 வரை உள்ள வசனங்களில் திருப்பாடலாசிரியர் காணும் கனவு நனவாகும் என்பதில் ஐயமில்லை.

**2. உரிமைகளைப் பற்றிய பொறுப்பாண்மை :**
**Responsibility of Rights :**

நமது நாட்டில் இனம், மொழி, சமயம் மற்றும் கலாச்சாரம் இவைகளினால் வேறுபாடு காணப்பட்டாலும் மனித உரிமைகள் மீறப்படவோ, மறுக்கப்படவோ கூடாது என்பது மரபு. யாக்கோபு 5-ஆவது அதிகாரத்தில் செல்வர் எளியவர்களின், வேலைக்காரர்களின் உரிமைகளைச் சுரண்டும் அவல நிலையைச் சுட்டிக் காட்டுகின்றார். இன்றும் லஞ்சம், ஊழல் இவைகளினால் பிறருடைய உரிமைகள் பறிக்கப்படுவதும், பதுக்கப்படுவதும் இல்லாமலில்லை. மேலும் பல மாற்றங்கள் முன்னேற்றங்கள் பற்றி பேசும் நம்மிடையே உள்ள பெண்கள், குழந்தைகள் இவர்களின் உரிமைகள் எவ்வளவு தூரம் நிலை நாட்டப்படுகிறது என்பதையும், குறிப்பாக இயற்கையில் வளங்கள் சுரண்டப்படுவதால் ஏற்படும் இயற்கைச் சீற்றங்கள், சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்படும் அவல நிலை ஆகியவைகள் நமது பொறுப்பற்ற தன்மையினை உணர்த்துகிறது. எனவே மனுக்குலம் கடவுளுக்கும், அவரது படைப்புக்கும் பிற மனிதருக்கும் நேராக தனது உரிமைகளைப் பொறுப்புடன் நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளது.

**3. இறைமகன் வருகையைப் பற்றிய பொறுப்பாண்மை :**
**Responsibility of Comming Son of God :**

மத். 25 : 31-46 வரை உள்ள பகுதியில் மனிதனின் செயல்களுக்கு அவன் பொறுப்பு ஏற்க வேண்டும் எனவும், மக்களினத்தார் அனைவருக்கும் தீர்ப்பு உண்டு என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.





இங்கு மக்களினம் இருதரப்பினராகப் பிரிக்கப்படுகின்றது. செம்மறி ஆடுகள் மந்தையாக மேயும். அவை மேய்ப்பனின் வழிநடத்தலுக்குக் கட்டுப்பட்டு மேய்ச்சலுக்குப் போய்த் திரும்பும் பண்புடையவைகள். வெள்ளாடுகளோ கட்டுக்கடங்காமல், தன்னிச்சையாகத் திரியும் பண்பும், எட்டாத இலை, தளைகளின் ஆசைப்படும் பேராசையும் கொண்டவைகள். அத்தோடு ஒருவரின் வலப்புறம் மேன்மைக்குரியதாகவும், இடப்புறம் மேன்மை குறைந்ததாகவும் கருதப்படுவது கிழக்கத்திய பண்பாட்டு வழக்கம். எனவே மேன்மைக்கும் பாராட்டுக்கும் உரியோர் மானிட மகனின் வலப்பக்கத்திலும், ஏனையோர் இடப் பக்கத்திலும் நிறுத்தப்படுகின்றனர்.

பாடுபடும் மக்களின், ஏழை எளியவர்களின், கண்ணியம் சூறையாடப்பட்டும் விளிம்புகளுக்குத் தள்ளப்பட்டும் புறக்கணிக்கப்பட்டும் இருந்தவர்களின் பிரதிநிதியாகிய மானிட மகன் அன்னாரின் சார்பாக நின்று அனைவரையும் பாராட்டி அவர்களுக்கு தம்முடைய அரசில் பங்கு தருகின்றார். அவர்கள் தந்தையால் ஆசி பெற்றவர்களென்ற பாராட்டைப் பெறுகின்றனர்.

எனவே, யார் ஆண்டவருடைய அரசில் பங்கேற்கத் தகுதி வாய்ந்தவர்கள் என்ற கேள்வியை எழுப்பினால், கிறிஸ்தவ நம்பிக்கையுடையோர் மட்டும் அந்தத் தகுதியைப் பெற்று விட முடியாது என்பதே பதில். மேலும் கிறிஸ்தவ நம்பிக்கையற்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் மனித நேயத்துடன் செயல்பட்டு தங்கள் வாழ்வில் இறையருளின் ஆட்சிக்கு இடமளித்து வருகின்றனர் என்பது கண்கூடு. அத்தகையோர் இறையரசுக்குரியோரே. கோட்பாடு, சமய நம்பிக்கை என்ற அளவீடுகளைக் கொண்டு அவர்கள் நிச்சயம் கடவுளுக்கு ஏற்புடையதல்லாதவர்களாகத் தள்ளப்பட மாட்டார்கள் என்பதையும், இரக்கமுள்ளோர் இரக்கம் பெறுவர் என்ற ஆண்டவரின் அருள்வாக்குக்கேற்ப பரிவும், அன்பும், நீதியுணர்வுமுள்ள யாவரும் இறையரசுக்குரியவர்களே. இறையருள் இல்லாமல் எவரும் உண்மையான பரிவும் அன்பும் உடையவர்களாயும், நீதியுள்ளவர்களாகவும் வாழ முடியாது என்பதால் இறையருள் சகல நம்பிக்கைகளால் கட்டுண்டு செயல்படாது என்ற உண்மையினை இந்த உவமை அழுத்தம் திருத்தமாக சுட்டிக் காட்டுகிறது.

இறைஆளுகைக்குட்பட்டு நீதிக்குரிய மனித நேய உரிமைகளை, பொறுப்பாண்மையுடன் செயல்படுத்தி, அவரது தீர்ப்புக்காக ஆயத்தப்படும் திருச்சபையாக அருட்பணியைச் செயல்படுத்துவோம்.

**அருள்திரு. அறிவர் A. R. செல்லையா**

| 11-08-2013 | பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் 12-ஆம் ஞாயிறு |
|---|---|

தொநூ. 7 : 1-16 தி.பா. 2 : 36-47

தி.பா. 111 யோவா. 15 : 1-17

# கூட்டுறவு
# FELLOWSHIP

"நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர்." திப. 2 : 44

**இறைவேண்டல்**

*எங்கள் கடவுளே! எங்கள் இயலாமையை அகற்றி உமது நற்செய்தியினை நிறைவாக பின்பற்றி வாழவும், சபையின் ஒருமைப் பாட்டிலும் கூடி வருதலில் பங்கேற்று அனைத்தையும் பொதுவாய் வைத்து வாழ உதவி புரிந்தருளும். நாங்கள் எங்கள் சமூகத்தில் இணைந்து மகிழ்ந்து, அப்பத்தை பகிர்ந்து, நாங்கள் உம்மோடும் நீர் எம்மோடும் இணைந்திருக்கவும், உமது மகிழ்வு எங்களில் நிறைவாய் தங்கவும் உமது தூய ஆவியாரின் ஆற்றலைத் தந்தருள வேண்டுமென்று வேண்டுகிறோம். ஆமென்.*

உறவை ஆற்றல்படுத்தவும், இணைந்து செயலாற்றவும், மகிழ்ச்சிக்குரிய நிகழ்வுகளில் பங்கெடுக்கவும், கைகோத்து நிற்கவும் கூட்டுறவை ஏற்படுத்திக் கொள்கிறோம். திருமறை மேற்கூறிய கூட்டுறவைத் தாண்டி செயல்படுகிறது என்பதைக் காண முடிகிறது. கூட்டுறவு என்பது ஒரு சிறிய அல்லது பெரிய வட்டம் அன்று. இன்று காணப்படும் கூட்டுறவு நன்மையை உருவாக்குவதை விட தீமையையே அதிகம் உருவாக்குகிறது என்பது உண்மை. சமயத்திற்குள், மனித இனத்திற்குள், நிறத்திற்குள் (Skin of Sin) மொழிக்குள், சமூகத்திற்குள் காணப்படுகிற கூட்டுறவுகள் அனைத்தும் தீங்கு விளைவிக்கக் கூடியவைகளே. M.A. தாமஸ் என்பவர் தனது "About you and me" என்ற புத்தகத்தில்,

Lord, We love your commandment more than the people

We love our brand of "mission" more than the people

We love our doctruies more than the people

We love our church more than the people

We love our people more than other people





இப்படிக் கூட்டுறவு வேறுபட்ட, கூறுபட்ட, மாறுபட்ட நிலைகளில் இருப்பதை திருமறை சொல்லவில்லை. அனைத்து வேறுபட்ட அடையாளங்களையும் உள்ளடக்கிய கூட்டுறவைத் திருமறை வெளிச்சத்தில் காண்பிப்பதே உண்மையான கூட்டுறவு.

**அனைத்துப் படைப்புகளையும் உள்ளடக்காத கூட்டுறவு கூட்டுறவன்று :**

நாம் இன்று மனித உறவு சார்ந்த கூட்டுறவை மட்டும் கட்டி எழுப்புகிறோம். இது தவறு. நில உலகு சார்ந்த முழு கூட்டுறவைத்தான் திருமறை போதிக்கின்றது (Not Self centered fellowship but earth centered fellowship). உண்மைக் கூட்டுறவு என்பது மனிதன் மற்றும் அனைத்துப் படைப்புகளையும் உள்ளடக்கியதாகும். திருமறை அனைத்து உயிரினங்களும் (மனித இனம் மாத்திரமன்று) இணைந்த கூட்டுறவுதான் உண்மையான கூட்டுறவு எனக் கூறுகிறது (தொ.நூ. 6 : 19).

இக்கூட்டுறவு ஒன்றைச் சாதிப்பதற்காகவோ, வீழ்த்துவதற்காகவோ அமைவதில்லை. ஆனால் புதிய உகலம், தீங்கு செய்யாத ஓர் இனம் இவற்றை அமைப்பதே உண்மைக் கூட்டுறவாகும் (ஏசா. 11 : 9). அதாவது, தீமையை எண்ணாத அமைப்பே உண்மைக் கூட்டுறவு. தீமையைக் கண்ட கடவுள் அத்தனை மாந்தரையும், உயிரினங்களையும் அழித்து புதிய மானிடம் உருவாக்குகிறார் (தொ.நூ. 6 : 5). இக்கூட்டுறவில் (பேழையினுள்) அனைத்து உயிரினங்களும், சுத்தமுள்ளவைகளையும், சுத்தமில்லாதவை களையும் சேர்க்கிறார். சுத்தமுள்ளவைகளை மட்டும் வைத்து கூட்டுறவு அமைப்பது எளிதானது. அதே வேளை பொருளற்றது. அதாவது, நீதி செயல்படுத்தும் அமைப்பாக இருக்க கடவுள் விரும்புகிறார். பரிசுத்தவான்களுடைய கூட்டுறவு என்ற எல்லையைத் தாண்டி அசுத்தம் என்று எண்ணப்படுகிறவைகளையும் உள்ளடக்கும் கூட்டுறவாக இருப்பது வியக்கத்தக்கதே. தொ.நூ. 7 : 8-இல் அனைத்து வகை உயிரினங்களையும் இணைக்கும் அனுபவம் என்பது பாவிகளை அழிக்க அல்ல, தேடிவந்து இணைக்கும் செயல் ஆகும். இளைய மைந்தன் உவமையில் திருந்திய மகன் வந்ததும் மூத்த மகன் வெளியே செல்ல, தந்தை அவரையும் வெளியே வந்து அழைக்கிறார். இங்கு மூத்த மகனையும் உள்ளடக்கிச் செயல்படுவதே உண்மையான கூட்டுறவு. அதுவே முழுமையான கூட்டுறவு என்பதை அறிய முடிகிறது.

**கடவுளை மையமாகக் கொள்ளாத கூட்டுறவு கூட்டுறவன்று:**

நமது கூட்டுறவுக்கு ஓர் உள்நோக்கம் உண்டு. இனத்தை, மொழியை, தொழிலை மையமாகக் கொண்டு கூட்டுறவை ஏற்படுத்துவது, சில எதிர்பார்ப்புகளை அடிப்படையாக வைத்துச் செயல்படுவதாகும். திருமறை கூறுகின்ற கூட்டுறவு எளிதானது. ஆனால் பின்பற்ற யாரும் முன்வருவதில்லை. தி.ப. 2 : 37-42 வரை தூயவரை மையமாக்கிச் செயல்படும் கூட்டுறவு. இது அனைத்து வேறுபாடுகளையும் உடைத்து அல்ல, உள்ளடக்கி ஏற்படுகிற கூட்டுறவு. தூய ஆவியாரின் உந்துதலால் ஏற்படுகின்ற கூட்டுறவு. இங்கே உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடு இராது. இதில் இன, நிற,

சமய, சமூக, நாடு வேற்றுமை இருக்க முடியாது (தி. ப. 2 : 43-46) அனைத்தும் அனைவருக்கும் சமம் (தி.ப. 2 : 8-11) இருக்கும் வேறுபாடுகளைத் தாண்டிச் சென்று அமைக்கும் கூட்டுறவை, தூய ஆவியரால் தான் செயல்படுத்த முடியும். நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார் என்கிறார். தூய பேதுரு திப. 15 : 8, 9)இதுவே Preoma centered fellowship ஆகும். இதுவே அனைத்தையும், அனைவரையும் உள்ளடக்கிய கூட்டுறவு (Wider fellowship).

**கனி கொடுக்காத கூட்டுறவு கூட்டுறவன்று :** யோவான் 15 : 1-17

புனித யோவான், திராட்சைச்செடி கிளைகளின் இணைவில்தான் உதயமாகிறது. கிளை திராட்சையோடு இணையாவிட்டால் (கூட்டுறவு) தானாய்க் கனி கொடுக்க இயலாது. மனிதக் கூட்டுறவில் சமயக் கூட்டுறவில் நாம் தானாய் வாழ முடியும் என்பது தவறான எண்ணம். (உ.ம்.) ஒரு தேநீர் குடிக்கிறோம் என்றால், அதில் பலரின் உழைப்பு அடங்கி இருக்கிறது (பால் + சீனி + தேயிலை + தண்ணீர் etc.) நாம் தேநீர் குடிக்கிறோம் என்றால் பலருடைய ஈடுபாடும் இருக்கிறது என்பதை மறக்கக் கூடாது. நமது திருச்சபைக் கூட்டுறவு பிற மக்களையும் வரவேற்கும் இடமாக வேண்டும். நம்முடைய சமய வட்டத்தைத் தாண்டி அவர்களையும் வரவேற்கும், உபசரிக்கும் இடமாகும்போது, கூட்டுறவு பொருளுள்ளதாய் அமையும்.

1919 தரங்கம்பாடி பிரகடனத்தில், கூறப்பட்டபடி, அனைத்துச் சமயப் பிரிவுகளும், ஒரே மேசையில் சாப்பிடவும், ஒரே தளத்தில் நித்திரை செய்யவும் கற்றுக் கொள்ளாவிட்டால் நாளைய உலகம் நம்முடையதன்று. மத். 25 : 35-ஐ அடிப்படையாகக் கொண்டு அனைவரையும் போஷிக்கும் களமாகவும், அனைத்துச் சமயங்களும் சேர்ந்து வாழும் தளமாகவும், அனைத்துச் சமய மக்களும் சேர்ந்து விளையாடும், விளையாட்டு மைதானமாகவும் அமைகின்ற கூட்டுறவுதான் அமைதியைத் தரும். இதுதான் நம்பிக்கையுடன் வாழ்வதற்கான மொழி (கூட்டுறவு). நம் கூட்டுறவு சமய, இன அடையாளங்களை விட்டு, பூமி அனைத்தையும் மையமாகக் கொண்டிருக்க வேண்டும்.

கூட்டுறவு பொது நலனைச் சார்ந்திராவிட்டால் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு கூட்டுறவுக்குள் உடைவை ஏற்படுத்தும். தி.ப. 2-இல் உடமைகள் தேவைக்குத்தக்கதாகப் பகிர்ந்த கொள்கை (2 : 44) எங்கும் காண இயலாத இலக்கணம். இவ்வுலக ஏற்றத்தாழ்வுகளைச் சமப்படுத்தும் இலக்கணமாகும் ( தி.ப. 2 : 44). (உ.ம்.) வினோபாவேவின் பூமிதான இயக்கமும், 1962-இல் போப்பாண்டவர் சொன்ன re-distribution of recourse-ம் ஏற்புடையது. ஒருவருக்கு பல ஆயிரம் கோடி சொத்து எதற்கு? இப்படிப்பட்ட பிரிவினை இருக்கும்போது, கூட்டுறவு என்ற சொல் பொருளற்றதே. எனவே திருமறைக்குத் திரும்பி உண்மைப் பொருளை உணர்ந்து, கூட்டுறவுக்கு வடிவம் கொடுப்போம்.

**அருள்திரு. V. டேவிட்**



**18-08-2013** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பதிமூன்றாம் ஞாயிறு

விப. 16 : 11-21 1 கொரி. 10 : 1-17
திபா. 105 : 37-45 யோவா. 6 : 51-58

# திருவிருந்து

## Eucharist

எனது சதையை உண்மையான உணவு. எனது இரத்தம் உண்மையான பானம். (யோவா. 6 : 55)

**இறைவேண்டல்**

*எங்கள் தந்தையாம் கடவுளே! நினைவுகூருதலுக்கும், அழியாமைக்கும் மருந்தாகத் தந்திருக்கும் திருவருட்சாதனத்துக்காக உமக்கு நாங்கள் நன்றி செலுத்துகிறோம். இந்தத் தூய உணவில் நாங்கள் பங்கேற்று உள்ளான மனிதனில் ஆற்றல் பெறவும், மாற்றுருவாக்கம் பெற்று உம்மைத் தேடுகின்ற அனைத்து திசையிலுள்ளோரையும் நீர் ஏற்றுக்கொள்கின்ற செய்தியை அறிவிக்கவும், அனைத்து மக்களுக்கும் ஒரு சந்திப்பின் இடமாக உமது திருமேசை அமையவும் ஆற்றலும் அருளும் தர வேண்டுமென்று தன்னையே உணவாகத்தந்த இயேசு கிறிஸ்து வழியாக வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.*

தென்னிந்தியத் திருச்சபையின் திருவருட்சாதனம் இரண்டு. அவை திருமுழுக்கு, திருவிருந்து என்பவைகள். திருவிருந்து இயேசு கிறிஸ்து தம் சீடர்களுடன் ஆசரித்த கடைசி பஸ்காவில் ஏற்படுத்திய சிறப்பு விருந்து. பஸ்காவில் பயன்படுத்தபட்ட புளிப்பில்லா அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்து நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய உடலாயிருக்கிறது. என் உடல் மனுக்குலத்தின் பாவத்தின் ஆக்கினைகளை ஏற்று உங்கள் மீட்புக்காகச் சிதைக்கப்படுகிறது என்ற பொருளில் அப்பத்தை ஆசீர்வதித்தார், பிட்டார், பங்கிட்டார். பின் கிண்ணத்தையும் எடுத்து நன்றி செலுத்தி நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது அனைத்து மக்களின் பாவமன்னிப்புக்காகச் சிந்தப்படுகிற புதிய உடன்படிக்கையின் இரத்தம் என்றார். இந்த நிகழ்வை தமது வருகைவரை இறைமக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்றார்.

தொடக்கத் திருச்சபையில் வளர்ச்சி பாதையில் மக்கள் வீடுகள் தோறும் நடைபெற்ற கூடுகையில் அப்பம்பிட்டு ஆசரித்து வந்தனர். (திப. 2 : 46). எல்லாத் தொழுகைகளிலும் அப்பம் பிடுதல் இன்றியமையா நிகழ்வாக இருந்தது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எனக்காக அடிக்கப்பட்டு என் பாவ ஆக்கினையைச் சுமந்து மீட்பு தந்தார் என்ற மெய்மையினை திருவிருந்தின் வாயிலாகக் கண்டனர். அதற்குச் சான்றாக வாழ்ந்தனர்.

திருவிருந்து எனும் திருவருட் சாதனம் நமக்குக் கற்றுத் தரும்உண்மையைச் சிந்திப்போம்

**1. உறவின் ஒன்றிப்பைத் தருகிறது** (1 கொரி. 10 : 16, 17)

நாம் ஆசீர்வதிக்கும் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியம். நாம் பிட்கும் அப்பம் கிறிஸ்துவுடைய சரீரத்தின் ஐக்கியம். இந்த விருந்தில் கலந்து கொள்வோர் ஒரே சரீரமும், ஒரே அப்பமுமாய் இருக்கிறோம் எனத் தன் அனுபவத்தைக் கொரிந்து சபைக்குப் பவுல் கோடிட்டுக் காட்டுகிறார். பாவத்தின் விளைவால் வந்த உறவுச் சிதைவுகள் கிறிஸ்துவின் சரீரம், இரத்தம் இவைகளில் பங்கு கொள்வதால் பிரிவினை அகற்றப்பட்டு ஒப்புரவாகுதல் வழி ஐக்கியம் உருவாகிறது. அனைத்து இறைமக்களும் ஒரே சரீரமாயிருக்கிறார்கள் என்ற மெய்மையை நமக்குப் போதிக்கிறது. இன்று, மதம், சாதி, இனம், நிறம், மொழி, கலாச்சாரம், பண்பாடு, பொருளாதாரம், சமூகநிலை, அரசியல் கோட்பாட்டால் ஒற்றுமைச் சிதைவு ஏற்பட்டு பிரிவினைகள், தீவிரவாதங்கள். தீமைகள் உயிர்ப்பலிகள் போன்றவை நிகழுகின்றன. இவை அனைத்தும் சீர் செய்து மனிதனை இறைவனுக்குள் திருவிருந்து ஒன்றுபடுத்துகிறது. இயேசு கிறிஸ்து வழி ஏற்பட்ட அன்பின் அரசு முழுமை பெற திருவிருந்து அனைத்து மக்களுக்குள்ளும் ஐக்கியத்தை ஏற்படுத்துகிறது. திருவிருந்தில் கலந்துகொள்ளும் நாம் ஐக்கியத்தை நிலை குலைக்கும் தீய சக்திகளை முறியடித்து கிறிஸ்துவில் ஒன்றாகுவோம்.

**2. உன்னதரின் மீட்பை உறுதிப்படுத்துகிறது**

திருவிருந்தில் பங்குபெறுவோர் கிறிஸ்துவின் திருவுடலிலும் இரத்தத்திலும் ஒன்றுபடும் மெய்வுணர்வைப் பெறுகின்றனர். திருவிருந்தின் வழியாகக் கிறிஸ்துவின் உடல், உதிரம் ஆகியவை உண்மையான வாழ்வின் அடித்தளமாகவும் மீட்புத் திட்டத்தில் நம்மைப் பங்காளிகளாக்கவும் செய்கிறது என்ற உண்மையை நமக்குக் கற்றுத்





தருகிறது. எனவே 1 கொரி. 11 : 27-இல் தகுதியற்ற நிலையில் ஏற்போர் குற்றமுள்ளவரே என்கிறார் பவுலார்.

கிறிஸ்துவின் பாடுமரணம் உயிர்த்தெழுதலில் நம்மை ஒருங்கிணைத்து அவைகளுக்கு சான்றுடன் வாழவும், கிறிஸ்துவை வாழ்க்கையில் வாழ்ந்து காட்டவும், மந்தையில் சேர எண்ணிறந்த மக்களைக் கிறிஸ்துவுக்குள் ஒன்றிணைக்கும் பணிவிடை செய்யவும் தகுதிப்படுத்துகிறது. கிறிஸ்துவைப் போல் பிறர் மீட்புக்காக நம்மை முற்றிலும் தியாகத்தின் பாதையில் சிலுவை வழி மீட்பின் திட்டத்தை நிறைவேற்ற நம்மையும் கிறிஸ்துவில் இணைக்கிறது. இந்தச் செயல் உணர்வு திருவிருந்தில் கலந்து ஒன்றுபடும் உண்மை வாழ்வை அனுபவமாகக் கொள்ளவும் அதன் வழியாகச் சிலுவையில் உறுதி செய்யப்பட்ட மீட்புக்கு நம்மை ஒன்றுபடுத்தவும் செய்கிறது. இதுவே பற்றுமையின் இயக்கமாகவும் நம்மைச் செயல்படத் தூண்டுகிறது.

**3. உறுதியான வாழ்வுக்கு அடையாளப்படுத்துகிறது**

(யோவா. 6 : 48-58)

கிறிஸ்துவின் உடலிலும் உதிரத்திலும் பங்கேற்பவர் கிறிஸ்துவிலும் இறைவனிலும் நிலையான வாழ்வைக் காண்கிறான். திருவிருந்து நம் பாவமன்னிப்பையும் கிறிஸ்துவில் நிலைநின்று செயல்படவும் கிறிஸ்துவில் தொடங்கிய கிறிஸ்தவ வாழ்வு கிறிஸ்துவில் முழுமை பெறவும் நம்மை வழி நடத்துகிறது. யார் கிறிஸ்துவில் தன் வாழ்வை நிறைவு செய்கிறாரோ? அவர் கிறிஸ்துவின் வழி நிலையான வாழ்வைப் பெற்றுக் கொள்கின்றார். இந்த விருந்து மனிதரில் உயிராற்றலின் நிலையை அருளுகிறது. பாவத்துக்கு மரித்த ஒருவர் கிறிஸ்துவின் பாடுமரணம் உயிர்தெழுதல் இவைகளில் நம்பிக்கை கொண்டு இவ்விருந்தில் கலந்து கொள்ளும்போது அவரது வாழ்வு கிறிஸ்துவின் வழி வாழ்வு பெறுகிறது. இந்த உண்மைநிலையைக் காத்துக் கொள்ள கிறிஸ்துவில் நிலைத்திருக்கும் பண்பினை, வழிகாட்டுதலை உணர்ந்து செயல்பட திருவிருந்து வழி ஆயத்தப்படுவோம். கிறிஸ்துவில் நிலைத்திருத்தலே நிலையான வாழ்வின் அடையாளம்.

**அருள்திரு. J. ஜேம்ஸ் ஞானறோஸ்**

| 25-08-2013 | பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பதினான்காம் ஞாயிறு. |
|---|---|

II அர. 23 : 1-11 எபே. 4 : 25 - 5 : 2
தி.பா. 85 மாற்கு 11 : 12-18

# நற்செய்தியின் தகவுகளை வளர்த்தல்
# Nurturing Gospel Values

. . . நீங்கள் கடவுளின் அன்பார்ந்த பிள்ளைகளாய் அவரைப் போல் ஆகுங்கள் (எபே. 5 : 1).

**இறைவேண்டல்**

*எங்கள் கடவுளே! விவிலியத்தின் வழியாக உயர்வான தெய்வீக தகவுகளை எங்களில் தந்திருக்கிறவரே நற்செய்தியின் தகவுகளை தெளிவாக அறிந்து ஏற்றுக்கொள்ள ஊக்கம் அருளவும், முழு உலகும் உமது பிரசன்னத்தை உணர்ந்துகொள்ள, நற்செய்தி தகவுகளின் இயக்கிகளாக நாங்கள் திகழவும் அருள்தர வேண்டுமென்று உம் திருமைந்தராம் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

மனிதர்களுக்கு இறைவன் தந்த பரிசுகளில் இன்றியமையாதது அறிவு. அறிவு பறவைகளுக்கும் உண்டு; விலங்குகளுக்கும் உண்டு. மெய்ப் பொருள் காணும் அறிவு, உண்மைத் தன்மை உணரும் அறிவும் மனிதனுக்கு மட்டுமே உண்டு. மனிதனிடம் கட்டாயம் இருக்க வேண்டிய அறிவு இல்லாது பல வேளைகளில் மனிதன் விலங்குகளை விட முரண்பட்டு இருப்பது வேதனையான உண்மை. இந்நிலையில் மாற்றம் ஏற்பட நற்செய்தியின் தகவுகளில் வளர்வது நன்மை பயக்கும். வளர்த்தல் என்பதற்கு 'Nurture' என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. இறையியலாளர்கள் பயிற்சி பெரும் இடம் 'Seminary' என்று அழைக்கப்படுகிறது. 'Seminary' என்ற ஆங்கில வார்த்தை 'Seminarium' என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து எழுந்துள்ளது. அதன் பொருள் என்னவென்றால் வேறு இடத்தில் நடப்படுவதற்காக இளம்கன்றுகள் வளர்க்கப்படும் இடம் என்பதாகும். 'Seminary' போன்று செயல்படுவதே திருச்சபை. திருச்சபையும் அதன் போதனையும் நற்செய்தியின் தகவுகளில் நம்மை வளரச் செய்கின்றது. Dr. இராதகிருஷ்ணன் "கிறிஸ்தவர்கள் சாதாரணமானவர்கள் ஆனால் அசாதாரனமானவை





களை நடப்பிப்பார்கள்" என்ற நம்பிக்கையின் வாக்குறுதியைச் சொன்னார். கிறிஸ்தவர்களாகிய நம்மிடம் இந்த உலகம் நல்ல தகவுகளை எதிர்பார்ப்பது மட்டுமல்ல கற்றுக்கொள்ளவும் விரும்புகிறது.

நற்செய்தியின் தகவுகளில் வளர விரும்பும் ஒவ்வொருவரும் சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று உலகத்துக்குப் பிரதிபலிக்கும் சந்திரனைப் போன்று இருக்க வேண்டும். சந்திரன் அடிக்கடி பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியில் வந்து சூரியனை மறைத்து இருளை உண்டாக்கிவிடுகிறது. அதுபோல கிறிஸ்தவர்களாகிய நாமும் நற்செய்தியின் தகவுகளை வாழ்வில் இழந்து விடும்போது பிறர் கடவுளை காணக்கூடாதபடி செய்து விடுகின்றது. சத்தியத்தின் வழியைத் தேடுகிறவர்கள் உண்மைக் கிறிஸ்தவ வாழ்வு வாழுகிறவர்களைக் கண்டால் ஜீவ ஊற்றாம் இயேசு கிறிஸ்துவுக்குள் வாழ இழுக்கப்படுவார்கள்.

**1) ஒளியின் மக்களாய் வாழ்தல்** (எபே. 5 : 8)

பவுலார், பழைய வாழ்க்கைக்கும் புதிய வாழ்க்கைக்குமுரிய வேற்றுமையை விளக்க ஒளியையும் இருளையும் எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளார். (எபே. 5 : 8) விசுவாசிகள் ஒளியில் இருப்பது மட்டுமல்ல அவர்கள் ஒளியாகவும் இருக்க வேண்டும். இருட்டான அறையில் உள்ள தூசியை யாரும் காணமுடியாது. வெளிச்சம் வரும்போது அசுத்தம் வெளிப்படும். அப்பொழுது மட்டுமே சுத்தம் செய்யும் பணி நடைபெறும். (சங். 90 : 8). நமது உள்ளத்திலும் ஆண்டவரின் வெளிச்சம் பிரகாசிக்கும்போது நம்முடைய பாவங்கள் புலப்படும். கர்த்தரின் வெளிச்சத்தை நாம் காணும் மட்டும் நமது சுயநீதியை நிலைநாட்டுவதற்காகத் தேவையான வழிவகைகளைத் தேடிக் கொண்டிருப்போம். இத்தகைய சுயநீதியெல்லாம் ஆண்டவருடைய பார்வையில் அழுக்கான கந்தைகளே (உரோ. 10 : 3; எசா 64 : 6). ஆண்டவரின் வெளிச்சம் பாவத்தை வெளிப்படுத்துவதால் நம்மை விடுதலையாக்கி வெளிச்சத்தின் பிள்ளைகளாய் மாற்றும்.

அசிசி பட்டணத்துப் பிரான்சிஸ் கடவுள் பயம் மிகுந்தவர். கடவுளது அன்பின் கயிறுகளால் கட்டப்பட்டிருந்தார். கடவுளது கட்டளைகள் அனைத்தையும் கைக்கொள்ளவேண்டும் என்ற விருப்பம் அவருக்குள் காணப்பட்டது. "உன்னிடம் அன்புகூருவது போல் அயலாரிடம் அன்பாயிரு". என்ற கட்டளையினைத் தொழுநோயாளிகளிடம் நிறைவேற்ற இயலாது தவித்தார். ஒருநாள் தூய பிரான்சிஸ் குதிரையின் மீது போய்க்கொண்டிருந்தார். அப்பொழுது

அருவருப்பான முகத்தையுடைய தொழுநோயாளி ஒருவன் அவரிடம் பிச்சை கேட்டான். தூய பிரான்சிசுக்கு அவனைப் பார்க்க முடியவில்லை. எனவே தனது முகத்தை திருப்பிக்கொண்டு வேகமாகக் குதிரையை ஓட்டிக் கொண்டு போய்விட்டார். சிறிது தூரம் பயணித்த பின்னர் தனது அன்பற்ற செயலுக்காய் அவர் கவலைப்பட்டார். மீண்டும் தாம் வந்த வழியே பயணித்து அந்த தொழுநோயளனைக் கண்டு அவனைக் கட்டிப்பிடித்து முத்தம் செய்தார். தன் பெலவீனத்தை மேற்கொள்ளவும் அன்பில் வளரவும் தூய பிரான்சிஸ் திட்டமிட்டார். தொழுநோயாளர்களைக் கண்டுபிடித்து அவர்களை ஓரிடத்தில் சேர்த்து பராமரித்தார். அக்காலத்தில் ஐரோப்பாக் கண்டம் முழுவதிலும் தூய பிரான்சிஸ் பெயரால் தொடங்கப்பட்ட நூற்றுக்கணக்கான மடங்கள் (Franciscon monastries) இருந்தன. அவை அனைத்திலும் தொழுநோயாளர்கள் பராமரிக்கப்பட்டனர். தூய பிரான்சிஸ் தனது இயல்பான பெலவீனத்தை மேற்கொள்ளத் தகுந்த அன்பின் செயலினைத் தெரிவு செய்து வெளிச்சத்தின் பிள்ளையாய் நடந்து கொண்டார்.

**2) பயனுள்ள வார்த்தைகளைப் பேசுதல்** (எபே. 4 : 29)

பற்றுறுதியாளரின் உரையாடல் முற்றிலும் ஒழுக்கமுற்றதாயும், நன்றியறிதல் நிறைந்ததாயும் விளங்க வேண்டும். இங்கிலாந்து நாட்டில் ஆண்டுதோறும் நூதனமான ஒரு போட்டி நடைபெற்று வருகிறது. அது என்னவென்றால், உலகிலேயே பெரிய பொய்யர் யார் என்பதைக் கண்டறிவதே. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த பொய்யர் திலகம் வில் ரிட்சனை கவுரவிக்கிற விதத்தில் தான் இந்தப் போட்டி நடத்தப்படுகிறது. போட்டியில் பங்கேற்கிறவர்களுக்கு ஐந்து நிமிடம் தரப்படும். இந்த ஐந்து நிமிடத்தில் தங்களது அசாத்திய பொய்யின் வழியாக நீதிபதிகளைப் போட்டியாளர்கள் கவர்ந்து அசத்த வேண்டும் என்பதே போட்டியின் விதி. 2012-ஆம் ஆண்டின் போட்டி சமீபத்தில் நடந்தது. இதில் அரசியல்வாதிகளும் வழக்கறிஞர்களும் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது (தினத்தந்தி, 22-11-2012). அறிய வேண்டிய செய்தி என்னவென்றால் இன்று உலகிலே பொய் பேசுபவர்கள் பெருகி வருகின்றார்கள். இன்று பல குடும்பங்களின் சீரழிவிற்குக் காரணம் உண்மையற்ற நிலையே. பிறருக்கு வரும் கடிதங்களைப் பிரித்துப் படிப்பது, பிறர் கருத்துக்களைத் திருடுவது (Plagarism), பிறர் நம்மை நம்பிச் சொல்லும் இரகசியங்களைப் பாதுகாக்க முடியாமல் போவது. என இதனைப் பட்டியலிடலாம். உண்மையற்ற உரையாடலைப் பவுலார் பாட்டிக்கதை என்கிறார் ( 1தீமொ. 4 : 7).





**3) தீமைகளைத் தவிர்த்தல்** (எபே. 4 : 31)

இன்றைய நற்செய்திப் பகுதியில் பசியோடு வந்த ஆண்டவர் இயேசு அத்தி மரத்தில் கனியைத் தேடினார். ஆனால் இலைகளைத் தவிர கனிகளைக் காணமுடியவில்லை. அந்த அத்தி மரம் கனியற்ற மரமாக நின்று பிறரை ஏமாற்றுவதை விட இல்லாமல் அகற்றப்படுவதே நன்மையானது என்பதனைச் சுட்டிக் காண்பித்தார். பலவித தீமைகளால் நிறைந்து கனியற்ற வாழ்வு வாழ்வோர் அவைகளை நீக்க வேண்டியதின் அவசியம் இங்கு சுட்டிக் காண்பிக்கப்படுகிறது. எருசலேம் ஆலயம் சென்ற இயேசு ஜெப வீடாய் இருக்க வேண்டிய ஆலயம் கள்ளர் குகையாய் மாற்றப்பட்டதைக் கண்டு வேதனையுற்று அதனைச் சுத்தப்படுத்தினார். ஜெப ஆலயத்தின் பரிசுத்தத்தைக் கெடுத்தவர்களை அடித்து வெளியே தள்ளி ஆலயத்தைப் பரிசுத்தப்படுத்தினார். நம் வாழ்விலும் கூட நற்செய்தியின் தகவுகளில் வளரவும் கனி கொடுக்கவும் இடையூறாக இருக்கும் பொறாமை, கோபம், எரிச்சல், ஆசை, ஆணவம், பெருமை, அகம்பாவம், வைராக்கியம், நீதியற்ற செயல்கள் போன்றவைகளை நீக்கி கனிகொடுத்து வாழ அழைக்கப்படுகின்றோம். "முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போடுங்கள்" (எபே. 4 : 22) என்று பவுலார் எபேசு திருச்சபையாருக்கு ஆலோசனை கூறுகிறார். நற்செய்தியின் தகவுகள் நம்மில் வளருவதற்குத் தடையான மோசம் போக்கும் இச்சைகளைக் களைய அழைக்கப்படுகிறோம்.

**4) இறை வார்த்தைக்கு இணங்குதல்** (2 அர. 23 : 3)

யோசியா யூதாவிலும் எருசலேமிலுமுள்ள மூப்பரையும், ஆசாரியர்களையும், தீர்க்கதரிசிகளையும் ஏனைய சகல ஜனங்களையும் ஆண்டவரின் ஆலயத்தில் கூடி வரச்செய்தார். திருச்சபைகளிலே நாம் கூடி வரும் போதெல்லாம் உடன்படிக்கை நூலாகிய திருமறையின் வார்த்தைகளைக் கவனமாய்க் கேட்க வேண்டும். யோசியா கூடி வந்த மக்கள் அனைவரும் கர்த்தரை பின்பற்றி நடக்கவும், கற்பனைகளையும் சாட்சிகளையும் கட்டளைகளையும் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் கைக்கொள்ளவும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கை செய்ய வைத்தான். பின்பு உடன்படிக்கை நூலின் வார்த்தைகளினின்று வழி விலகச் செய்யும் விக்கிரகத் தோப்புகளையும் பலிபீடங்களையும் அடியோடே அகற்றிவிட்டான். இவ்வாறு யோசியா தானும் தனது நாட்டு மக்களும் சுத்திகரிக்கப்படவும் நல்ல தகவுகளில் வளரமும் முயற்சி செய்தார். இன்று ஆராதனைகளில் வாசிக்கப்படும்

மற்றும் சொல்லப்படும் வார்த்தைகள் மறக்கப்பட்டு போகின்றன. திருமண ஆராதனையில் மணமகனும் மணமகளும் வாக்குறுதி கொடுப்பது உண்டு. "இன்று முதல் நன்மையிலும் தீமையிலும் வாழ்விலும் தாழ்விலும் சுகத்திலும் சுகவீனத்திலும் மரணம் நம்மை பிரிக்கும் வரை கடவுளுடைய தூய நியமனப்படி உம்மை நேசிக்கவும் காப்பாற்றவும் வாக்குக் கொடுக்கிறேன்". இப்படிக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளும் மறக்கப்பட்டுப் போகின்றபடியினால் தான் குடும்பங்களிலும், சமூகத்திலும் சமாதானமற்ற நிலைகள். "கடவுளால் உண்டானவன் கடவுளுடைய வசனங்களுக்குச் செவி கொடுக்கிறான்" (யோவான் 8 : 47). பேதுருவும் யோவானும், மனுஷனுக்குச் செவி கொடுக்கிறதைப் பார்க்கிலும் கடவுளுக்கு செவி கொடுக்கிறது கடவுளுக்கு முன்பாக நியாயமாயிருக்கும் (திப. 4 : 19) என்று இறை வார்த்தைகளுக்குச் செவி கொடுத்து வாழ்வதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

நற்செய்தியின் தகவுகளை நம்மில் வளர்க்க; ஒளியின் மக்களாய் வாழ்ந்து பயனுள்ள வார்த்தைகளைப் பேசி தீமைகளைத் தவிர்த்து இறைவார்த்தைகளுக்கு இணங்க திரித்துவக் கடவுள் துணை செய்வாராக.

**அருள்திரு. பா. சாம் பிளஸிங்**



**01-09-2013** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் 14-ஆம் ஞாயிறு

நீதி. 2 : 1-12 | கல்வி ஞாயிறு | யாக். 3 : 13-18

திபா. 119 : 33-40 | மத். 7 : 21-29

# இறையறிவில் வளருங்கள்

## Grow in the Divine Knowledge

" அப்பொழுது . . . கடவுளை அறியும்அறிவைப் பெறுவாய்" (நீதி. 2 : 5)

**இறைவேண்டல்**

*ஆற்றல் நிறைந்த கடவுளே! அனைத்து அறிவு நுட்பத்திற்கும், அறிவு திறனுக்கும் உறைவிடமான கடவுளே! கல்வி கற்றுக்கொள்ளும் பிள்ளைகளும், கற்றுக்கொடுக்கும் பணியில் தங்களை இணைத்துள்ளோரும் உமது அறிவையும் அதிகாரத்தையும் பெற்றுக்கொள்ள அருள்செய்யும். கல்வி அறிவு உமக்கு ஏற்புடையதாகவும், படைப்பின் வளமைக்கும், நன்மைக்கும் ஆக்கம் தருவதாகவும், உம் திருவுளத்துக்கு ஏற்புடையதாகவும் அமைந்தருள அருள்தர வேண்டுமென்று மாட்சிமை மிகுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

கல்வி ஞாயிறு அனைத்து இறைமக்களின் கற்றல் மற்றும் அதன் முன்னேற்றத்தைக் குறித்துச் சிந்திக்கக் கிடைக்கும் ஒரு வாய்ப்பு. எல்லா வயதினரும் கடவுளின் மக்களாக வளர்வதற்கு திருச்சபை கரிசனையுடன் உதவி செய்து வருகிறது. மக்களுக்குப் பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வி கொடுப்பதில் திருச்சபை அதிக முன்னேற்றம் கண்டுள்ளது. இன்று, கல்வி நிறுவனங்களில், கல்விசார்ந்த செயல்களுக்காக இறைவேண்டலோடு, இறைநம்பிக்கையில் வளர உதவி செய்ய ஆயர்களையும் நியமித்து உயர்வடைந்து வருகிறது. கற்றல் என்பது வாழ்வின் இறுதிவரை என்ற புரிந்துகொள்ளுதல் இன்று வளர்ந்து வருகிறது.

அறிவு என்பதற்கு 'Knowledge' என்ற ஆங்கில வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. 'Knowledge' என்றால் புலமை, கல்வி, கேள்வி

இவற்றால் பெற்ற அறிவு என்ற விளக்கம் தரப்படுகிறது. 'Knowledge'-க்கு இணையாக 'Disernment' என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. Disernment என்பதற்கு "ஐஸ்தேசிஸ்" (aisthesis) என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. இது "உய்த்துணரும் பண்பு" என பொருள்படுகிறது. Knowledge என்பதற்கு "க்னோசிஸ்" (gnosis) மற்றும் "எப்பிக்னோசிஸ்" (epignosis) ஆகிய கிரேக்க வார்த்தைகளும் "யாதா" (yada) என்ற எபிரேய வார்த்தையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. "க்னோசிஸ்" என்பது, ஒரு மனிதன் பூமியில் தான் வாழும் சூழலோடுள்ள இசைவற்ற (inharmonious) உறவு நிலைகளை விளக்கும் தன்னுடைய உண்மைத்தன்மை குறித்தும், தன்னைக் குறித்தும் அறியும் அறிவாகும். அது அம்மனிதனின் மீட்புக்கான வழியைக் காட்டும்.

**கடவுளை அறிதல்**

கடவுளை அறிதல் என்பது அவருடன் உள்ள தனி உறவில் உட்புகுவது ஆகும். (to know God is to enter into a personal relationship with God). கடவுளைப் பற்றிய அறிவு (knowledge of God) என்பது கடவுளின் சுய வெளிப்பாட்டிலும், சான்று பகர்தலிலும் அடங்கியிருக்கிறது. "நானே ஆண்டவர் என்று நீங்கள் அறிந்து கொள்வீர்கள் (அவர்கள் அறிந்து கொள்வார்கள்)" என இஸ்ரயேல் மக்களுக்குக் கூறுவதில் கடவுளை அறியும் அனுபவம் அடங்கியிருக்கிறது. சிரியாவைச் சார்ந்த நாமான் தன் தொழுநோய் குணமடைந்ததன் வழி இஸ்ரயேலின் கடவுளைக் குறித்து அறிந்தார் (2 அரச. 5 : 15). இறையறிவு என்பது ஏழைகளுக்கும், தேவையில் உழல்வோருக்கும் நீதி செய்வது எனத் திருமறை கூறுகிறது (எரே. 22 : 15ff). இறைவாக்கினர் ஓசேயாவின் பார்வையில், இறை அறிவு என்பது குணநலன் சார்ந்தது ஆகும். உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை இவற்றின் குறைபாடு குறைந்த இறை அறிவின் காரணத்தால் வருகிறது (ஓசே. 4 : 1ff). மேலும், இறையறிவு என்பது இஸ்ரயேலுக்கான கடவுளின் மீட்பின் செயல்களோடு இணைந்திருக்கிறது என்பதும் ஓசேயாவின் கருத்து (ஓசே. 4 : 6; 5 : 4; 6 : 6; 8 : 2; 13 : 4).

புதிய ஏற்பாட்டில் கடவுளின் மைந்தரான இயேசு கிறிஸ்துவை அறிதல் என்பது கடவுளை அறிவதாகும் என்ற சிந்தனை வெளிப்படுகிறது (யோவா. 10 : 14ff; 14 : 7 ff; 17 : 3; 2 கொரி. 4 : 6; பிலி. 4 : 10; கொலோ. 2 : 2ff; 1 யோவா. 5 : 20).





**மனித அறிவும் இறையறிவும்** (நீதி. 2 : 1-5)

மனித அறிவு அரைகுறையானது. முழுமையானது அல்ல (1 கொரி. 13 : 9). கடவுளின் அறிவு ஆழமானது; அளந்துபார்க்க முடியாதது (உரோ. 11 : 33; திபா. 147 : 5). ஆனாலும்இறையறிவு என்பது மனிதப் புரிந்து கொள்ளுதலுக்கு அருகில் தரப்படுகிறது. (உரோ. 10 : 8). அதை அடைய மனிதர் நாட்டம் கொள்ள வேண்டும். " . . . மெய்யறிவில் உன் மனத்தைச் செலுத்து . . ." (நீதி. 2 : 1); ". . . மெய்யறிவுக்காக உரக்க மன்றாடு" (நீதி. 2 : 3); ". . . புதையலுக்காகத் தோண்டும் ஆர்வத்தோடு அதைத்தேடு (நீதி. 2 : 4) மெய்யறிவான இறையறிவுக்கான நாட்டமும் தேட்டமும் உண்மையானதாக அமைய வேண்டும்.

**கவனம்** (Attention) : இறைவார்த்தைகளையும், கட்டளைகளையும் ஏற்று, சிந்தையில் இருத்திக்கொள்ள செவியின் கவனமும், மனத்தின் கவனமும் தேவை (நீதி. 2 : 1-5).

**கருத்து** (Retention) : கவனித்துக் கேட்பவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். நல்ல நிலத்தில் விழுந்த விதையைப் போல இறைவார்த்தையைக் கேட்டுப்புரிந்து கொள்ள வேண்டும். பல மடங்கு பயன் அளிக்க வேண்டும் (மத். 13 : 23). காதால் கேட்டும் கருத்தில் கொள்ளாமல் இருக்கக் கூடாது (மத். 13 : 14).

**பிரதிபலிப்பு** (Reglection) : இறைவார்த்தை வழி பெற்றுக்கொள்ளும் இறையறிவை வாழ்வில் பயன்படுத்த வேண்டும். இவ்வறிவு வாழ்வின் சொல், சிந்தனை, செயல் ஆகியவற்றில் வெளிப்பட வேண்டும்.

**கேட்டல்** (Supplication) : நாம் அறிவில் குறைந்தவர்கள் என்னும் சிந்தை நமக்கு வேண்டும். நீதிமொழிகளைக் கூறிய ஆகூர் தன்னை பற்றிக் கூறும்போது. ". . . மனிதருக்குரிய அறிவாற்றல் எனக்கில்லை . . ." கடவுளைப் பற்றிய அறிவு எனக்கில்லை என்கிறார் (நீதி. 30 : 2-3). எனவே, அறிவு நிறைந்தவராம் கடவுளிடம் அறிவுக்காக மன்றாட வேண்டும் (யாக். 1 : 5).

**நிலைத்திருத்தல்** (Perseverance) : இறையறிவு என்பது மேற்பரப்பில் சிறிதளவும் தோண்டத் தோண்ட அதிக அளவிலும் தரும் ஒரு சுரங்கம். ஆழமாகத் தேடும் தன்மையில் நிலைத்திருக்க வேண்டும்.

**கடவுள் கொடுப்பவர், மனிதர் பெற்றுக்கொள்பவர்** (நீதி. 2 : 6-12)

கடவுள் தருகிறார் (கொடுக்கிறார்) என்ற உண்மை திருமறையில் காண முடிகிறது. கடவுளின் இரக்கம் என்பது அவரது

அருட்கொடைகளின் தன்மைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கடவுளின் வளங்கள் அவரது அளப்பரிய அருட்கொடைகளில் வெளிப்படுகின்றன (யாக். 1 : 5-17). நல்ல கொடைகள் அனைத்தும், நிறைவான வரமெல்லாம், ஒளியின் பிறப்பிடமான விண்ணகத் தந்தையிடமிருந்தே வருகின்றன. அவரிடம் எவ்வகையான மாற்றமும் இல்லை அவர் மாறிக்கொண்டிருக்கும் நிழல் அன்று (யாக். 1 : 17).

மனிதர் பெற்றுக்கொள்ள கடவுள் தரும் கொடைகள் : அ) ஞானம் தருகிறார் (நீதி. 2 : 6); ஆ) பாதுகாவல் தருகிறார் (நீதி. 2 : 7-12). ஞானமும் அறிவும் தரும் கடவுள் அவற்றால் மனித வாழ்வைப் பாதுகாக்கிறார். மாசற்றோருக்குக் கடவுள் கேடயமாய் இருக்கிறார்; நேர்மையாளரைப் பாதுகாக்கிறார்; வழிகளைக் காவல் செய்கிறார். இறையறிவு தீய வழியினின்றும், வஞ்சகத்தில் அகப்படாமலும் நம்மைப் பாதுகாக்கும். கடவுள் பார்வையில் நீதியாக எண்ணப்பட்ட நம்பிக்கை கொண்ட ஆபிரகாமுக்கு "அஞ்சாதே, நான் உனக்குப் பெரும் கேடயமாக இருப்பேன்" எனத் தன் பாதுகாவலை உறுதிப்படுத்துகிறார் (தொ.நூ. 15 : 1). "கடவுள் நமக்கு அடைக்கலமும் ஆற்றலுமாய் உள்ளார்; இடுக்கணுற்ற வேளைகளில் நமக்கு உற்ற துணையும் அவரே" என் நம் உடன் வாழும் கடவுளின் பாதுகாவலைத் திருப்பாடல் ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

ஒரு கட்டிடத்துக்கு நல்ல அடித்தளம் தேவை என்பது போல இறைவார்த்தை என்னும் இறையறிவின் அடித்தளம் நம் வாழ்வில் தேவை. கடவுள் விரும்புவது அவரை அறிந்தும் அறியாதவர்களைப் போல் வாழும் போலியான வாழ்க்கையோ மனமாற்றமோ அல்ல. "உண்மையாகவே நான் விரும்புவது பலியை அல்ல . . . கடவுளை அறியும் அறிவையே நான் விரும்புகிறேன்" (ஓசே. 6 : 6) என்ற கடவுளின் விருப்பம் நிறைவேற்ற முயற்சி செய்வோம். இறைவார்த்தை வழி கடவுளை அறியும் அறிவைப் பெற்று. பயன்தரும் நற்செயல்கள் அனைத்தும் செய்து இறையறிவில் வளர்வோம் (கொலோ. 1 : 10).

**அருள்திரு. M. சலீம் தங்கக்குமார்**



| 08-09-2013 | மகளிர் ஞாயிறு |
|---|---|

விப. 1 : 15-22 — உரோ. 16 : 1-16
திபா. 148 — லூக். 8 : 1-3

# மகளிர் : கடவுளின் விடுதலைப்பணிப் பங்காளர்கள்

# Women : Partners in God's Liberative Acts

"மருத்துவப் பெண்கள் கடவுளுக்கு அஞ்சியிருந்ததால், அவர் அவர்கள் குடும்பங்களைத் தழைக்கச் செய்தார்" (விப. 1 : 21)

**இறைவேண்டல்**

*ஆற்றலும், அருளும் நிறைந்த கடவுளே? பெண்களை அழைத்து திருப்பணியில் பங்கேற்கச் செய்தவரே, இயேசுகிறிஸ்துவின் வழியாய் மகிமையான உயிர்த்தெழுதலின் முதல் சான்றாகும் ஆசியை பெண்ணுக்கு கொடுத்தவரே, அனைத்து பெண்களும் எல்லாவித கட்டுகளையும் அறுத்து நீர் அருளும் விடுதலையைப் பெற்று வாழ அருள் செய்ய வேண்டுமென்று விடுதலை நாயகராம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

திருமறையில் குறிப்பிட்டுள்ள மீட்பின் வரலாற்றில் பெண்கள் சிறப்பாகப் பணியாற்றியதாகக் கூறப்பட்டுள்ளது. செங்கடலைக் கடந்தபின் மிரியாம் பாடிய நன்றிப் பாடலும் (யாத். 15:21), தெபோரா பாடிய பாடலும் (நியா. 5) விவிலியத்தின் பழமையானப் பகுதிகளாகும். தொடக்கக் காலத் திருச்சபையில் பெண்கள் பலர் சிறப்பாகப் பணியாற்றியதாகப் புனித பவுல் தம் திருமுகங்களில் குறிப்பிடுகிறார் (ரோ. 16 : 1-7).

வரலாற்றில் பெண்கள் ஒதுக்கப்பட்டவர்களாகக் காணப்பட்டனர். பெண்கள் இகழ்ச்சிக்கும், அவல நிலைக்கும் உள்ளாகினர் (உபா. 6 : 4-9; 11 : 13-21; எண். 15 : 37-41; தி.பா. 2 : 37; மாற். 6 : 34; 1 கொரி. 11 : 2-6; எபே. 5 : 22-24). பெண்கள் மீது ஆண்கள் ஆதிக்கம் காட்டிய போதிலும், பெண்களும் விடுதலைப் பணியில் ஆற்றலுள்ளவர்களாக பயன்படுத்தப்பட்டனர். (எ.கா. : சாராள், ஆகார், ரெபேக்காள், ராகேல், மிரியாம், தெபோராள், அன்னாள், ரூத், எஸ்தர், எலிசபெத், மார்த்தாள், மரியாள், மோரியப் பெண், மகதலேனா மரியாள்).

மேற்குறிப்பிட்ட பெண்கள் வீராங்கனைகளாக எல்லாவற்றிலும் ஆண்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர். இவர்கள் சீடர்கள்,

இறைவாக்கினர், திருத்தூதுவர், அன்னையர், மக்கள், சகோதரிகள், நண்பர்கள், அரசியல் தலைவர்கள் எனப் பலதரப்பட்டப் பணிகளைச் சிறப்பாகச் செய்ததாகத் திருமறை அவர்களைப் பாராட்டி குறிப்பிட்டுள்ளது. கடவுள் தந்தையாகவும், அதே வேளையில் பரிவு பொங்கும் தாயன்பு கொண்டவருமாய்த் திகழ்கிறார்.

எகிப்தில் அடிமைகளாக இருந்த இஸ்ரயேலர் ஒரு தேசமாக உருவாகி விடுதலையுடன் வெளியேற ஒரு நல்ல தலைவர் தேவைப்பட்டார். சாவுக்கென்று வைக்கப்பட்டிருந்த ஒரு குழந்தை காப்பாற்றப்பட்டதால் அந்த குழந்தை வளர்ந்து 30 இலட்சம் மக்களை அழிவிலிருந்து காப்பாற்றினார். அவர்தான் மோசே. அவரை உருவாக்கி உலகை மீட்கும் பணியில் தாதியருக்கு இருந்த பங்கை நாம் பார்ப்போம்.

## 1. மன்னவருக்குப் பயப்படாமல் விடுதலைப் பணி

"எகிப்திய மன்னன் தங்களுக்கு கூறியிருந்த படி செய்யவில்லை". (விப. 1 : 17)

இஸ்ரயேலர் பார்வோனின் ஆட்சிக்குக் கீழ்ப்பட்டவர்களாய் இருந்தும், அவன் அவர்களை வேறுபடுத்திப் பார்த்தான். 215 வருடங்களுக்குள் 75 பேராகிய இஸ்ரயேலர் 30 இலட்சமாக மாறினர். பார்வோன் இஸ்ரயேலர் எந்நேரத்திலும் பகைவர்களுடன் சேரக்கூடும் என்று எதிர்மறையான எண்ணம் கொண்டான் (Nagative Attitude). ஆகவே மக்களை இன்னும் ஒடுக்கினான். அவர்கள் பலுகிப் பெருகியபோது எரிச்சலடைந்து அவர்கள் வாழ்வையும் கசப்பாக்கினான். மட்டுமல்ல ஆண்பிள்ளைகளைக் கொலை செய்ய திட்டமிட்டு ஆணையும் பிறப்பித்தான். மன்னன் சிப்பிராளையும், பூவாளையும் நோக்கி; நீங்கள் எபிரேயப் பெண்களுக்கு மருத்துவம் செய்யும்போது "ஆண் பிள்ளையானால் கொன்று போடுங்கள்" என்றான். தாதியர் மன்னருக்குக் கீழ்ப்படிவதா? அல்லது பலுகிப் பெருகுங்கள் என ஆசீர்வதித்த கடவுளுக்குக் கீழ்ப்படிவதா? மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படி எனப் போதிக்கும் திருமறையே (உரோ. 13 : 1) "கொலை செய்யாதிருப்பாக" (வி.ப 20 : 13) என்றும் கூறவில்லையா? கடவுளின் சினத்தின் பொருட்டு மட்டும் அல்ல மனச்சான்றின் பொருட்டும் நீங்கள் பணிந்திருத்தல் வேண்டும் (உரோ. 13 : 5, தி.பா. 5 : 29, தானி. 3 : 16). நாம் கீழ்ப்படிய வேண்டியது மனுஷருக்கல்ல; கடவுளுக்கு. மனிதனுக்குக் கீழ்படியும் போது, இறைக் கட்டளை மீறப்படுமாயின், அது கூடாது. மருத்துவச்சிகள் பார்வோனுக்குப் பயப்படுவதைப் பார்க்கிலும் பரமனுக்குப் பயப்படுவதைத் தெரிந்து கொண்டனர்.

அவருடைய திருப்பெயரினிமித்தம் அரசரிடமும் ஆளுநரிடமும் முன்பாகக் கொண்டு போகப்படும்போது ஏற்ற பதிலைச் சொல்ல ஞானத்தையும், வாக்கையும் அவரே கொடுப்பார் என்று வாக்குப் Ti ¦ « Ùd¡ \ ôo (í d. 21 : 12-15).





## 2. மனிதத்தன்மையற்ற செயல்களில் விடுதலைப்பணி

"ஆண்மகவென்றால் அதைக் கொன்றுவிடுங்கள்" (வி.ப. 1 : 16)

எபிரேயப் பெண்களின் பிள்ளைப்பேற்றின்போது ஆண்மகவு பிறந்துவிட்டால் பிறப்பிலே கொன்றுவிட வேண்டும் என்பது அரசக் கட்டளை. கொடுமையாக வேலை வாங்குவதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர் (வி.ப. 1 : 11). மருத்துவச்சிகள் கடவுளுக்கு அஞ்சியிருந்ததால் மனிதத் தன்மையற்ற கொடுமையின் செயல்களுக்கு மாறாக, குழந்தைகளை வாழவிட்டார்கள். மனிதத் தன்மையற்ற செயல்களில் பணி செய்ய கட்டாயப்படுத்தப்பட்டபோதும் கடமையைக் கண்ணியமாக நிறைவேற்றினார்கள். பணிப்பெண்கள் பார்வோனின் கேள்விகளுக்கு உகந்த பதில் கொடுத்தார்கள். பதில் முற்றிலும் பொய்யானது அல்ல. எபிரேய ஆண்கள் மட்டுமல்ல; பெண்களும் கடினமான வேலைக்கு உட்படுத்தப்பட்டபடியால் சொகுசு வாழ்வு வாழ்ந்த எகிப்தியப் பெண்களை விட பிரசவம் அவர்களுக்கு எளிதாக இருந்தது. பிரசவம் பார்க்க வருமுன் குழந்தை பிறந்து பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்பட்டது (வி.ப. 1 : 19). சகமனிதன் துன்பப்படுத்தப்படும்போது மனிதத் தன்மையற்ற செயல்களுக்கு எதிராக நாம் நிற்பதில்லை. இந்தப் பெண்கள் மனிதத் தன்மையற்ற செயல்களை எதிர்த்து குழந்தைகளை உயிரோடுவிட்டனர். மட்டுமல்ல, குழந்தைகளைப் பெற்றெடுக்க உதவியும் செய்தார்கள். வரலாற்றில் அனேகப் பெண்கள் ஆண்களின் கொடுமையால் அழிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இந்தப் பெண்கள் ஆண் குழந்தைகளை அழிக்காமல் உயிர் வாழ்வதற்கு உதவி செய்கின்றனர்.

"அவர்கள் என் உயிரைக் காக்கத் தலை கொடுக்கவும் முன்வந்தார்கள். அவர்களுக்கு நான் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன்" (உரோ 16 : 4).

ஆக்கில்லா - பிரிஸ்கில்லா தம்பதியார் பவுலுடைய உயிரைக் காப்பாற்றும்படியாகத் தங்களுடைய உயிரைக் கொடுக்க ஆயத்தமாயிருந்தார்கள் என்று அவரே குறிப்பிடுகிறார். "தியானா" என்ற கிரேக்கத் தேவதையின் சிலைகளை விற்று வியாபாரம் பண்ணி வந்த தட்டான் மூலமாக ஏற்பட்ட பெரிய கலவரத்தின்போது பவுலின் உயிருக்கு பெரிய ஆபத்து உண்டாயிருந்தது. அப்போதுதான் இந்தத் தம்பதியர் பவுலுக்கு அடைக்கலம் கொடுத்து உயிரைக் காப்பாற்றியிருக்க வேண்டும். பவுல் தன் கடிதங்களில் மரியாள், திரிபேனா, திரிபோசாள், பெர்சி போன்றோர் ஆண்டவருக்காக உழைக்கும் அடியார்கள் எனக் குறிப்பிடுகிறார் (உரோ. 16 : 6, 12).

கடவுளுக்கு அஞ்சினபடியால் மருத்துவச்சிகள் குழந்தைகளைக் காப்பாற்ற ராஜாவின் கையினால் மரணத்தைச் சந்திக்கவும் தயாராக இருந்தார்கள். கடவுள் அவர்கள் குடும்பங்களைத் தழைக்கச் செய்தார் (வி.ப. 1 : 21).

### 3. மன்னர் இயேசுவோடு இணைந்து விடுதலைப் பணி

இவர்கள் தங்கள் உடைமைகளைக் கொண்டு அவருக்குப் பணிவிடை செய்து வந்தார்கள் (லூக். 8 : 3).

இயேசு யூதர்களின் கொடுமையான அமைப்பு முறையை மாற்றி விட்டு பெண்களுக்குப் போதித்தது மட்டுமல்ல, மகதலேனா மரியாள், அன்னாள், சூசன்னா மற்றும் பெண்கள் பலர் அவரது சீடர்களாய் இருந்தனர் என லூக்கா சான்று பகருகிறார் (லூக். 8 : 1-3; மாற். 15 : 1-4; மத். 20 : 20).

இயேசுவின் காலத்தில் பெண்கள் இரண்டாம் தரமாகக் கருதப்பட்டனர். பாவியாகிய பெண் இயேசுவின் சிரசில் பரிமளத் தைலத்தை ஊற்றினாள் (மத். 14 : 3-9). பிரதான ஆசாரியன் தான் அதைச் செய்ய வேண்டும். ஆனால் இவள் தீய சடங்காச்சாரங்களை மாற்றி தைரியமாக விடுதலைப்பணி செய்கிறாள் (மாற். 14 : 9). திருத்தூதுவர் காலத்தில் உரோமர் 16-இல் குறிப்பிடும் பெண்களை பழைய - புதிய ஏற்பாடுகளின் பெண் இறைவாக்கினர் பின்னணியத்தைச் சார்ந்தவர்கள் எனக் கூறுகின்றார் (கலா. 3 : 28). இயேசு தாம் உயிர்த்தவுடன் முதல் முதலில் மகதலாமரியாள் என்ற பெண்ணுக்கே தோன்றினார் (யோ. 20 : 11-18). மகதலாமரியா சீடரிடம் சென்று நான் ஆண்டவரைக் கண்டேன் (யோவா. 20 : 17, 18) என்றார். பெண்கள் தன்னுயிரைப் பொருட்டாக எண்ணாமல் பிறர் உயிரைக் காப்பாற்ற தங்களை ஒப்படைக்கின்றனர். இயேசுவின் உயிர்ப்புக்குச் சான்றுபகர முதல் முதலில் ஒரு பெண்ணையே தேர்ந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

கடவுளின் கட்டளைக்கு சிப்பிராள், பூவாள் கீழ்ப்படிந்தனர். கொலை செய்ய வேண்டும் என்ற வன்முறைக் கட்டளையை மறுத்தனர். இவர்களின் சமூக விடுதலைப் பணி நமக்கு அறைகூவல் விடுக்கின்றன. குழந்தைகள் (பெண் குழந்தைகள்) கொலைச் செய்யப்படுதல் இன்றுச் சமுதாயக் கொடுமையாக மாறிக்கொண்டு வருகிறது. மருத்துவர்கள் இறை அச்சமின்றி பணத்திற்காக பெண் சிசுக்களைக் கொலை செய்கிறார்கள். இன்று கருச்சிதைப்பு உலகின் பல பாகங்களிலும் சட்ட ரீதியானது, இது பிசாசுக்கு செலுத்தப்படும் நரபலி என்று டாக்டர். ரெபேக்கா பிரெளன் கூறுகின்றார். சமூக விடுதலையும், ஆத்மீக விடுதலையும், வெறும் வார்த்தைகளால் வராது. கடவுளுக்குப் பயந்து தீமையை எதிர்த்து வாழ்வதே சிறப்பானது (நீமொ. 16 : 6). மனிதனுக்குக் கீழ்ப்படிவதைவிட கடவுளுக்கு அல்லவா கீழ்ப்படிய வேண்டும். இவ்விதமாய் நாமும் கடவுளுக்கு அஞ்சி விடுதலைப் பணி செய்யும்போது அவர் நம் குடும்பங்களைத் தழைக்கச் செய்வார்.

**திருமதி. லலிதா தேவகடாட்சம்**



**15-09-2013** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் 17-ஆம் ஞாயிறு

2 அர. 7 : 3-10 | உலக மக்களாட்சி நாள் | திப. 8 : 1-8
திபா 78 : 1-8 | மத். 4 : 23-25

## இறைமக்களின் திருப்பணி : பற்றுறுதியாளர்களின் குருத்துவம்

## Ministry of the Laity: Priesthood of all Believers.

*. . . இந்நாள் நல்ல செய்தியின் நாள்.* 2 அரச. 7 : 9.

**இறைவேண்டல்**

*ஆற்றல் நிறைந்த கடவுளே! முழு பற்றாளர்கள் சமூகத்தையும் உமது புது உடன்படிக்கையின் ஆசாரியர்களாய் அழைத்திருக்கிறதை அறிந்து உம்மைத் துதிக்கிறோம். நாங்கள் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளவும், உமது ஆசாரியர்களாய் உமக்குப் பணி செய்யவும், அதன் வழி உம்மை ஆவியிலும் உண்மையிலும் ஆண்டவராக மனக்குலம் ஏற்றுக்கொள்ள அருள் செய்ய வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.*

சிரியர்கள் சமாரியாவை முற்றுகையிட்டதால் சமாரியாவில் இருந்த இறைமக்கள் பட்டினியினால் மிகவும் நம்பிக்கையற்றவர்களாக இருந்தனர். பட்டினி கிடந்தவர்களில் நான்கு தொழுநோயாளிகள் இருந்தனர். இவர்கள் நற்செய்தியை அறவித்த மாமனிதர்கள் என அழைப்பது சிறப்புடையது. தொழுநோயாளிகளின் வாழ்வைச் சுட்டிக் காட்டி பற்றுறுதியாளர்களாகிய நமக்கு நற்செய்தியை அறிவிப்பதன் பொறுப்பை வலியுறுத்த விரும்புகிறேன்.

### 1. நற்செய்தியை அறிந்தனர்

தொழுநோயாளிகள் நான்கு பேர் ஒலிமுக வாசலில் இருந்தார்கள் (11 அர. 7 : 3). இந்த நான்கு பேரும் பட்டணத்தின் நுழைவாயிலுக்கு அருகாமையில் அவ்வழியாகப் போகிறவர்கள் ஏதாவது உணவுகளைத் தங்கள் பக்கம் வீசி எறிவார்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தார்கள் ஆனாலும் அவர்களுக்கு உணவு கிடைக்கவில்லை. சீரியர்கள் பட்டணத்தை முற்றுகையிட்டிருந்ததால் பட்டணத்திற்குள் இருந்தவர்களும் பட்டினியாயிருந்தனர். தொழுநோயாளிகளும் பட்டினியால் மடிந்து கொண்டிருந்தனர்.

பட்டணத்தில் பஞ்சம் உண்டாயிருந்ததினால், நாம் இங்கே இருந்து சாகவேண்டியது என்ன? (11 அர. 7 : 3) இப்போது சீரியருடைய

இராணுவத்தினிடத்திற்குப் போவோம் வாருங்கள். அவர்கள் நம்மை உயிரோடு வைத்தால் பிழைக்கிறோம். நம்மைக் கொன்றால் சாகிறோம் என்று தீர்மானித்தார்கள். சீரியருடைய இராணுவத்தினிடத்திற்குப் போக இருட்டோடே எழுந்து பாளையத்தின் முன்னணியில் வந்தார்கள். அங்கே ஒருவரும் இல்லை.

இறைவன் சீரியரின் இராணுவத்திற்கு இரதங்களின் இரச்சலையும் குதிரைகளின் இரைச்சலையும் மகா இராணுவத்தின் இரைச்சலையும் கேட்கப் பண்ணினதால் இதோ நம்மிடத்தில் போருக்கு வர இஸ்ரவேலின் ராஜா ஏத்தியரின் இராஜாக்களையும் எகிப்தியரின் இராஜாக்களையும் நமக்கு விரோதமாகக் கூலி பொருத்தினான் என்று எண்ணி சீரியர்கள் இருட்டோடே எழுந்திருந்து தங்கள் குதிரைகளையும், கழுதைகளையும் பாளையத்தையும் இருந்த பிரகாரமாக விட்டுவிட்டு தங்கள் பிராணன் தப்ப ஓடினார்கள். தொழுநோயாளிகள் எச்சரிப்போடு பாளையத்தினுள் நுழைந்தார்கள். அங்கே எரிந்து கொண்டிருந்த நெருப்பையும் குதிரைகள் கட்டப்பட்டிருந்ததையும் கண்டார்கள். ஆனால் மனிதர்கள் எவரையும் காணவில்லை. கூடாரத்திற்குள் வைத்திருந்த உணவைக் கண்டார்கள். பசித்தவனுக்கு உணவுதான் நற்செய்தி பசித்தவனுக்கு இறைவன் உணவு வடிவில் காட்சித் தருவார் என்று அறிஞர் ஒருவர் சொன்னார்.

இந்த உலகம் பாவத்தால் முற்றுகையிடப்பட்டுள்ளது (எபே. 6 : 12) கிறிஸ்துவைச் சாராதவர்கள் நம்பிக்கையற்றவர்களாக ஆவிக்குரிய முறையில் பட்டினியாயிருக்கிறார்கள். தொழுநோயாளிகள் பகிர்ந்து கொள்வதற்கு சரீர நன்மைகளைக் குறித்து ஒரு நற்செய்தியை உடையவர்களாயிருந்தார்கள். நாம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் குறித்துக் பகிர்ந்து கொள்வதற்கு நற்செய்தியை உடையவர்களாய் இருக்கிறோம். தொழுநோயாளிகளின் வார்த்தைகளில் நம் கவனத்தை ஈர்ப்பது நற்செய்தி என்ற வார்த்தை ஆகும். சுவிசேஷம் என்ற சொல் நற்செய்தி எனப் பொருள்படுகின்றது. நற்செய்தியின் மையப் பகுதியானது இயேசு கிறிஸ்துவின் துன்பம் மரணம் உயிர்தெழுதல் போன்றவற்றை உள்ளடக்கியது (1கொரி. 15 : 1-4). இந்த நற்செய்தியை நாம் அறிந்திருக்கிறோம்.

2. நற்செய்தியை அனுபவித்தனர்

தொழுநோயாளிகள் உணவைக் கண்டது மாத்திரமல்ல, இப்போது அவற்றைப் புசித்துக் குடித்தனர். பின்பு அவர்கள் வெள்ளி, பொன் மற்றும் வஸ்திரங்களைக் கண்டு எடுத்துக் கொண்டுபோய் இருளில் ஓர் இடத்தில் ஒளித்து வைத்தார்கள். அவர்கள் ஒவ்வொரு கூடாரமாகச் சென்று கொள்ளையிட்டார்கள்.

இந்த நான்கு தொழுநோயாளிகளைப் போல நம்மில் கர்த்தருடைய சபையின் அங்கத்தினராயிருக்கிறவர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களை அளிப்பை அனுபவிக்கிறவர்களாயிருக்கிறோம்.





பட்டினியாயிருத்தல் என்ற நிலையிலிருந்து திருப்தியாயிருத்தல் என்ற நிலைக்கு நாம் கடந்து வந்திருக்கிறோம் (மத்தேயு 5 : 6). நாம் ஆவிக்குரிய முறையில் தரித்திரர் என்ற நிலையிலிருந்து ஐசுவரியாவான்கள் என்ற நிலைக்கு முன்னேறிச் சென்றுள்ளோம் (11 கொரி. 6 : 10, மத். 5 : 3) எத்தனை எத்தனை அருமையான வாக்குத்தத்தங்களும் ஆசீர்வாதங்களும் நமக்கு அருளப்பட்டுள்ளன (எபேசியர் 3 : 20, பிலிப்பியர் 4 : 19, எபிரேயர் 7 : 25). நாம் பவுலடியாரோடு சேர்ந்து தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக (11 கொரி. 9 : 15) அவருடைய குமாரனுடைய ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் என்று சொல்லுவோமாக.

தொழுநோயாளிகளின் தேவைக்குத் தக்கதாகவும், தேவைக்கு அதிகமாகவும் உணவைப் பெற்றிருந்தார்கள். ஆனால் பட்டணத்திற்குள் மக்கள் இன்னும் பட்டினியால் வாடிக் கொண்டிருந்தார்கள்.

3. நற்செய்தியை அறிவித்தனர்

நீண்ட நேரம் கழித்து தொழுநோயாளிகளின் மனசாட்சி அவர்களுக்கு உணர்த்தியது. பின்பு அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி நாம் செய்கிறது நியாயமில்லை. இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள். நாளை காலை வரை இதை வெளியிடாது மௌனமாயிருந்தால் நாம் குற்றவாளிகள் ஆவோம், வாருங்கள். நாம் போய் அரச மாளிகையில் இதை அறிவிப்போம் என்று சொல்லிக் கொண்டார்கள்.

தன் அயலகத்தாருக்குப் பயன்படக்கூடிய ஒரு நன்மையான காரியத்தை அறிந்து அதை அவருக்கு மறைத்து வைத்தால் அந்த மனிதன் திருட்டுக் குற்றமுடையவனாக இருப்பான்.

இந்தத் தொழுநோயாளிகள் கிடைக்கும் உணவைக் குறித்துச் சமாரிய மக்களுக்குச் சொல்லத்தவறினால் அவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுவார்கள்.

நமக்குரிய கேள்வி இதுதான். நம்மிடம் இருப்பதிலிருந்து கொடுக்க உலகத்தின் மிக அவசரமான தேவை என்ன என்பதை நாம் புரிந்திருக்கிறோமா? பாவத்தால் வாழ்விழந்து போனவர்களோடு நாம் நற்செய்தியாகிய கிறிஸ்துவைப் பகிர்ந்துக்கொள்ளத் தவறினால் நாம் குற்றவாளிகளாவோம்.

திருவசனமாகிய ஞானப்பாலை மற்றும் ஞானாகாரத்தைப் பகிரத் தவறினால் (1 பேதுரு 2 : 3, எபி. 5 : 12) தண்டனை நம்மேல் வரும்.

இந்நாள் நற்செய்தியின் நாளாக நமக்கு அருளப்பட்டுள்ளது. நற்செய்தியை அறிந்து அனுபவித்திருக்கின்ற நாம் அதை அறிவிக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம் என்பதை உணர்வோம் (எசே. 3 : 18) நற்செய்தி அறிவிக்கப் புறப்படுவோம்.

**அருள்திரு. P.P.S.S. செல்வின் மேத்யு**

| 22-09-2013 | பெந்தக்கோஸ்துக்குப்பின் வரும் 18-ஆம் ஞாயிறு |
|---|---|

I சாமு. 24 : 1-15 எபே. 6 : 10-18
திபா 15 மத். 5 : 13-16

# கிறிஸ்தவப் பண்பு
## (CHRISTIAN CHARACTER)

நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புற்றதாக்க முடியும்?
மத். 5 : 13

**இறைவேண்டல்**

*வாழ்வின் கடவுளே! அனைத்தையும் உருவாக்குபவரே! உமது ஆறுதலையும், உதவிகளையும் பெற்றுக்கொள்ள அழைக்கிறவரே வறுமை, ஏமாற்றம், பாடுகள் நிறைந்த உலகில் வாழ்ந்திருக்கும் போது உமது அரசின் தகவுகளை நாங்கள் காத்துக்கொள்ள அருள்புரியும். உமது போதனைகள், உமது வாழ்வின் வழிகள், உமது பற்றுமை, உமது பொறுமை, உமது விடாமுயற்சி இவைகளை நாங்கள் பின்பற்றி வாழ ஆற்றல்படுத்த வேண்டுமென்று எங்களுக்கு முன்னோடியாய் வாழ்ந்து காட்டிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.*

ஓரியூரின் ஒளிவிளக்கு! மறவர் நாட்டின் மங்காத மாணிக்கம் என்றெல்லாம் புகழப்பட்டவர் ஜாண்-டி-பிரிட்டோ ஆவார். இவர் என்ற Society of Jesus என்ற கத்தோலிக்கப் பிரிவின் அருட்பொழிவு பெற்ற துறவி. போர்ச்சுக்கல் நாட்டவரான இவர், 1673-ஆம் ஆண்டு குருத்துவப் பட்டம் பெற்று இந்தியாவிற்கு அருட்பணி செய்வதற்காக வந்தார். தமிழ் மொழியினைக் கற்ற இவர் 1686 முதல் தமிழ் நாட்டிலுள்ள மறவர் இனமக்கள் வாழும் பகுதியில் பணிபுரிய ஆரம்பித்தார்.

இவரது பணியின் காலத்தில் தடியத்தேவர் என்ற சிற்றரசன் உடல் முழுவதும் புண்களால் பாதிக்கப்பட்டார். எந்த மருத்துவத்தாலும் அவர் வியாதி குணமாகவில்லை. இந்நிலையில் தடியத்தேவர் ஜாண்-டி-பிரிட்டோவைக் குறித்தும் அவர்தம் குணமளிக்கும் ஆற்றல் குறித்தும் கேள்விப்பட்டார். அவரை அழைத்து வர ஆள் அனுப்பியபோது பிரிட்டோ உடனடியாகச் செல்லாது தம்சீடரான சிலுவை நாயக்கரை தடியத்தேவரிடம் அனுப்பினார். இவர் சென்று யோவான் நற்செய்தி





நூலின் ஒரு பகுதியைப் படித்து மன்றாடியதால் தடியத்தேவர் உடல்நலம் பெற்றார்.

தடியத்தேவர் பிரிட்டோவை நேரடியாகச் சந்தித்து திருமுழுக்குக் கேட்டார். தடியத்தேவருக்கு ஐந்து மனைவிகளை உடையவராய் இருந்ததால் திருமுழுக்குத் தர முடியாது என்றார் பிரிட்டோ. இல்லற வாழ்வின் ஒழுக்கத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என வலியுறுத்தினார். எனவே தடியத்தேவர் தன் முதல் மனைவியை வைத்துக் கொண்டு மற்ற நான்கு பேரையும் அனுப்பிவிட்டார். இப்படி அனுப்பப்பட்டவர்களில் ஒருவர் இராமநாதபுரம் சேதுபதியின் தங்கை கடலாயி என்பவராவார். அவர் அவமானம் தாங்காமல் தன் மாமனிடம் சென்று அழுதார். இவற்றிக்கெல்லாம் காரணம் அந்தக் கிறிஸ்தவ ஆயர் பிரிட்டோ என்றார். பிரிட்டோ கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். மரண தண்டனை நிறைவேற்றாதபடி தடியத்தேவர் இயன்ற மட்டும் குறுக்கே நின்றார். இறுதியில் ஜாண்-டி-பிரிட்டோ ஓரியூருக்கு அனுப்பப்பட்டுக் கழுவேற்றிக் கொல்லப்பட்டார். மனிதவாழ்வில் ஒழுக்கம் சார்ந்த நல்ல பண்பினை வலியுறுத்தியதால் 1693-ஆம் ஆண்டு மரணத்தை சந்தித்தார் பிரிட்டோ.

ஆங்கிலப் பழமொழியொன்று பின்வருமாறு;

If your Wealth is lost, Nothing is lost
If your Health is lost, Something is lost
If your Character is lost, Everything is lost

அதாவது, உனது செல்வத்தை இழந்தால் நீ ஒன்றையும் இழக்கவில்லை
உனது சரீர சுகத்தை இழந்தால் நீ கொஞ்சத்தை இழந்தவனாய்
உனது பண்பினை இழந்தால் எல்லாவற்றையுமே இழந்து நிற்பாய்.

வாழ்வின் பண்பின் முதன்மையை இப்பழமொழி தெளிவாகச் சுட்டி நிற்கின்றது. கிறிஸ்தவர்கள் என்றால் சிறப்புப் பண்புகளுடன் கிறிஸ்துவைச் சார்ந்து வாழவும் பணிபுரியவும் அழைக்கப்பட்டவர்கள். ஆனால் இன்று கிறிஸ்தவரிடையே அன்பு, நன்மை செய்தல், பகிர்வு, மன்னிப்பு போன்ற இறையரசு சார்ந்த பண்பு நிலைகள் எந்த அளவில் செயல் வடிவம் பெறுகின்றன? மகாத்மா காந்தி குறிப்பிடுகையில் “பண்புள்ள மனிதன் தனக்குக் கொடுக்கப்படும் எல்லா நிலைகளுக்கும் தன்னைத் தகுதிப் படுத்திக் கொள்வான்” என்கிறார். திருமறை சார்ந்து கிறிஸ்தவப் பண்பின் முக்கியத்துவத்தை சிந்திக்க நம்மை ஆண்டவர் அழைக்கிறார்.

**சுத்திகரிக்கும் நற்பண்பு**

மத்தேயு நற்செய்தியாளர் கிறிஸ்தவ சீடர்களின் பண்புகளைள, கடமைகளை வீட்டில் பயன்படுத்தும் உப்பு எனும் உருவகத்தோடு ஒப்பிட்டுக்காட்டுகின்றார். "நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்னும் ஆண்டவரின் கூற்று தொடக்கக் கிறிஸ்தவர்கள் கடந்து சென்ற துன்பக் காலங்களில்தான் அதிகமாக நினைவுகூரப்பட்டது. இந்த அடிப்படையில் தான் இதனைப் புரிதல் வேண்டும். அவ்வகையில் சாரமற்ற உப்பு என்பது இரத்த சாட்சியாக மரிப்பதற்குத் மரணத்திற்குத் தயங்கியவர்களையும், சாரமுள்ள உப்பு தயங்காமல் மரித்தவர்களையும் சுட்டி நிற்கின்றது.

உப்பின் பண்பு சார்ந்த தனித்தன்மைகளில் ஒன்று அதன் சுத்திகரிக்கும் பண்பாகும் (Salt has purifying function). 2 அரசர்கள் 2 : 19-22 வரையுள்ள இத்திருமறைப்பகுதியில் எலிசாவின் ஆலோசனைப்படி நல்ல தண்ணீரற்றச் சூழலில், நீருற்றில் எலிசா உப்பைக் கொட்டியபோது தண்ணீர் நல்ல தண்ணீராக மாறியது எனக் காண்கிறோம். இங்கு உப்பின் சுத்திகரிக்கும் பண்பு நிலை நிறுத்தப்படுவதைக் காண்கின்றோம். எசேக்கியல் 16 : 4-இல் சுத்திகரிப்பிற்காகக் குழந்தை உப்பு நீரால் கழுவப்பட்டது எனக் காண்கின்றோம்.

லேவியர் 2 : 13 நேர்ச்சையான எந்த உணவுப் படையலும் உப்பிடப்படவேண்டும். உன் உணவுப்படையலில் கடவுளின் உடன்படிக்கையாகிய உப்பைக் குறையவிடாமல் உன் நேர்ச்சைகள் அனைத்தோடும் உப்பையும் படைப்பாயாக என்கிறது. இதிலிருந்து உப்பினால் பலிப்பொருட்களும் தூய்மை பெறுகின்றன என்ற உண்மை வெளிப்படுகின்றது.

உப்பில் வெளிப்படும் சுத்திகரிக்கும் பண்புநிலை கிறிஸ்தவ சீடர்களிடையேயும் வெளிப்படவேண்டும் என்பது கிறிஸ்துவின் எதிர்பார்ப்பு. திருச்சபை ஐக்கியத்தினைப் பாதுகாக்கும் அன்புப் பணிக்கான நெறிமுறைகளைக் குறிப்பிடும்போது பவுலடிகளார் கலா. 6 : 1-2-இல் சகோதர சகோதரிகளே ஒருவர் ஏதேனும் குற்றத்தில் அகப்பட்டுக் கொண்டால் தூய ஆவியைப் பெற்றிருக்கும் நீங்கள் கனிந்த உள்ளத்தோடு அவரைத் திருத்துங்கள். அவரைப்போல் நீங்கள் சோதனைக்கு உள்ளாகாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள். ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள். இவ்வாறு கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவீர்கள் என்கின்றார்.





இவ்வாலோசனைகள் திருச்சபையின் கூட்டுறவைப் பாதுகாத்துத் திருப்பணிகளை வலுப்படுத்த உதவும். ஆனால் இன்று இறைமக்கள் இத்தகைய ஆலோசனைகளை மதியாமல் காயீன் கூறியது போன்று "நான் என்ன, என் சகோதரனுக்குக் காவலாளியோ?" (தொடக்க நூல் 4 : 9b) என்கின்ற நிலையில் சிந்திக்கும் நிலை தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று.

I சாமு. 24 : 6-இல் அவர் தம் ஆள்களைப் பார்த்து "ஆண்டவர் திருப்பொழிவு செய்த என் தலைவருக்கு எத்தீங்கும் செய்யாதவாறு ஆண்டவர் என்னைக் காப்பாராக! அவர் ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவரானதால் நான் அவர்மேல் கைவைக்கக்கூடாது" என்ற தாவீதின் மனநிலையைக் காண்கிறோம். இங்கே கிறிஸ்தவ சீடனுக்குப் பழிவாங்கும் மனநிலையன்று தாவீதைப் போன்று பாதுகாக்கும் ஒப்படைப்பு மிகவும் தேவை என்பதை உணர்ந்து கொள்கிறோம்.

உரோமையர் 12 : 17-இல் தீமைக்குப் பதில் தீமை செய்யாதிருங்கள்; எல்லா மனிதரும் நலமெனக் கருதுபவை பற்றியே எண்ணுங்கள் என்கிறார் பவுலடியார். இவ்வாறு சமுதாயத்தைப் பாதுகாக்கும், இறைமக்கள் கூட்டுறவின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் இறையரசின் பண்புகள் நம்மில் வெளிப்படட்டும்.

**2. சுவைதரும் நற்பண்பு**

உப்பு உணவிற்கு சுவை தருகின்றது. (Salt gives flavour to goods) உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்று சொல்வது அதன் சுவையின் இன்றியமையாமையை வலியுறுத்தி நிற்கின்றது. இதன் அடிப்படையில் கிறிஸ்துவின் சீடர்கள் தான் வைக்கப்பட்டுள்ள சூழலில் பிறருக்கு சுவையுள்ள வாழ்வினை வழங்கவேண்டும். தன்னைக் கரைத்து உப்பு சுவை கொடுப்பது போலவும், தன்னை இழந்து மெழுகுவர்த்தி ஒளி கொடுப்பது போலும் சீடர்கள் பிறருக்கு வாழ்வு வழங்க வேண்டும். நீங்கள் உப்பின் தன்மை கொண்டிருங்கள், ஒருவரோடு ஒருவர் அமைதியுடன் வாழுங்கள் (மாற்கு 9 : 50) என்று திருமறையில் குறிப்பிடப்பட்டுள்ளது சீடத்துவ வாழ்வின் சுவை தரும் பண்பைச் சுட்டி நின்கின்றது. பவுலடியார் இக்கருத்தினை வலியுறுத்தும்போது "நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறைக் கொள்ளவேண்டும். கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்" (பிலிப்பியர் 2 : 4-5) என்கிறார்.

தென்திருவிதாங்கூருக்கு நற்செய்தியின் மூலம் சுவை தரும் வாழ்வைத் தந்தவர் அருள்திரு. றிங்கல்தௌபே. சிவகாசிப் பகுதியில்

சாரமுள்ள வாழ்வைத் தந்திட உப்பைப் போன்று தன்னை இழந்தவர் Rev. ராக்லண்ட் ஐயர். இந்த வரிசையில் நெய்யூர் பகுதியில் சுவை தரும் வாழ்விற்காய்த் தன்னை அற்பணித்தவர் Rev. F. பேலீஸ் ஐயர் அவர்கள். 1825-ஆம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள கிளவுஸ்டர் (Glouster) என்ற பட்டிணத்தில் பிறந்தார். தனது பட்டப்படிப்பை 1850-ஆம் ஆண்டு மேய் மாதம் சவுத்தாம்டன் என்ற பட்டணத்தில் நிறைவு செய்தார். திருமதி எலிசா ஆன் ஒயிட் என்பவரைத் திருமணம் செய்து 1850-ம் ஆண்டு செப்டம்பர் 14-ஆம் நாள் சென்னை வந்தடைந்தார். சென்னையில் உள்ள பாடசாலை ஒன்றில் மூன்று ஆண்டுகள் பணிசெய்து விட்டு 01-07-1854-இல் நெய்யூருக்கு Dr. லீச் என்பவரின் அழைப்பின்பேரில் வந்தடைந்தார். மேல்சாதி மக்களால் கிறிஸ்தவர்கள் துன்பப்பட்டபோது, குறிப்பாக மேலாடைக் கலகக் காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு உதவினார். 1861-இல் தேசோபகாரி இதழை வெளியிட்டார். அது இன்றளவும் நமது பேராயத்தின் மாத இதழாக வெளிவந்து கொண்டிருக்கிறது. கடுமையான பஞ்சமும், கொள்ளை நோயான காலராவும் பரவிக்கொண்டிருந்தபோது (1860-ஆம் ஆண்டுகளில்) மக்களுக்கு விடுதலைப் பணிகள் பல செய்தார். காலராவின் மரணம் மக்களை அசைத்த நாட்களில் கணவன்மாரை இழந்த கைம்பெண்களுக்காக இலவச வீடுகளைக் கட்டித் தந்தார். இப்படிக் கைம்பெண்களுக்கு இலவச வீடுகள் அமைத்துக் கொடுத்ததின் அடிப்படையில் கைம்பெண் தெரு (Widows Street) என்று அழைக்கப்பட்ட தெரு இன்று நெய்யூரில் கிறிஸ்மஸ் தெரு என அழைக்கப்படுகின்றது. தன் திருச்சபையினர் பத்துக் கட்டளைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கும்படி கேட்டுக் கொண்டார். தமது 52-ஆம் வயதில் 17-02-1877 அன்று மரணமடைந்தார். நெய்யூர் பகுதியில் உப்பைப் போன்று சுவை தரும் பணிக்காய், வாழ்விற்காய் தன்னை அர்பணித்தார்.

கிறிஸ்தவ வாழ்வு போராட்டமிக்க வாழ்வு. நாம் மனிதர்களோடு மட்டும் போராடுவதில்லை. ஆட்சி புரிவோர், அதிகாரம் செலுத்துவோர், இருள் நிறைந்த இவ்வுலகின் மீது ஆற்றலுடையோர், வான் வெளியிலுள்ள தீய ஆவிகள் ஆகியவற்றோடும் போராடுகிறோம் (எபேசியர் 6 : 12) எனத் திருமறை கூறுகின்றது. இப்போராட்ட வாழ்வில் விழுந்து விடாது சுவை தரும் வாழ்வைக் காத்துக் கொள்வோமாக. “பிறரில் நீ எதை விருப்பமில்லாததாகக் காண்கிறாயோ அதனை உன்னில் மாற்றியமைத்துக் கொள்ள கவனம் செலுத்து” என்று குறிப்பிட்ட Thomas Spart போன்று (What you dislike in another, take care to correct in yourself) நற்பண்புகள் செய்திட நம்மை ஒப்படைப்போம். இறையருள் நம்மைத் தாங்கட்டும்.

**அருள்திரு. W. ஸ்டேன்லி ஜோண்ஸ்**



**29-09-2013** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் பத்தொன்பதாம் ஞாயிறு

தொநூ. 46 : 26; 47 : 10-12 — முதியோர் ஞாயிறு — 1 தி. மொ. 5 : 1-10
திரு. பா. 71 : 1-9 — மாற்கு 7 : 6-16

# முதியோரைப் பராமரித்தல்
# Care of the Aged

“தம்உறவினரை, சிறப்பாகத் தம் வீட்டாரை ஆதரியாதோர் விசுவாசத்தை மறுதலிப்பவராவர். அவர்கள் விசுவாசமற்றோரைவிடத் தாழ்ந்தோராவர்”. 1 தி.மொ. 5 : 8

**இறைவேண்டல்**

*அன்பும் அருளும் நிறைந்த கடவுளே முதியோர்களை எங்களுக்கு ஆசீர்வாதமாய் திருநிலைப்படுத்தித் தந்தவரே அவர்களுக்கு உமது திடனையும், ஆற்றலையும் அருளிச்செய்து அவர்கள் உம்மிலே நம்பிக்கை கொள்ள அருள்செய்யும். வயது முதிர்ந்தவர்களை பண்புடன் பராமரித்து நடத்தும் பொறுப்பை உமக்கு ஆற்றும் திருப்பணியாக ஏற்கும் வலிமையை உமது மக்களாம் எங்களுக்கு தந்தருள வேண்டுமென்று சிலுவை ஏற்கும் வேளையிலும் கடமை நிறைவேற்றிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

இன்றைய முதியோர் என்போர் நேற்றைய இளைஞர்கள் தான்.

இன்றைய இளைஞர்தான் நாளை முதியோரன்றோ?

தாய், தந்தையார் தம் பிள்ளைகளைப் பராமரிப்பார்கள். பறவைகள், மிருகங்கள் மற்றும் பெரும்பாலான உயிரிகள் யாவும் தம் தலைமுறையினரைப் பராமரிப்பது அனுதின நிகழ்வுகள் தானே. படைத்தவை அனைத்தையும் ஆண்டிட, பண்படுத்திப் பாதுகாத்திட கடவுள் மனிதரிடம் கையளித்துள்ளதால் மனுக்குலத்தினர் யாவரும் பொறுப்புடையோராகிப் படைப்புகளனைத்தின் தலைமையாகினோம்.

ஆண்டிடும் பொறுப்பில் நல் ஆயன் ஆடுகளை நடத்திட வழிமுறைகளும் தந்து ஆடுகளை அதனதின் நிலைக்கேற்ப நடத்திடவே பண்படுத்தல், பாதுகாத்தலென நம் பணிகளாய் தொ.நூ. 2 : 15-இல் மனிதரிடம் ஈந்துள்ளார். வயோதிபர், பலவீனர், தாய்க்குலத்தினரைப் பராமரித்திடும், அவர்களைப் பாதுகாத்திடும் பொறுப்பாண்மையும் மனிதருக்கே எல்லாம் படைத்த கடவுள் தந்துள்ளதால் அதனைக் குறித்த கணக்கு ஒப்புவித்தலும் நம்மிடம் இயற்கையாகக் கூடவே தரப்பட்டுள்ளதன்றோ? சாலமோன் ஞானியார் நீதிமொழிகள் 12 : 12-இல்

கூறியுள்ளதுபோல "முதியோரிடம் ஞானம் உண்டு", எனவே லேவியர் 19 : 32 கூறுவது போல "முதிர்ந்தவர் முகத்தை மதித்து நடந்திட நாம் அழைக்கப்படுகிறோம்.

**1. தம் உறவினரை ஆதரியாதோர் விசுவாசத்தை மறுதலிப்பவரே**
(1 தீமோத். 5 : 8)

உறவினர்களில் முதன்மையானோர் முதியோர் என்பதற்கு மாற்றுக் கருத்து எழுவதே இல்லை. ஏனெனில் உலகு, உலகிலுள்ளவை அனைத்தையும் படைத்த கடவுள் அவைகளைப் பண்படுத்திட, பாதுகாத்திட என இருபெரும் பொறுப்புக்களுடன் வாழவே மனிதரை உருவாக்கி ஏதேன் தோட்டத்தில் குடியமரச் செய்தார். (தொ.நூல் - 1 : 27). எகிப்து நாட்டின் அடிமைப் பணியினின்று விடுவிக்கப்பட்டு மோசேயின் தலைமைத்துவத்தில் கானான் நாட்டிற்கு விடுதலைப் பயணம் நடந்து முன்னேறும் நாட்களில் தன் சகோதரர் ஆரோனுக்குத் தலைமைத்துவப் பதவி பகிர்ந்து, ஆரோனைத் தம் வாயாகவும் ஆக்கினார். மட்டுமா? விடுதலைப் பயணத் தலைவர் மோசே தன் சொந்த சகோதரி மிரியாம் வாயிலாகக் காக்கப்பட்டு, ஆதரித்து, ஞானமாய் நடந்து தன் சகோதரரைத் தலைவனாகச் செய்தது விசுவாசத்தை மறுதலியா வாழ்வாகும். இதைத் தொண்டர் பவுலடியார் பிலமோனுக்கு எழுதியத் திருமுகக் கடிதத்தின் திருவசனம் 10-இல் "எனக்குப் பிள்ளையான ஒனேசிமுக்காக வேண்டுகிறேன்" எனப் பரந்து விரிந்த விசுவாச உறவுகளை ஆதரித்துத் தம் விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளார். எடுத்துக்காட்டாக, கணவனை இழந்தவோர் தாய் ஒரே மகனுக்கு குடும்ப வாழ்வு அமைத்தாள். மருமகளாக வந்தவருக்கு மாமியார் சொல், செயல் யாதும் பிடிக்காது. ஆனால் அவனுக்கோ தன் தாயா? அல்லது தன் மனைவியா? போராட்டம். ஒருநாள் வெகுதூரக் காடொன்றில் விட்டுவிடத் திட்டம் பண்ணினர். ஆனால், அந்த அன்புத்தாய் சிகப்புக் குஞ்சுமுத்து சேகரித்து வைத்துக்கொண்டார். குறித்த நாள் தாயைக் கட்டிச் சுமந்து சென்றனர். அந்தத் தாயோ சென்றிவிடமெல்லாம் அந்தச் சிகப்பு விதையைப் போட்டு வந்தார். திரும்பிப்போகப் பாதையறியாது திகைத்த போது சாக்குப்பையிலிருந்த சத்தம், பிள்ளைகளே சிகப்புக் குஞ்சுமுத்து பார்த்துப் போங்கள் என்றது குரல். சிகப்புமுத்து பார்த்து நடந்தனர். எதுவழி எனத் தடுமாறிய வேளைகளில் தாயன்பைப் பேசிக் கொண்டனர். தாயின் பரிவு, கரிசனை, அன்பு கண்டுவியந்து தாயிடமே திரும்பினர். வந்த வழியே நடந்து தாயிடம் யாவும் கூறி மூவரும் அன்புறவில் ஒன்றித்து மெய்யுறவுடன் வீடு திரும்பினர்.

**2. தம் வீட்டாரை ஆதரியாதோர் விசுவாசத்தை மறுதலிப்போர்**
(I தீமோத். 5 : 8)

விசுவாசிகளின் தந்தையான ஆபிரகாம் தமக்குக்





குழந்தையில்லாச் சூழலிலும் தம் மனைவியை ஆதரித்து சாராளின் ஆலோசனைகளையும் மதித்து, தம் வாழ்வுப் பாதையில் நடந்துள்ளார் - (தொ.நூல். 7 : 10). இஸ்ரயேலர் மூதாதையர்களின் தெய்வ வழிபாடுகளைச் செய்து கடவுளை விட்டுத் தூரமாய் விலகும் சூழலில், யோசுவா தலைமையில் தம் வீட்டாரைக் குறித்துக் கூறும் திருவாக்கு "நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்" (யோசுவா 24 : 15). இயேசு கிறிஸ்து லூக். 19 : 1-10 திருவாக்கு 5-இல் சக்கேயு, விரைவாய் இறங்கி வாரும்; இன்று உமது வீட்டில் நான் தங்கவேண்டும் என்றார்; மேலும் திருவாக்கு 9-ல் "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று; ஏனெனில் இவரும் ஆபிரகாமின் மகனே" எனும் வாக்குகள் விசுவாச வீட்டாருக்கு ஓர் ஒப்பற்ற எடுத்துக்காட்டு. பவுல், சீலா பிலிப்பிநகரில் குறிசொல்லும் ஆவியால் மிகுதியான வருவாய் சேர்த்த பெண் மற்றும் அவரை அடிமையாக வைத்திருந்தோர்களால் சிறையிலிடப்பட்டு (திருத்தூதர் பணி 16 : 16-40) வதைக்கப்பட்டனர். ஆனால் திருவாக்கு 31-இல் ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளும்; அப்பொழுது நீரும் உம் வீட்டாரும் மீட்படைவீர்கள் என்றார்கள்; திருவாக்கு 33-இல் அவர் வீட்டாரும் அவரைச் சேர்ந்தவர்களும் விசுவாசித்து திருமுழுக்குப் பெற்றார்கள் எனக் காண்கின்றோம்.

தம் உறவினர், தம் வீட்டாரை ஆதரியாதோர் விசுவாசமற்றோரை விடத் தாழ்ந்தோராவர் I திமொ. 5 : 8 எனும் திருவாக்கு விசுவாசிகள் நாங்கள் எனக் கூறித் தம் சொந்த வீட்டார், உறவினரை உதறி வாழ்பவருக்கு ஓர் சவுக்கடியன்றோ? இறைவனிலேயே விசுவாசமற்றோராகிய நாத்திகரை விடத் தாழ்ந்தோர்களல்லவா?

நம் உறவுகள், வீட்டார் மட்டுமின்றி இனத்தார், நாட்டார் தாண்டி, நம் எல்லைகள் விரிவாகி விசுவாச வீட்டார் வளரவில்லையெனில் விசுவாசத்தை மறுதலிப்போராக நாமும் மாறி விடுவோம். திருத்தூதர் பணி 10 : 2-இன்படி இத்தாலியப்படை பிரிவில் நூற்றுவர் தலைவர் கொர்நேலியு ஓர் இறைப்பற்றாளர், தம் வீட்டார் அனைவருடன் கடவுளுக்கு அஞ்சி நடந்தவர்; மக்களுக்கு இரக்கச் செயல்கள் பல புரிந்தவர்; விடாது கடவுளிடம் மன்றாடி வந்தவர்போல் முன்னேறி ஒரே விசுவாச வீட்டாராகிவிடுவோம். இறையரசு இப்புவியினை ஒரே வீட்டாரெனும் விசுவாச நல்லுறவில் ஒன்றாகி ஆண்டவர் இயேசுவின் குடும்பத்தில் முதியோர் முற்றிலும் முதன்மையாகிடட்டும்.

**அருள்திரு. S. காட்பிரே சாமுவேல்**

06-10-2013 | பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் 20-ஆம் ஞாயிறு

இச. 16 : 16-22 கலா. 6 : 11-18
திபா. 99 யோவா. 17 : 1-19

# உலகத்திலிருந்தாலும் உலகத்துக்குரியவர்கள் அல்லர்
# In the World, not of the World

"நான் உலகைச் சார்ந்தவனாக இல்லாததுபோல் அவர்களும் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல" (யோவா. 17 : 16)

**இறைவேண்டல்**

*எங்கள் ஆண்டவராகிய கடவுளே நாங்கள் இந்த உலகில் வாழ்ந்தாலும் இவ்வுலகக்குரியவர்கள் அல்ல என உம் திருமைந்தர் இயேசு கிறிஸ்து வழியாய் கற்றுத்தந்தீரே! நாங்கள் இவ்வுலகின் எங்கள் கடமைகளில் எப்போதும் கண்ணியமுடையவர்களாய் இருக்கவும், உலகை உமது விருப்புக்கு உருமாற்றம் செய்கின்ற உம் பணியின் பங்காளர்களாய் செயலாற்றவும் அருள் தர வேண்டுமென்று வாழ்வினை உருமாற்றம் செய்து புதுவாழ்வு தரும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.*

தூய யோவான் 17-ஆம் அதிகாரம் தலைமை ஆயர் மன்றாட்டு என அழைக்கப்படுகிறது. (High Priestly Prayer). இந்த இறை வேண்டலில் இறைமகன் இயேசு தன்னை உலகின் பாவங்களைப் போக்கும் ஒரு பலியாக ஒப்புக் கொடுக்கிறார். பழைய ஏற்பாட்டில் ஈடேற்ற பலிக்கு முன் தலைமை ஆசாரியர் தன்னை ஆயத்தப்படுத்துவது போல் இப்பகுதியில் இறைமகன் தன்னை ஆயத்தப்படுத்துகிறார். நவீன இறையிலாளர்கள் இப்பகுதியை (The Prayer of the Overcomer) 4 நற்செய்தி நூற்களின் மொத்த தொகுப்பையும், கருத்துகளையும் ஒன்றிணைத்து இரத்தின சுருக்கமாக இம்மன்றாட்டு விள்குகிறது என்று கருதுகின்றனர். இந்த இறை வேண்டலில் இயேசு தனக்காகவும் (யோவா. 17 : 1-5) தன் பணிக்காகவும், சீடர்களுக்காகவும், அவர்களின் பாதுகாப்பு, சீர்திருத்தத்துக்காகவும் (17 : 6-19) மன்றாடுகிறார். இந்த இறை வேண்டலின் முடிவு நம்மையும், முழு உலகத் திருச்சபையின் ஒருமைப்பாட்டையும் உள்ளடக்கியதாய் அமைந்துள்ளது. துன்பமேற்கவும், பலியாகவும் தயாராகும் சூழ்நிலையில் வேண்டிக்கொள்ளும் இயேசுவின் இறை வேண்டல் சீடர்களின்





பாதுகாப்பையும் (Security), மகிழ்ச்சியையும் (Joy), ஒருமைப்பாட்டையும் (Unity), எதிர்கால மகிமையையும் (Future Glory) உறுதிப்படுத்தி - தைரியப்படுத்தும் ஒன்றாகவும் அமைந்துள்ளது. "உலகை மேற்கொண்டவன் நான்" என்ற இயேசு நாதருடைய கூற்று நமக்கு நல்கும் சில சிறப்புகளை (Privileges) ஈண்டு காண்போம்.

**1. கிறிஸ்துவின் வாழ்க்கை (Christ's Life)** (யோவா. 17 : 1-5)

இயேசுவின் வாழ்க்கை தந்தையை மகிமைப்படுத்துவதாய் இருந்தது. அந்த மகிமை தந்தையின் பணியைச் செய்து நிறைவேற்றுவதிலேயே அமைந்திருந்தது (யோவா. 17 : 4). தந்தை கையளித்த பணி இயேசுவின் அற்புதங்கள் மூலமாகவும், செய்தி வழியாகவும், (யோவா. 5 : 17-19) வருங்காலப் பணிக்காகச் சீடர்களை தயாரிப்பதன் வழியாகவும், தனது தியாக சிலுவைப் பலி வழியாகவும் வெளிப்படுகிறது. (எபி. 9 : 24-28; 10 : 11-18) இப்பகுதியில் "கொடுத்தேன்" என்ற பதம் (give) 17 முறை வருகிறது.இயேசு தமது வாழ்க்கையை நமக்குத் தந்து ஏற்படுத்தும் கனியே நித்திய வாழ்வு. இயேசுவில் இணைந்து அவரோடு வாழும்போது கடவுள் அருளும் பரிசுதான் நித்திய வாழ்வு (யோவா. 3 : 15-16, 36; 6 : 47; 10 : 28). இயேசுவை நம்பி அவரை அனுபவம் ஆக்கி வாழும்போது நித்திய வாழ்வை நாம் பெற்றுக் கொள்ள முடியும். "உண்மைக் கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய வாழ்வு (யோவா. 17 : 3). நாம் உலகத்தில் வாழ்ந்தாலும் உலகத்துக்குரியவர்களாக அல்ல; கிறிஸ்துவுக்குரியவர்களாக வாழ கிறிஸ்து இயேசுவின் வாழ்வு நமக்குத் துணை புரிகிறது.

**2. கிறிஸ்துவின் வார்த்தை (Christ's Word)** (யோவா. 17:13-19)

"நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்" (17 : 14). தந்தை தமது வார்த்தையை மகனுக்கு அருளுகிறார் (யோவா. 17 : 8). திருமகன் இயேசு அதைத் தம் சீடர்களுக்குக் கொடுக்கிறார். அதைத் தூய ஆவியர் வழியாய் நமக்குத் தருகிறார் (2 தீமோ. 3 : 16; 2 பேதுரு 1 : 20-21). அந்த வார்த்தை தூய்மையானது; அது கடவுளின் கொடை உலகை மேற்கொள்ள அது நமக்குத் துணை செய்கிறது.

இறை வார்த்தை நம்முள் வரும்போது அது நம்மை தூய்மையாக்கி மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது (யோவா. 17 : 13). உள்ளான மகிழ்ச்சி உலகை மேற்கொள்ள நமக்குப் பெலன் தருகிறது (நெகே. 8 : 10). திருப்பாடலாசிரியர் 119 : 162-இல் "மிகுந்த கொள்ளையுடைமையைக் கண்டுபிடிக்கிறவன் மகிழுகிறதுபோல, நான்

உமது வார்த்தையின் பேரில் மகிழுகிறேன்" என்கிறார். எரேமியா 15 : 16-இல் "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன். உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும் என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது" என்கிறார் எரேமியா.

இறை வார்த்தை இறை அன்பை நமக்குத் தருகிறது (யோவா 17 : 14). இறை வார்த்தை தூய வாழ்வைத் தருகிறது (யோவா. 17 : 15-17). இறை வார்த்தை தூய்மையைத் தருகிறது (யோவா. 15 : 3). நமக்குள்ளே உண்மையை உறுதி செய்கிறது (யோவா. 17 : 17). கிறிஸ்துவின் வார்த்தை அன்பையும், மகிழ்ச்சியையும், ஆற்றலையும், தூய வாழ்வையும், சாட்சியையும் (யோவா. 17 : 18-19) நமக்குத் தருகிறது. கிறிஸ்து வழங்கும் இந்த மேன்மைகள் உலகத்தில் நம்மைக் கிறிஸ்துவுக்குரியவர்களாய் வாழவும், கிறிஸ்துவைப் பிரதிபலிக்கவும் உதவும். உலகை மேற்கொள்ள கிறிஸ்துவின் வார்த்தை உதவுகிறது. நம்மில் கிறிஸ்துவின் வார்த்தையை வாழ்வாக்குவோம்.

**அருள்திரு. G. N. ராஜகுமார்**



**13-10-2013** பெந்தக்கொஸ்துக்குப் பின்வரும் இருபத்தி ஒன்றாம் ஞாயிறு & மாற்றுத் திறனுடையோர் ஞாயிறு

2 சாமு. 9 : 1-13 — 2 கொரி. 12 : 7-10
திபா. 34 — லூக். 14 : 15-24

# மாற்றுத்திறன் படைத்தோரைப் பராமரித்தல்
# Care of the Physically and Mentally Challenged

"உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கிறார்; நைந்த நெஞ்சத்தாரை அவர் காப்பாற்றுகின்றார்" (தி.பா. 34 : 18)

**இறைவேண்டல்**

*அருள் நிறைந்த கடவுளே! இவ்வுலகின் எங்கள் இளையோருக்காக உம்மைப் போற்றுகிறோம். அவர்கள் உமது பிள்ளைகளாய் வாழவும், உமது திருவுள்ளத்தை அறிந்து அதன்படி செய்கிறவர்களாகவும், நன்மை தீமைகளை ஆய்ந்தறிந்து உமது பார்வைக்கு ஏற்புடையவைகளை செய்தவன் வழியாய் அனைத்து படைப்புகளுக்கும் நன்மை செய்கிறவர்களாயிருக்கவும் அருள்தர வேண்டுமென்று உம்மோடும், தூய ஆவியாரோடும் ஒன்றாய் இணைந்து ஆளுகை செய்யும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

மாற்றுத்திறன் படைத்தோர் சமூகத்தில் உடைந்த உள்ளம், நைந்த நெஞ்சமும் கொண்டவர்களாக வாழ்கின்றனர். உடல் உறுப்புக் குறைபாடுகளை வைத்து, அடைமொழிச் சொற்களால் அத்தகையோரை அழைக்கும் வழக்கம் உள்ளது. ஊமையன், ஊமச்சி, செவிடன், செவிடி, நொண்டி, குருடன் என்று அழைப்பது கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களுக்குத் தகுதியான செயல் அன்று. இயேசு கிறிஸ்து இப்படிப்பட்ட மக்களிடம் அன்பு செலுத்தி ஆதரிக்கிறார் என்பதற்குத் திருமறையில் பல சான்றுகளைக் காணலாம்.

இந்த உலகத்தில் வாழ்வதற்கு ஏற்ற வகையில் உறுப்புகளோடு பிறக்கும் மனித உடலில் ஓர் உறுப்பு செயல்படாவிட்டாலும் அதை ஈடு செய்யும் வகையில் மனித உடலே அதற்கொரு மாற்றுத்திறனை வளர்த்துக் கொள்ளும். கண் பார்வை இழந்தவர்களுக்கு, கேட்கும் திறனும், நுகர்வு திறனும் மிக அதிகமாக இருக்கும் என்பது உண்மை. ஆகவே உடலளவில் குறை உள்ளவர்களை மாற்றுத்திறன் கொண்டவர்களாகக் கடவுள் இயங்கச் செய்கிறார்.

**1. கடவுள் தம் சாயலில் மனிதரைப் படைத்தார்** (தொ.நூ. 1:27)

இறைவனின் சாயலை எப்படி நாம் இழந்தோம்? பிறவியிலேயே உடல் உறுப்பு குறைபாடு, மனநலம் குன்றுதல் போன்றவற்றிற்கான அறிவியல் காரணங்களைப் பார்க்கும்போது நம்முடைய செயல்பாடுகள் பெருமளவில் உண்டு. நெருங்கிய உறவுத் திருமணம், எக்ஸ்ரே, ஸ்கேன், அல்ட்ரா வயலட் போன்றவற்றின் கதிர்வீச்சு சிகிச்சை முறையில் ஏற்படும் தவறுகள், மருந்துகளை அதிகமாகவும், தவறாகவும் பயன்படுத்துதல், பெற்றோர் மது மற்றும் புகையிலைப் பொருட்களைப் பயன்படுத்துதல், அடிக்கடி கருச்சிதைவு செய்தல், அத்தோடு இயற்கையை நம்முடைய நலனுக்காகச் சீர்குலைப்பதால் ஏற்படும் இயற்கைச் சீற்றங்கள் இயற்கை மாற்றங்கள் ஆகியவை காரணமாகின்றன.

நம்முடன் இருக்கும் மாற்றுத்திறன் படைத்தோரை சமூகத்திலும், திருச்சபையிலும், குடும்பத்திலும் பராமரித்தல் நமது கடமை. கடவுள் அவர்களை எப்படிப் பராமரிக்கின்றார் என்பதைச் சிந்தனை செய்வோம்.

**2. உதவி செய்து பராமரித்தல்**

2 சாமு. 19-இல் கடவுளுக்குப் பிரியமான அரசர் தாவீது மாற்றுத்திறனுடைய மேவிபோசேத்தை அழைத்து உதவுகிறார். புறக்கணிப்பையே தன் வாழ்வில் எப்போதும் சந்தித்த மேவிபோசேத் தாவீதின் கருணையினால் அங்கீகாரம் பெறுகிறார்.

மாற்றுத்திறன் படைத்த மனிதரை ஆதரித்து உதவிய தாவீது பல நிலைகளில் கடவுளால் உயர்வை பெற்றுக் கொள்கிறார் என்பதைத் திருமறையின் வழியாய் அறியலாம்.

**3. உடன் இருந்து பராமரித்தல்**

உடலளவிலும், மனிதளவிலும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளவர்களை உடனிருந்து பராமரித்து அவர்கள் வலியைக் குறைக்க உதவ வேண்டும்.

“ . . . பெருங்குறை ஒன்று என் உடலில் தைத்த முள்போல் என்னை வருத்திக்கொண்டே இருக்கிறது” (2 கொரி. 12 : 7(b). உடலில் ஏற்பட்ட நோயினால் மனதளவிலும் சோர்ந்துபோன பவுலடியாரின் வாழ்வில் ஆண்டவர் அவருடன் இருந்து பராமரிக்கிறார். “ என் அருள் உனக்குப் போதும்; வலுவின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும். (2 கொரி. 12 : 9). கடவுளின் இருப்பு நிலையைத் துன்பச் சூழ்நிலையில் உணர முடிகிறது. “ பார்வையற்றோர்க்குக் கண் ஆனேன்; கால் ஊனமுற்றோர்க்குக் கால் ஆனேன்” (யோபு. 29 : 15). யோபு தன்





வாழ்வில் மாற்றுத்திறனாளிகளோடிருந்து பராமரித்ததை தன்னுடைய வலுவின்மையில் நினைத்துப் பார்க்கின்றார். மாற்றுத் திறனாளிகளுடனிருந்து அவர்களைப் பராமரித்ததால் கடவுள் அவருடனிருந்து அவரைப் பராமரித்து ஆசீர்வதிக்கின்றார்.

**4. உறுதிப்படுத்திப் பராமரித்தல்**

லூக்கா 14 : 15-24-இல் பெரிய விருந்து ஆயத்தப்படுத்துதல். அதற்கு அழைக்கப்பட்டவர்கள் உயர் குலத்தைச் சார்ந்தவர்கள். செல்வச் செழிப்பு கொண்டவர்கள். உடலில் குறைவு இல்லாதவர்கள், வாழ்வில் நிறைவானவர்கள்.

“வீட்டு உரிமையாளர் சினமுற்றுத் தம் பணியாளரிடம்” நீர் நகரின் வீதிகளுக்கும், சந்துகளுக்கும் விரைந்து சென்று ஏழையர், உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர், கால் ஊனமுற்றோர் ஆகியோரை இங்கே கூட்டி வாரும் என்றார்” (லூக். 14 : 21).

மாற்றுத் திறனுடையோரையும், எளியோரையும் அழைத்து விருந்து கொடுக்கிறார் என்ற செய்தி “அழைக்கப் பெற்றவர்களுள் எவரும் என்னுடைய விருந்தைச் சுவைக்கப் போவதில்லை என உமக்குச் சொல்கிறேன் என்றார்” (லூக். 14 : 24).

உன்னதராம் இயேசு கிறிஸ்து இவர்கள் இறையாட்சியின் விருந்தில் பங்குபெறுவோர் என்று உறுதிப்படுத்திப் பராமரிக்கின்றார். இறையாட்சியில் பங்குபெற வேண்டுமென்றால் நாம் மாற்றுத்திறனுடையோருக்கு உதவி செய்து, அவர்களுடன் இருந்து, உறுதிப்படுத்திப் பராமரிக்க முன்வருவோம். கடவுள் நம்மை ஆசீர்வதிப்பார்.

இங்கிலாந்து ஜனானா சங்கத்தைச் சேர்ந்த பிளாரன்சு சுவேன்சன் அம்மையார் பாளையங்கோட்டை சாராள் தக்கர் மேல்நிலைப்பள்ளியில் மிஷனெரியாக 1895-ஆம் ஆண்டு பணி செய்து கொண்டிருந்தபோது 3 செவித்திறன் குறைந்த பிள்ளைகளைக் கண்டு அவர்களை எப்படியாவது பராமரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு திருநெல்வேலி, பாளையங்கோட்டையில் பிளாரன்சு சுவேன்சன் காது கேளாதோர் பள்ளியை ஆரம்பித்தார்கள். இதன் நோக்கம் “ஜெபித்து விடாமுயற்சியுடன் முன்னேறு” என்பதாகும். இப்பள்ளியே தமிழ் நாட்டில் காது கேளாதோருக்கென்று ஆரம்பிக்கப்பட்ட முதல் பள்ளியாகும். இப்போது பாலர் பள்ளி முதல் 12-ஆம் வகுப்பு வரை சுமார் 450 முதல் 550 மாணவர்கள் பயிலும் பள்ளியாக அரசு இதனை அங்கீகரித்துள்ளது.

**திரு. R. ஸ்டேன்லி நேசராஜ்**

| 20-10-2013 | பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் இருபத்தி இரண்டாம் ஞாயிறு |
|---|---|

ச.உ. 12 : 1-8 இளையோர் ஞாயிறு 1 திமொ. 4 : 6-16
தி.பா. 103 மத். 19 : 16-30

# இளையோர் : புதுப்பித்தலுக்கும் வாக்குறுதிக்கும் அடையாளம்

# Youth : The Sign of Renewal and Promise

. . . இறைப்பற்று . . . இம்மையிலும் மறுமையிலும் நாம் வாழ்வு பெறுவோம் என்னும் வாக்குறுதியைக் கொண்டுள்ளது (1 திமொ. 4 : 8)

மானிட வாழ்வு பல பருவ நிலைகளைக் கொண்டது. குழந்தைப் பருவம், மாணவப் பருவம், வாலிபப் பருவம், முதுமைப் பருவம் என ஒவ்வொரு படி நிலைகளை மனிதன் கடந்து செல்லுகின்றான். ஒவ்வொரு நிலையும் மானிட வாழ்வில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஒரு பருவத்தை அல்லது ஒரு நிலையைக் கடந்தவர்கள் மறுபடியும் அந்நிலைக்கு திரும்ப வருவது இயலாத ஒன்று. காலத்தின் முக்கியத்துவம் இதில் உணரப்படுகின்றது. இதில் மனிதன் விரும்புகின்ற பருவநிலை, விரும்பாத பருவ நிலை என இரண்டும் காணப்படுகின்றது. விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் ஒவ்வொரு நிலையையும் மனிதன் கடந்து செல்லுகின்றான். இதில் பல படிப்பினைகளை மனிதன் பெற்று கொள்கின்றான். வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுக்கொள்ளுகின்றான்.

மனிதன் மிகவும் விரும்புகின்ற ஒரு பருவ நிலைதான், இளமை அல்லது வாலிபப்பருவம். வாழ்வில் மாற்றத்தைக் காணத் துடிக்கும் பருவம் இளமைப் பருவம். யார் யார் நம்பிக்கையோடு மாற்றம் காண உழைத்தார்களோ அவர்கள் வாழ்வில் மாற்றத்தைக் கண்டார்கள். வரலாற்றை மாற்றியமைத்தார்கள். நெப்போலியன் பிரெஞ்சு தேசத்தில் மாற்றத்தைக் காண நம்பிக்கையோடு போராடினான். பிரஞ்சுப் புரட்சிக்கு அடித்தளமிட்டு மாற்றத்தை வரலாற்றில் ஏற்படுத்தினான். கிரேக்க மன்னன் மகா அலெக்சாண்டர் மாற்றம் காண முற்பட்டார். தன் 32 வயதிற்குள் உலகில் பல வெற்றி கண்டார். இளையோர் வாழ்வில் மாற்றத்தைக் காணத் துடிக்கின்றவர்கள் வரலாற்றில் மாற்றம் காண விழைகின்றவர்கள். நம்பிக்கையோடு போராடினால் வெற்றி நிச்சயம். இம்முயற்சியில் வெற்றிபெற சில நல்ல தகவுகளை நம் வாழ்வில் ஏற்றுக் கொள்வது அவசியம்.





**i) ஊக்கத்துடன் செயல்படுதல்** (நீமொ. 6 : 6)

சோம்பேறிகளே, எறும்பைப் பாருங்கள் அதன் செயல்களைக் கவனித்து ஞானமுள்ளவராகுங்கள். சோம்பித் திரிகின்ற ஆறறிவு படைத்த மனிதனுக்கு எறும்பை எடுத்துக்காட்டாக கூறி, அவற்றிலிருக்கும் சுறுசுறுப்பை கற்றுக்கொள்ள கூறுகிறார். சோம்பித்திரிந்தவர்கள் சாதித்ததாகச் சரித்திரமில்லை. சோம்பேறிகள் உண்ண விரும்புகிறார்கள் உணவோ இல்லை (நீதி. 13 : 4). அவர்கள் விரும்புகின்ற ஒன்றையும் பெற்றுக்கொள்ள இயலாது. சோம்பேறிகளாய் தூங்கிச் செயலற்றுப் போவோர், முடங்கிக்கிடப்போர் எதையும் சாதித்துவிட இயலாது. வறுமை உங்கள் மீது வழிப்பறிக் கள்வரைப் போல் பாயும்; ஏழ்மைநிலை உங்களைப் போர் வீரரைப்போல் தாக்கும் (நீதி. 6 : 11).

ஓர் எறும்பும் வெட்டுக்கிளியும் இணைபிரியா நண்பர்கள். அது ஒரு கோடைக்காலம். எறும்பு விரைவாக அதன் வளையில் தானியங்களைச் சேர்த்துக் கொண்டிருந்தது. வெட்டுக்கிளி வெறுமையாகக் காலத்தைக் கழித்தது. எறும்பு வெட்டுக்கிளியைப் பார்த்து நண்பா! மழைக்காலம் வருகின்றது. அப்போது வெளியில் நடமாட முடியாது. ஆகவே இந்தக் கோடைக்காலத்தைப் பயன்படுத்தி உணவைச் சேகரித்து வை என்றது. அதற்கு வெட்டுக்கிளி எந்த மழைக்காலமாக இருந்தாலும் என்னால் உணவைப் பெற்று உண்ண முடியும் என்று கூறி கோடையை வீணே கழித்தது. மழைக்காலம் வந்தது. எறும்பு தானியம் சேகரித்த வளையில் சென்று வாசலை மூடிக்கொண்டது. வெட்டுக்கிளி மழை மாறியதும் தேவையான உணவை பெற்றுவிடலாம் என்று நினைத்தது. ஆனால் மழை விடாமல் தொடர்ந்தது. ஒருசில நாட்கள் உருண்டோட வெட்டுக்கிளி உணவின்றி சாகும் தருவாயில் எறும்பு நண்பனிடம் சென்று உணவு கேட்டது. ஆனால் அந்தச் சத்தம் எறும்புக்குக் கேட்கவில்லை. மழையால் அந்த வெட்டுக்கிளி மாண்டுபோனது. இது கதையாக இருந்தாலும் கடவுள் தரும் காலத்தைச் சரியாகப் பயன்படுத்தாதவர்கள் வாழ்வில் வீழ்ச்சி கண்டார்கள் என்பதற்கு இந்த எடுத்துக்காட்டு ஒரு சான்று. ஞானி கூறும்போது எறும்புகள் : இவை வலிமையற்ற இனம்; எனினும் கோடைக்காலத்தில் உணவைச் சேமித்து வைத்துக் கொள்ளும் மகா ஞானமுள்ளவைகள் எனக் கூறுகிறார் (நீமொ. 30 : 25). எனவே வாழ்வில் மாற்றம் காண விளையும் இளையோர் நம்பிக்கையோடு சுறுசுறுப்பாய் செயல்பட அழைக்கப்படுகின்றனர்.

**2. உறுதியுடன் முன்னேறுதல்** : (நீமொ. 24 : 16)

"நல்லவர் ஏழுமுறை விழுந்தாலும் எழுந்து நிற்பார்". தோல்வி வாழ்வில் சகஜமான ஒன்று. வரலாற்றில் வெற்றி பெற்றவர்களாகக்

காட்சி தருகின்றவர்கள் அனைவரும் விழுந்து எழுந்தவர்களே. வாழ்வில் வெற்றியையும் தோல்வியையும் சகஜமாக எடுத்துக் கொள்ளும் மனநிலையில் நாம் காணப்பட வேண்டும். தோல்வியைச் சந்திக்கும் வேளையில் துவண்டு செயலற்றுப் போவதும் வெற்றி பெறும்போது மேட்டிமை கொண்டு தன்னிலை தவறி செயல்படுவதும் உகந்ததல்ல. தோல்வியை வெற்றிக்குப் படிக்கற்களாய் எடுத்துக்கொண்டு விடாமுயற்சிகொள்ள நாம் அழைக்கப்படுகின்றோம். நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை. கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை (1 கொரி. 4 : 8, 9) என்ற பவுலடியாரின் திட நம்பிக்கையும், உறுதிப்பாடும் பலவித துன்புறுத்தல்கள் மத்தியிலும் விடாமுயற்சி செய்து, ஆற்றலாய் ஆண்டவரின் பணியைச் செய்ய உதவியது மட்டுமல்ல தன் ஆன்மீக குழந்தை தீமோத்தேயுவுக்கு ஊக்கமூட்டி "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் நற்செய்தியை ஜாக்கிரதையாய் பிரசங்கம் பண்ணு" எனத் திடப்படுத்த உதவி செய்தது. வாழ்வில் தோல்விகள் சந்திக்கும்போது, துவண்டு போய் முயற்சிகளைக் கைவிடும் நிலை இளையோர்களிடத்திலிருந்து அகற்றப்பட வேண்டும்.

இராபர்ட் புரூஸ் என்ற அரசன் பக்கத்து நாட்டுடன் போர் புரிந்தான். தோல்வியைத் தழுவினான். இவ்விதமாக ஏழுமுறை தோல்வியுற்ற அவன் காட்டிற்கு தப்பியோடி ஒரு குகையில் ஒளிந்து கொண்டான். இனி என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்த அவனுடைய கண்களில் ஒரு சிலந்திப் பூச்சி தென்பட்டது. அது தன் கூட்டிலிருந்து தவறி கீழே விழுந்தது. முயற்சி செய்து மறுபடியும் கூட்டை அடைகின்ற வேளையில் மறுபடியும் தவறி கீழே விழுந்தது. இவ்விதமாக ஏழு முறை அது கூட்டை அடைகின்ற நேரத்தில் மறுபடியும் மறுபடியும் தவறி கீழே விழுந்தது. என்றாலும் அது விடா முயற்சி செய்து எட்டாவது முறை தன் கூட்டை அடைந்தது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த அரசன் சோர்வை அகற்றி எழுந்தான். வீரர்களைத் தயார் செய்து யுத்தத்திற்குச் சென்று வெற்றிவாகை சூடினான். ஞானி சிலந்திப் பூச்சியைக் குறித்துச் சொல்லும் போது தன் கைகளினால் வலையைப் பின்னி அரசர் அரண்மனையில் வாழும் சிலந்திப் பூச்சி மகா ஞானமுள்ளது எனக் குறிப்பிடுகிறார் (நீதி. 30 : 28). சிறு குழந்தை நடக்கப் பயிலுகின்றபோது பலமுறை விழுந்து எழுகின்றது. மறுபடியும் முயற்சி செய்கின்றது. விளைவு வெற்றியோடு அது நடக்கின்றது. வாழ்வில் மாற்றம் காண விளையும் இளையோர் தோல்வியைக் கண்டு துவண்டுவிடாதபடி நம்பிக்கையோடு விடா முயற்சி செய்ய வேண்டும்.

**3. உழைத்து உயர்வு பெறுதல்** (யோவா. 9 : 4)

"பகலாய் இருக்கும் வரை என்னை அனுப்பினவரின் செயலை





நான் செய்ய வேண்டியிருக்கிறது. இரவு வருகிறது அப்போது யாரும் செயலாற்ற இயலாது". கடின உழைப்பிற்கு ஈடு இணை ஏதுமில்லை. இறைவனால் கொடுக்கப்பட்ட காலங்களில் நம்பிக்கையோடு கடினமாய் உழைத்தவர்கள் வாழ்வில் மாற்றங்களைக் கண்டார்கள். உயர்வடைந்தார்கள். பகற்காலமிருக்கும் மட்டும் நான் என்னை அனுப்பினவருடைய பணியைச் செய்ய வேண்டும் என்று சொன்ன இயேசுநாதர் மூன்றரை ஆண்டுகள் பாலஸ்தீனா தேசம் முழுவதும் சுற்றித் திரிந்து சீரிய பணியை ஓய்வில்லாமல் செய்து நிறைவேற்றினார். தேவைகளோடிருந்த மக்களுடைய தேவைகளைச் சந்தித்தார். எப்போதெல்லாம் விடுதலைக்காக அவரை நாடி வந்தார்களோ, அப்போதெல்லாம் விடுதலை வழங்கினார். ஓய்வு நாளென்றும் பாராமல் விடுதலைப் பணியைச் செவ்வனே செய்து நிறைவேற்றினார். "என்னை அனுப்பினவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு" (யோ. 4 : 34) என்றவரின் உணவும் எண்ணமும் கடவுளின் பணியைச் செய்து நிறைவேற்றுவதில் அமைந்திருந்தது.

ரஷ்யாவைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் வாலிபன் ஒருவன் கிறிஸ்தவர்கள் அனைவரும் சோம்பேறிகள் என்றான். தொடர்ந்து அவன் "நான் ஒவ்வொரு நாளும் எட்டு மணி நேரம் என் பிழைப்புக்காக உழைக்கின்றேன்; எட்டு மணி நேரம் என் கட்சிக்காகப் பணியாற்றுகின்றேன்; தொடர்ந்து எட்டு மணி நேரம் உறக்கத்திலும், என் தொழிலை எவ்விதம் உயர்த்துவது, கட்சியை எவ்விதம் வளர்த்துவது என்பதிலும் செலவிடுகிறேன்" என்றான்.

தூய பவுலார் தெசலோனிக்கேய திருச்சபைக்கு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றி எழுதுகின்றார். தெசலோனிக்கேய திருச்சபை மக்கள் வேலை ஒன்றும் செய்யாமல் சோம்பேறிகளாக மாறிவிட்டனர். இதைக் கண்ணுற்ற தூய பவுலார் நாங்கள் எங்கள் கைகளினால் கடின உழைப்பு செய்து சாப்பிட்டது போல நீங்களும் சோம்பித் திரியாமல் கடினமாக உழைத்து உண்ண வலியுறுத்துகிறார். உழைக்காதவன் உண்ணலாகாது என்று எச்சரிக்கிறார் (1 தெச. 3 : 6-12). வின்ஸ்டன் சர்ச்சில் போர்முனையில் இருந்த இங்கிலாந்து தேச வீரர்களை உற்சாகமூட்டி எழுதிய கடிதத்தில் சோர்ந்தும் தோய்ந்தும் விடாதீர்கள். கடினமாகப் போரிட்டு முன்னேறுங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

நம்பிக்கையோடு வாழ்வில் மாற்றம் கண்டு அன்றாடப் பணியில் விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் காலத்தை வீணடிக்காமல் ஊக்கத்துடனும், உறுதியுடனும் உழைத்து உயர்வு பெறுவோம். உலகை உன்னதருக்காக மாற்றுருவாக்கம் செய்வோம்.

**அருள்திரு. A. மேஷாக்**

| 27-10-2013 | சீர்திருத்த ஞாயிறு |
|---|---|

எரே. 23 : 5-8 சீர்திருத்த ஞாயிறு பிலி. 2 : 1-11
தி.பா. 109 : 21-31 லூக். 10 : 21-24

# கடவுளின் ஒப்புயர்வற்ற நிலையின் கொண்டாட்டம், நீதியும் அமைதியும்

## CELEBRATION OF GOD'S SOVEREIGNTY, JUSTICE AND PEACE

"... அவர் நாட்டில் நீதியையும், நேர்மையையும் நிலைநாட்டுவார்"
எரே. 23 : 5

**இறைவேண்டல்**

*என்றென்றும் வாழும் ஆற்றல் நிறைந்த கடவுளே! உமது நம்பிக்கையின் மக்கள் அனைவரையும் தூய்மைப்படுத்தி ஆளுகிறவரே நீர் தந்துள்ள நல்ஈவரகிய தென்னிந்திய திருச்சபைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். துணிவு ஒருமைப்பாடு இவைகளில் ஊன்றி நிற்கவும், சாதி,இனம், மொழி போன்ற வேறுபாடுகளைத்தாண்டி இயேசு கிறிஸ்துவின் குணமாக்கும் ஆற்றலுக்கு சான்றுடன் பலப்படவும், தென்னிந்திய திருச்சபை உலகு அனைத்திலும் உள்ள திருச்சபைகளோடு ஒன்றுபடவும், நம்பிக்கை, குமாகுதல், ஒற்றுமை இவற்றுக்கு அடையாளமாய்த் திகழவும் அருள்செய்ய வேண்டுமென்று திருச்சபையின் தலைவராய் ஆளுகை செய்யும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.*

16-ஆம் நூற்றாண்டின் மாபெரும் புரட்சியாளரும், இறையியல் அறிஞரும், திருச்சபையின் சீர்திருத்தவாதியுமான மார்ட்டின் லுத்தர் 95 உண்மை விளக்கங்களை 1517-ஆம் ஆண்டு விட்டன்பர்க் ஆலயத்தின் முன் வாயிற்கதவில் தொங்கவிட்டார். லுத்தர் பட்டப்படிப்புகளைப் படித்து, துறவற வாழ்வில் நாட்டம் கொண்டவர். குருவாகப் பட்டம் பெற்றவர். சமயத்தின் பெயரால் நடந்த அநியாயங்களை அகற்றவும், அறியாமையில் அகப்பட்டு அறிவீனர்களாக வாழ்ந்த மக்களுக்கு உயிரூட்டம் கொடுக்கவும் புயலென சீறி எழுந்தார். ஆகவே இவர் சமய விரோதி என்று சமயவாதிகளால் வெறுக்கப்பட்டுத் துரத்தப்பட்டார். போப்புவின் தவறான அணுகுமுறையைக் கண்டதால், பாவமன்னிப்புச் சீட்டுக்கும், போப்புவுக்கும் எதிரியானார். தூயவர்களை வழிபடுவதால் மீட்பு பெற முடியாது எனவும் பற்றுறுதியால் மட்டுமே மீட்பு பெற முடியும்





என்பதையும் போதித்தார். இவரது கடினமான போராட்டத்தால் உரோமத் திருச்சபையில் திருப்பம் ஏற்பட்டது. மார்ட்டின் லூத்தர் ஒரு தனித் திருச்சபை உருவாக்க வேண்டுமென்று விரும்பாமல் மாற்றமும், மறுமலர்ச்சியும் திருச்சபையில் ஏற்படவேண்டும் என்று விரும்பினார். ஆகவே சீர்திருத்தம் என்பது ஒரு பிளவை ஏற்படுத்தும் நிகழ்வு அன்று மாறாக மாற்றத்தை உருவாக்கும் நிலை எனப் புரிந்து கொள்ளல் அவசியம்.

கசப்புகளினாலும், பகைமையினாலும் சிதைந்து போய்க் கொண்டிருக்கும் இவ்வுலகின் எத்திசை நோக்கினும் வேலை நிறுத்தங்கள், போராட்டங்கள், உண்ணாவிரதங்கள் மற்றும் போர்கள். இந்நிலையில் அமைதி உருவாக வேண்டுமென்பது இன்றைய உலகின் கட்டாயத் தேவை. இந்த அமைதியைப் பெற்றுக் கொள்ள நீதி செய்தலே மேன்மையானது என்பதை உணர்தல் அவசியம். அவ்வாறே இறைவாக்கினர் எரேமியா காலத்தில் யூதா தேசத்து மக்கள் கடவுளை விட்டு தூரம் சென்றவர்களாகவும், பாகாலுக்குத் தூபம் காட்டுகிறவர்களாகவும், வேற்றுத் தெய்வங்களை வழிபடுகிறவர்களாகவும் காணப்பட்டார்கள். சமுதாயத்தில் வாழ்ந்த கைம்பெண்கள், திக்கற்றோர், அனாதைகள், ஆதிக்கவர்க்கத்தினரால் ஒடுக்கப்பட்டனர். எங்கும் அநீதி, உண்மைக்கேடு, அநியாயம், அமைதியின்மை, ஒழுக்கமற்ற செயல்கள் தலைவிரித்தாடினதோடு அரசர்களும் அவ்வாறே செயல்பட்டார்கள். இச்சூழலில் கடவுள் இறைவாக்கினர் எரேமியா வழியாகக் கண்டிக்கிறார். இந்நிலையில் சிதறடிக்கப்பட்ட மக்கள் அனைவரும் திரும்பவும் கடவுளின் ஆட்சியில் இணைக்கப்படவும், மேய்ப்பர்களை ஏற்படுத்தி அவர்களைப் பேணிக்காப்பேன் என்றும் தாவீதுக்கு ஒரு நீதியுள்ள தளிர் தோன்றச் செய்வேன் என்கிறார். இத்தளிர் துவண்டு போன மக்களுக்கு ஆறுதலாகவும், கனிதரும் தளிராகவும் விளங்கும் என்கிறார்.

### 1. நீதி வழி கொண்டாட்டம் :

"ட்செடாக்கா" என்ற எபிரேயச் சொல்லிற்கு தமிழில் நீதி என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உறவின் நியதிகளுக்குக் கட்டுப்பட்டு உண்மையாக நடந்து கொள்ளுதல் என்பதே இதன் பொருளாகும். இஸ்ரயேலர்கள் அநீதியைச் செய்து நீதி என்ற பெயரில் கடவுளுக்குப் பலி செலுத்தியும், பத்திலொருபங்கை மூன்று நாட்களுக்கொருமுறை காணிக்கையாகச் செலுத்தியும் வந்தனர். இது கடவுளுக்கு ஏற்புடையதாக அமையவில்லை

(மீகா. 6 : 6-8). ஆகவே கடவுள் ஆட்சி செய்பவர் மட்டுமல்லாது நீதியை வெளிப்படுத்துகிறவர் என்பது தெளிவாகிறது. அவர் துன்பத்திலும் வேதனையிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் வாழ்வில் குறுக்கிட்டு அநீதியை அனுபவித்து வரும் மக்களின் வாழ்வில் நீதியை நிலைநாட்டுவார். இதனால் எருசலேம் நகரம் "யாவே சித்கேனு"? என்ற பெயரால் அழைக்கப்படும் (எரே. 23 : 6). இதற்கு ஆண்டவரே நமது நீதி என்று பொருள். ஆகவே கடவுள் நீதிக்குக் காரணரும், நீதிபரரும், நீதியை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார்.

இறைவாக்கினர்களும் நீதியின் மேல் தாகம் கொண்டோராய் வாழ்ந்தார்கள்.

- ❖ தாவீதின் தவறுகளை நாத்தான் கண்டித்தல் (2 சாமு. 12:1-15)
- ❖ ஆகாப், யேசபேலின் தவறுகளை எலியா கண்டித்தல் (1இரா. 21:1-24)
- ❖ சமூகஅநீதியைக் கண்டு வேதனைப்பட்ட எசாயா (எசாயா 1 : 17).
- ❖ நீதி வற்றாத நதியைப்போல புரண்டு ஓடுவதாக என்று வீர முழக்கமிடும் ஆமோஸ் இறைவாக்கினர் (ஆமோ. 5 : 24).

இறைவாக்கினர் முன்னுரைத்த மேசியா நீதியின்படி ஏழைகளின் வழக்கை விசாரிக்கிறவர். நேர்மை அவருக்கு அரைக்கச்சையாயிருக்கிறது (ஏசா. 11 : 4, 5). கடவுளின் மீட்பு மண்ணுலகில் நிலைநாட்டப்படும்போது நீதியும், அமைதியும் ஒன்றையொன்று முத்தம் செய்யும். உண்மை பூமியிலிருந்து முளைக்கும், நீதி வானிலிருந்து நோக்கும் (சங். 85 : 10, 11).

இரு அன்னையர் ஒரு குழந்தைக்காய் உரிமை கொண்டாடியபோது உண்மையை உணர்ந்து நீதிவழங்கிய சாலமோன் அரசர்போல் (1 இரா. 3 : 16-21). நீதியின்மேல் தாகம் கொண்டோராய் நீதியின் வழி கொண்டாட்டம் காண நம்மை அர்ப்பணிப்போம்.

## 2. அமைதி வழி கொண்டாட்டம் :

அமைதி என்பதற்கு "ஐரேனை" என்ற கிரேக்கச் சொல்லும் "ஷாலோம்" என்ற எபிரேயச் சொல்லும் பயன்படுத்தப்படுகின்றன. இச்சொற்களுக்கு கிரேக்க, எபிரேய அகராதியின் அடிப்படையில் நான்கு பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 1) அமைதி, 2) நல்லுறவு, 3) முழுமை வாழ்வு, 4) இசைவிணக்கமான வாழ்வு. இந்த நான்கு பொருள்களுமே தனி மனித நிலையைக் குறிக்காமல் சமூகத்தில் காணப்பட வேண்டிய ஓர் இசைவிணக்கமான கூட்டு வாழ்வைக் குறிப்பதாகும். மேலும் அமைதி என்பது கடவுளின் ஆட்சியின்





நிலையைக் குறிக்கும் சொல். சகரியா 9 : 10-இல் மேசியா கொண்டுவரப் போகும் அமைதியை விளக்குகிறார். ஆதலால் அவர் அமைதி வேந்தர் (ஏசா. 9 : 6), அவரது ஆட்சியின் உயர்வுக்கும், அமைதிக்கும் முடிவு இல்லை (ஏசா. 9 : 7), புதிய எருசலேமின் பிள்ளைகளுக்கு பெரிய அமைதி உருவாகி, அது நீதியினால் உயர்த்தப்பட்டிருக்கும் (ஏசா. 54 : 13). எனவே அமைதி என்பது கடவுளோடு உடன்பட்டு அவருடைய திருவுளத்துக்கு இசைந்து வாழ்தலேயாகும்.

அருள்நாதர் இயேசு பூமியின் மேல் தாம் அமைதியை நிலைநாட்ட வந்ததாக எண்ண வேண்டாம் என்கிறார் (மத். 10 : 34). அதாவது உரோமைப் பேரரசில் காணப்பட்ட அதிகாரத்தினாலும், அடக்கு முறையினாலும் அமைதியை நிலைநாட்ட வராமல் தம் அமைதியைக் கொடுக்க வந்தார் (யோ. 14 : 27). இந்த அமைதியைப் பெற்றிட கடவுளுக்கு எதிரான மனிதனின் செயல்கள் நீங்கப்பெற்று கடவுளுக்கும் மனிதனுக்கும், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒப்புரவை உருவாக்குதல் அவசியம். எருசலேம் ஆலயம் சென்ற இயேசு, பார்வையிழந்தவர், மாற்றுத்திறனுடையோர், உடல் ஊனமுற்றோர், நோயுற்றோர் எனப் பலருக்கும் முழுநலம் கொடுத்து அமைதி வழங்கினார். இதுவரை அமைதியின்றி ஆலயம் சென்று கடவுளை வழிபட அனுமதிக்கப்படாதோர் இப்போது அமைதியுடன் ஆலயத்தில் ஆடிப்பாடி கொண்டாடி மகிழ்ந்தனர். இதைப் பார்த்து இயேசுவும் "என் இல்லம் இறைவேண்டலின் வீடு" என்கிறார் (மத். 17 : 12-15). மனித ஆளுகையின்போது காணப்படும் அமைதியின்மையைக் கடவுள் தம் ஆளுகையில் அகற்றி அனைவரும் ஒருமித்து அமைதியோடு கொண்டாடி மகிழும் நிலையை உருவாக்குகிறார். இந்நிலை இவ்வுலகில் உருவாக தடையாகக் காணப்படும் மனிதத்தை மதியா நிலை, சாதி, பெண்ணடிமைத்தனம், ஏமாற்றுதல், சுரண்டல், கொத்தடிமைத் தனம், போன்ற நிலைகள் மாறி மனிதத்தை மதித்து, உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு கொடுத்து அமைதியின் கருவியாக வாழ அர்ப்பணிப்போம்.

**அருள்திரு. J. J. இம்மானுவேல்**

**03-11-2013** பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் இருபத்தி நான்காம் ஞாயிறு.

1 சாமு. 3 : 1-21 (உலகத் திருமறைப்பள்ளி நாள்) எபே. 6 : 1-4

தி.பா. 127 மாற். 10 : 13-16

# திருச்சபையில் சிறுவர்கள்
# Children in Church

. . . "ஆண்டவரே, பேசும், உம் அடியான் கேட்கிறேன்" (1 சாமு. 3 : 9)

**இறைவேண்டல்**

*விண்ணகக் கடவுளே குழந்தைகளிடம் நீர் கொண்டிருந்த அன்பை இயேசுவின் வழியாக வெளிப்படுத்தி அவர்களை ஆசீர்வதித்து, இறையரசின் பங்காளிகளாக அறிமுகம் செய்தீரே. உமது மக்களும் ஒவ்வொரு குடும்பமும் வளரும் தலைமுறையினருக்கு உமது அன்பையும் பராமாரிப்பையும் வெளிப்படுத்த ஆற்றல் அருளும். ஒவ்வொரு குழந்தையும் உம்மிலே வளரவும், இந்த உலகுக்கு ஆசியாகத் திகழவும் உம் தூய ஆவியாரின் ஆற்றலால் ஆற்றவ்படுத்த வேண்டுமென்று ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

திருமறைப்பள்ளியின் நோக்கம் "சிறுவர்களைக் கிறிஸ்துவுக்கு நேராக வழி நடத்துதல்" என்பதாகும். 1780-ஆம் ஆண்டில் ராபர்ட் ரெய்க்ஸ் என்பவரால் ஞாயிறு பள்ளி ஆரம்பிக்கப்பட்டபோது, மனமாற்றத்தை, தீமையிலிருந்து விடுதலையை, நற்குணங்களை, பரிசுத்த வாழ்வை சிறுவர்கள் பலர் பெற்றுக் கொண்டார்கள். திருச்சபைக்கு வெளியே இது ஆரம்பிக்கப்பட்டாலும் இதன் வளர்ச்சி திருச்சபைக்குள்ளே இன்றும் தொடர்கின்றது. திருச்சபை இறையரசின் முன்சுவை. இந்த முன்சுவையை முழுமையாக வெளிப்படுத்துகின்றவர்கள் சிறுவர்களே. காரணம் இயேசு சிறுபிள்ளைகள் இறையாட்சிக்குத் தகுதியுடையோர் (மாற். 10 : 14) என்று குறிப்பிட்டார். "இறையரசை வெளிப்படுத்தும்" சிறுவர்கள் நற்குணங்களில் தொடர்ந்து வளர்ந்திட திருச்சபை உதவ வேண்டும். கிளமண்ட் என்பவர் "என் சபை என்பதற்கும், திருடர்கள் பதுங்கி வாழ்வதற்கும் திருச்சபை எதிரானது" என்றார். கிளமன்ட் குறிப்பிடும் இக்கருத்து ஏலி போன்ற குடும்பங்களில் இன்றும் தொடர்கின்றது.





ஆனால் சாமுவேலிடம் காணப்பட்ட ஒப்படைப்பையும் வளர்ச்சியையும் இன்றைய திருச்சபைகளில் கடவுள் எதிர்பார்க்கின்றார்.

**1) தகுதியில் நிலைத்திருக்க சிறுவர்களை வழிநடத்துதல்** (1 சாமு. 1 : 28)

சாமுவேல் சமய நம்பிக்கையில் உறுதியுடைய பெற்றோருக்குப் பிறந்தவர். இறைப்பற்றுறுதியில் வளர்வதற்குத் தேவையான ஆலோசனை அவருக்குப் பெற்றோரிடமே கிடைக்கும். ஆனால் இறைப்பற்றுறுதி மிகுந்த பெற்றோரான எல்க்கானா அன்னாள் தம்பதியினர் சாமுவேலை ஆலயத்தில் ஒப்படைத்தனர். ஆலயம் ஆன்மிகத்தை வளர்க்கும் இடம். ஆலயம் சிறுவர்கள் இயற்கையாகவே பெற்றுள்ள இறையரசிற்கான தகுதியைத் தக்கவைக்கும் இடம். சாமுவேல் குழந்தையிலேயே இறையரசிற்கான இலட்சணங்களைப் பெற்றிருந்தாலும் சிறுபையனான சாமுவேலை அன்னாள் ஆலயத்தில் அர்ப்பணித்தார் (1 சாமு. 1 : 25-27). சாமுவேலைக் குறிப்பிட்ட நாள் மட்டும் என அர்ப்பணிக்காது வாழ்நாள் அனைத்தும் ஆண்டவருக்கே என அர்ப்பணிக்கின்றார் (1 : 28) குழந்தையை அர்ப்பணித்த அன்னாளின் உள்ளம் அகமகிழ்ந்தது (2 : 1) சாமுவேல் ஆண்டவருக்கு ஊழியம் செய்தார் (2 : 11). ஆண்டுதோறும் அன்னாள் ஆண்டவருக்குப் பலியிட்டு ஆடைகளைச் சாமுவேலுக்குக் கொடுத்து ஆன்மிகத்தில் வளர்ந்து பெருக உதவினாள் (2 : 18). இன்று இறையரசுக்கான தகுதியைச் சிதைத்து போட்டவர்களால் பல பெற்றோரது உள்ளம் அழுகையால் தவிக்கின்றது இறையரசுக்குத் தகுதியுடைய குழந்தையை திருமறைப் பாடசாலையில் ஒப்படைத்தேன் தகுதியற்றவனாய் திரிகின்றானே, இதற்கு காரணம் என்ன? என்ற கேள்வி பலரால் எழுப்பப்படுகிறது. திருச்சபையின் மறுபதில் என்ன?

**2) தரிசனமில்லாக் காலத்தில் சிறுவர்களைத் தரிசனம் காண வழிநடத்துதல்** (1 சாமு 3 : 1)

தரிசனங்கள் தரப்படாத அபூர்வமான காலத்தில் சாமுவேல் தரிசனம் கண்டார். தரிசனம் பெறும் ஆர்வமும் மக்களிடம் இல்லாதிருந்தது. ஆசாரியன் ஏலிகூட தரிசனம் பெற்ற அனுபவமில்லாத காலம். இக்காலத்தை ஆன்மிகப் பஞ்சம் எனக் குறிப்பிடலாம். இக்காலம் ஆன்மிக வரலாற்றில் இருண்ட காலம், வழிகாட்டுதல் இல்லாத காலம் என்று குறிப்பிடலாம். இப்படிப்பட்ட ஒருகாலம் ஆமோஸ் தீர்க்கதரிசியால் குறிப்பிடப்படுகின்றது. இது உணவு கிடைக்காத பஞ்சமும், நீரில்லாத வறட்சியும் அல்ல ஆண்டவரின் வாக்கு கிடைக்காத பஞ்சமே இது என்கின்றார் (ஆமோ. 8 : 11) ஆண்டவரின் வாக்கைக் கடல்கடந்து தேடினாலும் கண்டடைய முடியாத காலம் இது (ஆமோ. 8 : 12). மீக்கா 3 : 6, 7-இல் இறைவாக்கினர், காட்சிகாண்பவர் இறைவாக்கில்லாது நாணிப்போவார்கள் என்கின்றார். இப்படிப்பட்ட இறைவாக்கைக் கேட்கமுடியாத தரிசனமில்லாத அபூர்வ காலம் எவ்வளவு காலம் நீடிக்கும்

என்ற கேள்வியை திருப்பாடலாசிரியர் கேட்கின்றார் (தி.பா. 74 : 9). இப்படிப்பட்ட ஆன்மிகப் பஞ்சமான காலத்தில் சாமுவேல் தரிசனம் கண்டார். யோசிபஸ் என்ற வரலாற்று ஆசிரியர் சாமுவேல் தரிசனம் கண்டபோது அவருக்கு 12 வயது என்று குறிப்பிடுகின்றார். சிறுவர்கள் இயேசுவைச் சந்திப்பது சீடர்களது பார்வையில் அங்கீகரிக்க முடியாததாய் இருந்ததால் தடை ஏற்படுத்தினர். ஆனால் இயேசு அரவணைக்க ஆர்வமுடன் இருக்கின்றார் (மாற். 10 : 13). அதட்டுதலைத் தவிர்த்து அரவணைக்க திருச்சபை கற்றுக் கொள்ளவேண்டும். தடுப்பதைத் தவிர்த்து சிறுவர்களைத் தரிசனம் காண வழிநடத்த திருச்சபை ஆயத்தப்பட வேண்டும்.

**3) தடுமாறும் சிறுவர்களைத் தரிசனமானவரிடம் வழிநடத்துதல்**

(1சாமு. 3 :10)

சாமுவேல் ஆண்டவரின் இல்லத்தில் படுத்திருந்தார். ஆண்டவர் சாமுவேலை அழைத்தபோது ஏலியிடம் ஓடினார் (3 : 5) தன்னை அழைக்கும் சத்தம் தன்னை ஆயத்தப்படுத்துகின்ற ஆன்மிகக் குருவினுடையது என ஓடினார். சாமுவேலின் விரைவு ஏலியின்மீது கொண்ட அன்பு, கீழ்ப்படிதல், நல்ல பணியாளரின் குணம் ஆகியவைகளுக்கு முன்னுதாரணம். இன்றைய சிறுவர்களின் ஓட்டம் எங்கே? மூன்று முறை சாமுவேல் ஏலியிடம் சென்றார். தொடர்ந்து தன்னைத் தட்டி எழுப்பினாலும் தனது மாணவனுக்கு மறுபதில் கொடுக்க முதுமையிலும் ஆயத்தமாயிருந்தார் ஏலி. மூன்றாம்முறை தரிசனமானவரிடம் சரியாக வழி நடத்தப்பட்டார் சாமுவேல். இன்றைய சிறுவர்கள் தன்னை அழைத்தது யார் எனக் கேட்கின்றார்கள் அழைப்பின் குரல் யாருடையது என அறிய முடியாது தேடுகின்றார்கள். தரிசனமானவர் யார்? என்னை அழைத்தது யார்? எனத் தேடும் சிறுவர்களுக்குத் திருச்சபையின் பதில் என்ன? சாமுவேல் கடவுளிடம் வழிநடத்தப்பட்டதால் பேசும் அடியான் கேட்கிறேன் என மறுமொழி கூறினார். சாமுவேல் தரிசனமானவரிடம் வழி நடத்தப்பட்டதால் மாணவனாய் அறிமுகமானவர் தன்னை உருவாக்கும் ஆசாரியனுக்கு ஆன்மிகத்தைக் கற்றுக்கொடுப்பவராய் மாறுகின்றார்.

சாமுவேலுக்குக் கிடைக்கப்பெற்ற ஆன்மிகம் அவரது பெற்றோரால், ஆன்மிகக் குருவால், ஆலயத்தில் கிடைத்தது. இத்தகைய வழிகாட்டுதல்களை இன்றைய திருச்சபை கொடுக்கும்போது யோவேல் 2 : 28-இல் குறிப்பிடப்படும், புதல்வரும் புதல்வியரும் இறைவாக்கு உரைப்பார் என்னும் இறைவாக்கு நிறைவேறும்.

**அருள்திரு. I. ரெஞ்சித் வேதகுமார்**



**10-11-2013** — பெந்தக்கோஸ்துக்குப் பின்வரும் இருபத்தி ஐந்தாம் ஞாயிறு ஒன்றிப்பு ஞாயிறு

எசே. 37 : 15-23 — 1 கொரி. 12 : 12-27
தி.பா. 122 — யோவா. 10 : 7-18

# ஒரே மேய்ப்பன், ஒரே மந்தை
# One Shepherd, One Flock

அவை இரண்டும் உன் கையில் ஒரே கோலாயிருக்கும்படி, அவற்றை ஒன்றாகச் சேர் (எசே. 37 :17)

**இறைவேண்டல்**

*எங்கள் ஆண்டவராகிய கடவுளே! ஒரே ஆயன் ஒரே மந்தை எனும் உம் திருவுளத்தை வெளிப்படுத்தியவரே, உம் தூய ஆவியாரின் ஆற்றலால் நாங்கள் ஒருமைப்பாட்டில் வளரவும், உண்மையான சான்றுகளாயிருக்கவும், எங்களிடையே எழுகின்ற பிரிவினை சிந்தைகளை அகற்றி தூய ஒருமைப் பாட்டின் மகிழ்வை எங்கள் வாழ்வில் பெற்றுவாழ அருள் செய்ய வேண்டுமென்று உம் ஒரே திருமைந்தன் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

நைந்துபோய் ஒடிந்தேவிடினும், நல் ஆயர் இறைவன் கரத்தில் இரு வேறுபட்ட கோல்கள் ஒரே கோலாக ஒன்றித்துவிடும். ”எப்ராயீம் கோத்திரத்தைச் சார்ந்த வடநாட்டவரையும் யூதா கோத்திரத்தைச் சார்ந்த தென்னாட்டவரையும் நல் ஆயர் இறைவன் தமது ஒரே மந்தையாக ஒன்றிக்கிறார்” எனப் பறைசாற்றுகிறார் இறைவாக்கினர் எசேக்கியேல். தொடர்ந்து, அவரது முன்னுரைப்படியே, “பார்வையின்றியே பிறந்திடினும் பின்னரே தம்மிடம் பார்வைபெற்ற மனிதனைப் போன்ற பிற இனத்தவரும், வாழ்வுப் பார்வையை இழந்துவிட்ட பரிசேயர்களைப் போன்ற யூத இனத்தவரும் தாவீது மன்னர் மரபில் பிறந்து விடுதலையாளராகிய தமது குரல்கேட்டு, தம்மைப் பின்பற்றும்போது ஒரே மேய்ப்பன் - ஒரே மந்தையெனும் பெருவாழ்வு மானிரிடையே மலரும்” என்கிறார் இயேசுநாதர்.

**1) நாளும் வழிநடத்துவதால், நல்லாயர் நம்மை ஒரே மந்தையாக்கிறார் :**

(யோவா. 10 : 16)

இறைவாக்குநர் எசேக்கியேல் (தொ.நூ. 34-37) மற்றும்

நற்செய்தியாளர் யோவான் (அதி. 10) பயன்படுத்தும் " மேய்ப்பன்" என்னும் உருவகச் சொல் "தலைமைப் பொறுப்பு"அல்லது "அனுதின வாழ்வுப் பொறுப்பு"களைச் சுட்டும். எ.கா. இஸ்ரேல் மக்களனைவரையும் ஆளுகை செய்த மோசே, தாவீது போன்ற தலைவர்கள் "மேய்ப்பர்கள்" என்று அறியப்பட்டனர் (விப. 3 : 1, 10; 4 : 2; எசே. 34 : 23). ஆண்டவரை விட்டு வழிவிலகிய இஸ்ரேல் மன்னர்கள் தீய (பொய்) மேய்ப்பர்கள் (எசே. 34).

மேலும், கி.மு. 165-இல் மக்கபேய இயக்கத்தினர் எருசலேம் நகரின் அழகிய தேவாலயத்தைக் கிரேக்க மன்னர்கள் (அந்தியோகு எப்பிபோனஸ் போன்ற) கைகளிலிருந்து விடுவித்து, அதனைத் தூய்மையாக்கி மறு அர்ப்பணம் செய்தனர். அதைத் தொடர்ந்து தம் மரபுப்படியே யூதர்கள் ஆண்டுதோறும் எருசலேம் நகரில் கூடி "ஹனுக்கா" எனும் ஆலய அர்ப்பண விழாவைக் கொண்டாடி வந்தனர். பல வாரங்களாக நடைபெறும் அவ்விழாவின்போது தங்களை (குறிப்பாக கிரேக்கர் ஆளுகையின்போது) வழிநடத்திய தீய மேய்ப்பர்களின் வாழ்வுக் குறிப்புகளை நினைவூட்டி, பின்னர் மெய் மேய்ப்பன் இறைவனைச் சுட்டிக்காட்டி, அவரை வழிபடும் வகையில் மக்கள் மறு அர்ப்பணத்தை வழிநடத்தி வந்தனர். குறிப்பாக, அவ்வமயம் எசேக்கியேல் முன்னுரைத்தபடியே (அதி. 37) எப்பிராயீம் கோத்திரம் சார்ந்த வடநாட்டவரையும், யூதா கோத்திரம் சார்ந்த தென்னாட்டவரையும், அவர்களது குறைகளை அவர்களுக்குத் திறந்து காட்டி, அவர்களைத் திருத்த வைத்து அவர்களை ஒரே நாட்டவராய் இறைவன் ஒன்றிக்கிறார் எனும் உண்மையைத் தியானிக்கின்றனர். இறைவனைவிட்டகன்று தொடரும் உரையாடலும் மற்றும் அமைதி குழுக்களால் அல்ல, ஆண்டவர் கரத்தில் அடங்கியிருந்த நல்லாயராகிய அவரால் வழிநடத்தப்படும்போதே ஒரே மந்தை எனும் இறைமக்கள் (மனுக்குல) ஒன்றிப்பு உருவாகும் என அவர் தெளிவாக்குகிறார். நற்செய்தியாளர் யோவானும், இறைவாக்குநர்களின் முன்னுரைகளின்படியே மனுவுருவேற்ற இறையேசுநாதர் ஆடுகளின் (மக்களின்) வாசல் மற்றும் நல்ல மேய்ப்பனாய் நின்று நம்மை வழிநடத்தி ஒரே மந்தையாய் தொடர்ந்து ஒன்றித்து வருகிறார் எனும் நற்செய்தியை கூறியறிவிக்கிறார்.

i) முழு இறையதிகாரத்துடன் வழிநடத்துவதால் நம்மை ஒரே மந்தையாக்குகிறார். வனாந்தர வெளி ஆட்டுத்தொழுவுகளில் உள்ள சிறிய வாசல் வாழ்வுக்கு இன்றியமையாதது. ஆடுகளைப் பத்திரமாய் தொழுவில் தங்க வைத்து, மேய்ப்பர் தொழுவாய் அதில்





படுப்பது வழக்கம். பகலில் வாசலாய் நின்று அவர் ஆடுகளை மேய்ச்சலுக்கு அழைத்து செல்வார். அதுபோல மக்களை தீமைகளில் விடுவித்து பாதுகாத்து முழு வாழ்வுக்கு நடத்திடும் நல்லாயர் அவ்வகையில் ஒரே மந்தை ஆக்குகிறார்.

ii) பல கலைகளுடன் பணி புரிந்து, நமக்கு வாழ்வூட்டும் வகையில் நல்லாயரேசு இன்னுயிரைப் பலியாக்குகிறார் (வ. 11). காரணம், நம்மைப் படைத்து, அனுதினம் பராமரிப்பவர் அவர். தமக்குரியவர்களாய் நம்மைக் கண்டு, அவ்வகையில் நம்மை அவர் தம்முடனும், பிறருடனும் ஒன்றிக்கிறார்.

iii) தூர தரிசனத்துடன், சாவிருள் பள்ளத்தாக்குகளையும் கடந்து செல்ல வைத்து அவர் நம்மை ஒரே மந்தையாக்குகிறார் (வ. 16, மாற். 14 : 27, 28; சங். 23 : 4). அவர் அறைகூவல்களைச் சந்தித்து அவர் சித்தம் செய்யும் நம் வாழ்வுப்பயணத்தில் சான்று வாழ்விலும், திருப்பணியிலும் புதுப்புது வாய்ப்புகளை உருவாக்கி அவர் நம்மை ஒன்றிக்கிறார். அவருக்கென ஒத்துழைக்க வைக்கிறார்.

**2) நம்மைத் தூய்மையாக்குவதால், நல்லாயர் நம்மை ஒரே மந்தை ஆக்குகிறார்** (எசே. 31 : 23)

நல்லாயர் இயேசுவின் இனிய வருகையை முன்னுணர்ந்து நற்செய்தியைப் பறைசாற்றும் இறைவாக்குநர் எசேக்கியேல், வரவிருக்கும் நல்லாயர் இறைவன் தம் ஆடுகள் நடுவில் ஒரே தொழுகைத் தலமாய் அவர் அருட்பெருக்கால் தங்குவார். இறைவனை நல்லாயராய்க் கண்டுணர்ந்து, அவரைச் சார்ந்து வாழ்ந்து, அவர் சித்தமறிந்து அதைக் கீழ்ப்படிதலுடன் செய்திட, அவர் தம் ஆடுக(மக்க)ளுக்கு புது இதயங்களை உருவாக்குவார். இவ் இதயங்களில் அவர் ஆவியாராய்த் தங்கியிருந்து, ஆலோசனைகளீந்து, அவர்களைக் கவனமாய் வழிநடத்துவார் (எசே. 37 : 23, 36 : 26-21) எனத் தொடர்ந்து கூறுகிறார். பார் (படைப்பு) வரலாற்றில் மனுவுருவேற்று, கிருபையிலும் உண்மையிலும் நிறைந்து நாம் வாழும் கிறிஸ்துவில் அவ்இறைவாக்கு நிறைவேறுவதை யோவான் நற்செய்தியாய் எடுத்துரைக்கிறார் (யோவா. 1 : 14). இறைவாக்குறுதிகளை நிறைவேற்ற நல்லாயரேசு நம்மிடையிலும் நமக்குள்ளும் உருவாக்கிடும் இப்புதுவாழ்வு தூயாவியார் இறைவனுடன் நாம் புது உடன்படிக்கை உறவை உருவாக்கி அதில் என்றும் நிலைக்கச் செய்கிறார். விளைவாக, நம் வாழ்வில் இறை அமைதியையும், மகிழ்வையும் தலைமுறைதோறும் கட்டளையிடுகிறார் அவர்.

i) ஆவியோடும், உண்மையோடும் ஆண்டவரைத் தொழவைத்து நம்மை ஒரே மந்தையாக்குகிறார் (யோவா. 4 : 24). நம் தனியாள் ஆன்மீக அமைவு, கூட்டுத்தொழுகை, கல்வி,சான்று வாழ்வு, பணிகளில் நல்லாயரேசு இன்று நம்மை எவ்வகைகளில் தூய்மையாக்குகிறார்? நமது சொந்த மனச்சான்றுக்கு மட்டுமா, இல்லை நம் மனச்சான்றையே தூய்மையாக்கி இயக்கும் நல்லாயரின் வாழ்வுக்குரலுக்கா, எதற்கு (யாருக்கு) நாம் கீழ்ப்படிகிறோம்?

ii) தடைச் சுவர்களைத் தகர்க்க வைத்து, அவர் நம்மை ஒரே மந்தை ஆக்குகிறார் (கலா. 3 : 28). உலகு - இறையாளுகை ஆண்-பெண், செல்வம்-ஏழ்மை மற்றும் சாதி, சமய, கல்வி, வயது போன்ற எல்லா வரையறைகளையும் கடந்து, அனுதின வாழ்விலும், வழிபாடுகளிலும் அவருக்குச் சான்று பகர வைத்து, நல்லாயர் நம்மைத் தூய்மையாக்குவதால் ஒன்றிக்கிறார்.

iii) ஒருமையைத் திணிப்பதில் அல்ல நம் பன்மையெழிலைத் தழைக்கச் செய்து, நல்லாயர் நம்மை ஒன்றிக்கிறார் (1 கொரி. 12 : 12). நல்லாயரேசுவின் ஒரே மந்தையில் பல்வேறு ஆடுகள் நாம். நம் ஒவ்வொருவருக்கும் அவர் பல்வேறு வங்களையும், திறமைகளையும் தந்துள்ளார். நம் குடும்பம், அயலகம் மற்றும் நம் திருச்சபைகளில் ஒருவரிடமொருவர் கற்றுக்கொள்வதாலும், ஒருவருக்கொருவர் கரங்கோர்த்து அகிலமெங்கும் அவரது அருட்பணி தொடருவதாலும் நல்லாயன் நம்மை ஒரே மந்தை ஆக்குகிறார்.

எருசலேம் நகர் ஹனுக்கா பண்டிகையின்போது பிறர் குறைகளை கூறி, ஆலய மறு அர்பணத்தை மட்டும் வலியுறுத்திய சில பரிசேயர்கள் போலன்றி, தூயாவியார் நம்மைத் தூய்தையாக்குவதால், நம் இல்லங்களிலும் வெளியிடங்களிலும் அனுதினம் அவர் முன் கூடிடுவோம் (மத். 18 : 20). இறை ஆயர் நிலையான அமைதியையும், மகிழ்வையும் பொழிந்திடுவார். அதோ அம்மந்தைக்கு நாமும் செல்வோம் எனக் கூறக்கடவோம். (தி.பா. 122 : 1, 4). எத்தொழுவினராயினும் அவர்களுடன் அன்புக்கரங்கோர்த்திடுவோம். வையமனைத்தையும் நிறைவாழ்வூட்டி ஒரே தொழுவாக்கிடும்" அவரே நம் ஒரே மேய்ப்பர், நாமே அவரது ஒரே மந்தை !".

அருள்திரு. அறிவர். **செ. டொனால்டு சாமுவேல்**



**17-11-2013** பெண் குழந்தைகள் ஞாயிறு

2 அர. 5 : 1-14 எபி. 5 : 1-10
திபா. 15 மத். 15 : 21-28

# பெண் குழந்தைக்கான ஒப்படைப்பு
## Commitment to the Girl Child

என் மகள் பேய் பிடித்துக் கொடுமைக்குள்ளாகி இருக்கிறாள்.
மத். 15 : 22

**இறைவேண்டல்**

*அருள்நிறைந்த கடவுளே! நீர் அனைத்துலகையும் படைத்து உமது ஆற்றலாலும் அன்பாலும் பராமரித்து வருகிறீர். வாழ்வின் முழுமையைப் பெற்றுக்கொள்ள போராடும் யாவருக்கும் துணைநிற்கிறீர். பெண் குழந்தைகளுக்கான எங்கள் பொறுப்பை நாங்கள் உணர்ந்து செயல்படவும். புதியவாய்ப்புகளை உருவாக்கவும் திடப்படுத்தும். பெண்குழந்தைகளின் உரிமைகளுக்காகப் பேசும் ஆற்றலையும், உறுதியையும் தந்து ஒவ்வொரு குழந்தையும் குறிப்பாக பெண்குழந்தைகள் அமைதியுடனும், மரியாதையுடனும் வாழும் புதிய நாள் உருவாகுவதைக் காணவும் எங்களுக்கு அருள்தர வேண்டும் என்று ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம் என்று திருமறை கூறுகிறது. ஆனால் குடும்பத்தில் பிள்ளை பிறந்த உடன் என்ன பிள்ளை என்று எல்லாரும் கேட்கிறோம். ஆண் பிள்ளை என்றால் வரவு என்று சொல்லி மகிழ்ச்சியடைகிறோம். பெண் குழந்தை என்றால் செலவு என்று சொல்லிப் புலம்புகிறோம்.

தொழில் நுட்பக் காலத்தில் எத்தனையோ அறிவியல் வளர்ச்சியைக் கண்ட பின்பும் கல்வி அறிவு பெற்ற மக்கள் சதவிகிதம் அதிகரித்தாலும், பல வசதி வாய்ப்புகள் பெருகி இருந்தாலும், அநேக புதிய புதிய சட்டங்கள் வந்தாலும், திருமறை சார்ந்த போதனைகள் கேட்டாலும், பெண்கள் இந்தச் சமுதாயத்தில் முக்கியப் பொறுப்புகளை வகித்தாலும் இன்று பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகளையே பெற்று எடுக்க விரும்புகின்றனர். காரணம் வாழ்க்கைத் துணைவரின் கொடுமையில் இருந்து தன்னைக் காத்துக்கொள்ளவும், ஆண் பிள்ளை

அற்றவர் என்ற பட்டத்தை மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளாதிருக்கவுமே.

இன்றைய நாகரிகக் காலத்தில் பெண் குழந்தை என்றால் கருக்கலைப்பு, பிறப்பில் கொலை, வளர்ப்பில் பாரபட்சம் கல்வியில் பாரபட்சம், பாலியல் கொடுமைகள் இவற்றால் நல்வாழ்வைப் பெண் குழந்தைகள் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

திருமறையில் பெண் குழந்தைகள் சிறப்பிடம் பெறுகிறார்கள் திருமறையில். II அரசர்கள் 5 : 1-14; மத். 15 : 21-28. ஆகிய திருமறைப் பகுதிகளில் இரு பெண் குழந்தைகளுடைய வாழ்க்கை வரலாறு குறிப்பிடப்படுகிறது.

* பெண் குழந்தைகளின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

* பெண் குழந்தைகளின் பெற்றோர் பெயர் குறிப்பிடப்படவில்லை.

* சீரிய தேசத்தில் வாழ்ந்த இஸ்ரயேலைச் சார்ந்த சிறு பெண், தீரு சீதோன் திசைகளில் குடியிருந்த கானானியப் பெண்ணின் மகள்.

* ஒரு பெண் குழந்தை நோயுற்ற மனிதன் நோயிலிருந்து விடுதலை பெற வழி காட்டுகின்றாள். மற்ற பெண் குழந்தை நோயிலிருந்து விடுதலைபெற இறைவனின் உதவியை நாடுகிறது.

* சிறு பெண் செய்த செயல் எல்லாரையும் அவள் பக்கம் கவர்ந்தது. கானானியப் பெண் தன் பெண் குழந்தை சுகமாக இயேசுவிடம் வேண்டி பெரிய விசுவாசத்தை வெளிப்படுத்தி இயேசுவிடம் இருந்து பாராட்டு பெறுகின்றாள்.

ஏன் பெண் குழந்தைகளுக்காக நம்மை ஒப்படைக்க வேண்டும்? எப்படிப் பெண் குழந்தைகளை உரிமையுடன் உலகில் வாழவைப்பது? என்பதைச் சிந்திப்பது சிறப்பு.

**1. தடைகளை தாண்டி ஒப்படைத்தல்**

தடைகளைத் தாண்டி பிறருக்கு உதவுவது நற்செயல் ஆகும். தேவையில் இருப்பேருக்கு உதவிடத் தடையாயிருப்பவற்றை உடைத்தெறிய வேண்டும். புற ஜாதிப் பெண்மணி தன் மகள் சுகம்பெற தடைகளை தாண்டி தன்னை ஒப்படைக்கிறாா்.

அவளுக்கு இருந்த தடைகள் என்ன?





* புற இனத்துப் பெண்மணி

* சபிக்கப்பட்ட குலத்தைச் சார்ந்தவள்.

* யூதர்களால் புறக்கணிக்கப்பட்டவள்.

* யூதர்களின் பார்வையில் கடவுளிடமோ, மேசியாவிடமோ எதையும் உரிமை கோர முடியாதவள்.

இந்தத் தடைகளைத் தாண்டி தன் மகள் சுகம்பெற இயேசு கிறிஸ்துவிடம் மன்றாடும்போது அவரை ஆண்டவர் என்றும் தாவீதின் குமாரன் என்றும் அழைத்து தன்னை ஒப்படைக்கிறாள்.

இஸ்ரேலிய சிறு பெண்ணுக்கு ஏற்பட்ட தடைகளாவன ; சிறு பெண், அடிமைப் பெண், சிறைபிடிக்கபட்டவள் எப்படித் தலைவன் வீட்டில் உரிமையோடு பேசமுடியும். ஆனால் இவளோ இத்தகைய தடைகளைத் தாண்டி ஒப்படைக்கிறாள்.

மாற்கு 14 : 3-9 வரையுள்ள பகுதியில் ஒரு பெண்மணி அனைத்துத் தடைகளையும் தாண்டி இயேசுவண்டை வருகிறாள். அதற்குப் பல எதிர்ப்புகளும் வந்தன. ஏனெனில் பாவியான பெண் ஒரு யூத ரபியைத் தொடுவது ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்று (லூக். 7 : 39).

மேலும் அவளுடைய கொடைக்குத் தடை வருகிறது (மாற். 14 : 15) இப்பெண்மணியின் ஒப்படைத்தலை இயேசு அங்கீகரிக்கிறார். இன்றும் சமூகத்தில் பெண் குழந்தைகள் எவ்வளவாக ஒதுக்கப்பட்டுள்ளனர் என்பதை நாம் எண்ணிப் பார்ப்பது நலம்.

**2. தடுமாற்றமில்லா நம்பிக்கையுடன் ஒப்படைத்தல்** (மத். 15 : 23)

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பது போல புற இனத்துப் பெண்மணி என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கையும், கடவுள் துணை நிற்பார் என நம்பிக்கையுடன் செயல்பட்டாள். சீடர்களுக்கு அவள் இடையூறாக இருந்தாலும், இறையவரில் அவள் வரவேற்கத் தகுந்த விசுவாச முன் மாதிரியுடையவளாக இருந்தாள். இறையருள் பெற்றுக்கொள்ளும் தகுந்த பாத்திரமாக விளங்கினாள். ஆனால் முதலில் அவளது நம்பிக்கையைச் செய்முறைப் பாடம் போல நிரூபிக்க வேண்டியதாக இருந்தது. அவளது விசுவாசத்தின் உண்மைத் தன்மையை வெளிக்கொணர இயேசு துணிந்து விட்டார் (15 : 16) புற இனத்துப் பெண்மணியின் செயல்பாடு பாராட்டும்படியாக அமைந்தது. எனவே இயேசு அவளது பெரிய நம்பிக்கைப் பார்த்து மனதாரப் பாராட்டினார். தடுமாற்றமில்லா நம்பிக்கையுடன் போராடி இறைமேன்மையைப் பெற்றாள்.

சிறு பெண் கடவுள் பயம் நிறைந்தவள். கடவுளின் ஆற்றலின் மீது அளவில்லாத நம்பிக்கை மிகுந்தவள். இறைப்பணியாளர்கள் மீது மிகுந்த மரியாதையும், இறைப்பணியாளர்கள் வழியாய் கடவுள் செயலாற்ற முடியும் என்பதில் மிகுந்த நம்பிக்கையும் உடையவளாயிருந்தாள். ஆகவே தான் நாகமான் தொழுநோய் நீங்க சமாரியாவிலிருக்கிற இறைவாக்கினரிடத்தில் செல்வரானால் நலமாயிருக்கும் என அறிவுரை வழங்கினாள்.

**3. தன்னிகரற்ற வெற்றி வாழ்வுக்கு ஒப்படைத்தல்** (மத். 15 : 28)

புற இனத்துப் பெண்மணி தன் மகள் நோயிலிருந்து ஆரோக்கியமடைய தன்னை ஒப்படைத்தாள். இயேசுவிடன் தன் மகளுக்காக விடாமுயற்சியோடு போராடி வெற்றி கண்ட பெண்மணியை போல உரிமை இழந்து, ஒதுக்கபட்டு இருக்கும் பெண் குழந்தைகளின் வாழ்வில் முழு சுதந்திரம் கிடைக்க நம்மை ஒப்படைப்பது சிறப்பு. கூலித் தொழிலாளியின் மகளாகப் பிறந்தவள் அஸ்வினி. எப்படியாவது வாழ்வில் சாதித்து, பெற்றோரைக் காப்பாற்ற நினைத்தாள். உலகக் கல்வியைத் தொடங்கி தடுமாற்றமில்லா முயற்சியோடும், முனைப்போடும் தடகளம் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட்டாள். அவள் விடாமுயற்சியோடு பயிற்சி பெற்று நடந்து முடிந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கங்கள் பெற்று வெற்றியோடு திரும்பினாள். இது அவளுக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி.

சமாரியா நாட்டில் ஆதரவற்றிருந்த சிறுப் பெண் தன் குழந்தை பருவத்தில் அவள் பெற்றுக் கொண்ட இறை அறிவு, பக்தி வாழ்வு இவைகளினால் தொழுநோயினால் பாதிக்கப்பட்ட நாமான் நோயிலிருந்து விடுதலை பெறவும், இஸ்ரயேலிலிருக்கிற கடவுளைத்தவிர பூமியெங்கும் வேறே கடவுள் இல்லை என்பதை அறிந்தேன் என்று நாகமான் வெற்றி குரல் எழுப்பவும் சிறு பெண் துணைபுரிந்தாள்.

இயேசு தன் திருப்பணிக் காலத்தில் துன்புறும் மக்கள் மீது கரிசனையுடன் செயல்பட்டதைத் திருமறையில் படிக்கிறோம். நாம் வாழும் உலகில் உரிமை இழந்து வாழும் பெண் குழந்தைகள் எல்லா உரிமைகளையும் பெற்றிட தடைகளைத் தாண்டி, தடுமாற்றமில்லா நம்பிக்கையுடன் தன்னிகரற்ற வெற்றிவாழ்வு பெற நம்மையே ஒப்படைத்து பெண் குழந்தைகள் வாழ்வில் நம்பிக்கையின் ஒளியினை வீசச் செய்வோம். இறையரசுப் பணியினில் கிறிஸ்துவோடு பயணிப்போம்.

**அருள்திரு. J. ஜெபசிங்**



**24-11-2013**

| | |
|---|---|
| எரே. 29 : 1-7 | 1 திமொ. 2 : 1-7 |
| திபா. 85 | மத். 5 : 43-48 |

# இறைமன்றாட்டு

# INTERCESSION

அனைவருக்காகவும் மன்றாடுங்கள் (1 திமொ. 2 : 1)

**இறைவேண்டல்**

*எங்கள் கடவுளே! இன்னின்னபடி வேண்டிக்கொள்ள வேண்டுமென்று அறியாதவர்கள் நாங்கள். தேவையோடிருப்போரையும், உம் அன்புக்கு எதிர் நோக்கியிருப்போரையும் உம் திருமுன் கொண்டு வருகிறோம். நாங்கள் முறைப்படி வேண்டிக்கொள்ளவும், உம் அருளாலும், உம் அன்பினாலும் நிரப்பப்படவும் அருள் தர வேண்டுமென்று எல்லாவற்றையும் அருளும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாய் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.*

*60. 01Þ12Þ2013 ADVENT SUNDAY : THE GOSPEL OFTHER KINGDOM*

*அருளும் ஆற்றலும் நிறைந்த கடவுளே! உமது அரசின் நற்செய்தியை அனுப்பி நாங்கள் அதை சொந்தமாக்கியருளும் பேரின்பத்தைத் தந்துதுள்ளீரே! இவ்வுலகில் நாங்கள் உமது அரசின் பங்காளர்களாகக் காணப்பட உமது பேரருளையும், உமது நிலையான அரசின் நம்பிக்கையையும் தந்தருள வேண்டுமென்று எக்காலமும் உம்மோடு வாழ்ந்து ஆட்சிபுரியும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.*

இறைவேண்டல் இறைவனைச் சார்ந்து, விசுவாசத்தோடு அவரைப் பின்பற்றி செல்லும் விசுவாசியின் இயல்பான நிலை. இறைவேண்டல் மனிதர்களுக்கும் இறைவனுக்கும் இடையே உறவு, ஐக்கியம் வளர உதவி செய்கின்றது. இறைவேண்டலில் Adoration (போற்றுதல்), Confession (பிழை உணர்தல், பாவ அறிக்கை, நன்றி

நவிலல்), Supplication ஆகியன இன்றியமையாதவை. நம்முடைய இறைவேண்டல் எப்படி அமைய வேண்டுமென்பதற்கு இறைமகன் இயேசு கற்றுத்தந்த இறைவேண்டலே நமக்கு மாதிரியாகும்.

எங்கே இறைவேண்டல் செய்வது? எப்போது இறைவேண்டல் ஏறெடுப்பது? எச்சூழலிலும், எந்நிலையிலும், எக்காலமும் மன்றாட வேண்டும். "என்னிடம் மன்றாடு; உனக்கு நான் செவி சாய்ப்பேன்" (எரே. 33 : 3) இறைவன் நம்மை மன்றாட அழைக்கின்றார். மன்றாட்டில் நாம் தனித்தும், சபையாக இணைந்தும் ஜெபிக்க இறைவன் அழைக்கின்றார். தொடக்கத் திருச்சபை துன்பத் தழலின் நடுவே அவர்கள் மேல் வீட்டாறையிலும் இல்லங்கள் தோறும் இணைந்து ஒருவருக்காக ஒருவர் வேண்டுதல் செய்தனர். இறைமகன் இயேசு பாலைநிலத்தில், மலையில், தனிமையாகவும், சீடர்களோடு இணைந்தும் மன்றாடினார் (மத். 14 : 23, மாற். 6 : 46, லூக். 5 : 16, 22 : 41). தொடக்க காலத் திருச்சபையினர் இணைந்து மன்றாடினர் (திப. 2 : 1, 2; 2 : 42, 3 : 23-31). அன்னாள் ஆலயத்தில் மன்றாடினாள். தானியேலும் நண்பர்களும் அந்நிய தேசத்திலும் மன்றாடினார்கள். நாம் தனித்தும் இணைந்தும் வேண்டுதல் செய்ய வேண்டும். திருச்சபையில் விசுவாசிகளாக ஒரு மனதுடன் கூடி ஜெபிப்பது நலம். எப்படி இறைவேண்டல் செய்ய வேண்டும்? இறைமகன் இயேசுவின் இறைவேண்டலே நமக்கு மாதிரி, வீண் வார்த்தைகளைத் தவிர்த்து, உள்ளம் இறைவனோடு ஒன்றித்திருக்கும் நிலை வெளிப்பட வேண்டும்.

**1. இறைவனிடம் மன்றாடுங்கள்**

நாம் வாழும் காலம் மனிதர்களிடம் மன்றாட மக்கள் கூட்டம் கூட்டமாகப் போகும் காலம். ஆனால் இறைவனோடு மன்றாட நேரமில்லாமல் நிற்கும் காலம். இறைவனோடு மன்றாடுவது நண்பர்களோடு பேசுவது போன்று அமைய வேண்டும். மனம் விட்டுப் பேசவேண்டும், இறைவனும் நம்மோடு பேச நாம் இடம் தரவேண்டும். (வி.ப. 33 : 11) ஒருவன் தன் தோழனோடு பேசுவது போன்ற உறவு நிலை மோசேக்கும் ஆண்டவருக்குமிடையில் இருந்தது. ஆபிரகாம் கடவுளின் நண்பர் என்று பெயர் பெற்றார் (யாக். 2 : 23). இறைவனுக்கும் மனிதர்களுக்கும் உள்ள உறவு நிலை தகப்பன் -மகன், மேய்ப்பன்-மந்தை, கணவன்-மனைவி எனப் பல உருவகங்களில் திருமறை காட்டுகின்றது. இத்தகைய உறவு நிலை மன்றாட்டில் வெளிப்பட





**2. அயலருக்காக மன்றாடுங்கள்**

நமக்காக, நம்முடைய தேவைகளுக்காக, எனக்காக, என் குடும்பத்திற்காக வேண்டுவது அனைவருக்கும் மகிழ்ச்சியே. ஆனால் இறைவிருப்பம் சுயநலத்திற்காய் வேண்டுவதில் இல்லை. இஸ்ரயேலர் பாபிலோனில் அடிமைகளாக வாழ்கின்றனர். விடுதலை கிடைக்குமா? என்ற இதய ஏக்கத்தோடு நிற்கின்றனர். போலி இறைவாக்கினர்கள் விரைவில் பாபிலோன் வீழ்ச்சியடையும் என்று மாயையான செய்தியைக் கூறுகின்றனர். எரேமியா இறைவாக்கினரோ "உங்களை எந்த நகருக்கு நான் நாடு கடத்தியுள்ளேனோ அந்த நகரின் நல்வாழ்வைத் தேடுங்கள்; அந்நகருக்காக ஆண்டவரிடம் மன்றாடுங்கள். ஏனெனில் அதன் நல் வாழ்வில்தான் உங்கள் நல்வாழ்வும் அடங்கியிருக்கிறது" (எரே. 29 : 7). எரேமியாவின் செய்தி துன்படுத்துகிறவனோடு இனிமையான உறவு, அடிமைப்படுத்தியவனோடு நல்லுறவு, சத்துருவோடு நட்பு, பகைத்தவனுக்கு நன்மை (மத். 5 : 44).

**3. இறை சித்தம் அறிய மன்றாடுங்கள்**

இவ்வுலகில் ஜெபித்தால் கடன் தீரும், வியாதி மறையும், வேதனை தீரும், கட்டுகள் உடையுமென்று மலிவுச் செய்திகள் நிறைந்திருக்கும் காலம். 5 அப்பங்களையும் 2 மீன்களையும் கொண்டு அநேகமாயிரம் மக்களுக்கு உணவளித்தார் இறைமகன் இயேசு. வயிறார உண்டனர், அகமகிழந்தனர் தொடர்ந்து ஜீவ அப்பம் நானே என்னைப் பின்பற்றுங்கள் என்றார். இது கடினமான போதனை என்று ஆண்டவரை விட்டுப் பின்வாங்கினார்கள் (யோவா 6 : 66). உணவு, உடை, உயர்வு, வேலை, கல்வி செழிப்பு போன்றவைகளை மட்டுமே மையப்படுத்தி இறைவேண்டல் ஏறெடுப்பது ஏற்புடையதன்று. ஆண்டவரின் சித்தம் எது என்பதை அறிய மன்றாடவேண்டும். நம்முடைய வேண்டுதல்களில் பெரும்பாலும் ஆண்டவர் பேசுவதற்கும் அவர் சித்தமறிதவற்கும் இடமளிப்பதில்லை. மாறாக நம்முடைய கோரிக்கைகளைச் சொல்லியே முடித்துவிடுவோம். கெத்சமனே தோட்டத்தில் "உம் சித்தப்படியே ஆகக்கடவது?" (மத். 26 : 42-43) என்ற அர்ப்பணித்த இறைமகன் இயேசுவின் சிந்தை நம்முடைய மன்றாட்டுகளிலும் வெளிப்படட்டும்.

**அருள்திரு. C. கில்டன் தயானந்த்**

# வருகையின் கால அருளுரைகள்

| 01-12-2013 | கிறிஸ்துப் பிறப்புக்கு முன்வரும் நான்காம் ஞாயிறு |
|---|---|

| | | |
|---|---|---|
| எசா 5 : 8 -12 | **வருகையின் ஞாயிறு** | பிலி 1 : 12 - 26 |
| திபா. 68 : 11 - 20 | | மத் 4 :12 - 17 |

## இறையரசின் நற்செய்தி

The Gospel of the Kingdom

"நான் என்னுயிரைக் கையில் வைத்துள்ளேன். ஆயினும், உம் திருச்சட்டத்தை நான் மறவேன்". தி.பா. 119 : 109

**இறைவேண்டல்**

*அருளும் ஆற்றலும் நிறைந்த கடவுளே! உமது அரசின் நற்செய்தியை அனுப்பி நாங்கள் அதை சொந்தமாக்கியருளும் பேரின்பத்தைத் தந்துதுள்ளீரே! இவ்வுலகில் நாங்கள் உமது அரசின் பங்காளர்களாகக் காணப்பட உமது பேரருளையும், உமது நிலையான அரசின் நம்பிக்கையையும் தந்தருள வேண்டுமென்று எக்காலமும் உம்மோடு வாழ்ந்து ஆட்சிபுரியும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.*

ஒரு மனிதனுக்கு வாழ்க்கை என்பது மிகவும் முக்கியமானது. அந்த வாழ்க்கை FB மேயர் என்பவர்களின் கூற்றுப்படி ஒரு வியாபாரியைப் பொறுத்தமட்டில் செல்வமும், ஒரு மாணவருக்குப் படிப்பும், ஓர் அடிமைக்கு உழைப்பும், ஒரு தத்துவ ஞானிக்கு ஞானமும், ஒரு போர் வீரனுக்கு யுத்தத்தில் வெற்றியும், ஒரு பேரரசனுக்கு சாம்ராஜ்யமும் ஆகும். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் ஆண்டவர் இயேசு நாதர், ஒரு புதிய வாழ்வைக் குறித்து இவ்வுலகில் அறிமுகம் செய்தார். அது இறைவனின் உலகம், மனம் திரும்புவோருக்கு மாத்திரமே அவ்வுலக வாழ்வு சொந்தம். எனவே மனம்திரும்பி நற்செய்தியை விசுவாசியுங்கள் என்றார். (மாற். 1 : 15). புனித பவுலடிகளார் அந்த நற்செய்தியைக் குறித்துச் சொல்லும்போது அந்த இறையரசு புசிப்பும் குடிப்பும் அல்ல அது நீதியும் சமாதானமும் நிறைந்த வாழ்வு என்று பிற்காலத்தில் போதித்தார் (ரோ 14 : 17)





இந்த வாழ்வு சென்ற நூற்றாண்டுகளில் நம் நாட்டிலும் அயல் நாடுகளிலும் பலரை உத்தமராக்கியது. பலரை புனிதர்களாக்கியது (உதா, புனித அகஸ்டின், புனித அல்போன்ஸா, புனித அன்னைதெரசா) பலரை அருட்பணியாளர்களாக்கியது. (பேராயர் அசரியா, அருள்திரு. றிங்கல் தௌபே) பலருக்கு வாழ்வை குறித்த நேர் கொண்ட புதிய கண்ணோட்டங்களைத் தந்தது. சுருங்கக்கூறின் இறையரசின் நற்செய்தி என்பது கிறிஸ்துவில் உண்டாகும் புதிய வாழ்வு தான் அந்த நற்செய்தி. இறையரசின் நற்செய்தியின் மூன்று அம்சங்களைக் குறித்து நாம் இவ்வேளையில் சிந்திப்போம்.

### 1. அமைதி இறையரசின் உட்கருத்து

யூதாவின் இராஜ சிங்கமாகிய ஆண்டவர் இயேசுநாதர் கலிலேயாவினின்று தாழ்மையின் எக்காளத்துடன் தன் அருட்பணியில் பிரவேசித்தார். அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர் (மத் 5 : 9 ) என இறையரசின் செய்தியை முழங்கினார். இயேசு தன் பிற்பிலிருந்து இறப்பு வரையிலும் தன் வாழ்விலிருந்து பிறர் தன்னைக் கடவுளின் மைந்தன் என அறிய முன்மாதிரியான வாழ்வு வாழ்ந்தார். இயேசு பிறந்த போது ஏரோது இராஜா இரண்டு வயதுட்குட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொன்று, பீதி ஏற்படுத்தும் வேளையில் இயேசுவின் உள்ளம் அமைதியை அடைய தேவதூதர் இயேசுவின் பெற்றோரிடம் இயேசுவைக் கொண்டு எகிப்துக்குச் செல்ல ஆலோசனை கூறினார். (மத் 2 : 13 ) தீய ஆவியின் சோதனையில் வெற்றிப்பெற்றபின் அருட்பணியில் பிரவேசிக்கும்போது முழுக்கு முனிவர் யோவான் காவலில் வைக்கப்பட்டதை அறிந்த போது ஒரு கலவரப்பாதையை ஏற்று யூதாவிலேயே வாழும்படி இயேசுநாதர் விரும்பாமல் கப்பர்நகூமுக்குச் சென்று வாசம் பண்ணினார். (மத் 4 : 12-13). பிறருக்கு நன்மை செய்யும் வேளையில் ஏற்பட்ட வன்முறையான சூழலிலும் அமைதியாகவே நடந்து கொண்டார். (மத் 8 : 34, 12 : 14-15) சிலுவையில் தொங்கும் வேளையிலும் தான் தேவ மைந்தன் என விளங்கச் செய்ய தன் தெய்வீக அதிகாரத்தைப் பயன்படுத்தி தப்பிச்செல்ல முயலாமல் சாந்தமாய்ச் சிலுவையை ஏற்றார் (மத் : 26 : 53) பிற்காலத்தில் புனித பவுல், பேதுரு, அப்போஸ்தலர், போன்றோர் இயேசுவின் அமைதியான நடக்கையை குறித்து சாட்சி பகர்ந்தனர் (பிலி. 1 : 8, 1 பேதுரு. 2 : 23 )

ஆத்மிக வாழ்வு அல்லது பாதை அது கலவரப் பாதையல்ல அது அமைதியின் பாதை. இங்கு உலகின் எல்லாத்துறைகளிலும்

சாந்தத்தையும் அமைதியையும் குறித்து எழுதியும், பேசியும், கற்பிக்கின்றவர்களில் கூட சிலர் கூட அதற்கு எதிரான முறைகளை பின்பற்றுகின்றனர். அமைதியாய் இறையரசின் பண்பாகக் கற்றுத்தந்து அதன்படி வாழ்ந்த இயேசுநாதர் நம்மையும் அதன்படி வாழ அறைகூவல் விடுக்கின்றார்.

## 2. ஒளியாயிருத்தல் இறையரசின் செயல்பாடு

நற்செய்தியாளர் யோவான் இயேசுவை உலகின் மெய்யான ஒளியாக முன் நிறுத்துகிறார் (யோ. 1 : 9 ). இயேசுவும் நான் உலகிற்கு ஒளி என்றார் (யோ. 8 : 12). இயேசுவோ, அவரைப் பின்பற்றுபவரும் உலகிற்கு ஒளி என்றார் (மத். 5 : 14). இயேசு அறிவித்த இறையரசின் நற்செய்தியின் ஒளியில் அனுதினம் வாழ்வோர் விளக்குத்தண்டின் மேல் ஏற்றப்பட்ட விளக்கு போன்றவர்கள் இவர்களைச் சுற்றிலும் ஒன்றும் மறைந்திருக்க முடியாது. இவர்கள் குன்றின் மேலிட்ட விளக்கைப் போன்று காணப்படுவதால் இவர்களிலிருக்கும் ஒளியால் ஒளியால் அருகாமையிலிருக்கும் நகரங்களும் கிராமங்களும் ஒளிபெற முடியும். வெளிச்சமிருக்குமிடத்தில் பாதை தெளிவாகவே, காணப்படும் (மத். 5 : 15). அந்த ஒளி ஞானிகளின் தடுமாற்றத்தில் தெளிவான பாதை காட்டியது (மத். 2 : 9). கடற்பணியாளருக்குத் தெளிவான பாதையைக் காட்டுவது கலங்கரை விளக்கம். அந்த ஒளி இருக்குமிடத்தில் தடுமாற்றமிராது. மாறாக மகிழ்ச்சியும் நம்பிக்கையுமாயிருக்கும்.

ஆபிரகாம் லிங்கன் வாழ்ந்த இல்லத்தின் அருகாமையினூடே ஒரு தாயும் மகளும் ஒரு மாலை வேளையில் நடந்து சென்றுக்கொண்டிருந்தனர். அவ்வேளையில் இதுதான் ஆபிரகாம் லிங்கனின் வீடு என்று அந்தத் தாய் தன் மகளிடம் கூறினார். கறுப்பின மக்களுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்ததால் ஒரு துஷ்டனின் துப்பாக்கி அவரின் உயிரைப்பறித்த துயர நிகழ்வை அந்தத் தாய் தன் மகளுக்கு விளக்கினாள் அவ்வேளையில், லிங்கனின் வீட்டில் எரிந்துக்கொண்டிருக்கும் தீபத்தைப் பார்த்து மகள் தன் தாயிடம் லிங்கன் இவ்வுலகை விட்டுச் செல்லும்போது ஏன் அவர் வீட்டு விளக்கை அணைக்காமலேயே சென்று விட்டார்? என்று கேட்டாள் இது பொருள் மிகுந்த கேள்வியாகும். அதற்குத் தாய் ஆபிரகாம் லிங்கன் நம்மை விட்டுச் சென்றாலும் அவர் கறுப்பினர் மக்களுக்கு வழங்கிய விடுதலை விளக்காய் எரிந்துக்கொண்டிருக்கிறது. அதுபோல கிறிஸ்தவம் விடுதலையின் வாழ்வின் விளக்காக எரிந்துக்கொண்டிருக்கிறது. அது அணைவதில்லை.

அருள்திரு. **சேம் இம்மானுவேல் தோமஸ்**



**08-12-2013** கிறிஸ்துப் பிறப்புக்கு முன்வரும் மூன்றாம் ஞாயிறு

இச. 18 : 9-22 I பேதுரு 1 : 10-12

திபா. 119 : 105-112 யோவா. 1 : 14-34

## கடவுளின் வார்த்தை : உலகின் நல் எதிர்பார்ப்பு

The word of God : Hope for the world

"நான் என்னுயிரைக் கையில் வைத்துள்ளேன். ஆயினும், உம் திருச்சட்டத்தை நான் மறவேன்". தி.பா. 119 : 109

**இறைவேண்டல்**

*தம்மை வெளிப்படுத்தும் திருவாக்கை எங்களுக்கு அருள் செய்த எங்கள் கடவுளே! நம்பிக்கையின் அடித்தளமாம் உமது திருவாக்கை நாங்கள் ஏற்றுக்கொள்ளவும், உமது திருவாக்கு மூலமாய் உமது உடனிருத்தலை அறிந்து உணரவும், பற்றுமையில் உம்மோடு இணைந்து வாழவும், நிலை வாழ்வுக்குரிய நம்பிக்கையால் வாழ்ந்திருக்கவும் அருள் வழங்கிட வேண்டுமென்று தொடக்க முதல் இருந்த வாக்காகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

திருச்சட்டத்தின் மேல் திருப்பாடலாசிரியருக்கு இருந்த அளவற்ற விருப்பத்தின் வெளிப்பாடே 119-ஆம் திருப்பாடல். என் உயிரினும் மேலாகக் கடவுளின் வார்த்தையை நேசிக்கிறேன், அதுவே என் வாழ்வின் நம்பிக்கை எனத் திருப்பாடலாசிரியர் அறிக்கையிடுகிறார்.

யோவான் முதலாம் அதிகாரத்தைப் படிக்கும்போது வார்த்தை மாம்சமானது. இது இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்டது. அவரில் நம்பிக்கை வைக்கின்ற எவரையும் பிரகாசிக்கச் செய்கின்றார் என உறுதியாகக் கூறுகிறது.

நம்பிக்கையற்று, வாழ்வு இழந்து நின்ற மக்களுக்குக் கடவுளின் வார்த்தை நம்பிக்கையின் வார்த்தையானது. இன்றைய உலக வாழ்வில் இயேசுவே நம்பிக்கையாய் இருக்கிறார். ஆகவே, கடவுளின் வார்த்தையைக் குறித்த அறிவு நமக்குத் தேவை.

இறைவாக்கு குறித்த அறிவின்மை ஆபத்தானது (மத். 22 : 29). இறைவாக்கு ஆவிக்குரிய வளர்ச்சியை உருவாக்குகிறது (எபே. 4 : 15)

மட்டுமல்ல இறைவாக்கால் நாம் புதுப்பிக்கப்படுகிறோம் (எபேசி. 2 : 13-18). மேலும் இறைவாக்குத் தீமையை எதிர்க்கும் ஆயுதம் என்றும் (எரே. 5 : 14), சம்மட்டி (எரே. 23 : 29) பாதுகாப்பு வாள் (எபே. 6 : 17) எனவும் திருமறை தெளிவாகக் குறிப்பிடுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக புல் உலர்ந்துபோம், பூ வதங்கி விழும். நம் ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும். (எசா. 40 : 8; மத். 24 : 35).

"நம்பிக்கையை" குறித்து சில உண்மைகளை தியானிப்போம்.

**1. நம்பிக்கை : புதுப்பிறப்பினைத் தருகிறது**

இயேசு கிறிஸ்து இறந்தோரிலிருந்து எழுந்ததினாலே உயிருள்ள நன்னம்பிக்கையுண்டாகும்படி அவர் நம்மை மறுபடியும் பிறப்பித்தார் (1 பேது 1: 4). கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் கடவுளின் மிகப்பெரிய செயலாகும். நமது பற்றுறுதிக்கும், நன்னம்பிக்கைக்கும் அடிப்படை இதுவே. கிறிஸ்துவே நமது நம்பிக்கையாயிருக்கிறார். உடல் உயிர்த்தெழுதலே கிறிஸ்தவ நம்பிக்கையின் செய்தியாகும் (1 தெச. 4 : 13). ஆகவே தான் மரணம் வாழ்வின் முடிவல்ல. புது வாழ்வுக்குச் செல்லும் வாசல் என்று குறிப்பிடுகிறோம். மேலும் கடவுளின் மாட்சிமையை நாம் அடைவோமென்கிற நம்பிக்கை நமக்குண்டு. 1 கொரி. 15 : 19-இன் படி இந்த உலகத்திற்குரியவைகளுக்காக மட்டும் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லாரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்.

தூய பவுலார் தமது நிருபத்தில் இயேசு உயிர்த்தெழாவிட்டால் நமது பிரசங்கம் வீணாயிருக்கும் எனக் கூறுகிறார். ஆகவே, நமது நம்பிக்கை கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் அடிப்படையில் அமைகிறது. அதுவே புதுப் பிறப்பினை நமக்குத் தருகிறது.

**2. புது வாழ்வை தருகிறது** (யோவா. 1 : 29)

பாவத்தின் கடினத்தில் மானிடம் அனுபவித்த துன்பத்தை, துயரத்தைத் துடைத்து வாழ்வு தரும் கடவுளின் ஆட்டுக்குட்டியாக இயேசுவை அடையாளப்படுத்துகிறார். ஆகவே தான் இறைவனுடைய அன்பு நம்முடைய இருதயங்களில் தூய ஆவியாரால் அருளப்பட்டிருக்கிறது (ரோம. 5 : 5). ஆகவே, நாம் வெட்கப்பட்டுப் போவதில்லை. ஏனெனில் பழைய வாழ்வு அகற்றப்பட்டது. பக்தனாகிய யோபுவின் வாழ்வினில் ஏற்பட்ட துன்பங்கள், வியாதிகள், நாசமோசங்கள் மத்தியிலும் நான் நம்பியிருக்கிற கடவுள் என்னை வெட்கப்படுத்தமாட்டார் என்ற உணர்வை அவர் வெளிப்படுத்துவதை யோபுவின் புத்தகத்தில் படிக்கிறோம். மேலும், தானியேலின் நம்பிக்கை





அவரை வெட்கப்படுத்தவில்லை. அவரை நோக்கிப் பார்த்தவர்கள் பிரகாசமடைந்தார்கள். வெட்கப்பட்டுப் போனதில்லை எனத் தாவீது கூறுகிறார். நாமும் கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்தால் வெட்கப்பட்டுப் போவதில்லை. கிறிஸ்தவ நம்பிக்கை கடவுளில் ஒன்றித்திருப்பதில் பெறும் புது வாழ்வின் மேன்மையே.

**3. புது எதிர்நோக்கினை தருகிறது** (1 பேது. 1 : 13)

கிறிஸ்தவ வாழ்வின் நம்பிக்கை இந்த உலகத்திற்குரியவையல்ல. மாறாக, விண்ணுலகு சார்ந்தது. அந்த நிலை வாழ்வுக்குரிய பயணத்திலே நமது நம்பிக்கை ஒன்றிக்கப்பட்டுள்ளது. இந்த எதிர்நோக்கிலே அறிவுத் தெளிவடைந்து செயல்படுதல் வேண்டும். மட்டுமல்ல அதற்காகவே கடந்ததை மறந்துவிட்டு முன்னிருப்பதைக் கண்முன் கொண்டு பரிசு பெற வேண்டிய இலக்கை நோக்கித் தொடர்ந்து ஓடுகிறேன் என்கிறார் பவுலார் (பிலி. 3 : 13, 14). இந்த எதிர்நோக்கினில் ஆயத்தமும் விழிப்பும் வேண்டும். அப்படியெனில் மட்டுமே இலக்கினை அடைய முடியும். சகேயுவின் அநீதியான அணுகுமுறையில் ஏற்பட்ட மாற்றமும் தெளிவும் புது எதிர்நோக்கு உருவாக அதுவே அவனது வாழ்வின் மீட்பின் மகிழ்வினை கொண்டு வருகிறது. (லூக். 19 : 10). அந்த எதிர் நோக்கினில் தான் நாமும் வாழ அழைக்கப்படுகிறோம். நம்பிக்கையே மானிட வாழ்வின் அசைக்க முடியா அடித்தளமாகும். இதில் நாம் பெறும் உறுதியே புது எதிர் நோக்கினைத் தருகிறது.

அன்பர்களே, நெருக்கடியான இந்த உலகச் சூழலில் நாம் சந்திக்கின்ற பலதரப்பட்ட அனுபவங்கள் நமது பற்றுமைக்குச் சவால் விடுகின்றவைகளாகவே இருக்கின்றன. இந்நிலையிலும் நான் நிற்கும் பாறை கிறிஸ்து தான் என்ற உறுதியினில் உலகத்தை வென்றிடுவோம். ஏனெனில் நமது நம்பிக்கையே உலகத்தினை வெற்றிகொள்ளும் ஊக்கியாகும். ஆகவே இறைவாக்கில் ஒன்றித்து நம்பிக்கையுடன் வாழ்வோம். உலகினில் சான்றினை வெளிப்படுத்துவோம்.

**அருள்திரு. R. ராஜபால்**

| 15-12-2013 | கிறிஸ்துப் பிறப்புக்கு முன்வரும் இரண்டாம் ஞாயிறு |
|---|---|

எசா. 11 : 1-9 உரோ. 1 : 1-7

தி.பா. 24 மத். 1 : 18-23

# ஆண்டவர் நம்மோடு : இறையரசு

The Lord among us : relized kingdom

. . . அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர். மத். 1 : 23

**இறைவேண்டல்**

*எங்கள் மீட்பரான கடவுளே! உமது படைப்பாகிய இவ்வுலகில் உமது அரசை நீர் உருவாக்கியிருப்பதற்காக உம்மைத் துதிக்கிறோம். உம் அரசை வெளிப்படுத்தும் திருச்சபையின் திருப்பணிகளில் நாங்கள் பங்கு பெற்று எங்கள் வாழ்வு மூலம் உமக்கு சான்றுபகர ஆற்றல்படுத்த வேண்டுமென்றும், உமது நிலையான ஆளுகையின் திருகாட்சியை எங்களில் அறிவுறுத்த [புகுந்த] வேண்டுமென்றும் முடிவில்லாது என்றென்றும் ஆளுகை செய்யும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

கடவுள் மனிதனாகப் பிறந்த நிகழ்வு உலக வரலாற்றில் நிகழ்ந்த ஒப்புயர்வு உன்னத நிகழ்ச்சி. இது மானிட மீட்புக்காக இறைவன் எடுத்த வெளிப்பாடு. இது எல்லா மனிதர்களாலும் புகழப்பட்ட கடவுளின் இரட்சிப்பின் திட்டம். கடவுள் நம் நடுவில் வந்தது அனைத்துப் படைப்புகளும் சிறப்பாக முழு மானுடமும் இழந்துபோன தெய்வீக உறவை மீண்டும் பெறுவதாக அமைகின்றது. மக்கள் இறைவனைத் தள்ளிவிட்டு வாழ்க்கை நடத்தியபடியால் கடவுள் மனிதனோடு வந்து மக்கள் மத்தியில் தங்கி இருப்பது தேவையாகவே காணப்பட்டது.

மனிதனுடைய எல்லாவித அவபக்திக்கும், அநியாயத்துக்கும் விரோதமாய் தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருப்பதால் மானிடர் இக்கோபாக்கினையைத் தாங்கிக்கொள்ள மாட்டார்கள். ஆகவே அவர்களைக் காப்பதற்காக இயேசு மானிடரானார். ..... அவர்கள் கடவுளை அறிந்திருந்தும் கடவுளுக்குரிய மாட்சியை அவருக்கு அளிக்கவில்லை; நன்றி செலுத்தவுமில்லை. அதற்கு மாறாக அவர்கள் எண்ணங்கள் பயனற்றவையாயின. உணர்வற்ற அவர்களது உள்ளம் இருண்டு போயிற்று. (உரோ. 1 : 18-21) இந்நிலையில் கடவுள் நம்முடன் இருப்பதால்ஏற்படும் நன்மைகள் எனவே எனச் சிந்திப்போம்.





**1) நம்முடன் இருக்கும் ஆண்டவர் இருளை அகற்றி ஒளியாக்குகிறார்** : எசா. 9:2

இயேசுவின் பிறப்பு ஒன்றுதான் வீழ்ந்து போன மானிடத்தை மீண்டும் கிறிஸ்துவின் வெளிச்சமாகிய உறவுக்குள் கொண்டுவரும் முக்கிய நிகழ்ச்சியாகும். கடவுள் தன் பரலோக மகிமையைத் துறந்து தன்னைத்தான் வெறுமையாக்கி, மானிட ரூபம் எடுத்து பூமியில் வந்து மனுக்குலத்தை மீட்கச் சித்தமானார் (பிலி. 2 : 6-11). இருளிலும் அந்தகாரத்திலும் வாழும் மாந்தர்களை இரட்சிக்க இறைவன் மனுவுருவேற்றார். அவர் நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்தார். யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்பு செய்தார். (எசா. 11 : 4). இதனால் காரிருளில் வாழ்ந்தோர் மிகுந்த வெளிச்சத்தைக் கண்டு கொண்டனர்.

**2) நம்முடன் இருக்கும் ஆண்டவர் ஆலோசனை தருகிறார்** : (எசா. 9 : 6)

என்றென்றைக்கும் நான் உங்களோடு இருக்கிறேன் என வாக்கு அருளின இறைவன் தம்முடைய பிறப்பின் ரகசியங்களை ஆழ்ந்து கற்றுக்கொள்ள உதவிசெய்து ஆலோசனை வழங்குகின்றார். ஆலோசனைத் திருப்பணியின் முக்கியத்துவம் உணரப்பட்டு வரும் இக்காலத்தில், உடல், உள்ளம், ஆன்மா சார்ந்த தேவைகளை உடைய மானிடத்துக்கு ஆண்டவர் உடன் இருந்து உதவி செய்கிறார் என்பது உண்மையாகிறது.

ஆலோசனைத் திருப்பணியின் செயல்பாடுகளை மூன்று நிலைகளில் அறிந்துகொள்ள இயலும்.

1. அனுதாபப்படுதல் (Sympathy)
2. அனுதாபப்படுபவருடன் இருத்தல் (Empathy)
3. அனுதாபப்பட்டு அவர் தேவையை நிறைவு செய்தல் (Interpathy)

இயேசு நம்முடன் இருந்து நமக்காகப் பரிதாபப்பட்டார். சோகத்துடன் இருக்கிற தம் மக்களுடனிருந்து உதவிசெய்து உள்ளத்தின் பாரத்தை வெளியே கொண்டு வந்து பிரச்சனையை நீக்குகிறார். இதற்கு எஸ்தரின் நூல் (4 : 1) (Sympathy) விடை தருகிறது.

இலாசருவின் வீட்டில் இயேசு கண்ணீர் வடித்து அழுது ஜெபித்தது (யோவா. 10 : 34). (Empathy) இதற்கு சிறந்த உதாரணமாகும்.மேலும் இயேசு நம்மோடிருந்து தமது அந்தஸ்தை விட்டு இறங்கி வந்து உதவி செய்ததை வெளிப்படுத்துகின்றது. இதுவே அடிமையின் ரூபமெடுத்து மனித சாயலான நிகழ்வு (பிலி. 2 : 7). (Interpathy) இயேசுவின் தாய் மரியாள் கருவுற்றிருக்கும் நிலையில் யோசேப்பு நீதிமானாயிருந்து அவளை இரகசியமாய்த் தள்ளிவிட நினைக்கின்றார். அப்போது கர்த்தருடைய தூதன் யோசேப்பிடம் ....யோசேப்பே, தாவீதின் மகனே, உம் மனைவி மரியாளை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம். ஏனெனில்

அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால் தான் (மத். 1 : 20). எனக்கூறி யோசேப்பைத் திடனடையச் செய்கிறார். நம்மோடிருக்கும் இயேசு பரலோகத்தை விட்டு பூமியில் இறங்கி வந்தவர், நமக்குள்ளே வாசம் செய்கிறவர், தெய்வீகத் தன்மையை, தேவ மகிமையைத் துறந்து, மானிடனாகப் பிறந்தார். அவர் பிறப்பினால் இயேசுவே உலக மீட்பர் என எல்லோரும் அறிந்து கொண்டனர். அவருடைய பிறப்பினால் பாவமான மனுக்குலம் இறைவனோடு உள்ள உறவில் மகிழ்ந்தது. நாமும் கிறிஸ்துவைப் போல, பிறர் வாழ்வடைய உழைப்போம்.

**அருள்திரு. S. ஐசாயா**



**22-12-2013** கிறிஸ்துப் பிறப்புக்கு முன்வரும் முதலாம் ஞாயிறு

மீக். 4 : 1-5 1 யோவா. 4 : 7-21

தி.பா. 126 லூக். 1 : 26-45

# கிறிஸ்து வருகையின் மகிழ்ச்சி

Joy of Christ's Coming

"வானதூதர் மரியாவுக்குத் தோன்றி, அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என்றார். (லூக். 1 : 28).

**இறைவேண்டல்**

*விடுதலையாளராம் எங்கள் கடவுளே! ஆசீர்வதிக்கப்பட்ட கன்னிகை மரியாளை உம் திருமைந்தரின் தாயாக ஆயத்தப்படுத்தியவரே! எங்கள் இரட்சகராம் கிறிஸ்துவாகிய உம் திருமைந்தரின் வருகைக்காக அவர் எதிர் நோக்கியிருந்தது போல நாங்களும் நீதியுள்ள அரசராக வரப்போகும் அவரது வருகையை எதிர்நோக்கியிருக்கும் ஆற்றலைத் தரவும், அவர் வருகையின் மகிழ்வால் எங்கள் உள்ளங்களை நிரப்பவேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.*

மூதாட்டி ஒருவர் பிழைப்புக்காகப் பக்கத்து ஊருக்குச்சென்று உழைத்து வருவதுண்டு. ஒருநாள் பெருஞ்சுமையுடன் மெல்லவே நடந்து தன் வீட்டிற்கு வந்துகொண்டிருந்தார். சாலை மேடு பள்ளமாக இருந்தது. பாட்டி மேட்டில் வந்தவுடன் கொஞ்சங்கூட முன்னேற இயலாமல் சுமையை கீழே இறக்கி வைத்துவிட்டு அமர்ந்திருந்தார். அவ்வழியே வந்த இளைஞர் பாட்டியின் நிலைமையைப் பார்த்து சுமையைத் தானே சுமந்து பாட்டியின் வீட்டிற்கே வந்தார். மகிழ்ச்சியில் ஆழ்ந்து போன பாட்டி இளைஞனுக்கு பிடித்தமான உணவைப் பரிமாறினார். சிலநாள் இப்படியே நடந்தன. ஒருநாள் பாட்டி உங்கள் ஆசை என்ன என்று இளைஞன் கேட்டார். "இந்த நாட்டின் அரசர் என் வீட்டிற்கு வரவேண்டும். அவரை என் வீட்டில் பார்க்கவேண்டும். அவரோடு உரையாட வேண்டும். அவரின் அமுத மொழியினைக் கேட்க வேண்டும். அதுவும் என் கண் துஞ்சுவதற்கு முன்னமே இது நிகழ வேண்டும்" இதுதான் என் அளப்பெரிய ஆசை என்றார் அந்தப் பாட்டி. தன் வேடத்தைக் கலைத்த இளைஞன் "நான் தான் நீங்கள் காண விரும்பும் அரசர்" எனக் கூறவே, அரசரைத் தன் வீட்டில் பார்த்ததில் அளவற்ற மகிழ்ச்சியில் திளைத்து நின்றார் அந்தப் பாட்டி.

பொதுவாக ஒருவருக்கு விருப்பமான பொருளை தொலைவில் கண்டால் மகிழ்ச்சி ஏற்படும். அதே பொருளை சற்று அருகில் பார்த்தாலும் மகிழ்ச்சிவரும். அதை விட அப்பொருளைப் பெற்றுக்கொண்டால் அளவற்ற மகிழ்ச்சி ஏற்படும். எல்லாவற்றிற்கும் மேலாகப் பெற்றுக்கொண்ட பொருளை அனுபவித்து அதை அர்ப்பணிப்பதிலும் எல்லையில்லா மகிழ்ச்சி உண்டாகும். பன்னெடுங்காலமாக மேசியா வருகைக்குக் காத்திருந்த இஸ்ரயேல் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவடையும் பொருட்டுத் தாவீதின் தளிராகக் கிறிஸ்து பிறக்கப் போகிறார் என்னும் செய்தி மரியாளுக்குப் பெருமகிழ்ச்சியாகவே இருந்தது. நம்பிக்கையோடும் விழிப்போடும் இருந்த மக்களுக்கு மரியாளுக்குக் கிடைத்த செய்தி ஆனந்தத்தைத் தந்தது. படைத்தவரே படைப்பாக மாறும் காலம் தான் வருகைக் காலத்தின் முத்தாய்ப்பு. இதனால் கிறிஸ்துவின் வருகையால் ஒட்டுமொத்த படைப்பே மகிழ்கிறது. "மகிழ்ச்சி" அல்லது "மகிழ்தல்" என்ற சொல்லின் கிரேக்கப் பதம் "ஹாரிஸ்" அல்லது "ஹைரேயின்" என்பனவாகும். இச்சொல் 133 முறை புதிய ஏற்பாட்டில் இடம்பெறுகின்றது. இச்சொல் "கேரா" (Chara) என்னும் கிரேக்க வேர்ச்சொல்லிலிருந்து கையாளப்படுகிறது. இது 'Chaos' லிருந்து 'Chara' வில் முடிகிறது. ஒழுங்கற்ற குழப்பத்திலிருந்த உலகைக் கடவுள் தமது ஆற்றல் வழியாக ஒழுங்குபடுத்தியதால் ஏற்பட்ட தெளிவு மகிழ்வில் நிறைவடைகிறது. வானதூதர் மரியாளிடம் தோன்றி "அருள்மிகப் பெற்றவரே வாழ்க" எனக் கூறியவுடனே ஏற்பட்ட கலக்கம் அல்லது குழப்பம் இறுதியில் பெற்ற வாழ்வின் மகிழ்வு பணம், பொருள், பதவி, புகழ், மதிப்பு, கேளிக்கை ஆகியவற்றைத் தாண்டியது என்பதை இந்நிகழ்வு அறிவுறுத்துகிறது. மரியாள் கிறிஸ்துவின் வருகையினால் பெற்ற மகிழ்ச்சியின் வெளியீடுகளை இவண் காண்போம்.

**1) வார்த்தையில் துளிர்ந்த மகிழ்ச்சி** (லூக். 1 : 34-35)

"அதற்கு மரியாள் வானதூதரிடம் இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!" வானதூதர் அவரிடம் "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும்".

நாம் வாழும் இந்த உலகம் கேட்பதைவிட பேசுவதற்கு அதிக முக்கியத்துவம் தருகின்றது. பேசுவதும் கேட்பதும் தகவல் பரிமாற்றத்தின் மிகச் சிறந்த செயலாகும். இச்செயலில் வார்த்தைப் பகிர்வு ஊடகமாகிறது. வார்த்தைப்பகிர்வு ஒருவரது உணர்வுகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்தித் தன்னிடம் உள்ள ஐயப்பாட்டைத் தவிர்க்க உதவுகிறது. இதனால் சந்தேகத்திற்கு நல்ல தீர்வு கிடைக்கிறது. வார்த்தையின் வலிமையால் வாழ்ந்தவர்களும் உண்டு வழி தவறி வீழ்ந்தவர்களும் உண்டு. (தொ.நூ. 8 : 10, 2 அர. 7 : 2; 19-20) உண்மைகளின் அழுத்தங்களால் துளிராத பேச்சுகள் வெறும் வார்த்தைக் குப்பைகளாகவே வந்து விழும். பாத்திரத்தில் விரிசல் இருக்கிறதா? இல்லையா? என்பதை அதன் ஓசைக் காட்டிவிடும். அதுபோல் அறிவாளியா? அறிவிலியா? என்பதை அவன் வார்த்தை வெளிப்படுத்திவிடும் என்பர் ஆன்றோர்.





திருமணத்திற்குமுன் கருவுற்று குழந்தையொன்றை ஈன்றெடுப்பாய் எனக்கூறிய வானதூதரிடம் இது எப்படியாகும்? எனக்கூறியகூற்று மரியாள் ஒரு சிறந்த அறிவாளி என்பதையே காட்டுகிறது. முடியாது என்று முற்றுப்புள்ளி வைப்பதைவிட, முடியும் என்ற நம்பிக்கையில் எழுப்பிய ஐய வினாதான் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இந்த வார்த்தைப் பகிர்வு ஒரு நல்ல தொடக்கமாக வானதூதருக்குத் தோன்றியது. கடவுளால் கூடாதது ஒன்றும் இல்லை எனவும் மனிதனால் இயலாதது கடவுளால் ஆகும் எனக்கூறும் மறை வாக்கிற்கேற்ப (லூக்கா 1 : 37). ஆண்களின் அராஜகத்தில் பாதிக்கப்பட்ட யூதப் பெண் சமுதாயத்திற்குப் பதில் மொழியாக ஆணின் ஈடுபாட்டை முற்றிலுமாகத் தவிர்த்து புதுப்படைப்பாக இயேசுவை மரியாளுக்கு இறைவன் தருகிறார். இதில் எழுந்த மகிழ்ச்சி வார்த்தைப் பகிர்வில் துளிர்ந்த மகிழ்ச்சியாகும். நாமும் நமது நம்பிக்கை நிறைந்த வார்த்தைப் பகிர்வில் நலமான மகிழ்ச்சியைப் பெறுவோம்.

**2) வாழ்த்தில் தளிர்ந்த மகிழ்ச்சி** (லூக். 1 : 39-40)

"அதன்பின் மரியா புறப்பட்டு யூதேயா மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார். அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார்".

மாணவன் ஒருவன் தன் ஆசிரியரிடம் டீச்சர், நீங்கள் ஆயிரம் அன்னையர்க்குச் சமம் என்றான். அந்த வாழ்த்தில் மகிழ்ந்துபோன ஆசிரியரின் மகிழ்வு நீடிக்கவில்லை, காரணம் அடுத்த வினாடியில் அதே மாணவன் அவரிடம் வீட்டில் ஒரு தாய் ஒரே நேரத்தில் ஒரு குழந்தையைத்தான் தூங்கவைப்பார், ஆனால் நீங்கள் ஒரே நேரத்தில் நாற்பது மாணவர்களை தூங்க வைக்கிறீர்கள் என்றான். ஆசிரியர் அயர்ந்து போனார். இன்று மனதாரப் பாராட்டும் பழக்கம் குறைந்த வண்ணம் உள்ளது. வாழ்த்துக்கூறுதல் அல்லது வாழ்த்திப் பேசுதல் என்பது மற்றவர் எந்த அளவிற்கு நமக்கு நிறைவாகச் செய்திருக்கிறார் என்பதைப் பொறுத்து அல்ல, நாம் எந்த அளவிற்கு நிறைவான மனப்பக்குவம் உள்ளவர் என்பதை பொறுத்ததாகும். மனப்பக்குவம் பெற்றபின் வாழ்த்தும் வாழ்த்து வஞ்சனையற்றதாகவே இருக்கும்.

தன் இனத்தாளாகிய எலிசபெத் கருவுற்றிருக்கிறாள் என்ற செய்தி கிடைத்தவுடன் மரியாள் இடிந்துபோகவில்லை. மலடியாக இருக்கட்டுமே என்றும் நினைக்கவில்லை. மனநிறைவோடு மலை நாட்டின் எப்ரோனுக்கு சுமார் 120 மைல் தூரம் நடந்தே சென்று எலிசபெத்தை வாழ்த்தினாள் (லூக். 1 : 39, 40). இந்த வாழ்த்து வஞ்சனையற்றதாயிருந்தது. எலிசபெத்தின் கருவறையில் இருந்த குழந்தையும் களிப்பாய்த் துள்ளிற்று. மரியாளின் மகிழ்ச்சி எலிசபெத்தின் வயிற்றின் உயிரிலும் கலந்தது (1 : 41). எலிசபெத்தின் உணர்விலும் நிறைந்தது. ஆவியாரின் நிழலில் மரியாள் நிற்பதுபோல் எலிசபெத்தும் ஆவியின்

அருள்பெறுகிறாள். வாழ்த்து பரஸ்பர அருள்கொடைகளை பெற வழிவகுத்ததோடு ஒருவரையொருவர் வாழ்த்தவும் அடிகோலியது. எலிசபெத்திடம் இறங்கிப்போகும் மனப்பாங்கு தாமாக முன்வந்து வாழ்த்த வந்த மரியாளின் மனவெளிச்சத்தைப் படம்பிடிக்கிறது. இன்றளவும் இந்த வாழ்த்து நிலைபெறுவதுபோல் மனம் நிறைந்த வாழ்த்து என்றென்றும் நமக்கு அன்பை வளர்த்தும், பண்பைத் தக்கவைக்கும், ஒப்புரவைத்தரும் கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்க்கும் நமக்கு மகிழ்ச்சி வாழ்த்தில் தளிரட்டும்.

**3) வாழ்வில் நிறைந்த மகிழ்ச்சி** (லூக். 1 : 56)

“மரியா ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தோடு தங்கியிருந்தபின்பு தம் வீடு திரும்பினார்”

தீபெத்து துறவி ஒருவர் கண் வலியால் துடிதுடித்தார். சீடர்கள் அவரை மருத்துவரிடம் அழைத்து வந்தனர். நன்கு பரிசோதித்த பின்னர், கண் வலி குணமாக வேண்டுமென்றால் துறவி எப்போதும் அழுவதை நிறுத்த வேண்டும் என்றார் மருத்துவர். உணவு, உடை, உறைவிடம் இல்லாமல் ஆயிரக்கணக்கான மக்களை அன்றாடம் நான் பார்க்கும் போது என் கண்களிலிருந்து கண்ணீர் துளிகள் துளிர்ந்த வண்ணம் நிகழ்வது இயல்பல்லவா? எனத் துறவி மறுமொழி கூறினார். தனக்காக வாழ்வோரும் உண்டு பிறருக்காக வாழ விழைவோருமுண்டு. அடுத்தவர் வாழ்வில் அக்கறையோடு இருப்போரின் வாழ்வே பொருள் பொதிந்தது (லூக். 10:34,35).

மரியாள் எலிசபெத்தின் பேறுகால உதவியில் பங்கெடுக்க எண்ணி மூன்று மாதம் தங்குகிறாள். எலிசபெத்தின் இன்பதுன்ப நிகழ்வில் தன்னை இணைக்கிறாள். அவளின் தேவையை அறிந்து உள்ளன்போடு அக்கறை கொள்கிறாள். ஒருமனதாயிருந்து மகிழ்ச்சியில் நிறைவடைகின்றனர். மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுதல் அம்மகிழ்ச்சியை இருமடங்காக்கும்; துன்பத்தை பகிர்ந்து கொள்வதில் அத்துன்பத்தை அரைமடங்காக்கும் என்ற பழமொழியைப் போல மகிழ்ச்சிப்பகிர்வில் நிறைவடைந்தனர். பிறர் நலனில் நமது பங்களிப்பு வாழ்வின் இணையற்ற மகிழ்ச்சியைத்தரும். தூய பவுல் தெசலோனிக்கருக்கு எழுதும் போது “...... உங்களால் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம் என்கிறார்” (1 தெச. 3 : 8-9). பொருளாதார இழப்பில், சமூகப் புறக்கணிப்பு சமய அடிப்படைவாதத்தில், இயற்கைப் பேரிடரில் நாம் பிறருக்கு மகிழ்ச்சியாக இருக்க கிறிஸ்துவின் வருகை நம்மை அழைக்கிறது.

ஆதரவற்ற மக்கள் மத்தியில் ஆறுதலான வார்த்தையில் உடன் வாழ்வோரில் காணும் திறன்களை வாழ்த்தி வறியோரின் வாழ்வில் நம்மை இணைத்து சான்றொழுக முற்படுவோமாயின் மகிழ்ச்சியின் ஊற்றாம் கிறிஸ்துவின் மகிழ்ச்சியில் துளிர்ந்து, தளிர்ந்து நிறைய கனிகொடுப்போம்.

**அருள்திரு. S. வில்சன்**



| 24-12-2013 | **Christmas Eve** |
|---|---|

தொ நூ. 18 : 1-15 பிலிப். 2 : 5-11
திபா. 95 : 1-7 லூக். 2 : 1-14

# தாழ்மை : தம்மையே வெறுமையாக்கும் கிறிஸ்து

Humility : Self-Emptying of Christ

. . . தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். (பிலிப். 2 : 7)

**இறைவேண்டல்**

*என்றென்றும் வாழும் கடவுளே! இத்தூய இரவினை உம் மாட்சிமையின் ஒளியாய் ஒளிரச் செய்தவரே! உமது திருமைந்தரின் வருகையின் ஆசி பெற்ற நாங்கள். அவர் தம்மை வெறுமையாக்கியதன் வழியாய் விண்ணக மாட்சியை வெளிப்படுத்தியதை உணரவும், அதைகர்ணவும் உமது பேரருளைத் தர வேண்டுமென்று தம்மை வெறுமையாக்கி உலகில் வந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாய் வேண்டுகிறோம். ஆமென்.*

பெருமதிப்பினைப் பெற்றிருந்த திருச்சபைகள் பிரிந்து நிற்பது பவுலடியாரின் உள்ளத்திற்கு வேதனையைத் தந்தது. திருச்சபையில் உயர்வு தாழ்வு எண்ணங்கள் விசுவாசிகளுக்குள் எழுந்தன. இவ்வெண்ணம் கொண்டோரை உயர்வடையச் செய்வதற்காகவே இயேசு கிறிஸ்துவின் தாழ்மைப்பண்பை முன்னிறுத்தி இதனை எழுதுகிறார். திருமறையில் தாழ்மை வீண் ஆடம்பரத்திற்கு எதிரான தன்னடக்கத்தையே குறிக்கிறது. எவ்வித போலித்தனமுமின்றி தன்னடக்கமுள்ளவன் தன்னையே ஒரு அறிவாளி எனக் கருதுவதில்லை. (திபா. 131 : 1; உரோ. 12 : 3,16). தாழ்மை தற்பெருமைக்கு எதிரானது. தாழ்மையுள்ளவன் தன்னிடமுள்ள எல்லாமே இறைவனிடமிருந்து பெற்றவை என்ற உண்மையை உணருகிறான் ( 1 கொரி. 4 : 7). புதிய ஏற்பாட்டு காலத்திற்கு முன்னால் தாழ்மை (Humility) என்ற சொல்லுக்கு ஆழ்ந்த பொருள் இருந்ததில்லை. கிரேக்க அறநெறிப் போதனையாளர்கள் தாழ்மையைத் தாழ்வாகவே எண்ணி வந்தனர். இயேசு கிறிஸ்துவே அதனை உயர்ந்த பண்பாக மாற்றுகிறார். எவ்வித ஒப்புமைக்கும் அப்பாற்பட்ட ஆழமான தாழ்மையே இயேசுவினுடையது. உலகை, மனுக்குலத்தை மீட்பதற்காகவே அவர் தம்மையே தாழ்த்தி வெறுமையாக்கினார். இயேசுவின் தாழ்மை உணர்த்தும் உண்மையை சிந்திப்போம்.

## 1. உறவுக்குத் துணையாகும் தாழ்மை

யூதப் பாரம்பரியத்திற்குள்ளே ஏற்றத்தாழ்வுகளும், வேறுபாடுகளும் மலிந்து காணப்பட்டன. சமயத்திலும் சமூகத்திலும் உயர்ந்து நின்ற ஏற்றத்தாழ்வுகள் மனித உறவுகளைச் சிதைத்து நின்றன. யூதர், யூதரல்லாதோர், கற்றோர் கல்லாதோர், செல்வந்தர் ஏழைகள், உரிமை வாழ்வுடையோர், அடிமைகள், என ஏற்றத்தாழ்வுகளின் மிகுதியால் பிரிந்துப்பட்ட சமூக அமைப்பே எஞ்சியிருந்தது. பிரிவினையின் ஆதிக்கம் மேலோங்கி அதிகாரக்குவியல் தலைதூக்கி அடிமைத்தனமும் பெருகியது. இந்நிலையில் இயேசுவின் பிறப்பு சமூக, சமய, பொருளாதார, அரசியல் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. சமூகத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சி புதிய உறவுகளின் கொண்டாட்டமாகவே அமைந்தது. பிறப்பின் செய்தியே உறவுகளின் பாலமாக அமைந்தது. மேய்ப்பர்களுக்குத் தரப்பட்ட முன்னுரிமை, அனைவரும் தரிசித்திடும் ஏழ்மைக் கோலம், முன்னணையின் அடையாளம் இவைகள் எல்லாம் இயேசுவின் தாழ்மை வெளிப்பாட்டின் அடையாளங்கள். ஏழ்மையாய் பிறந்தவர் தாழ்மையாய்த் தம்மை வெறுமையாக்கி மீட்புப்பணியாற்றினார். தம் புகழை அறவே தேடாமல் (யோவா. 8 : 50) தம் சீடர்களின் பாதங்களைக் கழுவுமளவுக்குத் தம்மையே தாழ்த்துகிறார். (யோவா 13 : 14). இறைவனுக்கு இணையானவரெனினும் நம் மீட்பிற்காகச் சிலுவையில் மரணமடையுமளவிற்குத் தம்மையே வெறுமையாக்கினார். (பிலி. 2 : 6). “எங்கெல்லாம் தாழ்மை உண்டோ அங்கெல்லாம் அன்பு உண்டு” என்று குறிப்பிட்டார்.புனித அகஸ்டின். அன்பு பாய்ந்து செல்லும் இடத்திலேயே உறவுகள் வலுப்பெறுகின்றன. எனவே ஒருவருக்கொருவர் மனத்தாழ்மையாய் இருக்க பேதுருவும் கற்றுத் தருகிறார் ( 1பேது. 5 : 5).

## 2. உயர்வுக்குத் துணையாகும் தாழ்மை

தாழ்மையுள்ளோரை மதித்து அவர்களின் விருப்பத்திற்கிணங்குகிறவர் இறைவன் (சங். 138 : 6). தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் (மத். 23 : 12; லூக். 14 : 11) என்று இயேசு குறிப்பிடுகிறார். தாம் சொன்னதோடு மட்டுமல்லாமல் வாழ்ந்து காட்டியவர் இயேசு. தாழ்மையாய் இந்த உலகில் அவர் பிறந்தது, வாழ்ந்தது, நற்பணியாற்றியது அனைத்தும் உலகின், உலக மக்களின் உயர்வுக்காக. மரண பரியந்தம் தன்னைத் தாழ்த்தி வெறுமையாக்கிப் (பிலி. 2 : 8) பாவத்திலும், அடிமை வாழ்விலும் இருந்த மக்களை மீட்டு உயர்வை வழங்கினார். தம்மை வெறுமையாக்கின சிலுவை மரணமே நமக்கு இந்த உயரிய மீட்பின் வாழ்வினைத் தந்தது.

ரோட்டோரத்தில் ஒரு குடையின்கீழ் அமர்ந்து அவ்வழியே வருகிறவர்களின் ஷீக்களைப் (Shoes) பாலிஷ் செய்தும், கிழிசல்களைத் தைத்துக் கொண்டும் இருந்தான் சிறுவன் ஒருவன். தகப்பனது





தொழிலை இளமையிலேயே கற்றுக்கொண்டது அவனுக்கு நல்லதாய்த் தோன்றியது. அவர் இறந்தபிறகு அவனுடைய தாயைக் கவனிக்க அது கை கொடுத்தது. சிறுவன் காசுக்காகக் கடமையே எனத் தன் வேலையைச் செய்வதில்லை. யாரோ ஒருவர் பாலிஷ் போட தன் காலணியை நீட்டியதும் அவன் நிமிர்ந்து பார்த்து சிரித்த முகத்துடன் சிறப்பாய் நேர்த்தியாய் அதைச் செய்து முடிப்பான். எப்போதும் வழக்கமாய் வரும் ஒருவர் ஒருநாள் அவனிடம் மிகவும் சிரத்தை எடுத்துக் கவனமாய் வேலை செய்கிறாயே, இந்த வேலையைச்செய்யும் மற்றவர்களிடம் இல்லாத ஏதோ ஒன்று உன்னிடம் காணப்படுகிறதே அது என்ன? என்று கேட்டார். சிறுவன் மகிழ்ச்சியோடு, ஐயா நான் ஒரு கிறிஸ்தவன், இயேசு கிறிஸ்துவின் குணநலன்களை என் வாழ்விலும் செயல்படுத்த பிரயாசப்படுவன். அதோடு ஒவ்வொருவருடைய காலணிகளை நான் பழுதுபார்க்கும்பொழுதும் சீடர்களின் பாதங்களைக் கழுவிய இயேசுவின் தாழ்மை குணம் என் உள்ளத்தை நிரப்புகிறது. எனவேதான் என் பணியைக் கரிசனையோடு செய்கிறேன் என்றானாம். தாழ்மையுள்ள இச்சிறுவன் பிற்காலத்தில் மிகப் பெரிய ஊழியக்காரனாக உயர்த்தப்பட்டான். கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள் அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார் (யாக். 4 : 10).

தாழ்மைப் பண்பை மறந்து போனவனாய் மனிதன் இன்று உயர்வானவைகளை நாடி ஓடுகிறான். உறவுகளையும் சிதைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறான். ஆயக்காரன் பரிசேயர் மன்றாட்டிலேயே எவ்வளவு வேற்றுமை உறவுச் சிதைவு. ஆனால் தன்னைத் தாழ்த்திய ஆயக்காரன் பேறுபெற்றவனானான் (லூக். 18 : 14). பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி தாழ்மையானவர்களை உயர்த்தினார் (லூக். 1 : 52). தம்மைத் தாழ்த்தி நம்மை உயர்த்தி புது உறவில் வளரச்செய்யும் ஆண்டவர் முன் நம்மைத் தாழ்த்துவோம், வெறுமையாக்குவோம். உயர்வு பெறுவோம்.

**அருள்திரு. J. வின்சென்ட் ராபர்ட்**

## 25-12-2013 | கிறிஸ்துப் பிறப்பு

எசா. 9 : 1-7 — எபி. 1 : 1-12

திபா. 98 — லூக். 2 : 15-20

# அமைதியின் அரசரை மகிழ்ந்து தொழுவோம்

## Rejoice and worship the Prince of peace

"ஏனெனில், ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்; ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார்; ஆட்சிப் பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும்; அவர் திருப்பெயரோ "வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர் என்று அழைக்கப்படும்". எசா. 9 : 6

**இறைவேண்டல்**

*எங்கள் ஆண்டவராகிய கடவுளே! உம் திரு மைந்தரின் பிறப்பைப் போற்றி கொண்டாடும் தொழுகையில் நாங்கள் உண்மையுடன் உம்மை வழிபடவும், உண்மையாய் கொடுக்கவும் அருள்தாரும். எங்கள் குடும்ப உறவிலும், அடுத்திருப்போரிடமுள்ள உறவிலும் நாங்கள் இயேசுவால் புத்துயிர் பெறவும், எங்கள் உள்ளங்களை உண்மையான மகிழ்வால் நிரப்பும் மீட்பையும், விடுதலையையும் அனுபவித்து மகிழவும் அருள்தர வேண்டுமென்று உலகினை மீட்க வந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.*

கிறிஸ்மஸ் காலங்களில் நாம் அதிகமாகச் சிந்திக்கும் பொருள்களில் ஒன்று அமைதி (Peace). இன்று நாம் அமைதியற்ற சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை ஊடகங்கள் நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன. ஏசாயா 9 : 6-ஆம் வாக்கியத்தில் மெசியாவுக்கு எசாயா கொடுக்கும் பெயர்களில் ஒன்று "அமைதியின் அரசர்" என்பதாகும். எசாயா, இப்பெயரால் வரவிருக்கும் மெசியாவைக் குறிப்பிடுகையில் ரேட்சீன் எனும் சிரியா நாட்டு அரசனும் இரமலியாவின் மகன் பெக்கா என்னும் இஸ்ரயேல் நாட்டு அரசனும் எருசலேமுக்கு எதிராகப் போர் தொடுத்துக் கொண்டிருந்தனர். யூதேயாவிலும் எருசலேமிலும் இரத்தம் சிந்துதல் இருந்து கொண்டிருந்தது. சிறிதளவேனும் அமைதியற்ற சூழலில் வரவிருக்கும் மெசியா அமைதியின் அரசர் என எசாயா இறைவாக்குரைக்கிறார். ஏனெனில்





எசாயா 9 : 1-7 வரையுள்ள வாக்கியங்களில் அமைதியின் அரசர் மூன்றுவித அமைதிகளை நமக்குத் தருவதாக எசாயா கூறுகின்றார்.

**1. மன அமைதி : (Peace of Mind.) எசா. 9 : 6**

எசாயா 7-ஆம் அதிகாரத்தில் சிரியா மன்னன் ரேட்சீனும் இஸ்ரயேலின் அரசன் பெக்காவும் யூதாவின் அரசன் ஆகாசைத் தங்களுடன் இணைத்து அசீரியா மன்னனாகிய மூன்றாம் தில்கத்பில்னேசரை எதிர்க்கும்படி அழைப்பு விடுத்தனர். ஆனால் ஆகாசு அதற்கு இணங்காமல் அசீரிய மன்னனுடன் இணைந்து ரேட்சீனையும், பெக்காவையும் எதிர்க்கத் திட்டமிட்டார். அசீரியாவுடன் கூட்டணி அமைத்தால் மட்டுமே தாம் போர் பயம் நீங்கி அமைதியுடன் ஆட்சி புரியமுடியும் என ஆகாசு எண்ணினார். ஆனால் எசாயா இறைவாக்கினர் 7 : 1-25 வசனங்களில் அவரை எச்சரிக்கிறார். இறை பெலத்தை நாடாது மூன்றாம் தில்கத்பில்னேசரின் வலிமையை நாடியதால் ஆகாசு அமைதியை இழப்பது திண்ணம் என ஏசாயா கூறுகிறார் (2 அரசர்கள் 16, ஏசா. 8 : 5-10). கடவுளாலேயே உண்மையான அமைதியை வழங்க முடியும். திருமறை முழுவதும் இவ்வுண்மை பரந்து உள்ளது (லூக். 1 : 78, 79; உரோ. 15 : 33; எரோ. 16 : 20; லூக். 24 : 36; பிலி. 4 : 7). கிறிஸ்துவை விட்டுவிட்டு மன அமைதி அல்லது வாழ்வின் அமைதிக்காகச் செய்யும் முயற்சிகள் பயன் தராதவை. இன்று இளைஞர்கள் போதை பொருட்களால் அமைதி கிட்டும் என எண்ணி அவற்றை நாடுகின்றனர். பணமோ, ஆள் பலமோ, ஆயுதப் பெருக்கமோ, வேறு எந்தச் சிற்றின்பங்களோ மன அமைதி தருவதில்லை. கிறிஸ்துவினாலேயே நாம் உண்மையான அமைதியைப் பெற்றுக்கொள்ள இயலும்.

இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானுக்கு எதிராகப் போர் புரிய இளைஞனான படைவீரர் ஒருவர் புகைவண்டியில் புறப்பட்டார். புகைவண்டி புறப்படுகையில் மகனைப் பார்த்து கையசைத்த தந்தையின் கண்களில் கண்ணீர் நிறைந்தது. அத்துயரத்தால் மனமுடைந்த தந்தை "போரில் என் மகன் உயிரிழந்தால் உலகிலுள்ள ஒவ்வொரு ஜப்பானியரும் கொல்லப்படுவர் என நான் நம்புகிறேன்" என்று கூறினார். அடுத்த ஆண்டு அவருடைய மகன் போரில் கொல்லப்பட்டார். ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக அவரிடம் வழங்கப்பட்டது. அவ்வமயம் இயேசுவை ஏற்றுக் கொண்டிருந்ததால், உலகம் கொடுக்க இயலாத மன அமைதியினால் நிறைந்திருந்த அவர், அத்தொகையை ஜப்பானியர் மனந்திரும்புவதற்காக அங்கு அருட்பணி செய்துகொண்டிருந்த தெற்கு பாப்டிஸ்டு அயல்நாட்டு அருட்பணி சங்கத்திடம் வழங்கினார்.

**2. சமூக அமைதி (Peace to Community)** எசா. 9 : 1, 2)

கி.மு. 734-ஆம் ஆண்டு இஸ்ரயேலின் வடநாட்டிற்குப் படையெடுத்த அசீரியா அங்குள்ள பல பட்டணங்களைப் பிடித்தது (2 அரசர்கள் 15 : 29). அதன் விளைவாக பலர் அசீரியாவுக்கச் சிறை பிடிக்கப்பட்டனர். இஸ்ரயேல் அசீரியாவின் நாடாகியது. போரில் கூட்டாளியாகிய யூதாவுக்கு உதவாமல் தில்கத்பில்னேசர் ஆகாசுக்கு நெருக்கடி உண்டாக்கினார் (2 குறிப்பேடு 28 : 20). இறை உதவியை நாடாமல் தில்கத்பில்னேசர் உதவியை நாடியதால் எசாயா இறைவாக்குரைத்தபடி ஆகாசு அமைதியை இழந்தார். ஆகாசின் அமைதி சீர்குலைந்ததுடன் அவர் ஆட்சி செய்து வந்த யூதா நாட்டு மக்களின் சமூக அமைதியும் குலைந்தது. கலிலேயாப் பகுதியாகிய செபுலோன், நப்தலி ஆகிய இடங்களே முதலில் அசீரியாவின் தாக்குதலுக்கு உள்ளாயின. சாவின் நிழல் அம்மக்களைச் சூழ்ந்தது (எசா. 9 : 2); கொள்ளையடிக்கப்பட்டனர் (9 : 3). பலர் வெட்டப்பட்டதால் போர்க்களத்தில் போர் வீரர் அணிந்திருந்த காலணிகளிலும், ஆடைகளிலும் இரத்தக்கறை படிந்திருந்தது (9 : 5). இப்படி அச்சமூகம் அமைதியிழந்த சூழலில் அமைதியின் அரசர் சமூக அமைதியை ஏற்படுத்த வருவதாக. எசாயா இறைவாக்குரைக்கிறார் (9 : 6). நாம் வாழும் சமூகமும் நாடும் அமைதியாக இருந்தால் தான் அதில் வாழும் நாமும் அமைதியாக இருக்க முடியும். இந்த அமைதியை இயேசு வழங்குவதாக திருமறை (வீட்டுக்கு அமைதி லூக். 10 : 5, 6; ஊருக்கு அமைதி லூக். 19 : 42; பூமியிலே மனிதரிடையே அமைதி லூக். 2 : 14; சபையிலே அமைதி தி.ப. 9 : 31) கூறுகின்றது. இயேசுவின் வருகையினால் செபுலோன், நப்தலி நாடுகள் உள்ள கலிலேயாவிற்கு அமைதி கிடைத்தாக எசா. 9 : 6-ஐ மேற்கோள் காட்டி மத்தேயு கூறுகின்றார் (மத். 4 : 13-16).

யூத ரபி ஒருவர் சோப்பு வியாபாரியுடன் சாலையில் நடந்து சென்றுகொண்டிருந்தார். அப்போது சோப்பு வியாபாரி ரபியிடம் "சமயத்தினால் நமது சமூகத்திற்கு ஏதேனும் நன்மை உண்டா? நாம் வாழும் சமூகத்தைப் பாருங்கள், பல ஆண்டுகளாக ஆலயங்களில் உண்மை, நன்மை, அமைதி ஆகியவற்றைக் குறித்து அருளுரை ஆற்றியும் போதித்து வந்தும் போர்களும், கலவரங்களும், குழப்பங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவே! சமூகத் தீமைகளின் மத்தியில் சமயத்தினால் விளையும் நன்மை தான் என்ன? என்று கேட்டார். ரபி பதில் ஏதும் கூறாமல் அமைதியாகவே நடந்து கொண்டிருந்தார். வழியில் அவர்கள் சேற்றில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை ஒன்றினைக் கண்டனர். அக்குழந்தையின் உடல்





சேறும் அழுக்குமாக இருந்தது. உடனே ரபி வியாபாரியைப் பார்த்து " அக்குழந்தையைப் பாரும். நீர் உம்முடைய சோப்பு மக்களைச் சுத்தமாக்குகிறது என்கிறீர். ஆனால் இக்குழந்தை அழுக்காக இருக்கிறது" என்று கேட்டார். உடனே வியாபாரி, "ரபி! சோப்பைப் பயன்படுத்தாவிட்டால் அதன் பயனைக் காண இயலாது" என்றார். சமயமும் அதனைப் போன்றதே என்று ரபியும் பதிலுக்குச் சொன்னார். இயேசுவிடம் சமூகத்திற்குத் தேவையான அமைதி உள்ளது. ஆனால், இயேசுவைச் சமூகம் ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்போது மட்டுமே அதன் பயனைப் பெற இயலும்.

**3.நீதியுடன் கூடிய அமைதி (Peace with Righteousness)** எசா. 9 : 7

எசாயா 9 : 6-ஆம் வாக்கியத்தில் வரப்போகும் அரசருக்கு வழங்கப்பட்ட பெயர்களுள் ஒன்று அமைதியின் அரசர் ஆகும். ஏனெனில் அவர் நீதியோடு ஆளுகை செய்வார் என 9 : 7-இல் எசாயா விளக்குகிறார். இந்த வாக்கியம் லூக்கா 2 : 14-இல் இயேசுவின் பிறப்பினால் நிறைவு பெறுகின்றது. திருமறையில் நீதியும் அமைதியும் எப்போதும் இணைந்தே குறிப்பிடப்பட்டுள்ளன. எசா. 32 : 17-இல் நீதியின் விளைவு அமைதி என்றும் எரே. 6 : 14-இல் நீதியில்லாத அமைதி அமைதியன்று என்றும் உள்ளன. இயேசுவை விசாரிப்பதற்காக பகைவர்களான ஏரோதுவும் பிலாத்துவும் நண்பராயினர். அவர்களுக்குள் அமைதி வந்தது போன்று இருந்தது. ஆனால் அது நீதியுள்ள அமைதியாக அமையாமல் போலியான அமைதியாக இருந்தது. எசா. 57 : 21-இல் கொடியவர்களுக்கு அமைதியே இல்லை என்று கூறப்பட்டுள்ளது. நமது குடும்பங்களிலும், திருச்சபையிலும், சமுதாயத்திலும் அடக்குமுறை, அதிகார வெறி, பதவிச் சண்டை, ஏமாற்றுதல் போன்றவை இருக்கும் வரை உண்மையான அமைதியைக் காண இயலாது. ஏனெனில் அங்கு நீதியில்லை. எங்கே மனிதர்கள் மனிதர்களாக மதிக்கப்பட்டு சமத்துவமும், சகோதரத்துவமும், சமப் பங்கீடும், உழைப்புக்கு ஏற்ற ஊதியமும் கொடுக்கப்படுகிறதோ அங்கு நீதியுள்ள அமைதி நிலவும் என்பதில் ஐயமில்லை. நாம் அநீதியான சூழல்களை மாற்றியமைக்க விரும்புகிறோம். ஆனால் ஆண்டவர் நமது குணநலன்களை மாற்றி நீதியுள்ள அமைதியை நிலைநாட்ட விரும்புகிறார்.

இரண்டாம் உலகப் போரின்போது கிழக்குக் கம்பெனியின் 101-ஆவது படைப்பிரிவைச் சார்ந்த இளம் பாரசூட் படைவீரரான டேவிட் வெப்ஸ்டர் தன் தாய்க்குக் கடிதம் ஒன்றினை எழுதினான். அக்கடிதத்தில் "அம்மா! என்னைக் குறித்து வருத்தப்படுவதை நிறுத்திக் கொள்ளுங்கள்.

நான் போரிடுவதற்கான பாரசூட் படைப்பிரிவில் சேர்ந்துள்ளேன். அப்பிரிவு போர் புரியத் தயாராகிக் கொண்டிருக்கிறது. போர் புரிகையில் தேவைப்பட்டால் நான் மரணமடையலாம். ஆனால் அதற்காக வருந்தாதீர்கள். ஏனெனில் இளைஞர் எவரும் மரணமடையாமல் எந்தப் போரிலும் வெற்றி கிட்டியதில்லை. விலைமதிப்புள்ளவை அனைத்தும் தியாகத்தினால் கிடைக்கப்பெற்றவையே!" என்று எழுதினான். நாம் நீதியுள்ள அமைதியைப் பெற வேண்டுமாயின் நமது அநீதிகளுக்காக ஒருவர் தியாகம் செய்ய வேண்டியது அவசியம். அத்தேவையை நிறைவு செய்ய இவ்வுலகில் பிறந்தவரே நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.

முடிவுரை :

அமைதியின் அரசராகிய ஆண்டவர் இயேசுவின் பிறந்த நாளை கிறிஸ்மஸ் பண்டிகையாக நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். ஏனெனில் அவர் மன அமைதி, சமூக அமைதி, நீதியுள்ள அமைதி ஆகிய மூவித நிலைகளில் அமைதி தருகிறார். "அவரே நமக்கு அமைதி அருள்பவர்" என எபே. 2 : 14-இல் பவுல் கூறுகின்றார். மத்தேயு ஹென்றி என்னும் திருமறை விளக்கவுரையாளர், "இயேசு மரணமடைந்தபோது உயில் (Will) ஒன்றினை இவ்வுலகுக்குக் கொடுத்துச் சென்றுள்ளார், அதில் தமது ஆன்மாவைத் தந்தைக்கும், தமது உடலை அரிமத்தியா ஊரானாகிய யோசேப்புக்கும், தமது ஆடைகளை போர் வீரருக்கும், தம் தாயை யோவானுக்கும் கொடுத்திருக்கிறார். ஆனால் எல்லாவற்றையும் விட்டு அவரைப் பின்பற்றிச் சென்ற சீடருக்கு வெள்ளியையோ பொன்னையோ அளிக்காமல் அதைவிடச் சிறந்த தமது அமைதியையே (யோவான் 14 : 27) கொடுத்திருக்கிறார்" என்று குறிப்பிடுகின்றார்.

**அருள்திரு. A. இராயப்பன் ஐசக்**



**29-12-2013** கிறிஸ்துப் பிறப்புக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு

யோசு. 24 : 1-17 — **குடும்ப ஞாயிறு** — 1 யோவா. 2 : 7-17

திபா. 128 — மத். 12 : 46-50

# குடும்பத்தில் பாசமும் ஒன்றிப்பும்

## Affection and togetherness in the family

தம் சகோதரர் சகோதரிகளிடம் அன்பு கொள்வோர் ஒளியில் நிலைத்திருக்கின்றனர் (1 யோவா. 2 : 10)

**இறைவேண்டல்**

*எங்கள் அன்பு கடவுளே! எங்கள் வாழ்விடங்களுக்காக்வும், குடும்பங்களுக்காகவும் உமக்கு நன்றி சொல்லுகிறோம். நாங்கள் மனித வளங்களை எங்கள் குடும்பங்களில் வளப்படுத்தவும், உலக சமூகத்தோடு பகிர்ந்து கொள்ளவும், உமது அரசு இவ்வுலகில் வந்ததை அதன் வழியாய் அனைவரும் அறிந்துணரவும் உதவி செய்தருள வேண்டுமென்று நாசரேத்தில் குடும்ப வாழ்வில் பங்குகொண்ட எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.*

குடும்பம் என்பது கடவுள் ஏற்படுத்திய ஓர் ஒப்பற்ற அமைப்பு. குடும்ப வாழ்வுக்கு முகவுரை கடவுளால் ஏதேன் தோட்டத்தில் எழுதப்பட்டது. தந்தை, தாய், கணவர், மனைவி மற்றும் பிள்ளைகள் இணைந்து வாழ்வதை ஒரு நிறைவான குடும்பம் என்போம். ஒருவர் வலுவிழந்தாலும், வறுமையில் வாடினாலும், தவறிழைத்தாலும் அணைக்க ஒரு தாயும், அன்பு செய்து ஆலோசனை வழங்கி ஆளாக்க ஒரு தந்தையும், அனைத்துச் சூழ்நிலைகளிலும் உறுதுணையாக உடனிருக்க நல்ல மனைவியும் அமைந்து விட்டால் அவரது குடும்பத்தில் நிச்சயம் மகிழ்ச்சி கரைபுரண்டோடும். குடும்பம் மனித வாழ்வை வளமாக்கும் பாடசாலை என்பது உண்மையாகிவிடும். இல்லறம், துறவறம் என்னும் இருவகை வாழ்வியல் அறங்களில் இல்லறமே (குடும்ப வாழ்வே) போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரியது. ஏதேனில் ஆரம்பித்த குடும்ப வாழ்வு இறையாசியுடன் பலுகிப்பெருகி உலகை நிரப்பிக் கொண்டிருக்கிறது. காலங்களும், கருத்துக்களும், கல்வியும், கலாச்சாரமும், மாறிக் கொண்டிருக்கும் காலத்தில்,

குடும்பங்களில் கட்டுப்பாடுகளும், நல்ல கோட்பாடுகளும் மீறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குடும்பங்களில் அமைதி, மகிழ்ச்சி, ஒற்றுமை எப்பொழுதும் நிலவுதல் இல்லறத்தின் வெற்றியை வெளிப்படுத்தும். குடும்பத்தில் பாசமும், ஒன்றிப்பும் நிலைத்திருக்க திருமறை கற்றுத்தரும் பண்புகள் என்ன? எனத் தியானிப்போம்.

**1. கடவுளின் முன்னிலையில் ஒன்றிணையும் குடும்பம்** யோசுவா 24 : 1)

இஸ்ரயேலரை சிறப்பாக வழி நடத்திய மோசேயின் பணிவிடைக்காரராக இருந்து, பின்னர் தலைவராக உயர்வு பெற்றவர் யோசுவா. ஏறக்குறைய 25 ஆண்டுகள் இஸ்ரயேலை வழி நடத்தியவர். யுத்த வீரரான இவர் நாட்டுப் படைகளை ஒழுக்கத்தோடும், கட்டுப்பாடுகளோடும் வைத்திருந்தார். கடவுள் நம்பிக்கை மிகுந்த இவர் ஜெபவீரரும் ஆவார். இஸ்ரயேலின் சரித்திரத்தில் பல வெற்றிகள் கண்டவர். கானான் தேசத்தை இஸ்ரயேலருக்குப் பங்கிட்டுக் கொடுத்து, வயது முதிர்ந்த காலத்தில் இஸ்ரயேலரை சீகேமில் இருந்த கடவுளின் இல்லத்தில் ஒன்று கூட்டினார். எப்பிராயீம் மலைப்பகுதியில் அமைந்திருந்த நகரம் சீகேம். திருமறையில் பல வரலாற்றுச் சிறப்புகள் இந்நகருக்கு உண்டு. யோசுவாவின் அழைப்புக்கிணங்கி இஸ்ரயேலின்அனைத்து மக்களும், முதியோர்களும், தலைவர்களும் அதிகாரிகளும் கடவுளின் முன்னிலையில் ஒன்று கூடினர். இந்நிகழ்வு இஸ்ரயேலரிடமிருந்த பாசமுள்ள வாழ்வையும், ஒன்றிப்பையும் எடுத்தியம்புகிறது. கடவுளின் இல்லம் அவரைத் தொழுதுமகிழ ஏற்ற இடம். தீயவரும் தூய்மையாய் மாற துணைபுரியும் இடம். காலங்களுக்கேற்ப கடவுளின் ஆலோசனைகளை இறைப்பணியர் வழியாகக் கற்றுக்கொள்ளும் இடம். சிறியோர், இளையோர், முதியோர் எனப் பல வயது வரம்புடையோரும் நல்ல ஒழுக்கங்களை அறிந்து கொள்ளும் இடம். இறைமக்கள் ஒருவரையொருவர் சந்திக்கவும், இறைவனைச் சந்திக்கவும் கூட்டுறவை உருவாக்கும் இடம். இன்றைய நாட்களில் குடும்பமாகக் கடவுளின் இல்லமாகிய ஆலயம் வரும் பழக்கம் சிதைந்து வருகிறது. ஒவ்வொரு குடும்பங்களும் இத்தகைய ஆன்மிகச் சிதைவைச் சரி செய்ய முயற்சி செய்தல் குடும்பங்களில் பாசத்தையும், ஒன்றிப்பையும் மலரச் செய்யும்.

**2. கடந்து வந்த பாதைகளை திரும்பிப்பார்க்கும் குடும்பம்** (யோசுவா 24 : 2-13)

சீகேம் நகரத்திலுள்ள கடவுளின் திருத்தலத்தில் கூடி





நின்றோருக்கு யோசுவா கடவுளின் வார்த்தைகளை நினைவுப்படுத்தினார். அறியாமை மிகுந்த ஆரம்பகால வாழ்வு (2) அடிமைகளாய் எகிப்து நாட்டில் சிக்கித் தவித்த அவலங்கள், அற்புதங்களால் பெற்ற ஆச்சரியமான அனுபவங்கள் (5, 6, 7) பாலைநிலப் பயணங்கள், அண்டை நாட்டவரால் நிகழ்ந்த போர்களின் வெற்றிகள் (8-12), அனைத்துச் சூழல்களில் உடனிருந்த கடவுளின் துணை, கடுமையான பயணத்தின் இறுதியில் இஸ்ராயேலரைக் களிப்பூட்ட கடவுள் பரிசாக வழங்கிய கானான் நாடு (13) என யோசுவா வரிசைப்படுத்திய கடந்த கால நிகழ்வுகளெல்லாம் நடந்துவந்த பாதைகளைத் திரும்பிப் பார்க்க உதவியது. குடும்ப, சபை, சமூக, நாடு என வரலாற்றுக் குறிப்புகளை ஆய்ந்து பார்த்தால் நம் முன்னோர்களும் நெருக்கடியான சூழ்நிலைகளையெல்லாம் சந்தித்து உள்ளனர். இன்று ஒவ்வொரு துறைகளிலும் வளர்ச்சிகள் பல கண்டு, நிறைந்த மகிழ்ச்சியுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அன்பர்களே! கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்தல் பாடுகளில் பங்கேற்று வெற்றிகண்ட அனுபவத்தோடு, துன்பங்களிலும், துயரங்களிலும் துணைநின்ற கடவுளின் அன்பையும் நினைப்பூட்டும். இஸ்ரயேலரின் வாழ்வில் ஏற்பட்ட பெருத்த மனமாற்றத்திற்கு இதுவும் ஒரு காரணம். மனிதர்கள் காலங்கள் போகிற போக்கிலேயே வாழ்ந்துவிட விரும்புகின்றார்களே தவிர கடந்த காலங்களைத் திரும்பிப் பார்க்க விரும்புவதில்லை. இத்தகைய முற்போக்குச் சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டால் குடும்ப வாழ்வு வளமாகும்.

**3. கடவுளின் பெயரை மாட்சிப்படுத்திய குடும்பம்** (யோசுவா 24 : 16)

இஸ்ரயேலருக்குள்ளே புகுந்த பல தெய்வ வழிபாடு கடவுளுக்கும், ஆன்மீகத் தலைவர்களுக்கும் எரிச்சலூட்டியது உண்மை. விசுவாசத்தின் தந்தை ஆபிரகாமின் காலத்திலிருந்தே இடம்விட்டு இடம் மாறிச் சென்ற வாழ்க்கை அமைப்புகளும், அந்நிய நாட்டில் அடிமைகளாய் வாழ்ந்த காலங்களும், பல கலாச்சார மாற்றங்களைச் சந்தித்த மக்களுக்கு இப்பழக்கத்தைத் தோற்றுவித்திருக்க வாய்ப்பு உண்டு. ஆபத்து விளைவிக்கும் இயற்கையையும், உயிரினங்களையும் கண்டு அஞ்சி அவைகளின் சாயல்களை உருவாக்கி, வணங்கிய வேற்று தெய்வ வழிபாட்டினை அகற்ற, கடவுள் மோசேயின் வழியாக சீனாய் மலையில் வழங்கிய கற்பனைகளை இஸ்ரயேலர்கள் மீறியதால் நம்பிக்கையிழந்தவராய் யோசுவா வேற்று தெய்வ வழிபாட்டின் விளைவுகளை சீகேம் திருத்தலத்தில் நின்ற இஸ்ரயேலருக்கு

பட்டியலிட்டுக் காண்பித்தார். (யோசுவா 24 : 19-20) இன்று இஸ்ரயேலரைப் போல் கடவுளின் பெயரால் வாழ்வோருக்குள்ளும் தீமைகள் நிறைந்திருக்கும் நிலையைக் காண இயலும். சகோதர, சகோதரிகளை வெறுத்தல், உலகிலுள்ளவை மீது அதிக பற்றுக்கொள்ளுதல், உடல் சார்ந்த ஆசை, இச்சை நிறைந்த பார்வை, செல்வச் செருக்கு, தீய நாட்டங்கள் போன்றன கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதற்கு எதிரானவை என 1 யோவான் 2 : 7-17 வரை காணலாம். "விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும், சகோதரியும், தாயும் ஆவார்" என்கிறார் (மத்தேயு 12 : 50) என்பது கிறிஸ்துவின் போதனையாகும்.

குடும்பம் மானிட சமுதாயத்தின் முதுகெலும்பு. குடும்பம் என்ற பட்டறையிலே உள்ளங்களும், உறவுகளும் ஐக்கியப்படுதல் வேண்டும். அப்போதுதான், இறையரசின் முன்சுவையை உலகில் உணரமுடியும். தந்தையைக் கொல்லும் மகன், தாயைக் கொல்லும் தனயன், பிள்ளைகளைக் கொல்லும் தாய், தந்தையர் ஒருவரையொருவர் அழித்துக் கொள்ளும் உடன் பிறந்தோர், வாழ்க்கைத் துணையைக் கொலை செய்கின்ற கணவன், மனைவி, என நாம் அறிகின்ற செய்திகளெல்லாம் குடும்ப வாழ்வில் பாசத்தையும், ஒன்றிப்பையும் அழிக்கின்றன. எனவே, குடும்பமாகக் கடவுளின் இல்லம் செல்லவும், கடந்த காலங்களைத் திரும்பிப் பார்க்கவும், கடவுளின் பெயரைக் கறைப்படுத்தாமலிருக்கவும் தீர்மானம் ஏற்போம். இறையாசி நம் குடும்பங்களோடு என்றும் நின்று நிலவுவதாக.

**அருள்திரு. V. சாமுவேல் ஜெபராஜ்**



**31-12-2013** **ஆண்டு நிறைவு தொழுகை**

எண் 6 : 11-27 — 1 பேதுரு 5 : 10-11

தி.பா. 27 — லூக்கா 24 : 28-30

# ஆண்டவரே, நம் கன்மலை! நம் புகலிடம்!

The Lord is Our Rock and Shelter

ஆண்டவரே என் ஒளி (தி.பா. 27 : 1)

**இறைவேண்டல்**

*ஆற்றல் நிறைந்த கடவுளே! உம் மக்களின் ஆசிகளுக்கு நிறைந்த கடவுளே! உம் மக்களின் ஆசிகளுக்கு உறைவிடமானவரே நீர் தந்த ஒவ்வொரு அருள் வளங்களுக்காகவும் குறிப்பாக காலங்கள் வழியாய் தந்த ஆசிகளுக்காய் உம்மைத் துதிக்கிறோம். நம்பிக்கையற்ற இவ்வுலகில் வாழும் அனைத்து நாட்களும் உம்மோடு வாழவும், நிறைவில் உமது முடிவற்ற பேரின்ப வாழ்வில் பங்கேற்கவும் அருள்புரிய வேண்டுமென்று தந்தையாம் உம்மோடும், தூய ஆவியாரோடும் என்றென்றும் வாழ்ந்து வழியாக வேண்டுகிறோம். ஆமென்.*

அன்பானவர்களே இந்த ஆண்டின் கடைசி நாளின் கடைசி நிமிடங்களில் வைக்கப்பட்டிருக்கின்ற நம்முடைய வாழ்க்கையில் எத்தனையோ ஆபத்துகள், விபத்துகள், துக்கங்கள், துயரங்கள், இழப்புகள், கடன்பாரங்கள், வியாதிகள் என்று சொல்லிக்கொண்டே போகலாம். இப்படி வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளிலும், ஆண்டவரே நீரே என் துணையாளர், நீரே என் பாதுகாவலர் என்று நாம் வாழ்ந்த படியினால் தான் இந்த ஆண்டிறுதித் தொழுகையிலே நாம் இருக்கின்றோம். உண்மையிலேயே ஆண்டவர் நமக்கு அடைக்கலமானவராக இருந்து, நம்மை நடத்தியிருக்கின்றார்.

**1) இறையாற்றல்**

1 பேதுரு 5 : 10-ல், "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக," என்று பேதுரு எழுதுகின்றார். தி.பா. 68 : 35-இல் "இஸ்ரயேலின் கடவுள் தம்முடைய மக்களுக்கு ஆற்றலையும், சத்துவத்தையும் அருளுகிறவர்" என்று சொல்கின்றார். நமக்கு பெலன் அவசியம் தேவை. உடலில் மட்டுமல்ல,

ஆத்துமாவிலே, உள்ளான மனுஷனிலே பெலன் தேவை. ஆண்டவருடைய பெலன் நம்மோடு இருக்குமானால், ஜெயமுள்ள வாழ்க்கை வாழ முடியும். அவருக்காக அரிய பெரிய காரியங்களைச் செய்யமுடியும். அவருக்காக எழுந்து பிரகாசிக்கமுடியும். புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்கும் போது, ஆண்டவருடைய பெலனால் தரிப்பிக்கப்படும் வரையிலும், அவருடைய சமூகத்தில் காத்திருந்து ஜெபியுங்கள். அப்பொழுது அவர் உங்களை தம்முடைய உன்னத பெலத்தினால் நிரப்புவார். அப்பொழுது நீங்கள் கிருபையின் மேல் கிருபையைப் பெற்று கொள்வீர்கள். மகிமையின் மேல் மகிமையை அடைவீர்கள்.

**2) இறைப்பாதுகாப்பு**

லூக்கா 24 : 29-இல், “அவர்கள் அவரை நோக்கி : நீர் எங்களுடனே தங்கியிரும், சாயங்காலமாயிற்று, பொழுதும் போயிற்று, என்று அவரை வருந்திக்கேட்டுக்கொண்டார்கள். அப்பொழுது அவர் அவர்களுடனே தங்கும்படி உள்ளே போனார்”. தி.பா. 91 : 15-இல் “அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச் செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து அவனைத் தப்புவித்து அவனைக் கனப்படுத்துவேன்” என்று ஆண்டவர் சொல்கின்றார். இந்த இரண்டு வசனங்களிலும், ஆண்டவரைக் கேட்டுக்கொண்டபோது, அவர்களோடு தங்கியிருக்கச் சம்மதிப்பதையும், ஆபத்து நேரத்தில் கூடயிருந்து பாதுகாப்பதையும் அறிந்து கொள்ளமுடிகின்றது. ஆண்டவர் எளியவர்களை விடுவிக்கின்றார், பாதுகாக்கின்றார். God is not a spectator or an onlooker. He just involves and redeems the weak. உதாரணமாக, இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து மீட்டெடுக்கப்பட்ட சம்பவத்தைச் சொல்லலாம். புதிய ஏற்பாட்டில் மாற்கு 4 : 36-41 வரையுள்ள வசனங்களில், இயேசுநாதரும், அவருடைய சீஷர்களும் படகில் செல்கின்றார்கள். புயல்காற்றும், கடுமையான அலைகளும் ஏற்படுகின்றன. சீஷர்கள் பயத்தில் அலறுகின்றார்கள். படகில் தூங்கிக் கொண்டிருந்த இயேசுநாதர் காற்றையும், கடலையும் அமர்த்தி அவர்களைப் பாதுகாத்தார். ஆண்டவர் நம்மோடு தங்கியிருந்து நம்மையும் பாதுகாத்துக் கொள்வார்.

**3) இறையாசி**

யாக்கோபு ஒரு நாள் கடவுளை நோக்கி விடாப்பிடியாக “நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்” என்று மன்றாடினான். உலகரீதியாகப் பார்க்கும்போது, யாக்கோபு ஏற்கெனவே போதுமான அளவிற்கு ஆசீர்வதிக்கப்பட்டிருந்தார். அவர் எல்லாவற்றையும் பெற்றிருந்தபோதிலும் இன்னும் பெறாத ஒரு





ஆசீர்வதம் இருப்பதை உணர்ந்தார். அந்த ஆசீர்வாதத்தை ஆண்டவரிடமிருந்து பெறாதவரை தான் ஏற்கனவே பெற்றிருந்த ஆசீர்வாதங்கள் தன்னை வாழ வைக்கப்போவதில்லை என்று உணர்ந்தார். அவர் பெருஞ்செல்வங்களைச் சம்பாதித்திருந்த போதிலும், அவர் பயத்திலிருந்தும், பீதியிலிருந்தும் விடுதலையாகாதவராகவேயிருந்தார். தன்னைத் தாழ்த்தி ஆண்டவருடைய ஆசீர்வாதத்திற்காக இரவு முழுவதும் அவரை நோக்கி விடாப்பிடியாகப் பேராடினார். பணம், பொருள், கல்வியறிவு, அந்தஸ்து, சமுதாய மேன்மைகள் இவைகளுக்கப்பாலும் நமக்கு ஒரு பெரிய ஆசீர்வாதம் தேவைப்படுகிறது. அதுதான் ஆண்டவரோடுள்ள ஐக்கியம், பாதுகாப்பு போன்ற காரியங்கள். இவைகளை மிகப்பெரிய ஆசீர்வாதங்களாக எண்ணி, அடையும் வரை நம்முடைய பிற ஆசீர்வாதங்களால் நாம் ஒரு மனநிறைவான அமைதியின் வாழ்க்கையைக் காணமுடியாது.

புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்க ஆயத்தப்படுகின்ற நம்மில் குறைகள் காணப்பட்டால் அவைகளைத் திருத்திக்கொண்டு புதிய ஆண்டிற்குள் புதுத்தீர்மானங்களோடு பிரவேசிப்போம். அப்போது புதிய ஆண்டில் ஆண்டவர் உங்களைப் பெலப்படுத்துவதையும், உங்களோடு தங்கியிருந்து உங்களைப் பாதுகாப்பதையும், உங்களை ஆசீர்வதிப்பதையும் நீங்கள் புரிந்துகொள்வீர்கள். ஆமென்.

**அருள்திரு. R. ரஞ்சிட் சுதிர்**

01-02-2013

ஏசாயா 58 : 1-12

# உண்மையான உபவாசத்தின் வாக்குறுதி

"... உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக்

இந்த மாதத்தில் தவக்காலத்தைத் தொடங்குகின்றோம். நோன்பு (உபவாசம்) இருப்பது தவக்காலத்தின் சிறப்பான ஓர் அம்சம். திருமறையின் அடிப்படையில் நாம் நோன்பு இருக்கவேண்டும். நாம் நமது வாழ்வை உபவாசம் ஆக்கவேண்டும். அப்போது இறைவன் தமது ஆசிகளைக் குறித்த வாக்குத் தத்தங்களை உறுதிப்படுத்துகின்றார்.

**1. ஒளி உதிக்கும்** (எசா. 58 : 10)

ஒளி உதிக்கும் என்று கூறும்போது இருளின் ஆதிக்கத்தை அழித்து வெளிவரும் சூரியனின் ஒளியுடன் ஒப்பிட்டுக் கூறுகிறார். பொதுவாக இருள் என்பது பயம், தெளிவின்மை அல்லது குழப்பம், தீமை, அநீதி ஆகியவற்றின் அடையாளமாகவும் ஒளி என்பது வெளிப்படையான வாழ்வு, தைரியம், தெளிவு, நீதி, நன்மை ஆகியவற்றின் அடையாளமாகவும் சொல்லப்பட்டுள்ளது. யோபு 11 : 14, 17-இல் உமது கையில் அக்கிரமம் இருந்தால் அதை அகற்றிவிட்டு, உமது கூடாரங்களில் அநியாயம் வாசம்பண்ண இடம் கொடாவிட்டால் நீர் விடியற்காலம் போலிருப்பீர் என்கிறார். நமது வாழ்வு மற்றவர்கள் முன் ஒளிர கடவுள் நமக்கு ஒளியூட்டுவார்.

**2. உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும் (எசா. 58 : 9)**

நம்மைச் சூழ்ந்துள்ள அனைத்துக் கட்டுகளும், எதிர்ப்பு சக்திகளும், நம்மை விட்டு அகன்றுவிடும். இதற்குக் காரணமாய் இருப்பது இறைவனுக்கும் நமக்கும் இடையே உள்ள தொடர்பு. இந்தத் தொடர்பு நெருக்கமாய் இருப்பதால் இறைவன் எப்போதும் நம் அருகில்





இருக்கிறார். நாம் கூப்பிடும் வேளைகளிலெல்லாம் செவி கொடுக்கிறார்.

**3. உன் நேர்மை முன்செல்லும் (எசா. 58 : 8)**

மனிதனுடைய நேர்மை அவன் வாழ்வில் அவன் பாதைகளைச் செவ்வையாக்கும் ஆற்றல் கொண்டது. எனவே நான் நீதிமானாய் வாழ்ந்து என்ன பயன் என்ற எண்ணம் வேண்டாம். 2 இரா. 20 : 3 எசேக்கியா தனது நேர்மையை முன்னிறுத்தி விண்ணப்பம் செய்தார். கடவுள் உடனே பதில் கொடுத்தார். (2 இரா. 20 : 5, 6) எனவே தான் எசாயா. எசா. 58 : 11-இல் அவனது நீதி முன் சென்று பாதைகளைச் செவ்வை யாக்குவதால் கடவுள் அவனை நடத்தி வறட்சியான காலங்களில் திருப்தியைத் தந்து வற்றாத நீரூற்றைப் போலவும், நீர் பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும் மாற்றுவார்.

**கடவுளின் மாட்சி உன்னைக் காக்கும் (எசா. 58 : 8)**

கடவுளின் மாட்சி நம்மைக் காப்பதால் நாம் மகிமை அடைவோம். பாழாய்க் கிடந்த நம் வாழ்வு சீர்பெற்று பயனுள்ள வாழ்வாக மாறும். யோசேப்பின் வாழ்வில் அவர் அடிமையாக விற்கப்பட்ட இடத்திலும் அவரின் வாழ்வு பயனுள்ளதாக இருந்தது (தொநூ. 39 : 2-4). இதனால் அவர் மகிமைப்படுத்தப்பட்டார்.

இந்தப் புதிய மாதத்தில் பயனுள்ள வகையில் நமது வாழ்வை மாற்றி இறைவனின் வாக்குத்தத்தங்களை நமக்கு சொந்தமாக்கிக் கொள்வோம்.

**அருள்திரு. J. விக்டர் ஞானராஜ்**

**01-03-2013**

2 குறிப். 20 : 1-19

# மீட்கும் கடவுள்

. . . உமது திருப்பெயர் விளங்கும் இக்கோவிலுக்கு நாங்கள் வந்து, உமது திருமுன் நின்று, எங்கள் வேதனைகளில் உம்மை நோக்கி மன்றாடுவோம், நீரும் அதனைக் கேட்டு எங்களை மீட்பீர். (2 குறிப். 20 : 9)

யூதா அரசன் யோசபாத் அரசாண்ட காலத்தில் மோவாபியர், அம்மோனியர், சேயீர் மலைக்குடிகள் ஆகிய மூன்று இனத்தவரும் இணைந்து யூதாவுக்கு எதிராக வந்தனர். யூதா மக்கள் எதிர்த்துப் போர் செய்யுமுன் அந்த மூன்று இனத்தவரிடையே எழுந்த பிரச்சனையால் ஒருவரை ஒருவர் அழித்துக்கொண்டனர். போதிய ஆயுதமின்றி, எதிர்க்க ஆற்றலின்றி தவித்த யூதா மக்கள் எவ்வித போருமின்றி வெற்றி பெற்றனர். இதற்காக அவர்கள் பெராக்கா என்ற இடத்தில் கூடி கடவுளுக்கு நன்றி செலுத்தினர். பெராக்கா என்றால் ஆசீர்வாதம் என்று பொருள். இந்த ஆசீர்வாதத்தின் பள்ளத்தாக்கிலே யூதா மக்களும் அரசர் யோசபாத்தும் கடவுளைத் துதிக்கும் வாய்ப்பு பெற யோசபாத் செய்தவை எவை எனச் சிந்திப்போம்.

**1. கடவுளை நோக்கிப் பார்த்தான்** (2 நாளாகமம் 20 : 3)

மூன்று பெரும் இனத்தவர் சேர்ந்து படை திரட்டி யூதாவுக்கு எதிராக வரும் செய்தி வருகிறது. யோசபாத் படை திரட்டுவதற்குமுன் யூதா முழுவதும் நோன்பை அறிவித்தார். தனக்கு இருக்கின்ற பலம்போதாது என்று தெரிந்தும் பக்கத்து நாட்டு அரசர்களை நம்பாமல் கடவுள் மீது முழு நம்பிக்கை வைத்தார். மேலும் 2 குறிப். 20 : 21-இல் யூதா மக்கள் போருக்கு அணிவகுத்துச் செல்லும்போது முன்னால் பாடகர் குழுவை நிறுத்தினார். அதுவே அவரது வெற்றிக்கு அடித்தளமிட்டது. (வச. 22).

**2. கடவுளின் செயல்களை நினைவு கூர்ந்தார் (2 குறிப். 20 : 9)**

தங்கள் முன்னோர்களின் அனுபவத்தில் கடவுளை நோக்கி கூப்பிட்ட நாள்களில் எல்லாம் கடவுள் அவர்களை விடுவித்த நிகழ்வுகளை நினைவு கூர்கின்றார். அதைத் தனது பற்றுறுதியின் அடித்தளமாக்குகின்றார். நமது வாழ்விலும், நமது முன்னோர்களின் வாழ்விலும், கடவுளின் செயல்களை நாம் பெற்று அனுபவித்ததை நினைக்க வேண்டும். அது நமது விசுவாசத்திற்கு அடித்தளமாய் அமையும்.

**3. தன் நிலையை அறிந்தார்** (2 குறிப். 20 : 12)

யோசபாத் தனது ஜெபத்தில் தன்னில் ஒன்றும் இல்லை என்பதை வெளிப்படுத்தினார். எங்களுக்கு எதிராக வருகின்ற பெரும்படையை எதிர்த்து நிற்க எங்களுக்கு வலிமை இல்லை என்றும், நாங்கள் செய்ய வேண்டியது எதுவெனத் தெரியவில்லை என்றும் அவர் கூறும் வார்த்தைகள் யோசபாத் தன்னைத் தாழ்த்தினதை வெளிப்படுத்தும் சொற்றொடர்கள். கடவுள் தமக்கு முன்பாகத் தாழ்த்துகிற எவரையும் உயர்த்துகிறார், மகிமைப்படுத்துகிறார், கனப்படுத்துகிறார் உதாரணமாக நான் பேச இயலாதவன் என்ற மோசே, என் குடும்பம் சிறியது, நான் சிறியவன் எனக்கூறிய தாவீது உட்பட அனைவரையும் உயர்த்தினார்.

**4. கடவுளை முழுமையாய் நம்பினார்** (2 குறிப். 20 : 17)

யாகசியேல் என்ற தீர்க்கரின் வார்த்தை கடவுள் மீது யோசபாத் முழு நம்பிக்கை வைக்கக் காரணமாயிற்று. அதை உறுதி செய்யும் வண்ணமாகப் படைபுறப்படும் வேளையில் யூதா மனிதருக்கு யோசபாத் கூறிய செய்தி அமைகிறது. (2 குறிப். 20 : 20).

இந்தப் புதிய மாதத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் கடவுளை நோக்கிப் பார்ப்பவர்களாகவும், கடவுள் நமது வாழ்விலும், முன்னோர்களின் வாழ்விலும் நிறைவேற்றின அவருடைய செயல்களை எண்ணிப்பார்த்து நமது உண்மையான நிலையை அறிந்து அறிக்கை செய்து கடவுளை முழுமையாய் நம்பி அவர் ஏற்படுத்திய வாழ்வில் பயணம் தொடர்வோம். அப்போது நாமும் கடவுளை துதிப்பதற்காகத் துதியின் பள்ளத்தாக்கைக் கடந்து வரும் அனுபவத்தைப் பெறுவோம்.

**அருள்திரு. J. விக்டர் ஞானராஜ்**

01-04-2013

செக்கரியா 2 : 1-13

# பாதுகாக்கும் கடவுள்

"... அதைச் (எருசலேமைச்) சுற்றிலும் நானே நெருப்புச் சுவராய் அமைவேன்; அதனுள் உறையும் மாட்சியாய் விளங்குவேன்" என்கிறார் ஆண்டவர்" (செக். 2 : 5)

யூதா மக்கள் பாபிலோன் அடிமைத்தனத்தில் இருந்து நாடு திரும்பிக் கொண்டிருந்த காலம். ஆலயம் கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு பிரிவினர் பாபிலோனில் அடிமைத்தனத்தில் இருந்தாலும் பாதுகாப்பு, பராமரிப்பு, செழிப்பு இவற்றினால் கவரப்பட்டு அங்கேயே தங்கியிருக்க விரும்பினர் (வ. 7) காரணம் சொந்த நாட்டில் பாதுகாப்பு இல்லை, தேசம் பாழடைந்து கிடப்பதால் தொழில் செய்வது கடினம் என நினைத்து நாடு திரும்ப விரும்பவில்லை. இந்நிலையில் செக்கரியா தீர்க்கர் வழி கடவுள் அம்மக்களோடு பேசுகின்றார். இங்கு கடவுள் இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுக்கும் வாக்குத் தத்தங்களை விளக்கமாகக் காண்போம்.

**1. கடவுள் நெருப்புச்சுவராய் இருப்பார்** (செக். 2 : 5)

எருசலேம் கோட்டை இடிக்கப்பட்ட நிலையில், எருசலேம் பாதுகாப்பற்ற நகராய் காணப்படுகிறது என்ற குற்றச்சாட்டு மக்களால் கூறப்பட்ட நிலையில் கடவுள் அவர்களுக்குத் தான் நெருப்புச்சுவராக இருப்பேன் என்கிற வாக்குத் தத்தத்தைக் கொடுக்கின்றார். இந்த அனுபவத்தை இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்ட போதே பெற்றனர் (யாத். 14 : 19, 20). இதே போன்று சீரியர் படை, எலிசா தங்கியிருந்த பட்டணத்தைச் சூழ்ந்திருக்கையில் அதை பாதுகாக்க நெருப்புக் குதிரைகளால் அந்த மலை நிறைந்திருப்பதைப் பயந்து போன எலியாவின் வேலைக்காரனுக்குக் காட்டி அவனைத் தைரியப்படுத்துகின்றார் (2 அர. 6 : 17). இந்த உலகில் நாம் அமைத்துக் கொள்ளுகின்ற பாதுகாப்புகளைவிட இறைவன் தரும் பாதுகாப்பு உயர்வானது என்பதை இந்த இரண்டு நிகழ்வுகளும் உணர்த்துகின்றன.





**2. நம்நடுவில் குடிகொள்கிறார் (செக். 2 : 10)**

கடவுள் நம் மத்தியில் வாசம் செய்வதையே விரும்புகிறார். படைப்பில் ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் இருக்கும்போது அவர்களைத் தேடி கடவுள் வருவதாகக் காண்கிறோம். விடுதலைப் பயணத்தில் கடவுள் இஸ்ரயேல் மக்களின் வழிப்பயணத்தில் மேகத்தூண் நெருப்புத் தானாக அவர்களுடன் தங்கி இருக்கின்றார். அதன்பின்பு ஆசரிப்புக் கூடாரம், கடவுள் அவர்கள் நடுவில் தங்கியிருப்பதன் அடையாளமாயிற்று. இப்போது கடவுள் எங்கோ இருப்பவராக அல்ல நமது நடுவில் இருப்பவராக இருப்பதால் அங்கு நிறைவான மகிழ்ச்சி உண்டாகும் என்கிறார். மேலும் திவெ. 21 : 3-இல் விண்ணரசைக் குறித்துக் கூறும்போது மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது அவர்களிடத்தில் அவர் வாசமாய் இருப்பார் என்று கூறுகிறது. மேலும் திவெ. 21 : 22, 23 ஆகிய வசனங்கள் கடவுள் நம்மிடம் வாசமாய் இருக்கும்போது எந்தக் குறைவுகளும் ஏற்படா. ஏனெனில் கடவுளே எல்லாமுமாய் இருப்பார் என்கின்றன.

இந்த மாதத்தல் கடவுள் பாதுகாவலராக நம்முடன் தங்கி இருப்பதினால் நாம் பெறுகின்ற மகிழ்ச்சி, நிறைவு ஆகியவற்றைப் பெற்று மகிழுவோம். இந்த ஆசீர்வாதம் நமக்கு உரியதாக மாற கடவுள் நமக்கு அருள் செய்வாராக!

**அருள்திரு. J. விக்டர் ஞானராஜ்**

# 01-05-2013

இச. 8 : 1 - 18

## நினைவுகூர அழைக்கும் இறைவன்

"இந்நாளில் இருப்பது போன்ற செல்வங்களை ஈட்ட வல்ல ஆற்றலை உங்களுக்கு அளித்த உங்கள் கடவுளாகிய ஆண்டவரை நினைவில் கொள்ளுங்கள் " (எசா. 8 : 18)

இன்று உழைப்பாளர் நாள். அமெரிக்க ஐக்கிய நாட்டில் தங்களது உரிமைக்காகப் போராடிய தொழிலாளர்கள் மீது காவல்துறை தாக்குதல் நடத்தியதால் பலர் இந்த நாளில் உயிரிழந்தனர். இந்த நிகழ்வு தொழிலாளர் குறித்த அரசின் பார்வையை மாற்றியது. எனவே இந்த நாளின் நினைவாக தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகிறது. இதற்கு முன்னர் வடதுருவப்பகுதியில் துளிர்விடும் வசந்தகாலத்தின் தொடக்கத்தை நினைவுகூரும் பண்டிகையாகவும், ரோம சாம்ராஜ்யத்தில் மலர்களின் தெய்வமான Elora வின் பண்டிகையாகவும் இந்த நாள் கொண்டாடப்பட்டு வந்தது.

மனிதன் உழைத்து வாழ வேண்டும் என்பது கடவுளின் விருப்பம் (தொ.நூ. 2 : 15). தூயபவுலடியார் 2 தெச. 3 : 10-இல் உழைக்காதவன் உண்ணக்கூடாது என்கின்றார். எபே. 4 : 28-இல் உழைக்காதவனைத் திருடனுடன் ஒப்பிட்டுப் பேசுகின்றார். இதற்கு மாறாக நாம் பிறருக்கும் கொடுக்கும்படி தாராளமாய்ச் செல்வம் உண்டாயிருக்கும்படி உழைக்கவேண்டும் என்கிறார். உழைப்பினால் வளம் பெருகி வாழ்வு செழித்திருக்கும் போது தனக்கு உழைக்கும் ஆற்றலைத் தந்த கடவுளை ஒரு போதும் மறவாது அவரை நினைவு கூர வேண்டும்.

**1) கடவுள் தந்த மேன்மைகளுக்காக அவருக்கு நன்றி செலுத்தவேண்டும்** (இச. 8 : 10)

நாம் வாழும் மண்ணுலகும், அதில் வாழும் அனைத்தும் ஆண்டவருக்குச் சொந்தமானவை (தி.பா. 24 : 1). எனவே நாம் கடவுள் நமக்குத் தந்த ஆற்றலுக்காகவும் அதின் வழியாய் நாம் பெற்றுக்கொண்ட செல்வங்களுக்காகவும் எப்பொழுதும் ஆண்டவருக்கு நன்றி செலுத்த





வேண்டும். தி.பா. 113:1,7,8-இல் அவர் சிறியவனையும், எளியவனையும் உயர்த்தி அவர்களைப் பிரபுக்களோடும் அதிபதிகளோடும் உட்காரப்பண்ணுகிற படியால் அவரைத் துதியுங்கள் என்று கூறுகிறார். நாம் கடவுளைத் துதிக்கும் போது அவர் நம்மால் நினைக்கப்படுகின்றார்.

**2) கடவுளின் கற்பனைகளைக் கைக்கொள்ளுவதின் வழி கடவுளை நமது வாழ்வில் நினைக்கவேண்டும்.** (இச. 8:11)

வாழ்வில் வளம் பெருகும் போது அனேகர் கடவுளின் கட்டளைகளை மறந்து விட்டு மனம் போல வாழ முற்படுவது உண்டு. ஆனால் உண்மையாகக் கடவுளை மனதில் நினைக்கின்ற ஒவ்வொரு மனிதனும் அவரது கட்டளைகளையும், பிரமாணங்களையும் ஒருபோதும் மறப்பதில்லை. கற்பனைகளைக் கைக்கொள்வதால் நமது வாழ்வு வளம்பெறும் (இச. 6:3). ஒரு மனிதன் கடவுளின் கட்டளைகளைக் கைக் கொள்வதால் அவனது வழிகள் செம்மையாகும். இதனால் அவன் தவறான வீண் செலவுகளினின்று காக்கப்படுகிறான். எனவேதான் கடவுள் தமது ஆசீர்வாத மொழியாக உம் உழைப்பின் பயனை நீர் உண்பீர் என்று தி.பா. 128 : 2-இல் கூறுகிறார்.

**3) உங்களை மேன்மைப் படுத்தாதிருங்கள்** (இச. 8 : 17)

மனிதன் சில வேளைகளில் தனது வாழ்வில் வெற்றிகளைப் பெறும்போது அவற்றைத் தனது சாதனைகளாக மெச்சிக் கொள்வது உண்டு. அவ்விதமாக அவன் தன்னை முன்னிறுத்தும் போது கடவுளை மறக்கிறான். (1 சாமு. 15 : 12). சவுல் அமலேக்கியரை வெற்றி கொண்டபோது அது தனது பலத்தால் பெற்ற வெற்றி என்று எண்ணி தனக்கு வெற்றித்தூணை நாட்டுகின்றான். இது அவன் கடவுளை விட்டு விலகிச் செல்லக் காரணமாயிற்று. நேபுகாத் நேச்சார் தன்னை மேன்மைப்படுத்தினபோது அவன் கடவுளை மறக்கிறான், கடவுள் அவனைத் தண்டிக்கிறார் (தானி. 5 : 18, 20, 21). எனவே கடவுளை நாம் மறவாதிருக்க வேண்டும் என்றால் நம்மை மேன்மைப் படுத்தக்கூடாது.

நாம் உழைத்து வாழும் போது கடவுள் நம்மை ஆசீர்வதிக்கவேண்டும் என்றால் கடவுள் நமக்குத் தந்த மேன்மைகளுக்காக அவருக்கு நன்றி செலுத்தி, கடவுளின் கற்பனைகளைக் கைக்கொண்டு நம்மை மேன்மைப்படுத்தாமல் வாழ்ந்தால். நாம் கடவுளை மறவாமல் வாழ்வோம். கடவுள் நமக்கு ஆற்றலையும் நிறைவையும் தந்து ஆசீர்வதிப்பார்.

**அருள்திரு. J. விக்டர் ஞானராஜ்**

# 01-06-2013

ஏசா 55 : 1-13

## கடவுளைத் தேடுவோம்

**எனக்குச் செவிகொடுங்கள், என்னிடம் வாருங்கள்; கேளுங்கள்; அப்பொழுது நீங்கள் வாழ்வடைவீர்கள். (எசா. 55 : 3)**

கடவுளின் அருட்கொடைகளை அவர் இலவசமாகவும், தாராளமாகவும் தரக்காத்திருக்கின்றார். ஆனால் மனிதன் தனது பணத்தையும் உழைப்பையும் நேரத்தையும் பயனற்ற காரியங்களில் செலவிடுகின்றான். ஆனால் கடவுள் கொடுக்கும் கொடைகளைப் பெற்றுக்கொள்ளும்படி மனிதன் தன்னை ஆயத்தப்படுத்த வேண்டும் என்று அழைக்கிறார். இன்று கடவுளின் அருட்கொடைகளைப் பெற்றுக்கொள்ள நாம் செய்ய வேண்டிய ஆயத்தங்களைக் குறித்துக் காண்போம்.

**வாய்ப்புள்ள போதே கடவுளைத் தேடவேண்டும்** (எசா. 55 : 6)

வாய்ப்புகள் எப்போதும் வாய்ப்பதில்லை. கிடைத்த வாய்ப்புகளைத் தவறவிடும்போது, காலம் கடந்து விடுகிறது. கடவுள் ஏற்றகாலத்தில் நமக்குச் செவி கொடுக்க ஆயத்தமாய் இருக்கிறார். ஆனால் இதுவே ஏற்றக்காலம் (2 கொரி. 6 : 2). நினிவே மக்கள் இறைவனின் வார்த்தையைக் கேட்டவுடன் காலம் தாழ்த்தாமல் அவரைத் தேடினபடியால் வாழ்வு பெற்றனர் (யோனா 3 : 5, 6, 10).

**தீமையை விட்டு விலகிக் கடவுளைத் தேட வேண்டும்** (எசா. 55 : 7)

தீமையுடன் கூடிய எந்தத் தொழுகையையும் கடவுள் எற்பதில்லை (எசா. 1 : 13-17, 58 : 4). ஏனெனில் தீமை கடவுளுக்கு எதிரானது. கடவுள் தூயவர் (1 பேது. 1 : 16). இயேசு கூறிய உவமையில் தவறு செய்த மகன் மனம் திரும்பியபோது அவனை வேலைக்காரனாக அல்ல மகனாக ஏற்றுக்கொண்ட நிலையை இறைவனின் நிலையுடன் ஒப்பிட்டு பேசுகின்றார் (லூக். 15 : 18-20). கடவுளைத் தேடுவதில் தவறான அணுகுமுறை கூடாது (ஆமோஸ் 5 : 4, 5).





**இறைச் சித்தத்தை ஏற்கவேண்டும்** (எசா. 55 : 8, 9)

கடவுள் தன் விருப்பத்தின்படி செயல்பட வேண்டும் என மனிதன் விரும்புகின்றான். ஆனால் கடவுள் உங்கள் நினைவுகளைவிட என் நினைவுகளும் உங்கள் வழிகளை விட என் வழிகளும் உயர்ந்தவை என்று கூறி அவரது சித்தத்தை நமது வாழ்வில் முழுமையாய் ஏற்க அழைக்கின்றார்.

(எ.கா)

நாகமான் (2 அர. 5 : 10, 11, 14)

கெத்சமெனேயில் இயேசுவின் மன்றாட்டு (லூக். 22 : 42)

பவுல் (கால. 2 : 20)

இந்த உலகில் வாய்ப்புள்ள காலத்தில் கடவுளைத் தேடி நமது குறைவுகளை விட்டு மனம் திரும்பி புதிய வாழ்வைத் தெரிந்து கொண்டு இறைசித்தத்தை நம்மில் முழுமையாய் ஏற்போமானால் கடவுள் நமக்கு இலவசமாய்த் தரக் காத்திருக்கும் அவரது அனைத்துக் கொடைகளையும் தாராளமாய்த் தருவார்.

**அருள்திரு. J. விக்டர் ஞானராஜ்**

| 01-07-2013 |
|---|

ஏசா. 1 : 24 - 31

# புதுப் பெயரிட்டு அழைக்கும் இறைவன்

அப்பொழுது எருசலேம் "நீதியின் நகர்" எனப் பெயர்பெறும்; "உண்மையின் உறைவிடம்" எனவும் அழைக்கப்படும். (எசா. 1 : 26).

தங்கள் வாழ்வில் தீமைகளால் கறைபடுத்திக் கொண்ட இஸ்ரயேல் மக்களுக்குக் கடவுள் தரும் புதிய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார். கடவுள் தரும் புது வாழ்வை நாம் பெற்றுக்கொள்ளும்படி அவர் நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன?

**1) வாழ்வில் மாற்றம்** (எசா. 1 : 16)

கடவுள் நம்மை உயர்த்த வேண்டும் என்றால் நமது வாழ்வு புதிய வடிவம் பெற வேண்டும். சகேயு இயேசுவால் ஆபிரகாமின் மகன் என்று சுட்டிக்காட்டப் படுமுன் தனது வாழ்விற்கு புதிய வடிவம் கொடுத்தார் (லூக். 19 : 8)

**2) பார்வையில் மாற்றம்** (எசா. 1 : 17)

இந்த உலகில் நீதியையும் நியாயத்தையும் உறவையும் தேடும் புதிய பார்வை வேண்டும். எங்கே சுயம் மேலோங்குகிறதோ அங்கே நீதியும் நியாயமும், உறவும் உடைக்கப்படுகிறது (ஏசாயா 1 : 23) எனவேதான் கடவுள் தம் மக்களிடம் நியாயம், நீதி, மனத்தாழ்மை இவற்றைத் தேடும்படி கட்டளை கொடுக்கிறார் (செப். 2: 3). இவைகள் நமது வாழ்வில் நீதியை நிலைநாட்டி உறவுகளைக் கட்டியெழுப்ப உதவும். யாக்கோபு சுயநலனை மட்டும் நாடியவனாக இருந்தபோது அண்ணனை வஞ்சிக்கத் துணிந்தான் (தொ.நூ. 25 : 30, 31). ஆனால் அவன் பார்வையில் மாற்றம் வந்தபோது சுயத்தை மறந்துவிட்டு பகிர்ந்து கொள்ளவும் உறவுகளைக் குறித்து மகிழவும் துணிந்தான் (தொ.நூ. 33 : 10).

**3) மனதில் மாற்றம்** (எசா. 1 : 19)

இங்கு கடவுளுடன் ஒன்றுபட்ட மனம் உடையவராய் வாழ அழைப்பு கொடுக்கிறார். கடவுள் மனிதனைத் தம் சொந்த சாயலில்





படைத்ததன் காரணம் அவன் இறைவனோடு இணைந்து செயல்பட வேண்டும் என்பதற்காகத்தான் (தொ.நூ. 1 : 26, 27). ஆனால் மனிதன் தன்னில் தீயவனுக்கு இடமளிப்பதால் இறைவனை விட்டு வாழ பிரியப்படுகிறான். எனவே கடவுள் மறுபடியும் மனிதனை தம்முடன் ஒன்றித்து புதிய ஆவியுடையவனாகக் கடவுளின் சாயலை வெளிப்படுத்த அழைப்பு கொடுக்கின்றார் (எபேசி. 4 : 23, 24). இதற்கு இனி வாழ்வது நான் அல்ல கிறிஸ்து என்னில் வாழ்கிறார் என்ற பவுலாரின் சிந்தை நமக்குத் தேவை (கலா. 2 : 20).

நாம் வாழ்வை மாற்றி அமைத்து, சுயத்தை விட்டு விட்டு உறவுகளைக் கட்டியெழுப்பும்படி புதிய பார்வை உடையவர்களாய், இறைவனின் சித்தத்தை அறியும் படி இறைவனோடு மனதுடன் இணைந்து செயல்படும் புதிய மனிதர்களாய் மாறும் போது "நாம் நீதியின் நகர் என்றும் உண்மையின் உறைவிடம் என்றும் பெயர் பெறுவோம்".

**அருள்திரு. J. விக்டர் ஞானராஜ்**

**01-08-2013**

எசா. 48 : 12 - 20

# நிறைவாழ்வருளும் இறைவன்

உன் நிறைவாழ்வு ஆற்றைப் போலும், உன் வெற்றி கடல் அலை போலும், பாய்ந்து வந்திருக்கும் (எசா. 48 : 18).

திருமறையைப் பொறுத்த வரையில் நீதியும் நிறைவாழ்வும் ஒன்றையொன்று பிரிக்கமுடியாதது. ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று நீதி உள்ள இடத்தில் நிறைவாழ்வும் நிறைவாழ்வு உள்ள இடத்தில் நீதியும் தங்கி இருக்கும். (தி.பா. 85 : 10, எசா. 32 : 17) இந்த நீதியும் நிறைவாழ்வும் நமது வாழ்வில் வெளிப்பட கடவுள் நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன?

**1) கடவுளின் விருப்பம் செய்தல்** (எசா. 48 : 14)

இங்கு கடவுளுக்கு பிரியமானவர் அவர் சித்தம் செய்வான் என்று கூறப்பட்டுள்ளது. கடவுள் இந்த உலகில் மனிதர்கள் மூலமாக தாம் விரும்புவதை செய்ய நினைக்கிறார். அதற்காகவே மனிதனை அவர் அழைக்கிறார். (எசா. 6 : 8) எனவேதான் பவுலார் உரோ. 12 : 2-இல் நாம் அவரது சித்தத்தைப் பகுத்தறிய வேண்டும் என்கிறார்.

**2) கடவுளின் கட்டளையை கவனித்தல்** (எசா. 48 : 18)

நாம் எப்படி நடக்கவேண்டும் என்று நமக்கு போதித்து வழிநடத்துகின்றவர் கடவுள். (எசா. 48 : 17). இந்தக் கட்டளைகள் நாம் நன்றாய் இருப்பதற்காக இறைவனால் தரப்பட்டவை (இச. 6 : 3) அவகைளை நாம் அறிவது மட்டுமல்ல அவற்றை நமது பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும் (இச. 6 : 6, 7).

**3) அடிமைத்தனத்தை விட்டு வெளியே வரவேண்டும்** (எசா. 48 : 20)

இஸ்ரயேலர் அடிமைத்தனத்தில் பாபிலோனில் வாழ்ந்த நாட்களில் அது சுகமான வாழ்க்கை என்று நினைத்து அதிலே தங்கியிருக்க விரும்பினர். எனவேதான் பாபிலோனில் இருந்து புறப்படுங்கள், கல்தேயரைவிட்டு ஓடிவாருங்கள் என்கிறார். இன்றைய மனிதனை





அடிமைப்படுத்தி வைத்திருக்கும் தீயபழக்கவழக்கங்கள், பாவம், தீய உறவுகள், தீய குணங்கள், மூடப்பழக்கவழக்கங்கள் இப்படிப்பட்ட தீமைகளின் பிடிக்கு அடங்கிக்கிடக்காமல் அவற்றினின்று தைரியமாய் வெளியே வரவேண்டும் என்று அழைக்கிறார் (கலா. 4 : 7-10). கலா. 5 : 1-இல் சுயாதீன நிலைமையில் நிலைகொண்டிருக்க அழைக்கிறார்.

நமது வாழ்வில் நீதி, நிறைவாழ்வு நிலைக்க கடவுளின் சித்தம் செய்வோம், கடவுளின் கட்டளையை அறிந்து அதின்படி வாழ்வோம், நம்மை அடிமைப்படுத்தி வைத்திருக்கின்ற கட்டுகளை அறுத்துவிட்டு விடுதலையின் வாழ்வை கடவுளுக்குள் அனுபவிப்போம்.

**அருள்திரு. J. விக்டர் ஞானராஜ்**

## 01-09-2013

ஒசே. 14 : 1 - 7

# செழிப்பாக்கும் இறைவன்

நான் இஸ்ரயேலுக்குப் பனி போலிருப்பேன் (ஓசே. 14 : 5)

இறைவனின் அன்பைக் கூறும் ஒசேயா (ஒசே. 6 : 1, 11 : 4) நாம் வழிதவறினாலும் விடாமல் தொடரும் அன்பு இறைவனின் அன்பு அந்த அன்பு நம்மை மீட்புப் பெற அழைக்கின்றது என்கிறார்.

அவ்விதம் மீட்பு பெறும் ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதம் பற்றி அறிந்து கொள்ள அழைக்கப்படுகிறேன்.

**இறைவன் பனியைப் போல் இருப்பார்**

பனிக்கு உரிய இரண்டு தன்மைகள் திருமறையில் இறைவனின் செயல்பாடுகளுடன் ஒப்பிட்டுக்கூறப்பட்டுள்ளது. அவைப் பனிப்பொழிவை அளவிட முடியாது. இரண்டாவதாக பனி எளிதில் மறைந்து போகும் தன்மை உடையது.

**1) அளவிட முடியாதது**

இறைவன் பொழியும் ஆசீர்வாதங்களில் ஒன்று பனி. இது அளவில்லாமல் பொழியும் (தி.பா. 133 : 3-இல் மனுக்குலம் ஒற்றுமையாய் வாழும் அனுபவத்தில் இறைவனின் ஆசி நிறைவாய் தங்கும் என்பதை கூறும்போது பனியை உவமையாகக் கூறுகிறார்.

**2) எளிதில் மறைந்து போகும் தன்மை உடையது**

ஒசே. 6 : 4, 13 : 3-இல் இக்கருத்தை காணலாம். ஒசே. 14 : 4, 5-இல் கடவுள் இஸ்ரயேல் மக்களுக்குத் தான் பனியைப் போல் இருப்பதாகக் கூறுகிறார். இங்கு பனி மறைவதுபோல் இருப்பதாகக் கூறுகிறார். இங்கு பனி மறைவதுபோல் நாம் கடவுளிடம் திரும்பும் போது கடவுளின் கோபம் மறைந்து அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்கி அவர்களிடம் மனப்பூர்வமாய் அன்பு செலுத்துவேன் எனக் கூறுகிறார். இதன்மூலம்





கடவுளின் கோபம் நிரந்தரமானது அல்ல. ஆனால் கடவுளின் அன்பு நிரந்தரமானது என்பதை அறிகிறோம்.

**3) லீலி மலரின் அழகு** (இபா. 2 : 1, 2)

பள்ளத்தாக்குகளில், முட்களின் நடுவிலும் அழகிய லீலி மலர் காட்சி தருவது போல் உருக்குலைந்த இஸ்ரயேல் மக்களின் வாழ்வை அழகுபடுத்துகின்றவராய் கடவுள் இருப்பார். ஒசே. 14 : 6-இல் செழிப்புமிகு வாழ்வைக் கடவுள் அவர்களுக்குத் தருவதாகக் கூறுகிறார்.

**4) லீபனோனின் உறுதி**

லீபனோன் என்றாலே கேதுரு மரம் நினைவுக்கு வரும். கேதுரு பற்றி (எசேக் 31 : 3, 5, 6, 7) ஆகிய வசனங்கள் அதன் உயரம், செழிப்பு, உறுதியான அடிமரம், ஆழமான ஆணிவேர் இவற்றினால் அது மேன்மை பெற்றது. அதேப் போன்று லீபனோன் மகிமைக்கு அடையாளம் (எசா. 35 : 2, 60 : 13).

இறைவன் அருளுகின்ற இத்தகைய சிறப்பான ஆசீர்வாதத்தை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள நாம் செய்ய வேண்டியது ஆண்டவரிடம் திரும்புவதே. ஒசே. 14 : 1-இன் படி கர்த்தரிடத்தில் திரும்பும் முகமாக

1. நாம் நமது பாவங்களை அறிக்கையிடவேண்டும் ஒசே. 14 : 2.

2. சுயம் சார்ந்து, கடவுள் அல்லாதவற்றின் மீது நாம் கொள்ளும் நம்பிக்கை அனைத்திற்கும் விடை கொடுக்கவேண்டும் ஒசே. 14 : 3

அப்போது கடவுள் தமது நிறைவான ஆசியை நம்மீது பொழிந்து நம்மை நிறைவாக்குவார்.

**அருள்திரு. J. விக்டர் ஞானராஜ்**

## 01-10-2013

எசா 52 : 1 - 8

# ஆற்றல் அருளும் ஆண்டவர்

விழித்தெழு, விழித்தெழு, சீயோனே, உன் ஆற்றலை அணிந்து கொள் (எசா. 52 : 1)

பாபிலோனியச் சிறையிருப்பின் போது இஸ்ரயேல் மக்கள் தங்கள் வரலாறு அழிந்துவிட்டது தங்கள் ஆற்றல் வெறுமையாகிவிட்டது என்று நினைத்தனர். ஏனெனில் அவர்கள் வாழ்வின் ஆதாரமான நாடும் இல்லை, கடவுளின் ஆலயமும் இல்லை. இந்நிலையில் எசாயா தீர்க்கன் மூலம் அவர்களைச் சந்தித்த கடவுள் அவர்களுக்குக் கொடுத்த அழைப்பு இது. இன்று தங்கள் பிரச்சனைகளுக்குள் மூழ்கி இனி வாழ்வது எப்படி? என்ற கேள்விக்குறியோடு இருக்கும் மக்களைப் பார்த்து கடவுள் இவ்விதம் கூறுகிறார். எவ்விதமாய் நம்மைக் கட்டியிருக்கும் கட்டுக்குள் இருந்து எழுந்து வரவேண்டும் என்பதை இன்று காண்போம்.

**அழகுறு ஆடைகளை அணிந்து கொள்** (எசா. 52 : 1)

ஆடை அலங்காரத்திற்கும், மகிமைக்கும் அடையாளம் (விப. 28 : 40). அலங்கார ஆடை அணிதல் சிறப்பு நிகழ்வுகளுக்குத் தன்னை ஆயத்தப்படுத்துதலைக் காட்டுகிறது (எசா. 61 : 10). இங்கு இஸ்ரவேலர் மக்கள் இனி தங்களுக்குள் எந்தச் சிறப்பு நிகழ்வுகளும், கொண்டாட்டங்களும் இல்லை என நினைத்து இருந்த காலத்தில் கடவுள் வரப் போகும் விடுதலை வாழ்வுக்காக ஆயத்தமடையும்படி அழைப்பு கொடுக்கின்றார்.

**2) புழுதியைத் தட்டிவிட்டு எழுந்திரு** (எசா. 52 : 2)

தூசி அல்லது புழுதி நமது வாழ்வில் ஒட்டிக் கொண்டிருக்கிற பாவத்தைக் குறிக்கிறது. (செக். 3 : 4). எனவேதான் தவறு செய்த தாவீது என்னை ஈசோப்பினால் சுத்திகரியும் என்று கடவுளிடம் விண்ணப்பிக்கின்றார் (திபா. 51 : 7). எனவே தங்கள் பாவங்களைக் கடவுளின் சமூகத்தில் அறிக்கையிட்டு தூய்மை அடைந்தவர்களாய் எழும்ப நம்மை அழைக்கிறார்.





**3) கட்டுகளை அவிழ்த்து விடு** (எசா 52 : 2)

கட்டுகள் ஒரு மனிதனை செயல் இழக்கச் செய்து விடும். எப்போது அவன் கட்டுகளில் இருந்து விடுபடுகிறானோ அப்போது அவன் செயலாற்றல் உள்ளவனாக மாறுகிறான். திப. 3 : 8-இல் பிறந்தது முதல் நடந்த அனுபவம் இல்லாதவன். பேதுரு நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் எழுந்து நட என்ற போது தன்னால் நடக்கமுடியாது என்ற கட்டை தூர எறிந்தான். ஆற்றல் மிகுந்த சிம்சோன் பெண் ஆசை என்ற கட்டினால் விழுந்துபோனான் (நீதி. 16 : 16, 17 a) எனவே நம்மை அடக்கி வைத்திருக்கின்ற மனதின் கட்டுகளை அவிழ்த்து விட்டு நம்பிக்கையுடன் செயல்படுவோம்.

**4) ஆற்றலை அணிந்து கொள்** (எசா 52 : 1)

நமது ஆற்றலை பல வேளைகளில் நாம் அறியாமல் போகின்றோம். கிதியோன் ஆற்றல் மிகுந்த வீரன். ஆனால் சூழ்நிலை அவனைத் தளர்ந்து போகச் செய்திருந்தது. அனால் கடவுள் அவனிடம் உள்ள ஆற்றலை அறியச் செய்கின்றார் (நீதி. 6 : 12). தாவீது கடவுள் தன்னுடன் இருக்கும் போது தனது ஆற்றல் எத்தகையது என்று அறிந்தபடியால் தைரியமாய்க் கோலியாத்தை எதிர்க்கத் துணிந்தான் (1 சாமு. 17 : 37).

அன்புடையோரே தடைகள் வாழ்வில் வரலாம், ஏமாற்றங்கள், தோல்விகள் வரலாம். ஆனால் கடவுள் நம்முடன் இருக்கும் போது அவைகள் நிரந்தரம் அல்ல. இதைப் புரிந்து கொண்டு நம்பிக்கையுடன் தைரியமாய்ச் செயல்படுவோம்.

**அருள்திரு. J. விக்டர் ஞானராஜ்**

## 01-11-2013

திபா. 91

# பதிலளிக்கும் கடவுள்

அவர்கள் என் பெயரை அறிந்துள்ளதால், அவர்களைப் பாதுகாப்பேன்.
திபா. 91 : 14

கடவுளின் பாதுகாவலும் பராமரிப்பும் மேலானது என்பதை நமக்கு உணர்த்தும் திருப்பாடல் இது. இந்தத் திருப்பாடலில் ஆசிரியர் தன்னுடைய வாழ்வில் கடவுளின் பாதுகாவலைப் பெற்று அனுபவித்ததின் அடிப்படையில் கடவுள் தம்மை நம்புகிற மக்களை எவ்விதமாகப் பாதுகாக்கிறார் என்பதைக் கூறுகிறார். இறுதிப்பகுதியில் கடவுளின் பாதுகாவலுக்குள் தன்னை ஒப்படைக்கும் மனிதனைத் தான் எவ்விதம் பராமரிப்பேன் என்பதைக் கடவுள் கூறுகிறார். அவற்றை இங்கு விளக்கமாகக் காண்போம்.

**1. விடுவித்துப் பாதுகாப்பவர்** (திபா. 91 : 14)

கடவுள் மீது அதிக வாஞ்சை கொண்டு அவரைச் சார்ந்து வாழுகின்றவர்கள் கடவுள் அருளும் விடுதலையையும், அவர் தருகின்ற பாது காவலையும் பெறுவார்கள். தானியேல் கடவுள் மீது அதிக வாஞ்சை கொண்டிருந்தார். இதனால் அவரது எதிரிகள் சதி செய்து அரசனை ஏமாற்றி முப்பது நாள் அரசனை நோக்கி மட்டுமே விண்ணப்பம் செய்ய வேண்டும் எனவும், மீறுபவர்கள் சிங்கக் கெபியில் போடப்படுவார்கள் எனவும் கட்டளை பெற்றனர் (தானி. 6 : 7-9). இதைக் கண்டு அஞ்சாத தானியேல் கடவுளிடம் தனது வழக்கத்தின்படி மூன்று வேளை விண்ணப்பம் பண்ணினார். அவரைச் சிங்கக் கெபியில் போட்டபோது சிங்கங்கள் அவரை ஒன்றும் செய்யவில்லை. (தானி. 6 : 22) நமது வாழ்விலும் உண்மையான வாஞ்சையோடு கடவுளைச் சார்ந்து வாழும்போது கடவுள் தமது ஆற்றலை வெளிப்படுத்துவார்.

**2. பதிலளித்து உடன் இருப்பவர்** (திபா. 91 : 15)

கடவுளின் பாதுகாவலுக்குள் தன்னை ஒப்படைத்த மனிதன்





அவரை நோக்கிக் கூப்பிடும்போதெல்லாம் கடவுள் அவனுக்கு பதில் கொடுப்பார். ஏனெனில் அவர் எப்போதும் அவனுடன் இருப்பார். மோசேயைக் கடவுள் அழைக்கும்போது அவனுக்குக் கொடுத்த வாக்குறுதி நான் உன்னோடு இருப்பேன் என்பதாகும் (விப. 3 : 12). இஸ்ரயேலரின் பயணக்காலத்தில் அவர் கடவுளை நோக்கிக் கூப்பிட்ட வேளைகளில் எல்லாம் கடவுள் அவருக்குப் பதில் கொடுத்தார் (விப. 14 : 15, 15 : 25, யாத். 17 : 4-6)

**3. நிறைவாக்கி மீட்பவர்** (திபா. 91 : 16)

கடவுள் ஆயுளைத் தருகிறார். கடவுளை முழுமையாய்ச் சார்ந்து வாழும் மக்களுக்கு இந்த ஆயுள் காலம் நிறைவுள்ளதாய் இருக்கும். ஏனெனில் இந்த உலகம் கொடுக்கக் கூடாத சமாதானத்தை வைத்துப்போகிறேன் என்று வாக்குப் பண்ணியுள்ளார் (யோவா. 14 : 27). ஏனெனில் இந்தச் சமாதானம் இயேசு கிறிஸ்துவின் வழியாய் நாம் பெற்றுக் கொள்ளும் மீட்புடன் இணைந்தது (யோவா. 3 : 16, 18).

நமது வாழ்வில் உன்னதமானவரின் மறைவில் நாம் வாசம் பண்ணும்போது கடவுள் நம்முடன் இருந்து இந்த ஆசீர்வாதங்களின் பங்காளிகளாய் நம்மை மாற்றுவார்.

**அருள்திரு. J. விக்டர் ஞானராஜ்**

# 01-12-2013

எசா. 41 : 1-10

## திடப்படுத்தும் தெய்வம்

அஞ்சாதே, நான் உன்னுடன் இருக்கிறேன். (எசா. 41 : 10)"கிறி

கடவுள் இஸ்ரயேலுக்கு கொடுக்கும் விடுதலையைக் குறித்து ஏசாயா தீர்க்கன் மூலமாக இந்த வார்த்தைகளைக் கூறுகிறார். இங்கு அடிமைத்தனம், விடுதலை தாமதமாதல், இதனால் ஏற்பட்ட நம்பிக்கை இழப்பு ஆகிய கடினமான சூழ்நிலைகளில் கடவுளின் வார்த்தை மக்களைச் சந்திக்கின்றது. இங்கு கடவுள் கொடுக்கும் வாக்குத்தத்தங்களை விளக்கமாகக் காண்போம்.

**1. அஞ்சாதே** (எசா 41 : 10)

கடவுள் கலங்கி நிற்கும் மக்களைச் சந்திக்கும்போது அவர்களைத் திடப்படுத்தும்படியாய்ப் பயன்படுத்தும் வார்த்தை இது. ஏனெனில் கலக்கமடைந்த மக்கள் இறைவனின் கருவிகளாகப் பயன்படுத்தப்பட முடியாது. எனவே அவர்களது பயத்தைப் போக்கி பின்னர் தம்முடைய திட்டத்தில் பயன்படுத்துகின்றார் (யோசுவா 1 : 9).

**2. உனக்கு உதவி செய்வேன்** (எசா. 41 : 10)

கடவுள் ஆதரவற்ற மக்களின் சகாயர். எனவேதான் கடவுளை நோக்கி தாவீது திபா. 27 : 9-இல், நீரே எனக்குச் சகாயர் என்கிறார். ஆபத்து வரும் வேளைகளில் எல்லாம் நம்மைக் காக்கிறவர் அவரே. 2 குறிப். 20-ஆம் அதிகாரத்தில் மோவாப்பியரும், அம்மோனியரும் யோசபாத்திற்கு நேராய் வரும்போது அவர் கடவுளை நோக்கி விண்ணப்பம் பண்ணினார். அந்த விண்ணப்பத்திற்குச் செவிகொடுத்த கடவுள் அவரே சகாயராக வந்து மோவாப்பியரும் அம்மோன் புத்திரரும், சேயிர் மார்க்குடிகளும் ஒருவரை ஒருவர் தங்களை அழித்துக்கொள்ள கடவுள் அனுமதித்தார். அதன் மூலம் யோசபாத்திற்குக் கடவுள் சகாயராய்ச் செயல்பட்டார்.





**3. நீதியின் வலதுகரத்தினால் தாங்குவேன்** (எசா. 41 : 10)

கடவுளின் வலது கரம் அவரது ஆற்றமிகு செயல்பாட்டின் அடையாளம். விப. 15 : 6-இல் உமது வலது கரம் பலத்தினால் மகத்துவம் சிறந்திருக்கிறது என்றும் தம்மை நம்புகிறவர்களை வலது கரத்தினால் தப்புவித்து இரட்சிக்கிறவர் (திபா. 17 : 7). என்றும் குறிப்பிடுவதினின்று இது விளங்குகிறது. இச. 33 : 2-இல் கடவுளின் வலது கரத்தினின்று அக்கினிமயமான அவரது பிரமாணம் புறப்பட்டது என்று கூறுகின்றது. கடவுள் தமது ஆற்றலினாலும், தமது பிரமாணங்களினாலும் நம்மைத் தாங்கி பாதுகாப்பான, நீதியான பாதையில் நம்மை நடத்துவார்.

நாம் எந்நிலையில் இருந்தாலும் கடவுளை நாம் சார்ந்து வாழும்போது அவர் நம்மைத் திடப்படுத்துவார், நமக்கு ஆதரவு தருகின்றவராக, நம்மை நீதியின் பாதையில் நடத்தி தமது வல்லமையினால் பாதுகாப்பவராகச் செயல்படுவார்.

**அருள்திரு. J. விக்டர் ஞானராஜ்**

# தவக்கால அருளுரைகள்

**13-02-2013** **தவக்காலத் தொடக்கம்**

எரே. 9 : 17-21 **சாம்பற் புதன்** கலா. 6 : 11-18

## சிலுவை: சுயக்கட்டுப்பாடும், பிறர்நல வாழ்வும்

" . . . என் உடலில் உள்ள தழும்புகள் நான் இயேசுவுக்கு அடிமை

முன்னுரை :

நாம் கடைப்பிடிக்கின்ற 40 நாள் லெந்து கால முறை கிபி 7-ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. லெந்து காலத்தில் முதல் நாள் சாம்பல் புதன். குருத்தோலை ஞாயிறில் பயன்படுத்திய குருத்தோலைகளைச் சேகரித்து, லெந்து காலத்திற்கு முந்தைய நாளில் சுட்டெரித்து சாம்பலாக்கி அதனை புனித சாம்பலாகப் போற்றுவர். லெந்து கால முதல் நாளான புதன்கிழமை வழிபாட்டில் ஆயர், பக்தர்களின் நெற்றியில் அச்சாம்பலால் சிலுவை அடையாளமிட்டு ஆசி கூறுவது மரபு. இந்த மரபு இன்றும் கத்தோலிக்க திருச்சபைகளில் காணப்படுகிறது. எனவே தான் அந்நாள் சாம்பல் புதன் என்று அழைக்கப்படுகிறது.

லெந்து :

Lent என்னும் ஆங்கில சொல் Lentus என்னும் இலத்தின் சொல்லியிருந்து தோன்றியதாகும். ற்றொடரின் மொழி பெயர்ப்பாகும். இதற்கு வசந்த காலம் அல்லது துளிர்விடுதல் என்பது பொருள். இலையுதிர் காலத்துக்குப்பின் மரங்கள் துளிர்விடும் வசந்தகாலப் பருவ நிலையினை "லெந்து" என்பதைப் போன்று, -ஆன்மிக வாழ்விலும் பாவத்துக்கு மரித்து, நீதிக்கு உயிர்ப்பிக்க, கனியற்ற இருளின் செயல்களைக் களைந்து, ஆவியின் கனிதர ஆயத்தமாக, வாழ்வை ஆண்டவருக்கு நேராக்க, ஜெபிக்க, தியானம் செய்ய, உபவாசிக்க, ஆவிக்குரிய வாழ்வு துளிர்க்கவும், செழிக்கவும் எடுத்துக் கொள்ளும் ஆன்மீக முயற்சி காலத்தை லெந்துகாலம் என்கிறோம்.

சாம்பல் :

எபேர் (eper) என்ற எபிரேயச் சொல் சாம்பல் என்ற பொருளைத் தருகிறது. திருமறையில் இச்சொல் உண்ணா நோன்போடு இணைந்துச் சொல்லப்படுகிறது. மேலும் அடையாளப் பொருளாகவும்





திருமறையில் சொல்லப்படுகிறது.

i) யோபு 42 : 6 தாழ்மைக்கு அடையாளம்

ii) தொ. நூ. 18 : 2 ஒன்றுமில்லாமைக்கு அடையாளம்

iii) 2 சாமு. 13 : 19 துக்கத்துக்கு அடையாளம்

iv) யோனா 3 : 6 மனந்திரும்புதலுக்கு அடையாளம்

மேலும், இரட்டுடுத்தி அல்லது ஆடையைக் கிழித்தெறிந்து சாம்பலில் அமர்ந்திருத்தல் பழைய ஏற்பாட்டின் வழக்கத்திலிருந்த செயலாகும். (2 சாமு. 13 : 19. எஸ்றா 4 : 3, ஏசா. 58 : 5, எரே. 6 : 26, தானி. 9 : 3)

அபார் (apar) என்ற சொல்லை சாம்பல் என்று செப்துவஜிந்து ஆசிரியர்கள் மொழி பெயர்த்திருக்கிறார்கள் (எண். 19 : 17). பியா (piah) என்ற எபிரேயச் சொல் சூறையின் சாம்பல் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது (யாத். 9 : 8, 10). ஸ்போதோஸ் (spodos) என்று சாம்பலுக்குச் சொல்லப்படும் கிரேக்க சொல் புதிய ஏற்பாட்டில் மனந்திரும்புதல், தூய்மைப்படுத்துதல் என்ற பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. (மத். 11 : 21, லூக். 10 : 13, எபி. 9 : 13). இந்தச் சிறப்பு நாளில் சிலுவை : சுயக் கட்டுப்பாடும், பிறர் நல வாழ்வும் என்ற கருத்தில் தரப்பட்ட திருமறைப் பகுதிகளின் அடிப்படையில் தியானிப்போம்.

**1. தூய வாழ்வு :** (எரே. 9 : 17-21)

கி.மு. 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 6-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தீர்க்கதரிசனம் உரைத்த எரேமியா தீர்க்கர், யூதா நாட்டு இறைமக்களுக்கு வர இருந்த தண்டனையையும், அதற்கு காரணமாயிருந்த அவர்களது கட்டுப்பாடற்ற வாழ்வையும் சுட்டிக்காட்டுகின்றார். கடவுள் அவர்களை தண்டியாமல் விடார் என்கிறார். காரணம் அவர்கள் உண்மை பேசாதவர்கள், அடுத்தவர்களை வஞ்சிக்கிறவர்கள், அக்கிரமம் செய்ய உழைப்பவர்கள், வஞ்சனையின் நடுவில் வாழ்கிறவர்கள். இதனால் இறைவன் வருந்துகிறார் என்கிறார் எரேமியா. இந்தக் கட்டுப்பாடற்ற, தூய்மையற்ற வாழ்விலிருந்து விடுதலை பெற சிலுவை வழிகாட்டுகிறது. எரே. 9 : 20-இல் உங்கள் செவிகள் ஆண்டவரின் வசனத்தை ஏற்றுக் கொள்ளட்டும். அப்போது நீங்கள் தூய வாழ்வை பெறுவீர்கள். மேலும் உங்கள் இதயம் கட்டுப்பாடுடன் கூடிய உள்ள வாழ்வுக்கு நேராகத் திரும்புவதற்கு ஏற்ற நாள்கள் என்பதையும் வெளிப்படுத்தப்படுவதைக் காண்கிறோம். ஆக, சிலுவை தூய்மையான வாழ்வுக்கு நம்மை அழைக்கிறது.

**2. சான்றுள்ள வாழ்வு :** (கலா. 6 : 11-18)

தூய பேதுரு அடிகளார் வாழ்வில் இரண்டு நிலைகளில் துன்பம்

வருகிறது எனக் குறிப்பிடுகிறார். i) நன்மை செய்வதால் வரும் துன்பம், ii) தீமை செய்வதால் வரும் துன்பம். இவற்றில் நன்மை செய்து வரும் துன்பமே மேலானது என்பதை பேதுரு அடிகளார் குறிப்பிடுகிறார் (1 பேது. 2 : 20). இயேசுநாதர் நீதியின் பொருட்டுத் துன்புறவோர் பேறுபெற்றோர்; விண்ணரசு அவர்களுக்குரியது என்கிறார் (மத். 5 : 10). தூய பவுலடியாரின் வாழ்வில் இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது. தவறான வழிகளில் தப்பித்துச் செல்வதையோ துன்பமற்ற வாழ்வு வாழ்வதையோ அவர் விரும்பாமல் துன்பச் சூழலிலும் இறைப் பற்றுமையில் உறுதியோடு இருந்து சான்றுபகர்வதையே விரும்பினார். எனவே சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் கதவுகள் திறக்கப்பட்டு சங்கிலிகள் அனைத்தும் கழன்றாலும் அங்கேயே இருந்து சிறைச்சாலைக்காரரின் சிந்தனையைத் தூண்டினார். திறந்து விடப்பட்டாலும் தப்பித்துச் செல்லாத இவரது சான்றுள்ள வாழ்வு சிறைச்சாலைக்காரரையும், அவரது குடும்பத்தையும் திருமுழுக்குப் பெற்றுக்கொள்ளத் தூண்டியது (தி.ப. 16 : 27-33) ஆம், சான்றுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு நாம் அழைக்கப்படுகிறோம்.

3. **இணைந்த வாழ்வு :** (மாற்கு 10 : 32-34)

எருசலேமுக்கு நேராய்த் தமது சீடர்களுடன் பிரயாணமாய்ச் சென்ற இயேசுநாதர் தாம் அனுபவிக்கப்போகும் பாடுகளைக் குறித்து 3-ஆம் முறையாகப் பேசிக்கொண்டு வந்தார். பாடுகளில் இறைமக்களும் இணைவதற்காகவே சீடர்களிடம் பாடுகளை முன்னுரைத்தார். பாடுகள் நிறைந்த வாழ்க்கை, கட்டுப்பாடான வாழ்க்கை, சிலுவையோடு இணைந்த வாழ்க்கையாக நம் வாழ்வு அமைய வேண்டும். பாடுகளின் வழியில் அடையும் வாழ்வையும், பிறர் வாழ்வுக்காய் நற்செயல்களைச் செய்யும் வாழ்வில் இயேசு கிறிஸ்துவோடு இணைந்து செயல்படுகின்றவர்களாய் வாழ வேண்டும். அதற்காக இயேசு கிறிஸ்து தம் சீடர்களையும் ஆயத்தப்படுத்தி தம்மோடு இணைந்து கொள்வதற்குத் திடப்படுத்தினார். பவுலடியார் இயேசுகிறிஸ்துவின் வாழ்விலிருந்து கற்று தம்முடைய வாழ்வில் பிரிக்க முடியாத அடையாளமாக இதனைத் தரித்து, நம்மையும் அவ்வித வாழ்விற்கு அர்ப்பணிக்கத் தூண்டுகிறார்.

**முடிவுரை :**

இந்த லெந்து காலத்தில் அடியெடுத்து வாழ்வைத் தொடரும் நாம் சிலுவை நமக்குக் கற்றுத்தரும் வாழ்வாகிய தூய வாழ்வு, சான்றுள்ள வாழ்வு, இணைந்த வாழ்வு வாழ்வதற்கு அழைக்கப்படுகிறோம். பிறர் வாழ்வுக்கு நம்மை மாதிரியாக்குவோம். ஆமென்.

**அருள்திரு. Y. மோகன் அருள்தாஸ்**



**15-02-2013** தவக்கால முதலாம் வெள்ளி

# தற்பெருமை

அதற்குப் பேதுரு அவரிடம், “எல்லோரும் உம்மைவிட்டு ஓடிப்போய் விட்டாலும் நான் ஒலு போதும் ஓடிப்போக மாட்டேன்” என்றார். மத். 26 : 33

இயேசுகிறிஸ்து கெத்சமனேத் தோட்டத்தில் தமது சீடர்களைப் பார்த்து, “இன்றிரவு நீங்கள் அனைவரும் என்னை விட்டு ஓடிப்போவீர்கள்” எனக் கூறினார். அதற்குப் பேதுரு பதிலுரையாகக் கூறிய வார்த்தைகள் தான் மத். 26 : 33-இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்பெருமையைக் குறிப்பிடும் கிரேக்க வார்த்தை “ஹூப்பெறிபானஸ்” (Huperephanos) என்பதாகும். இதன் பொருள் “One who shows himself above other people” ஒருவர் தன்னை பிறரைவிட உயர்வானவராகக் காண்பித்தல் தற்பெருமையாகும். அருள்நாதர் இயேசுவிடம், பேதுரு தன்னை உயர்வானவராக காண்பித்தார். எனவே தான், எல்லாரும் உம்மை விட்டு ஓடிப்போய் விட்டாலும் நான் ஒருபோதும் ஓடிப்போக மாட்டேன் என்றார்.

**1) பெருமையை வெறுத்து விடுங்கள்**

பாவத்தின் மிக மோசமான வடிவம் பெருமையாகும். இது அனைத்துப் பாவங்களுக்கும் அடிப்படையானது. பல எபிரேய வார்த்தைகள் தற்பெருமையின் ஆழமான தன்மைகளை வெளிப்படுத்துகின்றன. ஆராயாமல் ஏற்றுக்கொள்ளுதல் (Presumption) தன் தோற்றம் பற்றிய கர்வம் (vanity), தகுதியற்ற தற்புகழ்ச்சி (vain boasting), கர்வம் (haughtiness), இறுமாப்பு (arrogance) என்னும் வார்த்தைகளுடன் தற்பெருமை தொடர்புடையதாகும். தற்பெருமை இதயத்தைக் கடினப்படுத்துகிறது (தானி. 5 : 20) சண்டையை ஏற்படுத்துகிறது (நீதி. 13 : 10, 28 : 5). அழிவைக் கொண்டு வருகிறது (நீதி. 16 : 18). சாலமோன் ஞானி, ஆண்டவர் வெறுப்பவை ஏழு என்கிறார். அதில் முதலாவதாக குறிப்பிடுவது, “இறுமாப்புள்ள பார்வை” என்பதாகும் (நீதி. 6 : 16, 17). மோவாப்பின் தண்டனைக்கு (எரே. 13 : 9), யாக்கோபின் தண்டனைக்கு (ஆமோஸ் 6 : 8), ஏதோமின் தண்டனைக்குக் காரணமாக

இருந்தது பெருமையாகும். நேபுகாத்நேச்சார் மனிதத் தன்மையை இழந்து மிருகமாக மாறுவதற்கு காரணம் தற்பெருமையாகும்.

தூய அகஸ்டின் என்பவர், "பெருமை தூதர்களைச் சாத்தான்களாக மாற்றினது. தாழ்மைதான் மானுடரைத் தூதர்களாக மாற்றுகிறது" எனக் கூறினார். ("If was pride that changed angels into devils. It is humility that makes men as angels"). பேதுரு அனுபவத்துடன் தனது நிருபத்தில் எழுதினார்; மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள், பெருமையுள்ளவர்களுக்கு கடவுள் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கிறார்.

**2) மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்**

மனத்தாழ்மை என்பதன் கிரேக்க வார்த்தை "egkomboma" என்பதாகும். இதன் பொருள், "கட்டியிருக்கும் ஆடையைப் பாதுகாப்பதற்காக அதன் மேலே கட்டப்படும் யாரும் விரும்பாத ஆடையாகும்". ஆண்டவர் இயேசுகிறிஸ்து விடுக்கும் அறைகூவல், "நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்" என்பதாகும் (மத். 11 : 29).

அருள்நாதர் இயேசுவின் தாழ்மை எப்படிப்பட்டது? ஆளுகை செய்வதில் பணிவான பணிவிடையாய் அமைந்தது. ஒரு குவளையில் தண்ணீர் எடுத்துச் சீடர்களுடைய காலடிகளைக் கழுவி இடுப்பில் கட்டியிருந்த துண்டால் துடைக்கத் தொடங்கினார் (யோவான் 13 : 5). மனத்தாழ்மைக்கு இப்படி விளக்கம் கொடுக்கப்படுகிறது. மனத்தாழ்மை நறுமணத் தைலத்தை பரிசோதிப்பது போன்றது; தண்ணீருள்ள தம்ளரில் நறுமணத் தைலத்தை ஊற்றினால் நல்ல தைலமென்றால் அது தண்ணீரில் கரையாமல் தம்ளரின் அடியில் போய் தங்கிக்கொள்ளும். அதுபோல உண்மையான தாழ்மை, பணிவாக பணிவிடை செய்வதில் தான் வெளிப்படும் (எ.கா. அன்னை தெரசா). எனக்கு எதுவும் முடியாது, நான் திறமையில்லாதவன் என்று கூறும் தாழ்வு மனப்பான்மை தாழ்மையல்ல; பணிவான மனிதர் பணிவிடை செய்கிறவராய் இருப்பார். ஒரு பக்தன் தெளிவாகக் கூறினார் : இயேசு கிறிஸ்து பரலோகத்தைக் கட்டும் மா சிறந்த சிற்பாசாரி, பரலோகத்தின் கதவை மிகவும் உயரம் குறைந்ததாக வைத்திருக்கிறார். ஏன்? மத். 18 : 3-ஐ படித்துப் பாருங்கள். பிள்ளைகளைப் போல மனத்தாழ்மையுடன் களங்கமில்லாமல் பணிவாகப் பணிவிடை செய்வோம்; இறையரசை அலங்கரிக்கும் அகல்விளக்காய் வாழ்வோம்.

**அருள்திரு. A. வில்லியம் தாமஸ்**



தவக்காலப் புதன் தியானங்கள்

# சிலுவையில் அறையப்பெற்ற இயேசுவை அறிதல்

## முகவுரை

பவுலாரின் தீவிர சமயப்பற்று அவரின் மனமாற்றத்திற்குக் காரணமாயிற்று. இயேசு யார்? என்பதை அறிந்து கொண்ட பவுலார் அவரையே நற்செய்தியாக அறிவிக்கவும், அவருக்காகத் துன்பம் ஏற்கவும் அவரது சிலுவையைக் குறித்து மேன்மை பாராட்டவும் தொடங்கினார். திருச்சபையின் சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், திருச்சபையின் தலைவராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். எனவே சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை நற்செய்தியாக அறிவிக்க முன் வந்தார். இயேசுவின் பாடுகளில் தன்னையும் இணைத்துக் கொண்டார்.

நாமும் இயேசுவின் சிலுவைப்பாடுகளோடு இணைந்து கொள்ளும்போது இயேசுவை அறிந்துகொள்ள முடியும். இயேசுவையும் அவரது சிலுவையையும் அறிந்து கொள்ளும்போது இயேசுவின் சிலுவை நமக்கு மேன்மையானதாக மாறிவிடுகிறது.

சிலுவையில் அறையப்பட்ட அவரை அறிந்துகொள்ள நமக்குத் தரப்பட்டுள்ள தருணமே இந்தத் தவக்காலம். தவக்காலப் புதன்கிழமைகளில் இயேசு யார்? என அறிந்து கொள்ள முயலுவோம். இறையருள் நம்முடன் இருப்பதாக.

| 20-02-2013 | தவக்கால இரண்டாம் புதன் |
|---|---|

மத். 16 : 13-20 உலக சமூகநீதி நாள்

# மெசியாவாகிய கிறிஸ்து

சீமோன் பேதுரு மறுமொழியாக, "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்று உரைத்தார். (மத். 16 : 16)

**பின்னணியம்**

பிலிப்பு செசரியா பட்டணத்தைச் சார்ந்த கிராமங்களுக்குப் போகும் வழியில் இயேசுகிறிஸ்து சீடர்களிடத்தில் இரு கேள்விகளைக் கேட்கிறார். ஒரு கேள்வி மக்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள்? மற்றொரு கேள்வி, நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்? அதாவது நீங்கள் என்னை எப்படி அறிந்துள்ளீர்கள்? என்பனவாகும்.

இந்நிகழ்வு ஒரு முக்கியக் கட்டத்தில் வருகின்றது. இயேசு நாதரின் வாழ்வில் பாடுகளின் உச்சக் கட்ட நேரம். இந்நிகழ்வு நடைபெறும் இடம் பிலிப்புவின் ஆளுகைக்கு உட்பட்டது. இந்தப் பட்டணத்தைக் குறித்த ஓர் ஆச்சரியமான வரலாற்றுச் செய்தி உண்டு. முற்காலத்தில் இப்பட்டணத்துக்கு "பாலினாஸ்" எனும் பெயருண்டு. காரணம், இது பாகால் வழிபாட்டிற்கு ஒரு முக்கிய மையம். இதன் மலை முகட்டில் பான் கடவுளுக்கு ஒரு குகை இருந்தது. மற்றொரு குகையினின்று யோர்தான் நதியின் ஆதாரமான நீரூற்று புறப்பட்டு வந்தது. மற்றொருபுறம் ரோம சக்ரவர்த்தி சீசருக்கு பிலிப்பு வெள்ளை மார்பிளால் கட்டிய ஒரு கோவிலும் உண்டு. இதையெல்லாம் அப்பகுதி மக்களும் இயேசுவின் சீடர்களும் அறிந்திருந்திருந்தனர்.

இந்நிலையில் தலைசாய்க்க இடமற்று அலைந்து திரியும் இந்த இயேசு யார்? இவரை எவ்விதம் அறிந்துள்ளனர்? என்பதே கேள்வி. சீடர் குழுவின் முதல்வர் பேதுருவின் மறுமொழி, "நீர் வாழும் கடவுளின் மகன், மெசியா" என்பதாகும்.





**மெசியா - அருள்பொழிவு பெற்றவர்**

எபிரேயம், அரமேயம் ஆகிய மொழிகளின் சொல்லான மெசியா-வும் கிரேக்கச் சொல்லான "கிறிஸ்து"வும் அருட்பொழிவு பெற்றவர் எனும் பொருளைத் தருவன. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அரசனுக்கே இப்பெயர் முதலாவது வழங்கப்பட்டது. (1 சாமு. 9 : 16; 10 : 1, 10; 16 : 13.) புதிய ஏற்பாட்டில் இயேசுவுக்கே உரிய பெயராக இது மாறியது.

லூக். 4 : 18-இல் இயேசுநாதர் தம் நாசரேத்தூர் அறிக்கையில் "ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது; ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்..." எனக் கூறுகிறார். லூக். 4:18, 19-இன் படி அடிமைத்தளையில் விடுதலைக்காக ஏங்கிக் கிடந்த மக்களுக்கு உண்மை விடுதலையை அளிக்க அருள்பொழிவு பெற்று வந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. இயேசு விடுதலை தரும் மெசியா.

**2. மெசியா- அர்ப்பணித்தவர்** (மாற். 10 : 45)

ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், பிணியாளர் அனுபவித்த துன்பங்கள் அனைத்தையும் அழிப்பதுதான் இயேசுநாதரின் நோக்கம். ஆனால் துன்பத்தை ஒழிப்பதற்கான வழி என்ன? துன்புறுவதற்குத் தயாராக இருப்பவர் உலக மதிப்பீடுகளைக் கைவிட வேண்டும். இவ்வாறு கைவிடுவதால் ஏற்படுகின்ற விளைவுகளைச் சந்திக்க தயாராக இருக்க வேண்டும். இதுவே துன்பத்தை அழிப்பதற்கான ஒரே வழி.

துன்புறும் மக்களோடு சேர்ந்து ஒருவர் துன்புறும்போது அவர் காட்டும் இரக்கம் துன்பத்தைப் போக்குகிறது. மாறாக, ஒருவர் துன்புறும்போது மற்றவர் அதைக்கண்டு இரக்கப்படுவதோடு நிறுத்திக்கொண்டு அவரோடு துன்பத்தில் பங்கு கொள்ளாவிடில் அந்த இரக்கம் வெறும் உணர்ச்சியாக மட்டுமே இருந்துவிடும், செயல்வடிவம் பெறாது. இங்கு இயேசுநாதரோ துன்புறும் மக்களோடு தன்னை இணைத்துக் கொண்டார். ஏசாயா இறைவாக்கினர் இந்த மெசியாவை முன்னுரைக்கிறபோது ஏசா. 53 : 4-இல் "மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார்; நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்" எனவும் ஏசா. 53 : 5-7-இல் நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்படுவதற்குத் தம்மை அர்ப்பணித்தார் எனவும் குறிப்பிடுகிறார்.

22-02-2013 | தவக்கால இரண்டாம் வெள்ளி

# இறைவேண்டல் ஏறெடுக்காமை

அதன் பின்பு அவர் சீடர்களிடம் வந்து அவர்கள் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு பேதுருவிடம், “ஒரு மணி நேரம் கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா? உங்கள் மனம் ஆர்வமுடையது தான்; ஆனால் உடல் வலுவற்றது. எனவே சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்” என்றார்.
(மத். 26 : 40, 41).

குருவானவர்களைப் பயிற்றுவிக்கும் இறையியல் கல்லூரி ஒன்றில் திருமறை ஆசிரியர் ஒருவர் தம் மாணவர்களிடம் ஒரு கேள்வி கேட்டார். நீங்கள் துன்பப்பட்டால் முதலாவது என்ன செய்வீர்கள்? (1) துன்பத்தைச் சமாளிக்க நீங்களே முயற்சி செய்வீர்களா? (2) நண்பரின் உதவியை நாடுவீர்களா? (3) ஆண்டவரை நோக்கி ஜெபிப்பீர்களா? 35 மாணவர்களில் 2 பேர் மட்டும் தான், ஆண்டவரை நோக்கி ஜெபிப்போம் என்றார்கள். அதிகமானவர்கள் முதலாவது விடையையும், ஏனையோர் இரண்டாவது விடையையும் சொன்னார்கள். பலருடைய வாழ்க்கையில் ஜெபம் முதலாவது கடமையாக அமையவில்லை. தனது சொந்த வழிமுறைகள், திறமைகள், பணம் ஆகியவைகளைச் சார்ந்திருக்கிறார்கள். எதுவும் பயன்தராத நிலையில் ஜெபிக்க முன்வருகிறார்கள்.

அருள்நாதர் இயேசுகிறிஸ்து கடைசி இராவிருந்தை தம் சீடர்களுடன் ஆசரித்துவிட்டு ஜெபிப்பதற்காகக் கெத்செமனேக்கு வந்தார். பேதுரு, யாக்கோபு, யோவான் என்னும் தமது சீடர்களிடம், எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது. நீங்கள் என்னோடு இங்கேயே தங்கி விழித்திருங்கள் என்று அவர்களிடம் கூறினார் (மத். 26 : 38). அவர்களோ உறங்கிக் கொண்டிருந்தனர்.





**1) ஜெபம் என்பது ஆண்டவரிடம் கேட்பது**

ஓர் இறையியல் மாணவர் ஜெபம் என்றால் ஆண்டவரிடம் கேட்பதல்ல; கடவுளிடம் ஐக்கியம் கொள்வது என்றார். நமது தேவைகளுக்காக ஆண்டவரிடம் கேட்க வெண்டுமென்பது இயேசுகிறிஸ்து நமக்குக் கற்றுத்தந்த பாடமாகும். நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது நம்பிக்கையுடன் கேட்பதை எல்லாம் பெற்றுக்கொள்வீர்கள் என்று கூறினார் (மத். 21 : 22). தினம் நமது உணவுக்காக மன்றாடுவது உண்மையான ஆன்மிகமே (லூக். 11 : 3).

..... நம்பிக்கையோடு, ஐயப்பாடின்றிக் கேட்க வேண்டும். ஐயப்பாடு கொள்பவர்கள் காற்றினால் அலைக்கழிக்கப்படும் கடல் அலையைப் போன்றவர்கள் (யாக். 1 : 6). ஆண்டவருடைய சித்தத்தின்படி கேட்கவேண்டும் (IIயோவான் 5 : 14, 15).

அருள்நாதர் இயேசு கெத்செமனேயில் தந்தையிடம் “என் தந்தையே, முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும். ஆனாலும் என் விருப்பபடி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்” என்று கூறி இறைவனிடம் வேண்டினார் (மத். 26 : 39). இந்த விண்ணப்பம் இயேசுநாதர் சிலுவை மரணத்துக்கு அஞ்சி ஏறெடுத்த ஜெபமல்ல. மாறாக, தந்தையின் திருவுள சித்தத்துக்கு ஒப்படைத்தலேயாகும். சீடர்களிடமும் ஜெபிக்கும்படி அறிவுறுத்தினார். ஆனால் சீடர்கள் ஜெபத்தின் முக்கியத்துவத்தை உணராமற்போனதால் சோதனைக்குட்படவேண்டியதாயிருந்தது.

**2) ஜெபம் ஆண்டவருடன் ஐக்கியம் கொள்வது**

கடவுளுடன் நட்புறவு கொள்வதும், எண்ணங்களையும் உணர்வுகளையும் பகிர்ந்து அவர்பால் கொள்ளும் ஐக்கியம் ஜெபமாகும். பேதுரு, யோவானுடைய துணிவைக் கண்டு அவர்கள் இயேசுவோடிருந்தவர்கள் எனத் தலைமைச் சங்கத்தாரும், மக்களும் அறிந்தனர் (தி.ப. 4 : 13). ஏனெனில், அவர்கள் ஜெபத்தில் இயேசுவோடு கொண்டிருந்த ஐக்கியம் அவர்களைத் துணிவுள்ளவர்களாக நடத்தியது.

மூடி வேதாகம கல்லூரியின் தலைவர் அறிவர் ஜார்ஜ் சுயிட்லிங் என்பவர், ஜெபம் கடவுளோடு நாம் செய்யும் உரையாடலும், அவர் நம்முடன் செய்யும் உரையாடலும் என்கிறார். அவர் இதனை விளக்குவதற்கு D.L. மூடி அவர்களின் ஐந்து வயது மகனின் செயலைக் குறிப்பிடுகிறார். D.L. மூடி அவர்கள் செய்தி ஆயத்தப்படுத்துவதில் முனைப்புடன் இருந்தார். அவரது மகன் அருகில் இருந்தான். மூடி

அன்புடன் மகனைப் பார்த்து, மகனே உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். ஒன்றும் வேண்டாம் அப்பா, நீங்க எங்கே இருக்கிறீர்களோ அங்கே நான் இருக்க விரும்புகிறேன் என்றான்.

அருள்நாதர் இயேசு ஜெபிப்பதற்கு அதிகாலையில் வனாந்தரமான இடத்திற்குச் சென்றார்; இராமுழுவதும் ஜெபித்தார் எனத் திருமறையில் படிக்கிறோம். இந்த ஜெப வேளைகளில் அவர் தனக்கு எந்த ஒரு பொருளுக்காகவும் ஜெபிக்கவில்லை. தந்தையுடன் நட்புறவு கொள்ளவும், பணிகளைப் பகிர்ந்து கொள்ளவும், தந்தை சொல்வதைக் கேட்கவும் ஜெபவேளையைப் பயன்படுத்தினார். ஐக்கியத்தின் உன்னத நிலை தந்தையின் திருத்திட்டத்திற்கு அர்ப்பணிப்பதாகும். தந்தையுடன் அவர் கொண்டிருந்த ஐக்கியம் தான் அவரை ஆற்றல்படுத்தி மாபெரும் மீட்புப் பணியை நிறைவேற்றப் பெலப்படுத்தியது.

திருப்பாடலாசிரியர் அறிந்து கொண்ட உண்மையாதெனில் காலையில் துயரங்கள் வணக்கம் சொல்லி எதிர்கொண்டாலும், படுக்கையின் நேரத்தில் வேதனைகள் போர்வையுடன் ஒட்டிக்கொண்டு நெருக்கினாலும் கடவுள் நல்லவராகவே இருக்கிறார். எனவே கடவுளின் அண்மையே எனக்கு நலமெனக் கொள்வேன் என்று உறுதிபடக் கூறுகிறார். (தி.பா. 73 : 25, 28) ஜெபிக்கிறபொழுது தேவசமாதானம் நம்மைக் காத்துக்கொள்ளும் (பிலி. 4:6, 7). கெத்செமனேயின் ஜெபவேளையில் பேதுரு தூங்கினதால் சாத்தானின் சோதனைக்கு உட்பட்டு மாபெரும் தவறாகிய மறுதலிக்கும் தவறைச் செய்தார். ஒரு திருச்சபையின் விசுவாசிகள் கூறியது : We prepare for the darkness by learning to pray in the light. வெளிச்சத்தில் ஜெபித்து பழகினதால் இருளுக்கு நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம் என்பதாகும். இன்னல் துன்ப நேரங்களிலும், நலமான வாழ்வு சூழல்களிலும் ஜெபிப்போம். சோதனைக்குட்படாமல் வாழ்வோம்.

**அருள்திரு. A. வில்லியம் தாமஸ்**



**27-02-2013** தவக்கால மூன்றாம் புதன்

எபி. 4 : 14-16

# தனிப்பெரும் தலைமைக் குருவாகிய இயேசு

. . . இறைமகனாகிய இயேசுவை நாம் தனிப்பெரும் தலைமைக் குருவாகக் கொண்டுள்ளதால் நாம் அறிக்கையிடுவதை விடாது பற்றிக் கொள்வோமாக ! எபி. 4 : 14

இஸ்ரவேலில் எதிர்பார்க்கப்பட்ட கிறிஸ்து (மெசியா) ஆசாரியராகத் தோன்றுவார் எனவும் சீர்கெட்டுக் கிடக்கும் யூத சமயத்தை அவர் நெறிப்படுத்துவார் எனவும் பக்தியுள்ள யூதர்கள் காத்திருந்தனர். நம் ஆண்டவர் இயேசுவில் ஆசாரியத் தன்மை வெகுவாக வெளிப்பட்டதையும் அவர்தான் மெய்யான தலைமைக்குரு எனவும் ஆதித்திருச்சபையார் கண்டு கொண்டனர்.

**பின்னணியம்**

ஆசாரியர் (குரு) என்ற வார்த்தையை இலத்தீன் மொழியில் "போன்டிபெக்ஸ்" (Pontifex) எனக் கூறுவர். அதற்கு "பாலம் அமைப்பவர் (Bridge - Builder) என்பது பொருள். அதாவது கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே பாலமாக நின்று சமயச் சடங்குகளை நிறைவேற்றுபவர் எனப்பொருள் கொள்ளலாம்.

இஸ்ரயேலர் சமூகத்திலும், சமயத்திலும் குருக்கள் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தனர். வழிபாடுகளை நடத்துவதற்கு என மோசேயின் காலத்திலே இவர்கள் தெரிவு செய்யப்பட்டு அருட்பொழிவு பெற்றிருந்தனர் (விப. 29 : 7, 29; 35, 36; லேவி. 4). இவர்கள் லேவி கோத்திரத்தில் சாதோக்கின் வழிமரபிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் செய்ய வேண்டிய பணியை ஆண்டவர் மோசே வழி கற்றுக் கொடுத்தார்.

a) இவர்கள் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்க வேண்டும்.

b) ஆண்டவரின் சந்நிதியில் நின்று தொழுகை நிறைவேற்றி கடவுளின் பெயரால் மக்களுக்கு ஆசிவழங்க வேண்டும் (செ. 10 : 8).

c) கடவுளுக்கும் மக்களுக்கும் நடுவே நின்று வேள்வியினூடாக (பலி) மக்களைக் கடவுளுடன் ஒன்றுபடுத்த வேண்டும். (லேவி. 7 : 5).

**தடம்புரண்ட குருத்துவம்**

இச்சிறப்பான பணி செய்து வந்த குருக்கள் கடவுளின் கட்டளைகளையும் சட்டங்களையும் விட்டுவிட்டனர் (நெகே. 9 : 34). மதுபானம், திராட்சை மது குடித்து வழிதப்பிப் போனார்கள் (எசா. 28 : 7). படைப்பாளரை விட்டு படைப்பை வணங்கச் சென்று விட்டனர் (எரே. 2 : 26). பொய்யராயினர் (எரே. 8 : 10). இறையுணர்வு அற்றவராயினர் (எரே. 23 : 11). திருமறையை மக்களுக்குப் போதிப்பதற்குப் பதிலாக அவர்களை இடறப்பண்ணினர் (மலா. 2:8). இவ்விதம் குருக்களால் மானிடம் நிறைவு பெற இயலாநிலையில் இயேசு தலைமைக் குருவாய் உலகில் வந்தார்.

**இயேசுவின் குருத்துவம்**

அநீதி நிறைந்த, கறைபடிந்த குருக்களுக்கு எதிர்மாறாய் சிறப்பு வாய்ந்ததாக இயேசவின் குருத்துவப்பணி அமைந்திருந்தது. இயேசுவின் இறைப் பற்றும் (லூக். 2 : 40-50; ஆலயத்தைக் குறித்த பக்தியுணர்வும் மத். 21 : 12-16 இதற்கு நல்ல சான்றாய் உள்ளது. இயேசு கிறிஸ்துவின் சிறப்பான குருத்துவத் தன்மைகளை இவண் தியானிப்போம்.

**1. நிகரில்லாத் தலைமைக் குரு** (எபி. 4 : 14)

தலைமைக்குரு வருடந்தோறும் செலுத்தும் பலிகள் பிரமாணத்தை மட்டும் நிறைவு செய்வதாய், மீட்பினை உண்டுபண்ண இயலாததாயிருந்தது. எனவே இயேசு நிகரற்ற தலைமைக் குருவாய் வெளிப்பட்டார். தலைமைக்குருவாகிய இயேசு செலுத்தும் பலி வெள்ளாட்டுக்கடா இளங்காளை இவைகளின் இரத்தத்தினால் அல்ல; தம் சொந்த இரத்தத்தால் பாவப் பரிகாரம் செய்தார். இயேசு கிறிஸ்துவின் மரணம் மனுக்குலம் அனைத்தின் பாவ நிவாரணமாய் செலுத்தப்பட்ட ஒரே உன்னத பலி. இப்பலி மன சாட்சியினைத் தூய்மைப்படுத்தி முந்திய சாவுக்குரிய வழிகளில் இருந்து மனிதனை மீட்டு இறைவனுக்குத் தொண்டு செய்ய நம்மைத் தகுதிப்படுத்துகிறது (எபி. 10 : 1-3, 10).

**2. நம் முன்னோடியான தலைமைக்குரு** (எபி. 6 : 20)

தலைமைக்குரு திரைச் சீலையைக் கடந்து திருத்தூயகத்துள் சென்று ஆண்டுக்கு ஒருமுறை பாவப் பரிகாரப் பலியைச் செலுத்துவார். இயேசுவும் தாம் தலைமைக்குரு என்ற முறையிலே திரைச் சீலையைக்





கடந்து, நமக்கு முன்னோடியாய்த் திருத்தூயகத்துள் சென்றுள்ளார். நம் சார்பாகவே அவர் அங்குச் சென்றிருக்கிறார் (எபி. 6 : 20); நம் சார்பாகவே அவர் கடவுளின் திருமுன் நிற்கிறார் (எபி. 9 : 24) என்று எபிரேயர் ஆக்கியோன் மீண்டும் மீண்டும் கூறுகிறார். பழைய பலிகள் மக்களைத் தூய்மைப்படுத்த இயலாதவை. ஏனெனில் இவை வெறும் நிழலே (எபி. 10 : 1-4). இயேசுவோ மாசற்ற பலியாகத் தம்மைத்தாமே கடவுளுக்கு ஒப்புக் கொடுத்தார் (எபி. 9: 14).

**3. பரிந்து பேசும் தலைமைக்குரு** (எபி. 7 : 25)

முன்னோரின் குருத்துவப்பணி நிலைத்திருக்க இயலவில்லை. இக்குருக்கள் அனைவரும் இயற்கை நியதியாகிய சாவுக்கு ஆளானார்கள். இவர்களைப் பின்பற்றி இவர்களுக்குப் பின் பிற குருக்கள் பணியாற்றினர் (7 : 23). ஆனால் உயிர்த்த இயேசு என்றென்றும் வாழ்வதால் மாறாத குருத்துவப் பணியின் மூலம் தம்மண்டை வருவோரை மீட்டுக் கொள்ள வல்லவராயிருக்கிறார். அவர்களுக்காகப் பரிந்து பேசுவதற்கென என்றுமே அவர் உயிர் வாழ்கிறார். இயேசு நமக்காகப் பரிந்து பேசுவது தந்தையின் செவிகளில் விழத் தவறா. தம் மகனின் பரிந்து பேசுதலைத் தந்தை ஒருபோதும் தள்ளிவிடார் (யோவா. 14 : 13, யோவா. 15 : 16). ஏனெனில் இப்போதும், எப்போதும் இயேசு தந்தையின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கிறார்.

தனிப் பெரும் தலைமைக்குரு (எபி. 4 : 14) இயேசு, நமக்காய்ப் பரிந்து பேசி நமக்கு முன்னோடியாய், நாம் அவரைப் பின்பற்றி வாழ நமக்கு எடுத்துக்காட்டாயிருக்கிறார். நாம் நம்மை நம் தலைமைக் குருவாம் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்து அவர் காட்டும் தூய நெறியில் வாழ்ந்து அவருக்குச் சான்று பகர நமக்கு உறுதியும், ஆற்றலும் தந்து நடத்துவாராக.

**திரு. D. சாது டேனியல்**

| 01-03-2013 | தவக்கால மூன்றாம் வெள்ளி |
|---|---|

யோவா. 18 : 1-11

# கோபம்

**சீமோன் பேதுருவிடம் ஒரு வாள் இருந்தது. அவர் அதை உருவித் தலைமைக்குருவின் பணியாளரைத் தாக்கி அவரது வலக்காதை வெட்டினார். அப்பணியாளரின் பெயர் மால்கு. யோவான் 18 : 10**

கோபம் என்பது மனித இயல்பு. கோபப்படுவதினாலும், கோபத்தை அடக்கிக்கொள்வதினாலும் பல பாதிப்புகள் உண்டு என்று பல்வேறு மருத்துவக்குறிப்புகள் கூறுகின்றன. Dr. Frank Lake என்ற உளவியல் அறிஞர், பல நல்ல கிறிஸ்தவர்களும், சுவிசேஷகர்களும், ஆயர்களும் குடல்புண் (Ulcer) என்னும் நோயால் அவதிப்படுகின்றனர் எனக் கூறுகிறார். அதற்குக் காரணமாக அவர் குறிப்பிடுவது, அவர்கள் தங்கள் கோபங்களை விழுங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதாகும். கிறிஸ்தவம் பாவங்களைள் ஏழு எனக் குறிப்பிடுகிறது. அவை கோபம், பெருமை, பொறாமை, பண ஆசை, இச்சை, பெருந்தீனி, சோம்பல் என்பனவாகும். இவைகளில் கோபம் முதன்மையான பாவமாகக் கருதப்படுகிறது. பேதுருவின் வாழ்க்கையில் கோபம் அவரை இழிநிலைக்குத் தள்ளியது.

திருமறைக் கண்ணோட்டத்தில் கோப்படுவதற்குரிய காரணங்கள்,

| | |
|---|---|
| 1. ஏமாற்றப்படுதல் | தொநூ. 27 : 42-45 |
| 2. அநியாயம் | விப. 11 : 8 |
| 3. நேர்மையற்ற செயல் | நெகே. 5 : 6 |
| 4. பொறாமை | 1 சாமு. 18 : 9 |
| 5. மதிப்பு கிடைக்காமை | எஸ்தர் 3 : 5 |
| 6. கடினமாக நடத்தப்படுதல் | எபே. 6 : 4 |
| 7. கடின வார்த்தைகள் | நீதி. 15 : 1 |

மானுடர் கோபத்தை மூன்று முறைகளில் கையாளுகிறார்கள்.





**1. கோபத்தை வெளிப்படுத்துவதின் வழியாக** (By Expressing)

திசாரஸ் (Thesaurus) என்னும் பொருள் விளக்கமளிக்கும் சொற்களஞ்சியம் கோபத்தை பொருள் கொள்ளக்கூடிய சுமார் 30 வார்த்தைகளைக் குறிப்பிடுகிறது. இந்த 30 வார்த்தைகளும் கோபத்தை வெளிப்படுத்தும் முறைகளை விளக்குகின்றன. கட்டுப்பாட்டை இழக்கச்செய்வது, உக்கிர வார்த்தைகளைப் பயன்படுத்துவது, வன்முறையில் ஈடுபடுவது, பைத்தியக்காரனைப்போல செயல்படுவது ஆகியன கோபத்தை வெளிப்படுத்தும் முறைமைகளாகும். கோபத்தினால் கட்டுப்பாட்டை இழக்கிற நிலையை “Fly off the handle” என்பார்கள். சுத்தியல் கைப்பிடியிலிருந்து கழன்று போகும் நிலையை இது குறிக்கும். கைப்பிடியில்லாத சுத்தியலை வைத்து வேலை செய்ய இயலாது. மட்டுமன்றி ஆபத்தையும் ஏற்படுத்திவிடும். கோபமும் அப்படித்தான். பேதுரு கோபத்தின் மிகுதியினால் மால்கு என்னும் தலைமைக்குருவின் பணியாளரின் வலது காதை வெட்டினார். இது, அவருடைய மனதில் பயத்தையும், உற்சாகமின்மையையும், பின்வாங்குதலையும் ஏற்படுத்தியது. பேதுரு தொலைவில் ஆண்டவரைப் பின்தொடர்ந்தார் (மத். 26 : 58).

கணவர் மிகுந்த கோபத்தில் கட்டுப்பாடின்றி நடந்து கொண்டதைப் பார்த்த அவரது துணைவியார் தனது செல்போனில் அந்த காட்சிகளைப் படமாக்கினார். கணவர் அமைதியான பின் சாப்பாட்டு வேளையில் அந்த படங்களை மேஜைமீது வைத்தார்கள். கோபப்பட்ட கணவர் அந்தப் படங்களைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார். நான் இத்தகைய இழிநிலையில் நடந்து கொண்டேனே என வருந்தினார். தன்னடக்கமில்லா மனிதர் அரண் அழிந்த காவல் இல்லாப்பட்டணம் (நீதி. 25 : 28) என்ற வசனத்தின் பொருள் உணர்ந்து திருந்தினார்.

கோபம் அழிவை ஏற்படுத்தும். பட்டயத்தை எடுக்கிற எவரும் பட்டயத்தால் மடிவார்கள். கனிவுடையோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர் (மத். 5 : 5). சாந்தகுணத்திற்கு பேர் பெற்றவர் மோசே. ஆனால், அவரும் பொறுமையிழந்து கோபத்தினால் கன்மலையைக் கோலினால் இருமுறை அடித்தார் (எண். 20 : 11) அதனால் அவர் கானானை இழந்தார். சவுல் கோபத்தால் நிதானமிழந்து சாமுவேல் நிறைவேற்ற வேண்டிய பலியை நிறைவேற்றினார்; அதனால் பதவியை இழந்தார். உசியா கோபத்தினால் பொறுமையை இழந்து ஆசாரியர் செய்ய வேண்டிய தூபங்காட்டுதலை நிறைவேற்றினார்; அதனால் தொழுநோயாளியானார். கடிவாளம் பூட்டி

வாரினால் இழுத்தாலன்றி உன்னைப் பின்தொடர்ந்து வராத குதிரை போன்றோ, கோவேறு கழுதை போன்றோ அறிவிலியாய் இராதே (தி.பா. 32 : 9) எனத் தாவீது அறிவுறுத்துகிறார்.

**2. கோபத்தை அடக்குவதின் வழியாக** (By Suppressing)

கோபத்தை அடக்குவதும் ஆபத்தானது. கோபத்தை அடக்குவது கடுமையான மன அழுத்தம் (Hyper-tension), உயர் இரத்த அழுத்தம் (High Blood Pressure), குடல்புண் (Ulcer), மனச்சோர்பு (depression) ஆகியவைகளை ஏற்படுத்தும். அத்துடன் மறைமுகமாகப் பிறருக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தும். உறவுகளை முறித்துக்கொள்ளுதல், பிறருடன் பேசாதிருத்தல், குழுவாக இணைந்து பணிசெய்யத் தயங்குதல், போன்ற எதிர்விளைவுகள் கோபத்தை அடக்குவதால் ஏற்படும். எனவே, கோபத்தை அடக்குவதும் விவேகமானதன்று.

**3. அமைதிப்பட்டு ஒருங்கிணைப்பதின் வழியாக** (By calming and Channelizing)

கல்லும் மணலும் பளுவானவை மூடர் தரும் தொல்லையோ இவ்விரண்டையும் விடப்பளுவானது (நீதி. 27 : 3) எனத் திருமறை அறிவுறுத்துகிறது. ஒருவர் கண்ணாடியினாலான பொருட்களைப் பார்சல் செய்து அனுப்பினார். அந்தப் பார்சலின் மேல் பகுதியில் : Glasses-Handle with care"என எழுதியிருந்தார். கோபமும் கண்ணாடிப் பொருட்களைப் போன்றது. கவனமாகக் கையாள வேண்டும். அரிஸ்டாட்டில் (Aristotle) என்ற தத்துவ மேதை "எவரும் கோபப்படலாம், அது மிகவும் எளிது. ஆனால் சரியான நபரோடு, சரியான அளவில், சரியான நேரத்தில், சரியான நோக்கத்தோடு சரியான வழியில் கோபப்படுவது எளிதானதல்ல" என்றார்.

கோபத்தைக் கையாளுவதற்குத் திருமறை அறிவுறுத்தும் செயல்முறைகள் :

கோபங்கொள்ள தாமதியுங்கள் (யாக். 1 : 9)

கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; பொழுது சாய்வதற்குள் கோபம் தணியட்டும் (எபே. 4 : 26)

மெதுவான மறுமொழி சொல்ல கற்றுக்கொள்ளுங்கள் (நீதி. 15 : 1)

கோபக்காரனுக்கு நண்பனாகாதே (நீதி. 22 : 24, 25)

1893-இல் மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் கடுங்குளிர்





நிறைந்த இரவில் இரயிலில் முதல் வகுப்பு பயணச்சீட்டு வாங்கி டர்பனில் (Durban) இருந்து ஜோகான்ஸ்பர்க் (Johannsbury) நகருக்கு பயணப்பட்டுக் கொண்டிருந்தார். அவர் ஐரோப்பியர் அல்லாததினால் நடுவழியில் இறக்கிவிடப்பட்டார். மகாத்மா காந்திக்குக் கடும்கோபம் ஏற்பட்டது. ஆனால் அந்தக் கோபத்தை வெள்ளையர்களின் ஆதிக்கத்திலிருந்து தென்னாப்பிரிக்காவும், இந்தியாவும் விடுதலை பெறுவதற்கு ஒருங்கிணைத்தார்.

அருள்நாதர் இயேசு கிறிஸ்து கோபப்படும்படியான எல்லாச் சூழல்களையும் கடந்து வந்தார். அவற்றை மானுட மீட்புக்காக ஒருங்கிணைத்தார். பேதுரு அடிகளார் தமது கடிதத்தில், கிறிஸ்துவும் உங்களுக்காக துன்புற்று ஒரு மாதிரியை வைத்துச் சென்றுள்ளார் (I பேதுரு 2 : 21) எனக் குறிப்பிடுகிறார். அந்த மாதிரி என்ன? பழிக்கப்பட்டபோது பதிலுக்குப் பழிக்கவில்லை துன்புறுத்தப்பட்டபோது அச்சுறுத்தவில்லை நியாயமாகத் தீர்ப்பு வழங்குவோரிடம் தம்மை ஒப்படைத்தார் (I பேதுரு 2 : 23). கோபப்படும் சூழமைவுகளில் அமைதிப்பட்டு, கோபத்தை ஒருங்கிணைத்து நற்செயல்கள் புரிவோம்.

**அருள்திரு. A. வில்லியம் தாமஸ்**

| 06-03-2013 | தவக்கால நான்காம் புதன் |
|---|---|

மாற். 8 : 31-38

# மானிட மகன்

# (Son of Man)

**மானிட மகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோரால் உதறித் தள்ளப்பட்டுக் கொலை செய்யப்படவும் மூன்று நாள்களுக்குப் பின் உயிர்த்தெழவும் வேண்டும். மாற். 8 : 31**

மானிட மகன் என்ற சொல் எந்த ஒரு விசுவாச அறிக்கையிலும் காணப்படவில்லை. இயேசுநாதரின் வாயிலிருந்து மட்டுமே இச்சொல் வந்தது. வேறு எவரும் இச்சொல்லைப் பயன்படுத்தியதாக நற்செய்தி நூற்களில் காணப்படவில்லை. இயேசு தன்னைத்தான் குறிப்பதற்கு விரும்பி ஏற்ற பட்டமாகும்.

**பின்னணியம்**

இயேசுவுக்கு முந்தைய காலத்திலும் கூட மனுமகன் என்னும் பெயர் திருமறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

திபா. 8 : 4; 80 : 17; 144 : 3; எசேக். 4 : 1 போன்ற வசனங்களில் இப்பெயர் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் மெசியா அல்லது கிறிஸ்து என்னும் பொருளில் பயன்படுத்தப்படவில்லை. மாறாக மனிதனைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டது.

கி.மு. 175 முதல் 164 வரை அந்தியோகஸ் எபிபானஸ் (Antiochus Epiphanes) எனும் கிரேக்க அரசன் இசுரேல் நாட்டைக் கொடுங்கோலாட்சி புரிந்தான். யூத மக்களையும், அவர்களது சமயத்தையும், கலாச்சாரத்தையும் அழித்து பெருந்துன்பத்தை ஏற்படுத்தினான். அவனுக்கு எதிராகப் போராடும் ஒரு குழுவை ஏற்படுத்தி யூதாஸ் மக்கபேயு என்பவர் போராடினார் தானி. 7 : 23-இல் வரும் மனுமகன் எனும் வார்த்தை அவரையும் அவரது ஆதரவாளர்களான விடுதலைப் பேராளிகளையும் குறிப்பதாகவே தொடக்கத்தில் புரிந்து கொள்ளப்பட்டது. பின்னாளில் முழு இஸ்ரயேலரையும் குறிப்பதாகக் கருதப்பட்டது. எனினும் தொடர்ந்து





பின்னாளில் இப்பெயர் ஒரு தனி நபரைக் குறிப்பதாக மாற்றம் பெற்றது. அந்நபர் ஆற்றல் நிறைந்தவராய், விடுவிக்கிறவராய், நியாயாதிபதியாய் இருப்பார் எனவும் அவர்தம் நாளில் அநீதியின் உலகம் அழியும் எனவும் எண்ணினர்.

அன்று அற்தியோகஸ் எபிபானஸின் கொடுங்கோலாட்சிக்கு உட்பட்டு விடுதலைக்காக மக்கள் ஏங்கினது போல இயேசுவின் காலத்திலும் உரோம அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற ஏங்கினர். எனவே தான் இயேசு தன்னை "மனுமகன்" என்கிறார். இயேசு தன்னை "மனுமகன்" எனக் குறிப்பிட்டது தானியேல் கண்ட காட்சிக்குப் பொருத்தமாயிருக்கிறது (தானி. 7 : 13).

**1. மனிதத்தை மதிக்கும் மனுமகன்** (மாற். 2 : 10)

யூதர்கள், விடுதலை என்றால் உரோமை நுகத்திலிருந்து விடுபடும் தங்களது அரசியல் விடுதலை என்று மட்டுமே புரிந்து கொண்டனர். ஆனால் இயேசுவோ மனுக்குலம் அனைத்திற்கும், விடுதலைக்காக ஏங்கும் அனைவரது முழு விடுதலையையும் மனதில் கொண்டு தன்னை மனுமகன் என்கிறார்.

மாற். 2 : 10-இல் "மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்" என மறைநூல் அறிஞர்களுக்கு அறுதியிட்டுக் கூறுகிறார்.

இயேசு வாழ்ந்த காலத்து மக்கள் ஆதிக்க வர்க்கங்களின் பிடியில் பெரிதும் அல்லறுற்றனர். செல்வந்தர், சட்டம் கற்றோர், சமய ஒழுங்குகளைக் கடைபிடித்தோர், பட்டணத்தில் வாழ்ந்தோர் போன்றோர் உயர்வாகவும், ஏழைகள், விலை மகளிர், சிறுவர்கள், வரி தண்டுவோர். பெண்கள், கிராமத்தில் வாழ்ந்தோர் போன்றோர் தாழ்வாகவும் கருதப்பட்டனர். இத்தகைய ஆதிக்க கலாச்சாரத்தினின்று மக்களை விடுவித்து மனிதத்தை மதிக்கும் மனுமகனாகத்தன்னை வெளிப்படுத்துகிறார். (கலாத். 5 : 1; கொலோ. 2 : 13-15) மக்களை இருளின் அதிகாரத்தினின்று விடுவித்து இறை ஆட்சிக்கு உட்படுத்தினார். இறைமகனால் பாவமன்னிப்பு கிடைத்தது (எபே. 1 : 7). மீட்பும் கிடைத்தது (எபி. 9 : 12). இந்த விடுதலை உரிமையில் நிலைத்து நிற்க கேட்கிறார் மனுமகன்.

**2. மானுடத்தை ஏற்கும் மனுமகன்** (மாற். 8 : 31)

இயேசுவின் போதனையிலும் அவரது பணியிலும் பெரிய

மாற்றம். அவர் தன்னை மானிட மகன் என்றே அறிமுகப்படுத்துகிறார். தாம் முழுக்க முழுக்க மக்களுக்காகப் பணிபுரியவும், மக்களோடு தம்மையே இணைத்துக் கொள்ளவும் வந்த மானிடமகன் என்று தன்னை வெளிப்படுத்துகிறார். அரமேய மொழி வழக்கில் இது "அடியேன்" எனக் குறிப்பிடும் பணிவு, வணக்கம் கலந்த சொல். மனிதகுலத்தின் கவலைகளோடும், துயரங்களோடு மகிழ்வோடும் நம்பிக்கையோடும் தன்னை ஒன்றுபடுத்திக் கூறிகிறார் இயேசு கிறிஸ்து. எனவேதான் மத். 8 : 20; லூக். 9 : 58 ஆகிய வசனங்களில் "நரிகளுக்குப் பதுங்கு குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. மானிட மகனுக்கோ தலை சாய்க்கக்கூட இடமில்லை" என்று இயேசு கூறுவது ஒட்டுமொத்த மனுக்குலத்தின் வேதனையை வெளிப்படுத்துவதாய் உள்ளது.

இயேசு ஒடுக்கப்படுவோரின் நண்பனாக, ஒடுக்கப்படுவோரின் சார்பில் அவர்களோடு துன்பம் அனுபவிக்கும் மானிட மகனாகத் தன்னை வெளிப்படுத்தினார். இன்றும் ஏழை எளியவர், பாகுபாடு, சாதியின் பெரால் ஓரங்கட்டும் நிலை ஆகியவை இயேசுவைப் பாடுபடும் மனுமகனாகக் காணச் செய்கிறது. மானிடராகிய நாம் பாடுபடும் மனுமகன் இயேசுவோடு இணைந்து தொண்டாற்றுவோம்.

**திரு. D. சாது டேனியல்**



**08-03-2013** தவக்கால நான்காம் வெள்ளி

உலக மகளிர் நாள் யோவா. 18 : 15-18

# தீய கூட்டத்தில் அமர்தல்

**அப்போது குளிராய் இருந்ததால் பணியாளர்களும், காவலர்களும் கரியினால் தீமூட்டி அங்கே நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள். பேதுருவும் சென்று அவர்களோடு நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார். யோவா. 18 : 18**

"Stockholm Syndrome" இன்று ஒரு பழமொழியாக சொல்லப்பட்டு வருகிறது. இதற்கு ஒரு பின்னணியம் உண்டு. Stock Holm என்பது Sweden நாட்டிலுள்ள ஒரு சிறந்த பணக்காரப் பட்டணமாகும். இங்கு மிகப்பெரிய வங்கியொன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 1973-ஆம் ஆண்டு கொள்ளயர்கள் வங்கியை முழுமையாகக் கொள்ளையடித்து, அங்கு பணிசெய்த அனைவரையும் சிறைப்பிடித்துச் சென்றனர். அரசு அவர்களைத் தேடியது, ஆனால் கண்டுபிடிக்க இயலவில்லை. அந்தக் கொள்ளையர்கள் வங்கிப் பணியாளர்கள் அனைவரையும் ஒரு தீவுக்கு கொண்டு சென்றார்கள். அந்தத் தீவில் அவர்களுடன் கொள்ளையர்களும் வாழ்ந்தார்கள். ஆரம்ப காலக்கட்டத்தில் வங்கிப் பணியாளர்கள் கொள்ளையர்களுடன் தொடர்பு கொள்ளாமல் இருந்தார்கள். ஆனால் சில வருடங்களுக்குள் அவர்கள் அந்த கொள்ளையர்களுடன் தொடர்புக் கொண்டு தீமைகள் செய்வோராக மாறினார்கள். தீமையோடு தொடர்பு கொள்கிறவர்கள் தீயவர்களாக மாறிவிடுகிறார்கள். இதனை இன்று பழமொழியாக Stockholm Syndrome எனக் கூறுகிறார்கள்.

கேரளாவிலுள்ள பத்தணம்திட்டையைச் சார்ந்த அர்ஜூன்ராஜ் என்ற மாணவர் ஆரல்வாய்மொழிக்கு அருகாமையிலுள்ள பொறியியல் கல்லூரியில் மூன்றாம் ஆணடு படித்து வந்தார். தீய நட்பு மதுவிருந்து என்ற தீமைக்கு நடத்தியது. 2012-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20-ம் தேதி அகாலமரணம் அடையவேண்டியதாயிற்று.

திருமறை மிகத்தெளிவாக, நற்பேறு பெற்றவர் யார்? அவர் பொல்லாரின் சொல்லின்படி நடவாதவர்; பாவிகளின் தீயவழி நில்லாதவர்; இகழ்வாரின் குழுவினில் அமராதவர் (தி.பா. 1 : 1) எனக் கூறுகிறது.

துன்மார்க்கர் யார்? தீமை+மார்க்கம் துன்மார்க்கம். மார்க்கம் என்றால் வழி என்பது பொருள். தீமையான வழியில் செல்பவர்கள் துன்மார்க்கராவர். துன்மார்க்கருக்கு இறைநம்பிக்கையும், இறைபயமும் இல்லை (தி.பா. 14 : 1) இப்படிப்பட்ட மக்களின் ஆலோசனையில் நடப்பது பெருத்த தீங்கை விளைவிக்கும். திருமறையில் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் இருப்பவர் சாலமோனின் மகன் ரெகபெயாம் ஆவார் (1அர. 12 : 10)

"பாவிகளுடைய வழியில் நில்லாதே" என்பது திருமறை அறிவுறுத்தும் உண்மையாகும். பாவத்திற்கு பயன்படுத்தும் வார்த்தை "ஹட்டா" என்பதாகும். இதன் பொருள் குறிக்கோளைத் தவற விடுதல் (Missing the mark) என்பதாகும். இயேசுவின் சீடராகிய பேதுரு தீய கூட்டத்தில் நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார். அதன் காரணமாக, மானுடரைப் பிடிக்க அழைக்கப்பட்ட பேதுரு தனது அழைப்பின் நோக்கத்தைத் தவறவிட்டார். நீயும் இயேசுவின் சீடர்களில் ஒருவர் என்று சொன்னபோது நானல்ல என்று மறுதலித்தார். பாவம் கூட்டி, கழித்து, பெருக்குகிறது. பாவம் பிரச்சினைகளைக் கூட்டுகிறது, ஆக்க சக்தியைக் கழிக்கிறது. துன்பங்களைப் பெருக்குகிறது. இதற்குப் பேதுரு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராதே என்பது திருமறை அறிவுறுத்தும் எச்சரிப்பாகும். பரியாசக்காரர் என்பதற்கு லெத்ஸீம் என்னும் எபிரேய வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் "திருப்புவோர்" அல்லது "கோணலாக்குவோர்" என்பதாகும். இவர்கள் எதையும் வெறுப்புடன் எள்ளி நகையாடுவர். கடவுளையும் பரிகாசம் செய்ய தயங்கமாட்டார்கள் (மத். 27 : 27-31). இப்படிப்பட்டவர்களுடைய கூட்டத்தில் பேதுரு அமர்ந்தார். பேதுரு தீயக் கூட்டத்தில் அமர்ந்தபடியால், நீங்கள் குறிப்பிடுகின்ற இந்த மனிதனை எனக்குத் தெரியாது என்று சொல்லிச் சபிக்கவும், ஆணையிடவும் தொடங்கினான் (மாற்கு 14 : 70, 71) என்று திருமறையில் படிக்கிறோம்.

துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடப்பது, பாவிகளுடைய வழியில் நிற்பது, பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காருவது என்பதற்கு லோத்து ஒரு எடுத்துக்காட்டாவார். சோதோமின் மக்கள் ஆண்டவருக்கு எதிரான மிகக்கொடிய பாவிகளாக இருந்தனர் (தொ.நூ. 13 : 13) என்பது லோத்துக்குத் தெரியும். அதனால்அவர் சோதோமுக்குள் செல்லாமல் சோதோமுக்கு அருகில் கூடாரம் அமைத்துக்கொண்டார் (தொ.நூ. 13 : 12). பின்னர் அவர் சோதோமின் நுழைவாயிலில் உட்கார்ந்திருந்தார் (தொ. நூ. 19 : 1) அதனால், அவரது வரலாறு ஒரு





இரண்ட வரலாறாயிற்று.

தூய பேதுரு தீயக் கூட்டத்தில் அமர்ந்ததால் அருள்நாதர் இயேசுவைச் சபித்தார். மறுதலித்தார். ஆனால், அவர் தீயக் கூட்டத்திலேயே தொடர்ந்திருக்கவில்லை. சிலுவைக்கு நேராகத் திரும்பினார் அதனால் மன்னிப்பு பெற்று மெய்வாழ்வடைந்தார். Reside என்னும் அம்மையார் Kiowa Indians என்னும் மக்களிடையே அருட்பணி செய்தார்கள். இம்மக்கள் அம்மையாருக்கு வைத்த பெயர் "Aim Day Co" இதன் பொருள் "இந்த வழியாகத் திரும்பு" என்பதாகும். Kiowa Indians மிகவும் இழிநிலையில் துன்மார்க்கமாய் வாழ்ந்தார்கள். அதனால் அவர்களது வாழ்க்கை அழிவுக்கு நேராய் இருந்தது. Reside அம்மையார் சிலுவைக்கு நேராக அவர்களைத் திருப்பினார்கள். எனவே, அவர்களது வாழ்வு அர்த்தமுள்ளதாய் மாறியது. நாமும் தீயனவற்றை விட்டு சிலுவைக்கு நேராகத் திரும்புவோம், வாழ்வு பெறுவோம்.

**அருள்திரு. A. வில்லியம் தாமஸ்**

| 13-03-2013 | லெந்துகால ஐந்தாம் புதன் |
| --- | --- |

1 கொரி. 5 : 1-13

# பஸ்கா ஆடாகிய கிறிஸ்து

"... ஏனெனில் நம் பாஸ்கா ஆடாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறார்" 1 கொரி. 5 : 7

பஸ்கா என்பதன் பொருள் கடந்து செல்லுதல் என்பதாகும். இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் அடிமை வாழ்வு வாழ்ந்தபோது கடவுளை நோக்கி முறையிட்டனர். இஸ்ரயேலின் கடவுளாம் விடுதலையின் ஆண்டவர் அவர்களை விடுதலை செய்து வளம் நிறைந்த கானான் நாட்டுக்கு அழைத்துவர மோசேயைத் தெரிந்தெடுத்தார். எகிப்தை ஆண்ட மன்னன் பார்வோன் இஸ்ரயேலரின் விடுதலையை விரும்பாது பல இன்னல்களைக் கொடுக்கவே கடவுள் நடுத்தீர்ப்பு செய்து பாஸ்கா ஆட்டின் இரத்தத்தின் மூலம் அவர்களைப் பாதுகாத்தார், விடுவித்தார். இது ஆண்டவரின் பாஸ்கா எனப்பட்டது (வி.ப. 12 : 11). இது ஆண்டுதோறும் முதலாம் மாதமாகிய நிசான் மாதம் 14-ஆம் தேதியில் கொண்டாடப்பட்டது. பழுதற்ற ஒரு வயதுள்ள இளம் ஆடு அடிக்கப்பட வேண்டும் (வி. ப. 12 : 5). அதன் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு புளிப்பில்லா அப்பத்தோடும், கசப்பான கீரையோடும் அதைப் புசிக்க வேண்டும் (வி.ப. 12 : 8). தங்கள் வீட்டிலிருக்கிற யாவரும், அயல் வீட்டுக்காரரும் அவனவன் எண்ணிக்கைக்குத் தக்கதாய் ஆட்டைத் தெரிந்து கொண்டு அடிக்க வேண்டும் (வி.ப. 12 : 4). அடிக்கப்பட்ட ஆட்டின் இரத்தம் இருக்கிற வீட்டை மரணத் தூதர் அணுகுவதில்லை. மீட்புக்கு இரத்தம் அடையாளமாக உள்ளது.

**கிறிஸ்து - அடிக்கப்படும் ஆட்டுக்குட்டி** (1 கொரி. 5 : 7)

இயேசு கிறிஸ்து பழுதற்ற பாஸ்கா ஆடாகத் திருமறையில் பல இடங்களில் காட்டப்படுகிறார். அவர் தம் திருமுழுக்கின்போது அவரை உலகுக்கு அடையாளம் காட்டிய முழுக்கு முனிவர் யோவான் அவரை (யோ. 1 : 29) "... இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக் குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்" என அடையாளம் காட்டுகிறார். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை (எபி. 9 : 22) என்ற வார்த்தையின் படியே பாவ மன்னிப்பு உண்டாகும்படி இயேசு





பாஸ்கா ஆட்டுக்குட்டியாக அடிக்கப்பட்டார். இதனாலேயே தூய பவுலார் நம்முடைய பாஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டுள்ளார் என்று (1 கொரி. 5 : 7-இல் குறிப்பிடுகிறார். திருத்தூதுவர் யோவானும் வெளி. 5 : 6-இல் "...அரியணை நடுவில் ஆட்டுக்குட்டி ஒன்று நிற்கக் கண்டேன். கொல்லப்பட்டதுபோல் அது காணப்பட்டது என்று கூறுகிறார்.

**2. கிறிஸ்து : அடிமையாகும் ஆட்டுக்குட்டி** (எசா. 53 : 7)

பழைய ஏற்பாட்டுக்காலப் பலிகளில் பலி ஆடு இழுத்துச் செல்லப்பட்டு அடிக்கப்படும். இயேசுவோ தாமே முன் வந்து நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார். இறைவாக்கினர் ஏசாயா இதனையே ஏசா. 53 : 7-இல் அவர் ஒடுக்கப்பட்டார். சிறுமைப்படுத்தப்பட்டார்; ஆயினும் அவர் தம் வாயைத் திறக்கவில்லை; அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக்குட்டி போலும் உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும் அவர் தம் வாயைத் திறவாதிருந்தார் என்கிறார். தூய பவுலார் கலா. 1 : 4-இல் "...நம்முடைய பாவங்களின் பொருட்டுத் தம்மையே ஒப்புவித்தார்" என்றும் கலா. 2 : 20-இல் "...இவரே என் மீது அன்பு கூர்ந்தார். எனக்காகத் தம்மையே ஒப்புவித்தார்" என்றும் கூறுகிறார்.

**3. கிறிஸ்து : அழியா வாழ்வருளும் ஆட்டுக்குட்டி :** (எபி. 9:12)

பழைய ஏற்பாட்டு காலப் பலிகள் மனுக்குலத்தின் பாவங்களை நிவிர்த்திச் செய்ய முடியாதவையாய்ப் போயின. எபி. 10 : 4-இல் "ஆம், காளைகள், வெள்ளாட்டுக் கடாக்கள் இவற்றின் இரத்தம் பாவங்களைப் போக்க முடியாது" எனக் கூறப்பட்டுள்ளது. எனவே இயேசு தம் சொந்த இரத்தத்தினாலே மீட்பினைத் தந்தார். எபி. 9 : 12-இல் "அவர் பலியாகப் படைத்த இரத்தம் வெள்ளாட்டுக் கிடாய்கள், கன்றுக் குட்டிகள் ஆகியவற்றின் இரத்தம் அல்ல, அவரது சொந்த இரத்தமே... நமக்கு என்றுமுள்ள மீட்பு கிடைக்கும்படி செய்தார்" என்று கூறப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து தமது இறுதி இரா உணவின் போது "இது பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் என் இரத்தம்" எனக் கூறுவதை மத். 26 : 28-இல் காண்கிறோம். தூய பவுலார் கொலோ. 1 : 14-இல் அவருடைய இரத்தத்தினாலே, பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது என்கிறார். எபிரேயர் ஆக்கியோன் எபி. 10 : 10-இல் இயேசு கிறிஸ்துவினுடைய உடல் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே நாம் தூயவராக்கப்பட்டிருக்கிறோம் என்கிறார்.

நமக்காகத் தம்மையே உலகுக்குத் தந்து பலி ஆடாக அடிக்கப்பட்ட கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வாழ கடவுள் அருள் தருவாராக.

**D. சாது டேனியல்**

**15-03-2013** தவக்கால ஐந்தாம் வெள்ளி

மத்தேயு 26 : 55-58

# அகன்று போதல்

பேதுரு . . . வழக்கின் முடிவைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக உள்ளே நுழைந்து காவலரோடு உட்கார்ந்திருந்தார் (மத். 26 : 58)

இயேசு கைது செய்யப்பட்டு தலைமைக் குருவாகிய கயபாவினிடத்திற்குக் கொண்டு போகப்பட்டார். இதனைக் கண்ணுற்ற சீடர்கள் அனைவரும் இயேசுவைத் தனியாக விட்டு ஓடி ஒளிந்து கொண்டார்கள் (மத். 26 : 56). பேதுருவும் தொலைவிலேயே அவருக்குப் பின் சென்றார். இயேசுவை விட்டு அகன்று போகும் நிலை அவருடைய வாழ்க்கையில் மூன்று வித இழிநிலைகளை ஏற்படுத்தியது.

**1. உற்சாகத்தை இழந்தார்**

அகன்று போதல் உற்சாகத்தை இழக்கச் செய்யும். தொடக்கத்தில் பேதுருவிடம் காணப்பட்ட உற்சாகம் கொஞ்சம், கொஞ்சமாகக் குறைந்து போனது. மறைவான பாவங்களும், பல்வேறு சூழ்நிலைகளும் இதற்குக் காரணங்களாகும். பேதுருவிடம் காணப்பட்ட தற்பெருமை, ஜெபமின்மை, கோபம், தீயக்கூட்டத்தில் அமர்தல் ஆகியன அவரை அகன்று போகச் செய்தது. இதனால் அவர் உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் இழந்தார்.

தொடக்க கால பெற்றோராகிய ஆதாமும், ஏவாளும் பாவம் செய்தபோது கடவுளைவிட்டு அகன்று போனார்கள் (ஆதி. 3 : 8). ஆரம்பத்தில் மிரியாம் கர்த்தரைப் புகழ்ந்து பாடி, தம்புருகளோடும், நடனத்தோடும் அனைத்துப் பெண்களுக்கும் முன்னே சென்றார். மோசேக்கு மக்கள் கொடுத்த அங்கீகாரத்தைப் பார்த்து பொறாமை கொண்டாள். தான் அங்கீகரிக்கப்படவில்லை என்ற எண்ணம் மிரியாமுக்குள் உண்டானது. இந்த மோசேயை நான்தான் காப்பாற்றினேன், ஆரோன் தான்அவனுக்கு வாயாயிருந்தான் எனினும் மக்கள் ஏன் எங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்று அவளுக்குள் உண்டான எண்ணம் அவளை உற்சாகமிழக்கச் செய்தது. தாவீது அரசர்





பாவம் செய்தபோது உற்சாகத்தையும், மனமகிழ்ச்சியையும் இழந்தார். மனம் வருந்தி தனது குற்றங்களை அறிக்கையிட்ட தாவீது உம் மீட்பின் மகிழ்ச்சியை மீண்டும் எனக்கு அளித்தருளும். தன்னார்வ மனம் தந்து என்னைத் தாங்கியருளும் (தி.பா. 51:12) என மன்றாடினார். நமது பாவங்கள் பிறருடைய கண்களுக்கு மறைவாக இருந்தாலும் அவைகள் நம்மைக் கடவுளை விட்டு அகன்று போகச் செய்யும். நமது வாழ்க்கையில் உற்சாக ஆவியையும் இரட்சிப்பின் சந்தோஷத்தையும் இழக்கச்செய்யும்.

**2. உறுதியை இழந்தார்**

பேதுருவின் இயற்பெயர் சீமோன் என்பதாகும். சீமோன் என்பதற்கு உறுதியில்லாதவர் என்பது பொருள். விசுவாசம் என்பது நம்பப்படுகிறவைகளின் உறுதி (எபி. 11 : 1) எனப்படுகிறது. விசுவாசம் என்பது கடவுளின் இதயத்தையும், வல்லமையையும் நம்புவதாகும். (Faith means trusting God’s heart and trusting God’s power). கடவுளின் இதயம் மனதுருகும் இதயம். கடவுளின் வல்லமை சகலத்தையும் செய்ய ஆற்றல் கொண்டது (யோபு 42 : 2). பேதுரு இயேசுவின் இதயத்தையும், வல்லமையையும் நோக்கிப்பாராமல் சூழ்நிலையைப் பார்த்தார். புயல் காற்றையும், அலையையும் பார்த்துக் கொண்டிருந்த அவர் கடலில் நடக்க முற்பட்டபோது அமிழ்ந்துபோனார். அற்பவிசுவாசியே, சந்தேகப்பேர்வழியே என்னும் பட்டத்தைப் பெற்றார் (மத். 14 : 31).

உலகம் சார்ந்த வாழ்க்கையும், பயமும் அவநம்பிக்கையை ஏற்படுத்தும். ஆண்டவரே உம்மைப் பின்பற்றினோமே எங்களுக்கு என்ன கிடைக்கும் என்பது பேதுருவின் கேள்வியாக இருந்தது. அருள்நாதர் இயேசுவை ஓர் அரசியல் மேசியாவாகப் பார்த்துப் பின்பற்றின பேதுருவுக்கு இயேசுவின் சிலுவை ஏமாற்றத்தை ஏற்படுத்துவதாய் அமைந்திருந்தது. இந்த ஏமாற்றம் பின்வாங்குதலுக்கும் அவநம்பிக்கைக்கும் காரணமாய் அமைந்திருந்தது. தேமா என்பவர் தூய பவுலார் வழியாக அருள்நாதர் இயேசுவுக்குத் தொண்டராகச் செயல்பட முன்வந்தார். தூய பவுலாருக்கும் ஊழியத்தில் பயனுள்ளவராக இருந்தார். ஆனால் தேமா இன்றைய உலகப் போக்கை விரும்பினபடியால் அகன்று போய்விட்டார் எனத் தூய பவுல் குறிப்பிட்டுள்ளார் (II தீமோத். 4 : 10).

பயம் அவநம்பிக்கையை ஏற்படுத்தும். உளவியல் அறிஞர்கள் 38 விதமான பயங்கள் இருக்கின்றன எனக் கூறுகின்றார்கள். அனைத்து பயங்களுக்கெல்லாம் அடித்தளமாய் அமைந்திருப்பது மரண பயமாகும். இயேசு கைது செய்யப்பட்டதும், நடைபெற்ற விசாரணைகளும், போர்

சேவகர் நடந்துகொள்ளும் விதங்களும் பேதுருவுக்குப் பயத்தை ஏற்படுத்தியிருக்கும். இயேசுநாதரைக் கைது செய்ய வந்த தலைமை குருவினுடைய வேலைக்காரன் "மால்கு" என்பவருடைய காதை வெட்டினது (யோவான் 18 : 10) ஆகியவை அவரைப் பயமுறச் செய்தன. மனுஷனுக்கு அஞ்சிக் கொண்டு நடப்பவர் கண்ணியில் சிக்கிக்கொள்வர் (நீதி. 29 : 25) என்னும் திருமறைக் கூற்றுப்படி, பேதுரு இறை நம்பிக்கையை இழந்து ஒரு பெண்ணின் முன் இயேசுநாதரை மறுதலித்தார். (மத். 26 : 70) புகழ்வாய்ந்தவராய் இருப்பதைக் காட்டிலும் நம்பகத்தன்மையுடையவராய் இருப்பது சாலச் சிறந்தது (It is better to be faithful than famous). பிரச்சனைகளையே பார்த்துக்கொண்டிருப்பதும், உலகத்தின் மீது பற்றுவைப்பதும், தகாத உறவுகளும், பயத்தால் ஆட்கொள்ளப்படுவதும் இறைவன்பால் அவநம்பிக்கையை ஏற்படுத்தும். இறை உறவில் நம்மை உறுதியற்றவர்களாகவும் மாற்றிவிடும்.

**3. உன்னத தரிசனத்தை இழந்தார்**

மீனவரான பேதுருவை அருள்நாதர் இயேசு மனிதரைப் பிடிப்பவர் ஆக்கினார் (மத். 4 : 19). பேதுருவும் தனது வலைகளை விட்டுவிட்டு இயேசுவுக்குப் பின் சென்றார். அகன்று போதல், ஆரம்பத்திலிருந்த உற்சாகம், அர்ப்பணிப்பு, தாழ்மை, தியாகம் அனைத்தையும் இழக்கச் செய்தது. "கலப்பையில் கை வைத்த பின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத்தகுதியுள்ளவர் அல்ல" (லூக். 9 : 62) என இயேசு அறிவுறுத்தியிருக்கின்றார். எனினும் பேதுரு படிப்படியாய் அகன்றுபோய் பழைய மீன் பிடிக்கும் தொழிலுக்கே சென்றுவிட்டார் (யோவான் 21 : 3). அதன் பயன் வெறுமையே.

இயேசுவும் அவரது சீடர்களும் பிலிப்புச் செசரியா பகுதிக்குச் சென்றபோது "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" என அருள்நாதர் இயேசுவைக் குறித்து அறிக்கை செய்தார். அந்த அறிக்கையைச் சுகந்த வாசனையாக ஏற்றுக்கொண்ட இயேசு "உன் பெயர் பேதுரு இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றி கொள்ளா. விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடை செய்வது விண்ணுலகிலும் தடை செய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்" (மத். 16 : 18, 19) என்னும் உன்னத தரிசனத்தை வழங்கினார். ஆனால் பேதுரு கடவுளுக்கு ஏற்ற எண்ணமுடையவராய் இராமல் மனிதருக்கு ஏற்ற எண்ணமுடையவராக இருந்தபடியால் இந்த உன்னத தரிசனத்தை இழந்தார். "என் கண் முன் நில்லாதே சாத்தானே" என இயேசுவால்





கடிந்துகொள்ளப்பட்டார் (மத். 16 : 23).

கடவுள் நமது எண்ணங்களுக்கும், விருப்பங்களுக்கும் ஏற்றார்போல் செயல்படவேண்டும் என நாம் நினைப்பதுண்டு. அப்படியில்லையெனில் கடவுளின் உதவியை நாடவும் நாம் முன்வரமாட்டோம். 1869-இல் John Roebling என்பவருக்கு Brooklyn -இல் இருந்து Manhattan வரை பாலம்கட்டும் பணி கொடுக்கப்பட்டது. ஆனால் இந்தப் பணியின் தொடக்கத்திலேயே ஒரு விபத்தில் அவரது பாதம் பலத்த காயமுற்றது. மருத்துவமனையில் மருத்துவர்கள் சிறந்த சிகிட்சை அளித்தனர். ஆனால் அந்த சிகிட்சைகள் அவர் எதிர்பார்த்தபடி அமையவில்லை. அதனால் John Roebling சொன்னார் எனக்கு இனி எந்த மருத்துவ உதவியும் வேண்டாம். எனது பாதத்தை எப்படி பராமரிக்கவேண்டும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். நானே பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லி வீட்டிற்குச் சென்றார். சில நாட்களில் தசைகளைக் கடினமாக இறுகச் செய்யும் Tetanus நோய் அவரைத் தாக்கியது. வாய் திறக்க முடியாமல் தாடை எலும்புகள் கடினப்பட்டன. மிகப் பரிதாபமாக இறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பாலம் கட்ட வேண்டிய உன்னத தரிசனத்தையும் இழந்தார். நாகமான் என்னும் படைத்தளபதி தான் நினைத்திருந்ததற்கு மாறாக எலிசா யோர்தான் நதியில் ஏழுதரம் மூழ்கச் சொன்னதனால் கடும் சினமுற்றார் (II அரசர் 5 : 11). நலமடையும் வாய்ப்பு இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். அருள்நாதர் இயேசு பேதுருவை சீமோனே, சீமோனே என இருமுறை அழைத்தார் (லூக். 22 : 31). ஏனெனில் பேதுரு உறுதியற்றவர். பண்பாட்டுப்பிடிப்புக்கும், மனித போக்குக்கும் அவ்வப்போது இணங்கி இடறுபவர். அப்படிப்பட்ட பேதுருவைப் பார்த்து கோதுமையைப் போல உன்னைப் புடைக்க சாத்தான் அனுமதி கேட்டிருக்கிறான். ஆனால் நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன் (லூக். 22 : 31, 32) என்றார். தனது எண்ணத்திற்கு மாறான நிலைகள் ஏற்பட்டபோது அருள்நாதர் இயேசுவை நோக்கிப் பார்க்காமல் உலகத்தை நோக்கிப் பார்த்தார். உன்னத தரிசனங்களை இழந்தார்.

எனது வழியில் அல்ல; கடவுள் தனது வழியில் செயலாற்றட்டும் அது எனது வாழ்க்கையில் நன்மையைக் கொண்டு வரும் என நம்புவோம். அருள்நாதர் இயேசுவை விட்டு அகன்று போகாமல் உற்சாகத்துடனும், உறுதியுடனும், உன்னத தரிசனத்துடனும் இறைவனுக்காக வாழ்வோம்.

**அருள்திரு. A. வில்லியம் தாமஸ்**

| 20-03-2013 | தவக்கால ஆறாம் புதன் |
|---|---|

எபி. 9 : 11-22

# புதிய உடன்படிக்கையின் இணைப்பாளர்

"இவ்வாறு அவர் புதிய உடன்படிக்கையின் இணைப்பானாராயிருக்கிறார்" (எபி. 9 : 15)

**உடன்படிக்கை**

இரண்டு பேருக்கிடையில் உண்டான ஏற்பாடு என்பது மூல மொழியின் பொருள். உடன்படிக்கை என்னும் சொல் புதிய ஏற்பாட்டில் எபிரேயர் திருமுகத்தில்தான் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது கிறிஸ்தவ சமயத்திற்கு அடிப்படையானது. கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே எற்பட்ட ஒரு புதிய உறவை இது குறிக்கிறது. இது கடவுளே ஏற்படுத்திய ஒப்பந்தம் ஆகும்.

தொடக்கத்தில் உடன்படிக்கை செய்கிறவர்கள் உடன்படிக்கைப் பலியின் இரண்டு பாகங்களுக்கு நடுவாகப் போவார்கள் (தொ.நூ. 15 : 10-17). பிற்காலத்தில் கடவுளின் பேரில் ஆணையிட்டு உடன்படிக்கை செய்தனர் (தொ.நூ. 26 : 31). சில வேளைகளில் கைமேல் கொடுத்தனர் (எஸ்றா 10 : 19; எசேக். 17 : 18). தொடக்கத்தில் உடன்படிக்கைக்கு அடையாளமாக தூண் நடுவர் அல்லது கற்குவியலை குவிப்பர் (தொ.நூ. 31 : 44-53). இரத்தம் தெளிப்பர் (வி.ப. 24 : 8). உடன்படிக்கை என்னும் ஒப்பந்தம் இருவருக்கிடையில் ஒரு புதிய உறவை ஏற்படுத்துகிறது.

**1. குறைகளை உள்ளடக்கிய உடன்படிக்கை** (எபி. 8 : 7)

புதிய உடன்படிக்கை என்று கூறப்படுவதால் பழைய உடன்படிக்கை ஒன்று உண்டு என்பது தெளிவு.

கடவுள் ஆதாமோடும், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடும் உடன்படிக்கை பண்ணினார் (தொ.நூ. 2:16; 15:12). பின்பு மோசே மூலம் இஸ்ரயேல் ஜனத்துடன் உடன்படிக்கை பண்ணினார் (வி.ப. 19:5). இஸ்ரயேலுக்குத் தமது உடன்படிக்கையை அளித்து உறுதிமொழிகளை வழங்கும்போது இஸ்ரயேலர் பின்பற்ற வேண்டிய சில நிபந்தனைகளையும் இறைவன் விதித்தார். இந்த உடன்படிக்கை யாவும் விலங்கின் இரத்தத்தால் உறுதி செய்யப்பட்டது. இஸ்ரயேலருடைய பிரமாணிக்கமின்மையின் விளைவால் பழைய ஒப்பந்தம் (உடன்படிக்கை) முறிந்து போனது (ஓசே 2:4; எசே. 16:15). எனவே பிற்காலத்திலுள்ள இறைவாக்கினர் புதிய உடன்படிக்கையை எதிர்பார்த்தார்கள்.





**2. குறைகளைக் களைந்திடும் புதிய உடன்படிக்கை** (எபி. 8 : 17)

பழைய உடன்படிக்கை அற்றுப்போனதால் ஒரு புதிய உடன்படிக்கை தேவைப்பட்டது. இப்புது உடன்படிக்கையை இயேசு கிறிஸ்து தம் உதிரத்தால் உறுதிப்படுத்தினார். பழைய உடன்படிக்கை மிருகத்தின் இரத்தத்தினால் உறுதி செய்யப்பட்டது. ஆனால் புதிய உடன்படிக்கையைத் தம் சொந்த உதிரத்தால் உறுதி செய்தார். எபிரேயர் 9:12-இல் அவர் பலியாகப் படைத்த இரத்தம் வெள்ளாட்டுக் கிடாய்கள், கன்றுக் குட்டிகள் ஆகியவற்றின் இரத்தம் அல்ல, அவரது சொந்த இரத்தமே என்கிறார் ஆசிரியர். மேலும் எபிரேயர் 10:4-இல் ஆம், காளைகள், வெள்ளாட்டுக் கடாக்கள் இவற்றின் இரத்தம் பாவங்களைப் போக்க முடியாது என்றும் கூறுகிறார். எனவே இயேசு கிறிஸ்து தமது இறுதி இரவு விருந்தின் போது கிண்ணத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி தம் சீடர்களுக்குக் கொடுத்து இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள்; ஏனெனில் இது எனது உடன்படிக்கையின் இரத்தம்; பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம்" என்று கூறியதை மத்தேயு 26 : 27, 28-இல் காண்கிறோம். புதிய உடன்படிக்கையில் பாவங்கள் எடுத்தெறியப்படுகின்றன (உரோ. 11 : 27). புதிய உடன்படிக்கையில் இறைவன் மனிதரிடையே தங்குகிறார் (2 கொரி. 6 : 16). அவர் மனிதருடைய இருதயங்களை மாற்றி தம் ஆவியை வைக்கிறார் (உரோ. 3 : 5; 8 : 4-16).

**3. குவலயத்தை மீட்டெடுக்கும் இணைப்பாளரான இயேசு** (எபி. 9 : 14, 15)

"...ஏனெனில் என்றுமுள்ள தூய ஆவியினால் தம்மைத்தாமே கடவுளுக்கு மாசற்ற பலியாகக் கொடுத்தவர் அவரே. இவ்வாறு அவர் புதிய உடன்படிக்கையின் இணைப்பாளராயிருக்கிறார்.

இணைப்பாளர், இருவருக்கிடையே நடு நின்று ஒன்றிணைக்கிறவர். இயேசு கிறிஸ்து தம் உடலாலும், உதிரத்தாலும் கடவுளுக்கும், மனிதருக்கும் நடு நின்று ஒன்றிணைக்கிறார். இதையே புனித பவுலார் எபேசியருக்கு எழுதிய கடிதத்தில் "அக்காலத்தில் நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர்களாகவும், இஸ்ரயேலரின் சமுதாயத்துக்குப் புறம்பானவர்களாகவும், வாக்குறுதியைக் கொண்டிருந்த உடன்படிக்கைக்கு அந்நியர்களாகவும், எதிர்நோக்கு இல்லாதவர்களாகவும் இருந்தீர்கள்.

ஒரு காலத்தில் தொலைவில் இருந்த நீங்கள் இப்பொழுது இயேசு கிறிஸ்துவோடு இணைந்து, அவரது இரத்தத்தின் மூலம் அருகில் கொண்டுவரப்பட்டிருக்கிறீர்கள் என்கிறார் (எபே. 2 : 12, 13).

இவ்வாறு இந்தப் புதிய உடன்படிக்கை என்றும் நிலைக்கும் உரிமைப் பேற்றைப் பெறுவதற்கென்று உண்டாக்கப்பட்டது. கிறிஸ்து தமது சாவின் வழியாய் இதன் இணைப்பாளராகி நமக்கு மீட்பினைத் தந்தார். நாம் மீட்பினைச் சொந்தமாக்கி புதிய உடன்படிக்கையில் நிலை கொண்டு வாழ்வோம். இறையருள் நம்மைப் புதிய பாதையில் நடத்திச் செல்வதாக.

**திரு. D. சாது டேனியல்**

| 22-02-2013 | தவக்கால ஆறாம் வெள்ளி |
|---|---|

Iபேதுரு 2 : 9-12

# நன்னடத்தை உடையவராய் இருங்கள்

பிற இனத்தினர் நடுவில் நன்னடத்தை உடையவராய் இருங்கள் (1 பேது. 2 : 12)

உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்த பேதுரு துக்கப்பட்டார். என் பிழை இன்று தான் என் நினைவிற்கு வருகிறது என உணவுப் பரிமாறுவோரின் தலைவன் பார்வோனிடம் சொன்னதுபோல, உயிர்த்தெழுந்த இயேசுவை சந்தித்த பேதுருவுக்கு அவர் செய்த குற்றங்கள் நினைவுக்கு வந்தன. ஆண்டவரே எல்லாவற்றையும் நீர் அறிந்திருக்கிறீர் என அறிக்கை செய்தார். அருள்நாதர் இயேசுவை முழுமனதோடு அன்பு செய்தார். இழந்து போன உற்சாகத்தையும், உறுதியையும், உன்னத தரிசனத்தையும் மறுபடியும் பெற்றுக்கொண்டார். நம்பிக்கையின் திருத்தூதுவர் என அழைக்கப்படும் நிலைக்கு உயர்த்தப்பட்டார். அந்தப் பேதுரு சின்ன ஆசியாவிலுள்ள கிறிஸ்தவ சபை மக்களுக்குத் தனது அனுபவத்தின் அடிப்படையில் நன்னடத்தை உடையவராய் இருங்கள் என அறிவுரை வழங்குகிறார். நன்னடத்தையுடன் வாழ்வதற்கு மூன்று காரியங்களை நினைவில் கொள்ள வலியுறுத்துகிறார்.

**இருளிலிருந்து ஒளிபெற்றதை நினை** (1 பேது. 2 : 9)

ஆங்கில மொழியில் நீங்கள் விரும்பாத வார்த்தை எது எனப் பல தலைவர்களிடம் கேட்கப்பட்டது. T.S. Eliot என்னும் ஆங்கிலக் கவிஞர் "Saddest" (துக்க நிலை) என்னும் வார்த்தை என்றார். Lyricist Oscar Hammerstein என்பவர் ("But") ஆனால் என்னும் வார்த்தையைச் சொன்னார். Karl Menninger என்னும் உளவியல் ஆசிரியர் "unloved" (அன்பு கூராமை) என்னும் வார்த்தையைச் சொன்னார். Bernard M. Baruch என்பவர் "Hopeless" (நம்பிக்கையின்மை) என்னும் வார்த்தையைச் சொன்னார். அலெக்சாண்டரா ஸ்டால் ஸ்டாய் என்பவர் "atheism" (நாத்திகம்) என்னும் வார்த்தையைச் சொன்னார். ஆனால் ஒரு பக்தன்





திருமறையின் கருத்துப்படி நாம் இருளின் ஆதிக்கத்தில் வாழ்ந்த வாழ்வு நிலைகளைக் குறிக்கும் சொற்கள் என்றார். பேதுருவின் கண்ணோட்டத்தின்படி அவைகள் துர்க்குணம், கபடம், வஞ்சகம், பொறாமை, புறங்கூறுதல் என்பவைகளாகும். இப்படிப்பட்ட வாழ்விலிருந்து அருள்நாதர் இயேசு நம்மைத் தம்முடைய வியத்தகு ஒளியினிடத்திற்கு வரவழைத்தார் எனத் தனது அனுபவத்துடன் எழுதியிருக்கின்றார். ஒளியாகிய இயேசுவிடம் வரும் போது நன்மையை, வழியை, நமது ஆற்றலை அறிந்து கொள்கிறோம்.

சாது சுந்தர் சிங் தனது 16-ஆவது வயதில் இயேசுவை ஏற்றுக் கொண்டதனால் வீட்டாரால் பல நெருக்கடிகளைச் சந்தித்தார். அதனால் வீட்டைவிட்டு வெளியேறினார். 1920-இல் அவரது தந்தை நீ இவ்வளவு மகிழ்ச்சியும் சமாதானமுமாக இருக்கிறாயே இதன் இரகசியம் என்ன? என்று சாது சுந்தர் சிங் அவர்களிடம் கேட்டார். அதற்கு அவர் சொன்னது, ஒளியாகிய இயேசுவின் திருக்காட்சி பெற்றேன். இருளிலிருந்து ஒளியினிடத்திற்கு வந்தேன். கடவுளின் நன்மையை உணர்ந்தேன், அவரது வழியில் செல்கிறேன், கடவுள் என்னை ஆற்றல்படுத்துவதை அனுபவிக்கிறேன். அதனால் எனது உள்ளம் மகிழ்ச்சியும் சமாதானமும் நிறைந்ததாய் இருக்கிறது என்றார். தூய பேதுருவின் அனுபவமும் இதே அனுபவம் தான். தனது இருளின் வாழ்வை நினைத்தார். வருந்தி துக்கப்பட்டார். ஒளியாகிய இயேசுவிடம் முழுமையாய் அர்ப்பணித்தார். கடவுளின் நன்மையும், வழியும், ஆற்றலும் அவரது வாழ்வின் அனுபவங்களாயின.

**2. இரக்கத்தை நினை** (1 பேது. 2 : 10)

இரக்கம் என்பதற்கு "Eleos" என்னும் கிரேக்க வார்த்தையும், "Raham" என்னும் எபிரேய வார்த்தையும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு Forbearance பொறுமையோடு பொறுத்துக் கொள்ளுதல் (Act of enduring) என்ற பொருளும் Compassion -பிறர் துன்பங்கண்டு இரக்கம் கொள்ளுதல் (Feeling of pity for the Suffering of others) என்ற பொருளும் உண்டு. அருள்நாதர் இயேசு மக்கள் மேல் பரிவு கொண்டவர் (மத். 14 : 14). மக்களுக்காகப் பரிதபிக்கிறவர். பேதுரு இதனைத் தனது வாழ்க்கையில் அனுபவித்தார். பேதுரு இயேசுவைச் சபித்து, மறுதலித்திருந்த சூழ்நிலையிலும் அருள்நாதர் இயேசு பேதுருவைக் கனிவுடன் கூர்ந்து நோக்கினார் (லூக். 22 : 61). பின்வாங்கி பழைய மீன்பிடிக்கும் தொழிலுக்குச் சென்றபோதும் பிள்ளைகளே என அழைத்தார். என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? எனக் கனிவோடு

கேட்டார். அவரது ஆடுகளைப் பேணி வளர்க்கும் பொறுப்பினைக் கொடுத்தார். அருள்நாதர் இயேசுவின் பரிவையும் இரக்கத்தையும் பேதுரு அனுபவித்தவர். பிந்தின நாட்களில் இறைவனது இரக்கத்திற்குப் ஏற்புடையவராய் நடந்து கொண்டார்.

இந்தோனேஷியாவில் ஜக்கர்டா நகரில் ஓர் ஆலயம் இருக்கிறது. அந்த ஆலயத்தின் ஆல்டரில் ஒரு வாசகம் இந்தோனேஷியா மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. "தந்தையே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என எழுதப்பட்டுள்ளது. பல ஆண்டுகளுக்கு முன் அங்கு பயங்கரமான போராட்டமும், கலவரமும் ஏற்பட்டன. ஒரே நாளில் 21 ஆலயங்கள் எரிக்கப்பட்டன. எரிக்கப்பட்ட ஆலயங்களில் முதலாவது ஆலயமே அந்த ஆலயமாகும். இயேசு கிறிஸ்து சிலுவையில் காண்பித்த மனதுருக்கத்தை அந்தச் சபையார் அந்த வாசகத்தின் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். நான் உனக்கு இரக்கம் காட்டியது போல நீயும் உன் உடன்பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும் அல்லவா? (மத். 18 : 33) என அருள்நாதர் இயேசு கேட்கிறார். அருள்நாதர் இயேசுவின் இரக்கத்தை நினைவு கூருவோம் பிறர்பால் இரக்கத்தை வெளிப்படுத்துவோம்.

### 3. இயேசுவை முன் மாதிரியாய் நினை

கிறிஸ்துவும் உங்களுக்காகத் துன்புற்று ஒரு முன் மாதிரியை வைத்துச் சென்றுள்ளார். எனவே நீங்கள் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுங்கள் (I பேதுரு 2 : 21.)

அவர் பாவம் செய்யவில்லை. அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவில்லை. பழிக்கப்பட்டபோதும் பதிலுக்குப் பழிக்கவில்லை துன்புறுத்தப்பட்டபோது அச்சுறுத்தவில்லை (Iபேதுரு 2 : 22, 23). அருள்நாதர் இயேசுவின் இந்த மாதிரியான வாழ்க்கையைப் பேதுரு தனது வாழ்வில் அனுபவமாக்கிக் கொண்டார். பண்பட்டவராக, பணிவானவராக, மனத்தாழ்மை நிறைந்தவராக உலகப்பாடுகளுக்கு அஞ்சாதவராகத் தன்னை விளங்கப் பண்ணினார். கி.பி. 68-இல் இரத்த சாட்சியாக மரித்தார். போர்ச்சேவகர் அவரைச் சிலுவையில் அறைய கொண்டு செல்லும்போது இயேசு மரணமடைந்தபடி தான் மரிக்க அபாத்திரன் என உணர்ந்தார். தன்னைத் தலைகீழாகச் சிலுவையில் அறையும்படி கேட்டுக்கொண்டார். இறுதிவரை அருள்நாதர் இயேசுவை முன் மாதிரியாகக் கொண்டிருந்தார்.





இணக்கம் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்குவதற்குப் பலர் இயேசுவை முன்மாதிரியாகக் கொண்டிருந்தார்கள். எ.கா. Sree Narayana Guru கடவுளின் தந்தைத்துவத்தின் கீழ் சகோதரத்துவம் எனப் போதித்தார். (Brother hood of all under the father hood of God). Mahatma Gandhi விடுதலையடைந்த சமூகம் (A community of freedom) என்றார். Martin Luther King அனைவருக்கும் சமஉரிமைகள் கொண்ட சமூகம் (A community of equal rightd for all) என்றார். Nelson Mandela தனிமைப்படுத்தாத சமூகம் (A community beyond apartheid) என்றார். அருள்நாதர் இயேசு அறிமுகப்படுத்திய இறையரசை முழுமை பெறச் செய்ய இயேசுவை மாதிரியாய்க் கொண்டு வாழ்வோம். ஓர் அம்மாவின் கூற்று : திருமணம் ஆன தொடக்கத்திலே வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்வதில் அதிக கவனம் செலுத்தினேன். மேலிருந்து கீழ்வரை ஒட்டடையடித்து வீட்டைச் சுத்தம் செய்வேன். நாளடைவில் வீட்டை அலங்காரமாக வைப்பதில் கவனம் செலுத்தினேன். சுத்தமாய்க் காட்சிதரும் தோற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து சுத்தம் செய்தலை உதாசீனப்படுத்தினேன். அதிக சூரிய வெளிச்சமுள்ள நாள்களில் என் வீடு தன் உண்மைநிலையை வெளிப்படுத்தும். இது நமது ஆன்மீக வாழ்வுக்கும் பொருந்தும். இன்று நாம் நமது வாழ்வை அலங்காரமாக வைப்பதில் தான் கவனம் செலுத்துகிறோம். இந்த லெந்து நாட்களில் இருளிலிருந்து ஒளிபெற்றதை நினைத்து, இரக்கத்தை நினைத்து, இயேசுவை முன் மாதிரியாகக் கொண்டு வாழ நம்மை அர்ப்பணிப்போமாக.

**அருள்திரு. A. வில்லியம் தாமஸ்**

| 25-03-2013 | தூயவாரம் – திங்கள் |
|---|---|

மாற் 11:12–14, 20–25

# எதிர்பார்ப்பில் ஏமாற்றம்

இலையடர்ந்த ஓர் அத்திமரத்தை அவர் தொலையிலிருந்து கண்டு, அதில் ஏதாவது கிடைக்குமா என்று அதன் அருகில் சென்றார் (மாற் 11:13).

சார்லி சாப்ளின் உலகப் புகழ் பெற்ற நகைச்சுவை நடிகர் ஆவார். ஒரு சமயம் அமெரிக்காவில் சார்லி சாப்ளின் போல் வேடமணிந்து நடித்துக் காட்டும் போட்டி ஒன்று நடைபெற்றது. அந்தப் போட்டியில் யாருக்கும் தெரியாமல் சினிமா உடையுடன் சார்லி சாப்ளினும் கலந்து கொண்டார். நடுவர்கள் முன் நடித்துக் காட்டினானர். இருந்தும் கூட உண்மையான சார்லி சாப்ளினுக்கு இரண்டாம் இடமே கிடைத்தது.

சில நேரங்களில் உண்மையை விட போலி தான் கவர்ச்சிகரமாக இருக்கிறது. போலியின் மயக்கத்தால் உண்மையின் அழகை நம்மால் காண முடியவில்லை. இத்தகைய போலித்தனத்தை மாய்மாலத்தை ஆண்டவர் இயேசு கிறிஸ்து வன்மையாகக் கண்டிக்கிறார். எருசலேம் பயண இறுதியில் ஆண்டவர் பெத்தானியாவிலிருந்து எருசலேமுக்கு வருகிறார். வழியில் அவருக்குப் பசி உண்டாயிற்று. ஆகவே இலையடர்ந்த அத்திமரத்தில் கனி உண்டா என்று தேடினார். அவருடைய எதிர்பார்ப்பில் ஏமாற்றமே மிஞ்சியது. உடனே அத்திமரத்தைச் சபிக்கின்றார். இந்த அத்திமரத்தின் வழி ஆண்டவர் நமக்குக் கற்பிக்கும் உண்மைகளைத் தியானிப்போம்.

**1. மலைக்கச் செய்த அத்திமரம்.**

பெத்தானியாவில் இருந்து எருசலேமுக்கு வரும் வழியில் ஆண்டவர் இந்த அத்திமரத்தைக் காண்கிறார். இயேசுவுக்குப் பசி உண்டாயிற்று என்று நற்செய்தி ஆசிரியர்கள் எழுதுகின்றனர். இயேசுவுக்கு அன்பாயிருந்த லாசருவின் குடும்பம் இருந்த பெத்தானியாவிலிருந்து தான் இயேசு வருகிறார். ஆகவே அவருக்குப் பசி ஏற்பட்டது என்பது முரண்பாடாய்த் தோன்றுகிறது. இந்தப் பசி வெறும் உடற்பசி மட்டுமன்று போலித்தனத்தின் கவர்ச்சியை உலகிற்கு உணர்த்த வேண்டிய உண்மைப் பசி என்றால் மிகையாகாது.





ஆண்டவருக்குப் பசி ஏற்பட்டதும் இலையடர்ந்த ஓர் அத்திமரத்தைத் தொலைவிலிருந்து கண்டார் (மாற் 11:13) என்று படிக்கிறோம். இந்த அத்திமரம் தொலைவிலிருந்தே தன்னைத் காண்போரின் கவனத்தைக் கவர்ந்தது. அதனுடைய தோற்றப்பொலிவும், கவர்ச்சியான காட்சியும் அதைத் தொலைவிலிருந்து பார்ப்போரை மலைக்கச் செய்தது.

இந்த அத்திமரத்தை ஆண்டவர் யூதர்களைக் குறிக்கும் உருவகமாகவே பயன்படுத்துகிறார் (எரே 8:13, எசே 17:24, ஓசே 9:10). யூத சமயத்தில் காணப்பட்ட சட்டங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் ஆகியவைகளைக் கொண்டு தொலைவிலிருந்து பார்ப்போருக்கு யூதர்கள், தாங்கள் பக்தி நெறிமிக்கவர்கள் என்று பாசாங்கு செய்து கொண்டனர் (மத் 23: 2-7, 23). யூதர்களின் உலகியல் சார்ந்த இந்த மலைப்புத் தோற்றத்தைச் சுட்டிக்காட்ட ஆண்டவர் அத்திமரத்தைப் பயன்படுத்துகிறார்.

**2. மறைத்துக்கொண்ட அத்திமரம்**

தொலைவிலிருந்து இலையடர்ந்த அத்திமரத்தைக் கண்ட ஆண்டவர் அதில் ஏதாவது கிடைக்குமா என்று அருகில் வந்தார். வந்தபோது இலைகளைத் தவிர வேறொன்றையும் காணவில்லை (மாற்11:13). தொலைவிலிருந்து காண்போரின் கவனத்தை ஈர்த்த மரம் அருகில் சென்றதும் அதன் அவல நிலை வெட்ட வெளிச்மாயிற்று. பாவம் செய்த தொடக்கப் பெற்றோர் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து அத்தி இலைகளால் தங்களுக்கு ஆடைகள் செய்து தங்கள் வெறுமையை மறைத்தது (தொ.நூ.3:7) போல இந்த அத்திமரமும் கனி இல்லாத தன் கிளைகளிலுள்ள வெறுமையை அதன் இலைகளால் மறைத்துக் கொண்டது. தொலைவிலிருந்து பார்த்தாலோ பிரம்மாதம் அருகில் சென்றாலோ அவமானம். வெளிப்புறத்திலோ தூய்மையும், வெளிச்சமும் ஆனால் அகத்திலே அழுக்கும் இருளும்.

இத்தகையோரைப் பார்த்து ஆண்டவர் அழைக்கிறார், வெளிவேடக்காரரே! வெள்ளையடித்த கல்லறைக்கு ஒப்பானவர்களே! நீங்கள் வெளியே மக்களுக்கு நேர்மையாளராய்த் தோற்றமளிக்கிறீர்கள். ஆனால் உள்ளேயோ போலித்தனமும் நெறிகேடும் நிறைந்தவர்களாய் இருக்கிறீர்கள் (தயவு செய்து படிக்க மத் 23:25-28).

கிறிஸ்தவர்களாகிய நம்முடைய வாழ்வும் வளர்ச்சியும் உலகியல் நோக்கில் நம்மைக் காண்போரை மலைக்கச் செய்கின்றன. ஆனால் நம்மில் கனி உண்டா? என்பதை ஆராய்ந்து பார்க்க அழைக்கப்படுகிறோம். நம்முடைய ஆவிக்குரிய வெறுமையை அகற்ற, கனிதர ஆதாரமாயிருகிற கடவுளின் வார்த்தையை உட்கொண்டு வாழ்வோம். இறையரசைச் சுவைப்போம்.

**திரு. B.சாம் ஜெபசிங்**

| 26-03-2013 | தூயவாரம் - செவ்வாய் |
|---|---|

மத். 22 : 15-40

# ஆன்மிகவாதிகளின் அறியாமை

இயேசு அவர்களுடைய தீய நோக்கத்தை அறிந்துகாண்டு,
வெளிவேடக்காரரே, ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள்? மத். 22 : 18

இயேசுநாதர் நன்மை செய்கிறவராய் பாலஸ்தீனாவில் சுற்றித் திரிந்தாலும் மக்கள் பலர் அவரைச் சோதித்தனர். குறிப்பாக, பரிசேயர், ஏரோதியர்கள், சதுசேயர்கள் இயேசுவைச் சோதிக்க பல வினாக்களை எழுப்பினார்கள். இயேசுவிடம் பலவிதமான கேள்விகளைக் கேட்டு அவரது வாயின் வார்த்தைகளால் அவரை அகப்படுத்த வைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே அவர்கள் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். உண்மையில் பொருள் அறிய வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் இல்லை. ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர்களது கேள்விகளை உடைத்தெறிந்து அதற்கு நேர் எதிரிடையாகவும், அவர்களே ஒத்துக் கொள்ளுமளவிற்குச் சிந்தனையைத் தூண்டுவதாகவும் பதிலளித்தார்.

**1. அதிகாரம் சார்ந்த கேள்வி** (மத். 22 : 17)

இயேசுநாதரின் காலத்தில் பாலஸ்தீனா நாடு ரோம ஆளுகைக்குட்பட்டிருந்தது. ரோம சாம்ராஜ்யத்தை ஆளுகை செய்தவர் சீசர் என்னப்பட்டார். அவரது ஆளுகைக்குட்பட்ட எவரேனும் ஒருவர் ரோம அரசரையோ, அரசையோ அவமதித்துப் பேசினாலோ அல்லது எதிர்த்துப் பேசினாலோ அவர் கொலைக் குற்றம் சாட்டப்படுவார். அந்த வகையில் இயேசுவை வார்த்தையினால் குற்றப்படுத்த இக்கேள்வியைக் கேட்டனர். இயேசுவோ மிக ஞானமாக “சீசருடையதை சீசருக்கும், கடவுளுடையதைக் கடவுளுக்கும் கொடுங்கள் (மத். 22 : 21) என்றார். இந்தப் பதிலில் மிகவும் ஆழமான பொருள் புதைந்துள்ளது. அக்காலத்தில் வழக்கத்தில் இருந்த ரோம வரிக்காசில் சீசரின் உருவப்படமும், மேலெழுத்தும் பொறிக்கப்பட்டிருந்தன. எனவே அந்தக் காசு சீசருடையது. ஆனால் இறைச்சாயல் பொருந்திய மண்ணின் மாந்தர்களாகிய மக்கள் கடவுளுடையவர்கள். எனவே அவர்களிடம் மறைமுகமாக உரோம அரசிடம் வரிக்காசை வழங்குங்கள். உங்களைக் கடவுளுக்கு அர்ப்பணியுங்கள் என்பதே அப்பதிலின் உண்மையான கருத்தாகும்.

**2. அறம் சார்ந்த கேள்வி** (மத். 22 : 28)





இயேசுவிடம் கேட்கப்பட்ட இரண்டாவது கேள்வியாக இத்திருமறைப் பகுதியில் வரும் கேள்வியை உயிர்த்தெழுதலில் நம்பிக்கையற்ற சதுசேயர் கேட்டனர். இவ்வுலகில் ஏழு சகோதரர்களுக்கும் மனைவியாயிருந்த ஒரு பெண் உயிர்ப்பில் யாருக்கு மனைவியாயிருப்பாள்? என்பதே அக்கேள்வி. ஒரு மனிதனுக்கு ஒரே தாரம் அங்கீகரிக்கப்பட்டிருந்த அச்சூழலில் அவர்களுடைய கேள்வி அறம் சார்ந்த வாழ்வைப் பற்றியதாக உள்ளது. இக்கேள்விக்கு இயேசுவின் பதில் நிச்சயமாக அறம் சார்ந்த நிலையில் பொதுமக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தும் என்று நம்பியிருந்தனர். ஆனல் இயேசுவின் பதில் அவர்களின் அறியாமையைச் சுட்டிக்காட்டி அதற்குச் சாட்டையடி கொடுப்பதாய் அமைந்துள்ளது. உயிர்த்தெழுதலில் கொள்வனையும், கொடுப்பனையும் இல்லை. அவர்கள் பரலோகத்திலே தேவதூதர்களைப் போல் இருப்பார்கள் என்றார். இதன் பொருள் இவ்வுலகில் மனிதர்களாகிய நாமே உறவு நிலைகளை நமக்கென்று ஏற்படுத்திக் கொள்கிறோம். அது இவ்வுலகோடு நின்றுவிடும். ஆனால் என்றும் அழியாத அந்த நித்திய வாழ்விலே அனைவரும் சமம் என்ற நிலையில் மனித செயல்நிலைக்கு அப்பாற்பட்டு தேவதூதர்கள் போலிப்பார்கள் என்று பதில் கூறினார் இயேசுநாதர்.

**3. அறிவு சார்ந்த கேள்வி** (மத். 22 : 36)

பரிசேயரில் ஒருவனாகிய திருச்சட்ட அறிஞர், திருச்சட்டத்திலே எது முதன்மையான கட்டளை? எனக் கேட்டார். இது இறைவன் கொடுத்த கட்டளை மீதிருந்த அறிவைச் சோதிப்பது போன்று இருக்கிறது. இஸ்ரயேலர்கள் மோசேயினால் தரப்பட்ட திருச்சட்டங்களை உடையவர்கள் (யாத். 20 : 1-17). திருச்சட்டங்கள் மக்கள் வசதிக்கேற்ப திரிக்கப்பட்டிருந்தது; இலகுவாக்கப்பட்டிருந்தது. பல கடினமாக்கப்பட்டிருந்தது (மாற். 7 : 11). இயேசுநாதரிடம் முதன்மையான கட்டளை எது? எனக் கேட்டபோது, முதன்மையான கட்டளை, முதன்மையற்ற கட்டளை எனக் கட்டளைகளைப் பிரிக்க இயலாது. அவை ஒன்றுக்கொன்று இணையானவைகளே என்பதை வெளிப்படுத்தும் பொருட்டு மொத்த கட்டளைகளையும் இரண்டாக்கிக் கூறினார் (மத். 22 : 37-39). இறைவனிடம் அன்புகூரு, மனிதரிடமும் அன்பு கூரு. இதில் திருச்சட்டங்களும், இறைவாக்குகளும் அடங்கியிருக்கின்றன என்றார். இறைவன் மானுட வரலாற்றில் வைத்த அன்பை வெளிப்படுத்தவே கட்டளைகள் தரப்பட்டுள்ளன. கற்பனைகளை மானுடத்திற்கு பயனுள்ள வகையில் பயன்படுத்துவதே இறைமகன் இயேசவின் விருப்பமாகும் (மத். 5 : 21-32).

கிறிஸ்தவர்களாகிய நாமும் வாழ்கின்ற பல்சமயச் சூழலில் பிற சமயம் சார்ந்த மக்கள் நம்மைப் பார்த்து கேள்விக் கணைகளைத் தொடுக்கும்போது நமது சாட்சியுள்ள வாழ்வால், கேட்கப்படுகின்ற கேள்விக்குச் சாந்தத்துடன், ஞானமுள்ள பதிலைக் கூறி கிறிஸ்துவண்டை வழிநடத்துவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

**அருள்திரு. G. சாம் ரிச்சர்ட் நெல்சன்**

| 27-03-2013 | தூயவாரம் - புதன் |
|---|---|

மத். 26 : 6-13

# நற்செயலின் நறுமணம்

"அவர் எனக்கு செய்தது முறையான செயலே". மத். 26 : 10

பெத்தானியா ஒலிவ மலையின் கிழக்குச் சாரலில் எருசலேமிற்குக் கிழக்கே 2½ கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. பஸ்கா திருவிழாவின் போது எருசலேமில் தங்க இடம் இல்லாதவர்களுக்குப் பெத்தானியா புகலிடமாக இருந்தது. பெத்தானியா என்பது அத்திப்பழ வீடு என்று பொருள்.

எருசலேம் பெருநகர் பணம் படைத்தவர்கள் நிறைந்த நகர் குற்றம்புரிந்தவர்களுக்கு மரண தண்டனை விதிக்கும் அளவுக்கு அதிகாரம் படைத்தவர்கள் வாழ்ந்த நகரம். இங்கே தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞரும் இயேசுவை எப்படி சூழ்ச்சியால் பிடித்துக் கொலை செய்யலாம் என வகை தேடிக்கொண்டிருக்கும்போது வாழ்க்கை என்பது ரோஜா பூக்களின் இதழ்களால் மட்டும் அலங்கரிக்கப்பட்ட மென்மையான பாதையல்ல, மாறாக இந்த ரோஜா செடியில் கூர்மையாக மறைந்திருக்கிற முட்களையும் கொண்டது என்பதை உணர்ந்த வண்ணமாக, இலட்சியப்பயணத்தில் கொள்கை மாற்றமோ, தடுமாற்றமோ இல்லாமல் இறை அன்பை வெளிப்படுத்துகின்ற நிலையில் மனித மாண்பையும் உறவையும் உரிமையையும் இழந்து உருக்குலைந்தவராக உறவுக்காக ஏங்கி நின்று தொழுநோயினின்று நலம்பெற்ற சீமோன் வீட்டிலே அமைதியாக எந்தச் சலனமுமின்றி பந்தி ஒன்றில் கலந்துகொள்கிறார் இயேசுநாதர்.

விருந்தில் விருந்தாளிகளைத் திருநிலைப்படுத்துவது என்பது யூதமரபு. இவ்விருந்தில் இயேசுவே விருந்தாளி. மரபின் அடிப்படையில் சீமோன் இயேசுநாதரைத் திருநிலைப்படுத்தவேண்டும். தூசிபடிந்த பாதங்களைக் கழுவ தண்ணீர் கொடுக்கவேண்டும். ஆனால் சீமோன் தவறுகிறார். இச்சூழ்நிலையில் அங்கு அவர் பந்தியில் அமர்ந்து தன்





இருந்தபோது விலையுயர்ந்த நறுமணத் தைலம் கொண்ட படிகச் சிமிழுடன் பெண் ஒருவர் அவரிடம் வந்து அதை அவர் தலையில் ஊற்றினார்.

**1. அன்பின் அடையாளம்**

நன்றி மறப்பது நன்றன்று; செய்நன்றி மறந்தாருக்கு உய்வில்லை; பிறர் உனக்கு தினை அளவு நன்மை செய்தால் அதைப் பனை அளவாகக் கருதி பாராட்டவேண்டும் என்பது நீதி நூல்களின் கூற்று. நல்ல இதயம் உள்ள மனிதன் இறைவனுக்கு நன்றி சொல்ல மறப்பதில்லை. நன்றி மறப்பது இறைவனை மட்டுமல்ல நம்முடைய உண்மை நிலையை மறப்பதற்குச் சமம். ஒருவரின் உதவியைப் பெறுவதில் இருக்கும் ஆர்வம் அது நிறைவடைந்த பின் நன்றி சொல்வதில் இருப்பதில்லை. தொழுநோயாளி சீமோன் செய்யாத ஒன்றை பெண் ஒருத்தி நிறைவேற்றுகிறாள். பெண் ஒருத்தியென மாற். 14 : 3, மத். 26 : 7, ஆகி வசனங்களும் லாசருவின் சகோதரியான மரியாள் எனவும் (யோவ. 12 : 3), இயேசுவின் பாதத்தில் அமர்ந்திருந்து வசனத்தைக் கேட்டு நல்ல பங்கைத் தெரிந்துகொண்டவள் எனவும் (லூக். 10 : 42) கூறுகின்றன. மரித்துப்போன தன் சகோதரன் லாசருவைத் திரும்பவும் உயிரோடு பெற்ற மரியாள் தன் அன்பை வெளிப்படுத்துகின்ற வண்ணமாக நன்றிப் பெருக்கோடு விலையுயர்ந்த பரிமளத்தைலத்தை அவரது தலையில் ஊற்றினார். உலக அரங்கில் கோடா கோடி இதயங்களில் நீங்காத இடத்தைப் பிடித்த அன்னை தெரசாவுக்கு தான் காட்டிய அன்புக்காகவே நோபல் பரிசு கிடைத்தது.

**2. அர்ப்பணத்தின் அடையாளம்**

ஆழ்ந்த அன்பும் எந்த எதிர்பார்ப்பும் இல்லா மனநிலையோடும் நறுமண தைலத்தை இயேசுவின் தலையில் ஊற்றினாள். இறைவனை தவிர என்னுடைய வாழ்க்கையில் மேலானது எதுவுமில்லை. அவருடைய கையில் என்னை அர்ப்பணித்தால் எனக்குத் தேவையான அனைத்தையும் அவரே செய்வார், அவரே என் இரட்சகர் என்பதை உணர்கின்ற வண்ணமாக இச்செயலை செய்தாள்.

உப்பு, கரைந்தால் தான் சுவை, மெழுகு உருகினால்தான் ஒளி, சந்தனம் வெட்டப்பட்டால்தான் மணம். உப்பாகச் சுவை கொடுக்கவும், ஒளியாக வழிகாட்டவும், சந்தனமாக மணக்கவும் நாம் நம்மை இழக்க வேண்டும். இங்கே அர்ப்பணத்தின் அடையாளமாக மரியாள் தன்னிடமுள்ள விலையுயர்ந்த நறுமணத் தைலத்தை இழந்தாள். சகேயு

சொத்துக்களை இழந்தார். சீடர்கள் தங்கள் படகை, மீன்வலைகளை இழந்தார்கள். அரிமத்தியாவிலிருந்து வந்த யோசேப்பு தம் புதிய கல்லறையை இழந்தார். அன்பு செய்கின்றவர்கள் கணக்குப் பார்ப்பதில்லை. தங்களிடமுள்ள அனைத்தையும் கொடுக்கின்றனர். இதனுடைய உச்சக்கட்டம் தங்கள் உயிரையும் துச்சமாய் எண்ணி இரத்த சாட்சிகளாய் மடிகின்ற நிலை (சீடர்கள்).

**3. அரும்செயலின் அடையாளம்**

மெசியா யூத மக்களாகிய தங்களுக்கு மட்டும்தான் என்று யூதர்கள் நம்பிக்கொண்டிருக்கும் போது இவர்தான் மெசியா என்பதை வெளிப்படுத்துகின்ற வண்ணமாக நறுமணத் தைலத்தை அவர்தலையில் ஊற்றினாள். இயேசு தமது துன்பம், சாவு மற்றும் உயிர்ப்பு வழியாக ஒட்டுமொத்த உலகத்திற்கே மீட்பராகவே இருக்கிறார் என்ற உண்மையை உணர்த்தும் வண்ணமாக இச்செயல் நிறைவேற்றப்பட்டது சிலுவையில் அறையப்பட்டு இறக்கின்றவர்களுக்கு வழக்கமான அடக்கச் சடங்கு நடைபெறுவதில்லை. இயேசுவும் இத்தகையதோர் சாவையே எதிர்நோக்கி இருந்தார். எனவே இயேசுவுக்கு இந்தக் குறை இருக்கக்கூடாது என்றப் பார்வையோடு இந்தப் பெண் இயேசுவின் மீது நறுமணத் தைலத்தை ஊற்றினாள். அவர் எனக்கு செய்தது முறையான செயலே (மத். 26 : 10) என்று இயேசு கூறினார்.

ஆக, இயேசுவிடம் அன்பு செய்து அர்ப்பணத்துடன் நற்செயல்களைச் செய்து வாழ்வோமாக.

**அருள்திரு. N. ஜாண் பென்டிங்**



| 28-03-2013 | வியாகுல வியாழன் |
|---|---|

விப. 12 : 1-8 — 1 கொரி. 11 : 17-34
திபா. 63 — மாற். 14 : 12-16

## திருவிருந்து : மாபெரும் நன்றிப்படையல்

## Eucharist : the great thanksgiving

கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப்பிட்டு, "இது உங்களுக்கென என் உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்றார். (1 கொரி. 11 : 24)

இஸ்ரயேலருக்கு பாஸ்கா விழா எவ்வளவு முக்கியமானதாகக் கருதப்பட்டதோ, அதுபோல இறுதி இரவு உணவைப்பற்றி கிறிஸ்தவர்களும், நற்செய்தி நூலாசிரியர்களும், பவுலடியாரும், திருச்சபைத் தந்தையர்களும், புனிதர்களும் தங்கள் எழுத்துகளிலும், பற்றுறுதி வாழ்க்கையிலும் அதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கி இன்றும் பல்வேறு பெயர்களில் "அப்பம் பிடுதல், ஆண்டவரின் இரவு உணவு (The Lords's Supper) தூய ஐக்கியம் (Holy Communion) தூய கொர்பானா (Holy Qurbana) தூய நன்றிப்படையல் (Holy Eucharist) திருப்பலி (Holy mass) அருள் நிறைந்த திருவருட்சாதனம் (Blessed Sacrament)என அழைக்கப்பட்டு இன்றுவரை நடைபெற்று வருகின்றது. இருப்பினும் பாஸ்கா விழாவில் இயேசு அப்பத்தையும், திராட்சைச் சாற்றையும் எடுத்து நன்றி செலுத்தி, சீடர்களுக்கு வழங்கி, அவர் கூறிய வார்த்தைகள் பற்றிய பல்வேறு கருத்து வேறுபாடுகளும் விசுவாச வரலாற்றில் ஏற்பட்டிருக்கின்றன. கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து பொருள் மாறும் கொள்கையாக (Transubstantiation) மேற்கத்தியத் திருச்சபையின் இறையியல் விளக்கமாகக் கொள்ளப்பட்டது. 16-ஆம் நூற்றாண்டில் பொருண்மை மாறாத கொள்கையாக (Consubstantiation) சீர்திருத்தவாதி மார்ட்டின் லூதரால் விளக்கம் பெற்றது. கால்வின் இது ஒரு ஆன்மீக எழுந்தருளல் (Spiritual presence) என்றும் சுவிங்கிலி இது ஒரு நினைவு கூருதல் என்றும் பிற்காலத்தில் திருச்சபை தந்தையர்களான ஜஸ்டின் மார்ட்டின், தாமஸ் அக்குவினாஸ், சிரில், தூய அகஸ்டின் போன்றோர் பல விளக்கங்கள் வழங்கினார்கள். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் அப்பம்பிடுதலில் ஈடுபட்டனர். பிற்காலத்தில் அவர்கள் அதை அன்பின் விருந்து என அழைத்தார்கள். இந்த விருந்தில் அனைவரும் கலந்து கொண்டதால் இதை "சபையின் விருந்து" (Congre-

gational Meal) என்று பொருள் கொண்டனர். இவ்விருந்தில் இயேசு கூறிய வார்த்தைகளின் அடிப்படையில் மாற்கு நற்செய்தியாளர் தருகின்ற தகவல்கள் முதன்மையானதாகக் கருதப்படுவதால் சில ஆன்மிக உண்மைகள் நமது ஒப்படைப்பையும், ஆன்மிக எழுச்சியைத் தூண்டுவதாக அமைகின்றன.

எப்படியெனில் இயேசு தம்முடைய சீடர்களோடு இணைந்து யூதர்களின் பாஸ்கா விழாவைக் கொண்டாடினார். இஸ்ரயேலரின் விடுதலையை வெளிப்படுத்துவது பாஸ்காவாகும். பாஸ்கா விழாவின் யதார்த்தம் நலிவடைந்து, நாளடைவில் சடங்காக மாறிவிட்டது. பாஸ்காவில் வெளிப்படவேண்டிய “விடுதலைவேட்கை” தணிந்து அது வெறும் சடங்காக மாத்திரம் நடைபெற்று வந்தது. இஸ்ரயேலர்கள் உரோமையர்களின் அடிமைத்தனத்திற்குள் மயக்க நிலையில் இருந்துவிட்டு, பாஸ்காவைச் சடங்காகக் கொண்டாடினார்கள். அனைத்து இஸ்ரயேலரின் மனதிலும் தங்களுக்கு முழுமையான விடுதலை வேண்டும் என்ற ஏக்கமும், தாகமும் இருந்தன. ஆகவே அவர்கள் மேசியாவை எதிர் நோக்கினார்கள். ஆனால் அவர்கள் விடுதலைக்காகத் தியாகச் செயல்களைச் செயல்படுத்தவோ, தங்களை அதற்காக அர்ப்பணிக்கவோ முன் வரவில்லை. சிலர் விடுதலை என்ற பெயரில் உரோமர்களின் கைக்கூலிகளாகவும், அடியாட்களாகவும் செயல்பட்டு மக்களை ஏமாற்றி வந்தார்கள். இச்சூழலில் இயேசு கிறிஸ்து மக்களின் முழுமையான விடுதலைக்காக (உடல், உள்ளம், வாழ்வு சார்ந்து) வல்ல செயல்கள், அறிவுரைகள், உவமைகள், உருவகங்கள், அடையாளச் செயல்கள், தீயோனை அகற்றுதல் போன்றவைகளின் வாயிலாக மக்களை ஒருங்கிணைத்து வந்தார். இத்தருணத்தில் உரோமையர்களின் கைக்கூலிகள் (பரிசேயர், சதுசேயர், வேதபாரதகர், யூத சமயவாதிகள்) இயேசுவின் விடுதலைப் பயண வரலாற்றில் குறுக்கிட்டு, சூழ்ச்சிகள் மேற்கொண்டு, அவரைக் கொலை செய்யும்படியான தருணம் நெருங்கும்போது, பாஸ்கா விழா கொண்டாட்டம் வருகிறது. பாஸ்கா விழாவை இயேசு தம் சீடர்களோடு கொண்டாடும்போது, தம்முடைய மரணம் நெருங்கிவிட்டது என்பதை அவர் நன்கு உணர்ந்து பாஸ்கா உணவில் வைக்கப்பட்டிருந்த அப்பத்தைத் தம்முடைய உடலாகவும், அங்கிருந்த திராட்சை சாற்றை தம்முடைய உதிரமாகவும் உருவகித்து, முழுமையான விடுதலைப் பயணத்தில் தாம் முழுமையாக தியாக பலியாக்கப்படப்போவதையும் தம்முடைய சீடர்களும், தம்மைப் பின் தொடர்கிறவர்களும் முழுமையான விடுதலைப் பயண வரலாற்றில் “தங்களைத்தியாகப் பலியாக” ஒப்படைத்துச் செயல்படவேண்டும்





என்பதையும் பாஸ்கா நிகழ்வில் இயேசு வெளிப்படையாகக் காட்டினார். இந்நிகழ்வில் வெளிப்படுகின்ற ஆன்மிக உண்மை என்னவெனில் இஸ்ரயேலரின் முழுமையான விடுதலைப் பயணத்தில் பங்கு கொள்வோர் விடுதலை வாழ்வை வெறும் பேச்சாக (சடங்காக) மட்டும் கொள்ளாமல், தங்களையே முழுமையாகக் கையளிக்கின்ற விடுதலைப் பயண வரலாறாக மாற்றி, மக்களுக்கு முழுமையான விடுதலையை வழங்கவேண்டும். பாஸ்கா விழாவில் இயேசு தம் சீடர்களுக்கு இத்தகைய விடுதலையை நினைப்பூட்டினார். இந்நிகழ்வில் இரு உண்மைகள் நமக்கு வெளிப்படுத்தப்படுகின்றன.

**1. உடைக்கப்படும் அப்பம்** (மாற். 14 : 22)

இயேசு தம் சீடர்களோடு பாஸ்காவைக் (விடுதலை விழாவை) கொண்டாட ஒழுங்குகள் செய்யப்பட்டன. (மாற். 14 : 12-18). பாஸ்காவில் புளிப்பில்லா அப்பம் சாப்பிடும் வேளையில் இயேசு அந்த அப்பத்தை எடுத்து நன்றி செலுத்தி, உடைத்து சீடர்களுக்கு வழங்கும்போது, அப்பத்தைத் தம் உடலாக வழங்கினார் (14-22) இதில் இரு உண்மைகள் மறைந்து இருக்கின்றன. முதலாவதாக உடைக்கப்படும் அப்பம், இரண்டாவதாக உடலாக ஒப்புமைப்படுத்தப்படும் அப்பம். இஸ்ரயேலரின் பாஸ்கா விழா, வரலாற்றில் தொடர்ந்து விடுதலை உணர்வை மக்களுக்கு ஊட்டவில்லை. எப்படியெனில் எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து யூதர்கள் மோசே, ஆரோன் வாயிலாக இறைவனின் வழங்கிய விடுதலையை உணர்ந்தவர்கள். மேலும் இஸ்ரயேலர் இனி ஒருபோதும் அடிமைப்படக்கூடாது. ஒருவரையும் அடிமைப்படுத்தவும் கூடாது என்ற உண்மையை ஏற்றுக்கொண்டவர்கள். ஆனால் இஸ்ரயேலர் இந்த உண்மையை மறந்து, உரோமையர்களுக்கு அடிமையாக இருந்து கொண்டே பாஸ்கா விழாவைக் கொண்டாடுகிறார்கள். அடிமையாக வாழ்ந்து கொண்டு விடுதலை விழாவைக் கொண்டாடுவது வெறும் சடங்காகும். எனவே இயேசு பாஸ்கா விழாவில் அப்பத்தை எடுத்து உடைத்து, முழுமையான விடுதலைக்காக, நீங்கள் எதிர்பார்க்கும் மேசியா தம்மை உடைத்து இஸ்ரயேலரின் விடுதலைக்காக முழுமையாக அர்ப்பணிப்பதை சீடர்கள் உணர்ந்து கொள்ளும் பொருட்டு அப்பத்தை எடுத்து உடைத்து அவர்களுக்கு வழங்கி தம்முடைய உடலாக அதை உருவகப்படுத்துகிறார். ஆகவே இஸ்ரயேலர் தங்களை முழுமையான விடுதலைக்காக உடைக்கப்பட ஒப்புக்கொடுக்கும்போது தான் பாஸ்கா விழா விடுதலை விழாவாக செயல்படமுடியும். அநேக கோதுமை மணிகள் தங்களின் கூட்டுறவை

வெளிப்படுத்தி அப்பமாகக் காட்சி தருகிறது. அதுபோல இஸ்ரவேலர் விடுதலை வாழ்வுக்காக ஒன்றுபட்டு இருக்கிறார்கள். ஆனால் அப்பத்தைப்போல அவர்கள் தங்களை உடைத்து ஒப்புக் கொடுக்காமல் இருப்பதால் இன்றும் உரோமையர்களின் அடிமைத்தனத்திற்குட்பட்டு இருக்கிறார்கள். இயேசு மானுடத்தின் முழுமையான விடுதலைக்குத் தம்மை ஒப்புக் கொடுக்கப் போவதை சீடர்கள் அறிந்து கொள்ளவும், தங்களையும் உடைக்கப்படும் அப்பமாக அர்ப்பணிக்கவும் அவர் முன்மாதிரியைக் காண்பித்தார். அதுபோல ஆண்டவரின் பந்தியில் பங்குபெற ஆயத்தமாயிருக்கும் நாம் ஒவ்வொருவரும் நம் ஆண்டவர் இயேசுவைப்போல உடைக்கப்பட நம்மை ஒப்புக்கொடுத்துச் செயல்பட வேண்டும்.

**2. ஊற்றப்படும் திராட்சை சாறு**

பாஸ்காவில் வைக்கப்பட்ட திராட்சைச் சாற்றை இயேசு எடுத்து நன்றி செலுத்தி, அவர்களுக்கு வழங்கி அதைத் தம்முடைய உதிரமாகவும் புது உடன்படிக்கைக்குரிய அடையாளமாகவும் குறிப்பிடுகிறார். விடுதலை வாழ்விற்கு இரத்தம் சிந்துதல் தவிர்க்க முடியாத ஒன்றாகக் கருதப்பட்டது. இரத்தம் சிந்துதல் இல்லாமல் மீட்பு இல்லை. பத்தாவது பெருந்துன்பம் கடந்து போக இஸ்ரயேலர் தங்கள் வீட்டின் நிலைக்காலில் ஆட்டுக்குட்டியின் உதிரத்தைப் பூசினார்கள். இயேசு வழங்கும் முழுமையான விடுதலை வாழ்விற்குத் தம்முடைய உதிரத்தைச் சிந்தப்போவதை குறிக்கும் அடையாளமாகத் திராட்சைச் சாற்றை தம்முடைய உதிரமாக வழங்குகிறார். பாஸ்கா விழாவை மட்டும் கொண்டாடுவதினால் விடுதலை வாழ்வு வந்து விடுவதில்லை. மாறாகத் தங்கள் உடல், உயிர், பொருள் அத்தனையும் கையளிக்க நேரிடுமாயின் அதைத் தயங்காமல் இயேசுவைப் போல கையளிக்க முன்வரவேண்டும் என்பதை ஊற்றப்படும் திராட்சைச் சாறு நமக்குச் சான்று பகருகிறது. ஆண்டவரின் பந்தியில் பங்குபெறுவோர் உடைக்கப்படும் அப்பமாக, ஊற்றப்படும் திராட்சைச் சாற்றைப் போல தங்களையே உலகின் முழுமையான விடுதலைக்காக அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.

“உந்தன் உடலாய் உடையும் அப்பத்தை
உம் உதிரமாய் ஊற்றும் இரசத்தை.”

**அருள்திரு. E. ஹென்றிதாஸ்**



**29-03-2013** தூய வெள்ளி

எசா. 53 : 1-12 | மீட்பின் நாள் | எபி. 10 : 11-18
தி.பா. 22 : 1-10 | லூக். 23 : 13-49

# கடவுளின் இரக்கத்தின் வெளிப்பாடு

## Revelation of God’s Mercy

“மெய்யாகவே அவர்நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார்; நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்; (எசா. 53 : 4)

இயேசு கிறிஸ்து உலகில் மனிதனாகத் தோன்றியது கடவுளின் இரக்கத்தின் வெளிப்பாட்டை நமக்குச் சொல்கிறது. ஆதிமனிதன் கடவுளின் வார்த்தையை ஏற்றுக்கொள்ளாமல் தவறிழைத்து இறைச்சாயலை இழந்தபோது கடவுள் அவன்மீது கொண்ட இரக்கத்தின் அளவைக் குறைத்துக் கொள்ளவில்லை, என்பது இயேசு கிறிஸ்துவின் பாடுமரணங்கள் வழி வெளிப்படுகிறது.

கடவுளின் இரக்கம் மனிதர்களின் இரக்கத்திற்கும் மேலானது. மனிதனின் இரக்கத்தைச் சொல்வடிவிலான அன்பிற்கும், கடவுளின் இரக்கத்தைச் செயல்வடிவிலான அன்பிற்கும் ஒப்பிடலாம். கடவுளின் இரக்கம் எப்படிப்பட்ட தன்மை வாய்ந்தது என்பதைச் சற்று தியானிப்போம்.

**1. பாடுகளை ஏற்கும் இரக்கம்** (ஏசா 53 : 4)

இயேசு கிறிஸ்துவைப் போன்று உத்தமராய் எந்த மனிதரும் இவ்வுலகில் வாழ்ந்ததில்லை. அதே வேளையில் அவரைப் போன்று பாடுகளை ஏற்ற எந்த மனிதரும் உலகில் இல்லை. தவறு செய்து ஒரு மனிதன் தண்டிக்கப்பட்டால் அதற்கு அர்த்தமுண்டு. ஏனென்றால் செய்த தவறுக்காக தண்டனையை ஏற்கிறான்; ஆனால் இயேசு கிறிஸ்துவோ எந்தத் தவறும் இழக்காமலேயே தண்டனையை ஏற்றிருக்கிறார்; இதற்கும் ஒரு அர்த்தமுண்டு அதுதான் கடவுளின் இரக்கம்.

அன்செல்வம் என்னும் இறையிலாளர் சொல்லும்போது மனிதன் தவறு செய்தால் அவன் யாருக்கு எதிராகத் தவறு செய்தானோ அந்த மனிதனைத் திருப்திப்படுத்தவேண்டும் அல்லது கடவுளைத் திருப்திப்படுத்தவேண்டும். இந்த இரண்டையும் மனிதனால்

செய்யமுடியாத நிலையில் கடவுள் தன் சொந்த மகனை உலகிற்கு அனுப்பினார். எதற்காக? மனிதன் செய்த பாவங்களுக்காக, அவன் ஏற்க வேண்டிய தண்டனையைத் தான் ஏற்றுக்கொள்வதற்காக. இதுவே கடவுள் மனுக்குலத்தின் மீது கொண்ட இரக்கத்தின் வெளிப்பாடு.

**2. பாவங்களை நினையாத இரக்கம்** (எபி. 10 : 17)

மனிதர்கள் தங்களுக்கு எதிராகத் தவறிழைக்கின்றவர்களை மன்னிப்பது கடினமான செயல். ஒருவேளை அதையும் தாண்டி மன்னித்து விட்டாலும், சமயம் பார்த்து அதைச் சொல்லிக் காட்டுவார்கள். ஆனால் எபிரேய ஆக்கியோன் 10 : 17ல் சொல்லும்போது கடவுள் பாவங்களையும், அக்கிரமங்களையும் மன்னித்து பிற்பாடு அதை நினைத்துக்கூடப் பார்க்கமாட்டார் என்று சொல்கிறார். அதனுடைய அர்த்தம் கடவுளின் இரக்கத்தால் மனிதனின் பாவம் மன்னிக்கப்படுகிறது. கடவுளின் இரக்கத்தைப் பெறுகின்ற மனிதனின் பழைய நிலையைக் கடவுள் எண்ணிப்பார்ப்பதில்லை. இதனை லூக். 15-ஆம் அதிகாரத்தில் சொல்லப்படும் இளைய மைந்தன் உவமை வழி நாம்அறிந்து கொள்ளலாம். தவறு செய்த மகன் தவறை உணர்ந்து வந்தபோது அவனை ஏற்றுக்கொண்டு அவன் தவறுகளையெல்லாம் மன்னித்து அவனுக்குப் புதுவாழ்வு கொடுக்கிறார்.

நமக்காகச் சிலுவையில் இன்னுயிரைக் கொடுத்த இயேசு கிறிஸ்துவும் சிலுவையில் அறையப்பட்டு பாவங்களையும், அக்கிரமங்களையும் நினைவுகூராமல் நமக்குப் புதுவாழ்வு கொடுத்திருக்கிறார். அது கடவுளின் இரக்கத்தின் வெளிப்பாடு.

**பாசத்தைப் பொழியும் இரக்கம்** (லூக். 23 : 8)

இயேசு கிறிஸ்து உலக மக்கள் மீது எந்த அளவிற்கு பாசம் கொண்டிருந்தார் என்பது இந்த வசனத்தில் வெளிக்காட்டப்படுகிறது. துன்பப்படும் எந்த மனிதரும் தனக்கு ஆதரவும், அரவணைப்பும் கிடைக்குமா? என்று தான் எதிர்ப்பார்ப்பார்கள். ஆனால் சொல்லொண்ணாத் துயருற்றிருக்கும் இயேசு கிறிஸ்து தம் வேதனையைப் பொருட்படுத்தாமல் தனக்காக ஏங்கி அழும் மக்களைப் பார்த்து நான் படும் வேதனைக்காக நீங்கள் அழ வேண்டாம் என்று சொல்கிறார். இதன் பொருள், உங்கள் மீது கொண்ட இரக்கத்தின் வெளிப்பாடு தான் இந்நிலை என்பதாய் அமைந்துள்ளது.

**அருள்திரு. S. ஜேக்கப் ராஜ்**



**30-03-2013** | தூயவாரம் - சனி

மத். 27 : 62-66

## எத்தன் அல்லர் அத்தன்

"ஐயா, அந்த எத்தன் உயிருடன் இருந்தபொழுது மூன்று நாளுக்குப் பின்பு நான் உயிருடன் எழுப்பப்படுவேன்" என்று சொன்னது எங்களுக்கு நினைவிலிருக்கிறது. (மத். 27 : 63)

நினைத்ததை சாதித்தோம் என மமதைகொண்ட தலைமைக் குருக்களும் பரிசேயரும் நிம்மதிப் பெருமூச்சோடு தூங்க முடியவில்லை. காரணம் இயேசு கிறிஸ்துவின் வாழ்வும் வார்த்தையும் அவர்களது வாழ்வில் மிக பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின. எனவே தான், கிறிஸ்து உயிர்ப்பார் என்னும் உண்மை அவர்களது உள்ளங்களில் உறுத்திக் கொண்டிருந்தது. இதன் விளைவாக, கடவுளின் ஆற்றலைக் குறித்த தெளிவான அறிவுடையவர்களும் உயிர்த்தெழுதல் உண்டென்று நம்பும் தலைமைக் குருக்களும் இயேசுவின் உயிர்த்தெழுதலை மறைக்க முயற்சித்தனர். இயேசு கிறிஸ்து ஓய்வுநாளுக்குரிய சட்டத்தை (Sabhath law) மீறிச் செயல்படுகிறார் எனக் குற்றம் சாட்டினவர்கள் இப்போது உண்மையை மறைக்க துடிக்கும்போது ஓய்வுநாளுக்குரிய சட்டத்தை மீறினார்கள். அதாவது மத். 27 : 62-இன்படி ஆயத்த நாளுக்கு அடுத்த நாள் தலைமைக் குருக்களும், பரிசேயர்களும் பிலாத்திடம் கூடி வந்தார்கள். ஓய்வுநாள் என்பது இறைவனால் புனிதப்படுத்தப்பட்ட ஓர் ஒப்பற்ற நாளாகும். இந்நாள் மகிழ்ச்சிக்குரிய நாள். கடவுளைத் தொழுது கொள்ள வேண்டிய நாள். இந்த நாளை உண்மையாய்க் கடைப்பிடிக்க வேண்டிய தலைமைக் குருக்களும் பரிசேயரும் பிலாத்திடம் கூடி வந்தனர். இதன்வழியாக அவர்கள் துணிவுடன் ஓய்வுநாள் சட்டத்தை மீறி (Radically they broke the Sabhath law) ஆண்டவரின் உயிர்த்தெழும் ஆற்றலைத் தடுக்க விரைந்தனர். ஆனால் இயேசு கிறிஸ்துவோ ஓய்வுநாளை அனுசரிக்கும் ஒழுங்களுக்கும் சட்டத்திற்கும் விரோதமாக ஒருபோதும் எதையும் செய்யவில்லை. மாறாக, பரிசேயர்களின் ஆசாரத்தின் கண்டிப்பைத் தான் அகற்றினார். எப்படியும், ஆத்திரத்தோடும், உண்மையை மறைக்க வேண்டும் என்னும் துடிப்போடுச் செயல்பட்டுக் கொண்டிருந்த தலைமைக் குருக்கள், பரிசேயர்களின் வார்த்தையின் வழியாக இவர்கள் திருச்சட்டத்திற்கும் இறைச்சித்தத்திற்கும் விரோதமானவர்கள் என்பது மேலும் புலனாகிறது.

எனவே அவர்களது உதட்டின் உச்சரிப்பில் உதயமான உள்ளத்தின் நிறைவை தியானிப்பது நன்மையைத் தரும்.

**1. அநியாயகாரனை ஆண்டவனாகக் கண்டார்கள்** (மத். 27 : 63)

யூதேயாவின் ஆளுநன் பிலாத்து தனது அதிகாரத்தை முறையாகப் பயன்படுத்த அறியாதவர். நீதியின் மேல் வாஞ்சையின்றி, பொதுநலமின்றி, இறை அச்சமின்றி, அர்ப்பணிப்பின்றி அநியாயம் செய்தாகிலும் சிலரைத் திருப்திபடுத்தி தனது ஆளுகையை தொடர நினைத்தவர். எப்படியெனில், மத். 27 : 15-26இன்படி இயேசுவை பிலாத்துமுன் நிறுத்திய தலைமைக்குருக்களும் மூப்பர்களும் பிலாத்துவைப் பார்த்து, "இயேசுவைச் சிலுவையில் அறையும் எனக் கூச்சலிட்டனர். பிலாத்து தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி விசாரித்துத் தீர்ப்பிடாமல், மக்களையும் யூத சமயத் தலைவர்களையும் திருப்திப்படுத்த விரும்பி இயேசுவைச் சிலுவையில் அறையும்படி கையளித்தார். பிலாத்துவின் இத்தகைய மனநிலையை அறிந்திருந்த தலைமைக் குருக்கள் இயேசுவை சிலுவையிலறைந்த பின்பு பிலாத்துவிடம் வந்து, அநியாயக்காரனாகிய பிலாத்துவை "ஆண்டவனே / ஐயா" என மிகுந்த மதிப்புடனும் அதேவேளையில் வஞ்சக உணர்வுடனும் அழைத்து தங்களது கோரிக்கையை முன் வைக்கிறார்கள், "ஆண்டவனே / ஐயா, அந்த எத்தன் உயிரோடு இருந்தபொழுது மூன்று நாளுக்குப் பின்பு, நான் உயிருடன் எழுப்பப்படுவேன் என்று சொன்னது எங்களுக்கு நினைவிலிருக்கிறது. ஆகையால் மூன்று நாள்வரை கல்லறையைக் கருத்தாய்க் காவல் செய்யக் கட்டளையிடும்" (மத். 27 : 63, 64) என்றனர். இங்கும் அவர்களைத் திருப்திப்படுத்தும்படியாகவே பிலாத்து தலைமைக் குருக்களிடம் "உங்களிடம் காவல் வீரர்கள் இருக்கிறார்கள், நீங்களே போய் உங்களுக்குத் தெரிந்தபடி கருத்தாய்க் காவல் செய்யுங்கள் (v65)" என்று அவர்கள் விருப்பத்திற்கு விட்டு விடுகிறார். தாங்களது விருப்பத்திற்கு இசைவு தெரிவித்த அநியாயக்காரனாகிய பிலாத்துவை ஆண்டவனே/ஐயா எனப் புகழுகிறார்கள். நீதி செய்பவர்களை பொது இடங்களில் அவமானப்படுத்தி சிலரைப் பிரியப்படுத்தும் அநியாயங்களை செய்வோரை ஒப்பற்ற தலைவர் எனப்புகழ்பாடும் நபர்கள் பெருகிவரும் காலத்தில் இறைமக்களாகிய நமக்கு இது ஒரு சிறந்த பாடமாகும்.

**2. ஆண்டவரை எத்தனாகக் கண்டார்கள்** (மத். 27 : 63)

இயேசுவை குறித்து பிலாத்துவிடம் அவர் மனைவி "இயேசு ஒரு நேர்மையாளர்" (மத். 27 : 19) என்று கூறியதிலிருந்து இயேசு ஒரு நேர்மையாளர் என்றும், மேலும் பிலாத்து இயேசு மெசியா என்றும்





அறிந்திருந்தார். எனவே தான் மத். 27 : 22-இல் மெசியா என்னும் இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்? எனக் கேட்கிறார். இப்படி இயேசு கிறிஸ்துவை அறிந்திருந்த பிலாத்துவிடம் தலைமைக் குருக்கள் வந்து, பொய்யர்கள் ஊரிலே பொய்மையே பொதுவாழ்வு என்ற பொது மொழிக்கேற்ப, "ஐயா, அந்த எத்தன் . . ." (மத். 27 : 63) என்று பொய்மையைப் பொழிந்தனர். இயேசுவை எத்தன் (deceiver) அல்லது ஏமாற்றுக்காரன் என்று கூறினவர்கள் இயேசு கிறிஸ்து வாக்குமாறாதவர் என்பதைத் தெளிவாக அறிவார்கள். ஆனால் தங்களது அந்தஸ்தைச் சமுதாயத்தில் தக்கவைத்துக் கொள்ள தாங்கள் நல்லவர்கள் போலவும், இயேசு, தானே மேசியா என்று கூறும் எத்தன் எனவும் பாருலகுக்குப் பறைசாற்ற இத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்தினர். ஒப்புரவுத் திருப்பணியை ஆண்டவருக்கு அஞ்சி செய்துவந்த தூயபவுல் கூறும்போது நாங்கள். . . ஏமாற்றுவோர் என அவர்களுக்குத் தோன்றினாலும் நாங்கள் உண்மையான பணியாளர்களே (2 கொரி. 6 : 8) என்று கொரிந்துப் பட்டணத்தார்க்கு உண்மையைச் சொல்கிறார். இறைச்சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து நாம் செயல்படும்போது இத்தகைய பழிச்சொற்களை நாம் சந்திக்க வேண்டிய நிலைவரும்போது இறைவழி நடத்துதலை வாஞ்சிப்போம்.

கடவுள் அருளியிருக்கும் பேச்சுரிமையை நாம் பயன்படுத்திக் கடவுளின் திருப்பெயருக்கு இழுக்கு ஏற்படுத்துவதை விட்டுவிட்டு, செம்மையானவர்களைத் தீயவர்களென்றும், தீயவர்களைச் செம்மையானவர்களென்றும் தயக்கமின்றி மற்றவர்களுக்கு அறிவிப்பதை நாம் கைவிட வேண்டும். மாயக்காரர்களாகிய சமயத் தலைவர்கள், பரிசேயர்கள் போல ஆண்டவரின் அருளால் ஆட்கொள்ளபடாதவர்கள் இயேசு கிறிஸ்துவை எத்தன் என்பார்கள். ஆனால் உண்மையாகக் கிறிஸ்துவை அறியும்போது சிலுவையின் அடியில் நின்ற நூற்றுவர் தலைவன் போல் இயேசு அத்தன் (தந்தை) உண்மையில் இவர் கடவுளின் மகன் என்று அறிக்கையிடுவர்.

தலைமைக் குருக்கள், பரிசேயர் மற்றும் உரோமை அரசு ஆகிய இவர்களின் கூட்டு முயற்சி இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் உண்மையே என நிரூபிக்க ஒரு சிறந்த ஆதாரமாகிவிட்டது. அவர்களுடைய ஒட்டு மொத்த சூழ்ச்சி கடவுளின் மாட்சிக்கு வித்திட்டது. எனவே மனித சூழ்ச்சி ஒருபோதும் இறைமாட்சிக்கு இடையூறாக இருக்க முடியாது என்பதை இறைமக்களாகிய நாம் இதன் வழியாக அறிந்து, உயிர்ப்பின் பண்டிகைக்காக நம்மை ஆயத்தப்படுத்துவோமாக.

**அருள்திரு. G.S. ஆஸ்வின் ஜெய்சிங்**

| 1 | முதலாம் திருமொழி |
|---|---|

லூக்கா 23 : 32-34

# குருசினில் மலர்ந்த மன்னிப்பு

"... தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" லூக். 23 : 34

மன்னிப்பு என்பது ஒரு செயலன்று, மாறாக அது ஒரு பக்குவப்பட்ட மனநிலை, மன்னிப்பு வெறும் வார்த்தையன்று, அது ஒரு வாழ்க்கை முறை. மன்னிப்பு என்பது சொல்லில் மட்டுமன்று, அது ஒரு செயல்பாட்டின் உச்சநிலை. சிலுவையில் மரண வேதனையின் மத்தியிலும் ஆண்டவர் "தந்தையே இவர்களை மன்னியும்" என்று கூறியது மன்னிப்பின் உச்சநிலையாகும். மருத்துவ ரீதியாக உடல் நலத்தை அங்கீகரிக்கின்ற மனித குலம், உள்ளத்தின் நலத்தை, உறவின் முக்கியத்துவத்தை, மனித நேயப் பண்புகளை உதாசீனப்படுத்துகிறது. ஆனால் ஆண்டவர் இயேசு மரணம் வரையிலும் மன்னித்து மனித நேயப் பண்புகளை வெளிப்படுத்தினார்.

2003-இல் அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் கேயல் லீ ஹேரியட் என்ற 5 வயது சிறுமி மிகுந்த மகிழ்ச்சியுடன் ஆடி பாடிக் கொண்டிருந்தாள். அப்பொழுது எங்கிருந்தோ பறந்து வந்த மூன்று இரக்கமற்ற துப்பாக்கிக் குண்டுகள் அச்சிறுமியின் உடலைத் துளைத்ததன. அந்த உற்சாகப் பறவைக்கு சக்கர நாற்காலியே வாழ்க்கையானது. வழக்கு நீதிமன்றத்துக்கு வந்தது. அன்று தீர்ப்பு நாள். குற்றவாளியான 29 வயது ஆண்டனி வாரன் கூண்டில் நிற்கிறான். அவன் குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பு கூறியதும், சக்கர நாற்காலியில் இருந்த சிறுமி, குற்றவாளியின் அருகில் செல்கிறாள். நீதிமன்றத்தில் நீதிபதி உட்பட எல்லோரும் கவனிக்கிறார்கள். அருகில் சென்ற சிறுமி, தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள். பின் குற்றவாளியிடம் Sir நீங்கள் செய்தது தவறுதான். ஆனாலும், என் இயேசு கிறிஸ்து பிறரை மன்னித்தது போல், நானும் உங்களை மன்னிக்கிறேன்" என்றதும் அக்குற்றவாளி 5 வயது சிறுமியின் காலில் விழுந்து கண்ணீர் விட்டாராம். இந்த நிகழ்வு 2003-இல் அமெரிக்காவில் அனைத்துத் தொலைகாட்சியிலும் 1.





ஒளிப்பரப்பானது (3-09-2011 தினத்தந்தி). நீதிபதி தண்டனை கொடுத்தபோது கலங்காதவர், சிறுமி "மன்னித்தேன்" என்று கூறியதும் கலங்கிய கண்களுடன் வயது வித்தியாசம் இல்லாமல் காலில் விழுந்தார் என்றால் மன்னிப்பின் வலிமையைப் புரிந்து கொள்ள வேண்டும். எனவே தான் ஆண்டவர் இயேசுவும் தம் போதனையில் "உன் சகோதர - சகோதரிகளிடம் நல்லுறவை ஏற்படுத்திய பின் உன் காணிக்கையைச் செலுத்து (மத். 5 : 23, 24) என்று கூறினதோடு நின்றுவிடாமல், சிலுவையின் வேதனையிலும் மன்னித்து மாதிரியைக் காட்டுகிறார்.

மன்னிப்பு எனும் வார்த்தை மனித குலத்துக்கே உரிய மகத்துவமான வார்த்தை. மிகவும் எளிதாகச் செய்யக் கூடிய இந்த செயலைச் செய்வதில்தான் இன்று பலருக்கும் உலக மகா யுத்தம். எனவேதான் இன்று பலரின் வாழ்க்கை சண்டை, அடிதடி, வெறுப்பு, கோபம், நோய் எனத் துயரத்தின் தெருக்களில் நொண்டியடிக்கிறது. மன்னிப்பு கோழைகளின் கூற்று என்று பலரும் சட்டத்தின் வாசற்படியைத் தட்டுகிறார்கள். உண்மையில் மன்னிப்பது போரை விட வீரமானது. "போர் உடல்களைத்தான் வெற்றிகொள்ளும், மன்னிப்பு மனதையே வெற்றிகொள்ளும்". காந்தி அவர்களும் "மன்னிப்பு பலவான்களின் செயல் என்றும் மன்னியாமை பெலவீனர்களின் செயல் என்றும்" விளக்கம் தருகிறார். ஆண்டவர் சிலுவையில் மன்னிப்பின் Yôõj û Rû Vd á ßmØu ] úW7C70 முறை மன்னிக்கச் (மத். 13 : 21-22) சொல்லி, அதையே செய்தும் காட்டுகிறார். இவ்வார்த்தையின் பின்னணியில் பல வேதனையான நிகழ்வுகள் தொக்கி நிற்கின்றன. இயேசுவைச் சிலுவைக்கு ஒப்படைத்த யூதாசின் துரோகம், எனக்கு இவர் யார் என்று தெரியாது என்ற பேதுருவின் "கோழைத்தனம்", சிவப்பு அங்கியிட்டு அவமானப்படுத்திய ஏரோதுவின் "கிண்டல்", கையைக் கழுவி விட்டு இது உங்கள் பாடு என்று கைவிரித்த ராஜதந்திரியாகிய பிலாத்துவின் "பதவி ஆசை", இடத்துக்குத் தக்கவாறு தங்களைப் பச்சோந்தியாக மாற்றி சிலுவையில் அறையும் என்ற மக்களின் "பொய்யான உள்ளம்", சமய வெறிபிடித்த "மத வாதிகள்" இவர்கள் அனைவரும் திட்டம் போட்டு சிலுவைக்குக் கொண்டுவந்தபிறகு, யாருக்குத் தான் மன்னிக்க மனம் வரும்? நமக்கு முடியாது. ஆனால் ஆண்டவருக்கு முடிந்தது. காரணம் மன்னிப்பின் மகத்துவத்தைப் புரிந்தவர். மன்னிப்பினால் உண்டாகும் நன்மையும் அறிந்தவர், மன்னித்து வாழ்வளிக்கிறார். அத்தகை மன்னிப்பின் சிறப்புகளை நாம் அறிந்து கொள்ள அழைக்கப்படுகிறோம்.

**மன்னிப்பு உறவுக்கு மருந்து**

ஆண்டவர் மன்னித்ததால், சிலுவையில் ஒரு குற்றவாளியின் உள்ளம் தொடப்பட்டு, உறவு புதுப்பிக்கப்படுகிறது. மன்னிப்பு இருந்தால் உறவுகளுக்குள் விரிசல் வராது. பிரிந்தவர் இணைவர். ஏசா யாக்கோபை மன்னித்ததால் (ஆதி. 45) மீண்டும் இணைந்தனர். தந்தை இளைய மகனை மன்னித்ததால் (லூக்கா 15 : 22-24) மீண்டும் இணைந்தனர். மன்னிப்பு உறவுக்கு மருந்தாகும். ஆண்டவரும் தம் உதிரத்தை தந்து மன்னிப்பையும் தருகிறார் (எபே. 1 : 7). மனிதன் மனிதனை மன்னிக்காவிட்டால், குடிசை தனக்குத் தானே தீ வைத்துக் கொள்வதற்கு சமம் என்பது உண்மையிலும் உண்மையல்லவா.

**2. மன்னிப்பு உடலுக்கு மருந்து**

நாம் ஒரு நபர் மீது எரிச்சலும், கோபமும் கொள்ளும்போது நம் மூளையில் ஒரு வடிவம் உருவாகிறதாம். நமது எரிச்சலும், கோபமும் அதிகரிக்க அதிகரிக்க அவ்வடிவம் மிகவும் வலுவாகி, அதுவே பழக்கமாகி, எப்பொழுதும் எரிச்சல் அடையும் மனிதராகிவிடுகிறார்கள். மன்னிக்காத மனம் பாரம் அடைந்து பலவீனப்படுகிறதாம். மூத்த மகன் (லூக். 15 : 25-30) எரிச்சல் கொண்டு மன்னிக்க மனதில்லாது செல்கிறான். மன்னிக்கும் மனம் உடையவர்கள் மனம் இலகுவாகி, ஆனந்தமாய் வாழ்வர், மன்னிக்காதோர் எரிச்சலுடன் வாழ்வர்.

எனவே ஆண்டவர் பிறரை மன்னித்தது போல் (எபே. 4 : 32) நாமும் பிறரை மன்னித்து வாழ அழைக்கப்படுகிறோம். தீவிரவாதம், ஆயுதக் குவிப்பு, இராணுவ வளர்ச்சி, மரண தண்டனை, வன்முறை போன்றவைகள் மிகுதியாக்கப்படுவதினால் மன்னிப்பை வலையிட்டுத் தேட வேண்டியுள்ளது. இன்று நாம் மன்னிக்க மறுத்தால் பல இதயங்கள் மன்னிக்கப்படாமலே மரத்துப்போகும் என்பதை மனதில் கொண்டு மன்னித்து வாழ்வோம். இயேசு மன்னிக்க முந்தி கொண்டார். நாமும் மன்னிக்கப் புறப்படுவோம். -ஆமென்.

**அருள்திரு. P. இராஜா ஸ்டாலின்**



2 இரண்டாம் திருமொழி

லூக். 23 : 39-43

# குருசினில் வெளிப்படும் ஏற்பு

அதற்கு இயேசு அவனிடம், நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன் என்றார் (லூக். 23: 43)

சிலுவையிலறையப்பட்டோர் பேசுவது வழக்கம். அவர்களது வாயிலிருந்து வெளிப்படும் வார்த்தைகள் வசைமொழிகளும், சபித்தலுமாகவே காணப்படும். கிறிஸ்து இயேசுவும் சிலுவையில் பேசத் தொடங்கி, தந்தையே என அழைத்தபோது அனைவரது கவனமும் இயேசுவிடம் திரும்பியது. மன்னிப்பின் மன்றாட்டாய் அமைந்த அந்தத் திருமொழி, அவரது இரண்டு பக்கங்களிலும் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளிகளுக்கும் கேட்டது; அவர்களைப் பதில் பேசத் தூண்டியது. ஒருவன், நீ மெசியா தானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று என இகழ்ந்தான் (லூக்கா 23 : 39). மறுபக்கத்தில் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளி இகழ்ந்துரைத்தவனுக்கு மறுமொழி கூறி கிறிஸ்து இயேசுவிடம் ஒரு மன்றாட்டையும் ஏறெடுத்தான். அவனது மன்றாட்டினால் பெற்றுக்கொண்ட பேரின்ப வாழ்வின் அனுபவம் நமக்கு உணர்த்தும் செய்தியை இத்திருமொழி சார்ந்து தியானிப்போம்.

**1) மெசியாவை அறிந்தான்**

லூக்கா 23 : 41 இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே. எந்த குற்றமும் செய்யாத நீதியுள்ள மெசியா தம் அருகில் சிலுவையில் தொங்குகிறார் என்பதை அறிந்தான். அவரது செயல்கள் அனைத்தும் நீதியானவை என்பதைப் புரிந்துகொண்டான். ஒருவேளை மெசியாவாகிய இயேசுவின் செய்திகள் மற்றும் செயல்கள் பற்றி கேள்விப்பட்டிருக்கலாம். எனவே, அவர் நன்மைகள் செய்து தீமை அனுபவித்துக்கொண்டிருக்கிறார் எனத் தெரிந்துகொண்டான். குற்றம் எதுவும் செய்யாமல் சிலுவைத் தண்டனை அனுபவிக்கிறார் என்பதை உணர்ந்தான்.

ஆண்டவரைக் காண்பதற்கு வாய்ப்புள்ள போதே அவரைத் தேடுங்கள்; அவர் அண்மையில் இருக்கும்போதே அவரை நோக்கி

மன்றாடுங்கள் (எசாயா 55 : 6). காலம் கடந்துவிட்டதே எனக் கவலைகொள்ளாமல், கிடைத்த வாய்ப்பைச் சரியாய் பயன்படுத்திக் கொண்டான்.

......... கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத் தானே உள்ளாகி இருக்கிறாய் (லூக்கா 23 : 40). அவர் மெசியா என்பதை உணர்ந்து ஏற்றுக்கொண்டான். மெசியாவை அறிந்து கொள்ளும் ஆவலும் அவரைப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ளும் மனநிலையும் நமக்கு மிக அவசியம் என்பதை இந்தக் குற்றவாளியின் செயல் நமக்கு உணர்த்துகின்றது.

**2) அவன் குற்றத்தை உணர்ந்தான்**

லூக்கா 23 41 நாம் தண்டிக்கப்படுவது முறையே, சிலுவையில் அறையப்பட்டிருந்த இரு குற்றவாளிகளும் இணைந்து குற்றங்களில் ஈடுபட்டிருக்கலாம். தீமை செய்ய இணைந்து சிந்தித்த அவர்கள் இருவரில் ஒருவன் தனது குற்றத்தை உணரவில்லை, மற்றவன் உணர்ந்தான். நாம் பெற்றுக்கொண்டிருப்பது நியாயமான தண்டனையே என்ற உணர்வு அவனுள் பொங்கியது. தம் குற்றப்பழிகளை மறைப்போர் வாழ்வு பெற இயலாது (நீமொ. 28 : 13) என்ற உண்மையினை உணர்ந்துகொண்டான்.

நம்மிடம் குற்றங்களை மறைக்கும் நிலை உண்டா? பிறர் முன் போலியாக நடித்து வாழலாம். ஆண்டவர் அதை அறிவார் என்பதை உணருவோம். இந்த குற்றவாளியின் வார்த்தைகளால், நீதியுள்ளோரையல்ல பாவிகளையே மனந்திரும்ப அழைக்க வந்தேன் எனக்கூறிய மெசியா தன் வேதனையிலும் மனம் மகிழ்ந்திருப்பார். அழிவு நோக்கி பயணித்தவன் பேரின்ப வாழ்வுக்குநேராகத் தன்னைத் திருப்பிக் கொண்டானன்றோ. பாதகனாய்ச் சிலுவை மரத்திலிருந்தவன் பரமனிடம் அடைக்கலம் தேடினான். பாவ உணர்வையும், பாதை மாற்றத்தையும் இன்று நம்மில் ஆண்டவர் எதிர்பார்க்கின்றார்.

**3) பேரின்ப வாழ்வடைந்தான்**

பின்பு அவன், இயேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்றுவரும்போது என்னை நினைவிற் கொள்ளும் என்றான். (லூக்கா 23 : 42) மெசியாவாகிய இயேசுவை ஆட்சியுரிமை உள்ளவர் என உணர்ந்தான். அவருக்கான ஒரு ஆளுகை உண்டு என்ற தெளிவான எண்ணம் அவன் மனதில் தோன்றியது. உடனடியாகவே, தனது சுருக்கமான மன்றாட்டை ஏறெடுத்தான். உள்ளங்களை ஆராய்ந்து அறிகிறவரல்லவா நம் ஆண்டவர்; அவனுள் நடந்த மனமாற்றத்தை அவர் உணர்ந்தார்.





உண்மையான அர்ப்பணம் என்பது தெளிவாகியது. “நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்” என்ற வாக்குறுதியை உடனடியாகவே வழங்கினார். மெசியாவுடன் இணைந்திருக்கும் உரிமைப்பேறு அவனுக்குக் கிடைத்தது.

நமது மன்றாட்டுகள் எத்தகையவை என ஆய்வு செய்வோம். மணிக்கணக்கில் ஜெபித்தும் மனம் மாறவில்லையா? தொடர்ச்சியாய் இறைவழிபாடுகளில் பங்குபெற்றும் வாழ்க்கை நிலையில் மாற்றமில்லையெனில் பயன் இல்லை. எல்லா தீமைகளையும் செய்துவிட்டு, நாமும் கடைசி நேரத்தில், “ஐயோ, மெசியாவே என்னை நினைவிற்கொள்ளும்” என மன்றாடிக்கொள்ளலாம் என்று எண்ணுவது தவறு. சிலுவைக் குற்றவாளிக்கு வாய்ப்பு அப்போது தான் கிடைத்தது. நமக்கு ஆண்டவர் வாய்ப்பைத் தந்துகொண்டேயிருக்கிறார் என்பதை உணருவோம்.

கடவுள், குற்றம் செய்பவர்களைத் தண்டித்து மகிழ்ச்சி காண்பவரல்லர். அனைவரிடமும் இரக்கம் காட்டுபவர் குறைகளை ஏற்றுக்கொண்டு மீட்பை தேடுவோர்க்கு வாழ்வு வழங்குபவர். உயிர்ப்பும், வாழ்வும் நானே என்ற மெசியாவை நோக்கிப் பார்த்து, குற்ற உணர்வடைந்து, பேரின்ப வாழ்வை எதிர்நோக்குவோருக்கு அந்தச் சிலாக்கியத்தை அருளுகின்றார். பேரின்ப வாழ்வில் பங்குபெற நம்மைத் தயார்செய்வோம்.

அருள்திரு. R. ஹென்ஸ்லின் நேசராஜ்

3 மூன்றாம் திருமொழி

# குருசினில் ஒன்றிக்கும் உறவு

இயேசு . . . தம் தாயிடம், "அம்மா இவரே உம் மகன்" என்றார். பின்னர் தம் சீடரிடம் "இவரே உம் தாய்" என்றார் (யோ. 19 : 26, 27)

பூக்கள் நசுக்கப்படும்போதும், சந்தனம் அரைக்கப்படும் போதும் அவைகள் தங்கள் நறுமணத்தை அதிகமாய்ப் பரப்பிக் கொண்டேதான் இருக்கும். அதுபோல இயேசுநாதரும் சிலுவைத் துன்பத்தை ஏற்று, பெருந்துயருற்று, தன் இரத்தத்துளிகளை மண்ணில் சிந்தும் நேரத்திலும், இறைப்பண்புகளை வெளிப்படுத்திக்கொண்டேதான் இருக்கிறார். தன் துயர நேரத்திலும், ஒரு மகனாகத் தன் தாய்க்குச் செய்யவேண்டிய கடமையை நினைவுகூருகிறார்.

**1. புதிய உறவை உருவாக்குகிறார்**

இவ்வுலகம் வன்முறையின்றி, அன்புறவோடு வாழ இறைவாக்கினர்கள் பலர் குரல் கொடுத்தனர். எசாயா 11 ஆம் அதிகாரத்தில் எசாயா தீர்க்கரின் காட்சி, புதுமானிட உறவு இம்மண்ணில் செயலாக்கம் பெற இயேசு விரும்பினார். அதற்காக இயேசு உழைத்தார். அன்றைய சமூகம் யாரை ஒதுக்கி வைத்ததோ பாவிகள் என்று யாரைத் தனிமைப்படுத்தியதோ அவர்களோடு இயேசு தன் உறவை, அன்பை, கரிசனையை வெளிப்படுத்தினார். இயேசுநாதரும் விசாலமான பார்வையோடு சமூகத்தில் வாழும் அனைத்து மக்களோடு, உருவாக்கப்பட்ட உறவை யூதச் சமூகம் புரிந்து கொள்ளாமல், சிலுவைத் துன்பத்தைக் கொடுத்தனர். இயேசு சிலுவையில் காயங்களோடு தொங்கி கொண்டிருக்கும் போது, இயேசுவைச் சுற்றிலும் மிகத் திரளாக மக்கள் கூடிநிற்கிறார்கள், இவர்களில் ஒரு சிலர் என்ன நடக்கிறது என வேடிக்கை பார்க்கிறார்கள். இன்னும் சிலர் இயேசுவைத் துன்புறுத்திக் கொண்டேயிருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தின் ஓரத்தில் இயேசுவின் தாய் மிகுந்த துயரத்தோடும், கண்ணீரோடும் நிற்கிறார். இயேசுவின் தாய் மரியாள் இயேசுவைப் பிறப்பு முதல் சிலுவையில் தொங்கி நிற்கும் நேரம் வரை இயேசு அனுபவித்த அனைத்துத் துன்பங்களையும் அறிந்தவள். அந்தத் தாயும் தன் கண் முன்னால் தன் மகன் துன்பப்படுவதை விரும்புவதில்லை. துயரத்தோடிருக்கும் தாயைச் சிலுவையில் தொங்கும் இயேசுவின் கண்கள் தேடுகின்றன. தாயைப் பார்த்துச் சொன்னார். அம்மா நீங்கள் அழவேண்டாம், கலங்கவேண்டாம். இதோ உங்கள் மீது அன்புவைத்து, அம்மா என்ற உணர்வோடு கவனிக்க ஒருவர் இருக்கிறார் என்ற வண்ணமாக, இயேசு தம் சீடன் யோவானைக் காட்டுகிறார். இதுவரை எங்களோடிருந்து அன்புவைத்த இயேசுவின் உறவு இல்லாமல் போய் விட்டதே என்று ஏங்கிக் கொண்டிருந்த யோவானிடம், தாயைப் போன்று அன்பு பாராட்ட ஒருவரிருக்கிறார் என்ற வண்ணமாக, யோவனைப் பார்த்து அதோ உன் தாய் என்கிறார்.



இங்கே இயேசு துவங்கிய உறவு இரத்த உறவைத் தாண்டிய புது உறவு. இயேசு சிலுவை வழியாய் கற்றுத்தரும் உண்மை என்னவென்றால், யார் யாரெல்லாம் கலக்கத்தோடு, துயரத்தோடு கைவிடப்பட்டவர்களாய் வாழ்கிறார்களோ அவர்களை எல்லாம் உங்கள் தாயாகவும், பிள்ளைகளாகவும் பாருங்கள் என்ற புதிய உறவுக்கு அறைகூவல் விடுக்கிறார்.

**2. புதுப் பொறுப்பை ஒப்படைக்கிறார்**

இயேசு சிலுவையில் தொங்கும் நேரத்திலும், ஒரு மகனாகத் தன் தாய்க்குச் செய்யவேண்டிய கடமைகளை நினைவு கூர்கிறார். ஆகவே தான் செய்ய வேண்டிய கடமைகள், சிலுவைச் சாவினால் தடுக்கப்பட்டாலும், தம் அன்பான சீடன் வழியாய்த் தொடர விரும்புகிறார். மாற். 7 : 11-இல் யூதச்சமூகத்தில் தங்கள் பெற்றோரைக் கவனிக்காமல், கொர்பான் காணிக்கை செலுத்தி வந்த நிலையை இயேசு தவறு எனக் குற்றம் சாட்டினார். பெற்றோர் பிள்ளைகளுக்கும், பிள்ளைகள் பெற்றோருக்கும் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாமலிருப்பதும், அவர்கள் மீது அன்பும் கரிசனையும் கொள்ளாமல் அவர்களை அனாதை இல்லங்களிலும் முதியோர் இல்லங்களிலும் ஒப்படைப்பது தவறு என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

இன்று நாம் பெற்றோராக, பிள்ளைகளாக, அவரவர் கடமையை, பொறுப்பை நிறைவேற்றுகிறோமா? என்பதைச் சிந்தித்துப் பார்க்க அழைக்கப்படுகிறோம். அன்னை தெரசா ஒரு முறை சொன்னார் : இந்த உலகிலே கொடிய நோய் எது என்றால் - யார் ஒருவர் கவனிப்பாரற்றுத் தனிமையில் விடப்படுகிறார்களோ, அவர்கள் அனுபவிக்கிறார்களே துன்பம் அதுதான் உலகிலேயே கொடிய நோய் எனக் குறிப்பிட்டார்.

இயேசு சிலுவையில் தொடங்கிய புது உறவும், ஏற்படுத்திய பொறுப்புள்ள வாழ்வும், நம்மிலே, நம் குடும்பங்களிலே தொடர சிலுவை நம்மைத் தூண்டுகிறது. சிலுவைச் சிந்தனைகளை நம் அன்றாட வாழ்வில் புது மாற்றத்தை ஏற்படுத்தும் வார்த்தைகளாக ஒளிர்ந்து கொண்டு உறவுகளை வலுப்படுத்தி, பொறுப்புகளை, கடமைகளை உண்மையாகச் செய்ய அர்ப்பணிப்போமாக.

**அருள்திரு. R. பாபின் போஸ்**

| 4 | நான்காம் திருமொழி |
|---|---|

லேவி. 13 : 9-27 — 2 கொரி. 12 : 1-10

தி.பா. 23 — மாற். 1 : 41-45

# குருசினில் கலங்கும் மனிதம்

**"ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு "ஏலோயி, ஏலோயி லாமா சபக்தானி"என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு என் கடவுளே, என் கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று அர்த்தமாம்" (மாற். 15 : 34).**

உலக வரலாற்றில் பல நிகழ்வுகள் வரலாற்றை மாற்றியமைத்துள்ளன. அவைகளில் பல மறைக்கப்பட்டவைகளும் மறுக்கப்பட்டவைகளும் உண்டு. ஆனால் இயேசு சிலுவையிலறையப்பட்ட நிகழ்வு மனிரவரலாற்றில் மாற்ற முடியாததும், உலகை மாற்றின நிகழ்வாகவும் காணப்படுகிறது. இயேசு சிலுவையில் 6 மணிநேரம் தொங்கி அனுபவித்த வேதனைகள் வரலாற்றில் அனேகரை ஈர்த்த நிகழ்வாகவே காணப்படுகிறது.

சிலுவையில் இறைமகன் இயேசு தாங்கமுடியாத துன்பங்களையும், வேதனைகளையும் அனுபவித்து, இழிச்சொற்களும் உடல் வேதனையும் தாங்கிக்கொண்டு தன்னை துன்புறுத்தினவர்களுக்காய் பிதாவிடம் மன்றாடினார்.

மூன்று மணிநேரம் சிலுவையின் வேதனையை தாங்கியவர் ©Rô®u £j Rj û RE Q okRúTôÕ "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர்", என கதறுகிறார்.

இந்நிகழ்வை மத்தேயு நற்செய்தியாளர் குறிப்பிடும்போது 6-ஆம் மணி நேரம் முதல் 9-ஆம் மணிநேரம் வரை அந்த காரம் உண்டாயிற்று எனக் கூறுகிறார் (மத். 27 : 45). மூன்று மணிநேரம் நிலவிய அந்த காரத்தைக் குறித்து மூன்று நற்செய்தியாளர்களும் சற்று வித்தியாசமாக குறிப்பிடுகின்றனர். மத்தேயுவும், மாற்குக்கும் நடைபெற்ற விளைவைச் சுட்டிக்காட்ட முயற்சிக்கின்றனர். ஆனால் லூக்கா காரணத்தின் மூலக்கூறுகளைச் சொல்கிறார் (லூக். 23 : 44-45).

தாலஸ் என்ற வரலாற்று ஆசிரியர் "பஸ்கா பண்டிகை கொண்டாடும் காலத்தில் இப்படிப்பட்ட அந்தகாரம் ஏற்படுவது அசாதாரணமான நிகழ்வு" எனக் குறிப்பிடுகின்றார். இப்படிப்பட்ட வித்தியாசமான நிகழ்வு நடைபெறும் சூழலில் இயேசு "எலோயி, எலோயி



லாமா சபக்தானி" என்று உரக்கக் கத்தினார் (மாற். 15: 34). இங்கு குறிப்பிடப்படும் எலோயி என குறிப்பிடும் வார்த்தையை மத்தேயு "ஏலி" என குறிப்பிடுகிறார்? "ஏலி" என்பது எபிரேய மொழியிலும் "ஏலோயி" என்பது அரமேய மொழியிலும் கடவுளைக் குறிக்கும் சொற்களாகும்.

இந்த வார்த்தை பல கேள்விகளை எழுப்புகின்றது.

⇨ கடவுளின் மைந்தர் ஏன் கடவுளை நோக்கி இந்தக் கேள்வியை கேட்க வேண்டும்?

⇨ தந்தையாகிய கடவுள் தம்மை கைவிட்டார் என்று அவர் எண்ணினாரோ?

⇨ அப்படி எண்ணினாலும் அது தவறாகிவிடுமோ?

⇨ அப்பா தந்தையே! உம்மால் எல்லாம் இயலும்.

⇨ இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும். ஆனாலும் உம் விருப்பப்படியே நிகழட்டும் (மாற். 14 : 36), என அவர் விடுத்த விண்ணப்பம் கேட்கப்படவில்லையே என்ற வருத்தமா?

⇨ இயேசு இப்படிப்பட்ட மரணத்தை எதிர்பார்க்கவில்லையா?

⇨ இயேசு திருமுழுக்கு பெற்றபோது, இவர் என் நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் (மத். 3 : 17) என்று கூறின கடவுள், மறுரூபமலையில், "என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன், இவருக்கு செவி கொடுங்கள்" (மத். 17 : 5) என்று கூறின கடவுள் ஏன் இயேசு. கிறிஸ்துவை கைவிடப்பட்ட நிலைக்கு தள்ளவேண்டும்?

இவ்வாறு பல கேள்விகளை எழுப்பும் இவ்வார்த்தை எப்படிப்பட்ட வார்த்தை? என்பதை இவண் காண்போம்.

## 1. உறவின் வார்த்தை

இவ்வார்த்தை தந்தைக்கும் மைந்தனுக்குமிடையே உள்ள உறவைக் குறிக்கின்றது. தந்தையும் பல சூழல்களில் தம் மைந்தருக்குமிடையேயுள்ள உறவை வெளிப்படுத்துகிறார் (மத். 3 : 17, 17 : 5).

தொடக்க நூல் 22இல் ஆபிரகாம் ஈசாக்கை பலிசெலுத்தும்படி மோரியாமலைக்கு அழைத்துச் செல்கின்றார். அங்கே அவருக்குள் நிச்சயம் ஒரு போராட்டம் நிகழ்ந்திருக்கும் - எப்படி என் மகனை பலி செலுத்துவது? என்பதுதான் அந்த போராட்டம். ஈசாக்குக்கும் தான் பலிப்பொருளாக அழைத்து செல்லப்படுவது தெரியாது. ஆனால் ஆபிரகாம் அவரை பலி செலுத்த ஆயத்தமானார். அங்கே ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்குமிடையே ஏற்பட்ட போராட்டம் அவர்களுக்கு மிகுந்த வேதனையை அளித்திருக்கும். அது உறவின்

அடிப்படையிலே எழுந்தது.

இயேசு கிறிஸ்துவும் கெத்சமெனே தோட்டத்தில் ஜெபித்தபோது “தந்தையே கூடுமானால் இத்துன்பக்கலம் என்னிடமிருந்து நீங்கட்டும். என்றாலும் நான் விரும்புகிறபடியல்ல, நீர் விரும்புகிறபடியே நடக்கட்டும்”. எனத் தந்தையிடம் வேண்டுகிறார். இந்த வேண்டலுக்கு தந்தையின் பதில் எத்தகையதாய் இருந்திருக்கும். இயேசுவும் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற விரும்பினாலும் அவரது உள்ளம் நடைபெறபோகும் நிகழ்வை நினைத்தபோது சாவுக்கேதுவான ஆழ்துயரம் கொண்டிருந்தது (மத். 26 : 38) என கூறுகின்றது.

இவ்வாறான போராட்டச் சூழ்நிலையில், துயரத்தின் உச்சகட்டத்திலும் தந்தையின் உறவை வெளிப்படுத்துகிறது.

## 2. வெற்றியின் வார்த்தை

என் கடவுளே! என் கடவுளே! என்னும் திருவார்த்தை 22-ம் திருப்பாடலின் முதல் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திருப்பாடல் யூத சிறுவர்கள் தங்கள் சிறுவயதிலே மனப்பாடம் செய்யும் திருப்பாடல். இத்திருப்பாடலில் முதற்பகுதி (1-21) நேர்மையாளர் ஒருவரின் இன்னல்கள், இக்கட்டுகளை பற்றியும், பிற்பகுதி (22-31) நம்பிக்கையோடு அவர் செலுத்தும் நன்றியைக் குறித்தும் சொல்லுகிறது. இயேசு ஒரு யூதனாக இருந்தபடியால் அவர் இத்திருப்பாடல் முழுமையும் சொல்லியிருக்கலாம் என இறையியலாளர்கள் கூறுகின்றனர். எனவே இது தோல்வியின் வார்த்தையல்ல அது ஓர் வெற்றியின் வார்த்தையே. ஏனென்றால் இப்பாடல் ஓர் வெற்றியின் முழக்கத்தோடு நிறைவு பெறுகின்றது.

இயேசு தாம் கைவிடப்பட்ட நிலையை எண்ணி கதறாமல், கைவிடப்பட்ட சூழலிலிலும் கை கொடுக்கும் இறைவனின் கருணையை எண்ணி வெற்றியின் வார்த்தையாக இறைமகன் சிலுவையில் நான்காவது வார்த்தையாக மொழிகின்றார்.

அரசியல் ஆதிக்கத்தினாலும், ஆக்க சக்திகள் நம்மை துன்புறுத்தும்போதும் அதினால் வரும் வேதனையால் கதறும்போது நாம் எழுப்பும் வேதனையில் குரல்கள் இறைவனுக்கும் நமக்குமிடையேயுள்ள உறவை வெளிப்படுத்துவதாய் அமைய வேண்டும்.

நோயின் கொடூரத்தன்மைகளினால், துன்பங்கள் நம்மை நெருக்கும்போதும் உறவுகள் நம்மை கைவிடும்போதும் நாம் எழுப்பும் ஏன்? ஏன்? என்ற கேள்விகள் உலக உறவையல்ல இறைவனுக்கும் நமக்குமிடையே உள்ள உறவை வளர்பதாகவும் தோல்வியையல்ல வெற்றியை குறிப்பதாகவும் அமைய வேண்டும்.

**திரு. ரமேஷ் டி. தாஸ்**



| 5 | ஐந்தாம் திருமொழி |
|---|---|

யோவா 19 : 28-30

# குருசினில் கொண்ட தாகம்

“தாகமாய் இருக்கிறது” (யோவா. 19 : 28)

சிலுவையைக் கண்டோம். அதில் எளிமையும் வலிமையும் கண்டோம். வாழ்விற்குச் செழுமையும் நீடு வாழ்விற்கு வழியையும் கண்டோம். அதில் இறைத்துறவைக் கண்டோம். நமக்கருளும் இறை உறவையும் கண்டோம். கள்ளத்தை நீக்குதலைக் கண்டோம். உள்ளத்தைப் புதுப்பித்தலைக் கண்டோம். சிலுவையில் தொங்குகின்ற மனுமகன் இயேசு கிறிஸ்துவில் இவை எல்லாம் கண்டோம். நாம் பாவநிலை கண்டோம். மீட்க அவர் தந்த விலை கண்டோம். பிணக்கம் நீங்கி இறையுடன் இணக்கம் கண்டோம். நன்றிப் பெருக்கால் பக்திப் பெருக்கால் அவர் பாதம் அண்டினோம். பணிந்தோம். பணிபுரிய முடிவெடுத்தோம்.

சிலுவையிலிருந்து மொழி ஒன்று கேட்டோம். வாழ்வளிக்கும் T¦ ×¬V Y¯ Li úPôm. K¬] m, K¬û \ Yu (One Humanity, One God) என்பதனைக் கண்டோம். அன்பு நிறைவால் பண்பு குறையாமல் இறையிடத்தும் மக்களிடத்தும் இன்ப உறவு கொண்டு, தொண்டு வாழ்வினை என்றும் நடத்தி அன்றன்று ஆண்டவரிடம் அனைத்தையும் ஒப்புவித்து வாழும் வளம்கண்டோம். களமிறங்கிப் பணிபுரிய தூண்டப் பெற்றோம். சிலுவையிலிருந்து கூறப்பட்ட மொழி ஏழு, இறைவன் சொல்லும் மொழி ஏழு.

வைகறைப் பொழுது முந்திய நாளில் முகிழ்த்தெழுந்திருந்த முழுமதியும் மேற்குக் கரையில் முகிழ்க் கூட்டங்களுக்கிடையே ஒளிந்து கொண்டிருந்தது. நிலவென்னும் நாயகனின் முகம் கண்டு பொங்கியெழுந்து ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த கடல் நங்கையின் ஆரவாரமும் அடங்கிவிட்டது. அமைதியான அந்தச் சூழ்நிலையிலும் ஒரு பெண்ணின் அழுகுரல் ஒலித்துக் கொண்டிருந்தது. கலிங்க நாட்டுப் படையினருக்கும் ஆற்றல் மறவனாம் அசோக மன்னனின்

படைகளுக்குமிடையே நடந்த போர் முடிவுற்றிருந்த வேளை அது. கலிங்க நாட்டு மண் இரத்தக் கறை படிந்து காணப்பட்டது. பிணக்குவியல்களிடையே தான் பெற்ற மகனின் பிணத்தின் மீது புரண்டு அழுது கொண்டிருந்த தாய், பிள்ளையின் உயிரை எதிரியின் வாள் கொள்ளை கொண்டு விட்ட கொடுமையை எண்ணி மனம் குமுறிக் கொண்டிருந்தாள். நாடி நரம்பெல்லாம் தளர்ந்த நிலையில், நாவறட்சியால் துவண்ட நிலையிலிருந்தாள் அந்தத் தாய். தன் வெற்றியினை எண்ணிப் பூரித்துக் கொண்டிருந்த மன்னன், புலம்பலைக் கேட்டு மனம் வெதும்பி அந்தத் தாயின் தாகம் தீர்த்திட எண்ணி, குளிர்ந்த நீர் நிறைந்த குவளையை நீட்டுகிறான் அவளிடம். யாரென வினவுகிறாள் தாய். சாம்ராட் அசோகனெனப் பதிலளிக்கிறான் மன்னன். தன் குலக்கொடியைக் கொடும் போரில் வீழ்த்திவிட்ட சாம்ராஜ்ய வெறிபிடித்த சாம்ராட் அசோகனிடமிருந்து நீர் பெற்றுத் தன் தாகம் தீர்க்க மறுத்துவிடுகிறாள். தன்னுயிரினும் மேலான மகனை அழித்த பகை நாட்டு வேந்தனின் கையிலிருந்து நீர் பெற்று தாகம் தீர்க்க மறுத்துவிடுகிறாள்.

சிலுவையில் உயிர்விட்டுக் கொண்டிருக்கும் ஆண்டவர் தம் முன் நிற்போர் தம்மை அழிக்க விரும்பும் பகைவரென்பதை அறிந்திருந்தும் அவர்களை நோக்கி தாகமாயிருக்கிறது என்று உரைக்கின்றார். (யோவா 19 : 28).

### 1. மனித உணர்ச்சிகளின் தாக்கம் - தாகமாயிருக்கிறது

தரணி வாழ் மைந்தரின் தாகந்தீர்த்த வள்ளல் இன்று தாகமாயிருக்கிறது என்றுரைக்கிறார் (யோவா 7 : 37). ஆழ்கடலையும் ஆறுகளையும் நீரூற்றுகளையும் உருவாக்கியவர் இன்று தாகமாயிருக்கிறது என்கிறார் (யோவா 1 : 3). கன்மலை கனிந்து நீர் சொரியச் செய்தவர் (எண். 20 : 10-13), கானாவூரில் நீரைச் சுவை மிகு திராட்சை இரசமாக்கியவர் (யோவா 2 : 9), சமாரியப் பெண்ணிடம் நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது என்றுரைத்தவர் (யோவா 4 : 14) இன்று தாகமாயிருக்கிறது என்கிறார். காயங்களினால் இழந்த இரத்தம், இரு கைகளும் விரிக்கப்பட்ட நிலையில் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த உடல், முள்முடி நெருக்கியதால் ஏற்பட்ட வலி, இவைதான் அவர் தாகமடைய காரணமாயிருந்தன (எசா. 53 : 1-12).

ஆற்றல் மிக்க கடவுள், அழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்த மனுக்குலத்தை மீட்டிட மனிதனாகவே மாறியதால்





மனிதர்க்கு ஏற்படும் அனைத்து உணர்வுகளும் ஆண்டவர்க்கும் ஏற்படுகின்றன. ஆகவே தாகமாயிருக்கிறது என்கிறார். தாகந்தீர்க்க முன்வருகிறார்களா தம் பகைவர்கள் என்று சோதிப்பதற்காகக் கேட்காமல் தாகத்தைத் தீர்க்க எண்ணியே இவ்வாறு கூறுகிறார். கடவுளாக, இருந்து கொண்டு வல்லமை மிக்க தம் சொற்களால் மனிதர் தம் வாழ்வுக்குரிய வழிமுறைகளைக் காட்டிடாமல் மனிதராகி மனிதர் தாங்க வேண்டிய துன்பங்களை அனுபவித்ததன் மூலம் தான் அவர் மீட்பைக் கொடுத்தார். பாடுபடும்போது அவர் பார்ப்போர் பரிதபிக்கத்தக்க மனிதராகவே இருந்தார். கடவுள் நிலையில் இருப்பதை விடுத்து மனிதராக மாறிப் பாடுகளை ஏற்றதன் வழி தான் உண்மையான மீட்பு மனிதருக்குக் கிடைத்தது. தம்முன் நிற்போர் பகைவராயிற்றே, அவரிடம் தாகந்தீர்க்கக் கேட்டால் தீர்ப்பாரோ என்ற ஐயம் ஏற்படவில்லை. உதவி தேடி செல்லவிரும்பினால் நம்முடன் உறவாடி வாழும் நண்பர்களிடம் தான் நாம் செல்வோம். பகைவரின் துணைகொண்டு வாழ்வதைக் காட்டிலும் உயிரை மாய்த்துக் கொள்வதையே விரும்பும் நம் மனித உள்ளம். ஆனால் ஆண்டவரோ இங்கு அவர்கள் தன்னை வெறுத்தபோதிலும் அவர்களைத் தம்முடைய பகைவர்களாகக் கொள்ளாமல் நண்பர்களாகவே கருதி அவர்களிடம் தாகத்துக்குத் தண்ணீர் கேட்கிறார். பகையை மறந்து நட்புநாடி நிற்கிறார், ஆண்டவர் (யோவா 19 : 28).

### 2. மறந்துவிட்ட மனிதத்தின் ஏக்கம் - தாகமாயிருக்கிறது

நான் அங்கு நின்றிருந்தால் அருகில் சென்று தண்ணீர் அளித்திருப்பேனென்று நாம் கூட நினைப்போம். நான் அங்கு இல்லாது போய்விட்டேனேயென்றும் நாம் அங்கலாய்த்துக் கொள்வோம். ஆனால் இப்பொழுது தாகமாயிருக்கிறேன் எனும் குரல் பரந்துபட்ட இவ்வுலகின் பல்வேறு பகுதிகளிலும் ஒலிப்பதை நாம் இன்று கேட்க மறந்துவிடுகிறோம். கேட்டாலும் கேளாதவர் போல் இருந்துவிடுகிறோம். வாழ்வில் வளம் கண்ட நாம் ஏழைகளின் நிலையினைக் கண்டும் அவர்களது தாகத்தைத் தீர்க்க முனைவதில்லை. கண்ணீரில் மிதக்கும் ஏழைகளின் நெஞ்சத்திலிருந்தெழும் குமுறல்களைக் கேட்க நேரிட்டாலும் அவர் தம் வாட்டத்தைப் போக்க வழிவகைகளை மேற்கொள்வதில்லை. ஆவின்குடில் போன்றிருக்கும் ஆளுயரக் குடிசையில் ஐந்தாறு உயிர்கள் வாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தும் அவர் தம் குறை போக்கிட நாம் முயல்வதில்லை. ஆளும் தலைவர்களின் அதிகார வேட்கையை எதிர்த்து அமைதியான புரட்சி செய்யும் மக்களின் விடுதலை வேட்கையை நாம் தெளிவாகப் புரிந்து கொள்வதில்லை. தாகம்

தீர்க்க நீர் வேண்டி நின்றவருக்குக் கொடுக்கப்படுவது உணர்ச்சியை மழுங்கச் செய்வதின் மூலம் துன்பத்தை மறக்கச் செய்யும் கசப்பு கலந்த காடி (யோவா. 19 : 21). தாகம் கொண்ட ஆண்டவருக்கு கசப்பு கலந்த காடியைக் கொடுத்தவர்களைப் போன்று துன்பத்தில் உழன்று தவிக்கும் மனிதர்களுக்கு அவர்தம் துயர் துடைக்க முயன்றிடாமல் அவர்களது கவனத்தை வேறு வழியில் திருப்பிடவே நாமும் எண்ணுகிறோம். உண்மை நிலையினின்று அவர்கள் மனதைப் பிரித்து மனமயக்கம் கொள்ளச் செய்கிறோம்.

தாகமேற்பட்ட ஆண்டவரின் தாகம் தீர்க்கப்படவில்லை. நிறைவான வாழ்வு வாழத் துடித்துக் கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான மனிதர்களின் வேட்கையும் இன்று தீர்ந்தபாடில்லை. கொழுந்துவிட்டெரியும் கும்பியுடன் குடிசையில் வாழ்கின்ற மக்களின் தேவைகளும் இன்று நிறைவு செய்யப்படவில்லை. குரல்வளை வலிக்கும் மட்டும் தம் குறைகளை நினைத்துப் புலம்பும் கோடானுகோடி மக்களின் குறைகளும் இன்று கவனிக்கப்படவில்லை. எப்படி இருக்கிறாய் எனக் கேட்கும் வேளையில் ஏதோ இருக்கிறேன் எனக்கூறும் நிலையிலுள்ள எண்ணிறந்த மக்களின் வாழ்க்கையில் இன்னமும் மலர்ச்சி தோன்றவில்லை. சிலுவையில் தொங்கிய நிலையில் தாகமாயிருந்த ஆண்டவர் இன்று உலக வாழ்வில் சிக்கிச் சுழலும் மனிதர்கயின் வடிவில் தாகமடைந்தவராகத்தான் இருக்கிறார்.

தாகமாயிருக்கிறேன் என்பது கொடிய பாவச் சுமையால் அழுத்தப்படுவதற்கு அடையாளமாகவும் விளங்கும். பழரசம் பருகிப் பன்னீரில் குளித்து மகிழ்ந்திருந்த பெருஞ்செல்வன் உயிர்விட்டபின் பாவியர் வாழும் பாழுலகில் புழுவெனத் துடித்துக் கொண்டிருந்த வேளையில் தாகமேற்பட்டபோது ஆபிரகாமின் மடியில் லாசருவைக் கண்டு தன் நாவு குளிர நீர் தரும்படி வேண்டி நிற்பதைக் காண்கிறோம் (லூக். 16:24). பாவத்தின் விளைவாகத் தாகம் ஏற்பட்டது அச்செல்வந்தனுக்கு. உலகோரனைவரின் பாவங்களும் ஒருசேர அவரை அழுத்தியதன் காரணமாக உடல் தளர்ந்து உள்ளம் சோர்ந்த நிலையில் தாகமேற்படுகிறது நம் ஆண்டவருக்கு. தாகமாயிருக்கிறேன் என முழங்கிடும் ஆண்டவர் "தா... உன் அகம்" என்று நம்மை பார்த்துக் கேட்கிறார். அவரது தாகத்தை தீர்த்திட நம் அகத்தை-உள்ளத்தை அவரிடம் தரச் சொல்லுகிறார். தாரீரோ? பிறமக்களின் தாகம் தீர்க்க இறைவன் நம்மை பயன்படுத்துவாராக. -

**அருள்திரு. T. ஸ்டாலின் வினு ஜோண்ஸ்**



| 6 | ஆறாம் திருமொழி |
|---|---|

யோவான் 19 : 30 ஏ ;;

# குருசினில் கையளிக்கப்படும் பணி

"... எல்லாம் நிறைவேறிற்று"

இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் (BC 48) ஜூலியஸ் சீசர் என்பவர் தாலமி என்ற அரசரை முறியடித்து கிளியோபட்ரா என்பரை அரசியாக அமர்த்திவிட்டு ரோமாபுரிக்குத் திரும்பிச் செல்லும் வழியில் பொன்டஸ் என்ற நாட்டின் மீது போர் தொடுத்து வெற்றிகண்டார். இந்த வெற்றிச் செய்தியை ரோமப் பேரவைக்கு (Roman Sennet) அறிவித்த கவிதை நயமிக்க மூன்று வார்த்தைகள் இன்று வரை உலகப் புகழ் பெற்றவை. அவ்வார்த்தைகள் வினி-விசி-விடி (Vini-Vici-Vidi) என்பதாகும். அதன் பொருள் வந்தேன் - கண்டேன் - வென்றேன் என்பதாகும். ஆனால் இயேசு கிறிஸ்து தமது வெற்றிச் செய்தியை "நிறைவேறிற்று" என்று ஒரே வார்த்தையில் கூறினார்.

லியோனார்டு ரேவன்ஹில் (Leonard Ravenhill) என்பவர் 6-ஆம் திருமொழி குறித்துக் கூறும்போது "இவ்வுலகில் வாழ்ந்த மனிதர்களிலேயே தலைசிறந்த மனிதர் கூறிய, யாரும் உச்சரித்திராத, தலைசிறந்த வார்த்தை (The Greatest words Ever uttered - By the Greatest man That Ever Lived) என்று கூறினார். இயேசு கிறிஸ்து சிறுவையில் கூறிய வார்த்தைகளில் மிகச் சிறிய வார்த்தை இதுதான். கிரேக்க மொழியில் டெட்டல்ஸ்டாய் (Tetelestai) என்ற ஒரே சொல்லாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தையை "நிறைவேற்றி" அல்லது "முற்றும் முடித்து" என்று மொழி மாற்றம் செய்யலாம்.

இயேசு கிறிஸ்து தமது வாழ்வில் எல்லாம் "நிறைவேறிற்று" என்று வெற்றி முழக்கமிட்டார். அவர் எதை நிறைவேற்றி முடித்தார் என்பதைச் சிந்திப்போம்.

### 1. தந்தையின் விருப்பம் நிறைவேற்றி முடித்தார் :

யோவான் 4 : 34-இல் இயேசு கிறிஸ்து "என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும், அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு" என்றார். மனுக்குலம் மீட்படைய வேண்டும் என்பது தந்தையாம் கடவுளின் விருப்பம். அப்படி மனுக்குலம் மீட்பைப் பெறுவதற்குப் பழுதற்ற செம்மறி அடிக்கப்பட வேண்டும். அந்தப் பழுதற்ற செம்மறியாய்த் தன்னையே தந்து தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றி முடித்தார்.

யோவான் 17 : 4-இல் "நான் செய்யுமாறு நீர் என்னிடம் ஒப்படைத்திருந்த வேலையைச் செய்து முடித்து நான் உம்மை உலகில் மாட்சிப்படுத்தினேன்" என்று தந்தையிடம் வேண்டுதல் ஏறெடுக்கின்றார் இயேசுகிறிஸ்து. இவ்விதமாக தந்தை தன்னிடம் ஒப்படைத்த அனைத்துப் பணிகளையும் சிறப்புடன் நிறைவேற்றி முடித்தேன் என்று வெற்றி முழக்கமிட்டார்.

இன்று இறை அடியார்களாகிய நாம் தந்தையாம் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுகின்றவர்களாக வாழ வேண்டும் என்ற அறைகூவலை நமக்குத் தருகின்றது இவ்வார்த்தை.

196

### 2. தந்திர சாத்தானை முறியடித்து முடித்தார் :

"...சாவின் மேல் ஆற்றல் கொண்டிருந்த அலகையைச் சாவின் வழியாகவே அழித்து விட்டார்". (எபி. 2 : 14)

தந்தையாம் கடவுளிடமிருந்து மனுக்குலத்தைப் பிரித்துச் சிதைவுறச் செய்வதே சாத்தானின் திட்டம். தொடக்க கால பெற்றோராகிய ஆதாம், ஏவாளின் வாழ்வு இதற்குச் சான்று. இறைவனோடு இருக்க வேண்டும் என்பதற்காக படைக்கப்பட்டவர்களிடம் பேராசையைக் காட்டி கீழ்ப்படியாமை, உண்மை மறைத்தல், பழி போடுதல் போன்றவற்றைப் புகுத்தி கடவுளை விட்டு தூரம் போகச் செய்தவன் சாத்தான். மனுமக்கள் மீட்பைப் பெறுவதில் எள்ளளவும் விருப்பமில்லாதவனே இந்தச் சாத்தான். இத்தகைய சாத்தானின் தந்திரங்களை முறியடித்து முடித்தார் இயேசு கிறிஸ்து.

இன்று நம்மிடையே மலிந்துள்ள தந்திர சாத்தானின் சதிகளாகிய பேராசை, கீழ்ப்படியாமை உண்மை மறைத்தல், நாம் வாழ பிறர் மீது பழி சுமத்துதல், கோபம், பெருமை இவைகளால் சிக்கித் தவிக்கின்றவர்களாக வாழ்ந்து இறைச்சாயலை இழந்து விட்ட சூழலில்





இறைமகன் இயேசு கிறிஸ்து அலகையைச் சாவின் வழியாக அழித்து முடித்தார் என்று எபிரேயர் நிருப ஆசிரியர் விளக்குகின்றார். இதையே இயேசு கிறிஸ்து நிறைவேற்றி முடித்தேன் என்று வெற்றி முழக்கமிட்டார்.

### 3. தம் உடல் தந்து தம்மோடிணைத்து முடித்தார் :

ஏசாயா 59 : 2-இல் மனுக்குலம் செய்த தீச்செயல்கள் கடவுளுக்கும் மனுக்குலத்திற்கும் இடையே பிளவை உண்டாக்கியுள்ளன. மனுக்குலத்தின் பாவங்கள் கடவுளின் முகத்தை மறைத்துள்ளன என்று இறைவாக்கினர் எசாயா குறிப்பிடுகின்றார். இத்தகைய பிளவை அகற்றி பாவ மனுக்குலத்தை தம்மோடு இணைப்பதற்குத் தம் உடலைப் பலியாகக் கொடுத்தார். தூய பவுலார் எபேசியர் 2 : 13-இல் தொலைவில் இருந்த நீங்கள் இப்பொழுது இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் வழியாய் அருகில் கொண்டு வரப்பட்டிருக்கிறீர்கள் என்றும் எபேசியர் 2 : 14-இல் தமது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாக பிரிந்து நின்றவர்களை ஒன்றுபடுத்தினார் என்றும் கூறுகிறார்.

ஏதேன் தோட்டத்தில் பிரிந்து சென்ற மனுக்குலத்தை மீண்டும் கடவுளின் தோட்டத்தில் தம்மோடு இணைப்பதற்குதம் தம் உடலையே மீட்கும் பலிப்பொருளாகக் கொடுத்து இணைப்புப் பணியைச் செய்து முடித்தார். நாமும் இந்த ஒப்புரவாக்குதலின் திருப்பணியில் நம்மை இணைத்துக் கொண்டு பிறரையும் கடவுளுக்கு ஏற்புடையவர்களாக்கும் நல்ல பணியை நிறைவேற்றிட இப்பணியை நம்மிடம் பணித்து (2 கொரி. 2 : 18) வெற்றியுடன் முடிந்தது என்று முழக்கமிட்டார். இத்தகைய திருப்பணியில் நம்மை இணைப்பதற்கு அர்ப்பணிப்போம்.

**முடிவுரை :** அன்பர்களே! இறைமகன் இயேசு கிறிஸ்து வெற்றியுடன் நிறைவேறிற்று என்று கூறி தம் அடிச்சுவட்டை நாமும் தொடர நம்முன் மாதிரியை வைத்து அழைப்பு விடுத்துச் சென்றுள்ளார் (1 பேதுரு 2 : 21). அந்த அழைப்புக்கு அவரின் அடியவர்களாகிய நாமும் அர்ப்பணித்து பணி தொடரவும் இறையாசி பெறவும் முற்படுவோம்.

**திரு. R. டேவிட் ஜெபசிங்**

7 ஏழாம் திருமொழி

லூக். 23 : 44 - 49

# குருசினில் ஒப்புயர்வுற்ற ஒப்படைப்பு

தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன் என்று இயேசு உரத்த குரலில் கூறி உயிர் துறந்தார் லூக். 23 : 46.

இயேசு சிலுவையில் மொழிந்த இந்த ஏழாம் வார்த்தை நிறைவான நம்பிக்கையின் தெளிவைக் காட்டுகிறது. திருமைந்தன் தன்னைச் சாவுக்கு ஒப்புகொடுக்க வேண்டுமென்பது இறைத் திட்டம். இந்தச் சாவு இயேசுவின் வாழ்வில் முடிவு அல்ல சரித்திரத்தின் நிறைவும் அல்ல மாறாக புது வாழ்வின் தொடக்கம். இந்த வார்த்தை யூதக் குழந்தைகள் இரவு தூங்கச் செல்லுமுன் ஏறெடுக்கும் ஜெபத்தைத்தான் இயேசு சிலுவையில் இறுதியாகக் கூறினார். உலகில் ஒருவர் மரிக்கும்பொழுது அவர் இறுதியாகக் கூறும் வார்த்தைகளுக்கு அவருடைய உற்றார் உறவினர்கள் அதிக முக்கியத்துவமளிப்பது வழக்கம். ஆனால் இயேசுவின் ஏழாம் திருமொழி எதைத் தெளிவுப்படுத்துகிறது என்பதைத் திருமறை ஆதாரத்துடன் ஆராய்வோம்.

### 1) உறுதியான ஒப்படைப்பு

இன்று மனிதர் தமது வாழ்வின் முடிவு என்ன என்பதை பற்றிய உறுதி இல்லாதவர்களாக இருக்கின்றனர். ஆனால் இயேசு தமது வாழ்வின் முடிவு என்ன என்று உறுதி உடையவராகஇருந்தார். திபா. 23 : 6-இல் ஆண்டவரின் வீட்டிலே நான் நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன் என்கிறார் தாவீது. அதே உறுதியோடே பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்ற இயேசுவின் நம்பிக்கையான, உறுதியான குரல் அருகில் நின்ற நூற்றுக்கதிபதியை அசைத்தது (மாற். 15 : 39) உருக்குலைந்த நிலையில் உறுதியான ஒப்படைப்பைப் பார்த்த நூற்றுக்கதிபதி இவர் கடவுளின் குமாரன் என்று அறிக்கையிடுகின்றார். இயேசு கிறிஸ்துவின் உறுதியான ஒப்படைப்பின் வார்த்தை நூற்றுக்கதிபதியின் வாழ்வில் புது நம்பிக்கையை ஏற்படுத்தியது.



### 2) உன்னதமான ஒப்படைப்பு

என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன். இந்த அன்பார்ந்த மைந்தர் தமது துன்பக் கிண்ணம் நீங்கக் கூடுமானால் நீங்கட்டும் என்றார். அது நீங்கவில்லை அதற்கு மாறாக அவர் சிலுவையில் வதைக்கப்பட்டார். அவமானப்படுத்தப்பட்டார். இருப்பினும் தமது தந்தையுடன் கொண்டுள்ள உறவை வெறுக்கவில்லை, துண்டிக்கவில்லை. தந்தையே என்று தொடக்கத்தில் அழைத்தவர் கடைசிவரை அந்த உறவை அப்படியே கடைப்பிடித்தார். காரணம் இவர்களுக்கு இடையே உள்ள உறவு இடையில் வந்ததல்ல (யோவா. 1 : 1-3). இவர்களின் உறவுக்குத் தொடக்கம் இல்லை, முடிவும் இல்லை. இவர்கள் இருவரின் உறவு பிரிக்க இயலாத அளவுக்கு ஒன்றித்து இருப்பதாகும் (யோ. 14 : 9-11). என்று உறவை வெளிப்படுத்துகிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உறவையும் உரிமையையும் இழக்காத அதேவேளையில் சவாலான தமது கடமையையும் நிறைவேற்றினார். தமது பணியினை நிறைவேற்றி இறுதியாக தமது உயிரையும் தம் தந்தையிடமே ஒப்புவித்தார். நாமும் ஆன்மீக வாழ்வில் நம் உயிரை தீவினையின் கருவியாக மாய்த்துக் கொள்ளாமல் நம் உயிர் கடவுளுக்கு சொந்தம் என்னும் பேருண்மையை உணர்ந்து கொண்டோராய் இறைவன் விரும்பும் செயல்களைச் செய்ய நம்மை ஒப்படைப்போம்.

**திரு. J. பிரபின் செல்வமணி**

# அனைத்துலக மன்றாட்டு வாரம் 2013

## பொதுவான செம்பொருள்

## ஆண்டவர் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார்?

## What does God Require of us?

மீகா 6:6–8 ஆண்டவரோடு நிகழ்த்தப்பட்ட கேள்வி – பதில் உரையாடல் போல் அமைந்திருக்கும் இப்பகுதி, ஆண்டவர் மனிதரிடம் எதை எதிர்பார்க்கிறார் என்பதற்கும் தெளிவான பதிலை முன் வைக்கிறது. அதாவது ஆண்டவர் விரும்புவதைச் செய்து, ஆண்டவரோடு நடப்பதை அல்லாமல் வேறு எதையும் ஆண்டவர் மனிதரிடம் எதிர்பார்க்கவில்லை.

ஆண்டவரின் சீடர்களாக நடக்கத் தவறிய மனிதர்களைக் குறித்தும், ஆண்டவரோடு நடக்க வேண்டிய வழிகளைக் குறித்தும் ஆண்டின் முதல் வாரத்திலே ஒவ்வொரு நாளும் தியானிப்போம். ஏனெனில் "நீதியின் பாதையில் வாழ்வு உண்டு; அந்தப் பாதையில் மரணம் இல்லை" (நீதி 12:28)



**02-01-2013** அனைத்துலக மன்றாட்டு வாரம் – நாள் 1

தொநூ 11 : 1–9 திப 2 : 1–12.

திபா 34 : 11 – 18 லூக்: 24:13–25

## உரையாடலுடன் நடத்தல்

## Walking in Conversation

வானளாவிய கோபுரம் கொண்ட நகர் ஒன்றை நமக்காகக் கட்டி எழுப்பி, நமது பெயரை நிலைநாட்டுவோம் (தொநூ 11:4)

மனிதனிடம் இருக்கிற மகத்தான அருட்கொடைகளுள் ஒன்று உரையாடல். நல்ல உரையாடல் மூலமாக மனிதன் நல்ல பல காரியங்களைச் சாதித்துக் கொள்ளுகிறான். உலகிலே கடவுளால் படைக்கப்பட்ட ஏனைய பல உயிரினங்களும் ஒலிகளின் மூலமாக, நடைகளின் மூலமாக, நடனத்தின் மூலமாக, அசைவுகளின் மூலமாகத் தகவல்களை பரிமாறிக் கொள்ளுகின்றன. ஆனால் மனிதன் மட்டுமே உரையாடலின் மூலமாக தகவல்களை அழகாகப் பரிமாறிக்கொள்ளுகிறான். எல்லா உயிரினங்களைக் காட்டிலும் `உரையாடல்" மூலமாக திறமையாக தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுகிறான் என்று வெ. இறையன்பு என்ற எழுத்தாளர் கூறுகிறார். அதாவது (i) மனிதனுக்கு மட்டுமே சொல்திறன் அதிகம். (ii)ஒரு குறிப்பிட்ட சூழலக்குத் தகுந்த சொற்களை மனிதன் மட்டுமே பயன்படுத்த இயலும் (iii)மனிதனால் மட்டுமே இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் குறித்த சொற்களை பயன்படுத்த முடியும் (iv) மனிதனால் மட்டுமே உருவகங்கள், உவமை போன்றவற்றை பயன்படுத்தி உரையாட முடியும் (v) வாக்கிய உபயோகத்தை விரும்பம்போல மனிதனால் மட்டுமே அங்குமிங்கும் வளைத்துத் திசை திருப்ப முடியும்.

முதன்முதலாக மனிதர்கள் கூட்டாக உரையாடிக் கொண்டதை தொநூ 11:1–9 வரையுள்ள பகுதியில் வாசிக்கிறோம். ஆனால் இவர்களது உரையாடல், விபரீதமான விளையாடலாகப் போய் விட்டது. இந்த மக்கள் யார்? இவர்களது உரையாடல், விபரீத விளையாடலாகிப் போன காரணம் என்ன? என்பதைத் தியானிப்போம்.

### 1. பாபேலில் மக்கள்

உலகிலே ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக்குப் பின் நோவாவுடைய குமாரரின் சந்ததிகளே உலகமெங்கும் பிரிந்து பரவினார்கள். இவ்வாறு குழுக் குழுவாக பிரிந்து உலகின் நிலப்பரப்பெங்கும் பரவி குடியிருக்கும்படி மக்கள் கிழக்கேயிருந்து பிராயணம் பண்ணும் போது சினயார் தேசத்திலே சமபூமி இருப்பதைக் கண்டு அங்கே குடியிருந்தார்கள். அங்கே குடியிருந்த

மக்கள், ஆண்டவர் எதிர்பார்க்கிறபடி, அவருக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடந்து கொள்ளாமல், சினயார் தேசத்தின் மன்னனாகிய நிம்ரோத்தைப் போல ஆண்டவருக்கு முன்பாகப் பலத்த வேட்டைக்காரர்களைப் போல நடந்து கொள்ளுகிறார்கள். ஆண்டவருக்கு முன்பாகத் தாழ்மையாய் நடவாமல், பலத்த வேட்டைக்காரனைப் போல நடந்த நிம்ரோத் (தொநூ 10:9, 11, 12) நினிவே, இரகபோத்து, ஈர், காலாகு என்னும் பெரிய பட்டணங்களையெல்லாம் கட்டினான். அவனைப் பார்த்தே பெருமையடைந்த சினயார் தேசத்துத் தலைநகரான பாபேலில் குடியிருந்த மக்கள், தங்கள் ராஜாவையும் மிஞ்ச வேண்டும், கடவுளையும் மிஞ்ச வேண்டும் என்ற நோக்கில் ஒரு நகரத்தையும், வானத்தைத் தொடும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்ட ஒன்று கூடி உரையாடல் நிகழ்த்துகிறார்கள்.

எல்லாரையும் முந்த வேண்டும், மிஞ்ச வேண்டும், என்று எண்ணம் கொண்டு செயல்படுவது தான் வேட்டைக்கார மனநிலை. நிம்ரோத்தின் இந்த வேட்டைக்கார மனநிலையோடு தான் பாபேல் நகர மக்கள் இரண்டு கட்டட அமைப்புகளைக் கட்ட முற்படுகிறார்கள். முதல் கட்டட அமைப்பு ஒரு நகரமாகும். இது நிலையாக ஓரிடத்தில் குடியிருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கட்டப்படுகிறது. ஆனால் வானத்தைத் தொடும் சிகரமுள்ள கோபுரம் தான் முழுக்க முழுக்க மனத்தாழ்மையில்லாமல் மனமேட்டிமையோடு கட்ட முயன்ற கட்டட அமைப்பு. பாபேல் மக்களுடைய மனமேட்டிமைக்குப் பிரதான காரணம் ஒரே மொழியும், அந்த மொழியில் அவர்கள் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வோடு நிகழ்த்திய உரையாடலும் தான் (தொநூ :11:6). ‘பாபேல்’ என்ற தங்கள் தலைநகரத்திற்கு பாபேல் என்ற பெயரைக் கடவுளின் வாயில் (Gate of God) என்று அர்த்தம் கொள்ளும்படி பெருமையோடு சூட்டிக் கொண்டார்கள். மனத்தாழ்மையாக இல்லாமல் வேட்டைக்கார மனநிலையோடு இவைகள் எல்லாம் செய்யப்பட்டன. அதனால் ஆண்டவர் அவர்களது மொழியை தாறுமாறாக்கி, உரையாடலை உடைக்கிறார்.உரையாடல் மூலம் பரிமாறப்படும் தகவல் பரிமாற்றத்தில் 7 முக்கிய அம்சங்கள் இருக்க வேண்டும். அவைகள்,

i) பேசுபவர்

ii) பேசுவதை உணர்த்தும் திறன்

iii) தகவல்

iv) ஊடகம்

v) உள்வாங்கும் திறன்

vi) கேட்பவர்

vii) எதிர்வினை அல்லது விளைவு

நாம் ஒருவரிடம் ஒரு குவளை தண்ணீரைக் கொண்டு வரச்சொல்லி தகவல் அளித்து, அவர் கொண்டு வந்து விட்டால் தகவல் பரிமாற்றம்





நடந்து விட்டதாகப் பொருள். ஆனால் அந்த நேரத்தில் அது முகம் கழுவவா? குடிக்கவா? என்ற தெளிவான உணர்த்தும் திறனோடும், உணரும் திறனோடும் இருக்க வேண்டும். ஆண்டவர் மொழியை தாறுமாறாக்கினதினால் உணர்த்தும் திறனும், உணரும் திறனும் மனிதனுக்குப் போய் விட்டது. மனத்தாழ்மையின்மையால் மனிதன் இவைகளை இழந்து போனான். பிரெஞ்சு அகழ்வாய்வு நிபுணர்கள் ‘நாவுகளின் கோபுரம்’ என்று அழைக்கப்பட்ட பாபேல் கோபுர சிதிலங்களை ‘அல் கில்லாக்’ நகருக்கு 12 k.m வடக்காகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ‘பாபேல்’ கடவுளுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடக்க வேண்டும் என்பதை உணர்த்தும் சிறந்த எடுத்துகாட்டாய் இருக்கிறது.

**2. எருசலேமில் மக்கள்**

பாபேலில் பிரிந்து தாறுமாறான மொழி, பல மொழிகளாகி மீண்டும் எவரால் தெளிவான உணர்த்தும் திறனோடும் உணர்திறனோடும் இருக்கும்? என்று கேள்விக் குறியாக எண்ணிய வேளையில், பெந்தக்கோஸ்தே நாளில் எருசலேமில் இந்த எண்ணம் ஆச்சரியக் குறியாக நிறைவேறுகிறது. திபா 4:2 வெவ்வேறு மொழிகளின் சீடர்கள் பேசி, அங்கே குடியிருந்த உலகமெங்குமுள்ள மனிதரை ஆச்சரியப்படுத்துகிறார்கள் ( திப. 4:7–12) ஆண்டவருடைய சீடர்கள், எருசலேமிலே வேட்டைக்கார மனநிலையோடு திபா 12:4இல் சொல்லப்படுவது போல நடந்து கொள்ளவில்லை. மிகவும் மனத்தாழ்மையோடு, கடவுளுக்கு முன்பாக ‘ங’ போல குனிந்து வளைந்து, செயல்படுகிறார்கள்.

வாழ்நாள் முழுவதும் நாம் ஆண்டவருக்கு முன்பாகத் தாழ்மையோடு நடக்க வேண்டும்

உரையாடல் மூலம் விபரீத விளையாடல்களை நிகழ்த்தக் கூடாது.

**அருள்திரு. J. பிரகாஷ் நாயகம்**

**03-01-2013** அனைத்துலக மன்றாட்டு வாரம் – நாள் 2

எசே 37:1–14 எபி 13: 12–14
திபா 22: 1 – 8 லூக்: 22:14–23

## கிறிஸ்துவின் உடைக்கப்பட்ட உடலுடன் நடத்தல்
## Walking with the Broken Body of Christ

... மானிடா! இந்த எலும்புகள் உயிர் பெற முடியுமா? (எசே 37:3)

எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கைச் சுற்றி எசேக்கியேலை நடத்திச் சென்று, ஏசேக்கியலிடம் ஆண்டவர் கேட்ட கேள்வி தான் இது– எசே 37:1–3.

உலகமெங்கும் தற்போது எலும்புகள் வளமாக இருக்கிறதா என்பதைக் கண்டறிய பல மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது. ஏனென்றால் எலும்புகள் இரும்பைப் போல, எஃகு, போலவே, உறுதியான பொருளல்ல. கால்சியம், பாஸ்பரஸ் போன்ற சத்துகள் உள்ளடக்கிய ஒரு மென்மையான பொருளாகும் தான் எலும்பு வள முகாமிலே எலும்பு தேயாமல், தேவையான கால்சியம், பாஸ்பரசோடு எலும்பு வளமாக இருக்கிறதா? என்பதைப் பரிசோதிப்பார்கள். 50 வயதை நெருங்கி விட்டாலே எலும்பு வளமாக இருக்கிறதா? என்ற பரிசோதனையைக் கட்டாயம் செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்துகிறார்கள்.

'எலும்பு' என்ற உருவகம் மூலமாக பல வாழ்வியல் செய்திகள் சொல்லப்படுகின்றன. 'உலர்ந்த எலும்புகள்' நம்பிக்கை இழந்து போன நிலைக்கு அடையாளமாகச் சொல்லப்படுகின்றன. திபா 32:3இல் இதைப் படிக்கலாம். மனிதனுக்கு மனோதுக்கம் ஏற்படும் போது இயல்பாக உற்சாகமாக இருக்கச் செய்யும் 'ஆவி' (Inner spirit) கூட முறிந்து போய், அதன் விளைவாக எலும்புகளை உலரப் பண்ணும் அளவிற்கு நம்பிக்கையின்மையை வலுவாக ஏற்பட்டு விடுகிறது. ( நீதி 15:13;17:22)

'எலும்புகள் உலர்ந்து போகுதல்' என்பது தான் உச்சகட்ட நம்பிக்கை இழந்து போன நிலையின் அடையாளம். எசே 37:2–இல் மிகவும் உலர்ந்ததுமாயிருந்த எலும்புகள், அதாவது உச்சகட்ட நம்பிக்கையின்மையில் இருக்கிறார்கள். 'நம்பிக்கையின்மை' என்ற 'உலர்ந்த எலும்பு' நிலையிலே இஸ்ரயேல் மக்கள் எல்லாரும் இருக்க, இஸ்ரயேல் மக்களுடைய அதே மனநிலையில் இருந்த எசேக்கியேல் தீர்க்கதரிசியிடம் கடவுள் உரையாடல் நிகழ்த்துகிறார். அந்த உரையாடலில் இருந்து தியானிப்போம்.



### 1. எலும்பு உலர்தலும், நம்பிக்கை மலர்தலும்

எசே 37:3 "மானிடா, இந்த எலும்புகள் உயிர்பெறமுடியுமா?" உலகத்திலே மருத்துவத்துறை ஆண்டவர் அருளிய ஞானத்தால் மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளது. இந்த மருத்துவ முன்னேற்றத்தில் ஒரு பெரிய பங்களிப்பைத் தந்தவர் Wilhelm Canrad Rontgen என்ற ஜெர்மனியப் பேராசிரியர் ஆவார். 1895–ஆம் ஆண்டு இவர் கண்டுபிடித்த x-ray கதிர், ஒளிக் கதிர்களை விட ஆற்றல் வாய்ந்ததாக இருந்தது, ஒளிக் கதிர்களைக் கூட மனித கண்களால் பார்க்க முடியும். x-கதிர்களைக் கண்களால் காண முடியாது. ஆனால் ஒளி புகாத எந்த பொருளையும் ஊடுருவிச் செல்லும் வல்லமை உள்ளது x-ray கதிர்கள். இந்த ஆற்றல் வாய்ந்த கதிர்களை கண்டுபிடித்ததற்காக இயற்பியல் துறையின் முதல் Nobel Prize 1901-ஆம் ஆண்டு இவருக்குக் கொடுத்தார்கள்.

இந்த x-ray கதிர்களை ஒளி புகாத பொருளையும் ஊடுருவிச் செல்லும் வல்லமை உள்ளது என்று சொன்னேன். அந்த வல்லமையினால் இவைகளைக் கொண்டு எலும்பு முறிவுகளைப் பார்க்கலாம். உடம்பினுள்ளே வேறு ஏதாவது பாதிப்பு இருக்கிறதா என்று பார்க்கலாம். ஆனால் இந்த வல்லமையுள்ள x-ray கதிரினால் மனித மனங்களை ஊடுருவ முடியாது. நம்பிக்கையின்மையால் உலர்ந்து போன எலும்புகளை போல இருக்கும் மனதை ஊடுருவி, மீண்டும் நம்பிக்கை ஏற்படுமா? நம்பிக்கை உலர்விலிருந்து நம்பிக்கை மலருமா? என்று பார்க்க இயலாது.

ஆகவே நான் எசேக்கியேல் இறைவாக்கினர், உரையாடலின் வாயிலாகத் தன்னிடம் கேள்வி கேட்ட கடவுளிடம் "தலைவராகிய ஆண்டவரே தேவரீர் அதை அறிவீர்" என்கிறார் எசே 37:36.

மிகவும் உச்சகட்டமாக நம்பிக்கையின்மையால் உயிரற்ற வறண்ட எலும்புகளாகப் பள்ளத்தாக்கிலே சிதறிக் கிடந்தது போல, அநேக நாடுகளில் வறுமையால் பாதிக்கப்பட்டவர்களாகவும், சிறு சிறு கூட்டத்தாராகவும் இருந்த இஸ்ரயேல் மக்கள், தங்களுக்கென்று ஒரு நாடு கிடைக்கும் என்பதை நம்பவே முடியாதவர்களாய் இருந்தார்கள். இதை ஆண்டவரின் வார்த்தையாகவே எசே 37:11–இல் வாசிக்கிறோம்.

எசே 37:12–14–இல் ஆண்டவர் சொன்னது போல, 1948–ம் ஆண்டு May 15–ஆம் தேதி "இஸ்ரயேல் நாட்டை உருவாக்கிக் கொடுத்தவா் எசேக்கியேல் தீர்க்கத்தரிசி வழியாக ஆண்டவர் சொன்னது 2535 வருடங்களுக்குப் பின் நிறைவேறியது. இஸ்ரவேல் நாட்டின் முதல் பிரதமா் டேவிட் பென்கூரியன், இஸ்ரயேல் நாட்டைப் பிரகடனப்படுத்திய போது எசே:37:1–23, எசா 43:5–7 ஆகிய வசனங்களை வைகளை வாசித்து, இந்த வேத வாக்கியங்களெல்லாம் நிறைவேறுகின்றன என்றார்.

**2. நம்பிக்கையின்மையின் நிதர்சன வெளிப்பாடு**

எபி.13:13– நிந்தை என்பது எப்படி ஏற்படுகிறது?

நம்பிக்கையின்மையால் பாதிக்கப்பட்டு சோர்ந்து போய் இருக்கிறவர்களின் நிலைமை அறிந்து கொண்டு, அவர்களது வாழ்க்கையிலே, கொஞ்சம் கூட நம்பிக்கை துளிர் விட்டு விடாமல் தடுப்பது போல 'உங்கள் நிலைமை இது தான்' என்று சொல்லுவதே 'நிந்தை' என்று சொல்லப்படுகிறது.

எபி 13–13–இல் கிறிஸ்துவினுடைய நிந்தை என்று சொல்லப்படுகிறது என்னவென்றால் ஆண்டவரை சிலுவையில் அறைய கொண்டுப் போகும் போதும் சரி, சிலுவையில் அறையப்பட்ட பின்பும் சரி 'சிலுவை தான் உமக்கு நிலைமை, இதிலிருந்து விடுதலையே கிடையாது' என்று அநேகர் நிந்தனை செய்தார்கள் திபா. 22:7, 8, மத. 27:39–44, Uôt 15:29—32 ஆகியவசனங்களில் நிந்தையின் கொடூரங்களைப் பார்க்கலாம்.

நிந்தையின் கொடூரத்தினாலே துளிர் விடுகின்ற கொஞ்ச நம்பிக்கையும் பட்டுப் போகும்.

எபிரேயர் நிருப ஆக்கியோன் எபி 13:13–இன் மூலமாகச் சொல்லுவதென்னவென்றால், கிறிஸ்து வெறும் மரச் சிலுவையை மட்டும் சுமந்து கொண்டு நகரத்திற்கு வெளியே போகவில்லை. மக்களின் பல நிந்தனைகளை சிலுவையாக சுமந்து கொண்டு போனார். ரோம நாட்டுச் சட்டத்தின் படி 'இழிவான சிலுவையை' ஒரு மனிதன் சுமக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டால், அவனைக் குறித்து மக்களெல்லாருடைய மனதிலும் பல நிந்தனையான சிந்தனைகள் உருவாகும். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு 'சிலுவை' என்ற நிலை ஏற்பட்டவுடனே அநேகருடைய 'நிந்தனை சிந்தனை' வெளிப்படுகிறது. இதை எருசலேம் தேவாலயத்திலே குழந்தை இயேசுவை கரத்திலேந்திய சிமியோன் அன்றே சொன்னார். (லூக் 2:34).

எபிரே நிருப ஆக்கியோன் எருசலேமிலே நிந்தைகளால் வேடிக்கையாக்கப்பட்ட ( எபி.10.33) கிறிஸ்தவர்களுக்கு, ஆண்டவருடைய நிந்தயைச் சுமந்து கொண்டு போவோம் என்கிறார். (எபி 13:13)

ஆண்டவருக்கு ஏற்பட்ட நிந்தை மிகக் கடுமையான நிந்தை. இதே நிந்தையை சுமந்து நடக்கும் எல்லாருக்கும் இந்த வார்த்தைகள் மிக ஆறுதலும் நம்பிக்கையும் அளிப்பவை.

கிறிஸ்துவின் உடைக்கப்பட்ட உடல் காயங்கள் துடைக்கப்பட்டு, உயிர்த்தெழுந்தது போல, நிந்தைகள், நம்பிக்கையின்மைகளால் துளைக்கப்படும் வாழ்க்கை புத்துயிர் பெறும்.

அருள்திரு. J. பிரகாஷ் நாயகம்



**04-01-2013** அனைத்துலக மன்றாட்டு வாரம் – நாள் 3

விப 1:15–22 திபா 17 : 1–6
2 கொரி 3:17–18 யோவா 4:4–26

## விடுதலையை நோக்கி நடத்தல்
## Walking Towards Freedom

ஆண்டவரின் ஆவியார் இருக்குமிடத்தில் விடுதலை உண்டு
(2 கொரி 3 : 17)

நடப்பதை போராட்ட முறையாக்கி, நடையின் மூலமாக விடுதலைக்கான ஒன்றிணைவையும், விடுதலைக்கான வலியுறுத்தலையும் முன்னெடுத்தவர் 1869 ஆம் ஆண்டு குஜராத், போர்பந்தரில் பிறந்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி உயர்நிலைப்பள்ளியில் படிக்கும்போதே நீண்ட தூரம் நடப்பது காந்திக்குப் பிடிக்கும் இலண்டனில் சட்டம் படித்துக் கொண்டிருந்த போது தினமும் 10 மைல்கள் நடப்பார். 'உடற்பயிற்சிகளின் இளவரசன் நடைபயிற்சி' என்று சொல்லுவார், 1930 ஆம் ஆண்டு சபர்மதி ஆசிரமத்தில் இருந்து தண்டி நோக்கி தனது 60 ஆவது வயதில் 241 மைல் தூரத்தை நடந்தே கடந்தார். இது விடுதலையை வலியுறுத்திய நடை பயணமாகும்.

விடுதலையின் விடியலை அனுபவிக்க கடவுளும், இஸ்ரயேல் மக்களை 40 ஆண்டும் வனாந்தரம் வழியாக பெரும் நடை பயணமாகவே நடத்தி வந்தார். ஆகவே 'நடை' என்பது ஒரு சிறந்த ஆன்மிக விடுதலை முறை 'நடை' 'நடத்தல்' என்பது வாழ்வியல் முறையையும் சுட்டிக் காட்டும் வார்த்தை ஆகும். 'நடை' என்ற கருத்தியல் பல சவால்களை நம் முன் வைக்கிறது.

ஆன்மிக வாழ்வின் உயர்நிலை விடுதலை ஆகும். ஆகவே பவுல் அடிகளார் கருத்தாளத்தோடு II கொரி 3:17–ஐ சொல்லுகிறார்.

ஆன்மிக வாழ்வின் உயர்நிலையான விடுதலையை அர்ப்பணமுள்ள பணிவாழ்வின் மூலமும் அடைய முடியும், அர்ப்பணமுள்ள ஆன்மிக வாழ்வின் மூலமும் அடைய முடியும்.

பணிவாழ்வு நடை மூலமாக எப்படி விடுதலையை அனுபவிக்க முடியும்? ஆன்மிக வாழ்வு நடை எப்படி விடுதலையை அனுபவிக்க முடியும் என்பதைத் தியானிப்போம்.

## 1. பணிவாழ்வு நடையும், விடுதலையும்

விப 1:15–21 வரையுள்ள பகுதியிலிருந்து தங்கள் 'பணிவாழ்வு நடையிலே' எபிரேய மத்துவச்சிகள் எப்படி உண்மையுடன் நடந்து கொண்டார்கள் என்பதைப் பார்க்கிறோம்.

மருத்துவப் பணி என்றாலே உயிர்காக்கும் உயரியபணி. எபிரேய மருத்துவச்சிகளுக்கும் அவர்களது பணி அறவியலுக்கு (Work Ethics) எதிராக ஆட்சி அதிகாரத்தால் ஒரு கட்டளை தரப்படுகிறது. விப 1:16

ஆட்சி அதிகாரத்தின் கட்டளைக்கு அடிபணிந்தால், உயிரோடிருக்கும் சகல நாள்களிலும் மனசாட்சி வாதைக்கு அடிமைப்பட வேண்டும். எந்தக் காலத்திலும் இந்த அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெற்று, விடுதலையை அனுபவிக்கவே முடியாமல் போய் விடும்.

பணிவாழ்விலே சூழ்நிலைகளின் நிர்ப்பந்தங்களுக்கு அடிமைப்பட்டு, ஆட்சி அதிகாரங்களின் அச்சுறுத்தலுக்கு அடிமைப்பட்டு 'விடுதலையை" அனுபவிக்க இயலாமல், குற்ற மனசாட்சியின் அடிமைத்தனத்திலிருந்து எப்படியாவது விடுதலை பெற்று விடத் துடித்து, பலரும் தங்கள் பணி வாழ்வின் அனுபங்களை ஒப்புதல் வாக்குமூலம் போல புத்தகமாக எழுதுவதை தற்போது அதிகம் பார்க்கிறோம்.

எபிரேய மருத்துவச்சிகள் தங்களுக்கு இப்படியொரு நிலைமை ஏற்படாமலிருக்க தங்களது பணிவாழ்வில் மிகவும் உண்மையோடு நடந்து கொண்டார்கள்.

'பணிவாழ்வு நடையிலே' எந்த மனவருத்தமும், மனசஞ்சலமுமில்லாமல் விடுதலையைத் திருப்தியாக அனுபவிக்க எபிரேய மருத்துவச்சிகளின் 'பணிவாழ்வு நடை' மிகச் சிறந்த உதாரணம் ஆகும்.

பணிவாழ்வு நடையிலே எபிரேய மருத்துவச்சிகள் உண்மையாய் நடந்து விடுதலையை அனுபவிக்க அவர்களுக்கு உதவிய உணர்வு, ஆண்டவருக்குப் பயப்படும் உணர்வு விப 1:21.

ஆண்டவருக்குப் பயப்படும் உணர்வை திப 4:19–இல் அப்போஸ்தலர்களான பேதுருவும், யோவானும் சொல்லுவதைப் பார்க்கிறோம். ஆட்சி அச்சுறுத்தலுக்கு அஞ்சாமல் இதை துணிந்து, நிமிர்ந்து சொல்லுகிறார்கள். இந்த வார்த்தைகளை நிமிர்ந்து சொல்லும் 'உள்ளான விடுதலையை' அனுபவித்தபடியால் இப்படி அப்போஸ்தலர்களால் சொல்ல முடிந்தது. ஆவியானவர் எங்கேயோ அங்கெல்லாம் இந்த விடுதலை உண்டு. எந்த அச்சுறுத்தல் மத்தியிலும் இந்த விடுதலையை அனுபவிக்க முடியும் என்பதை மத் 10:17–20, 28 இல் படிக்கிறோம்



## 2. ஆன்மிக வாழ்வு நடையும், விடுதலையும்:

யோவா 4:4–26 வரையுள்ள பகுதியில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஆன்மிக வாழ்வு நடையின் மூலமாக எப்படி விடுதலையை அனுபவிக்க முடியுமென்று சமாரியாப் பெண்ணோடு உரையாடுவதை வாசிக்கிறோம்.

ஆன்மிகம் என்பதை வேறு விதமாகச் சிந்தித்து வைத்திருந்த சமாரியப் பெண்ணுக்கு ஆன்மிகம் என்பது சமயம் சார்ந்தது அல்ல மனிதம் சார்ந்தது என்று ஆண்டவர் உணர்த்துகிறார். யோவா 4:8–இல் 'தாகத்திற்குத் தா' என்று கேட்கும் கேள்வியிலிருந்து அதை உணர்த்துகிறார்.

மனிதத்தோடு வாழும் போது ஆன்மிக விடுதலையை மனிதனால் உணர முடியும் என்பதே ஆண்டவர் சமாரியப் பெண்ணுக்குச் சொன்ன முக்கியமான உபதேசம்.

'இப்சஸ்' என்றொரு அமைப்பு உலகமெங்கும் மக்கள் பணத்தால் சந்தோஷமாக வாழுகிறார்களா என்றொரு ஆய்வை நடத்தியது. அதிலே கண்டறிந்த உண்மை என்னவென்றால் பணத்திற்கும் மகிழ்ச்சிக்கும், பணத்திற்கும் விடுதலைக்கும் சம்பந்தமே இல்லை. பணக்கார நாடுகளில் மக்கள் மகிழ்ச்சியில் ஏழைகளாகவே உள்ளார்கள் என்று கண்டுபிடித்துச் சொன்னார்கள்.

இந்த உலகத்திலே மனிதன் உலக அனுபவங்களைப் பெறவும், இன்பங்களை நுகரவும், ஐம்புலன்களைப் பயன்படுத்துகிறான். கண்களால் காட்சிகளையும், காதுகளால் சத்தங்களையும், மூக்கால் நுகர்வையும், நாக்கால் சுவையையும், தொடுதலால் உணர்வுகளையும் அனுபவிக்கிறான்.

ஆனால் ஆண்டவர் ஆன்மிக வாழ்வு நடைக்கு முக்கியமான தேவையாகச் சொல்லுவது நமது கண்களுக்குப் புலப்படாத புலன், அது தான் 'மனம்' அல்லது இருதயம். யோவா 4:41–ல் ஆண்டவர் சொல்லுவதும் 'மனம்' என்னும் கண்ணிற்குப் புலப்படாத புலனால் உணர்வதைத் தான் அது தான் ஆன்மிக விடுதலைக்கும், நித்திய மகிழ்ச்சிக்கும் மனிதனைக் கொண்டு செல்லும் என்பது ஆண்டவரது கருத்து யோவா 4:13,14–இல் இதை ஆண்டவர் தெளிவாகச் சொல்லுவதைப் பார்க்கலாம்.

ஆன்மிக விடுதலைக்காக ஆண்டவர் சொல்லும் இன்னொரு ஆலோசனை – யோவா 4:21 "எங்கெங்கும் தந்தையைத் தொழுது கொள்ளும் காலம் "அதாவது என் இடம் என் மக்கள் என்ற குறுகிய பார்வையிலிருந்து விடுதலை பெற்று எங்கும் "யாவரும்" என்ற பரந்த நோக்கை அடைவது ஆன்மிக விடுதலை நடை ஆகும் என்கிறார் ஆண்டவர்.

நம்முடைய "பணிவாழ்வு நடையும்" ஆன்மீக வாழ்வு நடையும் இந்த அடிப்படைகளில் இருந்தால் நிச்சயம் ஆன்மிகத்தின் உயர்நிலையான "விடுதலையைப்" பெற முடியும்.

**05-01-2013** அனைத்துலக மன்றாட்டு வாரம் – நாள் 4

லேவி 25 : 8 – 17. திபா 65 : 5–13
உரோ 8 : 18 – 25. மத் 5 : 1 – 11.

## கடவுளின் பிள்ளைகளாய் நடத்தல்
## Walking as Children of God

கனிவுடையோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர். (மத் 5 : 5)

உலகத்திலே மிகவும் மதிப்புள்ள பொருளாக இருப்பது 'வைரம்'. அதே நேரம் உலகத்திலே மிகவும் கடினமான பொருள் என்றால் அதுவும் வைரம் தான். வைரங்களை அதிகமாக வைத்திருப்பவர்கள் நிச்சயமாகக் கோடீஸ்வரர்களாக இருப்பார்கள் என்பதிலே எந்த ஐயமும் கிடையாது. பொருளாதார அளவுகோலின்படி 'வைரம்' செல்வத்தின் அடையாளம். அறவியல் அளவுகோலின்படி [Ethical Yardstick] 'வைரம்' பொறுமையின் அடையாளம்.

பூமிக்கடியில் இருக்கும் carbon என்ற மூலகமே, தனது பொறுமையால் 'வைரமாக' மாறுகிறது. carbon–னின் படிக உருவமே [Crystalline Form] 'வைரம்.'

நிலத்தின் அடியிலுள்ள'மரங்களின் கரி' [Graphite], பூமிக்கடியிலிருந்தே எரிந்து, பூமியினாலும் அழுத்தப்பட்டு, அழுத்தப்பட்டு இறுதியாக 'வைரமாக' நமக்குக் கிடைக்கிறது. அதன் பொறுமையே 'வைரமாக' மாற்றுகிறது.

பொறுமையாக இருக்கும் போது இந்தப் பூமியையே சொத்தாக்கிக் கொள்ளலாம் என்று ஆண்டவர் மத் 5: 5 இல் சொல்லுகிறார்.

'வைரம்' அற ஒழுக்கவியல் அறிஞர்களால் பொறுமைக்கு அடையாளமாக்கப்பட்டது போல, கடவுளின் பிள்ளைகளாக வாழ, கடவுளின் பிள்ளைகளுக்கென்று, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மத் 5 : 1 – 11 வரை சில அடையாளங்களைச் சொல்லுகிறார்.

அந்த அடையாளங்களைக் குறித்துச் சிந்திப்போம்.

1. ஆவியில் எளிமை
2. சாந்தகுணம்
3. ¿§ « u úUp T£ RôLm
4. இரக்கம்
5. இருதயத்தில் சுத்தம்

**1. இறையரசின் இழப்பைத் தடுக்க.....**

இன்றைக்குப் பார்வை இழப்பு மிகப்பெரிய பிரச்சனை. பார்வை இழப்பைத் தடுக்க ஒரே ஒரு ஊசி போதும் என்று இங்கிலாந்து விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். Dr. Oliver Backhouse என்ற விஞ்ஞான ஆராய்ச்சி மருத்துவர் ஊசி மூலம் கண்களிலே Steroid என்ற மருந்தைச் செலுத்தி, அதைக் கண்களுக்குப் பின்னால் இடம்பெயரச் செய்து விட்டால், பார்வையிழப்பை ஏற்படுத்தக்கூடிய கண் நரம்புகளின் அடைப்பை அது தடுக்கும். அதனால் பார்வையிழப்பு ஏற்படாது; விழித்திரை அருகே ஏற்படும் எரிச்சல் காரணமாக 'பார்வையிழப்பு' ஏற்படுவதையும் இது தடுக்கும் என்று கண்டுபிடித்துள்ளார். Diabetes காரணமாகவும், வயது காரணமாகவும் ஏற்படும் பார்வை இழப்பையும் இந்த ஒரே ஊசி மருந்து தடுக்கும். ஆனால் இந்த ஒரே ஊசி மருந்து சிகிச்சைக்கு ஆகும் செலவு 1.44 இலட்சம் ரூபாய்.

பார்வை இழப்பைத் தடுக்க பல லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும். ஆனால் இறையரசின் இழப்பைத் தடுக்க எத்தனை இலட்ச ரூபாயும் செலவு செய்ய வேண்டியதில்லை. ஆனால் மத் 5:1–11 வரையுள்ள பகுதியிலே ஆண்டவர் சொல்லியிருக்கிற சில காரியங்களை இலட்சியமாகக் கொண்டு வாழ வேண்டும்.

**1 ஆவியில் எளிமை.**

இது முதல் இலட்சியமாக இருக்க வேண்டும். கிறிஸ்தவ தவ வாழ்வின் முதல் படியே 'ஆவியில் எளிமை' தான். (கிறிஸ்தவம் = கிறிஸ்து + தவம்)

சஉ 3:21 "மனிதரின் உயிர் மூச்சு மேலே போகிறது என்றும் விலங்குகளின் உயிர் மூச்சு கீழே தரைக்குள் இறங்குகிறது என்றும் யாரால் சொல்ல இயலும்?" என்ற மிக முக்கியமான கேள்வியை ஞானி சாலமோன் கேட்கிறார்.

நான் யார்? என்ற தத்துவார்த்த விசாரணையை மனிதன் தன் ஆவியைக் குறித்து நிகழ்த்த வேண்டும். 'ஆவி' ஆண்டவருடையது; மனித உடல் உருவாக்கப்பட்ட மண்ணிற்கே திரும்பும் என்று சஉ 12:7–இல் ஞானி சொல்லுகிறார். நமக்குப் பூமியில் சூட்டப்பட்டுள்ள பெயர், பல மனிதர்கள் இருப்பதால், நம்மை அடையாளப்படுத்த சூட்டப்பட்டுள்ளது.

வாழ்விலிருந்து 'நான்' நீங்கி, 'நான்' எனக்கே சொந்தமானவனல்ல; என் ஆவி, ஆண்டவருடையது, எனது உடல் மண்ணுக்குரியது என்ற ஞான எண்ணத்தை மனிதன் அடைவதே அவியில் எளிமை என்ற ஞான நிலை.

**2. சாந்தம்.**

சாந்தத்தை Power Under Control 'கட்டுப்பாட்டிலுள்ள சக்தி' என்று தான் குறிப்பிடுவார்கள். மின்சக்தியை உண்டாக்கும் இயந்திரத்தை Dynamo (or) Generator என்று சொல்லுவார்கள். இந்த இயந்திரத்திலே பெரியதும் சக்தி வாய்ந்ததுமான காந்தம் இருக்கும். இந்தப் பெரிய காந்தத்தை Field Magnet என்பார்கள். தமிழிலே 'புலக் காந்தம்' என்று அழைக்கப்படுகிறது. இந்தக் காந்தத்தின் இரண்டு முனைகளுக்கு இடையே சதுரமான வடிவிலே செம்புக் கம்பி சுற்றப்பட்டிருக்கும். இந்தச் சதுர வடிவிலான செம்புக் கம்பி சுழலும் போது 'மின்சாரம்' உண்டாகிறது.

இந்தச் சதுர செம்புக் கம்பியைச் சுழலச் செய்ய இரண்டு முறைகளைக் கடைப்பிடிக்கிறார்கள். முதல் முறையின்படி பெரிய ஆறுகளின் நடுவே அணைகளைக் கட்டி தண்ணீரைத் தேக்கி, தேக்கிய தண்ணீரை உயரமான இடத்திலிருந்து கீழே விழச் செய்கிறார்கள். கீழே இந்தப் பெரிய காந்தம் அடங்கிய செம்புக் கம்பிச் சுருள் அடங்கிய Turbine மீது தண்ணீர் மேலிருந்து விழுந்து, அதை சுழலச் செய்கிறது. இதனால் மின்சாரம் உருவாகிறது. இதை நீர் மின் நிலையங்கள் [Hydro Power Plant] என்கிறார்கள்.

இரண்டாவது முறையின்படி, நிலக்கரியை எரித்து, நீரைக் கொதிக்க வைத்து கிடைக்கும் நீராவியைக் கொண்டு Turbine (காந்தமும் செம்புக் கம்பி சுருளும் அடங்கியது) சுழன்று, மின்சாரம் உருவாகிறது. இதை அனல் மின் நிலையம் [Thermal Power Plant] என்கிறார்கள்.

ஆண்டவருடைய பிள்ளைகள் தங்களுக்கு ஆண்டவர் தந்திருக்கிற சக்திகளைப் பலரும் பயனடைகின்ற வகையிலே முறையான கட்டுப்பாடுகளின் அடிப்படையிலே செயல்பட செய்யும் போது, அதுவே 'சாந்தம்' ஆகிறது. இந்த 'சாந்தம்' பூமியையே சதந்தரிக்கச் செய்யும்.

**3. இருதயத்தில் சுத்தம்**

வாழ்க்கையிலே பெருங்கோபம், கர்வம், பெருஞ்சிரிப்பு, புகழ் இது போன்ற உணர்ச்சிகளுக்கு ஆட்படும்போதெல்லாம், ஒவ்வொருவரின் இருதயமும் அசுத்தமடைகிறது. தன் இயல்பு நிலையிலிருந்து மனிதன் ஒரு திரிபு நிலைக்குப் போய் விடுகிறான். இதை Psychosis என்பார்கள் மனவியல் நிபுணர்கள்.

இந்தத் திரிபு நிலையிலிருந்து இறங்கி, மனதைத் திருத்தினால் 'மனம்' 'இருதயம்' சுத்தமடையும். இல்லாவிட்டால் அசுத்த நிலையிலேயே இருக்கும்.

நமது இருதயம் சுத்தமடைய வேண்டும். திபா 32:2 சொல்லுகிறபடி, எவனுடைய ஆவியில் கபடம் இல்லாதிருக்கிறதோ அவன் தான் பாக்கியவான்.



அனைத்துலக மன்றாட்டு வாரம்

ரூத் 4 : 13 – 18 திபா 113
எபே 2 : 13 – 16. மத் 15 : 21 – 28.

## தடைகளைத் தாண்டி நடத்தல்
## Walking Beyond Barriers

... தங்கள் உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறுதுண்டுகளை நாய்க்குட்டிகள் தின்னுமே. (மத் 15 : 27)

உலகத்திலே மக்கள் முன்னேற முடியாதபடி, இணக்கமாக வாழ முடியாதபடி இருப்பவை மனிதரால் ஏற்படுத்தப்படும் தடைகள். நிலப்பரப்பிலே எல்லைக்குறி நாட்டி, எல்லைகளை வகுத்து தடைகளை ஏற்படுத்துவார்கள்; சட்டம், சமுதாய சம்பிரதாயம், ஜாதி, மதம் என்ற பெயரிலே தடைகளை ஏற்படுத்துவார்கள்.

இந்தியாவையும், பாகிஸ்தானையும் நிலப்பரப்பின் அடிப்படையிலே பிரிக்கின்ற பணியிலே ஈடுபட்டிருந்த இந்திய – பாகிஸ்தான் எல்லைக் கமி"ன் தலைவர் Justice. Cyril Redcliff மிகவும் கஷ்டப்பட்டார். எல்லை கமி"னிலே 4 உறுப்பினர்கள் இருந்தார்கள். மெகர்சந்த் மகாஜன், தேஜாசிங் ஆகியோர் இந்தியர்கள். தீன்முகமது, முகமது முனீர் ஆகியோர் பாகிஸ்தானியர். இந்திய உறுப்பினர்கள் இந்தியாவுக்கு அதிக பகுதி வேண்டுமென்றும், பாகிஸ்தான் உறுப்பினர்கள், பாகிஸ்தானுக்கு அதிக பகுதி வேண்டுமென்றும் வாதாடி, எல்லைகளை வகுக்க முடியாதபடி தடைகளை ஏற்படுத்தினார்கள்.

இதனால் உண்மை நிலையை ஆராய்ந்து எல்லைகளை வகுப்பது Cyril Redcliff–க்கு மிக சவாலான பணியாக இருந்தது. அரும்பாடுபட்டு இந்திய பாகிஸ்தா ன் எல்லைகளை நிர்ணயம் பண்ணி தந்திருக்கிறார்.

எல்லைகளை வகுத்து பணி செய்வதை ஆண்டவர் விரும்புபவரல்ல என்பது தான் அவரது சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் மூலம் நமக்குக் கிடைக்கும் நற்செய்தி என்று எபே 2:13–16–இல் பவுல் சொல்லுகிறார்.

எல்லைகள் வகுப்பது தொல்லைகளைத் தான் பெருகப் பண்ணும் என்பதும், அன்பிற்கு எல்லைகள் கிடையாது என்பதும் ஆண்டவருக்குத் தெரியும்.

கானானியப் பெண்ணுடனான உரையாடல் மூலமாக, மக்கள் தங்களுக்குள்ளாக ஏற்படுத்திக் கொள்ளும் கடினமான எல்லைகளைக் குறித்தே ஆண்டவர் பிரதிபலிக்கிறார்.

**1. ஆடுகளும் நாய்களும்.**

மத் 15:24 "காணமற் போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டார்..." ஆண்டவர் இயேசு கிறிஸ்து இப்படிச் சொல்லுவது இஸ்ரயேல் மக்களுடைய பொதுவான எண்ணத்தையே பிரதிபலிக்கிறது.

இஸ்ரயேல் மக்கள் தங்களை'ஆடுகள்' என்றும், ஏனையோரை 'நாய்கள்' என்றும் தான் சொன்னார்கள்.

இயல்பிலேயே ஆடுகள் மிக சுத்தமான பிராணிகள். அவைகளுக்கென்று சாத்வீகமான உணவுப் பழக்கமே உண்டு. எதையும் உண்ணாது; இலை, தளைகளையும் கவனமாகக் கவனித்தே உண்ணும். ஆகவே உலகிலே மிகச் சுத்தமான, கூட்டமாக வாழும் ஆடுகளுக்குத் தங்களை ஒப்பிட்டார்கள்.

மற்றவர்களை 'நாய்கள்' என்று ஒப்பிடுகின்றார்களென்றால் அதற்குக் காரணம், சுத்தமற்ற வாழ்க்கை மேற்கொள்ளுவதினால் தான். II பேது 2:22– இல் பேதுரு அப்போஸ்தலனும் இந்த ஒப்பீட்டைச் செய்கிறார். 'நாய்' எந்தளவிற்கு அசுத்தமானது என்பதைக் கோடிட்டுக் காட்ட, நாய் தான் கக்கினதையே திரும்பத் தின்னும் என்பதை உதாரணமாக காட்டுகிறார்.

'நாய்கள்' என்ற அடையாளத்தில் இஸ்ரயேல் மக்களால் சுட்டிக் காட்டப்பட்ட கானானிய இன பெண்ணிடம் ஆண்டவர் இந்த எதார்த்தங்களை, மனிதத் தடைகளைச் சுட்டிக்காட்டிப் பேசுகிறார்.

**2. தடை தாண்டிய கானானியப் பெண்.**

மத் 15:27 ஆண்டவர் அனைவருக்கும் பொதுவானவர் என்பதையே கானானியப் பெண் இந்தக் கூற்று [Statement] மூலம் வெளிப்படுத்துகின்றார். நதி போன்று பாய்ந்து வரும் ஆண்டவரின் கிருபையை, நீதியை 'இஸ்ரயேல்' என்னும் மக்கள் மட்டும் அணைபோட்டு நிறுத்த முடியாது என்பதைக் கானானியப் பெண் அழகாகச் சொல்லுகிறார்.

தமிழ் இலக்கியத்திலே ஒரு பழமையான பாடல் ஒன்று உண்டு. அது, நெல்லிற்கு விடும் நீர் வாய்க்கால் வழியாகப் பாய்ந்து புல்லிற்கும் கிடைக்குமாம் என்ற உவமைப் பாடல். இஸ்ரயேல் மக்கள் நெல் போன்று இருந்தாலும், ஆண்டவரின் அருள் வாய்க்கால் வழியாகப் பாய்ந்து 'புல்' போன்ற புறஜாதியாருக்கும் கிடைக்குமென்பதைக் கானானியப் பெண் தன் விசுவாசம் மூலம் வெளிப்படுத்தினாள்.

ஆகவே ஆண்டவர், இந்த விசுவாசத்தைப் 'பெரிய விசுவாசம்' என்றார் – மத் 15:28. நமக்கு மட்டும் என்று நினைப்பது குறுகிய விசுவாசம்; 'அனைவருக்கும்' என்று நினைப்பது பெருகிய விசுவாசம். விசுவாச விதையைக் குறுகிய கால சாகுபடியாளர்களாக சாகுபடி செய்தல்கூடாது.

விசுவாசத்தைப் பயிரிடும் விவசாயிகள் நாம். [We are Agrarians of faith]. ஆசீர்வாதம் என்னும் பாசன நீருக்கு அனைவரும் பாத்தியப்பட்டவர்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். [All are Riparian's to receive His blessings from the channels of blessing].

கானானியப் பெண்ணின் விசுவாசத்தைப் பெரிய விசுவாசம் என்று ஆண்டவர் மெச்சிக் கொள்ளக் காரணம் ஆண்டவருடைய மவுனத்தில் உள்ள வார்த்தைகளையும், ஆண்டவருடைய கோபத்தில் உள்ள அன்பையும் அவரால் தான் உணரமுடிந்தது.



# சிறப்பு நாட்களுக்கான அருளுரைகள்

| 26-01-2013 | குடியரசு நாள் |
|---|---|

எரே. 1 : 1-10 — 2திமொ. 2 : 1-7
திபா. 85 — மத். 6 : 19-34

# தேசிய ஒருமைப்பாடு
## National Integration

"பேரன்பும், உண்மையும் ஒன்றையொன்று சந்திக்கும்; நீதியும் நிறைவாழ்வும் ஒன்றையொன்று முத்தமிடும்" (திபா. 85 : 10)

1950-ஆம் ஆண்டு ஜனவரி 26-ஆம் நாள் தான் இந்தியாவில் குடியாட்சி மலர்ந்தது. இந்திய நாட்டில் பல்வேறுபட்ட இனம், மொழி, சமயம், கலாச்சாரம், பண்பாடுகள் இருந்தாலும், தேசிய ஒருமைப்பாட்டை எப்படி வளர்த்துக் கொள்ளலாம் என்பதைத் திருமறையின் வழியாகச் சிந்தனை செய்வோம்.

### 1. ஆன்மிகமும், ஒருமைப்பாடும்

கண்ணியம் நிறைந்த வாழ்க்கையும், கடவுள் பக்தியும் ஒருமைப்பாட்டைக் கொண்டு வரும் எனத் தூய பவுலார் குறிப்பிடுகின்றார் (1 திமொ. 2 : 2). ஆண்டவரின் கோயில் பாகுபாடுகளைக் களைந்து, எல்லாரையும் ஒன்றிணைக்கின்றதாகவும், நல் வழிகளைக் காண்பித்து நெறிமுறைகளைக் கற்றுத்தரும் திருச்சட்டமாகவும், அமையப் பெறுகிறது (எசா. 2 : 3). கடவுளோடு இணைந்த வாழ்க்கை, கடவுளுக்கு ஏற்புடைய வாழ்க்கை மண்ணுலகில் ஒருமைப்பாட்டை உருவாக்குவதோடு மட்டுமின்றி விண்ணுலகின் ஒன்றிணைவுக்கும் வழிவகை செய்யும் என்பதை மத். 6 : 19-34இல் படிக்க முடிகின்றது.

### 2. அமைதியும், ஒருமைப்பாடும்

வன்முறைகளைக் களைந்து அமைதியாக வாழ்கின்ற வாழ்க்கை ஒருமைப்பாட்டை உருவாக்கும்; தீவிரவாதமும், ஆயுதமும் அமைதிக்கேட்டைக் கொண்டுவரும். மகாத்மா காந்தியடிகள் சுதந்திரத்திற்காகப் போராடுகின்றபோது அமைதி வழியை விரும்பினார்.





அமைதி உருவாகும் (தி.பா. 85 : 10). போர் ஆயுதங்கள், வாழ்வாதார ஆயுதங்களாக மாற்றப்பட்டு வழக்குகள் தீர்ந்து அமைதி உருவாகும் (ஏசா. 2 ; 4). நன்மையை நாடவும், தீமையைத் தேடாதிருக்கவும் வேண்டுமென இறைவாக்கினர் ஆமோஸ் அறைகூவல் விடுக்கிறார் (ஆமோஸ் 5 : 14). அமைதியின் அடையாளமாகத் தாழ்மையின் அரசனாக வேற்றுமைகளை வேரோடு அறுத்து, ஒருமைப்பாட்டை உருவாக்குபவர் வரப்போகிற அரசர் என்று இயேசு கிறிஸ்துவைக் குறித்து இறைவாக்கினர் உரைக்கிறார் (செக். 9:9)

### 3. அன்பும், ஒருமைப்பாடும்

இயேசுகிறிஸ்துவின் அன்பைக் குறித்து தூய பவுலார் சொல்லுகிறார் அனைவருடைய மீட்புக்காகவும், ஒருமைப்பாட்டுக்காவும் தம்மையே தியாகப் பலியாக ஒப்புக் கொடுத்தார் (1 திமொ. 2 : 6). அன்பு இல்லாதவர்கள் தங்கள் உள்ளத்தில் தீயனவற்றைத் திட்டமிடுகின்றனர். நாள்தோறும், சண்டைச் சச்சரவுகளைக் கிளப்பிவிட்டு ஒருமைப்பாட்டுக்குக் கேடு உண்டாக்குகின்றனர். "உன் மீது அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்தவர் மீதும் அன்பு கூர்வாயாக" (உரோ. 13 : 10).

அன்பு ஒருமைப்பாட்டை உருவாக்கும் என்பது திருமறை நமக்குக் கற்றுத்தரும் பாடமாகும். நம் நாடு குடியுரிமை பெற்று ஆண்டுகள் ஆனாலும் உண்மையான ஒருமைப்பாடு ஏற்பட்டிருக்கின்றதா? கிறிஸ்தவர்களாக, இயேசுவின் போதனைகளை உள்வாங்கி பிரதிபலிக்கும்போது நாம் ஒவ்வொருவரும் பொறுப்புள்ள குடிமக்களாக வாழ முடியும்.

**திரு. R. ஸ்டேன்லி நேசராஜ்**

| 17-03-2013 | HMS Sunday |
|---|---|

இ.ச. 7 : 1-7 எபேசியர் 4 : 17-32
தி.பா. : 132 மத். 15 : 21-28

# சுதேச அருட்பணி சங்க நாள்
# (Home Missionary Society Day)

"உங்களையே தம் சொந்த மக்களாக கடவுளாகிய ஆண்டவர் தேர்ந்து கொண்டார்" (இச. 7 : 6)

டேவிட் போஸ், "நற்செய்தி அறிவிப்பது திருச்சபையின் பணியல்ல. மாறாக திருச்சபையின் செயல்பணியே நற்செய்தி" என்றார். இதையுணர்ந்து பலர் உலகெங்கும் நற்செய்தியைப் பரப்பி வருகின்றனர். அந்நற்செய்தி தென்திருவிதாங்கூரிலும் வந்தது. ஆரம்பகால இறைப்பணி கடலோர பகுதியைச் சார்ந்து இருந்ததால் உள்ளூர் பகுதிகளில் அருட்பணி பரவவில்லை. திருச்சபை கட்டப்பட்ட பகுதிகளில் ஆரம்ப பள்ளிகளும், இரவுப் பள்ளிகளும், மருத்துவமனைகளும் நிறுவப்பட்டன. திருச்சபைகள் ஆன்மிகத்திலும், ஒழுக்கத்திலும், நாகரிகத்திலும் நல்முயற்சிகளிலும் ஒன்றுபட்டு வளர்ச்சியடைந்தன. எனவே திருச்சபைகளை நிர்வகிக்க கி.பி. 1874-இல் தென்திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்கம் உருவாக்கப்பட்டது. இது பின்னர் கி.பி. 1899-ஆம் ஆண்டு முதல் தென்திருவிதாங்கோடு சுதேச மிஷனெறிச் சங்கம் என்னும் அமைப்பாய் மாற்றம் பெற்றது. இச்சங்கம் நம்முடைய மாவட்டத்தைச் சார்ந்த கிராமங்களில் இறைப்பணியாற்றி, திருச்சபைகளை நிறுவி, நமது பேராயத்திற்கு ஒப்படைத்து வருகிறது. நமது தியானப் பகுதியில் இஸ்ரயேல் மக்கள் வாக்குறுதி செய்யப்பட்ட நிலத்திற்குக் கடந்து சென்றபோது மோசே மக்களுக்குக் கொடுத்த செய்தி தான், ஆண்டவர் தேர்ந்து கொண்டார் என்பதாகும்.

இறைவன் உண்மையிலே தம் மக்கள் மீது அன்பைப் பொழிகிறார். (இ.ச. 7 : 7) அவருடைய அன்பு எப்படிப்பட்டதென்று எரேமியா 31 : 3, ரோமர் 5 : 8, யோவான் 3 : 16 ஆகிய திருமறைப் பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இ.ச. 7 : 6-இல் "தேர்ந்து கொண்டார்" என்றும் எபேசியர் 1 : 4இல் உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார் என்றும் இ.ச. 7 : 7இல், "சொற்பமானவர்களைத் தெரிந்தெடுத்தார் என்றும்





சொல்லப்பட்டுள்ளது. சுதேச மிஷனெறி சங்கமும் கடவுளால் தேர்ந்து கொண்ட இயக்கமாக அருட்பணியாற்றுகிறது.

நம்மை விரும்புகின்ற ஆண்டவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார். இழந்துபோன நம்மைத் தேடுகின்ற நல் ஆயர். யோவான் 6 : 44 இறை இயேசுவில் இணைந்த வாழ்வு தேவை. அப்படி இருந்தால் இறுதி நாளில் உயிர்த்தெழுதல் உண்டு. இ.ச. 7 : 6இல் ஆண்டவரின் மக்களிடம் நீங்கள், தூய மக்களினம் என்று உயர்த்துகிறார். ஏனெனில் எபேசியர் 2 : 1-இல் அக்கிரமத்திலும், பாவங்களிலும், வாழ்ந்த நம்மை சிலுவையின் மூலம் உயிர்ப்பித்தார். என்கிறார் பவுலார். சுதேச மிஷனெறிச் சங்கமும் வாழ்வில் நெறிதவறி நடக்கின்ற மக்களுக்கு ஆண்டவரைப் போதிக்கிறது. அவர் வழியில் நடத்துகிறது.

மனுமைந்தனாகிய கிறிஸ்து வழியாகத் தம்முடைய உறுதியை வெளிப்படுத்துகிறார். அவருடைய உண்மை அளவிட முடியாது. (திபா. 36 : 5). உண்மை வீழ்ந்து போகாதது (திபா. 89:33).

உண்மையுள்ள ஆண்டவர் தம் மக்கள் மேல் அன்பு வைக்கிறார். தம் மைந்தரைத் தந்து அன்பு கூர்ந்தார். இதை ஏற்றுக்கொண்டு இறைப்பணியை உண்மையோடு ஊக்கத்தோடு நிறைவேற்றுவோம். இறையரசை விரிவாக்குவோம்.

**திரு. செ. ஜாண் வினோ ராஜ்**

| 15-08-2013 | இந்திய விடுதலை நாள் |
|---|---|

விப. 15 : 1-8 தி.ப. 15 : 1-21
திபா. 69 : 30-36 யோவா. 8 : 31-36

# மக்கள் ஆளுகை
# DEMOCRACY

ஆண்டவருடைய அடியாரின் மரபினர் அதைத் தம் உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்; திபா. 69 : 36

மக்கள் ஆளுகை என்னும் சொல்லிற்கு சென்னை பல்கலைக்கழக சொற்களஞ்சியம் -ஆட்சி அரசியல் முறையில் மக்கள் உரிமை பெற வகுப்பு" எனும் விளக்கம் கொடுக்கப்படுகிறது. ஆளுகை எனும் சொல்லுக்கு நெறிப்படுத்துதல், வழிநடத்துதல் எனும் சொல் விளக்கம் சொல்லப்படுகிறது. திருமறை அடிப்படையில் பார்க்கும்போது மனிதனை உருவாக்கிய கடவுள் ஏதேன் தோட்டத்தை ஆளும் பொறுப்பை மனிதனுக்கே கொடுத்தார் (தொ.நூ. 2 : 15). "ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும், பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார்" என அறிந்து கொள்ளலாம். மட்டுமல்ல இறைவாக்கினர் மூலமாகவும் நீதித் தலைவர்கள் மூலமாகவும் கடவுள் மக்களை வழிநடத்தினார். இச்சூழலில் இஸ்ரயேல் மக்கள் தங்களுக்கென ஓர் அரசரை நியமிக்க சாமுவேல் இறைவாக்கினரிடம் முறையிட்டனர் (1 சாமு. 3 : 5). இது கடவுளின் ஆளுகைக்கு எதிராயிருந்தது. தம் மக்களைத் தம்முடைய திட்டப்படி ஆளுகை செய்ய இறைவாக்கினர்களையும் நீதித் தலைவர்களையும் தவிர்த்து அரசரை விரும்பியதால் "நான் ஆளாதபடி என்னைத்தான் புறக்கணித்து விட்டனர்" என்று 1 சாமு. 8 : 7-இல் குறிப்பிடுகிறார். அதுமட்டுமன்றி அரசாட்சியின் தீமை குறித்து 1 சாமு. 8 : 11-18-இல் விவரிக்கிறார். அதனை மறுத்து அரசனைக் கேட்ட மக்களுக்கு அரசாளுகை கொடுக்கப்பட்டது. ஆனால் மக்கள் தொடர்ந்து இன்னல்களையே சந்தித்து வந்தனர். இறையாட்சி இம்மண்ணில் விளங்கத்தடையாய் அரசாட்சி மாறியது. அரசன் கடவுளாய் மாறினான். சிலைகள் வடிக்கப்பட்டன. உருவ வழிபாடு துவங்கியது. பிற தெய்வ வணக்கம் உருவாயின. பல்சமய வழிபாடுகளுக்கும், கோட்பாடுகளுக்கும் மக்கள் தள்ளப்பட்டனர். மக்களிடம் இருந்த



விசுவாசம் குன்றிப்போயிற்று. இந்நிலைகள் அகற்றப்படுமாயின் இறைத்திட்டம் மக்கள் ஆளுகையினூடாக வெளிப்பட வேண்டும்.

**1. ஆற்றல் தரும் ஆளுகை** (விப. 15 : 1-10)

இஸ்ரயேல் ஜனங்கள் பார்வோனின் கரங்களில் அடிமைப்பட்டு வாழ வழியின்றி ஒவ்வொரு நாளும் தங்கள் ஆற்றலை இழந்து இறை சமூகத்தை நோக்கிக் கதறினர் (வி.ப. 3 : 6-8). இந்தச் சத்தம் கடவுளின் சமூகத்தை எட்டிற்று. எனவே கடவுள் மோசேயை ஆற்றல் படுத்துகிறார். அரசனுக்கு எதிராய் ஆற்றல் பெற்றெழுந்த மக்கள் ஆளுகைத் தலைவன் எனும் நிலைப்பாட்டுடன் தன் பணியைத் தொடங்கினார். "எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன். அடிமை வேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் குரலையும் கேட்டேன். ஆம். அவர்களின் துயரங்களை அறிவேன்" (வி.ப. 3 : 7) என மக்கள் நிலையறிந்து மக்கள் ஆளுகை செய்ய ஆற்றல்படுத்தப்பட்ட மோசே தம் மக்களோடு இணைந்து இறையாற்றலால் பெற்று கொண்ட ஆளுகையைப் புகழ்ந்து பாடுகிறார்.

ஆண்டவரே என் ஆற்றல், என் பாடல், அவரே என் விடுதலை, என் கடவுள் அவரை நான் புகழ்ந்தேத்துவேன், என இறையாற்றலை புகழ்ந்து பாடி இறையாற்றலால் தாம் செய்த வியத்தகு செயல்களை விளக்கி நிற்கிறார். இறைத்திட்டம் மக்கள் ஆளுகை வழியாக நிறைவேற்றப்படுகிறது என்பதை இப்பகுதி நமக்கு விளக்குகிறது.

**2. அடிமைத்துவத்தை அகற்றும் ஆளுகை** (திப. 15 : 1-11)

மக்கள் ஆளுகையில் சமூக, சமய, பொருளாதார அடிமை நிலைகள் அகற்றப்பட வேண்டும் என்பது தான் இறைத்திட்டமாக அமைகிறது. விருத்தசேதனம் செய்து கொள்ளாவிட்டால் மீட்படைய முடியாது எனும் சமய அடிமைத்தன நிலைப்பாட்டை சிலர் கூறி சமயப் பழக்க வழக்கத்திற்கும் இறைமீட்புக்குமிடையே பாலம் அமைத்தனர். பவுலும், பர்னபாவும் இதனை எதிர்த்தனர். இதற்கு பேதுரு அழகியதொரு விளக்கத்தைக் கொடுத்து பாரம்பரிய சமய அடிமைத் தனத்திலிருந்து இறைமக்களை (தி.ப. 15 : 9. 11) விடுவிக்க முயல்கிறார். "உள்ளங்களை அறியும் கடவுள் நமக்குத் தூய ஆவியைக் கொடுத்தது போல் அவர்களுக்கும் கொடுத்து அவர்களை ஏற்று கொண்டார். நம்பிக்கையால் அவர்களுடைய உள்ளங்களைத் தூய்மைப்படுத்தினார். ஆண்டவர் இயேசுவின் அருளால் நாம் மீட்பு பெறுவது போலவே அவர்களும் மீட்பு பெறுகிறார்கள் என நம்புகிறோம் என்று

"கத்தியின்றி, இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது" நீதி நிலைநாட்டப்படுகின்றபோது, அநீதி ஒழிந்து பாகுபாடுகள் மறைந்து அடிமைத்தனத்தை அகற்றி இறை ஆளுகை இம்மண்ணில் மலர்வதற்குத் துணை செய்து நிற்கின்றனர்.

**3. அன்பை அடிப்படையாகக் கொண்ட ஆளுகை** (யோவா. 8 : 31-36)

கிறிஸ்து இயேசு இம்மண்ணில் வெளிக்காட்டிய மக்கள் ஆளுகை அன்பை அடிப்படையாகக் கொண்டது. எனவே இயேசுகிறிஸ்து தம்மை நம்பிய யூதர்களை நோக்கி "என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள் என்றார்" (யோவா. 8:31). அதுமட்டுமின்றி மக்களாளுகைத் தலைவனாய் இருக்க விரும்புகிறவன் எல்லாரிலும் கடைநிலையாளனாய் இருக்க வேண்டும் என்றும் (லூக். 6 : 23) ஒரு கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு என்றும் யாக். 2 : 8-இல் உன் மீது நீ அன்பு கூருவது போல் உனக்கடுத்திருப்பவர் மீதும் அன்பு கூருவாயாக என்றும் எபே. 6 : 24-இல் அழியாத அன்பு என்றும் எபே. 4 : 2-இல் முழு மனத் தாழ்மையோடும், கனிவோடும், பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்க வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார். 1 கொரி. 13-இல் அன்பினுடைய மேன்மையை படிக்கிறோம். இவ்வன்பை அடிப்படையாகக் கொண்ட ஆளுகை மக்கள் ஆளுகையாக அமைய வேண்டும் என்பதை விளக்குகிறார்.

மக்கள் ஆளுகையில் இறைத்திட்டம் வெளிப்பட வேண்டும் எனும் நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நாம் வாழ்வோமேயெனில் இறையாட்சி இம்மண்ணில் மலர நாமும் கருவிகளாகிறோம் என்பதே உண்மை நிலை. இந்நிலையினை உணருவோம்! அந்நிலையில் இறையாசி பெறுவோம்!

திரு. N. ஜெசின்



| 27-09-2013 | தென்னிந்தியத் திருச்சபை நாள் |
|---|---|

நெகே. 2 : 17-20 — 1 கொரி. 3 : 1-17

தி.பா. 28 — லூக். 9 : 10-17

## பணிபுரிவதில் இணைவு

## United in Service

"நான் நட்டேன் அப்பொல்லோ நீர் பாய்ச்சினார்; கடவுளே விளையச் செய்தார்" (1 கொரி. 3 : 6)

இந்தியத் திருச்சபை வரலாற்றில் நடந்த மாபெரும் அற்புதம் தென்னிந்தியத் திருச்சபையின் தோற்றம் எனலாம்.

1947 ஆகஸ்டு 15 நம் இந்திய நாட்டுக்கு விடுதலை என்றால் 1947 செப்டம்பர் 27 தென்னிந்திய திருச்சபைக்கு உதயமானது. பிரிவினையின் சக்திகள் உலகமெங்கும் தலைவிரித்தாடி கொண்டிருந்த காலக்கட்டத்தில் தென்னிந்தியத் திருச்சபையின் இந்த ஒருமைப்பாடு உலகத் திருச்சபைக்கு ஒரு சவால் எனலாம். அருட்பணியாளர்கள் தாங்கள் சார்ந்திருந்த பாரம்பரியங்களின் நிழலில் நின்ற நற்செய்திப் பணிகளைச் செய்து நிறைவேற்றிக்கொண்டிருந்த காலக்கட்டத்தில் தங்களிடையே ஒருமைப்பாடு அவசியம். அதனால் மட்டுமே திருச்சபை வளரும் என்ற நோக்கோடு முழக்கத்தோடு ஆங்கிலிக்கன், காங்கிரிகேஷனல், பிரஸ்பிட்டேரியன், மெதடிஸ்ட் போன்ற பல வேறுபட்ட பிரிவுகளைச் சார்ந்த திருச்சபைகள் ஒன்றிணைந்து உருவானதுதான் C.S.I. என்னும் ஒருமைப்பாட்டு அமைப்பு.

இந்த அமைப்பில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரா போன்ற தமிழ்வாழ்மக்கள் பகுதியும் இந்த ஒருமைப்பாட்டிற்குள் இருப்பதால், பல மொழிகள், கலாச்சாரங்கள், யூத வழக்கங்கள் இவைகள் மத்தியில் இயேசுகிறிஸ்துவின் தலைமையில் இணைந்திருப்பது வேற்றுமையில் ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது.

இந்த அற்புத நாளை அல்லது இரண்டாம் பெந்தக்கோஸ்தே திருநாளை கொண்டாடும்போது இன்றும் நாம் நம்மில் இணையவேண்டிய திருக்கின்றன. என்பதை புரிந்துகொள்ள அழைக்கப்படுகின்றோம். கொடுக்கப்பட்டுள்ள திருமறைப் பகுதி சார்ந்து சிந்திக்கும்போது பணிபுரிவதிலே தூய ஆவியார் சுட்டிக்காட்டும் இணைவு நம்மில் தேவை என்பதைப் புரிந்துகொள்ள முயலுவோம்.

**1) சமூகத்தை கட்டுவதில் இணைவு** (நெகே. 2 : 17-20)

பாபிலோனின் படையெடுப்பால் பாழ்பட்டுப்போன எருசலேம் மதில்களைக் கட்டும் பணியில் தீவிரப்பட்ட நெகேமியா; பல்வேறு எதிர்ப்புகள் மத்தியிலும் உள்ளம் தளராது ஊக்கத்துடன் சிதைந்து கிடந்த மதில்களைக் கட்டியெழுப்ப மக்களை ஒன்றுபடுத்துகிறார். ஒதுங்கி நின்று, உயரத்தில் நின்று கட்டளை பிறப்பிக்காமல் .....இனியும் நமக்கு சிறுமை வராதபடி, எருசலேமின் மதில்களைக் கட்டியெழுப்புவோம் வாருங்கள் (2 : 17) என்று கட்டுமானப் பணியில் இணைவதற்கு அழைப்புக் கொடுக்கின்றார். மட்டுமல்ல மக்களும், வாரும் கட்டுவோம் என்று நற்பணி செய்யத் தங்களைத் தயார் செய்து கொண்டனர்.

எருசலேமின் மதில்கள் அந்நியப் படையெடுப்பிலிருந்தும்; எதிரிகளின் ஊடுருவல்களிலிருந்து பாதுகாக்கின்றன. அவற்றின் உடைவுகளைச் சீர்படுத்துவதில் எருசலேம் காக்கப்படுகிறது.

இன்றைய புதிய எருசலேமாகிய திருச்சபை, கிறிஸ்துவின் உடல்; பல்வேறு பிரிவினைகளால் பிரிக்கப்பட்டு இன்றைய சமூகம் இனம், மொழி, கலாச்சாரம் நிறம் போன்றவற்றால் துண்டாடப்பட்டு கிடக்கின்றது. இதைக் கட்டுவதற்கு தூய ஆவியார் அழைக்கிறார் வாருங்கள் இணைந்து சமூகத்தைக் கட்டுவோம்.

**2) சத்தியத்தை உரைப்பதில் இணைவு** (1 கொரி. 3 : 1-17)

பவுலார் கொரிந்தியருக்குக் கடிதம் எழுதும் போது சத்தியத்தை உரைப்பதில் தனக்கும் அப்பல்லோவுக்கும் இடையே இருக்கும் இணைவை குறித்துக் குறிப்பிடுகின்றார்.

நான்தான் உங்களிடம் நற்செய்தியை முதலில் கொண்டு வந்தவன். நானே பெரியவன். நான்தான் உங்களிடம் கிறிஸ்துவுக்காக ஒரு வலுவான அடித்தளம் அமைத்துள்ளேன். ஆகவே நான் பெரியவன் என்று சொல்லாமல் நான் நட்டேன், அப்பல்லோ நீர் பாய்ச்சினார் விளையச்செய்தவர் கடவுளே (1 கொரி. 3 : 6) என்று தனக்கும் அப்பல்லோவுக்கும் இடையே சத்தியத்தை உரைப்பதில் பெருத்த இணைவு இருக்கிறது என்று கூறுகின்றார். நற்செய்தி ஒருவரை இணைக்குமே தவிர பிரிக்காது என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

கிறிஸ்துவாகிய சத்தியத்தை உரைப்பதில் நம்மிடம் இணைவு தேவை. சபைப் பிரிவுகளில் நின்று சத்தியத்திற்குச் சான்றாக முடியாது. நாம் நம்மிடையே இருக்கும் பிரிவினையின் எண்ணங்களிலிருந்து சத்தியத்திற்குச் சான்றாக முற்படுவோம். இனம், மொழி, நிறம், பொருளாதாரம் போன்றவற்றில் பிரிந்து கிடக்கும் திருச்சபை தன்னைத்தானே இணைக்கம்போது இந்த இணைவில் மற்றவர்கள் சத்தியத்தைக் காண்கிறார்கள். சத்தியத்தை அறிந்து கொள்கிறார்கள்.





**3) நித்தியத்தை நிறுவுவதில் இணைவு** (லூக். 9 : 10-17)

திருச்சபை நித்தியத்தின் முன் சுவை. நித்தியத்தின் நிறைவுக்கு அழைத்துச் செல்வது அதன் கடமை. இன்றைய நற்செய்திப் பாடம் வழியாய் கிறிஸ்து நாதர் அழகாகக் கற்றுத்தருகிறார். பசியோடு ஆண்டவரின் வார்த்தையைக் கேட்டுக்கொண்டிருந்த மக்களின் பசியைப் போக்கும்படி ஆண்டவர் சீடர்களுக்குக் கட்டளை இடுகின்றார். ஆனால் சீடர்களோ ஆண்டவரிடத்தில் சோர்ந்து வந்து இவ்விடம் பாலை நிலம் ஆயிற்றே; சுற்றிலுமுள்ள ஊர்களுக்கும், பட்டிகளுக்கும் சென்று தங்கவும் உணவு வாங்கிக் கொள்ளவும் மக்கள் கூட்டத்தை அனுப்பிவிடும் (லூக். 9 : 12) என்று மக்களை வெறுமையாய் அனுப்பிவிடுவதில் இணைந்து வருகின்றனர்.

ஆனால் இறையாட்சியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த ஆண்டவர் இறையாட்சி என்பது நம்மிடத்தில் இருப்பதைப் பகிர்ந்து கொடுப்பது. ஆகவே, நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள் என்றார். சீடர்கள் எங்களிடம் இருப்பது ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்களுமே என்றனர். ஆண்டவர் அந்த ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் வாங்கி ஆசிகூறி பிட்டு மக்களுக்குப் பரிமாற சீடர்களிடம் கொடுத்தார். அனைவரம் வயிரார உண்டனர்.

இவ்வாறு இறையாட்சியின் மாட்சியைச் சீடர்களுக்கு கற்றுக் கொடுக்கின்றார்.

நித்திய வாழ்வு பகிர்வதிலும் பரிமாறுவதிலும் என்றுகூறி இணைந்து வாருங்கள் என்று அழைப்பு கொடுக்கின்றார்.

இன்றைய திருச்சபை இறையாட்சியை அல்லது நித்தியத்தை நிறுவுவதில் இணைந்து வரவேண்டும். தங்களில் இருப்பதை தேவையில் இருப்போரோடு பகிர்ந்து தங்கள், நித்தியத்தை நிறுவுவதிலும் நிறைவுக்கு நேராய் வழிநடத்துவதிலும் இணைந்து வரவேண்டும்.

ஆண்டவர் விரும்புவது திருச்சபைகள் அல்ல. “திருச்சபை” கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையை நம்மிடையே காணப்படும் பிரிவினைகளால் கூறுபோடாமல் இணைந்து செயல்பட தூய ஆவியார் தூண்டுகிறார். இவ்வாறு

சமூகத்தைக் கட்டுவதிலும்

சத்தியத்தை உரைப்பதிலும்

நித்தியத்தை நிறுவுவதிலும்

திருச்சபையாக இணைந்து செயல்பட்டு இறையரசைச் சுவைப்போம்.

**அருள்திரு. S.M. டேனியல் தேவதாசன்**

## 13-10-2013

எசா. 6 : 1-8 | 1 பேது. 2 : 1-5
திபா. 2 | மாற். 6 : 6-13

# N.M.S. ஞாயிறு

"அவர்கள் புறப்பட்டு போய், மனந்திரும்புங்கள் என்று பிரசங்கித்து" (மாற். 6 : 12)

NMS என்றால் "The National Missionary Society of India" என்பதாகும். இம்மிஷனெறி இயக்கம் 1905-ஆம் ஆண்டு திங்கள் 25-ஆம் நாள் செராம்பூர், கல்கத்தாவில் 17 இளம் வாலிபர்களால் துவங்கப்பட்டது. இதில் பேராயர் V. S. அசரியா, K. T. பால் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்வியக்கத்தின் தரிசனம் "இந்தியா இயேசுவுக்கே" . இவ்வியக்கத்தின் அருட்பணியின் நோக்கம் "இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை இந்திய மக்களுக்காக இந்தியப் பணத்தில், இந்திய முறைமையின் படி இந்தியாவில் செய்வதே". இத்தோடு சமுதாயப் பணி, அருட்பணி, மனிதவள மேம்பாட்டுப் பணிகள் என்பனவாகும்.

திருத்தூதுவர்கள் கிறிஸ்துவை மாதிரியாக கொண்டு சான்று பகர்ந்தனர். மார்டின் சொல்கிறார். "விசுவாசம் கொண்டவர்கள் அனைவரும் திருத்தூதுவர்களே" திருச்சபைகளில் நல்ல பண்பு நெறிகளுடன் கடமைகளை நிறைவேற்றி கிறிஸ்துவை தன் வாழ்வில் வெளிப்படுத்துபவர்களும் திருத்தூதுவர்களாக ஏற்கப்படுகின்றனர். இயேசுகிறிஸ்து தன் சீடர்களுக்கு எவ்வாறு திருத்தூதுவர்களாகச் செயல்பட வேண்டுமெனப் பயிற்றுவித்தார் எனச் சிந்திப்போம்.

### 1. அழைத்து அனுப்பினார்

அழைப்பதும், அனுப்புவதும் இறைமகன் இயேசுவின் இறைப்பணியின் தொடக்கம். பல பின்னணியங்களுடன் வந்தவர்களை அழைத்தார். (எ.கா. ஆயத்துறை, மீன் பிடித்தல்) ஏன் அழைத்தார்? மாற்கு 6 : 7-இல் தம்மோடு இருக்கவும், நற்செய்தியைச் சொல்லவும், பேய்களை ஓட்டவும், இறையரசைப் பறைசாற்றவுமே எனக் கூறுகிறார். ஏன் இருவராக அனுப்பினார்? (மாற்கு 6:11) ஒரு செய்தி ஏற்றுக்கொள்ளப்பட இருவரின் சாட்சியம் தேவை என்பது யூதச் சட்டம் (இச. 19 : 15). பழைய ஏற்பாட்டில் ஆண்டவர் தம் மக்களை அழைக்கிறார். யோசுவா 1-ஆம் அதிகாரத்தில் மோசே மரித்தபின் யோசுவாவை அழைக்கிறார். உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் கொடுப்பேன். ஒருவனும் உனக்கு





முன்பாக எதிர்த்து நிற்பதில்லை. மோசேயோடு இருந்தது போல உன்னோடும் இருப்பேன். உன்னைவிட்டு விலகுவதில்லை. உன்னைக் கைவிடுவதில்லை. நீ போகும் இடமெல்லாம் உன்னோடு இருப்பேன். உன்னைவிட்டு விலகுவதில்லை. உன்னைக் கைவிடுவதில்லை, கொடுப்பேன் என்ற தேசத்தைத் தருவேன் என அழைப்பில் உறுதி மொழிந்துள்ளார் நாம் உண்மையோடிருக்கிறோமா?

### 2. அதிகாரம் கொடுத்தார்

தீய சக்திகள் அகற்றப்பட்டு இறையாட்சி மலர வேண்டும் என்பது இறைமகனின் திட்டம். தந்தையிடம் பெற்றதைத் திருத்தூதுவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார். அதையே லூக்கா 4 : 18-லும் குறிப்பிடுகிறார். அரசாட்சியின் அதிகாரம் அல்ல. இறையாட்சியின் அதிகாரம். தன் சுய வாழ்வுக்கான அதிகாரமல்ல. பிறர் வாழ்வு மாற்றத்திற்கான அதிகாரம் (மாற். 6 : 12). அருட்பணியில் உயர்வு தாழ்வுகளைப் பொருட்படுத்தாது அதிகாரம் உடையவர்களாய் இருக்க வேண்டும். உன்னைப்பார்த்து அநேகம் பேர் கல்லை எறிவார்கள். அவற்றையெல்லாம் பிடித்து வைத்துத் திருப்பி எறியாமல் எதற்கு எறிந்தார்கள் என்பதைச் சிந்தித்துப்பார். அப்பொழுது உன் தவறு புரியும்.

### 3. அர்ப்பணிக்கக் கற்றுக்கொடுத்தார்

அழைப்பு பெற்றவர்கள் அர்ப்பணம் செய்ய வேண்டுமாயின் சுயநலத்தைக் கைவிட வேண்டும். மாற்கு 6 : 8, 9-இல் இயேசு கிறிஸ்து குறிப்பிடுகிறார், வழிக்கு உடையோ, உணவோ, பணமோ சுமந்து செல்லக் கூடாது. சுமந்தால் நம் கவனம் இவற்றின் மீது இருக்கும். பணியில் கவனம் தேவை. லூக்கா 9 : 23-இல் சிலுவை சுமக்கும் பணி இறைப்பணி. பிலி. 2 : 4-இல் தனக்கானவைகளை அல்ல பிறருக்கானவைகளை நோக்குவானாக. அர்ப்பணம் இன்றி நம்பிக்கை வாழ்வு வாழ இயலாது. திருத்தூதுவர் பணியை நிறைவேற்றுகிறோம் என்று சுயநலம் சார்வது நல்லதல்ல. அர்ப்பணமற்ற ஆடம்பரமான, ஆடம்பர வாழ்வுக்கு நற்செய்தியைப் பயன்படுத்துவோர் வளர்ந்துவரும் காலம் இது. செழுமை வாழ்வுக்குத் தான் இயேசு கிறிஸ்து, தியாக வாழ்வுக்கு அல்ல என்ற கருத்து மேற்படும் காலம் இது. அதிகாரத்தையோ, ஆணவத்தையோ, ஆட்சி உரிமையையோ நிலைநிறுத்துவதல்ல திருப்பணி. மாறாக இறையாட்சியை வெளிப்படுத்துவதே திருப்பணி. இதன் ஊடகம் திருச்சபை. மத். 28 : 19, 20-இல் சீடர்களை உருவாக்கக் கற்பிக்கிறார். வாய்ப்புகள், அதிகாரம், இறையாற்றல் சுயநலத்திற்கு அல்ல. விடுதலை வாழ்வுக்கு பயன்படுத்தப்பட வேண்டும். இறைப்பணியாற்ற அழைத்து அனுப்பினார். அதிகாரம் கொடுத்தார். அர்ப்பணிக்கக் கற்றுக் கொடுத்தார்

**திரு. செ. ஜாண் வினோ ராஜ்**

**01-11-2013**

எரே. 31 : 31-34 | தி.வெ. 7 : 2-4, 9-17

தி.பா. 150 | மத். 5 : 1 - 12

# அனைத்துப் புனிதர்களின் திருநாள்

# All Saints Day

அரியணைக்கும், ஆட்டுக்குட்டிக்கும் முன்பாக, நின்று கொண்டிருந் தார்கள். வெண்மையான தொங்கலாடை அணிந்தவர்களாய், கையில் குருத்தோலைகளைப் பிடித்திருந்தார்கள் (தி.வெ. 7:9).

கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்ட அனைவருமே கடவுளுடைய பிள்ளைகளும், தூயவர்களும் ஆவர் எனத் திருமறை கூறுகிறது. நம்மைக் கடவுள் தூயவர்களாகும்படி அழைத்திருக்கின்றார், அழைப்புக்குச் செவி சாய்ப்பவர்களைத் தூயோராய் மாற்றி அந்த வாழ்வில் நிலைத்திருக்கத் தூண்டுகிறார். நாம் தூய்மையில் வளரவும், வாழவும் நமக்கு முன் சென்ற சகல தூயவர்களும் நமக்கு சாட்சியாய் இருக்கின்றனர். எனவே இந்நாளில் தூயவர்களின் நற்சாட்சிகளை நினைவுகூருவதோடு அவர்களின் விண்வாழ்வை தியானித்து நாமும் அதில் பங்கடைய நம்மை அர்ப்பணிக்க இறைவன் நம்மை அழைக்கிறார்.

தி.வெ. 7 : 9-17 வரையுள்ள பகுதியில் யோவான் திருவெளிப்பாடு பெறுகிறார். அதில் திரள் கூட்டமாகிய மக்கள் வெண்ணுடை அணிந்தவர்களாய்க் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு இறைவனுக்கு முன்பாக நின்றார்கள். அப்போது இரண்டு முக்கியமான கேள்விகள் எழும்புகின்றன.

**1) இவர்கள் யார்?** (தி.வெ. 7 : 9)

இவர்கள் ஆண்டவருடைய இரத்தத்தினாலே கழுவப்பட்டவர்கள், பாவத்திலிருந்து மீட்கப்பட்டவர்கள். தங்களுடைய பாவத்தை விட்டெறிந்து ஆண்டவருடைய கிருபையை ருசித்தவர்கள். கறையின்றி வாழ தங்கள் வாழ்வை உயிருள்ள பலியாக ஒப்புக்கொடுத்தவர்கள். (உரோ. 12 : 1). இவர்கள் வாழ்ந்ததினால் சாட்சிப் பட்டியலில் இடம் பெற்ற விசுவாச வீரர்களாக வெற்றிபெற்று சாட்சிகளாக நம்மை சூழ்ந்து நிற்கிறார்கள் (எபி. 12 : 1). நாமும் இப்பாதையில் தொடர்ந்து ஆண்டவருக்குச் சாட்சியாய், தூயோராய் அப்பட்டியலில் இடம் பெற்று நமக்கு குறிப்பிட்டுள்ள ஓட்டத்தில் இயேசுவை நோக்கி மனஉறுதியோடு





ஓடுவோம். இறைவனும் நம்மை மேன்மையான வாழ்க்கையில், பங்கு பெறச்செய்யவும் தூயோரோடு பங்கடையவும் நம்மை அழைக்கிறார். இந்த அன்பிற்குச் செவிமடுத்து இறையாசியைப் பெற்றுக்கொள்வோம்.

**2) இவர்கள் எங்கேயிருந்து வந்தவர்கள்** (தி.வெ. 7 : 13)

இவர்கள் மிகுந்த இன்னல்களிலிருந்து வந்தவர்கள். ஏனெனில் கிறிஸ்துவுக்காய் வாழ்ந்ததினால் இன்னல்களை அனுபவித்தவர்கள். (IIதீமோ. 3 : 12). விசுவாசத்திற்கு முன்னோடிகள், பாடுகளைச் சகித்ததினால், நமக்கு முன்மாதிரிகள். மேலும் நல்ல போராட்டத்தைப் போராடி, வெற்றியுடன் ஓட்டத்தை முடித்தவர்கள். நாமும் அவர்களைப்போல ஓட்டத்தை தொடருவதற்கு அவர்கள் வாழ்க்கை மிகுந்த தூண்டுகோலாயிருக்கிறது.

எனவே அவர்களை நினைவுகூரும் இந்நாளில் அவர்களின் முன்மாதிரிகளை, நாம் பின்பற்றுவதோடு, அவர்கள் தொடங்கிய விசுவாச ஓட்டத்தை, தொடர்ந்து ஓடவும், விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவும் வேண்டும், அப்போதுதான் நமக்கென வைக்கப்பட்டிருக்கும் நீதியின் கிரீடத்தை பெற்றுக்கொள்ளமுடியும். நாமும் இந்த வரிசையில் இடம்பெறும் பாக்கியத்தைப் பெறுவோம். நாம் கிறிஸ்துவுக்காய் வாழ்வோம்.

**3) இவர்கள் இப்போது செய்வது என்ன?** (தி.வெ. 7 : 15)

இவர்கள் அரியணைக்கு முன் நின்று கொண்டு அவரது கோவிலில் அல்லும், பகலும் அவரை வழிபட்டு வருகிறார்கள். (தி.வெ. 7 : 15). இந்த உலகத்தில் வாழ்ந்தபோது உண்மையுடன் ஆண்டவருக்காக வாழ்ந்தவர்கள் விண்ணுலகின் மேன்மையில் பங்கேற்கும் பாக்கியம் பெற்றனர். வாழ்வு அளிக்கும் நீரூற்றுகளுக்கு வழிநடத்திச் செல்லும் கடவுள் அவர்களின் கண்ணீர் அனைத்தையும் துடைத்து விடுவார்.

நாம் தூயோரை நினைவு கூறுவதோடு நின்றுவிடாமல் அவர்கள் பாதையில் நடப்போம். அவர்களோடு நிலை வாழ்வில் ஒன்றிப்போம்.

**திரு. E. ஸ்டீபன்**

# விழாக்கால அருளுரைகள்

## திருமறைப்பள்ளி ஆண்டு விழா

1 திமொ. 2 : 1-7

## கற்பாறையின் மீது கட்டப்பட...

“எல்லா மனிதரும் மீட்புப் பெறவும் உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென அவர் விரும்புகிறார்” (1 தீமோத். 2 : 4).

திருமறைப் பள்ளி இறைவனின் திருவுளப்படி துவங்கப்பட்டது என்பதற்கு மேற்குறிப்பிட்ட விவிலிய வாக்கு சான்றாகியுள்ளது. எப்படியெனில் “அனைத்து மனிதரும் மீட்புப் பெறவேண்டும்” என்பது விவிலியத்தின் அடிப்படை நோக்கமாகும். இறைவனின் இத்திட்டத்தை நிறைவேற்ற இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டார். இயேசு கிறிஸ்து தந்தையாம் இறைவனின் விருப்பப்படி மீட்புப் (விடுதலை) பணியை அருளுரை, அடையாளங்கள், வல்ல செயல்கள், தம்முடைய வாழ்ந்து காட்டுதலின் வாயிலாகச் சிலுவை வரையிலும் நிறைவேற்றினார். இயேசுகிறிஸ்துவை முன்மாதிரியாகக்கொண்டு அவரின் வாழ்க்கை முறையையும், அருளுரைகளையும், வல்ல செயல்களையும் பற்றிய உண்மையை அறிந்துணர விவிலியப் பள்ளி செயல்பட்டு வருகிறது. சிறப்பாக, குமரிப் பேராய விவிலியப் பள்ளி பாடத்திட்டம் அதன் அமைப்பு, செயல்பாடுகள் விவிலிய உண்மைகளை குழந்தைகள், ஆசிரியர்கள் அறிந்துணர “வழி வகை செய்கிறது” என முழுமையாக நாம் ஏற்றுக்கொள்ளலாம். சிறப்பு வாய்ந்த விவிலியப் பள்ளியின் ஆண்டு விழாவில் அனைத்துத் தரப்பினரும் உண்மையை அறிந்துணர சில ஆலோசனைகளை விவிலிய ஆன்மீக சிந்தனை வழியாகப் புரிந்து கொள்ளலாம்.

### 1. விவிலியப் பள்ளியின் பணியில் பெற்றோர்

விவிலியப்பள்ளியின் பணியில் பெற்றோர் தான் முதல் ஆசிரியர்கள். பெற்றோர் குழந்தைகளுக்கு இனிய பாடலைப் பாடி மகிழ வைக்கிறார்கள். விவிலிய வாசகங்களை முதன் முதலில் குழந்தைகளுக்குக் கற்பிக்கிறார்கள். குழந்தைகளை பேசப் பழக்கும் போது அவர்களுக்கு விவிலிய வார்த்தைகளை சொல்லி பழக்குகிறார்கள். குழந்தைகள் தாய்மொழி வாயிலாகப் பேச பழகுவதற்கு விவிலிய வார்த்தைகள் முக்கிய வார்த்தைகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக “வாழ்வு தரும் உணவு” (ஜீவ அப்பம்) நானே. பெற்றோர் முதன் முதலில் குழந்தைகளுக்குக் கிறிஸ்தவ ஒழுங்கு முறையைக் கற்றுக் கொடுக்கிறார்கள். குறிப்பாக, ஆயருக்கு வணக்கம் (மரியாதை) செலுத்தக் கற்றுக் கொடுக்கிறார்கள். மேலும் இறைவேண்டல் (ஜெபம்) செய்யும் போது எப்படி முழந்தாளிட வேண்டும், கை கூப்ப வேண்டும், கண் மூட வேண்டும் என்பதைச் சீராகக் கற்றுத் தருகிறார்கள். ஆகவே விவிலியப் பள்ளி இல்லங்களில் துவங்குகிறது. முதல் விவிலியப் பள்ளி “இல்லம்” என்று திட்டவட்டமாக ஏற்றுக் கொள்ளலாம். பெற்றோர்கள் தான் பிள்ளைகளின் முதல் விவிலியப் பள்ளி ஆசிரியர்கள். நமது குழந்தைகளின் கிறிஸ்தவ வாழ்க்கை விவிலிய அடிப்படையில் கட்டப்பட்டு, முதிர்ச்சி பெற பெற்றோரின் முயற்சியோடு விவிலியப்பள்ளி பணி அமைதல் வேண்டுமென பேராயர் கொ. செல்வமணி அவர்கள் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். நம் குழந்தைகளின் “ஆன்மிக நாற்று” பெற்றோர்களால் முதலில் ஊன்றப்படுகிறது. குழந்தைகளின் “உள்ளம்” (மனம்) பக்குவப்பட்ட நிலமாகயிருப்பதால் கனிதரும் விவிலிய விதைகளை முதலில் பெற்றோர் விதைக்கிறார்கள். இந்த விதைகள் முப்பது, அறுபது, நூறு என்ற முறையில் அறுவடை தருகிறது என விவிலியம் நமக்கு தெளிவுபடுத்துகிறது. ஆகவே விவிலியப் பள்ளிப் பணியில் பெற்றோர் முதன்மை நிலையில் இருக்கிறார்கள். பெற்றோர் விவிலியப் பள்ளியின் “முதல் ஆசிரியர்” என்ற சிறப்பிற்கு உரியவராகிறார்கள். எனவே பெற்றோர்கள் தொடர்ந்து விவிலியப் பள்ளியில் பணியாற்ற உங்களை வாழ்த்துகிறோம்.

### 2. விவிலியப் பள்ளியின் பணியில் ஆசிரியர்கள் (1 திமொத். 2 : 6, 7)

விவிலியப் பள்ளியின் வாயிலாகக் குழந்தைகள் முழு வாழ்வு பெற அனுப்பப்படுகிறார்கள். குழந்தைகளின் முழுமையான விடுதலைக்கு விவிலியப்பள்ளி ஆசிரியர்கள் கடமைப்பட்டவர்கள். நமக்கு முதன்மையும், முன் மாதிரியான ஆசிரியர் இயேசு கிறிஸ்துவே. அவர் அனைவரின் மீட்புக்காக (விடுதலை) தம்மையே ஈடாகத் தந்தார் (கையளித்தார்) அதற்குச் சான்றும் பகர்ந்தார். விவிலியப் பள்ளியின் ஆசிரியர் இந்தப் பணிக்கெனத் தம்மையே கையளிக்கவேண்டும், சான்றாக வாழவேண்டும், கடமைக்காக, மதிப்பிற்காக, பதவிக்காக விவிலியப் பள்ளியின் பணியில் பங்குபெறுவது பாவமாகும். ஏனெனில் விவிலியம் ஒரு பாடநூல் மட்டுமன்று, அது “இறைவாக்கு” என உறுதியாக நம்பி, குழந்தைகளுக்கு அந்த நம்பிக்கையை ஊட்டத்தகுந்த முறையில் கற்பிக்க வேண்டும். இதற்கு விவிலியப்பள்ளி ஆசிரியர் நம்பிக்கையின் நங்கூரமாக விளங்கவேண்டும். தூய பவுலார் பற்றுறுதியாளர்களைக் குழந்தைகளாகக் கருதி அவர்களுக்கு விவிலியத்தைக் கற்பிக்கும்போது கடமையுணர்வோடும், முன்மாதிரியோடும் தம்மையே கையளித்துப் பணிபுரிந்தார். அவரின் வியத்தகு இச்செயல்களை அவரின் கடித வரிகள் நமக்குத்

தெளிவுபடுத்துகின்றன. இதற்காகவே நான் நற்செய்தியை அறிவிப்பவனாகவும் திருத்தூதனாகவும் விசுவாசத்தையும், உண்மையையும் பிற இனத்தாருக்குக் கற்பிக்கும் போதகனாகவும் ஏற்படுத்தப்பட்டேன். நான் சொல்வது உண்மையே; பொய் அன்று. விவிலியப் பள்ளி ஆசிரியரின் பணி பவுலாரின் பணி போன்றதாகும். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம்மிடம் கற்றுக்கொள்ளும்படியாக மக்களை அழைத்தார் (மத். 11 : 29). தன்னிடம் கனிவும், மனத்தாழ்மையும் இருப்பதாகச் சான்று பகர்ந்தார். ஆகவே விவிலியப்பள்ளி ஆசிரியர் தங்கள் பணியை மறு ஆய்வு செய்து இயேசுவைப் பின்பற்றிச் செயல்பட அழைக்கப்படுகிறார்கள்.

### 3. விவிலியப் பள்ளியில் மாணவர்கள்

விவிலியப் பள்ளியில் மாணவர்கள் முக்கியமானவர்கள். அவர்கள் தங்கள் இல்லத்தில் கற்றுக்கொண்டவைகள், பெற்றோரால் பழகிக் கொண்டவைகள், உள்ளத்தில் பதித்து வைத்திருக்கும் கிறிஸ்தவ குண இயல்புகள். இவை அனைத்தையும் உண்மையாக அறிந்துணர விவிலியப் பள்ளியில் சேர்க்கப்படுகிறார்கள். இது இறைவனின் விருப்பமும், மீட்பின் அடிப்படையுமாகும். விவிலியப் பள்ளியில் குழந்தைகள், மாணவர்கள் தங்களுடைய ஆன்மிக வாழ்வைக் கட்டியெழுப்பத் துவங்கிவிடுகிறார்கள். இவர்கள் அதை மணல் மீது கட்டியெழுப்பாதபடிக்கு ஆசிரியர்கள் நல்ல வழிகாட்டுதலையும் ஆலோசனைகளையும் வழங்குகிறார்கள். மாணவர்கள் தங்கள் ஆன்மிக வாழ்வை “மணல் மீது” கட்டுவது எளிது, சுலபமானது, குறுக்கு வழிமுறையுமாகும். இந்த ஆன்மிக வாழ்வு பார்ப்பதற்குப் பகட்டாகவும், இன்பமாகவும் இருக்கும். ஆனால் அதன் முடிவு நிலையற்றது, போலியானது, அழிவிற்குக் கொண்டு செல்லும். அதே சமயத்தில் விவிலியப்பள்ளி மாணவர்கள் தங்கள் ஆன்மீக வாழ்வை “கற்பாறையின்” மீது கட்டியெழுப்பப் பயிற்சி பெற வேண்டும். இந்தப் பயிற்சி பகட்டானது அல்ல. பாடுகள் நிறைந்ததாகும். பரிசுகளை வாங்கி குவிப்பது மட்டுமல்ல பண்பாடுகளை வளர்ப்பதுமாகும். போட்டிகளை உருவாக்குவதல்ல பங்களிப்புக்குப் பக்குவப்படுவதுமாகும். “கற்பாறையின் மீது கட்டப்பட்ட இல்லத்தைப்போல” ஆன்மீக உண்மைகளை உணர்ந்து முறையான மீட்பைப் (விடுதலை) பெற்று, இறைவனின் திருவுளம் அறிந்து இவ்வுலகில் இறைவனின் கருவிகளாகச் செயல்பட்டு இறையரசைக் கட்டி இவ்வுலகில் எல்லோரும் இன்புற்று வாழ விவிலியப்பள்ளி மாணவர்கள் செயல்படவேண்டுமென நம் ஆண்டவர் விரும்பி உங்களை விவிலியப் பள்ளியில் மாணவர்களாகச் சேர்த்திருக்கிறார். அவரின்ஆகவே உண்மையை உணர்ந்து செயல்படுங்கள்.

**அருள்திரு. E. கென்றிதாஸ்**



**கிறிஸ்தவப் பக்தி முயற்சி சங்க ஆண்டு விழா**

ந.உ. 11 : 9-12 : 7

## உன்னதரை உள்ளத்தில் நினை

“இளையோரை, .................என்பதை மறவாதீர்கள்” (ச.உ. 11 : 9)

கி.ப.மு. சங்கம் கிறிஸ்துவுக்காக, திருச்சபைக்காக என்ற அரும் குறிக்கோளுடன் நம் திருச்சபையில் இயங்கிக் கொண்டிருக்கும் நல்ல இயக்கமாகும். பக்தி என்பது கடவுளுக்கடுத்த தியானமும், இறைவனைத் தொழுவதும், பணிவிடை செய்வதும் ஆகும். இது கடவுளுடன் இணைந்த உண்மை வாழ்வு ஆகும். எனவே, இச்சங்கம் இளைஞர்களைக் கிறிஸ்துவுக்காகவும் திருச்சபைக்காகவும் பக்தியுடன் வாழக் கற்றுக்கொடுக்கின்றது. இளைஞர்கள் தங்கள் வாழ்வை இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வாக்கிக்கொள்ள திருமறையின் அறிவுரைகளை ஏற்று வாழ்வது பொருத்தமாகும்.

“இளையோரே, இளமைப்பருவம் மகிழ்ச்சியோடிருப்பதற்கே இளமையின் நாட்களில் உள்ளக்களிப்புடனிருங்கள். மனம் விரும்புவதைச் செய்யுங்கள்; கண்களின் நாட்டத்தை நிறைவேற்றுங்கள்....” (வ.உ. 11 : 9a)

சபை உரையாளரின் இவ்வாசகங்கள் இளையோரைக் கவரும் வாசகங்களாக அமைந்திருக்கின்றன. மனம் விரும்புவதைச் செய்வதால் வரும் உள்ளக்களிப்பும், மகிழ்ச்சியும் இளையோரின் எதிர்பார்ப்புகள் இன்றைய சமுதாயத்தில் நவீனமயமாக்கலை (Modevnization) உள்ளடக்கிய உலகமயமாக்கலின் (Globalization) தாக்கம் இளையோரிடம் மிகுந்து காணப்படுகிறது. கல்வி, உடை, உணவு, அழகுக் கலைகள், தொழில் நுட்பம் இவற்றில் ஏற்படும் மாற்றங்களும் வளர்ச்சிகளும் இளையோரின் வாழ்க்கைத்தரத்தை நிர்ணயிக்கும் காரணிகளாகின்றன. தனிக் கலாச்சாரம் விரும்பி, தங்கள் வளர்ச்சிக்குரிய கல்வி, தொழில் இவைகளைத் தாங்களே தெரிவு செய்து மகிழ்ச்சிக்குரிய வழிதேடுகிறார்கள். மட்டுமல்லாது மது மற்றும் போதைப் பழக்கங்கள், தவறான வாழ்க்கைமுறைகள் மகிழ்ச்சிக்குரியவை என எண்ணித் தீமைக்குள்ளாகின்றனர். பட்டணங்களில் வாழும் இளைஞர்கள் திருமணம் ஆகாமலே ஆண் பெண் சேர்ந்து வாழும் (live-

in relationship) முறையற்ற கலாச்சாரங்களை உள்ளடக்குகின்றனர். இங்கு யோசேப்பின் வாழ்க்கை நமக்குப் பாடமாக அமைதல் வேண்டும். யோசேப்பு தன்னுடைய வீட்டிலும் (தொ.நூ. 37), தன்னுடைய பணியிலும் (தொ. நூ. 39), தன் வேதனையிலும் (தொ.நூ. 40, 41), தனக்கு வாழ்வு வந்தபோதும் (தெ.நூ. 46-50) பல சவால்களை மேற்கொண்டு கனி தரும் செடியாக மகிழ்வோடு வாழ்ந்து காட்டியதைப் போல இளையோரும் சமுதாயத்தில் வாழ்ந்து காட்டவேண்டும்; கனி கொடுக்கவேண்டும்.

".......ஆனால், நீங்கள் செய்கிற ஒவ்வொரு செயலுக்கும் உரிய தீர்ப்பைக் கடவுள் வழங்குவோர் என்பதை மறவாதீர்கள்" (ச.உ. 11 : 9 b).

இளமைப் பருவம் மகிழ்ச்சியோடிருப்பதற்கே என எண்ணி இவ் இரண்டாம் பகுதியின் செய்தியை இளையோர் விட்டு விடுகின்றனர். இங்கு நாம் கற்றுக் கொள்ளும் உண்மை என்னவெனில், வாழ்வின் செயல்கள் அனைத்தும் அதிக கவனத்துடனும், எச்சரிப்புடனும் செய்யப்படவேண்டும். எதையும் செய்து மகிழ்ச்சியடையலாம் என்பதல்ல. மாறாக, கடவுள் பார்வையில் நன்மை செய்து மகிழ்ச்சி காணவேண்டும். நம் செயல்கள் அனைத்துக்கும் உரிய தீர்ப்பு உண்டு என்ற எச்சரிப்பு இங்கு பெற முடிகிறது. நாம் எங்கு சென்றாலும், எங்கு வாழ்ந்தாலும் எச்சரிப்புடன் செயல்படுவது இறை விருப்பம் நிறைவு செய்து வாழ வழிகாட்டும். சிறைப்பட்ட வாழ்விலிருந்த தானியேல் மற்றும் அவரது நண்பர்களின் வாழ்வு முறைகள் நமது அனுபவமாக வேண்டும். உணவு முறைகளில் எச்சரிப்புடன் செயல்படுவது (தானி. 1), உடன் பணி செய்பவரிடத்து செயல்படும் முறையில் கவனம், இறைப்பற்றில் அதிக உறுதி. (தானி. 3 : 16-18) இவை நமக்கு உணர்த்தும் உண்மைகளைப் பின்பற்றவேண்டும்.

எனவே, இளையோர் கடவுளுக்கு முதலிடம் கொடுத்து வாழவேண்டும்; நன்மையும் தீமையும் சமுதாயத்தில் பரவிக்கிடக்கும் சூழலில் வாழ்வுக்குத் தேவையானவைகளை மட்டும் ஏற்றுக் கொள்ளவேண்டும். கிறிஸ்தவ இளைஞர்களைக் குறித்து போப் இரண்டாம் ஜான்பால், கிறிஸ்தவ இளைஞர்களை நான் நம்புகிறேன்; நீங்கள் நம்பிக்கையைச் சுமப்பவர்கள்; புதிய உலகத்தின் கனவு நீங்கள்; உங்களால் மலைகளைப் பெயர்க்க முடியும், திருச்சபை உங்கள் மீது மிகுந்த உடன்பாடு கொண்டுள்ளது எனக் கூறினார். எனவே, தூய பவுல் திமொத்தேயுவுக்கு கூறுவது போல் நம் இளமையைக் குறித்து எவரும் தாழ்வாகக் கருதாதபடி வாழ்க்கையிலும் செயலிலும் எச்சரிக்கையுடன் மாதிரியாக வாழ்வோம். இளமைப் பருவத்தில் படைப்பாளராம் கடவுளை மறவாமல் அவர் தரும் மகிழ்வை அனுபவிக்க வேண்டும். கடவுளை மறந்து செயல்பட்டு வருத்தப்பட்டு விரக்தியடையாமல் மனநிறைவுடன் வாழ்வோம் (ச.உ. 12:1). சமுதாயத்தில் நல்ல வாழ்வு வாழ்ந்து, சமுதாயத் தீமைகளை அழித்து உள்ளக் களிப்புடன், மகிழ்ச்சியுடன் வாழ்வோம்.

அருள்திரு. T.P. சலீம் தங்கக் குமார்



பாடகற்குழு ஆண்டுவிழா

தி.ப. 16 : 16-34

# பரவசமூட்டும் பாடல்கள்

"நள்ளிரவில் பவுலும், சீலாவும் கடவுளுக்குப் புகழ்பா பாடி இறைவனிடம் வேண்டினர் . . ." (தி.ப. 16 : 25)

இசையும், பாடலும் மனுக்குலத்திற்கு இறைவன் கொடுத்த வரம். வாழ்க்கைப் பயணத்தில் இன்பமும் துன்பமும், வெற்றியும் தோல்வியும், நம்பிக்கையும் ஏமாற்றமும், உயர்வும் தாழ்வும் நம்மைச் சந்திக்கும் போதெல்லாம் உள்ளத்து உணர்ச்சிகளுக்கு வார்த்தையால் வடிவம் கொடுத்து இசைமொழியாலே இறைவனோடு உறவாட, இறையடியார்களின் இதயவீணையில் பிறந்த அனுபவப்பாடல்கள் ஏராளம். பாடகற்குழு ஆண்டுவிழாவினைக் கொண்டாடுகின்ற நாம் திருமறையில் இடம் பிடித்திருக்கும் பாடல்களின் தன்மைகளை அறிந்து கொள்வது அவசியம்.

**1. நன்றியறிதலின் பாடல்** (விப. 15 : 1)

எகிப்து நாட்டில் 430 ஆண்டுகள் அடிமைகளாக வாழ்ந்து கடவுளின் பேரிரக்கத்தாலும், அவரது பணியாளர்களான மோசே, ஆரோன் என்போரின் வழிகாட்டுதலாலும் கானான் நாட்டிற்கு நேராகப் பயணித்துக் கொண்டிருந்த இஸ்ரயேலர், தடையாக நின்ற செங்கடலைக் கடந்ததும் கடவுளின் வல்லசெயலை நினைந்து அகமகிழ்ந்து, முகமலர்ந்து பாடிய நன்றியறிதலின் பாடலை வி.ப. 15 : 1-21 வரையுள்ள வாக்கியங்களில் காணலாம். வலுவுள்ளோரைக் கடலில் மூழ்கடித்து வலுவிழந்தோரைக் கரையேற்றிய கடவுளைப் புகழ்ந்து மோசே, மிரியாம் மற்றும் இஸ்ரயேலர் இசை இசைத்து நடனத்துடன் நன்றிப்பாடல் பாடினர். அவ்வண்ணமே கடவுள் நமக்கு வழங்கும் நன்மைகளுக்காக நன்றி சொல்லிப் பாடுவோம்.

**2. நம்பிக்கையின் பாடல்** (2 சாமு. 22 : 3)

எபிரோனில் 7 ஆண்டுகளும், எருசலேமிலே 33 ஆண்டுகளும் இஸ்ரயேல் அனைத்தின் மேலும் அரசனாக இருந்த தாவீது, ஆட்சிக்காலத்தின்போது பெற்ற அனுபவங்கள் பல. இஸ்ரயேலருக்கு முன் புகழ்மிக்கவராக ஆளுகை செய்த அரசர் தாவீது முதுமையின்

காலத்தில் அரசரது இருக்கையை விட்டு இறங்கி அடர்ந்த காட்டிற்குள்ளே அழுகையோடு நடக்க வேண்டிய வேதனையான சூழலைச் சந்திக்கிறார். அண்டை நாட்டு எதிரிகளின் நெருக்கம். உள்நாட்டு மக்களின் ஏளனம், தாவீதின் புதல்வர்களால் ஏற்பட்ட குழப்பம் இத்தகைய சூழ்நிலைகளிலெல்லாம் கடவுள் தனக்குக் கற்பாறையாக, கோட்டையாக, மீட்பராக, புகலிடம் அருளும் மலையாக, கேடயமாக, அரணாக, தஞ்சமாக உடனிருந்தார். இன்னமும் உடனிருப்பார் எனத் தனது நம்பிக்கையைப் பாடலாக II சாமுவேல் 22 : 1-51 வரை பாடி மகிழுகிறார். இப்பாடல் திருப்பாடல் 18-லும் பதிவு செய்யப்பட்டுள்ளது. எப்பொழுதும் நம்பிக்கைக்கு உரியவராக விளங்கும் கடவுளைப் பாடிப் புகழ வேண்டியது நமது கடமை.

**2. நற்செயலைப் பறைசாற்றும் பாடல்** (லூக். 1 : 47)

காபிரியேல் என்னும் வானதூதரால் வாழ்த்துச் செய்தியைக் கேட்டு, தூய ஆவியின் ஆட்கொள்ளுதலால் கருவுற்ற மரியாள், ஆண்டுகள் பல காத்திருந்து முதிர்வயதில் கருவுற்ற எலிசபெத்து என்னும் பெண்மணியைச் சந்தித்து வாழ்த்தினைப் பரிமாறும் பொழுது, கடவுள் தனக்குச் செய்த நற்செயலைப் பாடலாய்ப் பறைசாற்றுகிறார்.

- a எனது உயிர், உள்ளத்தைப் பேருவகைக் கொள்ளச்செய்தார் (1 : 47)
- a அடிமையாம் என் தாழ்நிலையைக் கண்ணோக்கினார் ( 1 : 48a)
- a எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்று போற்றும்படி உயர்வு வழங்கினார் (1 : 48b)
- a வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார் (1 : 4)
- a அஞ்சி நடந்த எனக்கு இரக்கம் காட்டினார் (1 : 50)

என்னும் மரியாளின் பாடல்பகுதி கடவுளின் நற்செயலைப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது. இறையருளால் நாமும் அனுபவித்து வரும் நற்செயல்களைப் பறைசாற்றுவது இறைவனின் பார்வையில் ஏற்புடையது.

**3. நலிவுற்ற நேரத்தில் பாடல்** (தி.ப. 16 : 25)

எருசலேம் சபைக்குத் துன்பம் விளைவித்த சவுல் மனமாற்றம் பெற்றபின் துணிச்சலுடன் நற்செய்தி அறிவித்து வந்ததை திருமறை நமக்குத் தெளிவுபடுத்துகிறது. மாசிதோனிய நாட்டின் முக்கிய நகரமும், உரோமையரின் குடியேற்ற நகரமுமான பிலிப்பி நகருக்கு நற்செய்திப் பணிக்காக நடந்து சென்றபோது குறிசொல்லும் ஆவியைத் தம்முள் கொண்ட அடிமைப்பெண் ஒருவர் குணம் பெற்றதால் வருவாய்





உருவாக்கும் வாய்ப்பை இழந்த உரிமையாளர் பவுலையும், சீலாவையும் பிடித்து, குற்றம் சுமத்தி அதிகாரிகளிடம் ஒப்படைத்தார். சிறை அதிகாரிகள் பவுலையும், சீலாவையும் தடியால் அடித்துக் காயப்படுத்தினர். மேலுடைகளைக் கிழித்து அவமானப்படுத்தினர். கால்களைத் தொழுமரத்தில் உறுதியாய் மாட்டி வைத்தனர். இங்ஙனம் உடலளவிலும், மனதளவிலும் நலிவுற்ற நேரத்தில் பாடல் பிறந்தது. கடவுளைப் புகழ்ந்தனர். வேதனை, துயரம், ஏளனம், சோர்வு, இழப்பு இத்தகைய சூழல்களில் இறைவனைப் புகழ்ந்து துன்பம் அகல்வது உறுதி.

இறைமகன் இயேசுவை நேசிக்கிறவர்களே, பாடகற்குழு ஆண்டுவிழாவில் பங்கேற்றிருக்கும் நீவிர் நன்றியறிதலோடு, நம்பிக்கையோடு, நற்செயல் பறைசாற்றி, நலிவுற்ற நேரத்திலும் திருமறை சுட்டிக்காண்பிக்கும் பற்றுறுதிமிக்கவர்களைப் போல பாடல்களைப் பாடி பரவசமடைய ஆயத்தப்படுங்கள். இசையிலும், பாடலிலும் பங்கேற்கும் இறைவன் நமக்கு நிறைவான இறையாசி வழங்குவாராக. ஆமென்.

**அருள்திரு. வே. சாமுவேல் ஜெபராஜ்**

ஆண்கள் சங்க ஆண்டுவிழா

மத் 1 : 18–25

# நேர்மையாளர் யோசேப்பு

"..........யோசேப்பே தாவீதின் மகனே, ... அஞ்சவேண்டாம். மத்-1:20

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு வரலாற்றில் யோசேப்பு முக்கியத்துவம் பெறுகின்றார்யோசேப்பு. பழைய ஏற்பாட்டில் குடும்பத்தின் நிந்தை நீக்கி நிறைவான ஆசிதருபவர் என்று பொருள். (தொநூ 30:23:24) ஆனால் இயேசு நாதர் பிறப்பு வரலாற்றில் வரும் யோசேப்பு சமாதானம், நீதி, நேர்மை மிகுந்தவராகச் சொல்லப்படுகின்றார்.இந்த யோசேப்புக்குத் தேவதூதனால் சொல்பப்பட்ட ஒரு நற்செய்தி அவரில் பல தர்க்கங்களை ஏற்படுத்தியது அவற்றை தியானிக்கும் போது

## 1. புரிந்து கொள்ளும் மனநிலை

யோசேப்புக்கும் மரியாவுக்கும் திருமண நிச்சயம் செய்யப்பட்டிருந்த இந்நிலையில் யோசேப்பு வானதூதரின் வார்த்தையைப் புரிந்து கொண்டார். இறைவாக்காளரின் முன்னுரையைப் புரிந்து கொள்கிறார். (எசா 7:14)அதே போல் மரியாளும் வானதூதரின் வார்த்தையைப் புரிந்து கொண்டார். (லூக் 1:37,38) தன்னை முழுமையாக இறைத்திட்டத்திற்கு அர்ப்பணித்தார். அதன் விளைவு - வாக்கு மனு உருவாகி நம்மிடையே குடிகொண்டார்" (John 7:14) இறைவன் இம்மானுவேல் ஆனார்.

இஸ்ரயேல் கடவுளுக்காக பல ஆண்டுகள் காத்திருந்தார்கள் ஏரோது, அன்னா காய்பா பரிசேயர்கள், சது சேயர்கள், மறைநூல் அறிஞர்கள் என ஒரு பெருங்கூட்டமே இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளவில்லை. மரியாள் தொடங்கி, திருத்தூதுவர் ஏழை மக்கள் என்ற ஒரு சிறு கூட்டமே இயேசுவை மேசியாவாக ஏற்றுக் கொண்டனர் புரிந்து கொண்டனர். யோசேப்பு , மரியாள் இவர்களின் understanding இயேசு என்னும் மீட்பரை உலகிற்கு தந்தது. இன்று குடும்பத்தில் கணவர்,மனைவி இருவருக்கிடையே ன்ய்க்ங்ழ்ள்ற்ஹய்க்ண்ய்ஞ் இல்லாததால் பல அடிமைத்தனம். குறிப்பாக சந்தேகம். குடும்ப வாழ்வில் சந்தேகம் வந்து விட்டால் அதை விட கொடுமை வேறு எதுவுமில்லை. மரியாள் பெற்றோருடன் வாழ்ந்து வந்தாள் வானதூதர் யோசேப்பிடம் அவள் கருவுற்றிருப்பது தூய ஆவியால் தான் என்றார். மீட்புத் திட்டத்தில் உனக்கும் பங்கு உண்டு (Vers 21) என்றார். உடனே யோசேப்பு தெளிவு பெறுகிறார். அதுவரை கலக்கத்தில், சந்தேகத்தில் இருந்த யோசேப்பு தெளிந்த நீரோடையானார். ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு வாழுமை; குடும்பத்தின் அமைதியை அணுகுண்டாலும் அசைக்க முடியாது என்பார்கள். ஆனால் அதே குடும்பத்தில் சந்தேகம் என்ற கொடிய நோய் புகுந்தால் குடும்பம் என்ற கூடே சிதைந்து விடுகிறது.

## 2 ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலை மத் 1: 19, 20

யோசேப்பு மரியாளை விலக்கி விடத்திட்டமிட்டார் ஆனால் வானதூதர் வழியாக இறைத்திட்டத்துக்குப் பணிந்தார். மரியாளுக்கும் பிறக்கப்போகும் இயேசு குழந்தைக்கும் முழுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். கடவுள் நோவாவுக்கு இட்ட கட்டளையை அப்படியே நிறைவேற்றியதால் குடும்பமாக வாழ்வு பெற்றார். (தெநூ 6: 22) -கர்த்தர் தனக்கு கற்பித்த படியெல்லாம் மோசே செய்தான்" திருமறைக்கு ஏற்ப வாழ்வை அமைத்துக்கொள்ளும் போது அது வாழ்வாங்கு வாழ்தலாகும். நியாயத் தீர்ப்பின் வேளையில் வெட்கமின்றி நிற்க அது தகுதிப்படுத்தும். அப்போது தேவன் நம்மோடிருப்பார் (Vers 23) இம்மானுவேல் என்பதே அவர் பெயர். யோசேப்பு மரியாளை ஏற்றுக்கொள்வதன் மூலம் நீதிமான் என்பதை நிரூபித்தார். இன்று குடும்பத்தில் நான் என்ன சொன்னாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் சிந்தனை. நீ சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என்னும் மோதல் போக்கு. இவையெல்லாம் கடவுள் நம் இல்லத்தில் இல்லாத நிலையைத்தான் எடுத்துக்காட்டுகிறது.

இங்கிலாந்து மகாராணி விக்டோரியா அலுவல் பணிகளை முடித்து விட்டு இரவு வெகு தாமதமாக அறைக்கு வந்தார். கதவைக் தாளிட்டு கணவர் ஆல்பர்ட் தூங்கிக் கொண்டிருந்தார். ராணி கதவை தட்ட யாரது? -நான் தான் மகாராணி" என்றார். கதவு திறக்கப்படவில்லை. மீண்டும் ராணி கதவை தட்ட உள்ளேயிருந்து -யார் என்று கேட்டேனே? என்றது கணவர் குரல்" மீண்டும் மகாராணி நான் தான் விக்டோரிய மகாராணி என்று சொன்னேனே என்று சத்தமாகக் கூற -இந்த நேரத்தில் இங்கிலாந்து மகாராணிக்கு என் படுக்கை அறையில் என்ன வேலை? என்று எதிர் கேள்வி கணவர் கேட்டார்" மகாராணி ஒரு நிமிடம் அதிர்ந்து பின் யோசித்து புன்னகையுடன் -மன்னிக்கவும் உங்கள் மனைவிதான் நான். என்றார். கதவு உடனே திறந்தது. குடும்பத்தில் கணவன் மனைவி ஒருவருக்கொருவர் தங்கள் குடும்பப் பெருமையை உயர்த்தி உறவில் விரிசல் அடையாமல் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டு நிறைவை, மகிழ்வைச் சொந்தமாக்குங்கள்.

**3. ஒத்துப்போகும் வாழ்வுநிலை (மத் 1:25)**

யூதர்கள் திருச்சட்டத்தை அப்படியே நிறைவேற்றினார்கள். வாழ்விலே தாங்கள் சந்திக்கின்ற எல்லாவற்றுக்கும் திருச்சட்டத்தின் உதவியோடு விடை காண்பர். யூதரான யோசேப்பு திருச்சட்டங்களை முழுமையாகக் கடைப்பிடிக்கிறவர்கள் என்னும் நிலையில் இங்கே நீதிமானானகச் சொல்லப்படுகிறார். (மத் 1:19) மணஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த காலத்தில் ஒரு பெண் கருவுற்றால் திருச்சட்டப்படி கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் (இச 22:23-24) யோசேப்பு சட்டத்தை மதிக்கிறவர் – ஆனால் மரியாளுக்கு இப்படிப்பட்ட துன்பம் நேரிடக்கூடாது என்பதில் உறுதியாயிருந்து இரகசியமாய்த் தள்ளிவிட மனதாய் இருந்தார். இந்நிலையில் இறைத்திட்டத்திற்கு கீழ்படிந்தார். தன் மனைவியாகிய மரியாளைத் தம்மிடமாய்ச் சேர்த்துக் கொண்டு மரியாள் இயேசு நாதரை பெற்றெடுக்கும் நாள் வரையிலும் யோசேப்பு பராமரித்தார். அவ்வாறு ஒத்துப் போனதால் இயேசு என்னும் தெய்வ குழந்தை பிறந்தது அவருக்கு -இயேசு என்று யோசேப்புதான் பெயரிட்டார். குடும்பத்தில் இன்று கணவர் மனைவிகளுக்கிடையே காணப்படும் தீராத பிடிவாதம். எந்த வாதத்தையும் மாற்ற மருந்தாலும் உண்டு பிடிவாதத்தை எந்த மருந்தால் மாற்றுவது கடினம். இன்று ஒத்துபோகும் வாழ்வு இல்லாத சூழலில் பல குடும்பங்கள் சிதைந்து காணப்படுகின்றன. கானாவூர் கலியாண வீட்டில் பிந்திய ரசம் முந்தியதை விட ருசி.நமது குடும்பம் ஒவ்வொன்றின் மீதும் ஆண்டவர் அக்கறை கொண்டுள்ளார். அவர் ஒருவரையும் அசட்டை செய்வதில்லை குடும்பங்களை ஆசீர்வதித்து நீட்டப்பட்ட கரங்களை ஒரு போதும் மடக்குவதில்லை (Gen 1:27,28) நம்பிக்கை இழக்க வேண்டாம் உங்கள் வேண்டல்களையும், கண்ணீர்களையும், அவர் கவனிக்கிறார். ஆகவே குடும்பத்தில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொண்டு ஒருவரோடு ஒருவர் ஒத்து சென்று ஐயம் அகற்றி புதுவாழ்வு பெறுவோம். அனைத்திற்கு மேலாக மணவாளனாய் வர இருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துக்கு எதிர்கொண்டு செல்லும் மணவாட்டியாய் வாழ்ந்து மணவாளனைப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொண்டு அவரோடு இணைக்கப்பட்டு நிறை வாழ்வை, நித்திய வாழ்வை இவ்வுலகில் சுவைப்போம்.

**அருள்திரு.S.M. டேனியல் தேவதாசன்**



**பெண்கள் ஐக்கியச் சங்க ஆண்டுவிழா**

எண். 27 : 1-11

# செலொபுகாதின் புதல்வியர் - சட்ட சீர்த்திருத்தச் செம்மல்கள்''

எங்கள் தந்தையின் சகோதரர்களிடையே எங்களுக்கும் பங்குத் தாருங்கள். . . (எண். 27 : 4)

அனைத்தையும் படைத்த படைப்பாளராம் கடவுள். ஆண், பெண் இருபாலரையும் தமது சாயலை, தமது உருவை, தமது உயிர் மூச்சையும் கொடுத்து சமமாக படைத்தார் (தொநூ. 1 : 27). ஆனால் ஆண் ஆதிக்க சமூகத்தினால் பெண்கள் இரண்டாம் தர குடிமக்களாக அன்றும், இன்றும் நடத்தப்படுகின்றனர். தமிழ் இலக்கியங்களில் பெண்ணை நிலா, கயல்விழி, பூமிமாதா என்றெல்லாம் புகழ்ந்து பாடியுள்ளனர். பெண்கள் சமூகத்தின் கண்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கு. திருச்சபையின் முதுகெலும்பு என்று வர்ணிக்கப்படுகின்றனர். ஆனால் உண்மை வாழ்க்கையில் பெண்களைச் சமூகம் பாரச் சுமைகளாகக் கருதுகின்றது. இதற்குக் காரணம் பல உண்டு. பெண் குழந்தைகள் கருவிலே கல்லறைக்கு அனுப்பப்படுகின்றனர். பெண்கள் பாலியல் கொடுமைக்கு உட்படுத்தப்படுகின்றனர். தொழிற்சாலைகளில் கொத்தடிமைகளாகப் பணியமர்த்தப்படுகின்றனர். இதற்கு எதிராக பெண்கள் இயக்கங்கள் குரல் கொடுத்தாலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பெருகிக் கொண்டே போகின்றது. பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. குறிப்பாக குடும்பங்களிலும் பெண்களுக்கு சொத்துரிமை மறுக்கப்படுகின்றது. மேலும் திருமறையிலும் பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஆண்களுக்கே உரிய சொத்துரிமையைப் பெண்களும் பெற்றுகொள்ள புதிய சட்ட சீர்திருத்த செம்மல்களாகச் செயல்பட்டவர்கள் தான் செலொபுகாதின் குமாரத்திகள். அவர்களின் சிறப்பியல்புகள் குறித்து தியானிப்போம்.

1. **அறப்போராட்டம் நடத்தினர்**

யோசேப்பின் வம்சத்தில் மனாசே கோத்திரத்தில் பிறந்தவன் செலொபுகாத்து. இவருக்கு ஐந்து குமாரத்திகள் இருந்தனர். மக்லா, நோகா, ஒக்லா, மில்கா, திர்சா. இஸ்ரயேலரின் பாலை நிலப்பயணத்தின் கடைசி நாட்களில் ஒரு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடைபெற்றது. இஸ்ரயேலில் 20 வயதுக்கு மேற்பட்ட ஆண்மக்கள் மட்டுமே

எண்ணப்பட்டார்கள். உரிமைச்சொத்து ஆண்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டது. அதிக மக்கள் உள்ள கோத்திரத்திற்கு அதிக நிலம் கொடுத்தல். போருக்கு 20-வயதிற்கு மேற்பட்ட ஆண்களை அனுப்புதல் போன்ற பழக்கங்கள் இருந்தன. செலொபுகாத்து பாலைநிலத்தில் மரித்துவிட்டார். உரிமைச் சொத்து ஆண்களுக்கு மட்டும் தான் உரியது என்ற சூழலில் இவருடைய ஐந்து குமாரத்திகளும் உரிமைச்சொத்தைப் பெற்றுக்கொள்ள மிகச் சிறப்பானதோர், அறப்போராட்டம் நடத்தினர். தங்கள் தகப்பனின் பெயரில் கடவுள் தமது மக்களுக்கு ஆசீர்வாதமாய் தந்த நாட்டிலே நிலைநிறுத்தப்பட உரிமை உண்டு என நினைத்தனர். ஆகவே தங்கள் பிரச்சினையை எடுத்துச் சென்றனர். அறப்போராட்டத்தை ஆண்டவரின் அடியவரிடம் பகிர்ந்து கொண்டனர். அவர்கள் நியாயத்தை சந்திப்புக்கூடார வாசலிலே மோசே குரு எலெயாசர் தலைவர்கள் மக்கள் கூட்டமைப்பினர் முன்னிலையில் எடுத்து சென்றனர். எண். 27 : 1-4. இன்று நாம் நமது பிரச்சனைகளை எங்கு எடுத்துச் செல்கிறோம்?

## 2. அமைதிப் போராட்டத்திற்கு ஆண்டவரின் பதில்

மோசே இந்த வழக்கை ஆண்டவரிடம் கொண்டுச் சென்றார் (எண். 27 : 5). கடவுள் வாக்கு மாறாதவர். வார்த்தையில் உண்மையுள்ளவர் இஸ்ரயேலர் மத்தியில் ஒருவரின் பெயர் அறுந்து போகக்கூடாது என்ற அவர் கட்டளையில் எந்த மாற்றமும் இல்லை. கடவுள் மோசேயிடம் செலொப்புகாதின் குமாரத்திகள் சொல்லுகிறது சரிதான். அவர்களுக்கு அவர்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே உரிமைச்சொத்து கொடுக்க வேண்டும். அவர்கள் தகப்பனுடைய உரிமைச்சொத்து அவர்களுக்குக்கிடைக்கும்படி செய் என்றார் (எண். 27 : 7). இப்பெண்களின் புத்திக்கூர்மையால் இஸ்ரயேலில் புதிய சட்டம் உருவாயிற்று. ஒருவன் குமாரன் இல்லாமல் மரித்தால், அவனுக்குரிய உரிமைச்சொத்தை அவன் குமாரத்திக்குக் கொடுக்கவேண்டும் (எண். 27 : 8-11). இச்சட்டமானது இஸ்ரயேல் மக்களுக்கு நியாயமாகவும் விதிமுறையாகவும் விளங்கும் என்றார்.

## ஆண்டவரின் நிபந்தனை

செலொப்புகாதின் குமாரத்திகளுக்கு மனாசே குடும்ப உரிமைச் சொத்தில் பங்கு கிடைத்தது. பெண்களுக்குத் திருமணத்தைக் குறித்த தீர்மானம் வாழ்வில் மிக முக்கியமானது. ஆனால் இன்று கலாச்சார, பண்பாட்டு சீரழிவுகளால் திருமண உறவுகளின் சங்கமம் சார்பதிவாளர் அலுவலகங்களிலும், காவல் நிலையங்களிலும் நடைபெறுகிறது. இன்றைய கிறிஸ்தவ குடும்பங்களில் இது மிக வேதனைக்குரிய நிகழ்வுகளாக உள்ளன. கடவுளின் நிபந்தனைக்கு உட்பட்டு திருமண பந்தத்தை ஏற்படுத்தியதால் கனத்தையும் புகழ்ச்சியையும் பெற்றனர்.





இளைய மகளின் பெயரை அழகிய பட்டணத்திற்குச் சூட்டினார்கள் (யோவா. 12 : 24). பின்பு சில காலத்திற்கு திர்சா இஸ்ரயேல் அரசுக்குத் தலைநகரமாயிருந்தது (1அர. 15 : 23).

பெண்களை நாம் தாழ்வாக நினைக்கிறோம். ஆனால் படைப்பாளராம் கடவுள் அப்படி எண்ணுவதில்லை. நீங்கள் அடுப்பினடியில் கிடந்தவர்களாயிருந்தாலும், வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச் சிறகுகள் போலவும், பசும்பொன் நிறமாகிய அதன் சிறகுகளின் சாயலாகவும் இருப்பீர்கள்.

## 3. ஆசீர்வாதத்தைச் சுதந்தரிக்க இணைந்து செயல்பட்டனர்.

சுமார் ஏழு ஆண்டுகளுக்குப்பின் யோசுவாவும், எலெயாசரும் நாட்டைப் பங்கிடும் போது ஐந்து சகோதரிகளும் இணைந்து வந்தனர். சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று எத்துணை இனியது என்ற திருமறை வார்த்தைக்கு இலக்கணமாய் வாழ்ந்தனர். கடவுளுடைய வார்த்தையின்படி உரிமைச்சொத்து கொடுக்கப்பட்டது. ஒருமனம், ஒப்புரவாகுதல், இணைந்து செயல்படுவதின் மூலம் தெய்வீக கடவுளின் ஆசீர்வாதங்களை நாம் பெற முடியும். நம்மிடையே உள்ள ஐக்கியம் வெற்றிக்கு வழிகாட்டுகிறது. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற சொற்றொடர்படி வாழவேண்டும். இறைமைந்தன் இயேசு தந்தையிடம், நாம் ஒன்றாயிருப்பது போல இவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கும்படி மன்றாடுகிறேன் என்று சீடர்களுக்காகவும், நமக்காகவும் தந்தையிடம் மன்றாடினார்.

## முடிவுரை :

பெண்கள் தங்கள் அறிவை ஆயுதமாகப் பயன்படுத்தி பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கவேண்டும். உரிமைகளைக் கேட்டுப் பெற்றுக்கொண்ட செலொபுகாதின் புதல்வியர் சட்ட சீர்திருத்தச் செம்மல்களாகச் செயல்பட்டது போல நாமும் செயல்படவேண்டும்.

**அருள்திரு. திருமதி. சார்லெட் சௌந்தரராஜன்**

ஜெபக்குழு ஆண்டு விழா

மத். 6 : -15

# இறைவேண்டல்

. . . நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தைஅறிநத்திருக்கிறார். (மத். 6 : 8

Prayer is the secret Communication between man and God என்று சொன்னார் ஒருவர். இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே இருக்கும் தொடர்பு தான் ஜெபம். சிலர் சொல்லுவார்கள் எதற்காக ஜெபிக்க வேண்டும்? நம் தேவைகள் எல்லாம் நாம் நினைக்கிறதற்கும் முன் அவர் அறிந்து இருக்கிறாரே, (திபா. 139 : 4) என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே இதோ ஆண்டவரே நீர் அவைகளை எல்லாம் அறிந்து இருக்கிறீர் என்று சொல்லப்பட்டு இருக்கிறது என்பார்கள். நம் உடலுக்கு ஆக்சிஜன் எவ்வளவு அவசியமோ அவ்வளவாக ஆத்துமாவுக்கு ஜெபம் அவசியம். பிலி. 4 : 6-ல்இ எதைப் பற்றியும் கவலைப்படவேண்டாம். ஆனால் நன்றியோடு கூடிய இறைவேண்டல், மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களைத் தெரிவியுங்கள். நாம் தெரிவிக்காவிட்டால் மன அழுத்தங்கள் ஏற்படும். அன்னாள் சந்தோஷம் பெற்றுக் கொண்டது ஜெபத்தின் வழியாக, ஏசா, யாக்கோபு இருவரிடமும் சகோதர அன்பை எற்படுத்தியது ஜெபம் (அப். 1 : 12-44) பயப்பட்ட சீடர்கள் ஜெபத்தின் வழியாக அமைதியையும் சந்தோஷத்தையும் கண்டார்கள். அடியார்கள் வாழ்வில் வந்த சோதனைகள், போராட்டங்களில் வெற்றிபெற (கொலோ. 4 : 2) இடைவிடாமல் ஜெபித்தார்கள். ஆத்துமா பிழைக்கும்படி ஜெபம் அவசியமாக இருக்கிறது. நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது கேட்டபடியே நடக்கும். யாரிடமாவது மனத்தாங்கல் இருந்தால் மன்னியுங்கள். விண்ணகத் தந்தையும் மன்னித்து வேண்டுதல் கேட்டுப் பதில் தருவார்.

1. விழிப்புடன் இறைவேண்டல் செய்யுங்கள்

கெத்சமனே தோட்டத்தில் சீடர்களிடம் (மத். 26 : 40) ஒரு மணிநேரம் கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா?





என்றார்இயேசு. கிறிஸ்தவ வாழ்வு விழிப்புடனும் இதய உணர்வுடனும் என்றென்றும் உறுதியாய் வாழ்வது. விழித்து இருப்பதும் ஜெபிப்பதும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றது நெகே. 4 : 9-இல் “நாங்கள் எங்கள் கடவுளை நோக்கி ஜெபம் பண்ணி அவர்கள் நிமித்தம் இரவும் பகலும் சாமங் காக்கிறவர்களை வைத்தோம். இயேசு லூக். 18 : 1-இல் சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்றார். இயேசுக் கிறிஸ்து மனுக்குலத்திற்கு புதுவாழ்வு தரவும், தம் சீடர்கள் திருப்பணி செய்ய ஆயத்தப்பட அழைப்பதற்கும் முன் இரவு முழுவதும் தனித்து விழித்திருந்து மன்றாடினார். தாம் செய்யப்போகும் பணிகள் அப்பழுக்கற்றதாக இருக்க அதிகாலை வரை ஜெபித்தார். நாம் முழுமனதுடன் மன்றாட ஜெபத்தில் விழிப்பும் செயலில் விழிப்பும் அவசியமாகும்.

**2. மறைவாய் இறைவேண்டல் செய்யுங்கள்**

நீயோ ஜெபம் பண்ணும்போது உன் அறை வீட்டிற்குள் பிரவேசித்து உன் கதவை பூட்டி அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பதிலளிப்பார் (மத். 6 : 6). உள்ளத்தின் எண்ணங்களையும் எதிர்காலத் திட்டங்களையும் அறிகிறவரிடம் யாக்கோபு மன்றாடி (தொ.நூ. 32 : 26). நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மை போக விடேன் என்று விரும்பிய ஆசீர்வாதம் பெறும்படி மன்றாடினார். ஜெபிக்கும் பழக்கம் உடையவர்களாக இருப்பதல்ல. ஜெப ஆவி உள்ளத்தில் இருந்து கொண்டே இருக்க வேண்டும். ஜெப பலி இருதயத்தில் எரிந்து கொண்டே இருக்க வேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் ஜெப அறையில் ஜெபப் பலன்களைக் கண்டார்கள். மோனிக்கா தாயார் மன்றாடும் போது என் மகன் மனம் மாறட்டும் என்று உள்ளம் உடைந்து மன்றாடுவார்களாம். அதன் பலன் சாமுவேல் வல்கேற் என்பவ தாயின் ஜெப அறையின் வெளியே சென்று கொண்டு இருந்த போது என் மகனைக் குணப்படுத்தும் கர்த்தாவே என்ற ஜெப வார்த்தைகள் செவியில் கேட்டு அறை வீட்டுக்குள் ஜெபித்த ஜெபம் இறை அன்புடன் இரட்சிப்புக்கு வழிநடத்தியது. தானியேல் போன்ற இறைப் பக்தர்கள் அந்தரங்க ஜெபத்தின் மேன்மைகளையும் மகத்துவங்களையும் கண்டார்கள்

**3. நோன்பிருந்து இறைவேண்டல் செய்யுங்கள்**

அவர் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசமிருந்த பின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று (மத். 4 : 2). திருப்பணி ஆரம்பிக்கும் முன்

தம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டார் இயேசு. ஆனால் பரிசேயர்களின் உபவாசமுறைகளை இயேசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை (மத். 6 : 16-18, 9 : 14-15) ஆகிய இறைவார்த்தைகள் வழியாக அறியலாம் (திப. 13 : 2). அந்தியோக்கியாப் பட்டணத்தில் கூடி உபவாசித்து ஜெபித்தபோது பரிசுத்த ஆவியானவர் பர்னபாவையும், சவுலையும் ஊழியத்துக்காக பிரித்து அனுப்புங்கள் என்று சொன்னார் (திப. 14 : 23). ஆதித் திருச்சபையில் மூப்பர்களை நியமித்தபோது கூடி ஒருமனதுடன் உபவாசித்து ஜெபித்தார்கள். உபவாசிப்பதின் மூலம் உலகப் பற்றினின்றும், வீண் ஆசைகளிலுருந்தும் நம்மை விலக்க முடியும். ஒருநேர உணவை வெறுத்து ஐம்புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி இவைகளை கட்டுக்குள் வைத்து மன்றாடும்போது, தான் வெறுத்த உணவை ஒருநேரம் கூட உண்டு பசியாற்ற முடியாத ஒருவருக்கு வழங்குவது உபவாசத்தின் சிறப்பாகும்.

பரிசுத்தவான்கள் பல மணிநேரம் முழங்காலில் ஊன்றி மன்றாடி ஆழமான இறை ஐக்கியத்தை பெற்றுக்கொண்டார்கள். ஸ்காட்லாந்து தேசத்தை எனக்குத் தாரும் இல்லாவிட்டால் நான் மடிந்து போகட்டும் என்று ஜாண் நாக்ஸ் என்ற பக்தன் கதறி ஜெபித்தார். பெரிய எழுப்புதல் ஸ்காட்லாந்தில் ஏற்பட்டது. ஜாண் நாக்ஸ் வாழ்ந்த நாட்களில் ஸ்காட்லாந்தை ஆண்டு வந்த ராணி மேரியை "இரத்த வெறிபிடித்த மேரி" என்று அழைத்தனர். ஆனால் ராணியோ ஜெப வீரரானகிய ஜான் நாக்சுக்குப் பயப்பட்டாள். அந்த மனிதன் முழங்காலில் நின்றால், "என் சரீரம் எல்லாம் தீ பற்றி எரிவது போல் வேதனை உண்டாகிறது" என்று சொல்லி நடுங்கினாள். ஜாண் நாக்சிடம் சிலர் கேட்டார்கள். பெரிய இராணியை எதிர்த்து நிற்க எப்படி உமக்கு இந்தத் தைரியம் வந்தது? அதற்கு பதிலாக, "எந்த ஒரு மனிதன் பரலோக ராஜாவுக்கு முன்பாக முழங்கால் படியிடுகிறானோ அவன் உலக இராணிகளைக் குறித்துக் கவலைப்படமாட்டான்" என்றார்.

**அருள்திரு. T. ஜாண் பீற்றர்**





2 அரசர் 22 : 1-13

## மாற்றம் தரும் நூலகம்

". . . ஆண்டவரின் இல்லத்தில் ஒரு சட்ட நூலைக் கண்டெடுத்தேன் என்று சொல்லி, அந்நூலைச் சாப்பானிடம் கொடுக்க, அவனும் அதைப்படித்தான்." (2 அர. 22 : 8)

ஒரு புதுவுலகைக் காண வேண்டுமா? நூலகம் செல்லுங்கள். இருள் அகல வேண்டுமா? நூற்களைப் படியுங்கள். நம்பிக்கை மனதில் இல்லையா? நீங்கள் நூலகம் சென்று பாருங்கள். நூலகம் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதே எல்லா இதயங்களிலும் ஒலிக்கும் ஓசையாக இருக்கட்டும். நூலகம் நல்ல சூழ்நிலையை உருவாக்க உதவுவதோடு பல்வேறுபட்ட நன்மையைச் செய்யத் தூண்டுகின்றது. மனித வாழ்வில் எல்லா நிலைகளிலும், குறிப்பாக, சமய, சமூக, அரசியல், பொருளாதாரம் என்று அனைத்திலும் நன்மை செய்கின்ற ஒன்று தான் நூலகம். நூலகம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு பிரெஞ்சு மொழியில் Librairie என்றும் லத்தீன் மொழியில் Liber என்றும் வழங்கப்பெறுகின்றன. Liber என்பது Book எனப் பொருள்படுகின்றது. Book என்பதின் உட்பொருள் என்னவெனில், ஆதாரங்களை ஒழுங்கமைத்து ஒன்று சேர்த்து வைப்பது. இப்படி பல்வேறுப்பட்ட ஆதாரங்களை நூல்களாக ஒன்று சேர்த்து ஒழுங்கமைத்து வைப்பது நூலகமாக உள்ளது. அவை நூல், செய்தித்தாள், கையெழுத்துப்படி, திரைப்படச் சுருள், மாதப்பத்திரிகை, CD's, DVD, வரைபடம், பத்திரம் போன்றவற்றை நாள் அட்டவணை அடிப்படையில் உள்ளடக்கியதாகும்.

இந்த நூலகம் இருபெரும் செயல்களைச் செய்கின்றன.

i) Information - தகவல்களைத் தருகின்றது

ii) Reformation - மறுமலர்ச்சி அல்லது சீர்திருத்தத்தை ஏற்படுத்துகின்றது

**1. தகவல்** : II அரசர் 22 : 13 இந்நூலில் என்ன எழுதப்பட்டுள்ளன என்று ஆண்டவரின் திருவுளத்தைத் தெரிந்து வாருங்கள்.

யோசியா அரசன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அவருக்கு வயது எட்டு. அவர் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தியப்போது ஆண்டவரின் இல்லத்திலிருந்து சட்ட நூல் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அந்நூலில் என்னென்ன தகவல் உள்ளன என்பதைப் பற்றி வினாவுகின்றார்.

நூலகம் என்பது கற்றுத்தரக் கூடிய இடம். எல்லாரும் அறிவை தரக்கூடியது. எந்தவொரு நிறுவனத்திற்கும் மூளையாக இருப்பது நூலகம் தான். எந்தவொரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் பின்புலத்தில் நிற்பதும் நூலகமே. அரசன் யோசியாவின் அரசாட்சிக்கு வலுவாக நின்றது ஆண்டவரின் இல்லத்தில் கண்டெடுக்கப்பட்ட சட்ட நூலே. இயேசு நாதரின் பணியைப் பறைசாற்றுவதாய் இருந்ததும் நூல்தான் (லூக். 4 : 17) பரிசேயர் சதுசேயரின் கேள்விக் கணைகளுக்கு மாற்று எண்ணங்களை எடுத்தியம்ப தகவல்களைக் கொடுத்ததும் இயேசு நாதரின் நூலறிவு.

**மறுமலர்ச்சி சீர்திருத்தம் :** II அரசர் 22 : 11

அரசர் சட்ட நூலின் வார்த்தைகளைக் கேட்டதும் தம் ஆடைகளைக் கிழித்துக் கொண்டார். ஆடைகளைக் கிழித்துக் கொள்வது தாழ்மை, எளிமை ஆகியவற்றைக் குறிக்கும். II அரசர் 22 : 19-இல் உன்னைத் தாழ்த்தி உன் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு என்பதன்படி அரசர் சட்ட நூலின் வார்த்தைகளால் தன்னைத் தாழ்த்துகின்றார். அரசர் என்ற பெருமை, ஆடை அலங்காரம் போன்றவற்றிலிருந்து சீர்திருத்தத்தினை கொண்டு வருகின்றார். நூலகத்தை முதன் முதலில் பயன்படுத்தியவர்கள் சுமேரியர்கள். தங்கள் கோவில் அறைகளில் களி மண்ணாலான பலகைகளில் எழுதப்பட்டவற்றை அடுக்கி வைத்திருந்தார்கள். மாவீரன் அலெக்ஸாண்டர் கிரேக்கப்பண்பாட்டைப் பரப்புவதற்கு சென்ற இடம் எங்கும் நூலகங்களை நிறுவினார். திருச்சபை மறுமலர்ச்சிக்குக் காரணம். ஜான்ஹஸ், ஜாண் விக்ளிப் போன்றோரின் சீர்திருத்த எழுத்துகளைப் படித்ததின் விளைவே ஆகும். இயேசு நாதரின் புரட்சிகரமான, செயல் திட்டங்களுக்கும், போதனைக்கும் அடிப்படை மோசேயின் சட்டத்தைப் பற்றிய அறிவே (மத். 5 -7) மலைப்பொழிவில் முற்காலத்தவர்க்குக் கூறப்பட்டிருப்பதைக் குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் எனச் சீர்திருத்தத்தை உருவாக்கினார்.

அரசர் யோசியா ஆட்சிக்குத் தகவல் தந்து சீர்திருத்தம் ஏற்படச் செய்தது நூல். இயேசு நாதருடைய வாழ்விலும் நூலறிவு மிக முக்கிய பங்களித்துள்ளது. நமது வாழ்விலும் நூலகமும் நூலும் எல்லா நிலையிலும் வாழ்வுக்கான தகவுகளை அளித்து இறையாட்சி மலர வழி வகை செய்வதாக.

**அருள்திரு. கிங் தனேஷ்குமார்**





எசா. 61 : 1-9 யாக். 2 : 1-8
திபா. 86 மத்தேயு 25 : 31-46

# ஏழைகள் நல்வாழ்வுத்திட்டம்

. . . மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். மத்தேயு 25 : 40

வாழ்வு என்பது கடவுளின் சிறப்பான அருட்கொடை. திருமறையில், கடவுள் ஏழைகளை உயர்வாகவும், செல்வந்தர்களைக் கடுமையான வார்த்தைகளால் எச்சரிப்பதாகவும் காணப்படுகிறது. இறைவாக்கினர் நூல்கள், மரியாளின் பாடல், ஏழைக் கைம்பெண் காணிக்கை, ஏழை லாசரின் இறப்பு இவை அனைத்தும், இறைவன் ஏழைகள் சார்பாகச் செயல்படுகிறார் என்பதை விவரிக்கின்றன. ஏழைகள் தங்களுடைய வாழ்வில் கடவுளை மட்டுமே முழுமையாக நம்பியிருப்பவர்கள். அவர்கள் எளிதில் பிற மக்களால் ஏமாற்றப்படுகின்றனர். ஆட்சியாளர்கள் அவர்கள் மீது அக்கறை காட்டுவதில்லை. கொடுங்கோல் மன்னன் ஏழைக் குடிமக்களுக்கு முழக்கமிடும் சிங்கமும், இரைதேடி அலையும் கரடியும் போலாவான் (நீதி. 28 : 15). இப்படிப்பட்ட சூழ்நிலைக்குத் தள்ளப்பட்ட ஏழை எளிய மக்கள் இறைவனை மட்டுமே தங்களின் அடைக்கலப் பாறையாகப் பற்றிக் கொள்கின்றனர். இத்தகைய நம்பிக்கை வைத்து வாழும் ஏழைகளின் நல்வாழ்விற்கான திட்டத்தில் நமது செயல்பாடுகள் எவ்விதத்தில் ஏழைகளை ஏற்றம் பெறச் செய்யும் என்று கடவுளின் திருவுள சித்தம் அறிந்து நம்மை தத்தம் செய்ய அழைக்கப்படுகிறோம்.

**1. நற்செய்தி அறிவிப்பதே கடவுளின் திட்டம்** (எசா. 61 : 1-9)

இப்பகுதியின் வசனங்கள் முழு மனித விடுதலையைக் குறிக்கின்றன. எசாயா கூறுகின்ற முழு மனித விடுதலை இயேசு கிறிஸ்துவில் நிறைவேறுகிறது. இயேசு கிறிஸ்துவின் நற்செய்திப் பணி ஏழைகளைச் சார்ந்தது. எளியோருக்கு நற்செய்தி, ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு என்று கடவுளின் அருள்தரும் காலத்தை அறிவிக்கும் கடமை வீரராய், தூதுவராய் வீறு கொண்டு எழுகிறார். கடவுளைக் கூட

எங்களுக்கு மட்டுமே சொந்தம் என்று நினைத்த முதலாளித்துவச் சிந்தனைகளை உடைத்து கடவுள் அனைவருக்கும் பொதுவானவர். அவரின் இதயம் ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கமே சார்ந்திருக்கிறது என்பதைத் தெளிவுப்படுத்துகிறார். ஏழைகளை நல்வாழ்வுக்கு நேராக அழைத்து வருவது நற்செய்தியால் மட்டுமே சாத்தியமாகிறது. எசா. 61 : 7 கூறுகிறபடி நல்வாழ்வுக்கான நம்பிக்கையின் வார்த்தைகளைக் கூறுவதே நற்செய்தி அறிவிப்பதாகும்.

**2. நன்மை செய்வதே கடவுளின் சட்டம்**

உன்மீது நீ அன்பு கூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக. (யாக்கோபு 2 : 8)

இறைவன் நம்மில் எதிர்பார்ப்பது பகிர்வு. தொடக்க காலக் கிறிஸ்தவர்களைப் போல ஏழ்மை இல்லாமல் பகிர்ந்து வாழ்ந்து, அன்பு, நீதி, இவைகளை வெளிப்படுத்த வேண்டும் அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை (தி ப. 4 : 34, 35, மத். 7 : 12.) இத்தகைய இறைவார்த்தைகள் ஏழைகளின் ஏக்கத்திற்கு விடை தருகிறது. சமுதாயத்தின் ஒரு விளிம்புக்கு தள்ளப்பட்ட மனிதனைப் பார்த்த பிறகும் அதைக் கண்டு கொள்ளாமல் வாழும் மனிதன் கடவுளுக்கு ஏற்புடையவனாக இருக்க முடியாது. சமூக அக்கறை, மற்றவர்களின் தேவைகளுக்காக உதவுதல், பிறரன்புச் செயல்கள் இவற்றால் மட்டுமே நாம் இயேசுவின் இலட்சியங்களை வாழ்வில் செயல்படுத்த முடியும். நமது பேராயம் ஏழைகள் நலனில் அக்கறை கொண்டு கல்வி, மருத்துவம், வீடு, திருமணம், விபத்து போன்ற தேவைகளுக்கு ஏழைகள் நல்வாழ்வுத் திட்டங்கள் வகுத்துள்ளது. இவற்றில் நமது பங்களிப்பு ஏழைகளின் வாழ்விற்கு நலன்பயக்கும்.

**3. ஏற்றுக் கொள்வதே - கடவுளின் சித்தம்** (மத். 25 : 40)

மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள். ஏழ்மையையும் ஏழைகளையும் நம்மிலே சபையிலும், சமூகத்திலும் ஏற்றுக் கொள்வது நல்வாழ்வுக்கான ஒரு நாட்டம் ஆகும். உலகில் மற்றவர்மீது கரிசனை கொண்டு விசாரிப்பவர்கள், அன்பு செலுத்தி, இரக்கப்பட்டு தேற்றுபவர்கள் வெகுசிலரே. வறுமையாலும் வருத்தங்களாலும்





துவண்டுப்போன வறியோர்களின் கண்ணீரில் நாம் பங்கேற்க வில்லையென்றால் நமது கிறிஸ்தவ வாழ்வு பயனற்றதாகவே அமையும். நாம் ஏழைகளைப் புறக்கணிக்கும்போது இறைவன் நம்மைப் புறக்கணிக்கிறார். நலமற்றிருப்பவர் ஆடையில்லாதிருப்பவர், வாழும் இடம் இல்லாதிருக்கிறவர், வறுமையில் இருக்கிறவர் என் நண்பன், என் சகோதரன், சகோதரி என்ற உணர்வோடு ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் நமக்கு வேண்டும். அதை மத்தேயு 25 : 31-46 வரையுள்ள பகுதியில் இயேசு கூறுகிறார். ஆண்டவரின் அன்புச் சீடர்களாக வாழ்வோம். இயேசுவைக் காண்பிப்போம். ஏழைகளின் நல்வாழ்வுக்கு உறுதுணையாக இருப்போம். உன்னத ஆசி பெறுவோம்.

**திரு. N. யோபு தாஸ்**

| | |
|---|---|
| | குடும்ப விழா |

எபேசியர் 5 : 21 – 6 : 9

# இனிக்கும் இல்லறம்

கிறிஸ்துவுக்கு அஞ்சி ஒருவருக்கொருவர் பணிந்திருங்கள்
(எபே. 5 : 21)

அன்பு நிறைந்த கணவன், பாசம் நிறைந்த மனைவி கீழ்ப்படிந்து அறிவிலும், ஞானத்திலும் வளரும் குழந்தைகள் ஆகியோர் குடும்பத்தின் அடித்தளங்கள்.

குடும்பம் அன்பு உள்ளங்களின் சங்கமம், ஆழமான உறவுகளின் அர்ப்பணம். இந்த ஆழமான உறவுகள் வளர்வதற்கு, புரிந்துகொள்ளுதல், அன்பு, கனிவு, இரக்கம், மன்னிப்பு, விட்டுக்கொடுத்தல், ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய பண்புகள் அவசியமானவை.

வசதிகளையும், செல்வங்களையும் சேர்ப்பது அல்ல மாறாக பாசங்களையும், உறவுகளையும் சேர்ப்பதுதான் குடும்பம். இங்கு சுமைகள் இல்லை, இருந்தாலும் அது சுகமான சுமைகளே.

குடும்பம் என்பது ஒருவரை ஒருவர் நம்பிக்கை கொள்ளவும், அன்பு செலுத்தவும், கடவுளையும் மனிதனையும் ஒரே இடத்தில் உறைய வைக்கும் உன்னதமாகும்.

சவால்களையும் , சோதனைகளையும் எதிர்கொள்வது வாழ்வைச் சுமையாக்கிக் கொள்ளாமல் சுவையாக்கி கொள்வதுதான் சிறப்பு. இரண்டு நிலைகளில் அன்பு பாராட்டும் குடும்பங்களையும் அதன் விளைவுகளையும் தியானிப்போம்.

**1) இணைக்கும் அன்பு** (தொ.நூ. 27 : 1-29)

ஈசாக்கு தன் மூத்த மகன் ஏசாவை மட்டும் அழைத்து எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ள உணவுகளாகச் சமைத்து நான் புசிக்கக் கொண்டு வா நான் உனக்கு ஆசி வழங்குவேன் என்றார். இதனால் குடும்பத்தில்





குழப்பமும், பிரிவினையும் உண்டானதையும் ஈசாக்கு தன் கடமையில் சரியாய் தீர்க்கமாய் நடந்து கொள்ள முடியாத நிலையையும் காண்கிறோம்.

ரெபேக்காள் பார்வையற்ற கணவனிடம் உண்மைகளை உணர்த்திடாமல், ஆசீர்வாதத்திற்காகத் தவறான வழிமுறைகளை தன் இளைய மகனுக்குக் கற்றுக் கொடுத்துச் செயல்படுகிறாள். அதாவது குடும்பங்களில் அவசரப்பட்டு முடிவெடுத்து பின்விளைவுகள் வரும்போது எதிர்கொள்ளப் பயப்படுகிறாள் (தொ.நூ. 27 : 43, 44).

யாக்கோபு ஆசீர்வாதத்தை அனுபவிக்க முடியாமல் துரத்தப்பட்டான். இறைவனைச் சந்தித்தான். மனம் திரும்பினான். திரும்பி வரும்போது தான் செய்த தவறினிமித்தம் தன் சகோதரனாகிய ஏசாவை ஏழுதரம் தரைமட்டும் குனிந்து வணங்கினான். ஏசாவும் கட்டியணைத்து அழுதான் (தொ.நூ. 33 : 3, 4).

**2) இரக்கம் காட்டும் அன்பு** (லூக். 15 : 11-32)

இளைய மகன் தந்தையிடமிருந்து பெற்றுகொண்ட சொத்தை பணமாக்கி, தூர தேசம் சென்று தாறுமாறாகச் செலவு செய்து ஆஸ்தியை விரயம் செய்தான். பஞ்சம் உண்டானபோது பசியால் பன்றியின் உணவை உண்ண மனதாயிருந்து புத்தி தெளிந்து அறிவு பெற்று தன் தகப்பன் வீட்டை நோக்கிப் பயணமானான்.

லூக்கா 15 : 20-இல் இளைய மகன் தூரத்தில் வரும்போதே அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவனை முத்தஞ்செய்தான்.

லூக்கா 15 : 22-24-இல் மூத்த மகன் நடந்ததைக் கண்டு பொறாமை கொண்டு, தன் சகோதரன் மேல் கோபம் கொண்டு, தன் தகப்பனிடம் முறையிடுகிறான். தகப்பனோ மகனே எனக் கூப்பிட்டு நீ எப்போதும் என்னுடனிருக்கிறாய் எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது. உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான். காணாமல் போனான், திரும்பவும் காணப்பட்டான். நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டும்.

பணம், பொருளுக்கு முக்கியத்துவம் தராமல் உறவிற்கு இடம் தருவதுதான் தந்தையின் சிறப்பான குணம் (லூக். 15 : 32).

**D. S. விஜு**

| | |
|---|---|
| | தேர்வு நாள் |

# திடன் கொள்

. . . அஞ்சவேண்டாம், உன் கைகள் சோர்வடைய வேண்டாம்
(செப். 3 : 16)

மனித வாழ்வில் முக்கிய பருவங்களில் ஒன்று படிக்கும் பருவம். இப்பருவம் அளப்பரிய ஆற்றலைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வாற்றல் பிறப்பிலேயே கொடுக்கப்பட்டிருக்கின்ற இலவசக் கொடை. இவ்வாற்றலைச் சரியாகத் திட்டமிட்டுப் பயன்படுத்துகின்றவர்கள் வாழ்வில் சமூகத்திலும் வெற்றிகாண்பார்கள். ஆனால் இன்று இவ்வெற்றி காண்கின்ற வரிசையில் சிலர் மட்டுமே இருக்கிறார்கள். பலர் இல்லை என்பது வரலாறு தரும் வருத்தமான சான்று. நீங்களும் வெற்றியாளராய் இருக்க திருமறை தரும் செய்தி "உன் கைகள் சோர்வடைய வேண்டாம்"

திருமறையில் தாவீது என்ற அடியவரை நாம் நன்கு அறிவோம். அவரும் ஒரு தேர்வைச் சந்தித்தார். அந்த அனுபவம், நமக்கு நல்ல அனுபவமாய் அமையும். பெலிஸ்தியனாகிய கோலியாத்தை யுத்தக்களத்தில் கண்ட சவுலின் படையினர் மனம் சோர்ந்தனர். எப்படி வெற்றி பெறுவது? எப்படி எதிர்கொள்வது? (1 சாமு 17) இது படையினரின் அங்கலாய்ப்பு. இவர்களைப் போல் நம்மில் பலரும் வினாத்தாள் எப்படியிருக்குமோ? படித்தது வருமோ? வராதோ? எனப் பல ஐயப்பாடுகள். உங்கள் உள்ளத்தை ஆண்டவர் அறிந்திருக்கிறபடியால் (1 சாமு. 16 : 7). நீங்கள் தாவீதைப் போல் தேர்வை எதிர்கொள்ளுங்கள். தாவீது எப்படி எதிர்கொண்டார் என்பதனை சற்றே கவனிப்போம்.

**1. தாவீது காலதாமதமின்றி எதிர்கொண்டார்** (1 சாமு. 17 : 13-26)

பெலிஸ்தியனாகிய கோலியாத் 40 நாட்கள் இரவும் பகலும் போர்க்களத்தில் நின்றபொழுது இஸ்ரயேலர்களால் துணிந்து எதிர்த்து நிற்க முடியவில்லை. ஆனால் தாவீது பெலிஸ்தியனைப் பார்த்த அந்த வினாடியே மனதளவில் (17 : 26) கோலியாத்தை எதிர்கொள்ள ஆயத்தமாகிவிடுகிறார். தடைகள் பல வந்தும் (17 : 28). துணிச்சல் கொண்ட தாவீது நேரத்தை வீணடிக்காமல் யுத்தத்தை எதிர்கொள்கிறார். கால தாமதம் சோம்பலை உருவாக்கும். காலம் அறிந்து செய்கிற வேலை





கனகச்சிதமாக முடிவடையும். காலம் தவறிச் செய்கின்ற வேலை பயனற்றதாய்ப் போய்விடுகிறது. 'You cannot earn time, you cannot borrow it, and once used. You cannot reclaim it' என்று பணத்தோடு காலத்தை ஒப்பிட்டுக் கூறுவார்கள். காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. கடல் வற்றி கருவாடு தின்னலாம் என்று உடல் வற்றி செத்ததாம் கொக்கு". நேரம் வரட்டும் என்று எதிர்பார்த்து இருந்தால் கொக்கு கதைதான் நம் கதையும். எனவே தாவீதைப் போல் காலத்தைப் பயன்படுத்து, வெற்றி உனதே.

**2. தாவீது உறுதியுடன் சென்றார்** (1 சாமு. 17 : 37)

இயேசுவை பற்றிய ஆவணப் படத்தில் (கிங் ஆப் கிங்ஸ்) நடக்க முடியாத ஒருவனை இயேசு நடக்கச் சொல்கிறார், அவன் தயங்குகிறான், எழுந்து நிற்கத் தடுமாறுகிறான். நடக்கத் துணிவில்லை . . . என்னால் எழுந்து நடக்க முடியுமா என்ற அவநம்பிக்கை அவனுக்கு, இதைப் பார்த்த இயேசு "தம்பி உன்னுடைய நம்பிக்கை உன் கால்களைவிடப் பலவீனமாக இருக்கிறது. எனவே முதலாவது நம்பு, உன்னால் எழுந்து நடக்க முடியும்" என்றார். இவ்வார்த்தை அவனது உள்ளத்தை உறுத்தியது போன்ற உணர்வு. அவ்வளவு தான் அவன் துணிந்து எழுந்து நடக்க ஆரம்பித்தான். தாவீதையும் நீ சிறியவன் என்றபொழுது அவனது உறுதிகொண்ட மனம், அவனது நம்பிக்கை, மலை போன்ற கோலியாத்தை எதிர்கொள்ள துணிவு தந்தது. நாம் உறுதியுடன் செல்வோம் வெற்றி நமதே.

**3. தாவீது இறைவனின் ஆசியோடு சென்றார்** ( II சாமு. 5 : 10)

"தாவீது தொடர்ந்து வளர்ச்சி பெற்றார், படைகளின் கடவுளாகிய ஆண்டவர் அவரோடு இருந்தார்". தாவீதின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் காரணம் ஆண்டவர் அவரோடு இருந்து ஆசீர்வதித்தது தான். இன்று தேர்வுக்குச் செல்ல இருக்கிற உங்களையும் ஆண்டவர் அபரிமிதமாய் ஆசீர்வதிப்பார். தாவீதுடன் இருந்த ஆண்டவர் உங்களோடு இருந்து வெற்றியை தருவாராக. 1705-ஆம் ஆண்டு நவம்பர் 29-ஆம் தேதி, தனது 23-ஆம் வயதில் கப்பல் ஏறி இந்தியாவை நோக்கி வந்த சீகன்பால்க், 1706-ஆம் ஆண்டு ஜூலை 9-ஆம் நாள் தரங்கம்பாடியில் தரையிறங்கினார். அப்பொழுது அவருக்குத் தெரிந்த மொழி ஆங்கிலம் தான். ஆனால் மணலில் தமிழ் எழுத்துக்களைப் படித்து, 20,000 தமிழ் வார்த்தைகள் கொண்ட தமிழ் அகராதியை 1708-ஆம் ஆண்டு (இரண்டே ஆண்டுகளில்) வெளியிட்டார். சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். ஒரு தமிழ் தெரியாத ஜெர்மானியருக்கு 2 ஆண்டுகளில் தமிழ் படித்து, அகராதி எழுதி வெளியிட முடியும் என்றால் ஏன்? உங்களால் முடியாது. கடவுளின் துணையோடு நீங்கள் வெற்றிபெற இறையருள் உங்களோடிருப்பதாக.

**அருள்திரு. P. இராஜா ஸ்டாலின்**

சங்க விழா

# அருட்கொடையும் திருப்பணிக்கொடையும்

கடவுளின் சொல்லொண்ணாக் கொடைக்காக அவருக்கே நன்றி உரித்தாகுக! (2 கொரி. 9 : 15)

சங்கப் பண்டிகையை நாம் கொண்டாடுகையில், மிகவும் மையப்படுத்தும் செயல் காணிக்கை. ஏன் நாம் காணிக்கைகளை மையப்படுத்த வேண்டும் என்ற கேள்வி எழும்புவது இயல்பு. சங்கப் பண்டிகையைத் திருமறையில் அறுப்பின் பண்டிகை எனக் குறிக்கப்பட்டுள்ளது. (எண். 28 : 26-31,லேவி. 23 : 15-22). இங்கு தானிய வகையோடு கால் நடைகளையும் படைக்க வேண்டும். அப்படியென்றால் காணிக்கை பற்றிய செம்பொருள் சமய, சமூக வாழ்வில் நமக்குத் தரும் சவால் என்ன? என்பதைக் குறித்து எண்ணும்படி நாம் இங்குக் கூடியுள்ளோம். திருமறை கண்ணோட்டத்தில் குறிப்பாக II கொரி. 8 : 6-15 வரையிலான பகுதியின் வழியாகப் பவுலடியார் முன் வைக்கும் கருதுகோள்களான (1) விவசாயம் சார்ந்த உவமை (2) மானுடவியல் சார்ந்த நிலை (3) கடவுளுக்குச் செலுத்தும் நன்றியின் நிறைவு ஆகியவைகளைக் காணிக்கையோடு இணைத்து எடுத்தியம்புகின்றார்.

### 1. விவசாயம் சார்ந்த உவமை

II கொரி. 9 : 6, 10 ஆகிய இரண்டு வாக்கியங்களிலும் விவசாயம் சார்ந்து கூறப்பட்டுள்ளன. 6-ஆம் வாக்கியத்தில் நிறைவு - குறைவு ஆகிய இரு சொற்கள் விதைப்பவரின் செயல்பாட்டை விளக்குகின்றன. இவ்வாக்கியத்தினைப் பவுலடியார் நீதி. 28 : 8 (அநீதி விதைப்பவன் கேட்டை அறுப்பான்) நீதி. 11 : 25 (ஈகை குணமுள்ளோர் வளம்பட வாழ்வர் குடிநீர் கொடுப்போர் குடிநீர் பெறுவர்) என்ற அடிப்படையில் உடன் ஒத்த (Passitive) கருத்தினை மட்டுமே விளக்குகின்றார். எதிர்மறையான (Negative) கருத்தினை விட்டு விடுகின்றார். II கொரி. 8 : 14-இல் சமநிலை ஏற்படும்போது குறையை நீக்குவார் என்பதை சமூகவியல் அடிப்படையில் விளக்குகின்றார். இதைத் தெரிந்துக்கொண்டு சமநிலை கொடுக்கும் தன்மை உருவாக்க உரமூட்டுகின்றார். லேவி. 19 : 9-10, இச. 24 : 19-இல் (பயிரிட்டதை





அறுவடை செய்யும்போது . . . அவற்றை எளியோருக்கும், அன்னியருக்கும் விட்டுவிட வேண்டும். நானே உங்கள் ஆண்டவராகிய கடவுள்) ஏசா. 55 : 10-இல் மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. . . விதைப்பவனுக்கு விதையையும் உண்பவனுக்கு உணவையையும் கொடுக்காமல் அங்குத் திரும்பி செல்வதில்லை. விதையானது உணவுக்கு ஆதாரம். உணவு வாழ்வுக்கு ஆதாரம். வாழ்வை வழங்கும் கடவுள், மனிதனுக்குத் தேவையான உணவைத் தமது அளவற்ற அருளாலும், பூமியிலிருந்து தண்ணீரிலிருந்து காற்றிலிருந்து தாவரங்கள் எடுக்கும் தாதுக்களாலும், மனிதனுடைய உழைப்பாலும் விதை உருவாகின்றது. அதைப் போன்று உலகில் மனிதனுக்கு அறவாழ்வுக்கு மிகமிகத் தேவையான நீதியை விதைத்துக் கொள்ளுங்கள். அன்பின் கனியை அறுவடை செய்யுங்கள். ஓசியா 10 : 12. இவ்வுலகில் உணவு உற்பத்தி செய்கின்ற விவசாயி உணவின்றி பட்டினி கிடக்கின்றான். கௌரவ வாழ்விழந்து தற்கொலை செய்கின்றான். எனவே விளைச்சல் பெருக்க அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டியுள்ளது. அவை தீ பட்ட புண்ணில் வேல் பட்டது போலாகும். எ.கா. இரசாயான உரமிடுதல், மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள். எனவே நீதியை விதைக்க மனமற்று மறந்துப் போனது உண்மையல்லவா? II கொரி. 9 : 10-இல் விதைப்பவனுக்கு விதையையும், உண்பதற்கு உணவையும் வழங்குபவர், விதைப்பதற்கு வேண்டிய விதைகளை வழங்கி அவை முளைத்து வளரச் செய்து அறச் செயலாகிய விளைச்சலை மிகுதியாகத்தருவார். ஆகவே விவசாயத்தில் வெளிப்பட வேண்டிய ஆன்மீக வாழ்வு சமய சமூக வாழ்வில் இல்லதாது வருத்தப்பட வேண்டிய ஒன்று.

### 2. மானுடவியல் சார்ந்த நிலை

II கொரி. 9 : 7-இல் காணிக்கையைப்பற்றி தம்முள் தீர்மானித்தபடி, மனவருத்தம், முகமலர்ச்சி எனக் கொடுக்கின்ற தன்மையைக் குறிப்பிடுகின்றார். மனவருத்தம் என்ற சொல்லை II கொரி. 7 : 8-இல் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இங்கு குறிப்பிடுவது இச. 15 : 10-இல் தாராளமாய் கொடு. கொடுக்கும்போது உள்ளத்தில் பொருமாதே என்ற வாக்கியத்தின் அடிப்படையில் எழுதுகின்றார். எனினும் மன உறுதியைக் குறித்து எழுதுகையில் II கொரி. 6 :4-இல் வேதனை, இடர், நெருக்கடி ஆகியவற்றை மனவுறுதியோடு தாங்கி வருகின்றோம். II கொரி. 12 : 10-இல் என் வலுவின்மையிலும்,

இகழ்ச்சியிலும், இடரிலும், இன்னலிலும், நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு நான் அகமகிழ்கின்றேன் என மகிழ்வை கூறுகின்றார். முக மலர்ச்சியோடு கொடுப்பது எத்துன்ப சூழலிலும் கொடுப்பது இந்த கொடுக்கின்ற மன நிலையானது.

1) மனமகிழ்வுடன் தான் கொடுப்பது - பிறர் கொடுப்பதில்லை (இது பிறரின் பொறுப்பின்மையைக் காட்டுகின்றது).

2) பிறர் கொடுக்க வேண்டும் - தன் கொடுப்பதில்லை (இது தனக்கு மட்டுமே என்ற நிலையில் தன் பொறுப்பின்மையைக் காட்டுகின்றது)

3) தானும் கொடுக்க வேண்டும் - பிறருக்கும் கொடுக்க வேண்டும் (இது தூய நிலையில் சமநிலையை உருவாக்கும் மனநிலையைக் காட்டுகின்றது)

4) தானும் கொடுப்பதில்லை - பிறருக்கும் கொடுப்பதில்லை (இது கொடூர எண்ணங்களின் நிலை, அநீதியை உருவாக்கும் மனநிலையைக் காட்டுகின்றது)

எனவே தான் கொடுக்கின்ற மனநிலையினை எதற்கு? ஏன்? என்று விவரிக்கையில் II கொரி. 8 : 13-இல் மற்றவர்களின் சுமையைத் தணிப்பதற்காக நீங்கள் துன்புற வேண்டும் என்று சொல்லவிரும்பவில்லை. மாறாக, எல்லோரும் சமநிலையில் இருக்கவேண்டும் என்றே சொல்லி வருகின்றோம். பலநிலைகளில் ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்கிறோம். பண்டிகைச் காலங்களில் எளியவரை ஆலயத்தில் முன்னால் கூப்பிட்டு உதவி செய்கின்றோம் என்ற போர்வையில் அவமானப்படுத்துகின்றோம். ஆனால் சமநிலை உருவாக நமது காணிக்கையும் வாழ்வும் அமைந்துள்ளனவா?

### 3. கடவுளுக்கு செலுத்தும் நன்றி

**கடவுளின் நீதிக்கான நன்றி :** (II கொரி. 9 : 12) கடவுளுக்கு செலுத்தும் நன்றியின் நிறைவாக காணிக்கை அமைய வேண்டும். ஏனெனில் கடவுளின் சொல்லொண்ணாக் கொடைகளுக்காக அவருக்கு நன்றி. II கொரி. 9 : 15 மேலும் II கொரி. 9 : 8-இல் எந்தச் சூழ்நிலையிலும் எப்போதும் தேவையானதெல்லாம் உங்களுக்குத் தருவார். அனைத்து நற்செயல்களையும் செய்வதற்குத் தேவையானதெல்லாம் உங்களுக்கு மிகுதியாகவே தருவார். இங்கு நீதி சார்ந்த நிலையில் பவுலடியார்





விளக்குகின்றார். எனவேதான் II கொரி. 9 : 9-இல் ஏழைகளுக்கு வாரி வாரி வழங்கும்போது அவரது நீதி என்றென்றும் நிலைத்திருக்கும். கடவுளின் நீதியானது மானிடர்களை வள்ளன்மை மிகுந்தவர்களாய் விளங்கச் செய்வதே. (II கொரி. 9 : 11) எனவே மானுடம் காணிக்கையாகிய கொடையைப் பெருகச் செய்வது கடவுளுடைய நீதி வெளிப்பட வழிவகை செய்கின்றது.

**மீட்புக்காக நன்றி :** (II கொரி. 9 : 12) தேவையானதை நிறைவு செய்வது மட்டுமின்றி பலர் கடவுளுக்குச் செலுத்தும் நன்றியின் நிறைவாக அமையும். இது ஒரு நிறைவியல் சார்ந்த பவுலடியாரின் சிந்தனை. இங்கு நிறைவுக்கான பணி செய்வது கடவுள். இது நிறைவு, முழுமை போன்றவை அறப்பணியிலும் முழுமையடைய வேண்டும். இங்கு குறிப்பிடப்படும் அறம் சார்ந்த செயல்கள் (II கொரி. 9 : 13).

**1) கீழ்ப்படிதல் புலப்படும்**

**2) வள்ளன்மை வெளிப்படும்** இந்த அறப்பணியின் விளைவாகக் கடவுளைப் போற்றிப் புகழ்வார்கள். இங்கு நன்றி என்ற சொல் I கொரி. 10 : 16, 11 : 24-இல் குறிப்பிடப்படும் இயேசுவின் இறுதியுணவில் செலுத்திய நன்றிக்கு இணையான ஒன்று. ஆக நாம் கொடுக்கும் காணிக்கையும் கிறிஸ்துவின் உடலுக்கும் இரத்தத்திற்கும் பிரதிபலனாக அமைய வேண்டும். அதன் மூலம் யாவரும் நிறைவு பெறவும், சமநிலை உருவாகவும், கடவுளின் உலகளாவிய மீட்பின் திட்டம் நடைமுறை பெறவும் கடவுள் அருள் செய்வாராக.

**அருள்திரு.** M. **கிங்தனேஷ் குமார்**